# T. N. L. A Debates

## OFFICIAL REPORT

VOL: LVI No: 1, and 2, 3

FEB: 14th and 15, 16. 1984

©

V2,11,31 N84
N84-56-1-3;1
136212

ED

1811.51 N84

N84.86.1-351

136212

சென்னை 600 008

# உள்ளடக்கம்.

14—2—1984.


| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. .. .. .. | i—iii |
| (ii) Personnel of the Government of Tamil Nadu | iv—v |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | —vi |
| (iv) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல் | vii— xiv |
| 1. இரங்கல் குறிப்பு— | |
| முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மறைவு குறித்து .. .. .. | 1—3 |
| 2. இரங்கல் தீர்மானம்— | |
| சோவியத் ஒன்றிய குடியரசுத் தலைவர் திரு. யூரி விளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் மறைவு: .. .. .. .. | 3—23 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 3—9 |
| திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் | 9—10 |
| திரு. துரைமுருகன் | 10—11 |
| திரு. என். சங்கரய்யா | 11—14 |
| திரு. சோ. அழகர்சாமி | 14—15 |
| திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் | 15 |
| திரு. எஸ். ஆண்டித்தேவர் | 16 |
| திரு. பி. முகமது இஸ்மாயில் | 16—17 |
| திரு. ப. நெடுமாறன் | 17—81 |
| திரு. கி. சட்டநாத கரையாளர் | 19—20 |
| திரு. ஜி. மூர்த்தி | 20 |
| மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்தி | 20—21 |
| மாண்புமிகு பேரவைத் தலைவர் | 21—23 |
| 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 23—25 |

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

## தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர் லால் குரானா.

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் மற்றும் ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)— நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம் மற்றும் இரும்பு–எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால் பெருக்குத் திட்ட அமைச்சர்)— பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி–அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)— தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்,

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள். எடைகள்–அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

THIRU. SUNDAR LAL KURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Dr. M.G. RAMACHANDRAN (Chief Minister) - Public General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology and Excise.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance) - Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity) - Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Dairy Development) - Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue) Revenue, Commercial Taxes and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments) - Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and Grant of Liquor permit.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)- Education, includiug Technical Education, Official Language.

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture)- Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Law and Industries)- Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, Large Scale Industries, Mines and Minerals.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration) - Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.



11. Hon. Thiru S.RAGHAVANANDHAM (Minister for Labour) Labour, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health) - Health.

13. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)- Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

14. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Handlooms and Co-operation)- Textiles, Handloom and Co-operation.

15. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works)- Prohibition excluding grant of liquor permit, Passports, Public Works Department and Establishment matter relating to Public Works Department.

16. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi Dravidar Welfare)- Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. Hon. Thiru R. SOUNDARARAJAN (Minister for Nutritiou Meals) - Nutritious Meals.

18. Hon. Thiru S. R. ERADHA (Minister for Environmental Pollution Control) - Environmental Pollution Control, Housing and Slum Clearance Boards.

19. Hon. Thiru M. R. GOVENDHAN (Minister for Backward Classes)—Backward Classes.

20. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)- Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi)- Khadi.

22. Hon. Y. S. M. YUSUF (Minister for Irrigation and Wakf)- Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. Hon. Thiru R. ARUNACHALAM (Minister for Rural Industries)- Rural Industries including Village, Cottage and Small Industries.

24. Hon. Thiru K. KALAIMANI (Minister for Fisheries) - Fisheries.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப் பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ் சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர், புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, (கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்)—நெசவாலைகள், கைத்தறி, மற்றும் கூட்டுறவு.

15. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்),—மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராசன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)—சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல், வீட்டுவசதி மற்றும் குடிசைமாற்று வாரியம்.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற் பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூகநலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்



21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)—கதர்.

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத் துறை அமைச்சர்)—மீன் வளம்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 30 இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 31 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 32 இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 33 இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந. | செஞ்சி |
| 34 இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 35 இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 36 இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 37 இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 38 இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 39 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 40 இராஜசேகரன், திரு. வே. | டாக்டர் இராதா கிருஷ்ண நகர் |
| 41 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 42 இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 43 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 44 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 45 உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 46 உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 47 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 48 உமாநாத், திரு. ரா. | நாகை |
| 49 கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 50 கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 51 கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 52 கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 53 கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54 கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 55 கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 56 கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 57 கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 58 கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை (செ.வ.) |
| 59 கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 60 கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 61 கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 62 கலையரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ.வ.) |
| 63 காளிமுத்து, டாக்டர் கா. | திருப்பரங்குன்றம் |
| 64 கிருஷ்ணசாமி, திரு. கே. ஜி. | காங்கேயம் |
| 65 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 66 கிருட்டினமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்விகுப்பம் |
| 68 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்–1 |
| 69 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 70 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 71 குப்புசாமி, திரு. கே. | ஓட்டன்சத்திரம் |
| 72 குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 73 குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 74 குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 75 குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 76 குலசேகர பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 77 குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 78 கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 79 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 80 கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 81 கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 82 கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 83 கோவைத்தம்பி, திரு | பேரூர் |
| 84 சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி (செ.வ.) |
| 85 சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 86 சட்டநாத கரையாளர், திரு. இ. | தென்காசி |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### † மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வே. இரா. ஜெயராமன்.
2. டாக்டர் கே. சமரசம்.
3. டாக்டர் கே. சௌரிராஜன்.
4. திரு. சு. பாலன்.
5. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்.

திரு. இரா. பாலகுரு, பி. ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி. ஏ., பி.எல்.

### குழு அலுவலர்.

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்.சி.

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.

### எஸ்டேட் அலுவலர்.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. பி. கோதண்டராமன்.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன், பி.லிட்.

### தலைமை நிருபர்.

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ., எல். எல். பி.

---

* 21-6-80 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
† 15-2-84 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.



## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. | திருச்செந்தூர் |
| 7 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 8 | அரங்கநாதன், திரு. மு. | குன்னூர் (செ.வ.) |
| 9 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 10 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 14 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 15 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 16 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 17 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 18 | ஆறுமுகம், திரு. சேலம் மு. | சேலம்—2 |
| 19 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 20 | ஆனூர் ஜெகதீசன், திரு. பு. கொ. | செங்கல்பட்டு |
| 21 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 22 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 23 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 24 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 25 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.) |
| 26 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 27 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 28 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 29 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 150 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 151 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 152 | நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர். | ஆலங்குளம் |
| 153 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 154 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 155 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 156 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 157 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 158 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 159 | பட்டாபிராமன் திரு. செ. | திருவள்ளூர் |
| 160 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 161 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 162 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 163 | பழனிச்சாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 164 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 165 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம் |
| 166 | பழனிவேல், திரு. என். | பழனி (செ. வ.) |
| 167 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 168 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 169 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 170 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ. வ.). |
| 171 | பாலகிருஷ்ணன், திரு. சு. | மொடக்குறிச்சி |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 173 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ. வ.) |
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. வேடச்சந்தூர் வி. பி. | வேடசந்தூர் |
| 175 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ. வ.) |
| 176 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ. வ.) |
| 177 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 178 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 179 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 180 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 181 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ. வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 182 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 183 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ. வ.) |
| 184 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 185 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ. வ.). |
| 186 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 187 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 188 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 189 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 190 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 191 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ. வ.). |
| 192 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுர |
| 193 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி—1 |
| 194 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 195 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 196 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 197 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ. வ.) |
| 198 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 199 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 200 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 201 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட் (செ. வ.). |
| 202 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ. வ.). |
| 203 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.). |
| 204 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 205 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 206 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர் பேட்டை (செ. வ.) |
| 207 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 208 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 209 | ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |
| 210 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 87 சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 88 சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 89 சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 90 சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 91 சபாபதி, திரு. சி. | அரூர் (செ.வ.) |
| 92 சமரசம், டாக்டர் சே. | காவேரிப்பட்டணம் |
| 93 சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 94 சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 95 சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 96 சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 97 சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 98 சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 99 சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 100 சிவபெருமான், திரு. மு. | ஓமலூர் |
| 101 சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 102 சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 103 சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 104 சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 105 சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 106 சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 107 சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 108 சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 109 சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 110 சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 111 சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 112 சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 113 சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 114 சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 115 சுப்பிரமணியன், திரு. வீ. | திருநாவலூர் |
| 116 சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 117 சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 118 செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டி பாளையம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 119 செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 120 செல்லமுத்து. திரு. எம். | திருவாரூர் (செ.வ.) |
| 121 செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 122 சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 123 சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 124 சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் (செ.வ.). |
| 125 சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 126 சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 127 சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி-2 |
| 128 சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர். | ஸ்ரீரங்கம் |
| 129 சௌரிராஜன் டாக்டர் கே. | தி. நகர் |
| 130 தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 131 தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132 தங்கவேல்ராஜ், திரு பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 133 தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 134 தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 135 தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 136 தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 137 தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 138 தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 139 திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 140 திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 141 திருமான், திரு. இரா. | ஏற்காடு (ஆ.வா.) |
| 142 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 143 தீர்த்தராமன், திரு. ப. | பென்னாகரம் |
| 144 துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 145 துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 146 துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 147 துரைராஜ், திரு. பி. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 148 தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 149 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |

(பேரவைத் தலைவர்) [1984 பிப்ரவரி 14

திரு. ஜி. நாராயணசாமி நாயுடு அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறை தொகுதியிலிருந்தும், 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையும், மற்றும் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையும் தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறை (மாயூரம்) தொகுதியில் இருந்தும் மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். சங்கிலி அவர்கள் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையும், 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையும், திருநெல்வேலி மாவட்டம் கடம்பூர் (செ.வ.) தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. வி. பாஷ்யம் ரெட்டி அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டுவரை சென்னை நகரம் புரசைவாக்கம் தொகுயிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். 1939 ஆம் ஆண்டிலிருந்து 1946 ஆம் ஆண்டு வரை செம்பியம் ஊராட்சி மன்றத் தலைவராகவும், 1952 ஆம் ஆண்டு வரை சென்னை மாநகராட்சி உறுப்பினராகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. பஷீர் அகமது சயீத் அவர்கள் 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரை செங்கல்பட்டு மற்றும் தென்னாற்காடு முகமதியர் கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அவர் 1926 ஆம் ஆண்டிலிருந்து 1930 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1931 ஆம் ஆண்டிலிருந்து 1937 ஆம் ஆண்டு வரையும் சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். தேசியவாதியான இவர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டவர். மேலும் 15 ஆண்டுகள் சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார்.

சென்னை உயர்நீமன்ற நீதிபதியாக 1949இல் நியமனம் செய்யப்பெற்று பணியாற்றியுள்ளார். இவர் சிறந்த கல்வியாளர். குறிப்பாக முஸ்லீம் பெண்கள் கல்வியில் தனி சிரத்தை எடுத்தார். சென்னை பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மற்றும் அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் அமைப்புகளில் பணியாற்றியுள்ளார். ஜம்மு காஷ்மீர் பல்கலைக் கழகத்திற்கு துணைவேந்தராக நியமனம் செய்யப்பெற்று, சொந்தக் காரணங்களுக்காக அப்பதவியை மறுத்தவர். சென்னையில் சவுத் இண்டியன் எஜுகேஷன் டிரஸ்ட் என்ற கல்வி நிறுவனத்தை நிறுவினார். சென்னையில் எஸ்.ஐ.இ.டி. மகளிர் கல்லூரியையும், புதுக் கல்லூரியையும் 1951 ஆம் ஆண்டு நிறுவினார்.



1984 பிப்ரவரி 14] (பேரவைத் தலைவர்)

அன்னார்கள் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார்கள். அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. இரங்கல் தீர்மானம்

### சோவியத் ஒன்றிய குடியரசுத் தலைவர் திரு. யூரி விளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் மறைவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1982 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11 ஆம் நாள் முதல் சோவியத் ஒன்றிய குடியரசின் தலைவராக இருந்து வந்த திரு. யூரி விளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் அவர்கள் 1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9 ஆம் நாள் மறைந்தமை குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தை தெரிவித்துக்கொள்கிறது."

ஆண்ட்ரபோவ் சிறந்த அரசியல் வல்லுநர். அணு ஆயுதப் போட்டியை தடுத்து நிறுத்துவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சி களுக்காக அவர் உலகத்தவரால் என்றென்றும் போற்றப்படுபவர். அவர் இந்திய சோவியத் உறவுகளை வலுப்படுத்த தக்க நடவடிக்கைகளை எடுத்து இந்தியாவின் உற்ற நண்பராக விளங்கினார். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கும், சோவியத் அரசுக்கும், சோவியத் மக்களுக்கும் ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது."

சோவியத் ஒன்றியத்தினுடைய குடியரசுத் தலைவராக திகழ்ந்த திரு. யூரிவிளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் அவர்கள் மறைவின் மூலம் உலகம் ஒரு ஒப்பற்ற தலைவரை இழந்து இருக்கிறது. சோவியத் ஒன்றியம் மிகச் சிறந்த பாதுகாவலர் ருவரை இழந்து இருக்கிறது. இந்தியா ஒரு பெரும் நண்பரை இழந்து இருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். இந்தியாவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையிலே நீண்ட பெரும் காலமாக நட்புறவு நீடிக்க வகை செய்தும் அதே நேரத்தில் ஒத்துழைக்கும் போக்கையும், உறு துணையாக நிற்கும் தன்மையையும் தொடர்ந்து வளர்த்துக் கொண்டு வந்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 211 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 212 | விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. | வீரபாண்டி |
| 213 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 214 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.). |
| 215 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 216 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 217 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட் |
| 218 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 219 | வீரமணிபலம், திரு. க. வெ. | மேலூர் |
| 220 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 221 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஒசூர் |
| 222 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 223 | வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 224 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 225 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலமலை |
| 226 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 227 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 228 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 229 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 230 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 231 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர். |
| 232 | வெற்றிடம். | |
| 233 | வெற்றிடம். | |
| 234 | வெற்றிடம். | |
| 235 | வெற்றிடம். | |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைபெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா—அமைச்சர்
5 மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்—அமைச்சர்
6 மாண்புமிகு திரு. க. காளிமுத்து—அமைச்சர்
7 **திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.**

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**1984, பிப்ரவரி 14, செவ்வாய்க்கிழமை,**

**மாசி 2, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருதலை போன்றது: பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக்கொள்வதைப் போன்றது.

## 1. இரங்கல் குறிப்பு.

### முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மறைவு குறிதது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. பி. ரங்கசாமி ரெட்டியார் அவர்கள் 3-12-1983 ஆம் தேதியன்றும், திரு. எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள் 5-12-1983 ஆம் தேதியன்றும், திரு. ஜி. நாராயணசாமி நாயுடு அவர்கள் 18-12-1983 ஆம் தேதியன்றும், திரு. எஸ். சங்கிலி அவர்கள் 5-1-1984 ஆம் தேதியன்றும், திரு. வி. பாஷ்யம் ரெட்டி அவர்கள் 6-2-1984 ஆம் தேதியன்றும், அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பஷீர் அகமது சயீத் அவர்கள் 7-2-1984 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ரங்கசாமி ரெட்டியார் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையும் தென்னார்க்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோவில் (செ.வ.) தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 பிப்ரவரி 14

திரு. பிரஷ்நேவ் அவர்களுடைய அடிப்படையிலே அந்த
தன்மைகளை மேலும் வலுப்படுத்துகின்ற வகையிலும் மேலும்
மேலும் வளர்ச்சி அடையத் தக்க வகையிலும் சிறந்த முறையில்
பணியாற்றி சோவியத் ஒன்றியத்துக்கும் இந்தியாவுக்கும்
இடையிலே நல்ல நட்புறவு நிலைக்கத் தக்க அளவுக்கு அரும்
பெரும் பணியாற்றிய பெருமை திரு. யூரி விளாடிமிரோவிச்
ஆண்ட்ரபோவ் அவர்களைச் சேரும். திரு. யூரி விளாடிமிரோவிச்
ஆண்ட்ரபோவ் அவர்கள் 15 திங்கள்கள் தான் இந்த குடியரசுத்
தலைவராக பொறுப்பில் வீற்று இருந்தார் என்றாலும் இந்த
15 திங்களிலே அவர்கள் ஆற்றிய செயல்முறைகள் மற்றவைகள்
உலகத்தாருடைய பாராட்டுதல்களையும், போற்றுதல்களையும்
பெறத் தக்க வகையில் உலகத்தாருடைய புகழை பெறத் தக்க
அளவுக்கும் மிகச் சிறப்பாக அமைந்து இருக்கிற பாங்குகளை
நாம் நன்றாக காண்கிறோம்.

குறிப்பாக இன்றைய நிலையில் எங்கு பார்த்தாலும் போர்
மேகங்கள் குமுறிக்கொண்டு இருக்கிற இந்த நேரத்தில் நாட்டுக்கு
நாடு எல்லைகளை மீறி ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டும் என்ற
எண்ணம் எங்கு பார்த்தாலும் பரவி இருக்கிற நேரத்தில் புதிய
புதிய ஆயுதங்களை பயன்படுத்துகிற நிலைமைகளிலே; அணு
ஆயுதங்களை பயன்படுத்துகிற அளவுக்கு தங்கள் தங்கள்
இடத்தில் வலிவு இருக்கிறது என்று மிரட்டுகின்ற வகையில்
உலகத்தில் இருக்கிற சின்னஞ்சிறு நாடுகள் முதற்கொண்டு மிகப்
பெரும் நாடுகள் வரையில் பல பேரை அச்சுறுத்துகின்ற இந்த
நிலையில் உலகத்தில் இருக்கிற மிகப் பெரிய வல்லரசுகளில்
ஒன்றாக திகழ்கின்ற சோவியத் யூனியன் சார்பாக
திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் தொடர்ந்து பல மாநாடுகளிலே
வற்புறுத்தும்போதும் சரி, தொடர்ந்து பல சமயங்களிலே
கருத்துக்களை எடுத்துச் சொல்லுகின்றபோதும் உலக அமைதி
நிலைநாட்டப்படுவதற்கான அடிப்படைக் காரணங்களை மிக
அழுத்தம் திருத்தமாக மிக தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்
கிறார்கள். அந்த அளவுக்கு சோவியத் யூனியன் இரண்டாவது
உலக பெரும் போரில் பெரும் கொடுமைக்கு ஆளாகி இருக்கிறது
என்பதை அந்த நாட்டு மக்கள் மிக நன்றாக அறிகிறார்கள்.
அது மட்டும் அல்ல.

சென்ற 2-வது உலகப் பெரும் போரிலே சோவியத் மக்கள்
மட்டும் 2 கோடி பேருக்கு மேல் அந்த பெரும் போரில் இறக்கும்
படியான சூழ்நிலை ஏற்பட்டது மட்டும் அல்லாமல் முக்கியமான
பெரும் நகரங்கள் எல்லாம் பாழாகக்கூடிய சூழ்நிலைகள்

(முற்பகல் 10-10)

ஏற்பட்டன. ஆகவே இன்னொரு போர் வந்து தங்களை எந்த
வகையிலும் பாதிக்கக்கூடாது என்கின்ற அளவுக்கு உணர்வு
சோவியத் மக்களுடைய உள்ளங்களிலே மிகச் சிறப்பாக
அமைந்திருப்பதை நாம் பார்க்கிறோம். தங்களுக்கு வந்த கெடுதல்
போன்று உலகத்தில் இருக்கிற பிற நாடுகளுக்கு வரக்கூடாது
என்ற உணர்வினுடைய அடிப்படையிலே உலக அமைதியைக்
காப்பதிலே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.



1984 பிப்ரவரி 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அண்மையிலே கூட மாண்புமிகு அவைத் தலைவரும் நானும்
மற்றும் இந்த அவையைச் சேர்ந்த உறுப்பினர்களும் பிறரும்
சோவியத் நாட்டிற்குச் சென்றிருந்தபொழுது அங்கே லெனின்
கிராடிலே இரண்டாவது உலகப்போரிலே எப்படிப்பட்ட சேதங்கள்
ஏற்பட்டன, எப்படிப்பட்ட பயங்கரமான தன்மையிலே
மக்களுடைய உயிர்கள் வாங்கப்பட்டன என்பதையும் குடும்பங்கள்
எல்லாம் எவ்வளவு அலைக்கழிக்கப்பட்டன என்பதையும் அவர்கள்
பொருட்காட்சிகள் மூலமாகவும் உணர்த்தி வருகிறார்கள்,
எல்லோருக்கும் தெளிவுபடுத்தி வருகிறார்கள். அந்த வகையிலே
மீண்டும் ஒரு உலகப்போர் வருவதைத் தடுத்து நிறுத்துவதில்
சாதாரண நாடுகள் ஈடுபடுவதைவிட ஒரு வல்லரசு ஈடுபடுவது
மிகமிகப் பொருத்தம் என்ற முறையிலே ஆண்ட்ரபோவ் அதற்கு
அடிகோலியவர் என்ற வகையிலே உலகத்திலே இருக்கிற
அமைதியைக் காண விரும்புகிற அத்தனைபேரும், விரும்பி ஏற்றுக்
கொண்டு, அவரது நிலையை மிகவும் பாராட்டி விரும்புகிறார்கள்
என்பதை நாம் நன்கு அறிவோம்.

அது மட்டுமல்லாமல், அணு ஆயுதப் போரை எக்காரணம்
கொண்டும் எங்கும் மூட்டக் கூடாது என்பதை பல்வேறு அமைதி
மாநாடுகளிலே கலந்துகொள்கின்ற பொழுதும் ஆண்ட்ரபோவ்
மிகச் சிறப்பாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். உலக
அமைதியை நிலை நாட்டுவது உலகோரின் கடமையாகும் என்பதை
அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அவரது
செயல்முறையை வைத்து ஒரு புதிய ஆங்கிலச் சொல்லே உருவாகி
இருக்கிறது உலக அடிப்படையில். அந்த வகையிலே, அமைதிக்காக
மிகவும் பாடுபட்டார் என்ற காரணத்தாலே, 'Peace Link,
என்ற ஒரு ஆங்கிலச் சொல்லே ஆண்ட்ரபோவ் அவர்களுடைய
செயல் முறையினுடைய அடிப்படையிலே உருவாகியிருக்கிறது
என்றுசொன்னால், எவ்வளவு அக்கறையோடும், ஆர்வத்தோடும்
அமைதியைக் காண்பதிலே அவர் முயன்று நின்றார் என்பதும்
சோவியத் அரசையே அதற்குப் பின்னணியாக வைத்து
தன்னுடைய முழுத் திறமையையும் காட்டிவந்த ஒருவர் என்ற
முறையிலே உலகத்திலே அமைதியைக் காக்க விரும்புகிறவர்கள்
அத்தனை பேரும் அவரிடத்திலே மிகுந்த மதிப்பும் மரியாதையும்
வைத்திருக்கிறார்கள் என்பதும் தெரியும்.

ஆண்ட்ரபோவ் வழிகாட்டுதலில் இயங்கும் சோவியத் கம்யூனிஸ்ட்
கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கூட இந்தியாவுடன்
நல்லுறவு, இந்தியாவின் தலைமைக்கு முழு ஆதரவு என்று இரண்டு
கோட்பாடுகளைக் கொண்ட ஒரு தீர்மானத்தை அண்மையிலே
நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று சொன்னால் சோவியத்
இந்தியாவினுடைய உறவை நிலைநாட்டுவதிலும் காப்பதிலும்
சோவியத் குடியரசுத் தலைவராக இருந்த ஆண்ட்ரபோவ்
அவர்கள் மிகவும் அக்கறை காட்டி வந்தார்கள் என்பதை மிக
நன்றாக நாம் அறிவோம். இதற்கு முன்னால் இப்படிப்பட்ட
ஒரு தீர்மானத்தைக் கூட சோவியத்திலே இருக்கிற கம்யூனிஸ்ட்
கட்சியினுடைய தலைமை வரலாற்றிலே நிறைவேற்றியதும் கூட
இல்லை.

அதுமட்டுமல்ல, இந்தியாவுக்கும் சோவியத் ஒன்றியத்திற்கும் இடையிலே உள்ள நல்லுறவின் அடையாளமாகத்தான் ஆண்ட்ரபோவின் மறைவு குறித்து இந்திய அரசே 3 நாள் துக்கம் கொண்டாடுவதும் அதனைப் பின்பற்றி தமிழக அரசும் 3 நாள் துக்கம் கொண்டாடுவதும், அது மட்டுமல்ல இந்தியாவில் வாழ்கின்ற 70 கோடி மக்களின்சார்பாக இரங்கலைத் தெரிவிக்கவும், இறுதி அஞ்சலி தெரிவிக்கின்ற வகையில் இந்தியாவினுடைய பிரதமர் இந்திரகாந்தி அம்மையார் அவர்கள் இன்று அங்கு நடைபெறுகின்ற சவ அடக்கத்திற்கு, அங்கே போய் அஞ்சலி தெரிவிக்கின்ற அளவுக்கு அங்கேயே சென்றிருக்கிறார்கள் என்பதும் இரண்டு நாடுகளுடைய நட்புறவினுடைய தன்மையாக பெற்றிருக்கின்றோம் என்பதும் தெளிவாக விளங்குகிறது என்பது மட்டுமல்லாமல், இதை எந்த அளவு நாம் மதித்துப் போற்று கின்றோம் என்பதையும் எடுத்துக் காட்டுகின்ற ஒன்றாக அமைந்திருக்கிறது.

அவர் சாதாரணமாக ஒரு ஏழை ரெயில்வே தொழிலாளி யினுடைய மகனாகத்தான் பிறந்தார் என்றும் மிகமிகச் சாதாரண ஏழை, எளிய சூழ்நிலையிலே வாழ்ந்து விடாமுயற்சியின் காரணமாகவும் கொள்கைப் பிடிப்பின் காரணமாகவும் கோட்பாடு களையும் குறிக்கோளையும் தெளிவாகக் காட்டி அதனை நடைமுறைப்படுத்துகின்ற தன்மையினாலும் படிப்படியாக உயர்ந்து அவருடைய அறிவுத் திறனும் ஆற்றல் திறனும் மற்றவர்களால் கவரப்பட்டு மிகச் சிறந்த நிலைக்கு உயர்ந்து சோவியத் ஒன்றியத்தினுடைய குடியரசுத் தலைவர் பதவியைப் பெறத்தக்க அளவுக்கு எல்லோருடைய அன்பையும் அரவணைப்பையும் பெற்றிருக்கிறார் என்பது மட்டுமல்லாமல் அங்குள்ளவர்கள் அத்தனை பேர்களுடைய நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெறுவதிலே அவர்கள் சிறந்து வளர்ந்தோங்கி வந்தார் என்பதையும் அவருடைய வாழ்க்கை வரலாறு மிகச் சிறப்பாக எடுத்துத் தெரிவிக்கின்றது. அவர் 16-வது வயதிலே கம்யூனிஸ்ட் கட்சியோடு தொடர்பு கொண்டு இருந்தார்கள் என்பது மட்டுமல்லாமல், அவர்கள் கப்பல் படையில், வோல்கா என்ற ஒரு கப்பல் நிறுவனத்திலே ஒரு மாலுமியாகச் சேர்ந்து அதிலேயே ஈடுபட்டுக் கொண்டு அதிலேயே வளர்ந்து வந்தார்கள் என்பது மட்டுமல்லாமல், அவர்கள் படிப்படியாக உயர்ந்து 1939-வது ஆண்டு ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக ஆனார் என்பதும், 1951-ல் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினராக ஆகி, பிறகு அதனுடைய மேற்பார்வை யாளராக ஆகி, பிறகு சிறிது நாளில் ஒரு குழுவினுடைய பிரிவுக்கே தலைமை தாங்குகின்ற அளவுக்கு 1951ஆம் ஆண்டிலே அத்தகைய சிறப்புகளைப் பெறத்தக்க அளவிற்கு அவருடைய உழைப்பும், அவர்களுடைய ஊக்கமும், அவர்கள் கட்சிக்கு ஆற்றிய ஆக்கப் பணிகளும், பிறரை பெரிதும் கவர்ந்தன என்பதை நாம் அறிகின்றோம்.

1953-லே ஹங்கேரி நாட்டில் ரஷ்யாவினுடைய தூதுவராக இருந்து பணியாற்றுகிற அளவிற்கு அவர் தகுதி, திறமை படைத்தவர்கள் என்று ரஷ்யா கருதி, 1953-லேயிருந்து 1957



ஆம் ஆண்டு வரையிலும் அவர்கள் அங்கேயே சிறப்பாக பணி புரிந்து இருக்கிறார்கள். 1967-லே ரஷ்யாவின் அமைச்சரவையில் பாதுகாப்புக் குழுத் தலைவராக அவர்கள் பல தடவைகள் ஆனார்கள் என்பது மட்டுமல்லாமல், பல்லாண்டுக் காலம் தொடர்ந்து அங்கே சோவியத் ஒன்றியத்தினுடைய பாராளுமன்ற உறுப்பினராக ஆகின்ற தகுதியையும் மிகச் சிறப்பாக பெற்றிருந்து இருக்கிறார்கள். 1982 ஆம் ஆண்டு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொது செயலாளராக ஆனார். பின்னர் அந்த சோவியத் ஒன்றியத்தினுடைய குடியரசுத் தலைவராக ஆனார் என்பது மட்டுமல்லாமல், அவர்கள், 15 ஆண்டுக்காலம் கே.ஜி.பி. என்று சொல்லப்படுகின்ற உளவு நிறுவனத்திற்கு தலைமை தாங்கி, அக 15 ஆண்டுக்காலம் தலைமை தாங்கியதன் காரணமாக உலகத்தில் இருக்கிற பல்வேறு நாடுகளுடைய போக்குகளை, நுணுக்கங்களை, எந்தெந்த நாடுகள் என்னென்ன ரகசியமாகச் செய்கின்றன என்பதைக் கூர்ந்து கவனிக்கின்ற அறிவுத்திறனும் ஆற்றல் திறனும் அவர்கள் படைத்து இருந்தார்கள் என்பதுமட்டுமல்லாமல் சோவியத் ஒன்றியத்தினுடைய தன்மையை; காப்பாற்றுவதற்கு இந்த உளவு நிறுவனத்தினுடைய தலைவராக தொடர்ந்து 15 ஆண்டுக்காலம் தலைமை வகிக்கத் தகுந்த அளவுக்கு அவர்கள் தனித் திறமையை பெற்று இருந்ததன் காரணமாக அவர்கள் மிகமிக பாராட்டப் பெற்றார்கள், போற்றப் பெற்றார்கள். அந்த அனுபவம் அவர்கள் குடியரசுத் தலைவராக ஆனதற்குப் பிறகு உலக நாடுகளை அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும். ஆகவே ரஷ்யாவினுடைய நிலையை, எந்த நிலையிலே நிலை நாட்டுவது என்பதிலே ஒரு முடிவு எடுப்பதற்கும், இந்த 15 ஆண்டுக்காலம் உளவு நிறுவனத்தினுடைய தலைவராக இருந்தார்கள் என்பது மட்டுமல்லாமல், அவருடைய தலைமையின் கீழ் மட்டும் 5 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இருந்து அந்த நிறுவனத்தின் சிறப்புக்கு, உலகம் எங்கும் ரஷ்யா முழுவதும் இருந்து பாடுபட்டார்கள் என்றும், குறிப்புகள் தெரிவிக்கின்றன. இந்த வகையிலே அவர்கள் நீண்ட பெரும் காலம் இருந்து இருக்க வேண்டியவர்கள். உலகம் அப்படிப்பட்ட நிலைமைகளிலேதான் அவரை எதிர்பார்த்தது. ஆனால் மிகக் குறுகிய காலத்திலே, 15 மாத காலத்திலே அவர்கள் மறைந்தார்கள் என்பது உள்ள படியே உலகத்திலே அமைதியைக் காண விரும்புகிற அத்தனை பேர்களுக்கும் குறிப்பாக நல்லுறவை, நல்ல நட்பை காப்பாற்ற விரும்புகிற இந்தியாவிற்கு ஒரு பேரிழப்பாகும். ஆகவே உலகத்திலே நல்லதொரு சூழ்நிலையை நிலைநாட்டுவதற்கு அவர்கள் மிகவும் பயன்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணி, நினைந்து அவர்களுடைய அருமை பெருமைகளை இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதற்கு முன்னால் இருந்த மொத்தம் 5 தலைவர்கள் சோவியத் யூனியனை தலைமை தாங்கி நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்றாலும் நடைமுறையில் காலம் நடத்துகின்ற அளவிற்கு இவர்கள் தான் வாய்ப்பினைப் பெற்றார்கள். 1917-லேயிருந்து 1924 வரையிலும் லெனினும் 1924-லேயிருந்து 1953 வரையில் ஸ்டாலினும், 1953-லேயிருந்து 1964 வரையிலும் குருஷ்சேவும்,

1974-லேயிருந்து 1982 வரையிலும் பிரஷ்னேவும், அந்த நிலைத்த ஒரு தலைமையைப் பெற்று ஆண்டு கொண்டு வந்திருக்கிற நிலையிலிருந்து மாறி, ஒரு 15 திங்கள் வரையிலும் அந்தப் பொறுப்பிலேயிருந்து ஆளுகின்ற சூழ்நிலையை அவர்கள் பெற்றார்கள். அரசு அமைப்பிலே காணப்பட்ட பல்வேறு சீர்திருத்தங்களை, மெத்தனத் தன்மையை, பல்வேறு கட்டுப்பாடு இன்மையை அகற்றிக் களைவதிலே அவர்கள் மும்முரமாக ஈடுபட்டார்கள் என்ற வகையிலே அந்த நாட்டிலே அவர்கள் மிகவும் பாராட்டுகிறார்கள்.

அதுமட்டுமல்ல. கடின உழைப்பை அவர்கள் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். தொழிலகங்களில் தொழிலாளர்கள் ஜனநாயகப் பங்கை, ஏற்கனவே இருந்த அளவைவிட மேலும் விரிவாக்குவதிலே அவர்கள் மிகவும் பாடுபட்டு வெற்றி கண்டார்கள் என்றும் அவரைப் பற்றிய குறிப்புகள் எடுத்துத் தெரிவிக்கின்றன. பழைய தலைமுறை புதிய தலைமுறைக்கு வழிவிட்டு விடுவது மட்டுமல்லாமல், புதிய தலைமுறையினரை பயிற்றுவிக்கின்ற பொறுப்பையும், பழைய தலைமுறையினர் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்தி அந்த வகையிலே சோவியத் யூனியனை சீர்படுத்தி, செம்மைப்படுத்திக் கொண்டு வருவதிலே அவர்கள் மிகவும் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள், என்பதை நாம் அறிகிறோம். கொள்கையில் உறுதியாக இருந்து, காலத்திற்கு ஏற்றாற் போல் மாறுதலுக்கும், மாற்றத்திற்கும் வழிவிட்டு, நிலையான பணிகளிலே கவனம் செலுத்த வேண்டும் என்பதிலே அவர்கள் அக்கறை, எண்ணத்தைக் கொண்டு இருந்தார்கள் என்பதையும், அவரைப் பற்றிய சோவியத் நாட்டினுடைய குறிப்புகள் மிகச் சிறப்பாகத் தெரிவிக்கின்றன. இதிலே மிக முக்கியமாக' லெனின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதிலும், அதிலிருந்து சிறிதுகூட விலகிச் செல்லாத அளவிற்கு கட்டிக்காப்பதிலே அவர்கள் அழுத்தந்திருத்தமாக ஆரம்ப காலத்திலேயிருந்து நின்றார்கள் என்பதும், அதுமட்டுமல்லாமல், இறுதியாக குடியரசுத் தலைவராக இருந்த பிரஷ்னேவ் அவர்களுக்கு வலது கரமாக இருந்து அவருடைய முழு நம்பிக்கையும், அன்பையும் பெறுவதிலே கூட மிகச் சிறந்து விளங்கினார் என்றும் எடுத்துச் சொல்கிறார்கள். ஆகவே, மற்றவர்கள் அத்தனை பேரும் பாராட்டுவதற்குக் காரணம் அவர்களுடைய கொள்கைப்பிடிப்பும், அவர்களுடைய நேர்மையும், அவர்கள் எடுத்த பணிகளை முடிக்கின்ற திறனும், 16 வயதிலிருந்தே முனைப்புள்ளம் கொண்டு எதையும் எடுத்து செய்து முடிக்கின்ற செயலாற்றல் திறனும் கொண்டு இருந்த காரணத்தால்தான் அவர்களுடைய இழப்பு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பு என்று எல்லோரும் கருதத்தக்க அளவிற்கு இருந்து இருக்கிறது.

(முற்பகல் 10.20)

நானும், இந்த மாநிலத்தின் சார்பாக அமைந்து இருக்கும் இந்த சட்டமன்றப் பேரவையும், தன்னுடைய அனுதாபத்தையும்





இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிற முறையில்தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இந்த அவையின் சார்பாகவும் ஆளும் கட்சியின் சார்பாகவும் மறைந்த திரு. ஆண்ட்ரபோவ் அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கும், சோவியத் அரசுக்கும், சோவியத் மக்களுக்கும் ஆழ்ந்த வருந்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது என்ற தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்: மாண் மிகு சபாநாயகர் அவர்களே. சபையின் முன்னவர் அவர்களால் இந்த அவையில் மொழியப்பட்ட தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன். உலக நாடுகளில் ஒரு பெரிய நாடான ரஷ்யாவின் அதிபர் திரு. யூரி ஆண்ட்ரபோவ் அவர்கள் சென்ற வாரம் வியாழக்கிழமை இறந்துவிட்டார். ஆனால் அந்தச் செய்தி அவர் இறந்த 22 மணிநேரம் கழித்துத்தான் ரஷ்ய அரசால் அதிகாரப்பூர்வமாக உலகத்திற்கு அறிவிப்பு செய்யப்பட்டது. திரு யூரி ஆண்ட்ரபோவ் அவர்கள் அதிகாரத்திற்கு வந்து 15 மாதங்கள் ஆனாலும் கூட மிகுதியான நேரம் அவர் பெரிதும் நோய்வாய்ப்பட்டு மிகவும் அவதிக்குள்ளானார்கள். 1983-ஆம் ஆண்டு ஆகஸ்டிலிருந்து அவர் பொது வேலைகளில் காணப்படவில்லை. சில முக்கியமான நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்ளாததிலிருந்து அவர் பலத்த நோயினால் அவதிப்படுகிறார் என்ற அபிப்பிராயம் உலகத்திலே பரவியிருந்தது.

அவர் மிகவும் திறமை வாய்ந்தவர், கட்சியின் லட்சியங்களில் அபார நம்பிக்கை உடையவர். மறைந்த தலைவர் பிரஷ்னேவ் அவர்களின் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தார். அயல்நாட்டு விவகாரங்களில் கூட அவர் வகுத்த பாதையிலேயே மிகுதியாக சென்று வந்தார். வல்லரசுகளிடையே இருக்கக்கூடிய அபிப்பிராயபேதங்களினால் அணு ஆயுதப் போர் மூண்டு உலகம் நாசம் ஆவதைத் தடுக்கும் நம்பிக்கை அவரிடம் இருந்தது. அதன் காரணமாக ஜெனீவா மாநாட்டில் கூட அவர் கலந்து கொண்டபோது அமெரிக்க தேசம் அதற்குச் சரியாக வராததைக் கண்டு அவர் வெளிநடப்புச் செய்தார். அதற்குப் பரிகாரமாக எல்லா வல்லரசுகளும் சேர்ந்து நிச்சயமாக அணு ஆயுதம் குறைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அவர் மிகவும் வலியுறுத்திப் பேசிக் கொண்டு இருந்தார்.

இந்தியாவுடன் காலம் சென்ற ஆண்ட்ரபோவ் அவர்கள் நல்லுறவை வளர்த்து வந்தார். இந்தியா ஒரு மகத்தான நாடு, ஒரு மகத்தான தலைமையைக் கொண்டு இருக்கிறது. அந்த தேசத்திற்கு நாம் எப்போதும் உதவியாக இருக்கவேண்டும். அந்த தேசத்தின் நல்லுறவு நமக்கு இருக்க வேண்டும் என்ற ஒரு அபார நம்பிக்கை கொண்டு இருந்தார் அவர். அதன் காரணமாகத்தான் அவர் இறந்த ஒரு மணி நேரத்திற்குள்ளேயே நம்முடைய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், திரு. ஆண்ட்ரபோவ் அவர்களின் இறுதி சடங்கிற்கு வருவதாக

அறிவித்தார். இதன் காரணமாகத்தான் இப்போது அவருக்கு அடுத்தபடியாக வருகின்ற திரு. செரனென்கோ அவர்கள் முதலிலேயே இந்தியத் தலைவி அம்மையார் அவர்களைப் பார்க்கவேண்டும் என்ற ஒரு செய்தியை கொடுத்து இருக்கிறார்கள்.

சபாநாயகர் அவர்களே, நான் சார்ந்து உள்ள கட்சியின் அங்கத்தினர்கள் சார்பாகவும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் திரு. ஆண்ட்ரபோவ் அவர்களின் மறைவால் வாடும் குடும்பத்தாருக்கும், ரஷ்ய மக்களுக்கும் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இரங்கல் தீர்மானத்தின்மீது எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்,

இந்தியாவினுடைய உற்ற நண்பராக உலக அரங்கிலே விளங்கியவரும் பொதுவுடைமை பூங்காவாம் சோவியத் ஒன்றிய குடியரசின் தலைவராகவும் வானத்திலே வல்லூறுகளுக்குப் பதிலாக வெண் புறாக்கள் வட்டமிடும் நிலைமை உருவானால் தான் உலக சமாதானம் உருவாகும் என்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கைக்கொண்டவரும் அணு ஆயுதங்களைக் குறைத்தால் அன்றி நிலையான உலக சமாதானத்தை உருவாக்க முடியாது என்பதிலே நிலையான கொள்கை கொண்டு, அதற்காகப் பாடுபட்டவருமாக விளங்கிய சோவியத் குடியரசுத் தலைவர் ஆண்ட்ரபோவ் அவர்கள் இந்த மாதம் 11-ந்தேதி மறைந்து விட்டார்கள் என்ற செய்தி உலகத்திலே சமாதானத்தை விரும்புகிறவர்கள், பொதுவுடைமையைப் பேண வேண்டுமென்று கருதுகிறவர்கள் எல்லோருக்கும் ஒரு அதிர்ச்சி தரத்தக்கச் செய்தியாகும்.

பதினைந்து மாதங்களிலே பதவியில் இருந்தார் என்றாலும் அவர் சாதித்தவை ஏராளம். ஒருவர் எவ்வளவு நாள் பதவியிலே இருக்கிறார் என்பதல்ல முக்கியம்; எவ்வளவு காரியங்களைச் செய்தார் என்பதுதான் முக்கியம். இந்த 15 மாதங்களிலே அவர் அதிகநாள் நோய்வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாக இருந்தார். இந்நிலையில் கீழை நாடுகள் பகுதியிலே பல்வேறு அரசியல் பிரச்சனைகள் உருவாகின. கிரெனடாவிலே யு. எஸ். படையெடுத்ததும், அணு ஆயுத பேச்சுக்கு அமெரிக்க இராணுவம் முட்டுக்கட்டை விதித்ததும் இவற்றை எல்லாம் அவர் படுத்த படுக்கையாக இருந்து கொண்டே சமாளித்த விதத்தினாலும் உலக அரங்கத்திலே அழியாத ஒரு இடத்தைப் பெற்றார். எனவே, இப்படிப்பட்ட ஆண்ட்ரபோவ் அவர்கள் மறைந்தது சோவியத் நாட்டுக்கு மட்டுமல்ல; உலகத்தில் இருக்கிற அத்தனை சமாதான விரும்பிகளுக்கும் ஒரு அதிர்ச்சி தரும் செய்தியாகும்.



அவர் மறைந்துவிட்டாலும் அடுத்து ஒருவர் வரலாம். ஆனால் வரலாற்றிலே ஒரு நிலையான புகழைப் பெற்றிருக்கிறார் ஆண்ட்ரபோவ் அவர்கள். அத்தகைய புகழைப் பெற்றிருக்கிற அவருடைய மறைவினால் வருந்தும் சோவியத் மக்களுக்கும் அவருடைய குடும்பத்திற்கும் இந்த மாமன்றம் இரங்கலைத் தெரிவிக்கிறது. அதோடு எங்களுடைய கட்சியின் சார்பிலே இரங்கலைத் தெரிவிப்பதற்கு முன்னால் எங்கள் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ''ஆண்ட்ரபோவ் மறையவில்லை'' என்று தீட்டிய இரங்கற்பாவினை எங்களுடைய கட்சியின் சார்பிலே இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

''உழைக்கும் வர்க்கத்தின்
உரிமைக்கொடி பறக்கவிடப்பட்ட பூமி
தனியுடைமை ஆதிக்கத்தைத்
தகர்த்தெறிந்த நாடு
பொதுவுடைமைச் சோலை
புதுமைக்கு வழி காட்டும் சாலை
மார்க்சின் தத்துவங்கள்
மகுடம் தரித்துக்கொண்ட அந்த மண்ணில்
மாவீரன் லெனின் சிந்தனைகள்
செயல் வடிவம் கொண்டன.
சிவப்பால் செழித்தது தேசம்—உலகம்
வியப்பால் முகம் மலர்ந்தது.
இரும்பு மனிதன் ஸ்டாலின்,
குறும்பு மனிதன் குருஷேவ்!
பிரச்சினைகளை விரைவில் தீர்க்கும் மனிதன் பிரஷ்னேவ்
பின்னர் வந்த மனிதனே ஆண்ட்ரபோவ்
தொழிலாளியின் மகனாய்ப் பிறந்தான்
தொல்புவி போற்றும் அதிபராய்த் திகழ்ந்தான்.
பதினைந்தே மாதங்கள் பதவியில் இருந்தாலும்—அந்தப்
பதவிக்கோர் கீர்த்தியைத் தந்தான்.
ஏற்ற பணிகள் ஏராளம்
ஏறிய படிகளோ எண்ணற்றவை
இறந்தவர்கள் மறைவதில்லை—நெஞ்சில்
நிறைந்தவராய்ச் சாகாமல் வாழ்கின்றார்—இது
சிறந்தவர்க்கே இலக்கணமாம்—அந்தச்
சீர்மிகுந்த பட்டியலிலே இவருக்கும் இடம் உண்டு''

என்று எங்கள் கட்சித் தலைவர் தீட்டிய இரங்கற்பாவினை எங்கள் கட்சியின் சார்பிலே நினைவுபடுத்திக்கொண்டு, இரங்கல் தீர்மானத்தை வழிமொழிந்து, விடைபெறுகிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தோழர் ஆண்ட்ரபோவ் அவர்களுடைய மறைவு குறித்து அவை முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக் கூடிய அனுதாபத் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வழிமொழிந்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தோழர் ஆண்ட்ரபோவ் அவர்கள் பிரஷ்னேவ் அவர்களுடைய மரணத்திற்குப் பின்னால் சோவியத் நாட்டினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்று. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய

[திரு என். சங்கரய்யா] [1984 பிப்ரவரி 14

பொதுச் செயலாளராகப் பதவி ஏற்று, மற்ற தலைவர்கள்
கூறியதைப்போல சிறிது காலமே அந்தப் பொறுப்பிலே அவர்
பணியாற்ற முடிந்தாலும் இந்த காலத்தில் உலகத்தில்
அமைதியை நிலைநிறுத்துவதற்காக ஒரு அலாதியான பெரும்
பணியை, பெரும்பங்கை நிறைவேற்றினார் என்பதை நான்
இங்கே குறிப்பிட விரும்புகிறேன்

ஐரோப்பாவிலே புதிய ஏவுகணைகள் நிறுவப்பட்ட பிரச்சனை
வந்தபோது உறுதியாகவும் விவேகமாகவும் அந்தப் பிரச்சனை
மேலும் சீரடைந்து விடாமல் அதை தடுத்து நிறுத்தி. மறுபடியும்
இந்த அணு ஆயுதங்களையும் ஏவுகணைகளையும் குறைப்பதற்கு,
ஐரோப்பாவிலே சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு சிறந்த
இராஜதந்திரியாக முன்முயற்சியை சோவியத் அரசின் சார்பாக
அவர் மேற்கொண்டார். இந்த முயற்சியினால் உலகிலே
இருக்கும் சமாதானத்தை விரும்பும் அத்தனை மனிதர்களும்
அதை நன்றியுடன் நினைவுபடுத்துவதற்கான ஒரு நிலைமை
ஏற்பட்டிருக்கிறது.

வளர்ச்சி அடைந்திருக்கிற சோஷலிச சமுதாயம் மேலும்
வளர்ச்சியடைவதற்கான பாதையிலே அவர் சமாதானத்தைப்
பேணிக் காத்தார். அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப்
போல லெனினிய அயல்நாட்டுக் கொள்கை என்பது மாறுபட்ட
சமுதாய அமைப்புகளுக்கிடையே ''சக ஜீவனம், சக வாழ்வு''
என்பதை அடிப்படையாகக் கொண்டது.

(முற்பகல் 10-30)

கம்யூனிசம் என்பதும், சமாதானம் என்பதும் தனித்தனியாக
பிரிக்கப்பட முடியாத இரண்டு இலட்சியங்களாகும். அந்த
லட்சியத்தைத்தான் தோழர் ஆண்ட்ரபோவ் அவர்கள்
தன்னுடைய அயராத அயல் நாட்டுக் கொள்கையை நிறை
வேற்றுவதற்கு பாடுபட்டார். அவர் சிறுநீரகக் கோளாறினால்
கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தபோதிலும் சோவியத்
அரசினுடைய உள்நாட்டு, வெளிநாட்டு நடவடிக்கைகளிலே
அவருடைய தனியான முத்திரை பதிப்பிக்கப்பட்டிருந்தது
என்பதை நாம் நன்றாக அறிவோம்.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு அவர்
உற்ற நண்பராக விளங்கினார். தென் அமெரிக்காவிலே உள்ள
நிகாராகுவா விடுதலை இயக்கத்திற்கும் ஆப்பிரிக்காவிலுள்ள
அங்கோலா மக்களின் விடுதலை இயக்கத்திற்கும் அதேபோன்று
அரபு மக்கள், பாலஸ்தீன மக்களின் விடுதலை இயக்கத்திற்கும்
சிறந்த நண்பராக விளங்கி அவர்களுடைய விடுதலைக்கு தன்னால்
இயன்ற சகல உதவிகளையும் அவர் செய்தார் என்பதை நான்
இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கூட்டுச் சேரா இயக்கத்தைச் சேர்ந்த நாடுகளுக்கு சோவியத்
யூனியன் என்றுமே சிறந்த பாதுகாவலனாகவும் நண்பனாகவும்
இருந்திருக்கின்றது. அதே கொள்கையைப் பின்பற்றி இந்தக்கூட்டுச்
சேரா இயக்கத்தினுடைய ஒரு மாபெரும் துணைவராக ஆண்ட்ர
போவ் அவர்கள் செயல்பட்டார்கள்.



1984 பிப்ரவரி 14] [திரு. என். சங்கரய்யா]

இந்திய சோவியத் நட்புறவு என்பது கடந்த பல ஆண்டு
களாகவே நீடித்த ஒரு நட்புறவாக வளர்ந்து வருகின்றது
என்பது நமக்குத் தெரியும். அந்த நட்புறவு வளர்ந்து 1971
ஆம் ஆண்டிலே இந்தியாவிற்கும் சோவியத் யூனியனுக்கும்
இடையிலே ஒரு நட்புறவு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. அந்த
ஒப்பந்தம் ஆண்ட்ரபோவ் அவர்களுடைய தலைமையிலே
நடந்தது. அது ஆசியாவிலும், உலகத்திலும் சமாதானத்தைப்
பாதுகாப்பதற்கான ஒரு மகத்தான கேடயமாக விளங்குகின்றது.
என்பதை இன்று இந்திய அரசியலிலே உள்ள பெருமக்கள்
அனைவரும் மிகுந்தஉணர்வோடு அதை ஞாபகப்படுத்துகிறார்கள்.

அதுமட்டுமல்ல. இன்று சோவியத் யூனியன் இந்தியாவின்
மிகப்பெரிய வியாபார கூட்டாளியாகத் திகழ்கிறது. உலகத்திலே
உள்ள அனைத்து நாடுகளையும் விட இந்தியாவோடு அதிகப்
படியான வியாபாரத்தை நடத்துவது சோவியத் யூனியன்
ஆகும். 1982 ஆம் ஆண்டிலே இந்தியாவிற்கும் சோவியத்
யூனியனுக்கும் நடைபெற்ற வியாபாரம் 3,000 கோடியாக
இருந்தது. தோழர் ஆண்ட்ரபோவ் அவர்கள் பொறுப்
பேற்றதற்குப் பிறகு 1983 ஆம் ஆண்டிலே அது 4,000 கோடி
ரூபாயாக உயர்ந்திருக்கின்றது. அதாவது இந்திய சோவியத்
வர்த்தகம் தோழர் ஆண்ட்ரபோவ் அவர்கள் ஆட்சிக் காலத்திலே
25 சதவீதம் அதிகரித்திருக்கின்றது என்று சொன்னால் அது
எந்த அளவிற்கு இந்தியாவோடு உள்ள நட்புறவில் சோவியத்
யூனியன் தன்னுடைய அக்கறையைச் செலுத்தியது என்பதற்கு
எடுத்துக்காட்டாகும். அந்த அளவிற்குச் செயலாற்றினார்
தோழர் ஆண்ட்ரபோவ் அவர்கள் என்பதையும் இதிலிருந்து
நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும்.

இவ்வாறு பல துறைகளிலும் அவர்கள் சிறந்த முறையில்
செயலாற்றினார்கள். அவர் இந்தியாவிற்கு வருகை தருவதாக
இருந்தது. அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்ட காரணத்தால்
சோவியத் யூனியனுடைய பாதுகாப்பு அமைச்சர் க்ரோமிகோ
அவர்கள் வருவதாக இருந்தும், அதுவும் ஆண்டரபோவ்,
அவர்களின் உடல்நலக்குறைவு காரணத்தால் பின்னர் தற்காலிக
மாக ரத்து செய்யப்பட்டது என்பதும் நமக்குத் தெரியும்.
சிக்கலான நிலைமைகள் உலகத்திலே இருக்கக்கூடிய நேரத்தில்
உலக சமாதானத்திற்காக சோவியத்யூனியனுடைய கொள்கையை
மிகச் சிறந்த அளவிலே அவர் வற்புறுத்தி அதன் வெற்றிக்காகப்
பாடுபட்டார் என்பதால்தான் இன்றைக்கு அவரது மறைவினால்
உலக மக்கள் அனைவரும் கவலை கொள்கின்றனர்.

சோவியத் யூனியனிலே மேலும் உற்பத்தியைப் பெருக்கு
வதற்கும், மேலும் மக்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்கும்
இப்படி மக்களுக்காகவே பல காரியங்களை ஆற்றியவர்கள்
தோழர் ஆண்ட்ரபோவ் அவர்கள். ஆகவே இவ்வளவு மகத்தான
சாதனைகளை நிகழ்த்திய தோழர் ஆண்ட்ரபோவ் அவர்
களுடைய மறைவினால் வருந்தக்கூடிய சோவியத் மக்களுக்கும,
சோவியத் அரசுக்கும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும்,

[திரு. என். சங்கரய்யா] [1984 பிப்ரவரி 14

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்களுடைய
ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, இங்கே அவை முன்னவர்
அவர்கள் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தை வழி
மொழிந்து அமர்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள
தோழர் ஆண்ட்ரபோவ் அவர்கள் மறைவு குறித்த இரங்கல்
தீர்மானத்திலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உணர்வுகளையும்
இணைத்து ஒருசில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆண்ட்ரபோவ் அவர்கள் 1914 ஆம் ஆண்டு ஒரு இரயில்வே
தொழிலாளியினுடைய குடும்பத்திலே பிறந்து, ஒரு கப்பல்
தொழிலாளியாகப் பணியாற்றி, சிறந்த திறமையாலும்,
கடுமையான உழைப்பாலும் மிகஉயர்ந்த பதவிக்கு வந்தார்கள். 16
வயதிலேயே காம்ஸ்யுமார் என்று சொல்லக்கூடிய இளைஞருடைய
கம்யூனிஸ்ட் லீக் என்ற அமைப்பில் உறுப்பினராக இருந்து
மிகச்சிறந்த முறையில் பணியாற்றியவர்கள் அவர்கள்.

அதுமட்டுமல்ல, அவருடைய நாட்டின் மீது ஹிட்லரின் நாசி
படையெடுப்பு நடந்தபோது அதை எதிர்த்து நடந்த கொரில்லா
இயக்கத்திலே முன் அணியிலே இருந்து அந்த இயக்கத்தைச்
சிறப்பாக நடத்தி வெற்றி கண்ட மாபெரும் வீரராக திகழ்ந்தவர்
அவர். அவர் 1962 ஆம் ஆண்டிலே சோவியத் ஒன்றியத்திலே
கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு
1967-லே அரசினுடைய பந்தோபஸ்து கமிட்டியினுடைய
தலைவராகவும் பதவி உயர்வு பெற்றார். அவர் வகித்த அனைத்துப்
பொறுப்புகளிலும் சிறப்பாகப் பணியாற்றியமைக்காக அவர்
அந்த நாட்டிலுள்ள மிகச்சிறந்த பல விருதுகளைப் பெற்ற ஒரு
மாபெரும் நிர்வாகி ஆவார்.

அதுமட்டுமல்லாமல் சமீப காலத்திலே அவர்கள் பதவி
ஏற்றபோதும், அதற்கு முன்னாலும் உலக சமாதானத்திற்காக
அவர்கள் மிகப்பெரிய பங்கினை ஆற்றியவர்களாவார்கள். அந்த
அளவிலே அவர்கள் ஒரு மிகப்பெரிய சமாதான வீரனாகவும்
திகழ்ந்தார்கள்.

அதற்கு ஒரு உதாரணம். அமெரிக்காவிலிருந்து ஒரு பெண்
குழந்தை உலக யுத்தத்தின் அபாயத்தைக் குறித்து ஒருகடிதத்தை
எழுதியதற்காக அந்தக் குழந்தையை சோவியத் ரஷ்யா
விற்கு வரவழைத்து, அதைப் பாராட்டி, யுத்தத்தினுடைய
பேரபாயத்தைத் தடுப்பதற்கு தாங்கள் செய்யக்கூடிய அத்தனை
காரியங்களையும் எடுத்துச் சொன்னதை நாம் பத்திரிகை வாயி
லாகப் பார்த்திருக்கிறோம்.

அந்த இந்தியாவுடன் வர்த்தக, கலாச்சார உறவுகளை மிக
அதிகமாக மேலும் வலுப்படுத்த பாடுபட்டவர் ஆவார். அதன்
காரணமாக இந்திய-சோவியத் நட்புறவுக்கு சிகரமாக திகழ்ந்து
வந்தார்கள். சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியின்



1984 பிப்ரவரி 14] • [திரு. சோ. அழகர்சாமி]

செயலாளராகவும், சோவியத் நாட்டின் தலைசிறந்த தலைவ
ராகவும் விளங்கினார். மிக உன்னதமான பதவியை வகித்து,
உலக சமாதானத்திற்காக போராடிய மாபெரும் வீரனாகத்
திகழ்ந்த ஆண்ட்ரபோவ் அவர்கள், சோவியத் அதிபராக பதவி
வகித்த மிகக் குறுகிய காலத்தில், 15 மாத காலத்தில் அவர்
களுடைய தலைசிறந்த ஆற்றலையும். திறமையையும் வெளிப்
படுத்திசர்வதேச பிரச்னைகளானாலும் சரி, உள்நாட்டுப் பிரச்னை
களானாலும் சரி, அவைகளைத் தீர்ப்பதிலே சிறப்பான ஒரு வழி
காட்டியாகதிகழ்ந்து இன்றைக்கு உலகமக்களுடைய உள்ளங்களில்
நீங்காத நிலையைப் பெற்ற மாபெரும் தலைவராவார்கள்.

அவருடைய நிர்வாகத்தில் தொழிலிலே, விவசாயத்திலே,
முக்கிய உற்பத்தித்துறைகளிலே தொழிலாளர்களின் உழைப்பிலே,
திறனிலே மிகுந்தஅக்கறை காட்டியவர்கள் என்பதையும் அதனால்
அந்த நாடு அபிவிருத்தி கண்டதையும் சமீப காலத்திலே பத்திரி
கையிலேபார்த்தோம். இந்தியாவின் ஒரு மிகச் சிறந்த நண்பராக,
இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் உள்ள நட்பை மேலும் வளர்க்கக்
கூடிய மாபெரும் ஒரு தலைவராகத் திகழ்ந்த தோழர் ஆண்ட்ர
போவ் அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்பதை
நாம் அறிவோம். அவருடைய திருப்பெயர் முற்போக்கு எண்ணம்
உடையவர்களிடையே நீங்காது நிலைத்து நிற்கும் என்பதில்
சந்தேகமில்லை. அவருடைய மறைவு குறித்து இந்திய கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பில், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ரஷ்ய
மக்களுக்கும், உலகத்திலுள்ள சகலவிதமான முற்போக்கு
எண்ணங்களைக் கொண்ட மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை
யும் அன்னாருக்கு எங்கள் அஞ்சலியையும் தெரிவித்துக் கொண்டு
அமர்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு
வந்துள்ள இரங்கல் தீர்மானத்தை காந்தி-காமராஜ் தேசிய
காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் வழிமொழிகிறேன்.
சோவியத் ஒன்றியத்தின் குடியரசுத் தலைவர் திரு. ஆண்ட்ர
போவ் அவர்கள் சாதாரண ஒரு ரயில்வே தொழிலாளியின்
மகனாகப் பிறந்து, தன்னுடைய உழைப்பாலும், விடாமுயற்சி
யாலும் சோவியத் ஒன்றியத்தின் குடியரசுத் தலைவர் பதவிக்கு
அமர்த்தப்பட்டார். அவர்கள் ஒரு வருடம் பதவியில்
இருந்தாலும்கூட, உலக மக்களுடைய உள்ளங்களிலே இடம்
பெறத்தக்க வகையிலே சாதனைகள் பலவற்றைப் புரிந்திருக்
கிறார்.

அணு ஆயுதப் போரைத் தடுப்பதற்கு அவர்கள் எடுத்த
முயற்சிகள். இந்திய-சோவியத் உறவுக்கு எப்படி ஒரு பாலமாகத்
திகழ்ந்தார் என்பதை எனக்கு முன்னால் பேசியவர்கள் மிகத்
தெளிவாகச் சொல்லி விட்டார்கள். சிறந்த அரசியல் வல்லு
நராகத் திகழ்ந்த அவருடைய மறைவு இந்திய மக்களுக்கு ஒரு
மிகப் பெரிய இழப்பாகும். அவரது மறைவினால் வருந்தும்
அவருடைய குடும்பத்தாருக்கும், சோவியத் மக்களுக்கும் காந்தி-

[திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்] [1984 பிப்ரவரி 14

காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி

திரு எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானத்தை அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பிலே வழிமொழிந்து, ஒருசில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். சோவியத் ஒன்றியத் தினுடைய குடியரசுத் தலைவர் ஆண்ட்ரபோவ் அவர்கள் மறைவு குறித்து கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்திலே எங்கள் கட்சியையும் இணைத்துக் கொண்டு, உழைப்பால் உயர்ந் தவர்கள் வரிசையிலே, உலகத் தலைவர்களிலே தானும் ஒருவர் என்பதை நிரூபித்துக் காட்டியவர் ஆண்ட்ரபோவ் அவர்கள்.

இளைஞராக இருந்த காலத்திலே இருந்து கொள்கைப் பிடிப்போடு தொழிலாளர் வர்க்கத்தின் பக்கம் நின்று, ரஷிய குடியரசுக் கட்சியின், ஒன்றியத்தின் தலைவராக உயர்ந்தார் என்று சொன்னால், அவருடைய விடா முயற்சியும், உழைப்பும் தான் அவரை ஒரு உன்னத இடத்திற்கு கொண்டு வந்து நிறுத்தியது. இந்த உலகத்தினுடைய அமைதியற்ற நிலையில், சமாதானத்தை விரும்புவராக வாழ்ந்தார்.

(முற்பகல் 10-40.)

இந்தியாவினுடைய உற்ற நண்பர் இந்தியாவோடு நல்ல உற வினை வளர்ப்பதற்கு உறுதுணையாக இருந்த தலைவர் இன் றைக்கு மறைந்தார் என்று சொன்னால் அது இந்தியாவிற்கு ஒரு பெரும் இழப்பு ஆகும். இந்தியா ஒரு நல்ல நண்பரை இழந்திருக்கிறது. அவரை இழந்திருக்கிற ரஷ்ய மக்களுக்கும் அந்த நாட்டிற்கும் எங்களது இயக்கத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

திரு. பி. முகமது இஸ்மாயில்: பேரவைத் தலைவர் அவர்களே, சோவியத்யூனியனின் தலைவர் திரு. ஆண்ட்ரபோவ் அவர்களுடைய வாழ்க்கையைப்பற்றி இங்கே எடுத்துக்கூறப்பட்ட கருத்துக் களையும் அவர்கள் மறைவு தொடர்பாக இங்கே காட்டப்படும் உணர்வுகளையும் ஜனதா கட்சி பகிர்ந்து கொள்கிறது.

குறுகிய காலமான 15 மாதங்கள் மட்டும் அவர் பொறுப் பிலே இருந்தாலும் அவர் ஆற்றிய சாதனைகள் மகத்தானவை. 15 மாதங்களில் ஏறத்தாழ ஒரு ஆண்டுக்காலம் அவர் நோய் வாய்ப்பட்டிருந்தார் என்ற செய்தியும் வந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆகஸ்டு திங்களிலிருந்து அவர் எந்த பொது நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளமுடியாத அளவுக்கு கடுமையான நோயால் பீடிக்கப்பட்டு இருந்தார் என்ற செய்தியும் வந்து கொண்டிருக் கிறது. பிப்ரவரி மாதம் 9 ஆம் தேதி மறைந்து விட்டார் என்ற செய்தி 11 ஆம் தேதி அரசு தரப்பில் அதிகாரபூர்வமாக அறிவிக் கப்பட்டிருக்கிறது என்பது அத்துணை அதிகமான கட்டுப் பாட்டில் அந்த நாடு இயங்கி வருகிறது என்பதற்கு மிகத் தெளி வான எடுத்துக்காட்டு.



1984 பிப்ரவரி 14] (திரு. பி. முகமது இஸ்மாயில்)

அணு ஆயுதப் போர் அபாயத்தால் மனித சமுதாயம் அழிக் கப்பட்டு விடுமோ என்ற அச்ச உணர்வு மேலோங்கியிருக்கிற வேளையில் உலக சமாதானத்திற்காக சோவியத் அரசு மேற் கொண்டிருக்கிற பணிகளைத் தொடர்ந்து தன்னுடைய கடமை யாக ஏற்றுக்கொண்டு செயலாற்றிய பெருமை திரு ஆண்ட்ரா போவ் அவர்களைச் சாரும்.

மேற்கு ஆசிய நாடுகளில் பறந்து கொண்டிருக்கின்ற போர்ப் பொறிகள் போராக வளர்ந்துவிடாமல் அதிலே கண்ணுங் கருத்து மாக இருந்து தண்டிக்கப்படுகின்ற மிகப்பெரிய பொறுப்பையும் வைத்துக்கொண்டிருந்தார்கள்.

இந்து மகா சமுத்திரப்பகுதி ஒரு சமாதான நிலைக்களனாக அமையவேண்டும் என்பதிலே துணிந்து பொறுப்பாக பணி யாற்றியிருக்கிறார் என்பதற்காகவும் அவர்களை நாம் பாராட்ட வேண்டும். நம்முடைய நாட்டிற்கும் சோவியத் நாட்டிற்கும் இடையே இருக்கிற உறவுமுறைகள் மிக மிக இணக்கமானது, நெருக்கமானது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். இந்த உறவுமுறைகளை வளர்த்துக் கொள்வதற்காக நாம் சில சந்தர்ப் பங்களிலே தேவைக்கு அதிகமாக வளைந்து கொடுத்துக்கூட அந்த உறவுமுறைகளை வளர்த்துக்கொள்ள முற்பட்டது உண்டு

சோவியத் ரஷ்யாவும் பல சந்தர்ப்பங்களில். குறிப்பாக நம்முடைய வெளிநாட்டுக் கொள்கைகளில் வடிவம் பெறுவதற்கும் நமக்கு உறுதுணையாக நின்று வழிகாட்டியதும் உண்டு. அத் தகைய நல்லுறவுகள் வளர்ந்து நம்முடைய நாட்டிற்குரிய உறவு முறைகள் மேலும் வளர்ந்து வருவதற்கு திரு ஆண்ட்ரபோவ் அவர்கள் கடுமையான முயற்சிகளை நல்ல முறையில் மேற் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் இந்திய நாட்டின் மிகப் பெரிய நண்பனை நாம் இழந்துவிட்டிருக்கிறோம். இந்திய மக்கள் அனைத்து பேர்களும் இன்றைக்கு துக்கத்தை அனுஷ் டித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்றமும் அதற்காக தீர்மானம் கொண்டுவந்திருக்கிறது. மறைந்து விட்ட திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் மறைவால் துயருற்றிருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் சோவியத் அரசுக்கும் அந்த நாட்டு மக்களுக்கும் ஜனதாகட்சி தன்னுடைய இரங்கலை இந்த மன்றத்தின் மூலமாக தெரிவித்துக் கொள்கிறது.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர் களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிற இந்த இரங்கல் தீர்மானத்தை வழிமொழிந்து எங்கள் கட்சியின் அஞ்சலியையும் மறைந்த தலைவர் திரு ஆண்ட்ரபோவ் அவர் களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். சோவியத் நாட்டின் அதி பரும் சோவியத் நாட்டு கம்யூனிஸ்டு கட்சியின் செயலாளரு மான திரு ஆண்ட்ரபோவ் அவர்கள் ஒரு சாதாரண ரயில்வே தொழிலாளியின் மகனாகப் பிறந்து ஒரு மாலுமியாக அவருடைய வாழ்வை தொடங்கியவர். உழைப்பாலும் தன்னுடைய தொண் டாலும் அவர் உயர்ந்தவர். அதிலும் அவர் பிறந்த ஆண்டு ரஷ்ய நாட்டிலே எரிமலை வெடிப்பது போல புரட்சிகள்

(திரு. ப. நெடுமாறன்) [1984 பிப்ரவரி 14

வெடித்து கொண்டு இருக்கிற வேளையில் அவர் அங்கே தோன்றினார். 1905ம் ஆண்டிலிருந்து 1917 ஆம் ஆண்டு வரை பல்வேறு புரட்சிகள் அந்த நாட்டிலே வெடித்தன. அவர் 1914 ஆம் ஆண்டிலே அந்த நாட்டின் புரட்சிகரமான சூழ்நிலையிலே அவர் தோன்றினார். மகத்தான ரஷ்ய புரட்சிக்கு பின்னால் உருவான ஒரு தலைமுறையைச் சேர்ந்தவர் அவர். அவரைப் பொறுத்தவரையில் அணு ஆயுத புரட்சியின் கடுமையான விளைவுகளை அவரும் உணர்ந்தார். உலகத்தாருக்கும் உணர்த்தியவர் வலிமையற்றவர்கள் சமாதானம் பேசுவது என்பது வேறு, ஆனால் உலகத்திலே சிறந்த வலிமை வாய்ந்த ஒரு நாட்டின் அதிபராக இருந்த அவர் சமாதானத்திற்கு உழைத்தார். மனித குலத்திற்கு ஏற்பட இருக்கும் நாசத்தை அடிக்கடி அவர் சுட்டிக் காட்டினார். அதிலும் குறிப்பாக இந்தியாவுடனும் மற்ற ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுடன் அவர் கொண்டு இருந்த நேசமான உறவு என்பது மிகச்சிறந்தது. இந்த நாடுகளின் முன்னேற்றத்திற்கு எல்லா வகையிலும் அவர் ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். ஏராளமான உதவிகளை இந்த நாட்டுக்கு சோவியத் யூனியன் செய்வதற்கு அவர் சிறப்பான வழி காட்டினார். அண்மையில் சோவியத் நாட்டுக்கு சென்று இருந்தபோது அந்த நாட்டின் பல்வேறு துறைகளிலே மிக குறுகிய காலத்திலே எப்பேர்பட்ட மகத்தான மாறுதல்கள் ஏற்படுவதற்கு அவர் வழி வகுத்தார் என்பதை அறிய முடிந்தது. அதிலும் குறிப்பாக எலெக்ட்ரானிக் யுகம் என்று சொல்லப்படுகிற இந்த யுகத்திற்கு ஏற்ப சோவியத் யூனியன் மக்களை உருவாக்க வேண்டும் என்பதற்காக சோவியத் கல்வி முறையிலே எலெக்ட்ரானிக் சாதனங்களை புகுத்தி கல்வி முறையிலே மிகப் பெரிய மாற்றங்களை புரட்சிகரமான மாற்றங்களை அண்மையில் செய்வதற்கு அவர் காரண கர்த்தாவாக இருந்து இருக்கிறார்.

இறுதியாக இந்து மா கடல் பகுதி அமைதி மண்டலமாக இருக்கவேண்டும் என்று அவருக்கு அளவு கடந்த ஆர்வம் இருந்தது. அதன் காரணமாக இலங்கையில் திரிகோண மலையில் அன்னிய ராணுவ தளம் எதுவும் வருவதை மிக கடுமையாக எதிர்த்தார். அதற்காக அவர் அறைகூவல் விடுத்தார். இந்து மா கடல் பகுதி அமைதி மண்டலமாக இல்லாமல் அன்னிய ராணுவ தளம் ஏதேனும் அமைத்து விடுமானால் அது இந்தியாவுக்கு மட்டும் அல்ல இந்துமா கடல் பகுதியில் இருக்கும் அனைத்து நாடுகளுக்கும் ஆபத்தானது என்ற ஒரு வடிவத்தில் அவர் அந்த பிரச்சினையை பார்த்தார். அதன் காரணமாகவே இவர் இந்து மா கடல் அமைதி மண்டலமாக இருப்பதற்கு சகல நடவடிக்கையும் சோவியத் யூனியன் எடுத்துக்கொள்ளும் என்ற உறுதியை அளித்தார் என்பதை அங்கே சென்று இருந்த வேளையில் மிக உயர்ந்த தலைவர்கள் வாயிலாக அதை அறியக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இப்படி எல்லா வகையிலும் உலக சமாதானத்திற்கு அரும்பாடுபட்ட ஒரு மகத்தான தலைவர் மறைந்து இருக்கிறார், அவருக்கு எங்களுடைய இயக்கத்தின் சார்பில் அஞ்சலியை செலுத்தி அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தை வழிமொழிந்து என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.



திரு. கி. சட்டநாத கரையாளர்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே சோவியத் குடியரசுத் தலைவர் தோழர் ஆன்ட்ரபோவ் அவர்களுடைய மறைவுக்கு சோசலிஸ்ட் கட்சியின் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவுக்கும் சோவியத் நாட்டுக்கும் உள்ள உறவு இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. சுதந்திர காலத்திற்கு முன்பு இருந்தே இந்திய சுதந்திர எழுச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்த நாடு சோவியத் நாடு. சுதந்திர காலத்திற்குப் பிறகு இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு அடித்தளமாக அமைய வேண்டிய பொருளாதார அமைப்புகளை ஆக்கித் தந்ததில் மிகப்பெரிய முக்கிய பொறுப்பு சோவியத் நாட்டுக்கு உண்டு. அவருடைய பெரும் உதவியால் தான் ஹெவி இன்டஸ்ட்ரிஸில் நம்நாடு முன்னேற அடித்தளமாக அமைந்து இன்று இந்த நிலையை அடைந்துள்ளது. அந்த ஒரு பாரம்பரியத்தை இந்தோ சோவியத் நட்புறவை ஊக்குவித்து கொண்டு வந்த பெருமை திரு ஆன்ட்ரபோவ் அவர்களைச் சாரும். 15 மாத காலமாக அவர் நிர்வாகத்தில் இருந்த போதிலும் அதற்கு முன்பு கே.ஜி.பி. சீப் ஆக இருந்த காலத்தில் நமக்கும் பங்களா தேஷுக்கும் ஏற்பட்ட போரில் நமக்கு எதிராக அமெரிக்க அணி எந்த எந்த செயல் செய்கிறது என்பதை திரு ஆன்ட்ரபோவ் அவர்கள் தலைமையில் இருந்த கே ஜி. பி. மூலமாகத்தான் நமக்கு வந்தது என்று சமீபத்தில் வந்து இருக்கக்கூடிய பல்வேறு புத்தகங்களிலிருந்து தெரிய வருகிறது.

(முற்பகல் 10-50)

அப்படி திரு. ஆன்ட்ரபோவ் அவர்கள் இந்தியாவின் உற்ற நண்பராக இருந்தார். சோவியத் யூனியன் பாரம்பரியத்திலே இருக்கக்கூடிய பெரும் தலைவர்களுடைய பாரம்பரியத்திலே வந்த அந்தத் தலைவருடைய மறைவு இந்திய மக்களுக்கும் பெரும் இழப்பாகும். சோவியத் மக்களுக்கும் அவர் பெரும் உதவியைக் கழிந்த 15 மாத காலத்திலே செய்து, அவருடைய தனி முத்திரையைப் பதித்து, சரித்திரத்திலே ஒரு இடத்தைப் பெற்று சென்று விட்டார்கள். சாதாரணமாக, தொழில் நிர்வாகத்திலே Industrial Management லே முதலாளித்துவ நாடுகளிலே இருக்கக்கூடிய விஞ்ஞானபூர்வமான நிர்வாக முறையைப் புகுத்தி, இலாப நட்டம் ஒரு அடிப்படையாக இருக்க வேண்டுமென்ற பெரும் மாறுதலைக் கொண்டு வந்து, அவர்களுடைய ஃபார்ம் ப்ராடக்ட்சிலும், இன்டஸ்ட்ரியல் ப்ராடக்ட்சிலும், ஒரு உச்ச நிலைமையை அடைவதற்குரிய வழிவகைகளை வகுத்த பெரும் தலைவர், இப்படி காலத்திற்கேற்ப சோவியத் சமுதாயத்திலே, சோஷலிஸ்ட் சமுதாயத்திலே பல்வேறு மாறுதல்களைக் கொண்டு வந்த பெரும் தலைவருடைய இழப்பு சோவியத் மக்களுக்கும் பெரும் இழப்பு உலக சமுதாயத்திற்கு அரும்பாடுபட்ட பெரும் தலைவரை இழந்த முறையிலே உலக மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் ஒரு மாபெரும் இழப்பாகும். அந்த இழப்பை, நாம், இந்திய மக்கள், இன்று துயருறும் சோவியத் மக்களோடு சேர்ந்து அவர்களுடைய உடன்பிறந்த சகோதரர்களாக, இன்று

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** சோவியத் ஒன்றிய குடியரசுத் தலைவர் திரு யூரி விளாடிமிரோவிச் ஆன்ட்ரபோவ் அவர்களு டைய மறைவு குறித்து அவை முன்னவர் தெரிவித்த இரங்கல் கருத்தோடு நானும் என்னுடைய கருத்துக்களை இணைத்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் இந்தியாவினுடைய சிறந்த நண்பர் என்பதையும் உலகத்திலே சமாதானத்தை நிலைநாட்ட விரும்பியவர் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனை வருமே எடுத்துச்சொன்னார்கள். அந்த வகையில் பார்க்கிறபோது அவர்கள் மிகச்சிறந்த நிர்வாகியாக, மிகச்சிறந்த சிந்தனையாள ராக, அறிஞராக இருந்தார் என்பதை அமெரிக்க நாட்டினுடைய குடியரசுத் துணைத் தலைவர் திரு புஷ் அவர்கள், அவரைச் சந்தித்தபோது சொன்ன கருத்துக்களை நான் இந்த மன்றத் திலே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

திரு ஜார்ஜ் புஷ் அவர்கள் அமெரிக்க நாட்டினுடைய சி.ஐ.ஏ. நிறுவனம் என்கிற உளவு நிறுவனத்திலே தலைவராக இருந்து விட்டு, துணைத் தலைவராக ஆனவர். ஆன்ட்ரபோவ் அவர்கள் கே.ஜி.பி. என்ற உளவு நிறுவனத்தினுடைய தலைவராக இருந்து விட்டு குடியரசுத் தலைவராக ஆனவர். இருவரும் பிரச்ட்னேவ் அவர்கள் இறந்தபோது சந்தித்துக் கொண்டார்கள். அப்படிச் சந்தித்த போது ஒருவரையொருவர் எடை போட்டு பார்த்திருப்பார்கள் போல் இருக்கிறது. ஆகவே அவர் கள் சொன்ன வாசகங்களை இந்த அவைக்கு முன் வைக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

',Here is a man w.o has had aceess to tremendous amcunt of intelligence over the yesrs. In my judgment, he would be much iess apt. to misread the intention cf rhe Vrited states of Americe than a political boss out of Vladivostok or Leningrd. And on the other hand he is tough He appears to have solidified his leadership position in a very short period of time.''

அவரைப் பற்றி புஷ் சொல்கிறார். அவர் மிகச் சிறந்த அறி ஞராக விளங்கினார். மிக நுட்ப அறிவு கொண்டவராக அவர் விளங்கியதை நான் கண்டேன் என்று சொன்னதோடு மட்டுமல் லாமல் அவர் கடினமாகவும் எனக்கு காட்சி அளித்தார் என்றும் அவர் சொல்லியிருக்கிறார். அவர் சொல்லிய கருத்தை நான் இங்கே தெரியப்படுத்துகிறேன். சோவியத் ரஷிய தலைவர் களுடன் சந்தித்துப் பேசுவது என்பது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை. ஆனால் திரு. புஷ் அவர்கள் திரு ஆன்ட்ர போவ் அவர்களைச் சந்தித்து இந்த அபிப்ராயத்தை உலகத் திற்கு வழங்கி இருக்கிறார்கள் அந்த வகையில் உலகத்திலே உள்ள எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்த ஒரு மாபெரும் தலைவராக இருந்த அவரை உலகம் இன்று இழந்து இருக்கிறது உலகசமாதானத்தை விரும்புகிற அத்தனை பேரும் வருத்தப்படக் கூடிய ஒரு மிகப்பெரிய இழப்பு இது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆகவே, ஒரு இனிய நண்பரை இந்தியா இழந்து தவிக்கிறது. சோவியத் ரஷியா தன்னுடைய தலைவனை இழந்து வருந்துகிறது இந்தநிலையில், என்னுடைய இரங்கலைத் தெரிவித்







துக்கொள்வதோடு மாண்புமிகு முதலமைச்சர்அவர்கள் தெரிவித்த கருத்துக்களோடும், மாண்புமிகு அவை முன்னவர் எடுத்துத் தெரிவித்தக் கருத்துகளோடும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலை வர், மற்ற கட்சி தலைவர்கள் தெரிவித்த கருத்துக்களோடும், என்னுடைய இரங்கல் கருத்துக்களையும் நான் இணைத்துக் கொள்கிறேன். இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள் கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சோவியத் குடியரசுத் தலைவர் மறைவுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் இன்றைய அலுவல் ள் இத்துடன் ஒத்திவக்கப்பெறுகின்றன.

நாளை (15-2-1984) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 11-02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

3. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ.) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

1. உள்துறையினால் ஏற்கனவே வெளியிடப்பட்ட 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ஆம் நாளிட்ட SRO No. II (2)/HO/ 63/82 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்வது குறித்து உள்துறையின் 1—9—1983 ஆம் நாளிட்ட 1858 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு புயல் சார்பு பகுதிக்கான சிறப்பு கட்டிடங்கள் விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் 2—9—1982- ஆம் நாளிட்ட 1352 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சி கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. தமிழ்நாடு 1938 ஆம் ஆண்டு போக்குவரத்து விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 16—2—1983 ஆம் நாளிட்ட 302 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1938 ஆம் ஆண்டு போக்குவரத்து கட்டுப்பாடு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1938) 3 பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

அந்தத் துயரில் பங்கேற்கிறோம். அதிலே, நாமும், தமிழக மக்களும் சேர்ந்து பிணைந்து கொள்வதிலே பெரும் பாராட்டைப் பெறக்கூடிய மக்கள். அந்த முறையிலே இந்த இரங்கல் தீர்மா னத்திலே நானும் எங்களது கட்சியும் இணைந்து கொள்கின் றோம் என்று கூறி முடித்துக்கொள்கிறேன், நன்றி.

திரு ஜி. மூர்த்தி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சோவியத் குடியரசின் தலைவர் திரு ஆன்ட்ரபோவ் அவர்களுடைய மறைவு குறித்து அவை முன்னவர் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தோடு இந்திய குடியரசுக் கட்சியும் தன்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. உலக சமாதானத் திற்கும் இந்திய சோவியத்தினுடைய சிறந்த உறவுக்கும் எடுத்துக் காட்டாக விளங்கிய திரு ஆன்ட்ரபோவ் அவர்களுடைய இழப்பு ரஷிய நாட்டிற்கு மட்டுமல்ல, குறிப்பாக, இந்திய நாட்டிற்கும் ஒரு நல்லுறவு ஏற்படுத்திய அந்த தலைவனை இழந்தது மாபெரும் இழப்பு என்பதனைக் கூறி, குடியரசுக் கட்சி தன் னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னவர் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தை நான் வழிமொழிந்து அரசின் சார்பாக எங்களுடைய கருத்தைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன். இது வரையில், இதற்கு முன்னால் சோவியத் ரஷியாவின் தலைவர் கள் மறைந்த பொழுது இப்படிப்பட்ட தீர்மானங்கள் வடிவிலே இரங்கல் தீர்மானங்களைக் கொண்டு வந்தாலும் இன்று எடுக்கப் படுகிற நடவடிக்கையைப் போல இதுவரையில் இருக்கவில்லை என்பதை நான் நினைவு கூர்ந்து என் பேச்சைத் தொடர விரும்புகிறேன்.

புரட்சி என்பதற்கு உண்மையான இலக்கணம் வகுத்துக் கொண்டிருக்கிற சோவியத் குடியரசின் மாபெரும் தலைவர் குறுகிய காலத்தில் தன்னுடைய பணியை முடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு இயற்கை ஆளாக்கிவிட்டது என்பதை எண்ணும் போது நாம் அனைவரும் வேதனையுறுவதும் அதற்காக கலக்கம் அடைவதும் தவிர்க்க முடியாத இயற்கையின், சூழ்நிலையின் கட்டளையாகும். ஆனால் குறிப்பாக 7, 8 மாதங்களாக நோய் வாய்ப்பட்டிருந்த ஒருவர் ஒரு தலைவராக இருந்து, உலகம் போற்றும் வகையில், பாராட்டும் வகையில், தனது கடமையை செய்தார்கள் என்பது வரலாற்றிலே குறிப்பிடத்தக்க ஒன்று. இதுவரையில் யாருக்கும் இப்படிப்பட்ட பாராட்டு கிடைக்காத ஒரு நிலையுள்ளதை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன், உலகத்திலே சமதர்மம் எப்படி தழைத்தோங்க வேண்டுமென் பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்ற ஒரு நாடு சோவியத் குடியரசுஎன்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அங்கே இருந்த மக்கள், சென்ற மகா யுத்தத்தில், ஏறத்தாழ 2 கோடி பேர்கள் இறந்தார்கள் என்று முன்னவர் கூறினார்கள். நான் சோவியத் ரஷியாவிற்குச் சென்றிருந்தபொழுது சில படங்களை அங்கிருந்த தாய்மார்கள் பார்த்து எந்தவித உணர்வை வெளியிட்டார்கள்



என்பதை நேரிலே கண்டவன் நான். மொழி தெரியாத அந்த மக்கள் ஏதோ ஒருபடத்தைப் பார்க்கிறபோது அங்கே ஒரு ஆண் இறந்து, ஒரு பெண் அழுகிற நிலைமை இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது. அந்தப் படத்தைப் பார்த்துக்கொண்டு இருந்த தாய்மார்கள் அத்தனை பேரும் சோவியத்தைச் சேர்ந்தவர்கள் விம்மி விம்மி அழுததை நான் காதிலே அந்த சத்தத்தைக் கேட் டவன். கண்ணாரக் கண்டவன். ஏனெனில் அவர்களுடைய குடும்பத்தில் யாராவது ஒரு ஆண், தந்தையாக இருக்கலாம், தனையனாக இருக்கலாம், தமையனாக இருக்கலாம். அல்லது கணவனாக இருக்கலாம், யாராவது ஒருவரை இழந்த குடும்பம் என்ற அளவில் அந்த நாட்டிலே ஒவ்வொரு குடும்பமும் இந்த வேதனைக்கு ஆளாக்கப்பட்ட குடும்பமாக இருந்திருக்கிறது என் பதை நாம் உணர முடிந்தது உணரவேண்டியது அவசியம் என்பதை நான் மக்களுக்குச் சொன்னேன் இங்கே வந்தபோது, இதை நான் இங்கே கூறுவதற்குக் காரணம், சோவியத் ரஷ்யா யுத்தத்திற்குத் தயாராக இருக்கிறது மற்ற நாடுகளை அச்சுறுத்த முனைகிறது என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகும்போதெல்லாம் என் உள்ளத் திலே அந்த நிகழ்ச்சிதான் நினைவிற்கு வரும், ஆகவே விரும் பத்தகாத ஒன்ற விரும்புவதாக குற்றம் சாட்டப்படுகிற இந்த நேரத்தில் அப்படிப்பட்ட உணர்வுக்கு இடமேயில்லை என்பதை செயலின் மூலமாக எடுத்துக்காட்டிய ஆன்ட்ரபோவ் அவர்கள், இவ்வளவு விரைவில் அவர்கள் இயற்கை எய்தியது ஒவ்வொரு நாடும் ஒரு பெரிய நல்லவரை, நண்பரை, நல்ல கொள்கைக்குச் சொந்தக்காரரை இழந்து விட்டார்கள் என்ற உணர்வைத்தான் பெறுவார்கள் என்பதை நாம் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

இன்னமும் ஒன்று இங்கே திராவிட முன்னேற்றக் கழகத் தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் கூறும் போது ஒரு நல்ல கொள்கையைச் சொன்னார்கள். எத்தனை ஆண்டுகள் ஆள்வது என்பதல்ல, ஆட்சியில் இருப்பது என்பதல்ல, பதவியில் இருப்பது என்பதல்ல, குறுகிய காலத்திலே இருந்தாலும், அவர்கள் என்ன செய்தார்கள், எப்படி செய்தார்கள் என்று எடுத்துக் காட்டுவதுதான் சிறப் பானது என்று சொன்னார்கள். அதை நினைத்துப் பார்க்கும் போது இதுவரையில் நாம் கேள்விப்படாத வகையில், லஞ்ச ஊழலுக்கு ஆளான இருவரை தூக்கிலிட்ட பெருமை அந்த ஆன்ட்ரபோவ் அவர்களுக்கு மட்டும் தான் கிடைத்திருக்கிறது என்பதை, சோவியத் ரஷ்யாவிலே என்பதை எண்ணும்போது நாம் பெருமைப்படுகிறோம். அவரை நாம் வணங்கி மரியாதை காட்ட நிச்சயமாகக் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நல்லவர் மறைந்தது இந்தியாவிற்கு, சமதர்மத்தை விரும்புகிற உலகிற்கு மிகப் பெரிய நஷ்டம் என்பதை இங்கே எடுத்துச் சொல்லி, அப்படிப்பட்ட நல்லவருக்காக நாம் கண்ணீர் சிந்து வதும், மனம் கலங்குவதும், அந்த நாட்டு மக்களுடைய வேதனை உள்ளத்தோடு நம்முடைய துன்ப உள்ளத்தை இணைத்துக்கொள்வதும் நமது கடமை என்ற வகையில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் அரசின் சார்பாகவும் உங்களுடைய சார்பாகவும் மக்களுடைய சார்பாகவும் என்னுடைய இரங்கலைத்தெரிவித்துக்கொண்டு நான் அமைகிறேன்

4. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு சாராய ஆலை விதிகளை வகுப்பது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வை துறையின் 4—3—1983 ஆம் நாளிட்ட 135 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. வருவாய்த்துறையின் II-1 எண் 2437/1962, 22-5-1962 ஆம் நாளிட்ட அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 12—3—1983 ஆம் நாளிட்ட 299 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. சென்னையிலுள்ள இலங்கை அகதிகளுக்காக 'டான்சி' நிறுவனம் வாங்கும் எழுபது சிறு கடைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 21—7—1983 ஆம் நாளிட்ட 801 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த்துறையின் 6—6—1983 ஆம் நாளிட்ட 1033 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. இலுப்பூர் அங்காடியினை அறிவிக்கப்பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 25—7—1983 ஆம் நாளிட்ட 1362 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் படிவத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 11—5—1983 ஆம் நாளிட்ட 518 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



10. சென்னை பண்டாலை கார்டியோ தொராஸிக் பௌண்டேஷனுக்கு விற்கப்படும் ஸ்டாண்டர்ட் 20 டீசல் ஆம்புலன்ஸ் வண்டிக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 15—2—83 ஆம் நாளிட்ட 763 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

11. குழந்தைகளுக்கான முதலமைச்சரின் சத்துணவு திட்டத்தின்கீழ் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி கழகத்திற்கு விற்கப்படும் பற்பொடிகளுக்கு வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 28—12—1982 ஆம் நாளிட்ட 1429 எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

12. திருவொற்றியூர் நகராட்சியின் ஒப்புதல் அளிக்கப்பட்ட, நகரத் திட்டப்பணி எண் 4-ல் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 24—5—1983 ஆம் நாளிட்ட 817 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

13 சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 24—5—1983 ஆம் நாளிட்ட 816 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

14 மாம்பலம் விரிவாக்கப் பகுதியின் (தியாகராயநகர்) நகர திட்டப் பணியில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 9—6—1983 ஆம் நாளிட்ட 884 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புறத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

1 . சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 5—2—1983 ஆம் நாளிட்ட 230 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

16. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 24—5—1983 ஆம் நாளிட்ட 818 ஆம் எண் அரசாணை ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகரப்-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

17. மைலாப்பூர் தெற்கு பிரிவின் நகர திட்ட அமைப்பில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 9—6—1983 ஆம் நாளிட்ட 883 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

18. திருவொற்றியூர் நகராட்சி நகர திட்ட அமைப்பு 4-ல் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 24—1—1983 ஆம் நாளிட்ட 156 ஆம் எண் அர ாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

19. சென்னையிலுள்ள பிராந்திய இயற்கை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கு சொந்தமான சில வண்டிகளுக்கு வரி செலுத்துவதில் சலுகைகள் அளிப்பது குறித்து உள் (போக்கு வரத்து-1) துறையின் 11—10—1983 ஆம் நாளிட்ட 2112 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 974 ஆம் ஆண்டு மே ட்டார் வண்டிகள் வரி விதிப்பு சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

20. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு மரக்கட்டை (இயக்கக் கட்டுப்பாடு) ஆணையில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வன-மீன் துறையின் 22—9—1983 ஆம் நாளிட்ட 1145 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு, தேவைக் கோரிக்கைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1949) 2 வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

21. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உணவு-கூட்டுறவுத் துறையின் 8—8—1983-ம் நாளிட்ட 567 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



22. தூத்துக்குடி அல்காலி கெமிக்கல்ஸ் நிறுவனத்திலிருந்து 'ஸ்பிக்' நிறுவனத்திற்கு விற்கப்படும் அம்மோனியா வாயுவிற்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 1—7—1983 ஆம் நாளிட்ட 712 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

23. வணிகவரிகள்- மய அறக்கட்டளைகள் துறையின் 25—7—1977 ஆம் நாளிட்ட 1162 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையை ரத்து செய்வது குறித்து வணிக வரிகள்--சமய அறக்கட்டளைகள் துறையின் 11—11—1982 ஆம் நாளிட்ட 1256 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

24. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நீர்ப்பாசனப் பணிகள் (கண்ணி வாய்க்கால் அமைத்தல்) சட்டத்தில் நீர்ப்பாசனத்திட்டங் களை சேர்ப்பது குறித்து பொதுப்பணித் துறையின் 3—6—1982 ஆம் நாளிட்ட 1106 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நீர்ப்பாசனப் பணிகள் (கண்ணி வாய்க்கால் அமைத்தல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 2[illegible]/1959) 9 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது ]

25. வணிகவரி சமய அறக்கட்டளைகள் துறையின் 3—1—1981 ஆம் நாளிட்ட 11 ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 29—4—1983 ஆம் நாளிட்ட 476 ஆம் எண் அறிவிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

26. வருவாய்த் துறையின் 18—3—1970 ஆம் நாளிட்ட எண் 86/1970 ஆம் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 13—4—1983 ஆம் நாளிட்ட 423 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 19[illegible]9 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

27. வருவாய்த் துறையின் 6—9—1969 ஆம் நாளிட்ட எண் 339/1969 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 19—4—1983 ஆம் நாளிட்ட 436 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

40. ஊரகப் பகுதிகளில் கிராமப்புற ரோடுகளில் ஓடுகின்ற ஜீப் ஸ்டேஜ் காரேஜுகளுக்கு செலுத்தும் வரிகளில் சலுகை கள் செய்வது குறித்து உள்துறையின் 29—9—1983 ஆம் நாளிட்ட 2038 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

41. வறட்சி நிவாரணப் பணியின் சார்பாக குடிநீர் விநியோகிக்கும், உள் அமைப்புகளைச் சார்ந்த டிராக்டர் டிரெய்லர்களுக்கு செலுத்தும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் துறையின் (போக்குவரத்து 1) 18—3—1983 ஆம் நாளிட்ட 596 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண் டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

42. சுற்றுலா வாடகை வண்டிகளாக செயல்படும் மகிந்திரா FC360 டி வண்டிகளுக்கான வரியினை குறைப்பது குறித்து உள்துறையின் 12—8—1982- ஆம் நாளிட்ட 2108 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

43. மகாராஷ்ட்ரா மற்றும் தமிழ்நாடு அரசுகளுக்கிடையே பரிமாற்ற முறை நடவடிக்கைகள் குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 14—10—1983 ஆம் நாளிட்ட 2160 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

44, தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதி (இட வசதி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் துறையின் 10—11—1983 ஆம் நாளிட்ட 1853 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

45. வருவாய்த் துறையினரால் 18—11—1980 ஆம் நாளன்று வெளியிடப்பட்ட SROB/ 570 (a) 80 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 17—3—1983 ஆம் நாளிட்ட 468 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேர கிராம அதிகாரிகள் பணி ஒழிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1981) 12 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]



46. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 1—10—1983 ஆம் நாளிட்ட 2048 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

47. அறிவிக்கப்பெற்ற அங்காடிகளிலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 1—10—1983 ஆம் நாளிட்ட 1749 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

48. அறிவிக்கப்பெற்ற அங்காடி பகுதியான அறந்தாங்கி மற்றும் ஆலங்குடி அங்காடிகளிலிருந்து 11 கிராமங்களை நீக்கம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 29—8—1983 ஆம் நாளிட்ட 1543 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

49. புதுக்கோட்டை மாவட்டத்தில் வாங்கப்படும் அல்லது விற்கப்படும் பருத்தி, சோளம், கம்பு, கேழ்வரகு மற்றும் மக்காச் சோளம் ஆகியவற்றினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது குறித்து வேளாண்மைத் துறையின் 21—10—1983 ஆம் நாளிட்ட 1833 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

50. சிவகங்கை மற்றும் திருபுவனம் அங்காடிகளைப் போன்ற முறைமைப் படுத்திய அங்காடிகளிலிருந்து சில கிராமங்களை நீக்கம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 21—10—1983 ஆம் நாளிட்ட 1832 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

51. தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து தொழிலாளர் துறையின் 11—11—1983 ஆம் நாளிட்ட 2990 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

52. திருவாளர்கள் அண்ணா போக்குவரத்துக் கழகத்தைச்
சார்ந்த சில வண்டிகளுக்குச் செலுத்தப்படும் வரியில் சலுகைகள்
செய்வது குறித்து உள் (போக்குவரத்து-II) துறையின்
5—12—1983 ஆம் நாளிட்ட 2535 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு
மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது.]

53. விலங்குகள் நல வாரியத்திற்குச் சொந்தமான
வாகனத்திற்குச் செலுத்தப்படும் வரியில் சலுகை செய்வது
குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 29—9—1983 ஆம்
நாளிட்ட 2039 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார்
வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 2 (2)
பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

54, நிலக்கடலை, பருத்தி நெல் மற்றும் மிளகாய்
ஆகியவற்றை பொறுத்தவரையில் கோபால்பட்டி அங்காடியினை
அறிவிக்கப்பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத்
துறையின் 18—3—1983 ஆம் நாளிட்ட 1457 ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு
1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ்
பேரவை முன் வைக்கப்பெற்றது.]

55. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந் திட்டத்தில்
மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித்
துறையின் 7—7—1983 ஆம் நாளிட்ட 1032 ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு
1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 10/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன்
வைக்கப்பெற்றது.]

56. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளில்
திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத்
துறையின் 30—11—1983 ஆம் நாளிட்ட 1030 ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு
1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 10/1937) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது.]

57. திசையன்விளை முறைப்படுத்தப்பட்ட அங்காடியினை
அறிவிக்கப்பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து
வேளாண்மைத் துறையின் 1—10—1983 ஆம் நாளிட்ட 1751 ஆம்
எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு
1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ்
பேரவை முன் வைக்கப்பெற்றது.]





58. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சட்டப்பேரவை
(இரெயிலில் இலவச அனுப்புகை) விதிகளில் சில திருத்தங்கள்
செய்வது குறித்து பொதுத்துறையின் 18—11—1983 ஆம்
நாளிட்ட 1871 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல்
சட்டத்தின் (தமிழ்நாடு 20/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவை
முன் வைக்கப்பெற்றது.]

59. வருவாய்த்துறையின் எண் 313/15 12 1925 ஆம்
அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்
சமய அறக்கட்டளைகள் துறையின் 17—11—1983 ஆம்
நாளிட்ட 1335 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [தமிழ்நாடு 1923 ஆம் ஆண்டு நில அளவை
மற்றும் எல்லைகள் சட்டத்தில் 26 (3) (தமிழ்நாடு சட்டம்
8/1923) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

60. வெங்காயத்தைப் பொறுத்தவரை சேலம் மாவட்டத்
தினை அறிவிக்கப் பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது
குறித்து வேளாண்மைத் துறையின் 1—9—1983 ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு
1959 வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன்
வைக்கப்பெற்றது.]

61. 17—10—1983 ஆம் நாளிலிருந்து மேலும் நான்கு
மாதங்களுக்கு பதிவு செய்வதிலிருந்து விலக்களிப்பது குறித்தும்
மற்றும் திருச்சிராப்பள்ளி பர்மா அகதிகள் விற்கும் பொருட்
களுக்கு விதிக்கப்படும் விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது
குறித்தும் வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின்
14—10—1983 ஆம் நாளிட்ட 1196 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு
பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959)
53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

62. தமிழ்நாடு பருத்தி வளர்ப்போர்களிடமிருந்து
சென்னையிலுள்ள இந்திய பருத்திக் கழகம் வாங்கக் கூடிய
பருத்திக்கு விடுக்கப்படும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து
வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1—10—1983
ஆம் நாளிட்ட 1117 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை
வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ்
பேரவை முன் வைககப்பெற்றது.]

63. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு நீதிமன்ற கட்டணங்கள்
திருப்பித் தருதல் (நீதிமன்ற ஆணையின்படி) விதிகளில் சில
திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 23—2—1983 ஆம்
நாளிட்ட 350 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் மற்றும்
வழக்குகள் மதிப்பீடு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1955)
78 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

28. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் படிவத்தில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 29-4-1983 ஆம் நாளிட்ட 475 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 ( ) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

29. நுங்கம்பாக்கம் கிழக்குப் பிரிவு பகுதிக்கான நகரத் திட்டப் பணியில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 18-3-1983 ஆம் நாளிட்ட 624 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புறத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

30. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 2-8-1983 ஆம் நாளிட்ட 964 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

31. தாவர எண்ணெய்களை விற்கும் எந்த ஒரு வணிகருக்கும் விதிக்கப்படும் பலமுனை வரியினை ஐந்து சதவீதத்திலிருந்து மூன்று சதவீதமாக குறைப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 27-9-1983 ஆம் நாளிட்ட 1093 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

32. வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 23-3-1983 ஆம் நாளிட்ட II (1) CTRE/84/83 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 27-9-1983 ஆம் நாளிட்ட 1093 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [தமிழ்நாடு சட்டம் 1/1959 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

33. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 11-7-1983 ஆம் நாளிட்ட 1220 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.





34. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளின் 140-'அ' விதியில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 11-10-1983 ஆம் நாளிட்ட 2110 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் IV/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

35. பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான சில வாகனங்களுக்கு வரி செலுத்துவதில் சலுகைகள் செய்வது குறித்து உள்துறையின் 31-10-1983 ஆம் நாளிட்ட 2303 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

36. சென்னை, புற்றுநோய் நிலயத்திற்கு (டபிள்யூ. ஐ.ஏ.) சொந்தமான சில வாகனங்களுக்கு செலுத்தப்படும் வரியில் சலுகை செய்வது குறித்து உள்துறையின் 25-10-1983 ஆம் நாளிட்ட 2247 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

37. திருச்சி, காஜாமலை மகளிர் சங்கத்திற்கு சொந்தமான TNX 2527 பதிவெண்ணுள்ள ஆம்புலென்ஸ் வண்டிக்கு செலுத்தப்படும் வரியில் சலுகை செய்வது குறித்து உள்துறையின் 26-10-1983 ஆம் நாளிட்ட 2260 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

38. திருச்சிராப்பள்ளி—பர்மா அகதிகள் விற்கும் பொருட்களுக்கு விதிக்கும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 20-5-1983 ஆம் நாளிட்ட 567 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

39. உள்துறையின் 21-10-1975 ஆம் நாளிட்ட HO 3900/75 எண்ணில் வெளியான அறிவிக்கையை ரத்து செய்வது குறித்து உள் துறையின் (போக்குவரத்து-1) 26-10-1983 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS,
IN MADRAS CITY.

1 Account Test. Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniammaa Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tirchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, ld Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vija Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Center, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 302 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

வெளியீடு 7-7-1984

Issued 7-7-1984

2749

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## பதிப்புத்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை 1984 பிப்ரவரி 15- தொகுதி LVI எண். 2

**Wednesday 15th February 1984—Volume LVI No. 2**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600009

Legislative Assembly Department, Fort st. George, Madras-600009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

64. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு — ஆயத்தீர்வைத் துறையின் 29—11—1983 ஆம் நாளிட்ட 1020 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

65. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 10—10—1983 ஆம் நாளிட்ட 2100 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

66. தமிழ்நாடு 19 7 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியம் வழங்கல் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத்துறையின் 5—9—1983 ஆம் நாளிட்ட 1435 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

67. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து 61 வண்டிகளை சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு மாற்றுதல் தொடர்பான செயலின் மூலம் செலுத்தப்படும் வரியினை தள்ளிவைத்தல் தொடர்பாக வணிகவரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 3—5—1983 ஆம் நாளிட்ட 484 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

68. தமிழ்நாடு வன விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வன-மீன்வளத் துறையின் 22—9—1983 ஆம் நாளிட்ட 1151 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5 1982) 64 (A) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிவிக்கைகள், அறிவிப்புகள்;

ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 3—3—1983 முதல் 27—4—1983 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு.

2. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமித்தல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 15/1983.)



3. 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் மற்றும் தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 16/1983.)

4. 1983 ஆம் ஆண்டு பச்சையப்பன் அறக்கட்டளை (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 17/1983.)

5. 1983 ஆம் ஆண்டு மதுரை சுகர்ஸ் லிமிடெட் (நிறுவனத்தை கையகப்படுத்தல்—மாற்றுதல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 18/1983.)

6. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம் மற்றும் சிறப்பு விதிகள்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 19/1983.)

7. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சினிமாக்கள் (ஒழுங்கு முறை விதிகள்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 1/1984).

8. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்காடர்கள் மூலமாக தொலைக்காட்சித் திரையில் திரைப் படங்கள் காட்டுதல் (ஒழுங்கு முறை விதிகள்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 2/1984).

9. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 3/1984).

10. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணியர் பேருந்துகள்—ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 4/1984).

11. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மகளிர் பல்கலைக் கழகம் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 5/1984).

## உள்ளடக்கம்

பக்கங்கள்

**15—2—1984**

1. வினாக்கள்-விடைகள்
உடுக்குறியிட்ட வினாக்கள்— 37—69

2. தகவல் கோரல்
அடை மழையினால் ஏற்பட்டுள்ள சேதம் குறித்து வெள்ளை அறிக்கை அளித்தல்—- 69—72

3. அறிவிப்புக்கள்

(அ) அண்ணாமலை பல்கலைக் கழகப் பேரவை--
உறுப்பினர்கள் தேர்தல் 72

(ஆ) சென்னை பல்கலைக் கழகப் பேரவை
உறுப்பினர்கள் தேர்தல்-- 72—73

(இ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்-- 73

(ஈ) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக்குழு-
உறுப்பினர்கள் தேர்தல்-- 74

4. அரசினர் தீர்மானம்
வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு
உடுப்பினர்கள் தேர்தல்-- 74

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்

திரு வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் 75—98
திருமதி டி. யசோதா 98—109
திரு. அ. ரகுமான்கான் 109—120
மாண்புமிகு திரு. எஸ்.டி.சோமசுந்தரம் 115—116
மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 116—117
மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் 120—123
மாண்புமிகு திரு.செ. அரங்கநாயகம் 128—128
டாக்டர் கே. சமரசம் 130—138
திரு. மு. ஜான் வின்சென்ட் 138—145
திரு. நன்னிலம் அ. கலையரசன் 145—152

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 152—153

128-258—i

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984 பிப்ரவரி 15, புதன்கிழமை

மாசி 3, ருத்ரோத்காரி திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.''

குற்றமற்றவைகளாகிய சில சொற்களால் ஒரு கருத்தை விளக்கிச் சொல்ல அறியாதவரே பொருளற்ற சொற்கள் பல வற்றை அடுக்கிச் சொல்ல விரும்புவர்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் துவங்குவதற்கான மூலதனம்.

21—*வினா எண். 17989—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பால்வள கூட்டுறவு இணையம் துவங்க மாநில மத்திய அரசுகளின் பங்கு எவ்வளவு?

(ஆ) பால்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் பயன் பெற்றுள்ள மாவட்டங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு தமிழ்நாடு அரசு 198.32 இலட்ச ரூபாய் மூலதனப் பங்காக அளித்துள்ளது. மத்திய அரசிடமிருந்து யாதொரு மூலதனப் பங்கும் பெறப்பட வில்லை.

(ஆ) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் மூலம் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட ஒன்பது மாவட்டங்கள் பயன்பெற்றுள்ளன:—

(1) செங்கற்பட்டு
(2) தென் ஆற்காடு
(3) வட ஆற்காடு
(4) சேலம்
(5) தர்மபுரி

(6) பெரியார் மாவட்டம்

(7) கோயம்புத்தூர்

(8) நீலகிரி

(9) மதுரை.

திரு. ரா. கிருஷ்ணன்; தலைவரவர்களே, இந்தப் பால் வள கூட்டுறவு இணையம் இன்னும் சில மாவட்டங்களில் துவங்கப் படாமல் இருக்கிறதே, அங்கெல்லாம் எப்பொழுது துவங்குவதற்கு அரசு உத்தேசித்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒன்பது மாவட்டங்களிலும் ஒன்றியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது ஒன்பது மாவட்டங்களில் இந்த இணையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். தென் ஆற்காடு மாவட்டத்திலே இது ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா? அத்துடன் இன்னொன்றையும் அறிய விரும்புகிறேன். அரிசனங்கள் கூட்டுறவு முறையில் பால்பண்ணை வைத்து பால் உற்பத்தி செய்தால், அவர்களையும் ஒன்றாக இருப்பதற்கு, இதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை, தனியாகவும் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதும் இல்லை. அதற்குப் பதிலாக 100 லிட்டர் பாலை ஆறு மாதங்களுக்குக் கொடுத்தால் இணையத்திலோ, சொசைட்டியிலோ சேர்ப்போம் என்று சொல்வதாகக் கூறப்படுவது உண்மையா? அப்படியிருந்தால், அவ்வாறு இல்லாமல் செய்ய ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தில் மாவட்டத் தலைவருடைய தலைமையில் ஒன்றியம் இப்பொழுது இயங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய மற்றப் பிரச்னையைப் பற்றித் தனியாகத் தகவல் அளித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒன்பது மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையங்கள் அமைக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த ஒன்பது மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கின்ற கூட்டுறவு இணையங்களில் தேர்ந்தெடுக்கப்பெற்ற நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பெற்றிருக்கிறதா? சில மாவட்டங்களில் அரசாங்கமே நியமன நிர்வாக போர்டை நியமித்திருக்கிறது, சில இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரையே தலைவராகப் போட்டு ஆரம்பித்திருக்கிறார்கள். எனவே அந்த இடங்களிலெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்பைச் சீக்கிரமாகக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒன்பது, மாவட்டங்களில் சில மாவட்டங்களில் அதாவது வளர்ச்சி பெற்ற மாவட்டங்களில் அங்கேயுள்ள பால் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவரே அந்த ஒன்றியத்தின் பெரும் தலைவராக அமர்த்தப்பட்டிருக்கிறார். சில மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதன் தலைவர்களாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதைப்போல தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகள் அங்கே ஏற்படுத்தப்படுவார்கள்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, வளர்ச்சி பெற்ற மாவட்டங்களிலே மட்டும் இந்த இணையங்கள் இயங்குவதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அந்த மாவட்டத்து மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன அந்த ஒன்பது மாவட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டம் வந்ததாகத் தெரியவில்லை. அதுவும் சேர்த்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டாவது பால்வளப் பெருக்குத் திட்டங்களிலே இந்த ஒன்பது மாவட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். இராமநாதபுரம் மாவட்டப் பால் வளர்ச்சியை தமிழக அரசே மேற்கொண்டு, கடந்த ஆண்டு கூட, காரைக்குடியிலே ஒரு கோடி ரூபாய் அளவில் பால் பண்ணை அமைக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து இருக்கிறது. அந்த வகையில் வேறு பல நடவடிக்கைகள் அந்த மாவட்டத்திற்கு பிரத்தியேகமாக எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வளர்ச்சி பெற்ற மாவட்டங்களில் அதிகாரப் பற்றற்றவர்கள் நியமிக்கப்படுவதாகச் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே இப்பொழுது அதிகமாகப் பால் வருகிறது. அங்கே உற்பத்தியாகும் பாலை வாங்க மறுக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது அங்கே ஏன் நிர்வாக போர்டு அமைக்கப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே அந்த அந்த மாவட்டங்களுக்கு அமைக்கப்படும்.

திரு டி. மணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, பால்வள கூட்டுறவு இணையங்கள் ஒன்பது மாவட்டங்களுக்கு அமைக்கப்பட்டுள்ளன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த இணையம் அமைக்கப்படாத மாவட்டங்களில் இந்த நிதி ஆண்டில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த இணையம் இயங்கி வருகிற மாவட்டங்கள் என்பது பத்து ஆண்டுகளாக நடைபெற்று வருகிற பால் வளர்ச்சித் திட்டத்தினுடைய அடிப்படையிலே நடத்தப்படுகிற மாவட்டங்களாகும். மற்ற மாவட்டங்களில் மாநில அரசின் நிதியுதவியுடன் செயலாக்கப்படுகின்றன.

பத்திரப் பதிவுத் துறையில் பணியாற்றும் அதிகாரிகள் மீதான புகார்கள்.

22—* வினா எண். 19953— திரு. சி. கணேசன் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பத்திரப் பதிவுத் துறையில் பணியாற்றும் அதிகாரிகள் மீது விஜிலன்ஸ் ஆண்ட்டி கரப்ஷன் துறைக்கு 8-10-1980 முதல் 30-6-1982 வரை அனுப்பப்பட்ட புகார்கள் எத்தனை?

(ஆ) அவைகளில் விசாரணை முடிந்து தீர்ப்பளிக்கப் பட்டவை எத்தனை?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) 36

(ஆ) 20

திரு. சி. கணேசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த பத்திரப் பதிவுத் துறையில் பணியாற்றுகிற அதிகாரிகள் மீது விஜிலன்ஸ் அதிகாரிகளால் வழக்குகள் போடப்பட்டு, விசாரணையின்போது நிரபராதிகள் என்று அவர்கள் நிரூபித்த பிறகு, உடனடியாக வேலையில் சேர்த்துக் கொள்வதற்கான பரிந்துரைகள் செய்யப்படும்போது, இந்தத் துறையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துச் செய்ய தனி கவனம் செலுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது குறித்து கவனிக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ****

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது கேள்வி நேரம். கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டுகள் சொல்லக் கூடாது என்பது விதி. * * * ஆகவே அவைகளை சட்டசபைக் குறிப்புகளிலிருந்து எடுத்து விடலாம்.

திரு. ரா. உமாநாத்; தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலை வருகிறது, அதை அகற்றுவதற்கு என்ன நடவடிக்கை என்று கேட்க வருகிறார் உறுப்பினர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; உறுப்பினர் கேள்வியை திரும்பவும் கேளுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. என். பழனிவேல்: * * * பொதுவாகத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம், உட்காருங்கள். அவை அனைத்தும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப் படுகின்றன.

தமிழில் வெளியாகும் அரிய நூல்களுக்கான அரசின் நிதி உதவி.

23 *வினா எண் 18427—திரு எம். சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழில் வெளியாகும் அரிய நூல்களுக்கு அரசு நிதி உதவி செய்கிறதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனை நூல்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம். தமிழில் சிறந்த நூல்களை வெளியிட நூலாசிரியர்களுக்கு அரசு நிதி உதவி செய்கிறது.

(ஆ) இருபத்தி ஒன்பது.

திரு. கோவைத்தம்பி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் வெளியாகிற அரிய நூல்களில் அரசு வெளியிட்டதில் அறிஞர் அண்ணா அவர்களின் நூல்கள் எவ்வளவு இருக்கின்றன? அந்த நூல்களின் பெயர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய புத்தகங்களை வெளியிடுவதற்காக நாம் இந்தத் திட்டத்தைக் கொண்டு வரவில்லை. இந்தத் திட்டம் ஒரு பொதுவான திட்டமாகும். இதிலே சில அரிய புத்தகங்களை எழுதி அதை வெளியிட முடியாதவர்களுக்கு இந்த நிதி உதவியை நாம் செய்கிறோம்.

திரு. உ. சுப்பிரமணியன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிய நூல்கள் என்று சொல்கிறபோது பழைய நூல்கள் மட்டுமல்லாது, கம்ப்யூட்டர், சயன்ஸ் போன்ற விஞ்ஞான நுணுக்கத்தைப் பற்றிய புத்தகங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு உதவியளிக்க அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10.)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நூல்களுக்கும் தரப்பட்டிருக்கின்றது. உதாரணத்திற்கு திரு. நல்லதம்பி எழுதிய ''தொலைக்காட்சிக் கலை'' என்ற நூலுக்குத் தரப்படும்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு தலைவரவர்களே, அரிய நூல்களுக்கு அரசு நிதியுதவி அளிப்பது போலவே தமிழில் எழுதி பரிசு பெற்ற நூல்களை மலிவு விலையில் வெளியிட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட ஒரு திட்டம் தனியாகப் போடப்பட வேண்டும். இப்போது அப்படிப்பட்ட ஒரு எண்ணம் இல்லை.

திரு. என். வரதராஜன்; மாண்புமிகு தலைவரவர்களே, அரிய நூல்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான அளவுகோல் என்ன? பொதுவாக இந்த ஆண்டில் என்னென்ன அரிய நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தகங்கள் தனியாக ஒரு பட்டியலில் இருக்கிறது. மொத்தமாக 29 புத்தகங்கள் இது வரைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தகங்கள் பற்றி தந்திருக்கிறார்கள். இதிலே திரு. கே.பி. சுந்தரம் எழுதிய ''தையற்கலை'' திரு. எம். ஆர். நாராயண அய்யங்கார் எழுதிய ''இலக்கிய சாசன வழக்காறுகள்'', டாக்டர் க. ப. அறவாணன் எழுதிய ''எழுநூறு ஆண்டுகளில் நன்னூல்'' போன்ற இப்படிப்பட்ட புத்தகங்கள் சிலவற்றை அவர்களால் பதிப்பிக்கப்பட முடியாது நம்முடைய உதவி பெற்று பதிப்பிக்கிறார்கள். அந்த வகையிலே தான் நாம் இந்தப் புத்தகங்களைத் தயாரிக்கத் தேர்ந்தெடுக்கிறோம்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது; மாண்புமிகு தலைவர் அவர்களே, அரிய நூல் என்ற வகையிலே ஆன்மீக வளர்ச்சியிலே இருக்கின்ற நூல்களுக்கும், அவற்றை எழுதிய எழுத்தாளர்களுக்கும், அரசு உதவி செய்ய இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். ஆரம்பத்திலே, கதைகள், நாவல்கள், நாடகங்கள் மற்றும் மத சம்பந்தப்பட்ட நூல்களுக்கு இத்திட்டத்தில் உதவி வழங்குமாறு இருந்திருக்கின்றது. ஆனால் இப்போது திருத்தி அமைக்கப்பட்டு, 12 வகையாகப் பிரித்திருக்கிறார்கள்:—

(1) தமிழ்மொழி இலக்கியம் பற்றிய நூல்கள்;

(2) கல்வெட்டுகள், செப்பேடுகள் பற்றிய நூல்கள்;

(3) தொல்பொருள் ஆய்வு பற்றிய நூல்கள்;

(4) தமிழர்களின் பழக்கவழக்கங்கள் பற்றிய நூல்கள் (திருவிழாக்கள் உட்பட);

(5) தமிழ்நாட்டுக் கலைகள் பற்றிய நூல்கள்;

(6) அறிவியல் தொடர்பான நூல்கள் (பாட நூல்கள் நீங்கலாக);

(7) இதுவரை வெளியிடப் பெறாத இலக்கிய நூல்கள்;





(8) தமிழ் இலக்கியத்தில் காணப்படும் பெயர்களின் கலைக் களஞ்சியம்;

(9) பல்வகை அகர முதலிகள்;

(10) புதிய படைப்பிலக்கியங்கள்;

(11) கலை நுணுக்க நூல்கள்;

(12) பிற அனைத்துத் துறை நூல்கள் என்ற வகையில் இதிலே விடுபட்ட நூல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, எல்லா நூல்களுக்கும் வாய்ப்பு இருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: மொத்தமாக 29 நூல்களுக்கு நிதி உதவி அளிப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த 29 நூல்களை தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுத்தார்களா அல்லது குழு அமைத்து, சிறந்தவைகளைத் தேர்ந்தெடுத்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, குழு அமைத்துத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அமைக்கப்பட்டிருக்கிற குழுவில் தமிழ் வளர்ச்சி இயக்குநர், திரு. வெள்ளைவாரணனார், திரு. நாரண துரைக்கண்ணன், திரு. க. பெருமாள், திருமதி பு.பா. இராஜராஜேஸ்வரி, திரு. தில்லை கோவிந்தன், திருமதி தமிழரசி ஆகியவர்கள் அடங்குவர்.

### தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கான நிதியுதவி.

24—* வினா எண் 19025—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு நிதியுதவி அளிக்கத் தகுதி உள்ளதா என்று அறிய பல்கலைக் கழக மானியக் குழு ஒன்று பல்கலைக் கழகத்திற்கு வந்து ஆய்வு செய்ததா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) கமிட்டியில் அங்கம் வகித்தவர் யார், யார்?

(ஈ) கமிட்டி செய்த சிபாரிசு என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ). இதுபற்றிய விவர அறிக்கை ** அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

** 154-155 ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்று உள்ளது.

[1984 பிப்ரவரி 15

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, ஒரு மாநில அரசு ஒரு பல்கலைக்கழகத்தை ஆரம்பித்துவிட்டு மத்திய அரசினுடைய நிதி உதவியைக் கோருகிறபோது, அவர்கள் ஏதோ எஜமானர்களைப்போல் விதிப்படி ஆரம்பித்திருக்கிறார்களா என்றெல்லாம் பார்ப்பது—வேண்டுமானால் இங்கிருந்து அனுப்பப்படுகிற அறிக்கையைப் பார்த்துவிட்டு நிதி உதவி அளிக்கவேண்டுமே தவிர-ஏதோ வறட்சி அல்லது வெள்ளப்பகுதிகளைப் பார்ப்பதுபோல் இப்படிப் பார்ப்பது சரிதானா? இதுபற்றி மத்திய அரசிடம் நம் அரசு தன்னுடைய கருத்தைச் சொல்லியுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இதை ஒரு முறையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது தமிழ் பல்கலைக் கழகத்துக்காக மட்டும் ஏற்படுத்தப்பட்டதல்ல. எங்கே பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டாலும் பல்கலைக்கழக மானியக் குழு இப்படி ஒரு கமிஷனை அனுப்பி அவர்களுடைய நிபந்தனைகள் எல்லாம் நடத்தப்பட்டு வருகிறதா என்று பார்த்து அதற்குப் பிறகு தான் அவர்கள் நிதி உதவி அளிக்க முன்வருவார்கள். அதற்காக அவர்கள் வருகிறார்கள். குறிப்பாக மாநில அரசு இரண்டு கோடி ரூபாய் அளவிற்காவது அதில் முதலீடு செய்திருக்க வேண்டும் என்பது ஒரு அடிப்படை, அதையெல்லாம் நேரில் பார்த்தால்தான் தெரியும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, அப்படி நமக்கு அளிக்கப்படவிருக்கிற நிதி உதவி எவ்வளவு கிடைக்கும் என மாநில அரசு தெரிந்துகொண்டுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதற்கெல்லாம் ஒரு எல்லை கிடையாது. நாம் திட்டங்களை அனுப்பும்போது குறிப்பிட்ட திட்டங்களை அவர்கள் ஏற்றுக் கொண்டால் முழுப்பணம் அல்லது பாதிப்பணம் தருவார்கள். அவர்கள் நிதி உதவி கிடைக்கும். நமது ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ஏற்ப நாம் பெற்றுக்கொள்வோம்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற பதிலில், பல்கலைக் கழக மானியக் குழு சட்ட பிரிவு 12(ஏ)-ன் கீழ் தகுதியானது என அறிவித்து, தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டத்தில் திருத்தங்கள் செய்தபின்னரே பொதுவான நிலைய மேம்பாட்டுத்திட்டங்களுக்கு நிதி உதவி கிடைக்குமெனவும் தெரிவித்துள்ளது என்று கூறியிருக்கிறார்கள். அப்படியானால் தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டம் வகுக்கப்படும் போது பல்கலைக் கழக மானியக் குழு சட்டப் பிரிவு ஆராய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லையா? அல்லது அதற்கு உடன்பாடான முறையில் நம்முடைய சட்ட திட்டங்கள் இருக்க வேண்டும் என்பதைஅரசாங்கம் கருதாமல் சட்டம் வகுக்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்போது பல்வேறு பல்கலைக் கழக சட்ட திட்டங்கள் மாற்றப் பட்டிருக்கின்றன. புதிது புதிதாகக் கொண்டுவரப்படுகின்றன,



1984 பிப்ரவரி 15]

ஒரு பல்கலைக் கழகத்தினுடைய சட்டதிட்டங்கள் இன்னொரு பல்கலைக் கழக சட்டதிட்டங்களைப் போன்று இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் பொதுவான சில கருத்துக் களை பல்கலைக் கழக மானியக் குழு சொல்கிறார்கள். தமிழ்ப் பல்கலைக் கழக சட்ட திட்டங்களை நாம் வரையறுக்கும்போது அதன் குறிக்கோள் ஆகியவற்றை நம் நோக்கத்தின்படி நாம் வரையறை செய்து அந்தச் சட்ட திட்டங்களை கொண்டு வந்திருக் கிறோம். அதில் சில மாற்றங்களை செய்யவேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள். கருதி, அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். அந்த நிபந்தனைகளையெல்லாம் நாம் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றிய பிறகு கட்டடங்கள் சம்பந்தப்பட்ட மானியங்கள் தருவார்கள். அதற்கு முன்னால் திட்டங்கள் சம்பந்தப்பட்ட மானியங்களைத் தர முன்வந்திருக்கிறார்கள். ஆக, அவர்கள் நிதி உதவி தர ஒத்துக்கொண்டு விட்டார்கள்.

திரு. ந. சிவஞானம்: தலைவர் அவர்களே, தமிழ் பல்கலைக் கழகத்துக்கு எவ்வளவு நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது என அறிய விரும்புகிறேன். அடுத்தபடியாக, விரைவாக கட்டடங்கள் கட்டிக் கொள்ள—இப்போது க்வார்ட்டேர்ஸ் மட்டும்தான் கட்டப்பட்டிருக் கின்றன—கட்டடங்கள் கட்ட முனைப்பான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்போது அதனுடைய முழு விவரங்கள் என்னிடம் இல்லை. ஏறக் குறைய இரண்டு கோடி ரூபாய் பக்கம் நம் அரசு பணம் தந்துள்ளது. நிர்வாகக் கட்டடம் பற்றிய வரைபடத்தை நாம் பார்த்து நம்முடைய தமிழ்க் கலை, கலாச்சாரத்திற்கேற்ப அவை இருக்க வேண்டும் என்று சொல்லி அதில் ஒரு மாறுதல் செய்யவேண்டும் என்று நாம் சொல்லியிருக்கிறோம். அப்படி மாறுதல் செய்து அது ஒத்துக்கொள்ளப்பட்ட பிறகு அந்தக் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

மாலைநேர சட்டப்படிப்பை மீண்டும் துவக்கும் திட்டம்.

(*25—வினா எண் 21111)—திரு. செ. செம்மலை மற்றும் திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாலைநேர சட்டப்படிப்பை மீண்டும் துவக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ): 1983–84 ஆம் ஆண்டிலிருந்து மாலை நேர சட்டப்படிப்பு மீண்டும் துவங்கத் தேவையான ஆணைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டு விட்டன.

(முற்பகல் 9-20)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாலை நேர சட்டப் படிப்பை 2 ஆண்டுகள் மட்டுமே அனுமதிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு அலுவலர்களும் மற்றும் பல நிறுவனங்களிலே பணிபுரிகின்ற அலுவலர்களும் சட்டப் படிப்பைப் படிப்பதற்கு இதைத்தவிர வேறு வாய்ப்பு இல்லாத காரணத்தினால் ஏன் இதை நிரந்தரமாக ஆக்கக்கூடாது? இதைப்பற்றி அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 5 ஆண்டுக்கால சட்டக் கல்வியைக் கொண்டுவந்து விட்ட காரணத்தினால் இரண்டு ஆண்டுகளில் 3 ஆண்டுக்கால சட்டக் கல்வி படிப்பை நிறுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. அதற்கேற்ப மாலை நேரக் கல்வியும் 3 ஆண்டுக்காலமாக இருப்பதால் அந்தப் படிப்பையும் நிறுத்தலாமென்று இருக்கிறோம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, மீண்டும் மாலை நேர சட்டக் கல்லூரிப் படிப்பைத் தொடங்கியதால் பணியிலிருக்கின்றவர்கள் சட்டக் கல்வியைப் பயிலுகின்ற வாய்ப்பு இருக்கிறது கல்வித் துறையிலே இருக்கிறவர்கள் எப்படி நேரடியாகத் தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்களோ அதைப்போல சட்டத் துறையிலே பணியாற்றுகின்றவர்கள், சட்டமன்றத் துறையில் பணியாற்றுகின்றவர்கள் எல்லாம் நேரடியாக சட்டத் துறையிலே முதுகலைச் சட்டத் தேர்வை எழுதக்கூடிய முறையிலே உத்திரவிட அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே அப்படிப்பட்டவர்கள் படிப்பதற்காகத்தான் மாலைநேரக் கல்லூரியில் சட்டப் படிப்பை நாம் துவங்கியிருக்கிறோம்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, இதுவரையிலே சட்டப்படிப்பு படித்தவர்களில் பலர் வேலையின்றி, தேவையற்ற நியாயமற்ற வழக்குகளிலே வாதாடி, தோல்வியைத்தான் சந்திக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே வேலையில்லாத் திண்டாட்டம் அதிலே ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் இந்தச் சட்டப் படிப்பை சில ஆண்டுக்காலம் நிறுத்தி வைப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பிறருக்கு வாதாடுவதற்காகத்தான் சட்டப்படிப்பு என்பதில்லை. தானே சட்டப்படி நடப்பதற்கும் சட்டக் கல்வி அவசியம்.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, தற்போது மாலை நேர சட்டக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு முழுமையான அளவிற்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனரா? அப்படிச் சேர்க்கப்பட்டுள்ளதில் தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் ஆகியோருக்கு கொடுக்கப்படவேண்டிய சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதை நல்ல முறையில் கடைபிடிக்கச் சொல்லி எல்லாக் கல்லூரிகளுக்கும் நாம் ஆணையிட்டிருக்கிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாலை நேர சட்டக் கல்லூரி எந்த எந்த இடங்களில் செயல்படுகின்றன திருச்சி, கோவை, மதுரை போன்ற இடங்களில் அது அமல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலும் அது அமல்படுத்தப்பட்டு வருகிறது. மதுரை, கோயம்புத்தூரில் கொஞ்சம் குறைவான இடங்களும், சென்னையிலே கொஞ்சம் அதிகமான இடங்களும் இருக்கின்றன.

## Private markets in Madras City

*26—(Q.No.10150) THIRU R, UMANATH: Will the Hon. the Minister for Local Administration be pleased to state.

(a) Whether this Government have any proposal to take over the private markets in the Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த பொது அங்காடிகளை அரசு மேற்கொள்வதற்கான யோசனை பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். எந்தக் காரணங்களினால், எந்த நிகழ்ச்சிப் போக்குகளினால் அப்படிப்பட்ட ஒரு யோசனையை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தற்கு பேஸிஸ் (Basis) இருந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தனியார் சந்தைகளை மாநிலத்திற்கு உடமையாக்கவேண்டுமென்று கொள்கையை நிறைவேற்றவேண்டும் என்று சொன்னால் சட்ட திருத்தங்களை மத்திய அரசினுடைய ஒப்புதலோடு கொண்டுவர வேண்டியிருக்கிறது. அதனால்தான் ஆய்விலே இருந்துகொண்டு இருக்கிறது என்று சொன்னேன். தேசியமயக் கொள்கை. ஆகவே அந்தக் சொன்னால் அது

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, பரிசீலனையில் இருக்கக்கூடிய அந்த யோசனையின்படி எப்படிப்பட்ட பொது சந்தைகள் அல்லது அங்காடிகள் என்று சொன்னால் எப்படிப்பட்ட ரகங்கள், எந்த எந்தப் பொருட்கள் விற்கக்கூடிய அங்காடிகள், வெறும் மார்க்கட்டா, காய்கறிகள் விற்கக்கூடிய மார்க்கட்டா, ஷாப்பிங் காம்ப்ளக்ஸா, எந்த மாதிரியான ரகங்கள் அதிலே அடங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : தலைவர் அவர்களே, பிரைவேட் சான்டிஸ், பிரைவேட் மார்க்கட்ஸ் என்று வகைப் படுத்தப்பட்டு தமிழகத்திலே உள்ள அத்துனை தனியார் சந்தைகளும் தனியார் மார்க்கட்டுகளும் அரசுடைமையாக்கப்படுவதற்கான சட்டதிருத்தங்கள் கொண்டுவருவதற்கான ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. மிக விரைவிலே அவை கொண்டுவரப்படும்.

**திரு வே இராஜசேகரன்** : தலைவர் அவர்களே, சென்னையிலே தனியார் அங்காடிகள் எத்தனை எண்ணிக்கை இருக்கிறது? மாநகராட்சி அங்காடிகள் எத்தனை இருக்கிறது? புதிய அங்காடிகள் துவக்கும் திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : தனியார் சந்தைகள் 41, மாநகராட்சி சந்தைகள் 21, ஆகவே பாக்கியிருக்கக்கூடிய கமர்ஷியல் காம்ப்ளக்ஸ், ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் அங்காடி கட்டும் திட்டத்தை ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

**டாக்டர் கே. சௌரிராஜன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைகளை அரசுடைமை ஆக்குகின்ற திட்டத்திற்கு முன்பாக, இருக்கின்ற தனியார் கடைகளில் 'நாட் ஈவன் பேசிக் அமெனிட்டிஸ்' அங்கே சந்தைகள் கூடுகின்ற நேரங்களில் மலஜலம் கழிக்க கக்கூஸ் வசதி, தண்ணீர் வசதி இல்லாமல் பல சந்தைகள் இருக்கின்றன, அவைகளை மேம்படுத்துவதற்கு சட்ட திட்டம் ஏதேனும் கொண்டுவர அரசிடம் குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தனியார் சந்தைகளை நேரடியாக நானே பார்வையிட்டேன். பாழடைந்த நிலையில், துப்புரவு பணி நடக்காத நிலையில் மாண்புமிகு உறுப்பினர் சொல்வதை போன்று துர்நாற்றம் வீசுகின்ற பல்வேறு சந்தைகள் இருக்கின்றன. ஆகவே இவைகளை ஒழுங்கு படுத்துகின்ற முறையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சந்தைகளை அரசுடைமை ஆக்கும்போது தனியார்கள் கோர்ட்டுக்கு போகக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே கோர்ட்டுக்கு போகாமல் தடுப்பதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோர்ட்டுக்கு போவதை தடை செய்வது என்பது ஒரு ஜனநாயக கடமையை நிறைவேற்றுவதை தடை செய்வது போன்றதாகும். ஆகவே அப்படிப்பட்ட நடவடிக்கையில் நாம் ஈடுபடாமல் ஒரு பொது எண்ணத்தின் அடிப்படையில் தூய கொள்கையின் அடிப்படையில் இதைக்கொண்டு வருவதற்கு அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு இருக்கிறது.



**ரெட்டணை ஊராட்சியிலிருந்து நாரேரிக்குப்பம் கிராமத்தைப் பிரித்து தனி ஊராட்சியாக்கும் திட்டம்.**

*27—வினா எண். 18783—திரு கே. எம். தங்கமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி மயிலம் ஒன்றியம் ரெட்டணை ஊராட்சியிலிருந்து நாரேரிக்குப்பம் கிராமத்தைப் பிரித்து தனி ஊராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் தனி ஊராட்சியாக மாற்றியமைக்கப் படுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : (அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

**திரு கே. எம். தங்கமணி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் ஊராட்சித் தேர்தல்கள் எல்லாம் நடைபெறும் என்று மேதகு கவர்னர் அவர்கள் உரையில் அறிவிக்கப் பட்டு விட்டது. அதற்குள்ளாக ஊராட்சிகளைத் தனியாக பிரிக்கும் திட்டம் செயற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சித் தேர்தல்களை வருகின்ற ஏப்ரல் மாதத்தில் நாம் நடத்துவதாக ஏற்கனவே மேதகு ஆளுநர் அவர்கள் தங்களுடைய உரையில் தொனித்து இருக்கிறார்கள். ஆகவே தேர்தல்கள் நடத்துவதற்கு முன்பாக இப்படிப்பட்ட சீர்திருத்தங்களை நாம் செய்ய முடியாது. அதனால்தான் பரிசீலனையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

**மாரனேரி கிராமத்தில் சமுதாயக் கிணறு வெட்டும் திட்டம்.**

*28—வினா எண். 19159—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் மாரனேரி கிராமத்தில் சமுதாயக் கிணறு வெட்டப்பட்டு வேலை பூர்த்தியாக வில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) உடன் அந்த வேலையை முடிக்க அரசு உத்தரவிடுமா?

(இ) D.P.A.P. திட்டத்தின் மூலம் வேலையை முடிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ): இந்தச் சமுதாயக் கிணற்றை சிவகாசி ஒன்றியம் மாரனேரி கிராமத்தில் அமைக்க முடிவு செய்யப்பட்டு அதற்காக ரூ. 50,000 மதிப்பீடும் தயார் செய்யப்பட்டது. இந்த மதிப்பீட்டிற்கு ஒப்பந்தக்காரர்கள் முன்வராததால் கூடுதல் மதிப்பீட்டிற்கு ஒப்படைக்கப்பட்டது.

இதுவரை ரூ. 43,329 செலவு செய்து 7.00 மீட்டர் ஆழம் கிணறு வெட்டி பக்க சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. தண்ணீர் கிடைக்காததால் மீண்டும் 7 மீட்டர் வெட்ட இவ்வேலைக்கு ரூ. 80,000-க்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குக் கொடுக்கப்பட்டு வறட்சி நிவாரண திட்டத்தின் அடிப்படையில் இவைகள் எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும் என்று கோரப்பட்டு இருக்கிறது.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாறனேரி கிராமத்தில் வெட்டப்பட்ட கிணற்றில் பம்புசெட் பொருத்தப்படவில்லை. பம்புசெட் பொருத்தி சிறு விவசாயிகளுக்குப் பாசன வசதி தரும் பொருட்டு விரைவில் அரசு அதைச் செய்ய ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் கிடைத்தால்தான் பம்புசெட் பொருத்தமுடியும். தண்ணீர் கிடைக்கட்டும், பம்புசெட் பொருத்தலாம்.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்தக் கிணற்றில் போதுமான அளவுக்குத் தண்ணீர் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். விரைவில் அங்கு பம்புசெட் பொருத்து வதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 மீட்டர் தோண்டுவதற்கு 50 ஆயிரம் ரூபாய் செலவு செய்து தண்ணீர் கிடைக்கவில்லை என்ற செயற் குறிப்பு என்னிடத்தில் கொடுக்கப்பட்டு இருக்கிறது. சமீபத்தில் நமக்குத் தெரியாமல் ஏதாவது தண்ணீர் வந்து இருந்தால்—மழை பொழிந்ததன் காரணமாக இருக்கலாம்-உண்மையிலேயே அப்படிப் பட்ட நிலை இருந்தால் கண்டிப்பாக பம்புசெட் பொருத்தப் படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமுதாயக் கிணறுகள் அமைக்கக்கூடிய திட்டம் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் அமல் நடத்தப்படுகிறதா? இந்த சமுதாயக் கிணறுகள் மூலம் சிறு விவசாயிகளுக்கு பாசன வசதி களை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி சிவகாசியைப் பற்றியது. பொதுவாகக் கேட்க வேண்டாம்.

*[முற்பகல் 9—30]*

**திரு. சோ. அழகர்சாமி :** சிவகாசியைப் பற்றித்தான் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது அந்தக் கிணற்றுக்காக ரூபாய் 43 ஆயிரம் செலவு செய்யப் பட்டு இருக்கிறது. அதை 80 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி ஏறிஇறீ 7 மீட்டர் ஆழப்படுத்தவேண்டி இருக்கிறது என்று



சொன்னார்கள். தண்ணீர் இல்லை என்று சொன்னார்கள். அந்தத் தொகுதியை சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இப்போது அந்தக் கிணற்றிலே தண்ணீர் இருக்கிறது, இனி வெட்ட வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுதே பம்புசெட் போட்டு விட வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆகையினால் உண்மையான தகவல்களைச் சேகரிப்பதில் ஏன் இத்தகைய முரண்பாடு? உண்மையான நிலை என்ன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவலர்கள் என்ன செயற்குறிப்பை கொடுக்கிறார்களோ, அதை வைத்துத்தான் நான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, உண்மையான நிலையைக் கண்டறிந்து உறுப்பினர் அவர்கள் சொன்னால், கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து அதன் மூலமாக நிவாரணப் பணிகளை தொடர்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி ஒன்றியத்தில் மாறனேரி கிராமத்தில் உள்ளது போல் சமுதாயக் கிணறு வெட்டி, தண்ணீர் கிடைத்த பிறகு பம்ப்செட் இல்லாத காரணத்தால் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அது போலவே வறட்சி நிவாரணத்திற்காக பல இடங்களில் கிணறு வெட்டி தண்ணீர் கிடைத்த பிறகும், பம்ப் செட்டுகள் அங்கே அமைக்கப்படாத காரணத்தால், அவைகள் உபயோகம் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, அப்படி வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் வெட்டப்பட்ட கிணறுகளுக்கு பம்ப் செட்டுகளை வைக்க அரசு தீவிர நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அழகர்சாமி முதலில் கேட்டது போன்ற பொதுவான கேள்விதான் இதுவும். இந்த வினாவிற்கு சம்பந்தமில்லை.

ஈரோட்டிலிருந்து புறப்படும் படுக்கை வசதியுடன் கூடிய பேருந்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதியளிக்கும் திட்டம்.

*29வினா எண் 17118:— **திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர்கள் அரசின் இனத்துப் பேருந்து களிலும் இலவசமாகப் பயணம் செய்யலாமென்று அனுமதிக்கப் பட்டும், ஈரோட்டிலிருந்து புறப்படும் படுக்கை வசதியுடன் கூடிய பேருந்தில் அனுமதிக்கப்படாதது ஏன்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இப்பேருந்தில் படுக்கை வசதியுடன் பதினாறு பயணிகள் மட்டுமே பயணம் செய்ய முடியும். எனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதில் இலவசமாக பயணம் செய்ய அனுமதி அளிக்க இயலாது என்று திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் கூறியுள்ளது.

**திரு. தி கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, மற்றப் பேருந்துகளில் சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களோடு பயணம் செய்ய இன்னொருவருக்கும் அனுமதி கொடுக்கப்பட்டு இணைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையினால் இந்தப் பேருந்துகளில் குறைந்தபட்சம் எங்களை மட்டுமாவது அனுமதிக்க மறு பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ;** தலைவர் அவர்களே, அப்படி இப்போது அனுமதிக்கப்படுமேயானால், அடுத்த ஆண்டு எங்களோடு இன்னொருவரையும் சேர்த்து பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வரும். எனவே இப்போதைக்கு அனுமதிக்கவில்லை.

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே சட்டமன்ற உறுப்பினர்கள் பணம் கொடுத்து பயணம் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்ற வாக்குறுதி தந்தால், படுக்கை வசதியோடு கூடிய இத்தகைய பேருந்துகளில், நேரடி ரயில் வசதி இல்லாத நாகர் கோவில் போன்ற பகுதிகளுக்காவது அனுமதிக்கப் படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற பேருந்துகளையும் சேர்த்தா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்.**

*30வினா எண் 18392 —**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரியும் ஊழியர்கள் எத்தனை பேர்?

(ஆ) ஊழியர்களுக்குக் குடியிருப்பு மனை வழங்க போக்கு வரத்துக் கழகம் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) 31–3–1983 அன்று கணக்குப்படி 5805 ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

(ஆ) "உங்களுக்கு ஒரு சொந்த வீடு" என்ற திட்டத்தின் கீழ் சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. முதல் தொடக்கமாக, தஞ்சை மாவட்டத்தில் 87 வீடுகளும், திருச்சி மாவட்டத்தில் 100 வீடுகளும் கட்டுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





**திரு. செ. இராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சோழன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் இந்த திட்டத்தில், பணிமனையிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் உள்ள அம்மாசத்திரம் என்ற கிராமப் பகுதி ஆர்ஜிதம் செய்யப்பட்டிருப்பதாக தகவல். ஆனால் பணிமனைக்கு அருகிலேயே நிலம் இருப்பதாகவும் தகவல். எனவே அப்படி பணிமனைக்கு அருகிலே இருக்கும் இடங்களையே ஆர்ஜிதம் செய்து தொழிலாளர்களுக்கு வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அம்மாசத்திரம் என்னும் அந்த இடத்திலேதான் 9¼ ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அங்கே 87 வீடுகளைக் கட்டுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக் கின்றன. அப்படி அருகிலேயே இடம் இருக்குமேயானால், அதை பயன்படுத்திக் கொள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரைப் போன்றவர்கள் உதவி செய்வார்களேயானால், நிச்சயமாக தயக்கம் காட்டாமல் எடுக்கலாம். ஆனால் விலை அதிகமாக இருக்கும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். தொழிலாளர்கள் அவ்வளவு பணம் கொடுத்து வாங்குவதற்கு சிரமப்படுவார்கள். எனவே குறைந்த விலையில் கிடைத்தால் வாங்கலாம். நிலங்கள் மேலும் தேவைப்படத்தான் செய்கிறது. எனவே குறைந்த விலையில் கிடைத்தால் கையகப்படுத்த அரசு முயற்சிக்கும்.

**திரு. செ. இராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கையகப்படுத்தப்படவுள்ள மனைகளுக்கான தொகை எவ்வளவு என்பதையும், தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு வருகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன். அத்தோடு, சோழன் போக்குவரத்துக் கழகத்தில் சமீபத்தில் ஒரு கோடி ரூபாய்அளவிற்கு ஊழல் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது. அதில் இந்த நில ஆர்ஜித சம்பந்தமாகவும் ஏதாவது உண்டா? அதாவது இதில் அதற்குச் சம்பந்தம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, தனித் தனியாக ஒவ்வொரு நபருக்கும் எவ்வளவு வரும் என்கிற கணக்கு தற்சமயத்திலே என்னிடத்திலே இல்லை. அங்கே ஒரு தவறு நடந்திருக்கிறது, அதை நாங்கள் கண்டு பிடித்திருக்கிறோம். இந்த அரசு வந்த பிறகுதான் அதைக் கண்டு பிடித்திருக்கிறது. ஏறத்தாழ பத்து வருட காலமாக அந்த ஊழல் நடைபெற்றிருக் கிறது என்பதை உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்த விரும்பு கிறேன். முழு விவரத்தையும், அரசாங்கம் விரைவிலே பரிசீலித்து அதை அவைக்கு தெரிவிக்கும்.

**அம்பத்தூர் நகரியம் 'மேனாம்பேடில்' என்னும் இடத்திலுள்ள அரசாங்க மாணவர் விடுதி.**

31—(*வினா எண். 12945)—**திரு எஸ். இளையபெருமாள்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை தாலூகா அம்பத்தூர் டவுன்ஷிப்பில் உள்ள மேனாம்பேடில் என்னும் இடத்தில் அரசாங்க மாணவர் விடுதி இருப்பது உண்மையா?

(ஆ) இவ்விடுதியில் மாணவிகளும் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்களா?

(இ) ஆம் எனில், காரணம் யாது?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ), (ஆ) மற்றும் (இ) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் மேனாம்பேடு கிராமத்தில் ஆண், பெண்கள் விடுதி வெங்கடாபுரம் பழைய அஞ்சல் நிலைய வீதியிலும், 30 பேர்களுக்குண்டான ஆண்கள் விடுதி விஜயலட்சுமிபுரம், காந்தி தெருவிலும் இயங்கி வருகின்றன. இவைகளுக்கு இடையில் ஒரு கிலோமீட்டர் தூரம் உள்ளது.

**திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தனியார் கட்டிடங்களில் அந்த விடுதிகளை நடத்துவதாகச் சொன்னார்கள். ஆனால், அந்தத் தனியார் கட்டிடங்கள் சரியாக இல்லாத காரணத்தினால், அரசாங்கத்திற்கு ஆதிதிராவிட நலத்துறை கடிதம் எழுதியிருந்தும், இன்றுவரையில் அந்தக் கட்டிடம் பழுதுபார்க்கப்படவில்லை. வருங்காலத்திலாவது அந்த விடுதிக்கு அரசாங்கத்தின் மூலம் தனித் தனியான கட்டிட வசதிகள் செய்ய அரசாங்கத்திடம் ஏதேனும் குறிப்புகள் உள்ளதா? அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கக்கூடிய பெண்கள் விடுதியை நிலையான கட்டிடத்தில் அமைக்க வேண்டுமென்றுதான் ஏற்கனவே அரசு ஆணைகள் பிறப்பித்திருக்கிறது. ஆனால், அதற்குத் தகுந்த நிலங்கள் அங்கே கிடைக்காத காரணத்தினால், தற்போது அரசு தனியார் நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது. தனியார் நிலங்கள் கிடைக்கப் பெற்றவுடன், கட்டிடங்களைக் கட்டுகின்ற பணிகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கட்டிடம் பழுதடைந்த நிலையில் இருப்பதால், வேறு ஒரு கட்டிடத்தில் அமைக்க ஆதிதிராவிடர் நலத்துறை அதிகாரி ஒரு கடிதத்தை அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தார். அந்தக் குறிப்பின் மேல் சரியான, உடனடியான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், அந்த விடுதியிலுள்ள பெண்கள் தொடர்ந்து அந்த பழுதடைந்த விடுதியிலேயே வசிப்பது அரசுக்குத் தெரியுமா? அங்கே இருக்கின்ற அதிகாரியும், டைரக்டர் ஆப் ஆதிதிராவிட நலத்துறை, செகரட்டரி, சோஷியல் வெல்பேர் மூலம் உடனடியாக நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், நல்ல கட்டிடம் இருந்தும், அந்தப் பிள்ளைகள் சுகமாக இருக்க, தகுதியான இடம் பெறாமல், அந்தப் பழுதடைந்த



விடுதியிலேயே அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா? இனிமேலாவது உடனடியாக அதைக் கவனிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்ற அந்த விடுதிக் கட்டிடங்கள் சரியாக, வசதியாக இல்லை என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். நம்முடைய நலத்துறை இயக்குநர் அனுப்பியுள்ள குறிப்புகளின் அடிப்படையில் பார்க்கும் போது, தற்போது, அங்கே இருக்கக்கூடிய கட்டிடங்கள் வசதியான, தனித்தனியான கட்டிடங்களாக இருக்கின்றன என்பது தெரிய வருகிறது. இருந்தாலும், உறுப்பினர் அவர்களின் கருத்தின் அடிப்படையில், ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநரை நேரடியாக அங்கே அனுப்பி, தகுதியான வேறு ஒரு கட்டிடத்தைத் தேர்வு செய்து, உடனடியாக அந்த மாணவிகளை அந்த விடுதியில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வடாற்காடு மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ள மலைவாழ் மக்களுக்கான மேம்பாட்டு திட்டங்கள்.**

32—(*வினா எண் 17266)—**திரு. ப. சுந்தரம் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வடாற்காடு மாவட்டம் ஏலகிரிமலை ஜவ்வாது மலைப் பகுதிகளில் எந்தெந்த திட்டங்கள் செயல்படுத்த அரசு திட்டமிடப் பட்டுள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கையொன்று** அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ப. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு தொழிற்பேட்டையை ஆரம்பிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எப்போது அங்கே ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டை ஆரம்பிப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதுபற்றிய குறிப்புகள் தற்போது என்னிடத்திலே இல்லை. தனியாக கேள்வி கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

---

**155—156ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிலேயே, மருந்தகங்கள் ஆரம்பிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இப்படிப்பட்ட மருந்தகங்கள் ஜவ்வாது, ஏலகிரி மலைப் பகுதிகளிலே இருந்தும், அவைகள் பல்வேறு கிராமங்களில் பயன் படவில்லை காலரா போன்ற தொத்து வியாதிகள் வருகின்ற போது, கீழே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலைய அதிகாரிகள் தான் மேலே சென்று தடுப்பு ஊசி போடுகின்ற நிலை இருக்கின்றது. அதைப்போக்க, அந்த மலைப்பகுதிகளிலேயே ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்க வேண்டுமென்ற தேவையை வற்புறுத்தி வருகிறோம். அதை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு தனியாகப் பரிசீலனை செய்யும்.

திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி தொகுதியை உள்ளடக்கிய ஜவ்வாது மலைப் பகுதியில், காவானூரில் ஒரு கால்நடை மருந்தகத்தை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அதை இந்த விவரக் குறிப்பில் குறிப்பிடவில்லை. அங்கே ஒரு கால்நடை மருந்தகத்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை களைப் பற்றித்தான் இந்த விவரக் குறிப்பிலே நாம் வைத்திருக் கிறோம். அங்கே ஒரு கோரிக்கை இருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அந்தக் கோரிக்கையை அவர்கள் என்னிடத்தில் சொன்னால், அரசு தனியாக பரிசீலனை செய்யும்.

### தமிழகத்தில் பெண்களுக்கென தனியாக இயங்கிடும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள்.

33—(*வினா எண் 17857)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் பெண்களுக்கான I.T.I. பள்ளிகள் எத்தனை இருக்கின்றன மாவட்டவாரியாக?

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களுக்காக I.T.I. பள்ளிகளை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) தமிழகத்தில் பெண்களுக்கென தனியாக மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் முறையே சென்னை தியாகராயநகரிலும்,





தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூரிலும்; கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலிலும் இயங்கி வருகின்றன.

(ஆ) தற்பொழுது இல்லை.

(முற்பகல் 9.40)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பெண்கள் படித்துவிட்டு வேலைக்கும் போக முடியாத நிலையில் இருக்கிறார்கள். கல்யாணம் ஆன பிறகும் கூட வரதட்சிணைக் கொடுமையால் பாதிக்கப்படும் நிலைமையும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கல்யாணம் ஆன பிறகு வரதட்சிணைக் கொடுமை எப்படி வரும்? கல்யாணத்திற்கு முன்புதானே வரதட்சிணை கேட்பார்கள்.

திரு. ரா. உமாநாத் : கெரசின் ஊற்றி எரிப்பதெல்லாம் கல்யாணத்திற்குப் பிறகுதானே நடக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: ஆகவே, இதைப் பரிசீலனை செய்து ஒவ்வொரு ஜில்லாவிலும் பெண்களுக்கு என்று தனியாக தொழிற்பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கு வழிவகை செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியாக பெண்களுக்கென அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது இல்லை. இருந்தாலும், பெரிய மாவட்டங்களில் பெண்களுக்காக தனியாக ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் துவங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, முதல் கட்டமாக மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், ஆகிய மாவட்டங்களின் தலைநகரங்களில் மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை பெண்களுக்கென்றே தனியாக பகுதி–2 என்ற திட்டத்தில் 1983-84-இல் சேர்க்கப் பட்டது. ஆனால் இருக்கின்ற நிதி நிலையின் காரணமாக மாநிலத் திட்டக்குழுவால் அது 1983-84 இல் பகுதி 2 திட்டத்தில் சேர்க்கப் படவில்லை. ஆனாலும், 1984—85-க்கான பகுதி—2 திட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள இருக்கும் திட்டங்களில் அது தற்போது அடங்கியிருக்கிறது. ஆகவே, உறுப்பினர் சொன்ன கருத்துக்களை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பெண்களுக்கென ஐ.டி.ஐ. என்ற பெயராலே உள்ள இடங்களிலே பெண்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அக்கிரமமான கரிகுலத்தைப் முறையில் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். பொது ஐ.டி.ஐ.க்களில் என்னென்ன கற்றுக் கொடுக்கிறார்களோ அது பெண்களுக்கான ஐ.டி.ஐ-க்களில் கற்றுக் கொடுக்கப்படுவதில்லை. உதாரணமாக, சிவில், மெக்கானிக்கல், டிராஃப்ட்ஸ்மேன் போன்றவைகளுக்கான

டிரெயினிங் பெண்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இப்படிப் பாதிக்கப்பட்டிருப்பதைப்பற்றி மாதர் சங்கங்களிடமிருந்து புகார்கள் வந்திருக்கின்றன. பொது ஐ.டி.ஐ.க்களில் கற்றுக்கொடுக்கப்படும் பாடங்களை எங்களுக்கு வேறு இருக்கின்ற பள்ளிகளிலும் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம் என்று சொல்கிறார்கள். இப்படி ஏற்பட்டுள்ள பாதிப்பை அகற்றி என்ன கோர்ஸைப் படிக்க விரும்புகிறார்களோ அந்தக் கோர்ஸை அந்தப் பெண்களுக்குக் கற்றுக்கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் அந்தக் கருத்து அரசினுடைய கவனத்திற்கு இதுவரையில் கொண்டுவரப் படவில்லை. இருந்தாலும் உறுப்பினர்கள் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்த விவரங்களை என்னிடத்திலே சொல்வார்களேயானால் அரசு ஆராய்ந்து தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநில அளவில் அமைக்கப்பட்டிருந்த ஆதிதிராவிடர் குழு என்ற குழு ஒன்று இயங்கி வந்தது. அந்தக் குழு 1980 ஆம் ஆண்டில் இருந்து இது வரையில் இயங்கவில்லை. அதற்குக் காரணம் என்ன? ஆதி திராவிடர் நலனைக் கவனிப்பதற்காக அடுத்த ஆண்டிலேயிருந்தாவது மாநில அளவிலே ஒரு குழுவை ஏற்படுத்த அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கயத்தாறில் சலவைத்துறை கட்டும் திட்டம்.

*34*—(*வினா எண். 19570)திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டபிடாரம் தொகுதியிலுள்ள கயத்தாறில் சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைத் துறை கட்டும் செயற் குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு எம் ஆர். கோவேந்தன் : (அ) மற்றும் (ஆ) : கயத்தாற்றில் சலவைத்துறை கட்டும் முன்மொழிவு பிற்பட்டோர் நல இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது பிற்பட்டோர் நல இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது என்று





கூறினார்கள். இதுபோன்றே கழுகுமலையில் 1980ஆம் ஆண்டிலே அடிக்கல் நாட்டப்பட்டும் இதுவரையிலும் சலவைத்துறை கட்டப்படவில்லை. குறிப்பாக வறட்சிக் காலங்களில் அங்கே சலவைத் தொழிலாளர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். நாம் பல்வேறு திட்டங்களை கிராமப் புறங்களுக்கு செய்து வருகிறோம். எனவே, கயத்தாற்றில் கட்ட முன்வருகின்ற சூழ்நிலையில் எல்லவிடங்களிலும் இப்படிப்பட்ட சலவைத் துறைகளைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் கயத்தாறு என்னும் இடத்தில்தான் சலவைத்துறை கட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் மற்ற மாவட்டங்களைப் பொறுத்த வரையில் குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. எனவே அவை பற்றி தனியான கேள்வியினைப் போட்டால் விவரமான பதிலளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை :: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கயத்தாறிலே இந்த நிதியாண்டிலேயாவது சலவைத் துறையினைக் கட்டி முடிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, அரசு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்திற்கான திட்டங்களை அங்கீகரிப்பதற்காக நிர்ணயிக்கப் பட்டுள்ள சிக்கன வரம்பு.

*35* (*வினா எண் 6839)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : திரு. சோ. அழகர்சாமி மற்றும் திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்டவினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர்ப்பாசனத்திற்காக கட்டப்படும் அணை அமைக்கப்படவுள்ள குட்டைகள் ஆகியவைகளை அமைக்கும்பொழுது Benefit cost Ratio என்ற அடிப்படையில் பல திட்டங்கள் கைவிடப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்த முறையைக் கைவிட அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) மற்றும் (ஆ) சிறப்புச் சிறுபாசனத் திட்டத்தின்கீழ் திட்டங்களை அங்கீகரிப்பதற்கு சிக்கன வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சில திட்டங்கள் சிக்கனமற்றதாக இருப்பினும், தேவையான அடிப்படை மற்றும் திட்டங்கள் அமையப்பெறும் பகுதியின் பின்தங்கிய நிலை,

வறட்சி நிலை இவற்றை கருத்தில் கொண்டு அங்கீகரிக்கப்பட்டு
வருகின்றன. சிறப்பு சிறுபாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும்
நிதி வரம்பிற்குள், ஒவ்வோராண்டும் புதிய சிறுபாசனத் திட்
டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். சிக்கனமற்ற
திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டால், சிக்கனமான திட்
டங்கள் விடுபட்டுவிடும். எனினும், தற்போது உள்ள விதி
முறையை மாற்றி, பயன்செலவு விகிதாச்சார அடிப்படையில்,
திட்டங்களை அங்கீகாரம் அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் தலைவர்
அவர்களே, இந்த பெனிபிட் காஸ்ட் ரேஷியோ பார்ப்பது
என்பதில் சூழ்நிலைக்கேற்ப விதிவிலக்கு அளிக்கப்படும் என்று
குறிப்பிட்டார்கள். நிலத்தடி நீரினைப் பொறுத்தவரையில்
மாநிலத்தில் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்கள் கறுப்புப் பகுதி
என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. எனவே குறைந்தபட்சம்
அந்தப் பகுதிகளில் நிலத்தடி நீரை மேம்படுத்துவதற்காக அங்கே
அமைக்கப்படுகின்ற குட்டைகள் அணைகள் ஆகியவற்றைப்
பொறுத்த வரையிலாவது இந்த பெனிபிட் காஸ்ட் ரேஷியோ
பார்ப்பது என்பதை நீக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே,
வறட்சியால் பாதிக்க ஏதுவான பகுதிகளுக்கும் வறட்சியால்
பாதிக்க ஏதுவான பகுதி அல்லாத இதர மாவட்டங்களுக்கும்
உள்ள பாசனவசதி திட்டங்களைப் பொறுத்த வரையில் பயன்
விகிதாச்சாரம் வெவ்வேறு விதமாக அமைந்திருக்கின்றன. எனவே
அந்த வகையில்தான் இந்த காஸ்ட் ரேஷியோ நிரப்படுகின்றதே
தவிர வேறல்ல. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
கூறுகின்ற பகுதி எந்தப்பகுதி என்பது தெரியாததால் அவர்கள்
அதுபற்றி தனிக்கேள்வி கேட்டால் நன்கு பதிலளிக்க முடியும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, தற்போது
இந்தபெனிபிட் காஸ்ட் ரேஷியோ என்பது எந்த அடிப்படையிலே
பார்க்கப்படுகிறது? அதாவது இவ்வளவு டன்களுக்கு இத்தனை
ஆயிரம் ரூபாய் சலவழிக்க வேண்டும் என்றவகையில் கணக்கு
இருக்கின்றதா? அதுமட்டுமல்லாமல் தற்போது மாண்புமிகு
உறுப்பினர் திரு பாலசுப்பிரமணியன் அவர்கள் கேட்டது மாதிரி
பல இடங்களில் புதிய பாசன கண்மாய்களை அமைக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். வறட்சிப் பகுதிகளைப் பொறுத்த,
வரையில் மழைக் காலங்களில் வருகின்ற தண்ணீரை தேக்கி
வைப்பதன் மூலம் அடுத்த ஆண்டு செய்யவேண்டிய வேறு
பல செலவுகளை அதாவது குடிநீர் கிணறுகளை ஆழப்
படுத்துதல் போன்ற செலவுகளைத் தவிர்க்கலாம். எனவே,
கட்டுபடியாகின்ற திட்டமா, கட்டுபடியாகாத திட்டமா என்று
பார்க்காமல், அப்படிப்பட்ட பாகுபாட்டினைப் பார்க்காமல்
விவசாய பாசனக் கண்மாய்களை அமைக்கக்கூடிய விசேஷ
திட்டங்களை இந்த அரசு ஏற்படுத்துமா?





மாண்புமிகு திரு. யா. சை மு. யூசுப்: தலைவர் அவர்களே,
பெனிபிட் காஸ்ட் ரேஷியோ என்பது மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சொன்ன அடிப்படையில்தான் பார்க்கப்படுகின்றது.
என்றாலும் திட்டங்கள் மேற்கொள்ளப்படக்கூடிய பகுதிகளில்
அந்தத் திட்டம் அமல்படுத்தக்கூடிய முக்கியத்துவத்தைக்
கருத்தில் கொண்ட இந்த பெனிபிட் காஸ்ட் ரேஷியோ
என்பது பார்க்கப்படுவதில்லை. எனவே, இந்த பெனிபிட்
காஸ்ட் ரேஷியோ என்பதைப் பொறுத்த வரையில் அதனைக்
கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கொள்கையில்
இந்த அரசு இல்லை. அதிலே பல சட்ட விதிகளை தளர்த்தி
அவ்வப்போது நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகின்ற
காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை
யினை ஆய்வு செய்ய வேண்டும் என்ற தேவை இருப்பதாக
எனக்குத் தெரியவில்லை.

(முற்பகல் 9-50)

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பெனிபிட் காஸ்டு ரேஷியோ என்கின்ற பயன்
விகிதாச்சாரம் என்பது எந்த அடிப்படையில் நிர்ணயிக்
கப்பட்டுள்ளது? அதாவது ரூ, 1 இலட்சம் செலவு செய்து ஒரு
அணையை கட்டுவதாக இருந்தால் அது எந்த அளவுக்குப் பயன்
தரும் என்ற அளவிலே அந்தச் செலவை பாசனம் பெறும்
நிலங்கள் சம்பந்தப்பட்ட விவசாயிகள் எந்த அளவிற்கு ஈடு
செய்ய வேண்டும்? வரிகளுக்கு எவ்வளவு வரியாக விதித்து
வசூலிக்கப்படுகிறது என்கின்ற விவரத்தையும் அமைச்சர்
அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர்
அவர்களே, பெனிபிட் காஸ்ட் ரேஷியோ என்பதற்கும் கூடுத
லாக ஏற்படுகின்ற செலவை விவசாயிகளிடமிருந்து பெறுகின்ற
விஷயத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது.
பெனிபிட் காஸ்ட் ரேஷியோ என்பது அரசு திட்டங்களுக்காகப்
போடுகின்ற செலவு. அதே சமயம் கூடுதல் உணவு உற்பத்தியை
மதிப்பிட்டு அவற்றைக் கணக்கில் கொண்டு, இந்த பெனிபிட்
காஸ்ட் ரேஷியோ கணக்கிடப்படுகிறது.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே,
தமிழகத்தில் இருக்கிற தண்ணீர் வீணாகாமல் பாசனத்திற்குப்
பயன்படுத்தப்பட வேண்டுமென்பதுஅரசின் கொள்கை. ஆனால்
குமரி மாவட்டத்தில் மாம்பழத்தாற்றில் சுமார் 230 கன அடி
தண்ணீர் எந்த பயனும் இல்லாமல் கடலில் கலப்பது அரசுக்குத்
தெரியுமா? அதிலே பெனிபிட் காஸ்ட் ரேஷியோ பார்க்காமல்.
உடனடியாக அதனை நிறைவேற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு யூசுப் : பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற
மாம்பழத்தாற்றை நானே நேரடியாகப் பார்த்தேன். அவர்கள்
கூறுவது போன்று தண்ணீர் வீணாகித்தான் சென்று கொண்டிருக்

கிறது. ஆகவே, பெனிபிட் காஸ்ட் ரேஷியாவைக்கூடக் கணக்கில் எடுக்காமல், உடனடியாக அதற்குரிய ஆய்வுகளை நடத்தி, அந்த ஆய்வு அறிக்கைகளை அரசுக்கு அனுப்பச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, ஆய்வுகள் தகுந்த அளவுக்கு தேவையான அளவுக்குப் பயனைத் தரக்கூடியது என்று தெரிவிக்கின்ற சூழ்நிலை இருக்குமானால் நிச்சயமாக அரசு பரிவோடு இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டுகள், குளங்கள் போன்றவைகள் எல்லாம் அமைப்பது உணவு உற்பத்தியைப் பெருக்கி, நாட்டு மக்களுக்கு உணவு வழங்கவேண்டுமென்ற கருத்தில்தான். ஆகவே நீண்ட தொலை நோக்குடன் இந்த பெனிபிட் காஸ்ட் ரேஷியோவை இந்தத் துறைக்கு அறவே நீக்கிவிட்டு, எந்த இடத்தில் அவசியமோ அந்த இடத்தில் எல்லாம் உணவு உற்பத்தியைப் பெருக்கு வதை நோக்கமாகக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் பதில் வழங்குகின்ற நேரத்தில், இப்பொழுதே மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தினுடைய அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகின்றது என்று தெரிவித்தேன். அந்தக் காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி கேட்க வேண்டிய அவசியம் இல்லாமல், இந்த அரசு செய்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகாநதியை தாமிரபரணி நதியுடன் இணைக்கும் திட்டம்

36* வினா எண் 16531—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நிர்வாகத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) மகாநதியையும் தாம்பிரபரணி நதியையும் இணைக்கும் பணியை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது பற்றி தமிழக அரசுக்கு தகவல் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) ஆம்.

(ஆ) நாட்டின் நீர்வள அபிவிருத்திக்காக தேசிய தொலை நோக்கு திட்டத்தின் கீழ் தீபகற்ப நதிகளான மகாநதி, கோதாவரி இவற்றின் உபரிநீரை தெற்கே கிருஷ்ணா, பெண்ணாறு, காவேரி படுகைகளுக்குத் திருப்பி நீர்வளத்தை மேம்படுத்தும் திட்டம் ஒன்று மத்திய அரசின் ஆய்விலுள்ளது. மகாநதியை தாம்பிரபரணியுடன் இணைத்து, கடலுக்கு வீணாகச் செல்லும் பகற்ப நதிகளின் வெள்ளநீரை தெற்கு நோக்கி திருப்பி



விடுதல் சம்பந்தமான விரிவான ஆய்வுப்பணிகளை மேற் கொள்ளும் செயற்குறிப்பு ஒன்றும் மத்திய அரசின் பல்வேறு அமைப்புகளின் ஆய்விலுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு என்ற அடிப்படையிலே இருக்கிற இந்தத் திட்டத்தை விரைவாக மத்திய அரசாங்கம் அமல் நடத்த வேண்டுமென்கிற முறையிலே, அவற்றைக் கண்காணிப்பதற்கும் துரிதப்படுத்துவதற்கும் மத்திய அரசாங்கமும் மாநில அர சாங்கமும் இணைந்து ஒரு ஆலோசனைக் குழுவை, குறிப்பாக தொழில் நுணுக்கக் குழுவைப் போட்டு வேலையை துரிதப் படுத்த தமிழக அரசு மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்துமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா.சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது அப்போர்ப்பட்ட நோக்கத்தில் தான். வடக்கே வீணாகிக் கொண்டிருக்கிற தண்ணீரை, வறட்சியான இந்தப் பகுதிகளுக்கு திருப்பி விடு வதற்காகத்தான் தேசிய அளவில் ஒரு மாஸ்டர் பிளான் என்று சொல்வார்களே அந்தத் திட்டத்தைத் தயாரித்துஅதைக் கடைப்பிடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கத்தான் இந்த முயற்சி எடுக்கப்படுகிறது. அதனை தயாரித்துஅமல்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்களை, பிரச்சனைகளைத் தீர்ப்பதகாகத்தான். National water Resources Council என்ற குழு அமைக்கப்பட் டிருக்கிறது. அந்தக் குழுவில் பிரதம அமைச்சர் தலைவராகவும் ஒவ்வொரு மாநில முதலமைச்சரும் உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாநதி, தாமிரபரணி இணைப்பிற்கான திட்டம் ஆய்விலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதற்கிடையிலே பல நதிகள் இருக்கின்றன. அந்த நதிகளும் இந்தத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன், குறிப்பாக வைகை நதி.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் மூலக் கேள்விக்கு பதில் சொல்கிற போது உபரி நீரை தெற்கே கிருஷ்ணா, பெண்ணாறு, காவேரி போன்றவற்றிற்கு திருப்பி நீர்வளத்தை பயன்படுத்துவதைப் பற்றி சொல்லியிருக்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்தச் சந்தேகம் தேவையில்லை. திட்டம் உருவாக்கப்படுமானால் நிச்சயமாக (குறுக்கீடு) வைகையை கடந்துதான் தாமிரபரணி வருகிறது. ஆகவே அந்த வகையிலே வைகையும் சேர்க்கப்படும். ஆனால் இந்தத் திட்டம் எப்போது வருமோ அப்போதுதான் வைகை சேர்க்கப்படும்.

## சத்தியமங்கலம் வட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ள கோம்பு பள்ள திட்டம்

37* வினா எண். 17929—திரு. ஆர். ரங்கசாமி ; மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் வட்டத்தில் பொதுப் பணித்துறையின் மூலம் கோம்பு பள்ளத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு என்ன?

(இ) இதனால் எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இத்திட்டம் தற்போது விரிவான ஆய்விலுள்ளது.

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பு சுமார் ரூ. 112 இலட்சமாகும்.

(இ) இத்திட்டத்தினால் 817 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும்.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் ஆய்வுகள் கடந்த 4, 5 ஆண்டுகளாக நடந்து வருகின்றன. இது எப்போது முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் சில ஆண்டுகளாக ஆய்விலே இருப்பது உண்மைதான். ஆனால் இந்தத் திட்டத்திலே காணப்பட்ட சில தொழில் நுணுக்க குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்காக திட்டமதிப்பீடுகள் தலஅதிகாரிகளுக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளன. மேற்கூறிய குறைபாடுகள் தல அதிகாரிகளால் சரி செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே தல அதிகாரிகளுடைய அறிக்கைக்குப் பிறகு உரிய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத்திட்டம்ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாவது நிலை திட்டத்திலே சேர்க்கப்படவுள்ளது. அதற்குள்ளாக இது எடுக்கப்பட்டு செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆய்வு நிலையில் இருப்பதால் ஆய்வு முடிவுகள் எப்படி வரும் என்று தெரியாமல் இருப்பதால் ஒருக்கால் முடிவுகள் பாதகமாக இருக்குமேயானால் ஆறாவது திட்டத்திலே சேர்க்க முடியாமல் கூட போகும். ஆகவே அப்படிப்பட்ட வாக்குறுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 38.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வினா எண் 38க்கான விடை திருத்தப்பட வேண்டியிருப்பதால் இதை பின்னர் எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க வினா 38 தள்ளிவைக்கப்படுகிறது.

## தமிழ்நாட்டில் தோல் தயாரிப்புக்கான சேவை நிலையங்கள் நிறுவும் திட்டம்

39* வினா எண். 12349 திரு. இரா. தாமரைக்கனி: திரு. பெ. சு. திருவேங்கடம்; மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தோல் தயாரிப்புக்கு சேவை நிலையங்கள் நிறுவும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு நிறுவப்பட இருக்கின்றன?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) மற்றும் (ஆ). வாணியம்பாடி, ராணிப்பேட்டை, பேரணாம்பட்டு, திண்டுக்கல் ஆகிய இடங்களில்தோல் பூர்த்தி செய்யும் சேவை தொழில் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வாணியம்பாடியிலுள்ள சங்கம் இயங்குகிறது. மற்ற மூன்று இடங்களிலுள்ள சங்கங்கள் இயந்திரங்கள் வரப்பெற்றவுடன் செயல்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தலைவர் அவர்களே, வாணியம்பாடி, இராணிப்பேட்டை பேரணாம்பட்டு, திண்டுக்கல் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தோல பூர்த்தி செய்யும் சேவை தொழில் கூட்டுறவு சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு திட்டச் செலவு ஆகியுள்ளது? பாரத வர்த்தக கழகத்தின் தோல் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியுதவி கிடைத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இராணிப்பேட்டையில் இந்தச் சங்கத்தின் மொத்த திட்டச் செலவு ரூபாய் 99.50 லட்சமாகும். பேரணாம்பட்டு சங்கத்தின் மொத்த திட்டச் செலவு ரூ. 94லட்சம். திண்டுக்கல் சங்கத்தின் மொத்த திட்டச் செலவு ரூபாய் 97.80 லட்சமாகும். இந்த ஒவ்வொரு பகுதிக்கும் பாரத வர்த்தக கழகத்தின் மேம்பாட்டு நிதியிலிருந்து தலா 50 லட்சம் ரூபாய் இயந்திரங்கள் மானியமாக வெளி நாட்டிலிருந்து தருவிப்பதற்கு உதவிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் செயல்படும் போது எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு இருக்கும்? அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் தோல் வளர்ச்சி நிறுவனம் செயல்படத் தொடங்கி விட்டதா? இல்லை யென்றால் விரைவில் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நான்கு சங்கங்களும் மொத்தமாகச் செயல்படும்போது, 3500 நபர்களுக்கு குறைந்தபட்சம் வேலை வாய்ப்பு அளிக்க இயலும். தற்போது ஒரு சங்கம் வாணியம் பாடியில் மட்டும் செயல்பட்டு வருகிறது. மற்ற 3 இடங்களில் உள்ள சங்கங்கள் இயந்திரங்கள் வரப்பெற்றவுடன் விரைவில் தொடங்கப்படும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் மட்டும் சேவை சங்கம் நடை பெற்று வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். அதனால் எவ்வளவு பேர் பயன் பெறுகிறார்கள்? சேவை சங்கம் என்பதால் அங்கே பணிபுரிகிறவர்களுக்கு நிரந்தரமாக வேலைவாய்ப்புஅளிக்கப்படுகிறதா? அங்கே கூட்டுறவு சங்கம் போன்ற அமைப்பில் தொழில் நடத்தப்படுகிறதா? அல்லது தனியார்களைப்போல் தொழில் நடத்தப்படுகிறதா? ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குப் பின்னாலே அங்கே பணி புரிகிறவர்கள் வெளியே அனுப்பப்படுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியிலுள்ள சேவை சங்கம் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் என்ற அடிப்படையில் நடை பெற்று வருகிறது. அங்கே 36 நபர்களுக்கு முழு நேர வேலை அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ந. குலசேகரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் இயங்குகிற சேவை சங்கம் கூட்டுறவு அமைப்பின்கீழ் இயங்கி வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை தமிழ் தோல்வளர்ச்சி நிறுவனத்தின்கீழ் கொண்டுவர அரசு முன்வருமா

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் இல்லை.

**திரு. ஜி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டில் அமைக்கப்படவிருக்கிற சேவை சங்கத்திற்கு இயந்திரங்கள் விரைவில் வரவழைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? ஏனெனில் அதற்கான கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. அங்கே வேலைக்கு ஆட்கள் எடுக்கிற நேரத்தில், டெக்னிகல் ஸ்டாப் தவிர மற்ற பதவிகளுக்கு உள்ளூர் ஆட்களை எடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து இயந்திரங்களும் வரப்பெற்றவுடன் அச்சங்கம் விரைவில் செயல்பட ஆயத்தமாக இருக்கிறது. ... எடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்ணத்தோல் சேவை கூட்டுறவு சங்கம் திண்டுக்கல்லில் ஆரம்பிப்பதற்காக இயந்திரங்கள் வந்து நீண்ட காலம் ஆகியும் இன்னும் அது இயங்குவதில் தாமதம் ஆகிறது. அதற்கான காரணம் என்ன? இப்போது தோலில் கலர் ஏற்றுவதுதான் முக்கியமான பணியாக இருக்கிறது. இப்போது வாணியம்பாடியில் இயங்கும் அந்த சேவை சங்கம் எந்த அளவிற்கு இலாபகரமாக செயல்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் ஆரம்பிப்பதற்குத் தேவையான இயந்திரங்கள் இன்னும் சில வர வேண்டியிருக்கிறது. அவை வரப்பெற்றவுடன் விரைவில் துவங்கப்படும்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரியான சேவை சங்கம் திருச்சி மாவட்டம் செம்பட்டியில் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி சேவை கூட்டுறவு சங்கம் சிறு உற்பத்தியாளர்களின் தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களுடைய லாப நஷ்ட அடிப்படை என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியிலுள்ள தோல் உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சேவை சங்கம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. 31-3-1983 அன்றைய நிலவரப்படி ரூ. 38 லட்சம் ரூபாய் நிகர லாபத்தில் இயங்கி வருகிறது.

டாக்டர் கே. சௌரிராஜன்: தலைவர் அவர்களே, தோல் தயாரிப்பு சேவை கூட்டுறவுச் சங்கங்கள் என்கிறபோது, சிறு உற்பத்தியாளர்கள் தோல் தயாரிக்கும் போது, வெளியாகும் கழிவுநீர் பாலாற்றில் கலந்து, அந்தப் பாலாறு விஷ ஆறாக மாறிக்கொண்டிருக்கிறது என்று நாள் தோறும் பத்திரிகைகளில் கட்டுரை வந்துகொண்டிருக்கிறது. They ar notable to dispose it of properly. The cost of treatment of the plant is so prohibitive that the small producers are not able to do it.

Mr. SPEAKER: This is not a question connected with pollution

டாக்டர் கே. சௌரிராஜன்: ஆகவே தோல் தயாரிப்பாளர்களுக்கு உதவி செய்கின்ற வகையில், இந்த மிஷனரி காஸ்ட் அதிகமாக இருப்பதால், அரசாங்கமே தாமாக முன்வந்து டிஸ்போசல் ஆஃப் எப்ளுயன்ஸ் செய்ய ஏதாவது திட்டம் இருக்கிறதா? பொல்யூஷன் கன்ட்ரோல் டிபார்ட்மெண்டிலிருந்தாவது இந்த உதவியைச் செய்துகொடுத்து, சிறு உற்பத்தியாளர்களுக்கு உதவி செய்து கொடுக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

## தமிழ்நாட்டில் முசுக்கொட்டை செடி பயிரிடப்பட்டுள்ள நிலத்தின் பரப்பளவு

*40 வினாஎண் 18037—திரு. த. வேணுகோபால் மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பட்டு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பட்டுசெடி நடவு செய்துள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தமிழ்நாட்டில் 55042 ஏக்கர் பரப்பளவில் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்பட்டுள்ளது.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, எந்த எந்த மாவட்டத்தில் முசுக்கொட்டைச்செடி வளர்ப்புத் திட்டம் செயல்படுகிறது? அதற்காக ஏதாவது ஊக்கத் தொகை அல்லது உதவித் தொகை அரசால் அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே, எந்த எந்த மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பட்டியல் நீளமாக இருப்பதால் அந்தப் பட்டியல் பின்னர் அவையில் வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு உற்பத்தி அதிகரித்துள்ளது? இத்திட்டத்தினால் ஏற்றுமதி செய்யும் அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா? இதற்காக அரசு ஏதாவது உதவி அளித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே, 1983-84-ல் மேலும் 8,000 ஏக்கரில் முசுக்கொட்டைச் செடியை வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதிதாக முசுக்கொட்டைச் செடியை வளர்க்க முன்வரும் விவசாயிகளுக்கு விதைக் குச்சி வழங்க மானியம், 4,800 விவசாயிகளுக்கு 3 மாதங்களுக்கு பயிற்சி அளிக்கவும் பயிற்சி காலத்தில் மாதம் 150 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்க மானியம், தளவாட சாமான்கள் வழங்க மானியம், 2,400 விவசாயிகளுக்கு பட்டுப்



புழு வளர்ப்புக் கூடம் கட்ட மானியம் ஆகியவைகளுக்காக 81.80 இலட்சம் ரூபாய் 1983–84 ஆம் ஆண்டில் 'பகுதி இரண்டு' திட்டத்தின்கீழ் ஒதுக்கிட அரசு உத்தேசித்துள்ளது.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, இந்த பட்டு வளர்ப்புத் தொழில் சிறு விவசாயிகளுக்கு இலாபகரமாக இருக்கிறது என்று கருதப்படுவதால் அதை ஊக்கப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா? உற்பத்தியாளர்களுக்கு போதுமான அளவுக்கு கூடுதல் வழங்கப்பட வேண்டும். மேலும் உற்பத்தியாளர்களுக்கு வடாற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடியில் பணம் வழங்குகிறார்கள். அவர்கள் பணம் வழங்க காலதாமதம் ஏற்படுகிறது. பணம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படாமல் இருக்க, 'பர்ச்சஸ் சென்டரில்' உடனடியாக பணம் வழங்க வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுமா? இத்தொழிலை ஊக்குவிக்க என்ன என்ன திட்டங்களை வைத்திருக்கிறார்கள்? உற்பத்திப் பொருள்களை இன்றைக்கு மைசூர் போன்ற பிற மாநிலங்களுக்கு எடுத்துச்செல்லுகின்ற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் இங்கேயே அவற்றைப் பயன்படுத்த வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும். தற்போது மைசூருக்கு செல்லாமல் தமிழ்நாட்டிலேயே அவற்றைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### அடை மழையினால் ஏற்பட்டுள்ள சேதம் குறித்து வெள்ளை அறிக்கை அளித்தல்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கடந்த மாதம் தமிழ்நாட்டில் பெய்த மழையின் காரணமாக தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. உயிர் இழப்பு ஏற்பட்டிருக்கிறது; ஆடுமாடுகள் இறந்திருக்கின்றன; வீடுகள் இடிந்துள்ளன. நிவாரணப் பணிகள் சரியாக நடைபெறவில்லை. ஆகவே என்ன சேதம் ஏற்பட்டது, அதற்கு என்ன செய்யப்படுகிறது என்பது குறித்து அரசு தரப்பில் ஒரு வெள்ளை அறிக்கை வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு நான்கு நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்த விவாதத்தில் இதுபற்றி தெளிவாகப் பேசலாம்.

(முற்பகல் 10.10)

**திரு. செ. இராமலிங்கம்** : பேரவைத் தலைவரவர்களே, சென்ற மாதம் பெய்த மழை மட்டுமல்ல. கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழையின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் சம்பா பயிர் பெரிதும் பாதிக்கப்பட்டு, விவசாயத் தொழிலாளர்களும் நில உடைமையாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஒரு அசாதாரண நிலை (குறுக்கீடு).

**திரு. ந. சிவஞானம்** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு மன்ற உறுப்பினர் சொன்னது போல் தஞ்சை மாவட்டத்திலே மிகக் கடுமையாக, எள், உளுந்து, கடலை, நெல் போன்ற பயிர்கள் எவ்வளவோ நாசமாகியுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல, இது முக்கியமான பிரச்சினை.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி கேட்டார்கள். அதையே மாற்றி கேட்டால் ஒரே சப்ஜெக்ட் தானே?

**திரு. துரைமுருகன்** : எல்லா மாவட்டங்களுக்கும் சேர்த்து ஒரு அறிக்கை கொடுத்தால் போதும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. அழகர்சாமி பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய ஒரு வெள்ளை அறிக்கை வைக்கவேண்டும் என்று சொல்கிறார்கள்.

**திரு. ரா. உமாநாத்**: தலைவரவர்களே, இப்போது பெய்த மழை அல்ல, மற்றும் 9,000 ஏக்கர் 'லாஸ்' ஆகியிருக்கிறது. பாய்ண்ட் என்னவென்றால் நமக்கு அரசின் தரப்பிலே ஒரு அறிக்கை வைக்கவேண்டும். டிஸ்கஷனிலே, கவர்னர் அட்ரெசிலே மொத்த தொகை 'ஸ்பெண்ட்' பண்ணியதைத்தான் சொல்லி இருக்கிறார்கள். இப்போது ஏற்பட்டு இருக்கக் கூடிய நஷ்டம் சம்பந்தமாக ஏற்கனவே செலவு செய்த விவரங்கள், என்னென்ன என்பதைப் பற்றி அறிக்கையிலே இல்லை. அந்த விவரங்கள் இல்லையென்றால், 'டிஸ்கஷன்' பயன்படாது. எனவே அந்த விவரங்கள் பற்றிய அறிக்கையை அளிக்கவேண்டும். இப்போது 9,000 ஏக்கர் தண்ணீரில் மூழ்கி இருப்பதால் அதைப்பற்றியும் சேர்த்து, ஒரு 'டீடெய்ல்ட்' ஸ்டேட்மெண்டு, டிஸ்கஷனுக்கு முன்னால் கொடுப்பது நல்லது.

**திரு. துரைமுருகன்** : மாண்புமிகு தலைவரவர்களே, திரு. உமாநாத் அவர்கள் தெரிவித்த கருத்தையொட்டி, தஞ்சை மாவட்டம் மட்டுமல்ல; வட ஆர்க் ாடு மற்றும் இதர மாவட்டங்களிலும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. எனவே தமிழ்நாடு அரசு சார்பிலே ஒரு அறிக்கை வைக்கப்படும்பொழுது எந்தெந்த



மாவட்டங்களில், எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிய விவரங்கள் வைத்தால், அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வைப்பதற்கான வாய்ப்பு வகை இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. செ. சிவசாமி** : பேரவைத் தலைவரவர்களே, இது வரையில் நஷ்டங்களைப்பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இராமநாதபுரம் பகுதியிலே, மதுரையிலிருந்து இராமநாதபுரம் வரைக்கும், கிட்டத்தட்ட 100 மைல்களுக்குள் உள்ள கண்மாய்கள் அனைத்தும் தண்ணீர் இல்லாமல் இருக்கின்றன. இத்தனை மழை பெய்தும் இன்னும் அந்தப் பகுதி வறட்சியாகத்தான் இருக்கிறது. அந்தக் கண்மாய்களில் தண்ணீர் இல்லை. மழை இல்லாத காரணத்தால், பயிர்கள் வாடிக்கொண்டிருக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்காக என்ன நிலை இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்போது வருவாய்த்துறை அமைச்சரவர்கள் பதில் சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : பேரவைத் தலைவரவர்களே, இதற்கு முன்னால் பெய்த கொடு மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எல்லாம் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றியும், அதைப் பற்றி எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, அதற்கு வேண்டிய அறிக்கை ஒன்று மத்தியப் பேரரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, மழை விட்ட பிறகு கூட, 4,5 நாட்களாக பல மாவட்டங்களில் மழை பெய்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி என்ன சேதம், எவ்வளவு சேதம், நெல், கடலை எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றியும் அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு தினங்களில் அந்த அறிக்கை இந்த அவையில் வைக்கப்படும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் எடுத்து தெரிவித்தற்கு இணங்க, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற நிலைமைகளை எல்லாம் விளக்கி, அதைப் பொறுத்து இதுவரை அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளையும், அதைப் பொறுத்து மத்திய அரசுக்கு இந்த அரசின் சார்பாக எழுதப்பட்டிருக்கின்ற தன்மைகளையும் எடுத்து விளக்கியிருக்கிறார்கள். பொது விவாதத்திலே கலந்து கொள்ளுகின்ற உறுப்பினர்கள் அந்த விவரங்களையும் கருத்துக்களையும் குறிப்பிடுவதற்கு முன்வரவேண்டும். இதற்கு என்று தனியாக நாள் ஒதுக்குவது என்று ஆரம்பித்தால் அதற்கு பல சங்கடங்கள் வரும். இதை இரண்டு நாட்களிலே வைக்கலாம்

என்று சொன்னார்கள். அதற்கு பிறகு கூடவாய்ப்பு உள்ளவர்கள் விவாதிக்கலாம். பின்னாலே நிதி நிலை மீதான பொது விவாதம் வருகின்றபோதும், விடப்பட்டவர்கள் பேசுவதற்கு வாய்ப்பைப் பெறும்போது, அப்போதும் பேசலாம். ஆகவே இதற்கு என்று தனியாக இரண்டு நாள் ஒதுக்கவேண்டும் என்று இல்லை. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இதைப் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசி முடிவு எடுக்கலாம்.

## 3. அறிவிப்புகள்.

### (அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை — உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவைக்கு சில அறிவிப்புகள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவையில் (செனட்) இச்சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த திருவாளர்கள் செஞ்சி ந. இராமச்சந்திரன், ஏ. சின்னதுரை, கே. எம். தங்கமணி ஆகியோரின் பதவிக் காலம் 1983 டிசம்பர் மாதம் 5-ஆம் தேதியுடன் முடிவடைந்து விட்டதால் அப்பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாட்களை 17-2-1984 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாட்கள் 20-2-84 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 21-2-84 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்றுக்கு மேற்படுமாயின் 22-2-1984 புதன்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### (ஆ) சென்னை பல்கலைக் கழகப் பேரவை — உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆட்சிக் குழுவில் (செனட்) இச்சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த திருவாளர்கள்



துரைமுருகன், சி. பழனிமுத்து, ஏ. சி. சண்முகம், எஸ். ஜகத்ரட்சகன், கே. பாலசுப்பிரமணியன், டாக்டர் கே. பி. இராமலிங்கம் ஆகியோரின் பதவிக் காலம் 1984 பிப்ரவரி மாதம் 5-ம் தேதியன்று முடிவடைந்துவிட்டதால் அப்பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து அறுவரை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 17-2-1984 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிட மிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 20-2-1984 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 21-2-1984 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஆறுக்கு மேற்படுமாயின் 22-2-1984 புதன்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### (இ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள் விதி 1-ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இந்தப் பேரவையின் எட்டாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (பேனல் ஆஃப் சேர்மென்) நான் நியமிக்கிறேன்.

1. திரு. வே. இரா. ஜெயராமன்.
2. டாக்டர் கே. சமரசம்.
3. டாக்டர் கே. சௌரிராஜன்.
4. திரு. சு. பாலன்.
5. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்.

4. அரசினர் தீர்மானம்.

வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக குழு—உறுப்பினர் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''இந்த அவையின் உறுப்பினர் திரு கே. குப்புசாமி எம்.எல்.ஏ. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாக குழுவில் வகித்து வந்த பதவியின் காலம் 30-1-1984 தேதியன்று முடிவடைவதால், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக சட்டம் 1971, பிரிவு 18-ன் கீழ் உள்ள உட்பிரிவு (2) இல் அடங்கிய 'ஏனைய இரண்டாம் நிலை உறுப்பினர்கள்,' என்ற தலைப்பின் கீழ் வரும் h) உட்பிரிவின் கீழ் இந்த அவை, அந்த பல்கலைக் கழக நிர்வாக குழுவுக்கு மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் குறிப்பிட்ட நாளன்று இந்த அவையின் உறுப்பினர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

(முற்பகல் 10-20)

3. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஈ) வேளாண்மை பல்கலைக் கழக நிர்வாகக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்தை அவை ஏற்பளித்ததற்கு இணங்க வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரை தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத்தாள்களை 17-2-1984 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 20-2-1984 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும் விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 21-2-1984 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பெற வேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 22—2—1984 புதன்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.



5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்

திரு. வேடசந்தூர் வி பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1984-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13—ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்.''

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

*திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பினை அளித்தமைக்கு முதற்கண் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த மாநிலத்தின் நலத்தை எண்ணிப் பார்த்து, இந்த மாநிலத்தின் பல்வேறு துறைகளிலும் இத்தனை ஆண்டுகளாக மற்றைய ஆட்சியாளர்கள் தொட்டுப் பார்க்காத, எண்ணிப்பார்க்காத இடங்களையெல்லாம் தொட்டுப் பார்த்து, எண்ணிப் பார்த்து அவைகளில் ஏற்படுகின்ற பிரச்னைகளை தீர்க்கின்ற வகையில் சீர்திருத்தம் செய்யும் திட்டங்களை இந்த கவர்னர் உரையிலே, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்ற பல திட்டங்களை அறிவிக்கின்ற வகையில் உள்ளது. இந்த மாநிலத்தை மேம்படுத்தும் வகையில், இந்த மாநிலத்தினுடைய நலத்தைக் கருத்திலே கொண்டு—அறிஞர் பிளாட்டோ அவர்கள் ''ஞானி ஒருவர் இந்த நாட்டை ஆள வேண்டும்'' என்று கூறியிருப்பதைப் போல—இந்த சமுதாயத்திலே இருக்கிற ஒடுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் வாழவேண்டும், துன்பங்களைப் பொறுத்துக் கொண்டிருப்பவர்களை வாழ வைக்க வேண்டும் என்று, தங்களுடைய வாழ்க்கைக்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாமல் இருப்பவர்கள் வாழ வேண்டும் என்று, கடந்த காலத்திலே அரசு அறிவித்ததைப் போல, தமிழகத்திலே உள்ள 70 இலட்சம் குழந்தைகளுக்கு—''தாய் வயிற்று சிறையுடைத்து தரைமீது கண் மலர்ந்த காவியத்துப் பூந்தளிர்கள்; பத்து மாத சோதனையில் பக்குவமாய் வெற்றி பெற்று சுதந்திரப் பூப் பறிக்கும் சுந்தரத் திருவிளக்குகள்''

''நாளைய கனவுகளின் இன்றைய நிஜங்கள்
இன்றைய நிஜங்களின் நாளைய நிருபணங்கள்
அந்த மலர்களின் ஞானமும் தீட்சண்யமுமே
வருங்காலச் சமுதாயத்தின் கனமான அஸ்தி
வாரங்கள்''

121—152 ம் பக்கங்களில் II-வது இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

[வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1983 பிப்ரவரி 15

என்றறிந்து அந்த மலர்கள் வாடக்கூடாது; அந்த மலர்களை வதங்கவிடக் கூடாது. அந்த மலர்கள் பட்டுப் போய்விடக் கூடாது அம்மலர்கள் பட்டுப்போய்விட்டால் இந்த சமுதாயத்தின் எதிர்கால சுபிட்சங்கள் பள்ளத்தாக்கில் விழுந்து தற்கொலை செய்ய நாள் பார்க்கும்'' என்னும் சமுதாயத்தின்எதிர்கால அபாயத்தை உணர்ந்து, அதை மாற்ற அதனால் அந்தப் பிஞ்சுக் குழந்தைகள் பட்டினி கிடக்காத புனித பூமியை இந்திய துணை கண்டத்திலேயே தமிழகத்தில்தான் உருவாக்க வேண்டும் என்று, கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்டு பட்டினி கிடந்த 70 லட்சம் ஏழைக் குழந்தைகளுக்கு சரித்திரப் புகழ் பெற்ற சத்துணவுத் திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். கோரிக்கையற்றுக் கிடந்த அந்த 70 இலட்சம் குழந்தைகளின் வயிற்றை எண்ணிப் பார்க்கும் புரட்சித் தலைவரின் ஞானம் திட்டமாக மலர்ந்தது.

அதேபோன்று குறை சொல்ல முடியாத, தங்கள் உரிமைக்கு குரல் கொடுக்கதெரியா ஊமைகளாக கிராமப் புறங்களில் இருப்பவர்களுக்கு, அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவேண்டும் என்று இந்த அரசு பாடுபடுகிறது. நாடு சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகள் ஆகியும்கூட, கிராமப் புறங்களின் அடிப்படைத்தேவைகள் எதுவும்பூர்த்தியாகாமலேயே, அவர்கள் கவனிக்கப்படாமலேயே இருந்த சூழ்நிலையை மாற்றி, கிராமங்களிலே இருக்கின்ற, எதுவும் குறை சொல்லத் தெரியாமல் ஊமைகளாக இருக்கின்ற மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தாக வேண்டும் என்று கடந்த 3 ஆண்டு காலமாக, தன்னிறைவு திட்டம் மூலம் 270 கோடி ரூபாயை இந்த அரசு அவர்களுக்காகச்செலவு செய்து வருகிறது. இது புறக்கணிப்பட்ட கிராமப்புற மக்களின் நலம் பற்றி எண்ணிப்பார்த்த புரட்சித் தலைவரின் ஞானத்தில் பூத்த திட்டம்.

அதைப்போலவே சமுதாயத்திலே உள்ள பல்வேறு துறைகளிலும் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது. கல்வித் துறையில், கடந்த ஆண்டு அறிவித்ததைப் போல, இந்த ஆண்டும், தொழிற் கல்வி பயிற்சி திட்டத்தை அரசு அறிவித்திருக்கிறது. ஏனென்றால், இந்த நாட்டு கல்விமுறை வெறும் ஏட்டுக் கல்வியாக இருக்கின்றது. அந்தக் கல்வியை படித்துவிட்டு பட்டம் பெற்று வெளியிலே வருகின்றவர்களுக்கு, வாழ்க்கையிலே எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. அவர்கள் விலங்கிடப்பட்டவர்களாக சமுதாயத்தில் தெரிகிறார்கள். ஊனமுற்றவர்களாக சமுதாயத்தில் தெரிகிறார்கள் என்று சொன்னவர்கள். ஏராளமான பேர்கள். அதைப்பற்றி ஆராய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட்ட போது, அந்தக் குழுவினுடைய பேரறிஞரே சொன்னார். ஈஸ்வரராய் பாடில் என்கிறவர் மிகத் தெளிவாகச் சொன்னார். இந்த நாட்டுக் கல்வி, இந்த நாட்டு மாணவர்களை முடமாக்குவது மட்டுமல்ல, இந்த சமுதாயத்தை முடமாக்குகிறது. குறிப்பாக ஏழை எளியவர்களுக்கு பயனுள்ள கல்வியாக இல்லை



1984 பிப்ரவரி 15] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

என்று பல்வேறு தரப்பினர்களும் சொன்னாலும்கூட, ஆரம்பக் கல்வி பற்றி ஆய்வதற்காக நியமிக்கப்பட்ட ஈஸ்வரராய் பாடில் அவர்கள் The present educational system, we are aware, is urban oriented, bookish in outlook and almost entirely divorced from manual activity. In terms of opportunity this has proved discriminatory against the poor and weaker sections of society. We therefore feel that the principles of basic education as evolved by Mahatma Gandhi and accepted in the Kothari Commission Report with the stress on work education need to find a central place in the educational system என்று, இந்த நாட்டின் கல்வி எத்தனை அளவுக்கு சாதாரணமானவர்களையும் ஏழை—எளியவர்களையும் புத்தக கைதிகளாக இருந்து, படித்து பட்டம் பெற்றவர்களை சமுதாயத்தில் முடமானவர்களாக—இந்தச் சமுதாயத்தில் வாழ முடியாதவர்களாக, மாணவர்களை அனுப்புகிறது என்பதைப் பல்வேறு அரசியல் கட்சிகள் மட்டுமல்லாமல் கல்வி துறை அறிஞர்கள் சொன்னாலும்கூட துணிந்து இந்தக் கல்வித் திட்டத்தை மாற்றுவதற்கு—அங்கே தான் நான் இதற்கு முன்பே குறிப்பிட்டேனே, ஒரு ஞானியினுடைய ஆட்சி இந்த தமிழ் நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது என்று—70 லட்சம் குழந்தைகளைப்பற்றி எண்ணிப்பார்க்கிற ஞானம், அதேபோல இத்தனை ஆண்டுகாலமாக புறக்கணிக்கப்பட்டிருந்த கிராமப் பகுதிகளை 3 ஆண்டுகளிலே 270 கோடி ரூபாய் செலவழித்து, அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற, ஞானியாக புரட்சித் தலைவரவர்கள் இருக்கிறார்கள். அதேபோல் இத்தனை ஆண்டுகாலமாக இந்த நாட்டிலே இருந்த கல்வியால் பயனில்லை என்று பல பேர் பேசினாலும் அதைத் தூக்கியெறிந்து விட்டு, புதிய கல்வித் திட்டத்தை இந்திய துணைக் கண்டத்திற்கே வழிகாட்டுகின்ற வகையில், இந்த மாநிலத்திலே கொண்டுவர மாணவர்களின் எதிர் காலத்தை எண்ணிப்பார்க்கிற ஞானியாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதுவரை நிறைவேற்றப்பட்ட திட்டங்களிலே, அறிவிக்கப் பட்ட திட்டங்களிலே, சத்துணவுத் திட்டம் என்றாலும், தன்னிறைவுத் திட்டமென்றாலும், இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற, மற்றைய மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்ற மாநிலமாக புரட்சித் தலைவர் எப்படி இந்த மாநிலத்தை வழி நடத்திச் சென்றார்களோ அதேபோல் கல்வித் துறையிலேயும் தொழிற் கல்வியைப் புகுத்துவதற்காக முன்னோடியாக இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற நட்சத்திரமாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மற்றைய மாநிலங்களுக்கு வழி காட்டுகின்ற வகையில் துணிந்து அந்த நடவடிக்கையிலே இறங்கி இருக்கிறது என்பதை ஆளுநர் உரையின் மூலம் புரட்சித் தலைவர் அரசு அறிவித்திருக்கிறது என்பதால் நான் மனமார, உளமார ஆளுநர் உரையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் கடந்த ஆண்டுகளிலே நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளிலே சரித்திர சாதனைகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு செயல்படுத்தியிருக்கிறது. இலங்கைத் தமிழர்

பிரச்சினையிலிருந்து வறட்சி, வெள்ளம் என்றாலும் கடந்த ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, மிகச் சிறந்த முறையிலே இந்த அரசு பணியாற்றியிருக்கிறது. இலங்கை—வாழ் தமிழர்கள் 30,35 ஆண்டுகாலமாக அந்த நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து 1948-ஆம் ஆண்டிலிருந்து பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. வளமான தமிழன், வரலாற்று சிறப்பு மிக்க தமிழன், பரணிபாடி தரணியாண்ட தமிழன், அந்த மண்ணை வளமாக்கிய தமிழன், 1948-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து அடிபடுகிறான் என்றாலும்கூட, இன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசினுடைய நடவடிக்கையால் தான் 1948-ஆம் ஆண்டிலிருந்து அடிபட்ட அந்த இலங்கைத் தமிழன் நமக்கு விடிவு கிடைக்கும், நமக்கு நிரந்தரமான முடிவு கிடைக்கும் என்று அச்சமில்லாமல் ஒரு நம்பிக்கையுடன் இலங்கை மண்ணிலே வாழக்கூடிய சூழ்நிலையை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக ஒரு பக்குவமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. கடந்த ஆண்டுகளிலே அறிஞர் அண்ணா அவர்கள் என்ன விரும்பினார்களோ, எப்படி இந்தப் பிரச்சினையை அணுகவேண்டுமென்று விரும்பினார்களோ, அதில் இம்மியளவும் பிசகாமல், அணுவளவும் அகலாமல், மாண்புமிகு புரட்சித் தலைவர் செயல்படுத்தியிருக்கிறார்கள். இலங்கை பிரச்சினைபற்றி அறிஞர் அண்ணா அவர்கள் எப்படி அந்த பிரச்சினையை அணுகவேண்டும், எப்படி எதிர்க்கட்சிகளை அழைத்து பேசி அணுகவேண்டுமென்று சொன்னார்களோ, எப்படி உள்ளக்குமுறலை எரிமலையாக நாடாளுமன்றத்தினுடைய மாநிலங்கள் அவையிலே தெரிவித்தார்களோ, அவைகளை நிறைவேற்றுகின்ற வகையிலே, 1964-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை அறிஞர் அண்ணா அவர்கள் எதிர்த்தார்கள், தமிழர்கள் அகதிகளாக இருக்கக்கூடாது. வாழ பிறந்தவன் அவன், அவன் உரிமையை அவன் அனுபவிக்க வேண்டும். அதற்கு நாம் ஆலோசனை கூறவேண்டுமென்று சொன்னார்கள் எதிர்க்கட்சிகளைக் கலந்து பேசி—இலங்கையிலே உள்ள சிறிய கட்சியாக இருந்தாலும், கம்யூனிஸ்ட் கட்சியைக்கூட கலந்து பேசிவிட்டுத்தான் இலங்கைப் பிரதமர் வருகிறார். ஆனால் தமிழகத்திலே எதிர்க்கட்சிகளைக் கலந்து பேசாமல் இந்திய துணைக் கண்டத்துப் பிரதமர் 1964-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தைப் போட்டுவிட்டார்கள் என்று தன்னுடைய எண்ணக் குமுறலை அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்—அந்தக் கனவுகளையெல்லாம் நனவாக்குகிற வகையில் அந்த ஒப்பந்தம் தமிழர்களுக்கு புறம்பானது, தமிழர்களுக்கு துரோகம் செய்கிற ஒப்பந்தம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குரல் கொடுத்தபோது இங்கே ஆண்டுகொண்டிருந்த அரசு அண்ணாவுக்கு பக்கதுணையாக குரல்கொடுக்கவில்லை. இன்று புரட்சித் தலைவர் ஆட்சியில் இருப்பதைப்போல், தமிழகம் பேரறிஞர் பெருமானின் பின்னால் அணிவகுத்து நிற்கத் தவறிவிட்டது அங்கே ஒரு வரலாற்றுத் தவறு நடைபெற்றது. அது 1964-ஆம் ஆண்டு. 1973—74-ஆம் ஆண்டு அதேபோன்று தமிழன் அடிபடுகிறபோது இங்கே ஆண்டு கொண்டிருந்தவர்கள், அது அங்கே இருக்கிற சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என்றார்கள். மாநில அரசு



எதுவுமே செய்யமுடியாது என்று ஆண்டவர்கள் ஒரு வரலாற்றுத் தவறைச் செய்தார்கள். 1983ஆம் ஆண்டுதான் அந்த வரலாற்றுத் தவறுகள் திருத்தப்படுகிற வகையில் மிகச் சிறப்பான நடவடிக்கையாக அறிஞர் அண்ணா அவர்களின் எண்ணக் கனவுகளை நிறைவேற்றுகிற வகையில், மாநிலத்தின் அனைத்து எதிர்க்கட்சிகளையும் அழைத்துச்சென்று இந்தியத் துணைக் கண்டத்து பிரதமரிடம், இது இந்த மண்ணினுடைய ஒட்டு மொத்தமான எண்ண உணர்வு என்று உணர்த்தினார்கள்.

(முற்பகல் 10-30)

அதேபோல் சிறப்பான நடவடிக்கையாக இந்த மாநிலம் அணி திரண்டதன் பயனாக எடுக்கப்பட்ட முடிவின் விளைவாக நியமிக்கப்பட்ட திரு. பார்த்தசாரதி அவர்கள்கூட, எதிர்க்கட்சித் தலைவர்கள் சந்திக்கின்ற சூழ்நிலைகளில்— அண்ணா அவர்கள் என்ன எதிர்பார்த்தார்களோ அதை நிறைவேற்றுகின்ற வகையில் இந்த இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் ஏறத்தாழ 35 ஆண்டுகளாக அவர்களுக்கு விடிவே இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்த சூழ்நிலை மாற்றப்பட்டது. நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அடிபட்டுக் கொண்டிருந்த இலங்கைத் தமிழர்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக தமிழகத்தின் ஒருமித்த குரலாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பாரதப் பிரதமருக்குத் தெரிவித்ததின் அடிப்படையில், இனி நமக்கு ஒரு விடிவு ஏற்படும், ஒரு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்ற வகையில் இந்த அரசு சிறப்பாக செயல்பட்டிருக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஒரு முடிவு காண்கிற வகையில், எங்கே எழுப்பப்பட வேண்டுமோ அங்கே தமிழகத்திலிருந்து இலங்கையிலே வாழ்கிற தமிழர்களுக்கு ஏற்படுகிற இன்னல்களைப்பற்றி ஐ.நா. மன்றத்தினுடைய அவையிலே தமிழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு பண்ருட்டியார் அவர்களை அனுப்பி வைத்து, தமிழகத்தினுடைய உரிமைக் குரலை ஒலிக்கச்செய்து, அண்ணா அவர்களின் கனவை நனவாக்குகிற வகையில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையை இலங்கையிலே வாழுகின்ற லட்சோபலட்சம் தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகத்தின் வேறு நாடுகளிலே வாழுகின்ற தமிழர்கள்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு தமிழர்களின் நலனில் கண்ணும் கருத்துமாக கவனிக்கின்ற அரசாக இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதை மேதகு ஆளுநர் அவர்கள் கடந்த ஆண்டு நிகழ்ச்சியாக இதிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அது உண்மையிலேயே தமிழர்களுடைய வரலாற்றிலேயும், தமிழக வரலாற்றிலேயும் ஒரு சிறந்த நடவடிக்கை என்பதால் நான் அதைப் பாராட்டுகிறேன்.

அதைப்போல நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து இவ்வளவு கடுமையான வறட்சி தொடர்ந்து 3 ஆண்டுகளாக இருந்து வருகின்ற சூழ்நிலையிலே, இந்த புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான் மிகத் தெளிவாக மைய அரசு பணம்

ஒதுக்கும் என்று காத்திருக்க வேண்டுமென்ற சூழ்நிலையில்லாமல், மத்திய அரசு பணம் வந்துதான் அந்தப் பணிகளை தொடங்க வேண்டுமென்ற சூழ்நிலையில்லாமல், தானே முன்வந்து அவசர கால நடவடிக்கையாக, போர்க்கால நடவடிக்கையாக, வறட்சி நிவாரணத்திற்காக 115 கோடி ரூபாயை மாநிலத்திலே செலவு செய்து இருக்கிறது. மைய அரசினுடைய மானியம் 13 கோடி ரூபாய்தான், 31 கோடி ரூபாய் கடன் என்ற சூழ்நிலையிலே முழுத் தொகையை மாநில அரசு, புரட்சித் தலைவர் அரசு ஏற்றுக்கொண்டு பணிகளைத் தொடங்கியிருக்கிறது. கடந்த காலங்களைப் போலல்லாமல் பல்வேறு குற்றச்சாட்டுக்களை மாற்றுக் கட்சியினர் சொன்னாலும்கூட, மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும் சர்வகட்சிக் குழுக்களை அமைக்கின்ற திட்டத்தை புரட்சித் தலைவர் அரசு கொண்டு வந்தது. ஏற்பட்டிருக்கிற சூழ்நிலைகளுக்கு ஏற்ப, வரி வஜா செய்வது, குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றுவது ஆகியவை மட்டுமல்ல, அணாவாரி சான்றிதழ்கள் கொடுக்கிற அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கே கொடுத்தார்கள். கடன் வசூல்களிலே நிர்பந்தம் இல்லாத சூழ்நிலையிலே விவசாயிகளுக்கு சலுகைகள் அளித்தது; பாதிக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் ஏறத்தாழ 55 இலட்சம் பேர்களுக்கு வேட்டி, சேலை கொடுத்தது. எதிர்க்கட்சிகள் குறை சொன்னாலும் கூட, இதற்காக குழுக்கள் அமைக்கப்பட்டு மிகச் சிறப்பாக செயல்பட்டிருக்கின்றது; மாநில அரசு நிவாரணப் பணிகளை மிகச் சிறப்பான முறையில் எதிர்பார்த்த அளவைவிட கூடுதலாக, போர்க்கால நடவடிக்கையாக மேற்கொண்டிருக்கிறது என்று பாராட்டுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. எதிர் கட்சியைச் சேர்ந்தவர்கள் அறிக்கையை அனுப்புவதற்கு கால தாமதம் ஏற்பட்டதை விமர்சித்த அதே சூழ்நிலையில், மைய அரசிலிருந்து வந்த குழுவே மனம் திறந்து பாராட்டியது. புரட்சித் தலைவர் அங்கே அதை அனுப்பிய நேரம்தான் சரியான காலம். அந்த நேரத்திலே அனுப்பிய காரணத்தினால்தான் நாங்கள் தெளிவாக வறட்சியினுடைய பாதிப்பு எவ்வளவு என்று உணரமுடிந்தது என்று சொன்னார்கள். வெள்ளத்தின்போது கூட இங்கே வந்திருந்து பார்வையிட்ட மாண்புமிகு அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள், என்னை ஆயிரக்கணக்கான மக்கள் வந்து பார்த்தார்கள், அவர்கள் என்னிடம் குறை சொல்லவில்லை என்று மனம் திறந்து பாராட்டினார்கள். சமீபத்திலே டெல்லியிலிருந்து வந்த குழு கூட மிகச் சிறப்பான முறையிலே நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். வெள்ள நிவாரணத்தினாலும், வறட்சி நிவாரணத்தினாலும், வெள்ளமும் வறட்சியும் ஏற்பட்டதா என்று மக்களுக்குத் தெரியாத ஒரு சூழ்நிலையை மாண்புமிகு புரட்சித்தலைவர் அரசு செய்துள்ளமைக்கு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்றே, வறட்சி ஏற்பட்டு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. ஓராண்டு அல்ல, ஈராண்டு அல்ல, 1980–ஆம் ஆண்டில் வறட்சி, 1981–ஆம் ஆண்டில் வறட்சி, 1982–ஆம் ஆண்டிலேயும் வறட்சி, 1983–ஆம் ஆண்டிலேயும் வறட்சி என்ற



சூழ்நிலை இருந்தது. இப்படி மாநிலத்தில் கடுமையான வறட்சி தொடர்ந்து மூன்று ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டிருந்த நிலைமை இருந்தது. சாதாரண நிலைமையிலேயே இந்த மாநிலத்திற்கு 58 இலட்சம் டன் அரிசி தேவைப்படும். 58 இலட்சம் டன் அரிசியை இந்த மாநில விவசாயிகள் உற்பத்தி செய்தால்தான், இந்த மாநிலத்தின் உணவு நிலைமையைச் சீராக வைத்திருக்க முடியும், சரியாக வைத்திருக்க முடியும், தேவையானவர்களுக்கு வினியோகிக்க முடியும் என்ற நிலைமை யில், அதில் 50 சதவீதம் கூட இல்லாத சூழ்நிலையில், 28 இலட்சம் டன்தான் உற்பத்தி என்ற சூழ்நிலை இருந்து; 1982 ஜூன் மாதத்திலேயிருந்து 1983 மார்ச் வரையில் 11 மாதங்கள் மைய அரசிலிருந்து மத்தியத் தொகுப்பிலேயிருந்து ஒரு கைப்பிடி அரிசிகூட தமிழகத்திற்கு கிடைக்காத சூழ்நிலை; இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இந்த மாநில அரசு—புரட்சித் தலைவரின் அரசு உணவுப் பிரச்னையைச் சமாளித்திருக்கிறது. தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் ஆண்டு கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் இருக்கும்பொழுது ஐந்து கோடி மக்களையும், வரலாறு காணாத வறட்சி பாதிக்காமல் சமாளித்தார்கள், அந்த வறட்சிக்காலத்தில் உணவுப் பிரச்னையைச் சமாளித்தார்கள். வறட்சிக் காலத்திலேயும் ஏழைகள் பாதிக்கப்படாத அளவிற்கு, விலையேற்றம் ஏற்படாத அளவிற்கு, ஏழைகளுக்கு உணவுப் பண்டங்கள் கிடைக்கவில்லை என்ற நிலைமை ஏற்படாத அளவிற்குப் புரட்சித் தலைவரவர்களின் அரசு செயல்பட்டிருக்கிறது.

இவ்வளவு கடுமையான வறட்சி எற்பட்ட நேரத்தில் எதிர்க் கட்சிகள் என்ன செய்தன? இந்த வறட்சியைத் தேசிய நெருக்கடி என்றுகூடச் சொல்லலாம். இதைச் சமாளிப்பதற்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு தராவிட்டாலும், வறட்சியைச் சமாளித்த விதத்தைப் பாராட்டாவிட்டாலும், அவர்களுக்கு இடையூறாக இருப்பதைப் பார்க்கும்போது, போராட்டம் நடத்துவதைப் பார்க்கும்போது வேதனைக்கு ஆளாகியிருக்கிறோம்.

உலக வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்பொழுது, இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது அரசியல் வாதிகள், அரசியல் ஞானத்தில் தலை சிறந்தவர்கள் தங்களுடைய பிரச்னைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஆளுகின்ற தலைமைக்கு ஆதரவு கொடுத்த காட்சிகளைப் பார்க்கிறோம். இரண்டாவது உலக யுத்தத்தின்பொழுது இங்கிலாந்து நாட்டிலே சர்ச்சில் தலைமை தாங்குகிறார். அப்பொழுது அந்த நாட்டிலுள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் தங்கள் கோரிக்கைகளையும், தங்கள் நடவடிக்கைகளையும், மாநாடுகளையும் போன்ற அத்தனையையும் ஒத்தி வைத்து விட்டு, தேசீய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்று சர்ச்சிலின் பின்னால் அணிவகுத்து ஆதரவு கொடுக்க வேண்டும், நாட்டின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று அவரை ஆதரித்தார்கள்.

(திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்)

1964-ஆம் ஆண்டிலே பாகிஸ்தான் படையெடுத்த பொழுது பேரறிஞர் அண்ணா அவர்கள் தங்கள் இயக்கத்தின் அரசியல் நடவடிக்கைகள் அனைத்தையும் ஒத்தி வைத்துவிட்டு, எந்த விதமான நிபந்தனையுமில்லாமல் மத்திய அரசாங்கத்திற்குத் தங்கள் இயக்கத்தின் ஆதரவை அறிவித்தார்கள்.

1974—ஆம் ஆண்டில் கடும் வறட்சி ஏற்பட்டபொழுது, அன்றைக்கு ஆண்டு கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை விமர்சித்துக்கொண்டிருந்தது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், புரட்சித் தலைவரவர்கள், அப்பொழுது பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உதவ வேண்டும் என்று எண்ணினார்கள். அப்பொழுது அதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவிற்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவிற்குச் செய்து, நிதி வசூலித்து, முடிந்த அளவிற்கு, பாதிக்கப்பட்டவர்களுக்குக் கட்சியின் சார்பில் உதவி செய்தார்கள்.

ஆனால் இன்றைக்கு அந்த நிலை கிடையாது. விலைவாசியைப் பொறுத்தவரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் உண்மைக்குப் புறம்பான வகையில் விஷயங்களைச் சொல்லி வருகிறார்கள். இவ்வாறு துஷ்பிரயோகம் செய்து வருகிறார்கள். நாங்கள் 2 ரூபாய் 20 பைசாவுக்கு அரிசி போட்டோம், ஆனால் இன்று 6 ரூபாய்க்கு அரிசி விற்கிறது என்று சொல்லி வருகிறார்கள். இது உண்மையா? இப்படி உண்மைக்கு மாறான தகவல்களைச் சொல்லி, வறட்சியை அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கிறார்கள்.

பொது விநியோக முறையிலே மத்திய அரசாங்கத்தின் உணவுக் கார்ப்பரேஷன் விலைக்குக் குறைவாக வழங்கும் ஒரே ஒரு மாநிலம் இருக்குமென்றால், அது இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகமாகத்தான் இருக்கும். மத்திய அரசின் உணவுக் கழகத்திடமிருந்து ரூ. 1.88—க்கு வாங்கி ரூ. 1.75-க்குத் தமிழகத்தின் நியாய விலைக் கடைகளின் மூலம் மாநில அரசு சாதாரக அரிசியை வழங்கி வருகிறது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இந்த விலைக்கு அரிசி விற்கப்படவில்லை. தமிழகத்தில்தான் இவ்வாறு விநியோகிக்கப்பட்டது. மேற்கு வங்கத்தில் ரூ. 2.15; கர்நாடகத்தில் ரூ. 1.90, கேரளாவில் ரூ. 2.10; ஆந்திரத்தில் ரூ. 2.00; மகாராஷ்டிரத்தில் ரூ. 2.45: ஒரிசாவில் ரூ. 2.20; மத்தியப் பிரதேசத்தில் ரூ. 2.14; இராஜஸ்தானில் ரூ. 2.06 என்ற நிலையில் வேறு எங்குமே இல்லாத சூழ்நிலையில் தமிழகத்தில் குறைந்த விலைக்கு விநியோகம் செய்யப்பட்டது.

மத்திய அரசு அரிசி கொடுக்கவில்லை என்ற ஒரு இக்கட்டான சூழ்நிலையில் வெளி மார்க்கெட்டில் விலைக்கு வாங்கி—110 கோடி ரூபாய்க்கு வாங்கி, அதனால் ஏற்படும் ரூ. 110 கோடி நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, ஏழை எளிய மக்கள் விலைவாசி உயர்வினால் பாதிக்கப்படக் கூடாது, உணவுப் பண்டங்கள்



(திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்)

கிடைக்கவில்லை என்ற நிலைமை ஏற்பட்டு விடக் கூடாது என்று இந்த ஆட்சியை நடத்துகின்ற புரட்சித் தலைவரவர்கள் காரியங்களை ஆற்றி வருகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் இப்போது 6 ரூபாய்க்கு அரிசி விற்கின்றது என்று புரட்சித் தலைவரைப் பார்த்துச் சொல்கிறார்கள். நாங்கள் இரண்டு ரூபாய்க்கு போட்டோம் என்றும் சொல்கிறார்கள். அப்படி என்றால் தமிழக மக்களுக்கு ஞாபகசக்தியே இல்லை என்ற எண்ணமா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கு? எனவே அவ்வாறு உண்மைக்கு மாறானதை மிகப்பெரிய பிரச்சாரமாக ஊர் எல்லாம் சொல்கிறார்கள். 2 ரூபாய் 20 காசுக்கு அரிசி போட்டோம் என்று சொல்வது உண்மையல்ல. இது 83-ஆம் ஆண்டு: 1974-ஆம் ஆண்டினை மக்கள் மறந்திருப்பார்கள் என்ற தைரியத்தில்தான் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் அவ்வாறு பேசி இருக்கிறார்கள்.

(முற்பகல் 10–40)

1975-ஆம் ஆண்டிலே ஆகஸ்ட் 16, 17 ஆகிய தேதிகளில் சேலத்தில் நடந்த திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிலே திரு. கருணாநிதி பேசிய பேச்சு என்னிடத்திலே இருக்கின்றது. அதில் அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார், அரிசி கிலோ 3 ரூபாய் 50 காசுக்கு விற்றது என்று. அப்போதும் அவர்கள் மேற்கு வங்கத்தைத்தான் ஒப்பிட்டிருக்கிறார்கள் 'நாங்கள் மூன்றரை ரூபாய்க்கு அரிசி போடுகிறோம்; ஆனால் மேற்கு வங்கத்திலே மூன்று ரூபாய் 70 காசுக்கு அரிசி போடுகிறார்கள்; எனவே நாங்கள்தான் ஏழைகளுக்காக அவர்களை விட அதிகமாகப் பாடுபடுகிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அவர்கள் ஆட்சிக் காலத்திலே 2 ரூபாய் 20 காசுக்கு அரிசி போட்டோம் என்று சொல்வது உண்மைக்கு மாறானது. ஏனென்றால் திராவிட முன்னேற்றக் கழகமே அச்சிட்டு வெளியிட்ட புத்தகத்தில் 3 ரூபாய் 50 காசுக்குத்தான் அரிசி விற்றதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பக்கம் 9-லே அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே வறட்சியாலே நாடு பாதிக்கப்பட்டிருக்கின்ற நேரத்திலே அரசுக்கு உதவுவதை விடுத்து அரசுக்கு ஆலோசனைகள் சொல்வதை விடுத்து, இன்று உண்மைக்கு மாறான பிரச்சாரத்தைச் செய்கிறார்கள். மேலும் இப்போது 6 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது என்று அவர்கள் கூறுவது எவ்வளவு பெரிய உண்மைக்கு மாறான செய்தி என்பதையும் அருள் கூர்ந்து சிந்திக்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் செயற்கைப் பஞ்சத்தை ஏற்படுத்தி, விலைவாசியினைக் கூட்டியது. அப்படிக் கூட்டிய சர்க்கார் இந்தியத் துணைக்கண்டத்தில் எந்தக் காலத்திலும் எங்கும் இருந்ததில்லை, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தைத் தவிர. எனவே செயற்கையாக விலைவாசியை ஏற்றியவர்கள் நீங்கள்தான் என்பதை மக்கள் மறந்துவிட்டதாக நீங்கள் நினைத்தாலும், அல்லது அவ்வாறு விலை உயர்வுக்குக் காரணம் நீங்கள்தான்

(திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்)

என்பதை நீங்கள் மறந்தாலும், நான் மறந்தாலும் புள்ளிவிவரப் புத்தகங்கள் எள்ளி நகையாடிக்கொண்டிருக்கின்றன. 1978-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஸ்டேட்டிஸ்டிக்கல் ஹேன்ட் புக்கின் 30-வது பக்கத்திலே விலைவாசிப்புள்ளி '1973—ஆம் ஆண்டு 1192 என்றும் 1974 ஆம் ஆண்டு விலைவாசிப்புள்ளி 2.102 என்றும் உயர்ந்ததாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இப்படி ஒரே ஆண்டிலே ஆயிரம் என்று இருந்த விலைவாசிப் புள்ளியினை 2 ஆயிரம் விலைவாசிப் புள்ளியாக விலைவாசி யினை நூறு சதவீதம் உயர்த்திய அரசு, இந்தியத் துணைக் கண்டத்திலேயே திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒன்றுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அளவுக்கு விலைவாசி அவர்களது ஆட்சிக் காலத்திலே உயர்ந்து இருக்கின்றது என்பதைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, அருமை நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள் அந்த அளவுக்கு விலையேற்றம் செய்ததற்கு எங்கே ஆதாரம் என்பார்கள். நான் அதற்காகத்தான் குறிப்பிடுகிறேன், மக்கள் மறந்தாலும், மக்கள் மறந்திருப்பதாக நீங்கள் நினைத்தாலும், புள்ளி விவரங்கள் பேசுகின்றன; அவை உங்களது ஆட்சியின் அவலட்சணத்தையும், விலைவாசி எப்படி அப்போது கூட்டப்பட்டது என்பதையும், எடுத்துக்காட்டி எள்ளி நகையாடிக்கொண்டிருக்கின்றன.

விலைவாசியினைப் பொறுத்தவரையில், இந்த மாநில அரசு என்னென்ன கடமைகளைச் செய்ய முடியுமோ அத்தனை கடமைகளையும் செய்து பொருட்களை மக்களுக்குக் கிடைக்கச் செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே வறட்சியாலே சாதாரண ஏழை எளியவர்கள் கூட பாதிக்கப்படாத சூழ் நிலையினை இந்த அரசு உருவாக்கி இருக்கின்றது. இந்த சூழ்நிலையில் மதிப்பிற்குரிய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் ஒருபக்கம் விலைவாசிக்குக் காரணம் மத்திய அரசுதான் என்பதைச் சொல்கிறார்கள். அப்படிச் சொல்வதோடு நிற்காமல், மாநில அரசினையும் அவர்கள் விடுவதில்லை. என்ன காரணத்தினால் அவ்வாறு மாநில அரசையும் சேர்த்துச் சொல்கிறார்களோ தெரியவில்லை. அவர்கள்தான் அதனை விளக்கவேண்டும். பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினைப் பொறுத்தவரையில், அவர்கள் இரட்டை வேடம் போடுகிறார்கள். இதை நான் சொல்லவில்லை; இரட்டை வேடம் போடுகிறார்கள் மார்க்ஸிஸ்ட் கம்யூனிட்ஸ் கட்சியினர் என்பதை மேற்கு வங்கத்திலே உள்ள அவர்களுடைய கூட்டணி கட்சியினைச் சேர்ந்தவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கர்நாடகத்தில், ''ஹெக்டே அரசே! விலைவாசியைக் கட்டுப் படுத்து'' என்று போராடுகிறார்கள். மேற்கு வங்கத்திலே மாநில அரசை எதிர்த்துப் போராட வேண்டும். மாநிலத்திலே கள்ளச் சந்தைக்காரர்களை ஒடுக்குகின்ற சட்டத்தைக் கடுமையாக அமுல் நடத்த வேண்டுமென்று போராட வேண்டும் என்றால் அதற்கு மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் அங்கே மறுக்கிறார்கள் என்று அங்கே கூட்டணியில் இருப்பவர்களால்



[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். இப்படி எல்லாம் நான் சொல்லும்போது மேற்கு வங்கத்தைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள் என்று மாண்புமிகு உமாநாத் அவர்கள் போன்றவர்கள் கேட்க மாட்டீர்கள் என்று நம்புகிறோம். (குறுக்கீடு) கடந்தமுறை கேட்டீர்கள், அதனால் சொல்கிறேன். நான் சொன்னாலும் பரவாயில்லை, மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கூட்டாக இருக்கின்றவர்கள், விலைவாசிப் பிரச்னையில் இந்திய துணைக் கண்டத்தில், இரட்டை வேடம் போடுகிறார்கள் கம்யூனிஸ்ட் கட்சியினர் என்று மிகமிகத்தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

I quot from Statesman dated 25.10.83, page 9 column 6:

'CPI - M following double standard'

'Some non CPI–M Leader of th Left Front are puzzled ov r the 'doubl standard' followed by the CPI(M) as a ruling prty a d as an opposition party lsewhere on the issu oj holding th price lin . Th CPI(M) has criticiz d the Hedge Government for not taking eff ctiv m asures to hold the price line but on th same issue it is silent in W st B ngal.'

'Whenever the matter came up at Left Front me tings, th C ntr was mad r sponsibl for the pric rise. The Anti profit ri g Act, according to a L f Front Lead r, is virtually a dead l tt r in th State. L ad rs of the RSP and the Socialist Party had stressed th ne d for starting a mass mov m nt against pric ris . But this had not taken shape. M anwhil , th pric s of food (including thos of ric , potato and oth r vegetables) hav risen sharply over the past fortnight., இங்கே மாநில அரசைக் குறை சொல்கின்ற பொழுது அங்கே மாநில அரசு அதற்குக் காரணம் இல்லையென்று சொன்னால், அது எந்த அடிப்படையில் நியாயம்? இங்கு புரட்சித் தலைவர் அரசு—மாநில அரசு—ஒரு அரசு என்ன செய்ய வேண்டுமோ அதைவிடக் கூடுதலாக வெளி மார்க்கெட்டிலே வாங்கி ரூ. 110 கோடி நட்டத்தை ஏற்றுக் கொண்டு ஏழை, எளியவர்களுக்கு விநியோகித்து வருகிறது. இதைப் பற்றிச் சொல்கிறபொழுது, மாநில சர்க்கார் தவறி யிருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்வதற்கான அருகதை மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி அன்பர்களுக்கு இல்லை. ஏனென்றால் இது ஒரு புதுமை. நாங்கள் மத்திய சர்க்கார் அமைச்சர் இந்த ஆசாங்கத்தைப் பாராட்டியது என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள், பாராட்டாமல் இருப்பார்களா? அவர்கள் பாராட்டைப் பெரிதாக எடுத்துக் கொள்வீர்களா என்று சொல்வார்கள். ஆனால், தோழர் இராமமூர்த்தியைப் போன்றவர்கள் மத்திய சர்க்கார் பாராட்டியிருக்கிறது என்பதைச் சொல்லியிருக்கிறார் கள். 'தீக்கதிர்'-மதுரை பதிப்பு 31-1-1984–தோழர் இராம

[திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்]

மூர்த்தி பேச்சு, ''மேற்கு வங்கம் முழுவதும் மக்கள் வெளி மார்க்கெட்டில் போய் அரிசி வாங்க வேண்டியதில்லை. 22,000 நியாயவிலைக் கடைகள் அங்கே திறம்பட செயல்படுகின்றன. இதனைத் திட்டக் கமிஷனே பாராட்டியிருக்கிறது''. திட்டக் கமிஷன் மேற்கு வங்கத்தை மட்டும் பாராட்டவில்லை. முதலிலே தமிழகத்தைப் பாராட்டிவிட்டுத்தான் மேற்கு வங்கத்தைப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை யாரோ கூறவில்லை. தோழர் இராமமூர்த்தி அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

Th: Hindu dated 9.11.83, page 9 columns 1 and 2:

'On: point emphasised was that th num r of items supplied through fair price shops should be incr ased to mak them viable and the steps taken b Tamil Nadu and West B ngal Gov rnm nts were comm nd d to all other States for adoption., என்று வந்திருக்கிறது. உங்களை பிளானிங் கமிஷனும், அமைச்சர் அவர்களும் பாராட்டியதாலேயே, அங்கே இருக்கிற மக்கள் வெளிச்சந்தையிலே வாங்குவதில்லை, நாங்கள் சொர்க்க பூமியாக வைத்திருக்கிறோம், விலைவாசி ஏற்றம் மேற்கு வங்கத்தில் இல்லை என்று நீங்கள் சொல்வீர்களானால், அதே அமைச்சர்தான், அதே அட்வைசரி கமிட்டிதான், அதே திட்டக் கமிஷன்தான், எங்களைப் பாராட்டிவிட்டுத்தானே உங்களை அடுத்துப் பாராட்டுகிறார்கள். இந்த வாதம் இங்கே எடுபடாதா? இங்கே ஏழைகள் விலைவாசி பிரச்னையால் பாதிக்கப்படாமல் இருக்கிறார்கள் என்பதை ஏன் ஒத்துக்கொள்ள மறுக்கிறீர்கள்.

1982—83 ஆம் ஆண்டில். 'வெஸ்ட் பெங்கால் எக்கனாமிக் ரெவியூ'விலே, நாங்கள் இந்த லெப்ட் ப்ரண்ட் கவர்ன்மென்ட் வந்தபிறகு, நியாய விலைக் கடைகளை அதிகரித்த காரணத்தால், பொது விநியோகத்தைச் சிறப்படையச் செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதே அளவை வைத்து எடை போட்டுப் பார்த்தால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசின் பக்கத்திலே கூட ஜோதி பாசு அரசு நிற்க முடியாது. அதற்கு ஒரு புள்ளிவிவரத்தை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

1981-82 எக்கனாமிக் ரெவியூ—வெஸ்ட் பெங்கால் இஷ்யூ பக்கம் 27; அதிலே கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரத்திலே மிகத்தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நியாய விலைக் கடைகளை அதிகரித்த காரணத்தால்தான் ஏழைகளுக்கு துணி, விலைவாசியைக் கட்டுப்படுத்தியிருக்கிறது மாநில அரசு என்பதை ஒத்துக்கொள்கிறீர்கள் என்றால் அதைவிட கடுமையாக செய்திருக்கிறது புரட்சித் தலைவர் அரசு, அதைப் பாராட்டுவதை விடுத்து, மற்றவர்களோடு சேர்ந்து கயூனிஸ்டுகளும் கைகோர்த்துக்கொண்டு வழிநடைப் பயணம் செய்தால் நாட்டிலே இருக்கிற மக்கள் நகைப்பார்களா, இல்லையா என்பதை அருள்கூர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் இதய தாராசிலே எடைபோட்டு பார்க்க வேண்டுமென்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.



[திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்]

(முற்பகல் 10-50)

அந்தப் புள்ளிவிவரத்தினுடைய அடிப்படையிலே 1976 ஆம் ஆண்டு 17 ஆயிரத்து 549 நியாயவிலைக் கடைகள் மேற்கு வங்கத்திலே இருப்பதாக ஒப்புக் கொள்கிறார்கள். 1977 ஆம் ஆண்டு மார்க்சிஸ்ட் கமயூனிஸ்ட் கட்சி ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறது. 17,549 நியாய விலைக் கடைகளை பொறுப்பிலே ஏற்றுக்கொண்டு பொறுப்பிற்கு வந்தவர்கள், 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் அந்தக் கடைகளை 18,297 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். மாண்புமிகு தலைவர் அவர்களே, 76 ஆம் ஆண்டு பொறுப்பிற்கு வந்தவர்கள் 83 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 18 ஆயிரத்து 2 7 கடைகள் அதாவது 600 நியாய விலை கடைகளை உயர்த்திய ஒரே காரணத்திற்காக, இது மாநில அரசினுடைய சிறப்பான நடவடிக்கை, ஜோதி பாசுவை குறை சொல்வதற்கு இங்கே இருக்கிற அண்ணா திராவிட கழகத்தினருக்கு, கட்சிக் காரர்களுக்கு யோக்கிதை இல்லை என்று சொன்னால், 1977 ஆம் ஆண்டு 9 ஆயிரம் நியாய விலைக் கடைகளை பொறுப்பிலே ஏற்று அட்சிப் பொறுப்பினை தமிழகத்தில் ஏற்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1983 ஆம் ஆண்டிலே 18,009 நியாய விலைகடைகளாக உயர்த்தி இருக்கிறார்கள் என்றால், ஜோதி பாசு அவர்கள் புரட்சித் தலைவரின் முன்னாலே நிற்க முடியுமா என்பதை எண்ணிப்பருங்கள். உங்கள் வாதத்தை வைத்தே சொல்கிறேன். அந்த அடிப்படையிலே முடியுமா என்று பாருங்கள். 1982 ஆம் ஆண்டு புள்ளி விவரத்தின் அடிப்படையில் பார்த்தாலும், 1983 ஆம் ஆண்டு புள்ளி விவரத்தின் அடிப்படையில் பார்த்தாலும் கூட 9½ லட்சம் டன் அரிசியை மேற்கு வங்கத்திலே இருக்கிற சர்க்கார் விநியோகித்து இருக்கிறது. தமிழகத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஏறத்தாழ 9 லட்சம் டன் அரிசியை இதே கடைகள் மூலமாக விநியோகித்துள்ளது. ஜனத்தொகை வித்தியாசத்தைப் பாருங்கள். 1981 ஆம் ஆண்டு சென்சஸ் அடிப்படையில் மேற்கு வங்காளத்தில் 5 கோடியே 45 லட்சம் பேர்கள். தமிழகத்தில் 4 கோடியே 82 பேர்கள். 9 ஆயிரம் நியாயவிலைக் கடைகளை 18 ஆயிரமாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு உயரச் செய்த புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்ட முடியவில்லை. ஆனால் 17,549 லிருந்து ஆறு ஆண்டுகளில் 600 நியாய விலைக் கடைகளை உயர்த்தி இருக்கிறோம் என்று சொன்னால் இது என்ன வேடிக்கை; இது எங்களுடைய சாதனை; ஏழைகளுக்கு நாங்கள் செய்தோம் என்று நீங்கள் சொல்வீர்களானால் அங்கேதான் உங்களை சந்தேகிக்கிறோம். ஏழைகளுக்காக நீங்கள் குரல் கொடுக்க வில்லை. நிதர்சனமான உண்மையை மாற்றிச் சொல்கிறீர்கள் நாட்டு மக்களுக்கு என்பதுதான் எங்களுடைய கருத்து.

அதேபோல தமிழகத்திலே இருக்கிற மத்திய நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் 29; அதற்கு இருக்கிற கிளைகள் 893. நான் இதைப் பண்ணி பண்ணிச் சொல்வதற்கு காரணம் பொது விநியோக முறையை சீரமைத்த காரணத்தால் மேற்கு வங்கத்தை நீங்கள் ஒப்பிட முடியாது என்று நீங்கள் சொல்வதற்காகச்

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

சொல்கிறேன். 29 ஸ்டோர்ஸ் அதற்கு 893 கிளைகள்; மேற்கு வங்கத்திலே 28 ஸ்டோர்ஸ்; அதற்கு 171 கிளைகள்; தமிழகத்திலே 893 கிளைகள் மூலம் சேர்க்கப்பட்டிருக்கிறது பயனடைகிற உறுப்பினர்கள் ஏழு லட்சத்து 27 ஆயிரத்து 148; இவைகளை நான் சொல்லவில்லை மத்திய அரசு அனைத்து மாநிலங்களையும் பற்றி விமர்சனம் செய்கிறபோது வெளியிட்டிருக்கிற புத்தகக் குறிப்பிலே தெரிவித்திருக்கிறார்கள். மேற்கு வங்கத்திலே 28 பெரிய கடைகள்; அதற்கு இருப்பது 121 கிளைகள்; 18 ஆயிரத்து 212 பேர்கள் உறுப்பினர்கள். 1982-83 ஆம் ஆண்டு மத்திய அரசு வெளியிட்டிருக்கிற விமர்சனக் குறிப்பு பக்கம் 49. அந்த ஆண்டிலே தமிழகத்திலே நுகர்வோருக்கு நியாய விலையிலே சலுகை மூலம் வழங்கிய பொருள்களின் மதிப்பு ரூபாய் 143·76 கோடி; மேற்கு வங்கத்திலே 56 கோடி ரூபாய்; இந்தியா முழுவதும் இப்படி நியாய விலைக் கடைகள் மூலம் விற்கப்பட்ட பொருள்கள் மதிப்பில் நான்கில் ஒரு பாகம் 145 கோடி ரூபாய் தமிழகத்திலே கூட்டுறவு அமைப்புகள் மூலமாக விற்கப்பட்டிருக்கிறது.

இன்னொரு வாதம். அந்த மாநிலத்திலே சொல்கிறபோது விலைவாசி குறியீட்டெண் அகில இந்திய சராசரியை விட கம்மியாக வைத்திருக்கிறோம் என்று கம்யூனிஸ்டு சொல்லி இருக்கிறார்கள். அகில இந்தியாவின் சராசரியை விட கம்மியாக வைத்திருக்கிறோம்; ஆகவே இந்த மாநில சர்க்கார் எதற்கும் பொறுப்பில்லை என்றால் நீங்கள் வைத்திருக்கிற விலைவாசி குறியீட்டெண்ணைக் காட்டிலும் குறைவாக மாண்புமிகு புரட்சித் தலைவர் தமிழகத்திலே வைத்திருக்கிறாரே, அதைப் பாராட்ட வேண்டாமா? பாராட்டா விட்டாலும் பரவாயில்லை. வழி நடை பயணம் என்று போவதற்கு எப்படி உங்களுக்கு மனம் இடம் கொடுக்கிறது என்பதை வேதனையோடு கேட்க விரும்புகிறேன்.

அக்ரிகல்சுரல் லேபர் கன்ஸ்யூமர் பிரைஸ் இன்டக்ஸ் என்று ரிசர்வ் பாங்க் கொடுத்து இருக்கும் கணக்குப்படி நான் சுட்டிக் காட்டவிரும்புகிறேன். 198 —81-ல் தமிழகத்தில் விலைவாசி புள்ளி 391. மேற்கு வங்கம் 400.1981—82ல் 432 என்று தமிழகத்தில் இருந்தது. 449 என்று மேற்கு வங்கத்தில் இருந்தது. 1982 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 423 என்று தமிழகத்தில் இருக்க 447 என்று மேற்கு வங்காளத்தில் இருக்கிறது. 1982 ஆகஸ்ட் மாதத்தில் தமிழகத்தில் 427 என்று இருக்க, மேற்கு வங்கத்தில் 497 என்று இருக்கிறது, மூன்றாண்டுக் காலம் தமிழகம் தொடர்ந்து வறட்சியான சூழ்நிலையில் இருந்தபோதிலும், மத்திய அரசு மாநில அரசின் உதவிக்கு வராத நிலையிலும், 11 மாதங்கள் இங்கே அரிசியே கொடுக்க வில்லை என்ற சூழ்நிலையிலும், விலைவாசி புள்ளியை கட்டுப்படுத்தி வைத்து இருக்கிறோம் என்று நிலைமையிருக்கிறபோது அதைப் பாராட்டா விட்டாலும் கூட பரவாயில்லை, மாநில சர்க்கார் தான் பொது வினியோக முறையில் தவறியிருப்பதற்குக் காரணம் என்று சொன்னால், நான் உங்களைக் கேட்கிறேன். அது திராவிட



[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

முன்னேற்றக்கழகமாக இருந்ததாலும்சரி, மார்க்சிட்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி. கடந்த 2,3 ஆண்டுகளாக கடுமையான வறட்சி இருந்தது என்பதை அறிந்தும், புரட்சித் தலைவர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக விலை வாசி கட்டுப்படுத்தப்பட்டு இருந்தது என்று அறிந்திருந்தும், இப்படிப் பேசுகிறீர்கள் என்று சொன்னால், விமர்சனம் செய்கிறீர்கள் என்று சொன்னால். அரசியலில் நீங்கள் இரட்டை வேடம் போட்டு மக்களை ஏமாற்ற முயற்சித்தால், நிச்சயமாக தமிழக மக்கள் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள், எத்தனை ரத்த சமுத்திரம் திரண்டு வந்தாலும் புரட்சித் தலைவரின் சத்தியத்தை சாகடிக்கமுடியாது என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையில் கடந்த 30 ஆண்டுக்காலமாக இருந்து வந்த கோரிக்கையான கட்டிடத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு என்பது அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்த அறிவிப்பின் காரணமாக தொழிலாளர் வர்க்கம் மிகவும் மகிழ்ச்சியடைந்து இருக்கிறது. இத்தகைய தொழிலாளர் நல அறிவிப்பை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்ததற்காக, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும் நன்றியினையும் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்தத் திட்டத்தின்படி, இப்பணியாட்களை வேலைக்கு வைத்திருப்பவர்கள், வேலையின்போது இவர்களின் ஆயுளுக்கும் மற்றும் அங்க இழப்புக்களுக்கும் போதுமான காப்புறுதி வசதி ஏற்படுத்தவேண்டும் என்பது கட்டாயமாக்கப்படும் விதத்தில் சட்டத்திருத்தம் கொண்டு வர இருக்கிறது என்றும் அரசு அறிவித்துள்ளது. இத்திருத்தத்தினால் பயன் பெறாதவர்களுக்கும் அரசு. முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ. 10,000 அளிக்கவும் முடிவு செய்துள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே தொழிலாளர்களுக்கு எப்படியும் இந்த உதவி கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை அறிவித்தது இந்தப் புரட்சித் தலைவர் அரசுதான் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எத்தனையோ தொழில் போராட்டங்கள் நடக்கின்றன, இந்த அரசு கவனிக்கவில்லை, ஆகவே, இந்த அரசு தொழிலாளர் விரோத அரசு என்று வெளிநடப்பு செய்தபோதுகூட சொன்னார்கள். திரு. உமாநாத் அவர்கள் கூட பலமுறை சொல்லியிருக்கிறார்கள். மேற்கு வங்கத்தில் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினால் அங்கே போலீஸ் தலைவைத்துப் படுக்காது. ஆனால் இங்கே நிலைமை என்ன? நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன், இந்தச் சர்க்கார் தான் ஏராளமான தொழிலாளர் நலச் சட்டங்களை இங்கே கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறது. நான் பட்டியல் கொடுக்கத் தயாராக

(திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்)

இருக்கிறேன், புரட்சித் தலைவர் பொறுப்பேற்றபின் கொண்டு வரப்பட்ட தொழிலாளர்கள் நலச் சட்டம் ஏராளம். இந்த மாநிலத்தில் நிறைவேற்றப்பட்ட பல சட்டங்களைக் கடன் வாங்கித் தான் மேற்கு வங்கத்தில் நிறைவேற்றுகிற நிலைமை இருக்கிறது. அந்த அளவிற்கு தொழிலாளர் நலச் சட்டங்களைக் கொண்டு வருவதில் தமிழகம் முன்னோடியாக இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். மேற்கு வங்கத்தில் எவ்வளவு தொழிலாளர் நலச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன என்று பட்டியில் தெரிவிக்க இயலுமா? புரட்சித் தலைவர் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட தொழிலாளர்கள் நலச் சட்டங்களைப் போல் வேறு எங்கும் கொண்டு வரப்படவில்லை என்று நான் பெருமையோடு சொல்லமுடியும்.

1978-79 ஆம் ஆண்டு பாடியில் நடந்த டி.வி.எஸ். தொழிற்சாலை போராட்டத்தில் அங்கேயிருந்த தொழிலாளர்களை அனுப்பிவிட்டு,வெளியே இருந்து தொழிலாளர்களைக் கொண்டு வந்து அங்கே வேலை செய்ய முற்பட்ட நேரத்தில், புரட்சித் தலைவர் அவர்கள் தைரியமாக அறிவித்தார்கள். அதற்குப் போலீஸ் பாதுகாப்புத் தரமுடியாது என்று சொன்னார்கள்.இதை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் மறந்து இருக்க மாட்டார் என்று கருதுகிறேன். அப்போது அவர்கள் மத்திய அரசு போலீசை வைத்துத்தான் அந்தத் தொழிற்சாலையை நடத்தினார்கள். ஆனால் இப்போது மாண்புமிகு உமாநாத் அவர்கள் பேசுகிறார்கள். இந்த அரசு தொழிலாளர் விரோத அரசு என்று. 'தீக்கதிர்' பத்திரிக்கையில் 23-1-84 அன்று செய்தி வந்திருக்கிறது.

(முற்பகல் 11-00)

''எம்.ஜி.ஆர். அரசு தொழிலாளர்களை நசுக்கும் அரசு, தொழிலாளர் நலனுக்கு விரோதமான அரசு ஆனால் ஜோதிபாசு அரசில் இப்படிப்பட்ட பிரச்சினைகளில், தொழிலாளர் சம்பந்தப்பட்டப் பிரச்சனைகளில், அந்தப் பக்கம் போலீஸ் தலைவைத்து படுப்பதே இல்லை என்று கூறியிருக்கிறார்கள்.''

இங்கே பாடி நிறுவனத்தில் பிரச்சனை வந்தபோது, நிர்வாகத்தினர் போலீசை அனுப்பவேண்டும் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். மாநில போலீசை அனுப்ப மாட்டோம் என்று மாண்புமிகு புரட்சித தலைவர் அவர்கள் கூறிவிட்டார்கள். ஆனால் அங்கே மத்திய ரிசர்வ் போலீஸ் அனுப்பப்பட்டது. மேற்கு வங்கத்திலே கோரிக்கை வைத்த தொழிலாளர்களை போலீசை வைத்து அடக்கினார்கள். அந்தப் பக்கப் போலீஸ் தலை வைத்தே படுக்காது என்று சொன்ன மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் அருள்கூர்ந்து இதை நினைத்துப் பார்க்க வேண்டும்.



(திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்)

மேற்கு வங்கத்தில், துறைமுகத்தில் கப்பல்களில் டீ மூட்டை ஏற்றுகின்ற தோழிலாளர்கள் போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் கூலி உயர்வு வேண்டுமென்று கேட்டு போராட்டம் நடத்தவில்லை.கூலியே கொடுக்கவில்லை கூலி கொடுங்கள் என்று கேட்டு, போராட்டம் நடத்தினார்கள்.

டீ மூட்டைத் தூக்குகின்றவர்களுக்கு கூலி கொடுக்கவில்லை என்று 1982டிசம்பர் முதல்1983 ஜனவரி 3-தேதி வரையில் சுமார் ஒன்றேகால் மாதம் போராடுகிறார்கள். அவர்கள் கூலி உயர்வு கேட்டு போராடவில்லை.ஏற்றுமதியாளர்கள் கூலியே கொடுக்கவில்லை என்று போராடுகிறார்கள். தொழிலாளர்கள் பக்கம் போலீஸ் தலைவைத்தே படுக்காது என்று சொன்ன ஜோதிபாசு அப்போது என்ன சொன்னார்? என்ன நடவடிக்கை எடுத்தார்? ஏற்றுமதியாளர்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு தருவோம் நீங்கள் ஏற்றுமதி செய்யுங்கள் உங்களுக்கு எல்லாவித பாதுகாப்பும் இருக்கும் என்று அன்றைக்கு மேற்கு வங்கத்தில் அறிவிக்கப்பட்டது.

I quote from The Statesman, dated 3-1-83. "State to help Tea Exporters." The West Bengal Government informed the tea exporters on Saturday that it would provide all assistance including Police escort, if necessary, for shipment of export tea held up at Calcutta port since December 3 because of the agitation by members of the West Bengal Dock and Port Mazdoor Union. An Official source said the Government's decision was communicated to the exporters through Tea Board. தொழிலாளர் பக்கம் போலீஸ் தலைவைத்தே படுக்காது என்று சொன்னவர்கள் என்ன செய்தார்கள் என்பதை நீங்கள் எண்ணிப்பாருங்கள். எந்தச் சூழ்நிலையிலே அங்கே போலீசை அனுப்புகிறார்கள்? கூலியே கொடுக்கவில்லை என்று சொல்லி போராட்டம் நடத்தியபோது போலீஸ் அனுப்பப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை இங்கே இருக்கிறதா என்பதை சற்று எண்ணிப்பாருங்கள்.

இங்கே அத்தியாவசியப் பணிப் பாதுகாப்புச் சட்டம் ஒன்று ஆய்வுக்குழுவிலே இருக்கும்போது, ''தொழிலாளர் விரோதச் சட்டத்தைத் தடை செய்'' என்று சொல்கிறார்கள். சட்டம் இன்னும் வரவில்லை ஆய்வில் இருக்கிறது. அதற்கும் தடை செய் என்கிறார்கள். மேற்கு வங்கத்திலே கூலியே கொடுக்கவில்லை என்று போராடுகிற தொழிலாளர்களை அடக்க போலீசை அனுப்பிவைக்கிறார்கள். ஆனால் இங்கே தொழிலாளர்களுக்கு விரோதமாக போலீசை அனுப்ப மாட்டோம் என்று சொல்லுகின்ற புரட்சித் தலைவர் அரசைப் பார்த்து இது தொழிலாளர் விரோத அரசு என்று சொன்னால் அதை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? ஏன் இந்த மாறுவேடம்? ஏன் இந்த இரட்டை வேடம் என்று நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களைக் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

இங்கே பொறுக்குக் குழுவின் ஆய்வில்
அத்தியாவசியப் பணிப் பாதுகாப்புச் சட்ட இருக்கும்
'கறுப்புச் சட்டம், தொழிலாளர் விரோத சட்டம் என்று முன்வடிவை
சொல்கிறவர்கள் மேற்கு வங்கத்தில் என்ன நிலைமை என்பதை
எண்ணிப்பார்க்க வேண்டாமா? மாநிலத்திற்கு மாநிலம் கொள்கை
வேறுபாடா? தொழிலாளர் கொள்கை என்றால் மேற்கு
வங்கத்திற்கு ஒரு கொள்கை' தமிழ்நாட்டிற்கு ஒரு கொள்கையா?
இந்த நிலையை நிச்சயமாக இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்
கொள்ள மாட்டார்கள்.

I quote from the Telegraph, dated 15-3-83, Page 2 Col.2 March 14. Mr. Saroj Mukerjee, Secretary of the State Unit of the C.P.I. (M) said that his Party would never support any strike in any of the essential services like newspapers, Hospitals and milk-supply. While speaking to the newsmen at the state party office today Mr. Mukerjee said that strikes in these types of organisations are against the interests of the people.

இது உங்களுடைய கொள்கை. மேற்கு வங்கத்தில் கூலியே
கொடுக்கவில்லை என்று போராட்டம் நடத்துகின்ற தொழிலாளர்
களை அடக்க போலீஸ் அனுப்பப்படுகிறது. அதேநேரத்தில்
தொழிலாளர் நலன் கருதி தமிழ்நாட்டில் ஆய்வில் இருக்கும்
சட்டத்தை தொழிலாளர் விரோதச் சட்டம் என்று சொல்
கிறார்கள், ஏன் இந்தத் தடுமாற்றம் மாநிலத்திற்கு மாநிலம்
தொழிலாளர் கொள்கை மாறுபடுமா என்பதை மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். மார்க்சிஸம் உங்களுக்கு
இதையா சொல்லிக்கொடுக்கிறது? தொழிலாளர் பிரச்சனையில்
எப்படி இருக்க வேண்டும் என்று மார்க்சிஸம் சொல்கிறதோ
அதைத்தான் எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் செய்து
கொண்டிருக்கிறார்கள். நீங்கள் சொன்னால் வேதவாக்கு.
நாங்கள் சொன்னால் தொழிலாளர் விரோதமா? உங்களுடைய
போக்கு இப்படி இருந்தால் இந்த நாட்டு மக்கள் உங்களை
எப்படி ஏற்றுக்கொள்வார்கள்? அடுத்து சொல்கிறார்.

"The workers and employees of these organisations should discuss their demands with the Management and if it fails then they should approach the Government, Mr. Mukerjee. added.

ஏன் தொழிலாளருடைய விரோதி என்று சொல்கிறீர்கள்?
அப்படியே ஜோதி சொல்வதைப் போல அரசாங்கத்தை
அணுகினால் கூட அரசாங்கத்தின் கையிலே இன்றைய தேதியில்
ஆயுதம் இல்லை மேற்கு வங்க அரசாங்கத்தினிடம் வேலை
நிறுத்தத்தை முதலாளிக்கு விரோதமாக கதவடைப்பு செய்யக்
கூடாது என்று சொல்கிற அந்தச் சட்டம் ஜோதிபாசுவிடம்
கிடையாது.



[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

இந்தியக் துணைக் கண்டத்தில் மாண்புமிகு புரட்சித்
தலைவர் அரசு ஒன்று தான் இந்தச் சட்டத்தைப் போட்டுக்
கையிலே வைத்திருக்கிறது. அந்தச் சட்டத்தைக்கூட இந்த
மன்றத்திலே எதிர்த்தார்கள். புரட்சித் தலைவருடைய அரசு.
தொழிலாளர் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். ஒரு தொழி
லாளிப் பிரச்சினை என்றால், தொழிலாளர்கள் போராட
வேண்டாம். முதலாளியே நீ கதவடைப்பு செய்யக் கூடாது.
உங்களுடைய பிரச்சினையில் நீதிமன்றத்தில் 6 மாதத்திற்குள்ளே
சொல்லும். அதுவரையிலே நீங்கள் அமைதியாக பணியிலே
ஈடுபடுங்கள். தொழிலாளர்களை பழி வாங்குவதைப் போல
நீங்கள் கதவடைப்புகள் செய்யக்கூடாது என்று தொழிற்
தகராறு சட்டங்கள் கொண்டு வந்தபோது தொழிலாளர்களுக்கு
விரோதமான சட்டம் என்று இங்கே மாண்புமிகு உமாநாத்
உட்பட கம்யூனிஸ்ட் கட்சி வெளி நடப்பு செயதீர்கள். ஆனால்
நிலைமை என்ன தெரியுமா? நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி. பாரி கேஸ்
வழக்கிலே மீண்டும் இந்த 10 (பி) யை உபயோகப்படுத்த வேண்டு
மென்று சி.ஐ.டி.யூ. சுப்ரீம் கோர்ட்டிலே போய் சொல்கிறோம்.
எந்தச் சட்டம் தொழிலாளர்களுடைய விரோதச்சட்டம் என்று
வெளிநடப்பு செய்தீர்களோ, எந்தச் சட்டம் தொழிலாளர்
களுடைய வேலை நிறுத்தத்தை தடைசெய்கிறது என்று
சொன்னீர்களோ, அந்தச் சட்டத்தை புரட்சித் தலைவர்
இயற்றிய சட்டத்தினுடைய பலன் எங்களுக்கு வேண்டுமென்று
ஈ.ஐ.டி. பாரி நெல்லிக்குப்பம் வழக்கில் இந்திய துணைக்
கண்டத்தினுடைய உச்சநீதிமன்றத்திலே புரட்சித் தலைவருடைய
அரசு சட்டத்தினுடைய தன்மைகள் எங்களுக்குத் தேவை
என்கிறீர்கள். அங்கே ஜோதி சொல்கிற அரசைத்தான் அணுக
வேண்டுமென்று மேற்கு வங்க தொழிலாளிகள் அரசை அணு
கினால் கூட அரசு உதவி செய்ய முடியாத நிலையிலே சட்டம்
அங்கே இல்லை. அப்படித் தகுந்த சட்டத்தைப் பாதுகாப்பான
ஒரு சட்டத்தை வைத்துருக்கின்ற புரட்சித் தலைவரைப்பார்த்து
தொழிலாளிக்கு விரோதமான சர்க்கார் என்று சொல்கிறபோது
தான் எங்களுக்கு வேதனை ஏற்படுகிறது. நாங்கள் குறை
சொல்லவில்லை. உங்களுடன் கைகோர்த்து இரண்டு தினங்களுக்கு
முன் நடைப் பயணம் போனார்களே, திராவிட முன்னேற்றக் கழக
தொழிற்சங்கம் சொல்லிக் கொண்டிருக்கிறது, தொழிலாளர்
மத்தியிலே குழப்பம் ஏற்படுத்துகிறார்கள் இரண்டு கம்யூனிஸ்ட்
களும் கம்யூனிஸ்டு ஒப்பந்தம் போடுகின்ற போது மறுப்பு
தெரிவிப்பதில்லை. நான் அதைப் பின்னாலே படித்துக் காண்பிக்
கிறேன். நான் அதைச் சொன்னால் தவறு என்கிறீர்கள். உங்கள்
கூட்டாளிகள் கைகோர்த்து தொழிலாளர் விரோத
சர்க்கார் என்று நடைப் பயணம் செய்தார்களே அவர்கள் கேட்
கிறார்கள்.

இப்படித் தொழிலாளர் பிரச்சனையும் பலவேறு பிரச்சனை
களும் 10 (பி) சட்டம் வேறு எங்கும் இல்லை. இரண்டு
ஆண்டுகளிலே 480 நாட்கள் வேலை செய்தால், நிச்சயமாக
ஆக்கவேண்டும். ஏன்? கிராஜ்ஜுவிடி சட்டத்திலே கூட
கட்டாயம் 240 நாட்களுக்கு வேலை பார்க்க வேண்டு
மென்று சுப்ரீம்கோர்ட்டு. உச்சநீதிமன்றம் சொல்கிறது.

(திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்)

"The non-communist unions said the C.I.T.U.'s refusal to sign the agreement was in keeping with its tradition. It had refused to sign the 1979 S I.M.A. formula, through it was now posing as the vociferous ehampion of the same formula. When the C.I.T.U. and A.I.T.U.C. has signed a series of agreements for minimum 8. 33 per cent bonus in Kerala and West Bengal, they had no moral right to criticise other unions, who had obtained for their workers a better deal."
மேற்குவங்கத்தில், கேரளத்தில் 8.33 சதவீதம் குறைந்தபட்ச போனசுக்கு கையெழுத்துப் போட தள்ளிக்கொண்டேயிருக்கிறார்கள். அங்கே குரல் கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் வேறு இங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் வேறா? அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு ஒரு தத்துவம். இங்கேயிருக்கின்ற தொழிலாளர்களுக்கு ஒரு தத்துவமா? என்பதுதான் எனக்குப் புரியவில்லை. "....They clarifed that the present ageement was only an 'interim' settlement.இப்படி தொழிலாளர்கள் பிரச்சனையில் நான் முன்பு சொன்னதைப்போல தொழிலாளர் போராட்டங்களை உடைக்கிறார்கள். டாக்டர்கள் ஸ்ட்ரைக் எல்லாம் கடந்த காலங்களில் எப்படி அங்கே நடந்தது என்பதைப் பார்த்தோம். அந்த வகையில் மிகச் சிறப்பான முறையில் தொழிலாளர்கள் பிரச்சினையில், விலைவாசிப் பிரச்சினையில், இந்த அரசுக்கு நிகர் சிறப்பான எந்த அரசும் இந்த நாட்டிலே இல்லை என்ற நிலைமையை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம்.

அடுத்து விவசாயிகள் நிலைமை. கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில் வசூல் இல்லை என்ற சூழ்நிலையிலேயும் கூட, 54 கோடி ரூபாயை குறுகியக் காலக்கடனாக வழங்கியிருக்கிறோம். இதைப் பற்றி ஆளுநர் உரையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. விவசாயிகளை ஜப்தி செய்கிறார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். எங்கே? எப்படி என்ற விவரங்களை தயவுசெய்து நீங்கள் பேசுகின்றபோது சொல்லுங்கள். எங்கள் பகுதியிலே எந்த விவசாயி இடத்திலும் ஜப்தி செய்யவில்லை. ஜப்தி செய்யப்பட்ட விவரங்களைக் கொடுங்கள் ஜப்தி செய்யாத அரசு இந்த அரசு. 3 ஆண்டுக்கால வறட்சியில் விவசாயிகளைப் பாதுகாத்து இருக்கிறோம். எனவே விவசாயிகளுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களே மேற்கு வங்கத்திலே எப்படி வசூலிக்கவேண்டும் என்பதிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், வலது கம்யூனிஸ்ட் கட்சிக்கும் குடுமிப்பிடி சண்டை அங்கே நடக்கிறது. 2 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கூட்டுறவுக் கடன் இருப்பவர்களை போலீஸ் வைத்து வசூல் செய்யலாம். இது நீங்கள் எடுத்து இருக்கின்ற முடிவு. இது சரியா? தவறா? என்பதிலேதான் பஞ்சாயத்துத் தேர்தல்போது உங்களுக்குள்ளே வாக்குவாதம். கடைசியாக எடுக்கப்பட்ட முடிவு என்ன?

"It is stated in The Telegraph dated 20-5-1983" that...."
I



(திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்)

...The suggestion is completely contrary to numerous direetives issued by the Left Front, the State Government and the Chief Minister to the effect that all farmers, irrespective of their economic status, have to repay co-operative loans.

..The farmers having dues not exceeding Rs. 2,000 per head need not pay back their dues to the co-operative credit societies.

The State Governments directive in this regard was that Police action would onlybe started against those farmers whose dues exceeded Rs. 2,000. Mr. Bose clarified that the Police would not harass farmers whose loans were less than Rs. 2,000/"
2 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருந்தால் போலீஸ்காரர்களை வைத்து அடித்தே வசூலிக்கிறார்கள். அப்படி வசூலிக்கலாம் என்ற ஆணையை நீங்கள் பிறப்பித்திருக்கிறீர்கள், விவசாயிகள் துன்பப்படுகிறார்கள் என்று நீங்கள் ஜப்தி செய்யாமல் இருக்கிறீர்களா? ஆனால் இங்கே ஜப்தி இல்லாமல் இருக்கும் போதே ஜப்தி, செய்வதாக கூக்குரல் போடுகிறீர்கள் என்றால் அது அரசியலுக்காக என்று தான் நினைக்க வேண்டும்.

அது போலவே அரசு ஊழியர்களுக்கு அவர்கள் கோரிக்கை எதுவும் வைக்காமலேயே, நீண்ட காலமாக நிலுவையில் வைக்கப்பட்டிருந்த ஒரு திட்டம், மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் வழி காட்டக் கூடிய திட்டம், பதவியிலிருந்து ஓய்வு பெறுகிற அரசு ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் தருகிற திட்டம், ஆளுநர் உரையிலே அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் இதுவரையில் தென் மாநிலங்களிலேயே இல்லாத திட்டம் இந்த திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தான் முதன் முதலாக செயல்படுத்த இருக்கிறார்கள். அதைப்போலவே சம்பள கமிஷன் இந்த ஆண்டுக்குள் அறிவிக்கப்படும் என்று சொல்லப் பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல 18 பஞ்ச படிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பஞ்சபடியைப் பெறுவதற்காக இதே தலைமை செயலகத்தை அரசு ஊழியர்கள் ஊர்வலமாக சுற்றி வந்தபோது கூட கிடைக்காத சூழ்நிலையை மாற்றி, 18 பஞ்சப் படிகளை இந்த அரசு அளித்திருக்கிறது. கொடுத்திருக்கின்ற பஞ்சப்படிகளை பிராவிடண்ட் பண்டிலே சேர்ப்போம் என்று சொல்லவில்லை. அரசாங்கமே எடுத்துக் கொள்ளும் என்றும் சொல்லவில்லை. நேரிடையாக 18 பஞ்ச படிகளை கொடுத்திருக்கிறது இந்த அரசு.

மேற்கு வங்கத்திலே 8 அகவிலைப்படி கொடுக்க வேண்டும். அதிலே 2 கொடுத்தார்கள் ஒன்றிரண்டு பாக்கியிருக்கிறது. அதையும் பி. எப். பிலே சேர்க்கப் போவதாகச் சொல்லிவிட்டார்கள், மாதங்களுக்கு முன்னால், ஆனால் இங்கே அரசு, அரசு ஊழியர்களை பாதுகாக்கும் அரசாக இருக்கிறது.

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

உச்சநீதிமன்றம் சொல்லி இருந்தும் அதற்கே திருத்தம் கொண்டு வந்தது இந்த சர்க்கார். உச்ச நீதிமன்றம் ஒரு தொழிலாளிக்கு கிராஜுவிடி கொடுக்கவேண்டுமென்றால் 240 நாட்கள் வேலை செய்ய வேண்டும் என்று சொன்னதை இந்த அரசு மாற்றி ac ually employed by an employer என்கிற வார்த்தைக்குப் பதிலாக 'in employment under employer' என்று மாற்றியது புரட்சித் தலைவருடைய அரசு. Actually worked என்பதை been in employment என்று மாற்றியது இந்த அரசு, புரட்சித் தலைவருடைய அரசு. ஆக ரோலிலே இருந்தால் போதும் என்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்கி இப்படிப்பட்ட தொழிலாளர் சட்டங்களைக் போட்டார்கள். மில் தொழிலாளர்கள் பிரச்சினையை 1982 ஆம் ஆண்டு, இதே பிரச்சினையைப் பயன்படுத்தி, பல இலட்சம் தொழிலாளர் வேலை இழப்பதைத் தவிர்க்க மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு நடவடிக்கை எடுத்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே 7 ஆண்டு காலத்திலே போடப்பட்ட தொழிலாளர் சட்டம் ஒரே ஒரு சட்டம்தான். நான் சவால்—ஆக கேட்கிறேன். புரட்சித் தலைவருடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இந்த மாநிலத்தைப் போல் தொழிலாளர் சட்டங்களை அமல் நடத்திய மாநிலங்கள், இந்தியத் துணைக் கண்டத்திலேயே எங்கேயும் இல்லை. தயவு செய்து பட்டியல் போட்டுக் காண்பியுங்கள், வேண்டுமென்றால். இங்கே கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள், அது அங்கே அமல் நடத்தப்படவில்லை. இங்கே அமல் நடத்தப்படவில்லை என்று சொல்லலாம். அதற்குத் தான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முடிந்த அளவிற்கு தொழிற் தகராறுகளை எழுப்புங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சிரிக்க வேண்டாம். Political and Economic review என்ற weekly-Minimum Wages Actலே மேற்கு வங்கத்திலே இப்படி எல்லாம் அமல் நடத்தப் படுகிறது என்று மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். மினிமம் வேஜஸ் ஆக்ட் வேண்டுமென்ற டிரேட் யூனியன், உங்கள் சங்கம் கோரிக்கை வைத்த ஒரே காரணத்திற்காக சங்க உறுப்பினர்களே சங்கத்தை விட்டு போய்விட்டார்களாம். ஆகவே இந்தத் தொழிலாளர்களை பக்குவப்படுத்த வேண்டிய பயிற்சி கொடுக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கும் எங்களுக்கும் உண்டு. ஆனால் தொழிலாளர் நலச் சட்டங்களையாவது போட்டிருக்கிறீர்களா? தொழிலாளரைப் பாதுகாக்கின்ற சட்டங்களையாவது போட்டிருக்கிறீர்களா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஒரே ஒரு சட்டம் தான். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் தொழிலாளர்கள் நேரடியாக நீதிமன்றம் செல்வதற்கு சட்டம், 24 மாதங்களில் 480 நாட்கள் வேலைக்குச் சென்றால் நிரந்தரம் ஆக்கப்பட வேண்டுமென்ற சட்டம். இந்தியத் துணைக் கண்டத்திலே கைத்தறி நெசவாளர்களுக்கு, கட்டிடத் தொழிலாளர்களுக்கு, தொலலாளர் நலத் திட்டம்.



(திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்)

(முற்பகல் 11—10)

திராவிட முன்னேற்றக் கழகம் போட்ட ஸ்கிரினிங் கமிட்டியை
ஒழித்து இருக்கிறோம். தொழிற் தகராறு எழுப்ப முழு உரிமை
கொடுக்கிறோம், திராவிட முன்னேற்ற ஆட்சியிலே 20 ரன்னிங்
ஸ்ட்ரைக்கை தடை செய்தார்கள். ஆனால் அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் மாண்புமிகு
புரட்சித் தலைவர் ஆட்சியில் இதுவரையில் ஒரு ரன்னிங்
ஸ்ட்ரைக்கை கூட நாங்கள் தடை செய்திருக்கிறோமா?
தொழிலாளர் பிரச்சனையில், எங்களைத் தொழிலாளர் விரோதி
என்று சொன்னால் எப்படி இந்த நாடு சகித்துக் கொள்ளும்
என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால்
மேற்கு வங்கத்தில் இருக்கின்ற நிலை என்ன? அங்கே இருக்கின்ற
நிலை இங்கேயில்லை. நீங்கள் எப்படி தொழிலாளர்களை
வேதனைப் படுத்துகிறீர்கள், எப்படி தொழிலாளர் மத்தியில்
குழப்பத்தை உண்டு பண்ணுகிறீர்கள் என்று நாங்கள் சொன்னால்
ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள். நேற்று கை கோர்த்து பயணம்
போனீர்களே திராவிட முன்னேற்றக் கழக சங்கம் அறிக்கை
விட்டிருக்கிறது. 31-10—83ல் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்
கையில் வந்திருக்கிறது. கோவை மில் தொழிலாளர் பிரச்சினையில்
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், அங்கே உள்ள சி.ஐ.டி.யு.வும்
அந்தப் பிரச்சினையை எழுப்பவில்லை. வெளியே வந்துதான்
மறுப்பு தெரிவிக்கிறார்கள். அங்கே ஆலாசனை கூட சொல்ல
வில்லை. அதை அப்படியே படித்துக் காட்டுகிறேன்.

"As for the C.I.T.U., its sole representative who attended the Madras
talks, did not raise any objection to any of the clauses of the agreement,
before the Joint Labour Commissioner. C.I.T.U's only demand at the
talks was payment of some advance immediately.

On the last day of the Madras talks, the C.I.T.U. voiced its protest
to t e clause- bonus as per the payment of Bonus Act" when ot er
unions pointed out that as the S.I.M.A. formula provided for payment
according to the Bonus Act and additional payment, t e C.I.T.U.
representative could only say that his union had taken a decision not to
sign the agreement."

ஆலோசனை சொல்லவில்லை. கோரிக்கை வைக்கவில்லை'
அதை தி.மு.க. தொழிற்சங்கமே எதிர்க்கிறது.

"In their own traditional way they have not signed the agreement,"
அவர்கள்தான் சொல்லுகிறார்கள். நாங்கள் சொல்லவில்லை.
நான்—கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள்.
அண்ணா தி.மு. கழகக்காரர்கள் கேட்கவில்லை. அண்ணா தி.மு.க.
சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கவில்லை.

(திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்)

அதேபோல மாவட்டங்களைப் பிரிக்கிற வகையில் நிர்வாகம் சீராக, செம்மையாக நடைபெறவேண்டும் என்ற வகையில், நீண்ட நெடுங்காலமாக கோரிக்கையாக, இருந்த 7 மாவட்டங்களை 8 மாவட்டங்களாக பிரிக்க முடிவு செய்து அறிவித்திருப்பது வரவேற்கப்பட வேண்டிய முடிவு. அதிலும் கட்சி பேதத்திற்கு அப்பாற்பட்டவர்களின் பெயர்களை வைத்து, உதாரணமாக மறைந்த முத்துராமலிங்கத் தேவர் போன்றவர்களின் பெயரை வைப்பதை ஆளும் கட்சியினர் மட்டும் அல்ல அனைவரும் வரவேற்பார்கள். அதேபோன்று பல்வேறு தலைவர்களின் பெயரால் மாவட்டங்களைப் பிரிக்க நடவடிக்கைகளை மேற்கொண்ட இந்த அரசை நாம் நிச்சயமாக பாராட்டக் கடமைப்பட்டிக்கிறோம்.

நான் சார்ந்திருக்கிற மதுரை மாவட்டத்தை இரண்டாக பிரித்து திண்டுக்கல் மாவட்டமாக ஆக்கப்படுவதற்காக, அதிலும் மறைந்த நம் தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை எங்களுக்கு கொடுத்தமைக்காக, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் புனித பொற் பாதங்களில் எங்கள் பகுதி வாழ் மக்களுடைய நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

*திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது பேசுகிற வாய்ப்பினை தந்தமைக்காக நான் சார்ந்திருக்கிற இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரை மிக, சாமர்த்தியமாகவும், மிகச் சாதுர்யமாகவும் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆங்கிலத்தில் சொல்வதானால், More popular than succ ssful என்று சால்லலாம்.

இந்த உரையில், நலிந்த அரிசன பின் தங்கிய சமுதாயத்தில் அடித்தளத்தில் வாழ்கின்ற மக்களுக்கு, பல்வேறு உதவிகளை அரசு அளித்திருக்கிறது. ஆனால் அத்தனையுமே மத்திய அரசினுடைய நிதியை எதிர் பார்த்தே செய்யும் உதவியாக இருக்கின்றன. மத்திய அரசின் நிதி உதவியும் மானியமும் மாநிலத்திற்கு தேவை என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், தானாகவே இந்த அரசு மக்களுக்கு என்ன செய்திருக்கிறது என்பதை விளக்கும் என்று எதிர்பார்த்தேன். விளக்கம் இல்லை.

அடுத்தாற்போல், வறட்சியைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே வறட்சி காலத்தில் நீங்கள எடுத்த நடவடிக்கைகளை நாட்டிலுள்ள அத்தனை பேரும் பாராட்டுவதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். போர்க்கால நடவடிக்கைகளைப் போல, குடிதண்ணீரைப் பொறுத்த மட்டிலே,



 (திருமதி டி. யசோதா)

நீங்கள் மிகச் சிறப்பாக பணியாற்றியிருக்கிறீர்கள். ஒரு நாள் விட்டு ஒரு நாள், சென்னை மாநகரத்திலே தண்ணீர் கொடுத்தாலும் கூட, அதற்காக எடுத்துக் கொண்ட சிரமங்கள் பாராட்டுக்கு உரியவைதான். ஆனால் அதே நேரத்தில் நாம் குடிதண்ணீருக்காக எத்தனை கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம் என்பதை வைத்து பார்க்கிறபோது, இந்தப் பலன் அந்த செலவீட்டுத் தொகைக்கு சரியானதுதானா என்பதை நிச்சயமாக ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்கள் கூட ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அது மட்டும் அல்ல, வறட்சியின் போது துளைக் கிணறுகளை, ஆழ் குழாய் கிணறுகளை ரிக்குகள் போன்றவற்றை எல்லாம் பொறுத்தினோம். அவைகள் எல்லாம் இனம் பிரித்து குற்றச்சாட்டுக்களைச் சுட்டிக் காட்டியதை அரசு மறந்திருக்க முடியாது.

(முற்பகல் 11-20)

அதற்காக நான் அரசாங்கத்தைக் குறை கூறுவதற்கு விரும்பவில்லை. அரசின் கீழ் பணிபுரிகின்ற அதிகாரிகள் ஓரளவுக்கு இன்றைக்கு தங்களுடைய நேர்மையை இழக்கக்கூடிய நிலையிலே இருந்து கொண்டிருப்பதை அரசாங்கம் கண்காணிக்கவேண்டுமென்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மீண்டும் இதுபோன்ற நிலைமை ஏற்படா வண்ணம் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, கடமை அரசிற்கு இருக்கிற காரணத்தினால் இதனை அனுபவப்பூர்வமான முன்னெச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு எதிர்காலத்திலே பணிகளிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே மத்திய அரசு வெள்ள நிவாரணத்திற்காக வறட்சி நிவாரணத்திற்காக உதவியதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர விவசாயம், கல்வி, மருத்துவம் போன்ற துறைகள் எவ்வாறு முன்னேறியுள்ளன, எவ்வாறு முன்னேற இருக்கின்றன என்பதைப்பற்றி திட்டவட்டமாக எதையும் அறிவிக்கவில்லை. வறட்சி நிவாரணப் பணியிலே, வெள்ள நிவாரணப் பணியிலே இந்த அரசாங்கத்தை இந்த அரசாங்கத்தினுடைய பணியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே எனக்குக் கொஞ்சம் கூட எந்தவிதமான அச்சமும் இல்லை. இதே மாமன்றத்திலே சில பல நாட்களுக்கு முன்னதா நான் பேசியிருப்பது உங்களுக்கு நினைவில் இருக்குமென்று நினைக்கிறேன். மாற்றாந்தாய் மனப்பான்மையோடு யாரும் நடந்து கொள்ளக்கூடாது என்ற முறையிலே அடிக்கடி விமர்சனங்கள் நடை பெற்றிருக்கின்றன. தற்போது அதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வறட்சி நிவாரணப் பணியிலே கூட வெள்ள நிவாரணப் பணியிலே கூட மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டப்பட்டு இருக்கிறது. அரசாங்கத்தால் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. ஆனால் அதிகாரிகள் மட்டத்திலே அப்படிக் காட்டப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், இந்த மாமன்றத்திலே நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய சகோதரர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் அழகாகச் சொன்னார்கள், எத்தனை முறைகள் தமிழகத்தை வறட்சி வாட்டிக்கொண்டு இருக்கிறது என்று. அது மட்டுமல்ல இப்போது வெள்ளத்தாலும் நாம் பாதிக்கப் பட்டிருக்கிறோம். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், அந்தப் பணி, செங்கற்பட் மாவட்டத்திலே ஒரே ஒரு இந்திரா காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்தான் இருக் கிறார் என்று சொன்னால்–அந்த தொகுதியிலே 1981-82 ஆம் ஆண்டிலே நடைபெற்ற வறட்சி நிவாரண பணிக்கு இதுகாறும் பணம் கொடுக்கப்படவில்லை. பெரிய பெரிய ஒப்பந்தக்காரர்களா என்றால் இல்லை, சிறிய சாதாரண 3 ஆயிரம், 4 ஆயிரம், 5 ஆயிரம் என்ற அளவுக்கு வேலை செய்யக்கூடிய நிலையிலே கூட அவர்களுக்குப் பணம் கொடுக்கப்படவில்லை. அதற்குள்ளே அடுத்த வறட்சி வந்துவிட்டது. இரண்டாவது வறட்சி. அப்போதும் எந்த வேலைக்காவது பணம் கொடுக்கப் பட்டதா என்றால் கொடுக்கப்படவில்லை. இப்போது வெள்ள நிவாரணப் பணி வந்துவிட்டது என்னு டைய தொகுதியிலே இரண்டு ஒன்றியங்களில் 3வேலைகள் எடுக்கப்பட்டன. படப்பை ஒன்றியத்தில் 6 வேலைகள் எடுக்கப்பட்டன. அவை அனைத்தையும் நிறுத்திவிட்டார்கள். ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில் 9 வேலைகள் கொடுக்கப்பட்டன பல அரசியல் கட்சிக்காரர்களுக்கு கொடுக்கப்பட்டும், சாதாரண வேலைகள் 3 ஆயிரம், 4 ஆயிரம் ரூபாய் என்ற அளவுக்கான வேலைகளாக இருந்தும்கூட பாதியிலே நிறுத்தி விட்டு பணம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். எங்கள் மாவட்டத்திற்கு 20 லட்சம் ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டது' அதில் 10 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. ரூ.10 லட்சம் கொடுக்கப்படாத காரணத்தினால் அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். வறட்சி நிவாரணப் பணி, வெள்ள நிவாரணப் பணிகளில் மாற்றாந்தாய் கண்ணோட்டம் தேவையா என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

தமிழகத்தில் பயிரிடத்தக்க 50 நிலத்தில் சதவீதம் நிலம் நீர்ப்பாசன வசதியோ, நிலத்தடி நீரோ இல்லாத வானம் பார்த்த பூமியாக இருக்கிறது என்ற அபாயஅறிவிப்பு இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. சரியான செயல் திட்டங்கள் பல வருடங்கள் இல்லை என்ற நிலையின் ஒப்புதல் வாக்குமூலமாகத்தான் இந்த அபாய அறிவிப்பை நான் கருது கிறேன். இந்த நிலையில் விவசாயம் பாதிக்கப்படும் என்று தெரி கிறது என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் ஒரு உதாரணத்தைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். 1971 ஆம் ஆண்டு பங்களாதேசத்தோடு இந்தியா போரில் ஈடுபட வேண்டிய நிலைமை ஏற்பட்டபோது அமெரிக்கா எகத்தாளமாக பேசிய பேச்சினைப் பார்த்தோம். அமெரிக்காவிலே உள்ள வர்கள் சொன்னார்கள், இந்தியாவிலே உள்ள ஒவ்வொரு ஆறாவது மனிதனுக்கும் நாங்கள் உணவு தயாரிக்கிறோம்



136212

என்று சொன்னார்கள். அமெரிக்காவிலிருந்து உணவை இறக்குமதி செய்ய இந்தியா காத்திருந்தது என்பதை மறுக்க முடி யாது. ஆனாலும் அன்றைக்கு மத்திய அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பிலே இருந்த அன்னை இந்திரா காந்தி அவர்கள் வேகமாக அந்தச் சவாலை ஏற்றுக்கொண்டார்கள். இந்தியாவில் உள்ள ஒவ்வொரு ஆறாவது மனிதனுக்கும் அமெரிக்கா உணவு தயாரிக்கிறது என்று சொன்னால் அதை இந்தக் கட்டத்திலேயே நிறுத்துவதற்கு தயாராக இருக்கிறேன் என்று சொல்லி மிகப் பெரிய மறுமலர்ச்சித் திட்டங்களையெல்லாம் கொண்டு வந்தார்கள். அதன் பலன் இன்றைக்கு வெளிநாடுகளுக்கு அரிசி, கோதுமை ஆகியவற்றை ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு முன்னேறி இருக்கிறோம். அதுபோன்று வேகமான சூழ் நிலையை விவசாயத் துறையில் தமிழக அரசாங்கம் ஏற்படுத்த முயற்சி செய்தால் வருங்காலத்திலே வெளி மாநிலங்களிலிருந்து அரிசி வாங்க வேண்டிய துர்பாக்கியமான நிலைமை நமக்கு ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் வினி யோகம் நடைபெறுவதை மத்திய அரசு பாராட்டியுள்ளது என்பதை நினைக்கும் போது நாங்களும் பாராட்டுவதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். மற்றைய மாநிலங்களுக்கு முன் உதாரணமாக விளங்குகிறது என்று சொல்கிறபோது அதை வரவேற்கிறேன். ஆளுநர் உரையில் வெளி அங்காடியிலிருந்து அதிகமான விலையில் அரிசி வாங்கி வினியோகம் செய்தோம் என்று இருக்கிறது. அந்த அதிக விலையை தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளுக்கு கொடுப்பதற்கு வழி செய்ய வேண்டாமா? உடனே சொல்வீர்கள் மத்திய அரசு அனுமதிக்க வேண்டாமா என்று, எது எதற்கோ மத்திய அரசை எதிர்த்து போராடிக்கொண்டு இருக்கிறீர்கள். இதற்கு நீங்கள் நிச்சயமாக குரல் கொடுத்தால் உங்களோடு சேர்ந்து குரல் கொடுக்க நாங்களும் தாயாராக இருக்கிறோம் என்பதை மட்டும் இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நுகர் பொருள் வாணிப கழக கடைகளில் பல தவறுகள் இருக்கின்றன. பலமுறை இந்த அவையில் அதைப்பற்றி சுட்டிக் காட்டியிருக்கிறேன். நடவடிக்கைகள் ஏதாவது இருக்கிறதா என்று சொன்னால் ஒன்றுமே நடவடிக்கை இருப்பதாக தெரிய வில்லை. உதாரணமாக சொல்லவேண்டும் என்றால் ரேஷன் கடைகளில் அரிசி வாங்கச் செல்வதற்கு இந்த இந்த தேதியில் சென்றால் தான் ரேஷன் கொடுக்கப்படும் என்று சொல் கிறார்கள். அதை தயவு செய்து, ஏழைக்கு பாடுபடுகின்ற அரசு என்று சொல்கின்ற நீங்கள் நிச்சயமாக ஏழை எந்த தேதியில் வந்தாலும் அவர்கள் அரிசி வாங்கிக் கொள்ளலாம் என்ற பரந்த அடிப்படையில் உங்கள் கட்டளையை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்று சொன்னால் ஏழைக்கு என்றைக்கு காசு கிடைக்கும் என்று அவர்களுக்கு தெரியாது. அந்த தேதியில் அவனுக்கு பணம் கிடைக்கவில்லை என்றால் அவனால் ரேஷன் கடையில் அரிசி, பருப்பு வாங்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது.



V211, 31 N84
N84.56-1-3

இன்னும் ஒன்றை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். ரேஷன் கடைகளில் கொடுக்கும் பொருள்களின் அளவுகளில் மிகப்பெரிய கோளாறு, ஊழல் நடைபெற்று வருகிறது. உதாரணமாக சொல்லவேண்டும் என்றால் ஒரு கிலோ சர்க்கரை வாங்கினால் அது 900 கிராம் தான் இருக்கிறது. 100 கிராம் குறைக்கப்பட்ட அளவாக இருக்கிறது. எப்படி சூப்பர் மார்க்கெட் கடைகளில் பாக்கெட்டுகளில் அடைத்து விற்கிறார்களோ அதேபோன்ற சூழ்நிலையில் நீங்கள் தயாரித்து கொடுப்பதற்கு முன்வர வேண்டும். இதை எதற்கு சொல்கிறேன் என்றால் முன்பு எல்லாம் மாதவரம் பால் பண்ணைப் பால் கவர்களில் வரும். அந்தப் பாலை வாங்கிப் போய் அதை பயன்படுத்திய பிறகு அந்த காலி கவரை வாங்குவதற்கு தெருவில் ஆட்கள் வருவார்கள். எடைப் போட்டு வாங்கிச் செல்வார்கள். அந்த கவரில் மறுபடியும் மாதவரம் பாலை ஊற்றி விற்பதற்கு ஒரு சூழ்நிலை இருந்து வந்தது. இப்போது அதை தவிர்த்து இருக்கிறார்கள். 4 இடங்களில் ஆவின் பால் என்று வரிசையாக ஸ்டாம்ப் குத்தியிருக்கிறார்கள், அந்த பாலை வாங்கி கிழித்த உடன் ஒரு ஸ்டாம்பு போய்விடும். அதற்கு பிறகு அந்த பால் கவரில் 3 ஸ்டாம்பு தான் இருக்கும். இப்போது அந்த 3 ஸ்டாம்பு உள்ள கவரில் பாலை நிரப்பி அவர்கள் கொடுக்கின்றபோது இது போர்ஜரி பால் கவர் என்று சொல்லி வாங்க மறுக்கிறார்கள். அதேபோன்ற நிலைமையை நீங்கள் சர்க்கரைக்கு கூட செய்யலாம். ஏன் பாமாயில், என்று சொல்லுகின்ற அந்த எண்ணெய்க்கு கூட நீங்கள் அந்த கவர் போட்டு கொடுத்தால் நிச்சயமாக ஏழைகளுக்கு தூய்மையான சுத்தமான பொருள் நல்ல சரியான எடை உள்ள பொருள் கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். இதை சொல்வதற்கு காரணம் டின்னில் வாங்குகின்ற பாமாயில் சுத்தமாக இருக்கிறது. தண்ணீர் போல் இருக்கிறது. அதே நேரத்தில் சில்லரையில் வாங்குகின்ற பாமாயில் வெள்ளை வெளேர் என்ற கலரில் மாறி இருக்கிறது. ஆகவே ஏதோ கலப்படம் இருக்கிறது என்ற சூழ்நிலை மக்களுக்கு தெரிகின்ற போது இதனை சுத்தமாக தூய்மையாக கொடுப்பதற்கு அரசு பாக்கெட்டுகளில் அடைத்து கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று நான் குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல், நீங்கள் வெள்ள நிவாரணத்தைப் பற்றி எடுத்து இருக்கிற அந்த நடவடிக்கைகளில் முப்படை எப்படி உதவியது என்று சொல்லியிருக்கிறீர்கள். பாலங்கள் அமைப்பதற்கு உதவி செய்தார்கள், விமானப்படையினர் அளித்த ஹெலிகாப்டர்கள் விமானங்கள் மூலமும், கடற்படையினர் அளித்த சிறிய படகுகள் மூலமும் வெள்ளத்தினால் சூழப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை அளிப்பதற்கும் அவர்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்க முடிந்தது. இவ்வாறு எல்லாம் முப்படை உதவியது என்றும் அதற்கு நன்றி தெரிவித்து இருக்கிறீர்கள். அதிலே இன்னும் கூட கொஞ்சம் தாராள மனத்தோடு மத்திய அரசாங்கத்திற்கும் அன்னை இந்திரா



காந்திக்கும் நீங்கள் நன்றி தெரிவித்திருப்பீர்களானால் ஆனால் நீங்கள் தாராளமான சிந்தனையோடு இருந்தீர்கள் என்று பாராட்டி இருக்க முடியும். அதிலே கூட கஞ்சத்தனம் காட்டியிருக்கிறீர்கள் என்பதை நினைக்கும்போது வேதனையாக இருக்கிறது. அடுத்து கிருஷ்ணா தண்ணீரைப்பற்றி....

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளுநர் உரையை இன்னும் ஒருமுறை படிக்குமாறு அன்போடு வேண்டுகிறேன்.

திருமதி டி. யசோதா: பல கட்டங்களில் பல சூழ்நிலையில் பலருக்கு நன்றி தெரிவிக்கும்போது வெள்ள நிவாரணத்தில் முப்படைக்கு நன்றி தெரிவித்து இருப்பதைப் படித்து இருக்கிறேன்.

(முற்பகல் 11·30)

கிருஷ்ணா குடிநீரைப் பற்றிய மிகப்பெரிய திட்டம் சிறப்பான திட்டம்தான். அதை நாங்கள் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். ஆனால் அந்தத் திட்டம் வருவதற்கு ஆண்டு பலவாகும். ஆகவே. மிகக் குறுகிய காலத்தில் நமக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு வேறு பல திட்டங்களை நாம் நிச்சயமாகக் கடைப்பிடித்தாக வேண்டும். வீராணம் திட்டம், நாம் கைவிட்டாகி விட்டது. ஆனால் வீராணம் திட்டத்திற்கென்று நாம் கையகப்படுத்திக்கொண்ட நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்த நிலங்களையெல்லாம் அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? இன்றைக்கு அந்த நிலங்களைப் பலர் தங்களுடைய குடியிருப்புகளாக மாற்றிக்கொண்டு கொட்டகைகள் போட்டுக்கொண்டு வசிக்கின்ற நிலைமையிருக்கிறது. எனவே ஆர்ஜிதம் செய்யப்பட்ட அந்த நிலங்களை உடனடியாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு வழிவகை கண்டாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வீராணம் திட்டத்திற்கென்று பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்துக் குழாய்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. அது மக்களுடைய வரிப் பணம். அந்தக் குழாய்கள் இன்றைக்குப் பலருடைய குடியிருப்புகளாக மாறியிருக்கின்றன. அந்தக் குழாய்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டும். அப்படியில்லையென்றால் அதைப் பயன்படுத்துகின்ற வேறு யாருக்காவது விற்றாவது பணமாக்கி அரசாங்கத்தின் மூலதனத்தில் சேர்க்க முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீரைச் சிக்கனப்படுத்த வேண்டும்; சேதப்படுத்தக் கூடாது. கசிவு நீரை நாம் தடுத்தாக வேண்டுமென்றெல்லாம் ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் பாலாற்று நீர் படப்பையைத் தாண்டி குரோம்பேட்டைக்கு வருகிறது. அப்படி வருகின்றபொழுது குழாய்கள் சரியில்லாத காரணத்தால் மிகப் பெரிய கசிவு ஏற்பட்டு தண்ணீர் பாழாவதுடன் சாலைகளை அடித்துச் செல்கின்ற சூழ்நிலையை உடனடி

யாகக் கவனிக்க வேண்டும். இதையெல்லாம் கவனிக்க வேண்டிய பொறுப்பு அதிகாரிகளிடத்திலேயிருந்தாலும் அவர்கள் செவ்வனே செயலாற்ற வேண்டிய பொறுப்புக்கு அவர்களை நீங்கள் அழைத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொ ள ஆைசப்படுகிறேன்.

விலைவாசியைப் பொறுத்தவரையில் நாங்கள் மிக வேகமாக விமர்சனம் செய்யாவிட்டாலும்கூட, கடந்த ஆண்டுகளில் தமிழ் நாட்டு மக்கள் சங்கிலித் தொடர் போல, பால் விலை உயர்வு, பஸ் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு என்று மிகவும் பாதிக்கப்பட்டு ளனர். அந்த மேகங்கள் கண்டிப்பாக இப்போதும் வரும் என்ற அறிகுறிகள் கவர்னர் உரையிலே தெரிகிறது. ஆகவே, இவைகளைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் நிச்சயமாக முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் மின் விரிவுத் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதித்திருக்கிறது. அதற்காக உண்மையிலேயே மத்திய அரசங்கத்திற்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

நெய்வேலி மின் திட்டத்திற்கும் அனுமதி கோரி மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளதை வரவேற்கிறேன்.

மூன்றாவது அணு மின் நிலையம் நிறுவமத்திய அரசு கேட்டி ருப்பதைப் பாராட்டுகிறேன். இவை அனைத்தும் கிடைத்தும் விவசாயிகளின் தேவைக்குத் தடையின்றி காலத்தில் பயன்பட மின்சாரம் கிடைக்குமா? விவசாயிகளின் தேவைக்கு பயன்படாத மின்சாரம் இல்லாமல் செய்ய வேண்டியது அரசின் கடமை யாகும்.

சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் எடுத்துக்கொண்டால் சுற்றுப்புற சுகாதாரத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். அரசு மருத்துவமனைகளில் உள்ள சுகாதார வசதிகள் மிகவும் வேதனைக்குரியது. அங்கே தண்ணீர் வசதிக் குறைவாக இருக்கிறது. அங்கேயுள்ள கழிப்பறைகள் இருக்கின்ற நிலைமை களைப் பார்த்தால், வியாதியே இல்லாத ஒருவன் அரசாங்க மருத்துவமனைக்குள்ளே இருக்கின்ற கழிப்பறைக்குள்ளே சென்று வருவானேயாகில், அவன் ஒரு புதிய வியாதிக்குச் சொந்தக் காரனாகத்தான் இருப்பான் என்ற நிலைமையிருக்கிறது. நாம் பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து எத்தனை யோ திட்டங்களைப் போடுகிறோம். அப்படியிருக்கும்பொழுது அரசாங்கப் பொது மருத்துவமனைகளில் உ ள கழிப்பறைகளைச் சுத்தம் செய்வதற்கும், தண்ணீர் வசதி செய்வதற்கும் அதிகத் தொகையைச் செலவிட வேண்டிய அவசியமில்லை என்றாலும், குறிப்பிட்ட தொகையைச் செலவு செய்து அவை தூய்மையாக இருக்கக் கூடிய நிலைமைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மருத்துவ வசதி அதிகமாகக் கிராமங்களுக்குக் கிடைக்காத
நிலைமை இருக்கிறது. எல்லா மருத்துவர்களும் சென்னையிலேயே
இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். சென்னையிலே
இருந்தால் மருத்துவமனைகளிலே வேலையும் செய்து கொள்ள
லாம்; தனியாக கிளினிக் வைத்துக் கொண்டும் பிழைப்பை
நடத்திக் கொ ளலாம் என்ற நிலைமையில் இருக்கிறார்கள்.
அது மட்டுமல்லாமல், சென்னையிலேயே சகல வசதிகளும்
இருப்பதால் சென்னையை விட்டுப் போக மறுக்கிறார்கள்.
ஆகவே, கிராமப்புறங்களிலே சென்று வேலை செய்ய முற்படுப
வர்களுக்குத் தனியாக ஒரு ஸ்கேல் ஆப் பே நிர்ணயித்து
அவர்களுக்கு ஊக்கம் அளித்து தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள்
கிராமங்களுக்குச் சென்று பணி செய்யும் சூழ்நிலையை
ஏற்படுத்த வேண்டும்.

கல்வியைப் பற்றி மிகவும் வருத்தத்தோடு குறிப்பிட
விரும்புகிறேன். தற்பொழுது ப்ளஸ் 2 தொழில கல்வி படித்த
மாணவர்களில் எத்தனை பேர்கள் தொழில் வாய்ப்பு பெற்றி
ருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
அப்பொழுதுதான் புதிய திட்டத்தை ஏற்க இயலும்.
காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் டிரெயினிங் படித்த
ஆசிரியர்களுக்கும் படித்து முடித்தவுடன் வேலை வாய்ப்பு
காத்துக் கொண்டிருந்தது.

ஆனால் இன்றைக்கு கிட்டத்தட்ட 25 ஆயிரம் ஆசிரியர்கள்
பயிற்சி முடிந்து வேலையில்லாத சூழ்நிலையில் இருக்கிறார்கள்.
தனியார் பள்ளிகளை மூடினால் ஆசிரியர்கள் தங்களை மாநக
ராட்சிப் பள்ளிகளில் எடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள்.
அதற்காக ரொம்பவும் ஆர்வம் காட்டுகிறார்கள். மாநகராட்சிப்
பள்ளிகளில் பாட போதனைத் தரம் ஒருசில பள்ளிகளைத் தவிர
மிகவும் கேள்விக்குறியாக இருக்கின்றது. பொதுத் தேர்வுகளில்
மாணவர்கள் 0 சதவீதம், 5 சதவீதம் தரக்கூடிய பள்ளிகளில்
எல்லாம் ஆசிரியர்கள் அப்பள்ளிகளை வெறும் சம்பளம் வாங்கும்
நிலையமாகப் பயன்படுத்தும் நிலை சீரமைக்கப்படவேண்டும்.
அங்கு படிக்கும் குழந்தைகளை உண்மையிலே வருங்காலத்திலே
நல்ல சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக உருவாக்கக்கூடிய சூழ்
நிலையை ஏற்படுத்துகின்ற வகையிலே இவர்கள் தங்களுடைய
பணியினைச் செய்தார்கள் என்பதை நான் சொல்லத் தயாராக
இல்லை.

கல்வியின் தரம் மிகவும் குறைந்திருக்கின்றது. 12 வருடங்கள்
பள்ளிகளிலேபடித்த மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் சாதாரணமாக
பேசும் திறன் இல்லை என்பதால் ஆங்கிலப் பள்ளிகளில்
பெற்றோர் தங்களது குழந்தைகளைச் சேர்க்கும் நிலைமை இருக்
கின்றது. எனவே இவ்வாறு அரசாங்கப் பள்ளிகளில் ஆர்வம்
காட்டாமல் ஆங்கிலப் பள்ளிகளில் சேர்க்கிறார்கள். அரசாங்கப்
பள்ளிகளின் கல்வித் தரம் தனியார் பள்ளிகளின் கல்வித்தர
அளவுக்கு இல்லாத காரணத்தால்தான் அவ்வாறு பெற்றோர்கள்
தங்களுடைய பிள்ளைகளை தனியார் பள்ளிகளில் சேர்க்கின்ற
நிலைமை இருக்கின்றது.

அடுத்து நவீன பாடம் மற்றும் அறிவியல் வளர்ச்சியின் அடிப்
படையில் ஆசிரியர்கள் போதிக்க அரசு செய்யும் ஆசிரியர்
களுக்கான மறுபயிற்சித் திட்டம். இந்தத் திட்டத்திலே பெருமள
விலான செலவு ஏற்படுகின்றது. இந்தத் திட்டத்தின்படி ஆசிரியர்
களுக்கு 6 வாரப் பயிற்சி, 4 வாரப் பயிற்சி 8 வாரப் பயிற்சி
என்று வாரக் கணக்கில் பயிற்சி அளித்து அப்பயிற்சிக் காலத்தில்
அவர்களுக்கு டீ.ஏ-யும் கொடுக்கப்படுகின்றது. ஆனால் அந்த
ஆசிரியர்கள் உண்மையிலே அந்தப் பயிற்சியிலே தேர்வு
பெற்றார்களா என்பதற்கு எந்தவிதமான பரீட்சையும் வைப்பது
இல்லை. ஆனால் 6 வ ரங்கள் என்று பயிற்சி அளிக்கப்பட்ட
காலங்களுக்கான டீ. ஏ-ஐ மட்டும் அவர்கள் வாங்கிக் கொள்
கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் கற்றுத் தேறி இருந்தால்
தானே மாணவர்களுக்கு அவர்கள் சென்று நல்ல முறையில்
சொல்லித்தர முடியும். எனவே இதிலே அரசாங்கம் நல்லதொரு
நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து போக்குவரத்துத் துறையிலிருக்கின்ற குறைகளை
அரசு நன்கு கவனித்து களையவேண்டும். தனியார் நடத்துகின்ற
ஓம்னி பஸ்கள் இருககின்றன. தனியார் பஸ்களைப் பொறுத்த
வரையில் டி.வி. போடுகிறார்கள், வீடியோ போடுகிறார்கள்,
ஏர் கண்டிஷன் போடுகிறார்கள், இப்படி பல வசதிகளைச்
செய்கிறார்கள். தனியார் பஸ்களில் அந்த அளவுக்கு
வசதிகளைச் செய்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் சரிக்
கட்டியாக வேண்டும். பெர்மிட் வாங்க வேண்டும்; அதற்குப்
பிறகு ஒவ்வொருவரையும், ஒவ்வொரு கட்டத்திலே பார்க்க
வேண்டும். எனவே இவ்வாறு செலவினங்கள் அவர்களுக்கு
அதிகமாக இருந்தாலும் கூட அவர்களும் அரசாங்க பஸ்களில்
என்ன தொகையினை வசூலிக்கிறார்களோ அதே தொகையினைத்
தான் வசூலிக்கிறார்கள். அப்படி வசூலிக்கின்றபோது தனியார்
பஸ்களிலே இலாபம் வருகின்றபோது தேசியமயமாக்கப்பட்ட
நம்முடைய பேருந்துகளில் மட்டும் அந்த இலாபம் ஏன் வர
வில்லை என்பதைப் பற்றி நாம் யோசித்துப் பார்க்கவேண்டும்
என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிடுகிறேன்.

அடுத்து அரசு ஊழியர்கள் பணி முடிந்து திரும்பும்போது 10
ஆயிரம் தருவோம் என்பதை உள்ளபடியே நான் பாராட்டுகிறேன்.
மூன்றாவது ஊதியக் குழு வந்தபோது பணியாளர்களின் ஏற்ற
தாழ்வைக் குறைக்க 50-க்கும் மேற்பட்ட ஊதிய விகிதங்களை
மாற்றி 20 ஸ்கேல் ஆஃப் பே என்று நிர்ணயிக்கப்பட்டது. 4-வது
சம்பளக்கமிஷனில் கீழ்நிலையில் உள்ள ஊழியர்களின் சம்பளத்தை
பெரிய அளவில் மாற்ற முடியாவிட்டாலும் குறைந்தபட்ச ஊதிய
உயர்வு ரூ. 5, 10 என்றில்லாமல் கூடுதலாக நிர்ணயிக்க
கோருகிறேன்.

அடுத்து கட்டிடப் பணியாளர்களுக்கான உங்களுடைய
திட்டம் நிச்சயமாகப் பாராட்டுக்குரியதுதான். அது வரவேற்புக்
குரியதுதான். கட்டிடப் பணியாளர்களுக்குத் தேவையான



பொருட்கள் மற்றும் இன்றியமையாத பொருட்கள் தட்டுப்
பாடில்லாமல் கிடைக்க, நியாய விலையில் கிடைக்க அரசாங்கம்
உதவி செய்தால் நிச்சயமாக பொது மக்களும் கட்டிடப் பணியாளர்
களும் மிகப் பெரிய நன்மை அடைவார்கள்.

அடுத்து இலங்கைப் பிர சினையைப் பற்றி சகோதரர்
திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் மிக சிறப்பாக எடுத்துச்
சொன்னார்கள். இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசு நடந்து
கொண்ட விதம் பற்றி ஆளும் கட்சியினால் ஆளுநர் அவர்களின்
உரையின் மூலம் பாராட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் அன்னை
இந்திரா காந்தி அவர்கள் அவசரம், அவசரமாக அன்றையதினம்
படை எடுத்திருந்தால் அல்லது வேறுபல நடவடிக்கைகளில் ஈடு
பட்டிருந்தால் நம்முடைய நிலைமை என்னவாகி இருக்கும
என்பதை நாம் யோசிக்கவேண்டும். நம்முடைய விரோதி என்று
சொல்லக்கூடிய பாகிஸ்தான் நாட்டின் அதிபர் கூட அன்னை
இந்திரா காந்தி அவர்கள் இலங்கைப் பிரச்சினையில் எடுத்த
நடவடிக்கைகளை பாரட்டுகிறார்கள். இலங்கைப் பிரச்சினையைப்
பொறுத்தவரையில் அன்னை இந்திரா காந்தி அவர்கள் சண்
மூடித்தனமாக வேகமான நடவடிக்கைகளில் இறங்கவில்லை.
மிகத் திறமையாக வர்கள் நடவடிக்கைகளை எடுத்ததன்
காரணமாக இன்றைக்குப் பலராலும் பாராட்டப்படுகின்றார்கள்.
ஆனால் அதற்குள்ளாக அவர்களைப் பெண் என்று கூட
பார்க்காமல் எவ்வளவு கேவலப்படுத்தினார்கள்? எவ்வளவு
அசிங்கப்படுத்தினார்கள்?

(முற்பகல் 11–40)

எவ்வளவு அறுவறுப்பான சூழ்நிலையில் எல்லாம் பேசினோம்
என்பதை நினைவுகூற இந்த மன்றம் கடமைப்பட்டிருக்கின்றது.
அவ்வளவு கேவலப்படுத்தியும் கூட அதைப் பற்றியெல்லாம்
போற்றுவோர் போற்றட்டும், புழுதிவாரி தூற்றுவோர் தூற்றட்டும்
என்கின்ற தன்மையிலே அவர்கள் தங்களுடைய கடமையை
சிறப்பான முறையிலே ஆற்றி, இன்றைக்கு அவர்கள் ஓரளவு
வெற்றி பெற்றிருக்கக் கூடிய சூழ்நிலையை— இலங்கையிலே
ஜனாதிபதியாக இருக்கின்றவரே சொல்கின்ற அளவுக்கு மாற்றி
யிருக்கின்றார்கள். இன்றைக்கு மைனாரிட்டி மக்களுடைய
குரலைக் கேட்காமல் நான் நிச்சயமாக ருக்க மாட்டேன்,
குறைகளைக் கேட்காமல் இருக்க மாட்டேன், அவர்களுக்காகப்
பாடுபடுவேன் என்று அவர் சொல்கின்றார். நான் இடி அமீன்
போன்ற சர்வாதிகாரி அல்ல. நான் ஒரு ஜனநாயகவாதி என்று
அந்த ஜெயவர்த்தனேவைச் சொல்லக்கூடிய நிலைமைக்கு மாற்றி
யிருக்கிறார்கள் என்று சொன்னால் அந்த அளவுக்கு அவர்களுடைய
திறமையும் அவர்களுடைய நடவடிக்கையும் இருப்பதை இந்த
மன்றம் பாராட்டியதிலே நானும் கலந்து கொள்கின்றேன்
என்பதைக் குறிப்பிட்டுக் கூற ஆசைப்படுகிறேன்.

சட்டம் ஒழுங்கைப்பற்றி ஆளுநர் உரையிலே எதுவுமே குறிப்
பிடப்படவில்லை. இன்றைக்கு உண்மையிலே சொல்ல வேண்டு
மென்றால், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஆளுநர்
உரையிலே, சட்டம் ஒழுங்கைப் பற்றி குறிப்பிடாமல் இருப்பது

மிகவும் வருத்தத்திற்குரியது. மதுரையிலே மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் அந்தத் தாக்கப்பட்ட சம்பவத்தைப் பொறுத்த வரையில், யாரோ ஒருவன் பிக்பாக்கெட் அடிக்கப் போனான். அவனை போலிஸ்காரர் பின்னால் துரத்திக் கொண்டு சென்றார். வழியிலே இருக்கிற ஒருவன் எதற்காக ஓடுகின்றார்கள் என்று கேட்டு, வாக்குவாதம் போலிஸ்காரருக்கும் தனிப்பட்ட மாணவருக்கும் ஏற்பட்டது. அதன் தொடர்பாக, அங்கே போலிஸ் நிலையத்திற்குச் சென்று அடித்திருக்கிறார்கள். அது தொடர்பாக மாணவர்கள் வைத்தியக் கல்லூரிக்கு முன்னால் நின்று ஆர்பாட்டம் செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அத்தனை மாணவர்களையும் அழைத்துச் சென்று தாக்குதல் நடைபெற்றிருக்கிறது; மிகக் கடுமையான வன்முறை நடைபெற்றிருக்கிறது. அரசாங்கமும் நாங்கள் நீதி விசாரணை செய்கிறோம் என்று கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய கோரிக்கை, அந்த அதிகாரியை நீங்கள் சஸ்பென்ட் செய்யவேண்டுமென்பது. அதைப் பற்றி அரசாங்கம் கேளாக் காதினராக இல்லாமல், நிச்சயமாக அதைக் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் குறிப்பாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல இன்றைக்கு முகமூடி கொள்ளையர்கள் எங்கு பார்த்தாலும் இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, அலுவலகங்களுக்குச் செல்கின்றவர்கள் வீடுகளிலே இவை சாதாரணமாக நடந்துகொண்டிருக்கின்றன. கணவனும் மனைவியும் காலையிலே வேலைக்குப் போகிறார்கள், மாலைக்குத் தான் வீடு திரும்புகிறார்கள். இந்த நிலைமையிலே வீடு பூட்டப்பட்டு கிடக்கின்ற சூழ்நிலையிலே இன்றைக்கு எங்கு பார்த்தாலும் முகமூடி கொள்ளையர்களுடைய ஆர்பாட்டம் நடைபெற்றிருக்கிறது- அவர்களுடைய நடவடிக்கையைக் கண்காணிக்க நீங்கள் ஒரு ஸ்குவாட் போட்டிருக்கிறீர்கள் அது மட்டும் போதாது. அது மிகவும் அதிகமாகக் கண்காணிக்கப்படவேண்டிய ஒன்று என்பதை இந்த நேரத்திலே குறிப்பாகச் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

ஆளுநர் உரையிலே மிகப பெரிய திட்டங்களாக எதுவுமே இல்லையென்றாலுங் கூட இன்றைக்கு சிம்சன் பிரச்னை, பி. அண்ட் சி தொழிலாளர்கள் பிரச்னை பற்றியெல்லாம் இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடாதது மட்டுமல்ல, அதற்காக இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதைப் பற்றியும் சுட்டிக்காட்டாதது வேதனைக்குரியது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இன்னுங்கூட சொல்வேன் தூத்துக்குடியிலேகூட இன்றைக்கு தொழிலாளர்கள் நகராட்சி மன்றத்திலே தற்காலிகமாகப் பணியாற்றுகிறார்கள். நகராட்சிக்குச் சொந்தமான அலுவலகத்திலே 10 வருடகாலம் பணி செய்த பிறகும் வேலைக்கு உத்தரவாதம் இல்லை. இன்றும் அவர்கள் டெம்பரரியாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே, தூத்துக்குடியிலே இருக்கின்ற நகர்மன்ற ஊழியர்களுக்கு நீங்கள் பணியை உறுதி செய்து கொடுக்க அதற்குரிய நடவடிக்கைகை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இறுதியாக, ஆளுநர் உரையில் என்னுடைய கருத்தைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். ஆளுநர் உரை ஏப்ரல் மாதத் தேர்வுக்கு மார்ச் மாதம் விழித்துக் கொண்ட மாணவன் நிலையை நினைவு கூர்கிறது. வணக்கம்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை அரசாங்கத்தினுடைய கொள்கைகள், சர்க்கார் செய்திருக்கக்கூடிய திட்டங்கள், ஆகியவைகளைக் கோடிட்டு காட்டுவதாக இருக்க வேண்டும். ஆனால், அதிலே மக்களுடைய பிரச்னைகள் குறித்து தெளிவாக எடுத்து வைக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டால் இல்லை. மாறாக சாதாரண விஷயங்களை எல்லாம் பெரிய சாதனையாக ஆக்கிக் காட்டியிருக்கிறார்கள். அரசு பணியாளர்களுக்கு ரூ. 10,000 ஓய்வூதியம் கொடுப்பதாக வெளியிலே பத்திரிகைகள் எல்லாம் எழுதுகின்றன. பலபேரும் பாமரத்தனமாக அப்படி நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்க ஊழியர்களிடமிருந்து மாதாமாதம் ரூ. 20 வாங்கி, ரூ. 5,000 வரையில் அவர்கள் முதல் போட வேண்டும். மீதி ரூ. 5,000-ஐ சர்க்கார் தருகிறது. ஆக, அரசு தருவது ஓய்வூதியமாக ரூ. 5.000 தான். மீதித் தொகை என்.ஜி.ஓவினுடைய பணம். என். ஜி. ஓக்களுடைய பணத்தை வாங்கிக் கொடுப்பதற்கு சர்க்கார் தேவையில்லை. அவர்களே தனியாக வங்கிகளிலே ரூ. 20-ஐ 20 வருஷத்திற்கு போட்டு, ரூ. 5,000-க்கு மேலே தொகை பெறலாம். ஆகவே, ஓய்வூதியம் ரூ. 5,000 தான். என். ஜி. ஓ.க்களுக்கு. ஆனால், நான் கேட்கிறேன், அரசாங்க ஊழியர்கள் இறந்து போனால் ரூ. 10,000 என்று கலைஞர் அறிவித்தாரே அதைப்போல நீங்கள் ஏன் அறிவிக்கக்கூடாது ? ராஜ நர்த்தகி பதவியை ஆந்திராவிலே தம்புடுகாரு என்று சொல்கிற என். டி. ஆர். அவர்கள் எடுத்து விட்டார். அதை நீங்கள் ஏன் வைத்துக் கொண்டு சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே ஏன் 10 ஆயிரம் கொடுக்கக் கூடாது. கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும்.

இரண்டாவது இன்னொன்றை சொல்ல விரும்புகிறேன். மாவட்ட நிர்வாகம் என்பது ஒரு சாதனையாக காட்டியிருக்கிறீர்கள். கலைஞர் அவர்கள் காலத்திலே புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டது. பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் காலத்திலே தர்மபுரி, சேலம் பிரிக்கப்பட்டது. ஆகவே அந்த அடிப்படையிலே மாவட்ட பிரிவினை ஏற்கப்பட வேண்டியது தான். இன்றைக்கு கூட சிவராம ஐயர் தினமணி பத்திரிகையிலே எழுதி இருக்கிறார்கள். கமிட்டி போட்டிருக்கிறார்கள்; ரிப்போர்ட் வரும்; சிபார்சுகளை எல்லாம் பரிசீலனை செய்துதான் முடிவு எடுப்பதாக இருக்கிறது ; கடைசியாக ஒரு வரி சொல்லப்பட்டிருக்கிறது. படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இப்போதைக்கு அது இல்லை என்ற அர்த்தத்தோடு சொல்லி இருக்கலாம். மாவட்ட பிரிவினை வரவேற்கப்படத் தக்கதுதான். பெயர்கள் குறித்து எங்கள் தலைவர் கலைஞர் கூட தெரிவித்து இருக்கிறார்கள். அண்ணா அவர்கள் பிறந்த மாவட்டம்

செங்கல்பட்டு மாவட்டம். காஞ்சிபுரத்தை இரண்டாக பிரித்து காஞ்சிபுரத்தை தலைநகராக வைத்து காஞ்சிபுர மாவட்டத்திற்கு அண்ணா அவர்களுடைய பெயரை வைக்கலாம். அதேபோல மேலத் தஞ்சை, கீழத் தஞ்சை என்று வைக்கலாம். இவைகள் எல்லாம் ஆலோசனைகள் தான்: மற்றபடி ஒன்றும் இல்லை.

அடுத்து 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவருவதாக சொல்லி இருக்கிறீர்கள். அந்த 20 அம்சத் திட்டத்தின் 4-வது அம்ச திட்டம்தான் நில சீர்திருத்தம்; பினாமி நில ஒழிப்பு அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் இங்கே இருக்கிறார்கள். எல்லா எதிர்க்கட்சிகளும் ஏகோபித்து நிறைவேற்றி மத்திய அரசிற்கு அனுப்பினோம். அதை மத்திய அரசு ஏற்கவில்லை. அதைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லி இருக்கிறீர்களா? போர் குரல் கொடுப்போம் என்று சொல்லி இருக்கிறீர்களா? என்ன காரணம் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று சொல்லி இருக்கிறீர்களே, பினாமி நில ஒழிப்பு நிலச்சீர்திருத்தம் அதன் நான்காவது அம்சம். ஆகவே அந்தக் கொள்கையை எங்கே நிறைவேற்றுகிறீர்கள், 20 அம்சத் திட்டத்திற்கு எங்கே குரல் கொடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள்? ஆகவே அது புறம்பானது. இன்னொன்றையும் சொல்ல விரும்பு கிறேன். உங்கள் சாதனைகளைச் சொல்லச் சொன்னால் மத்திய சர்க்கார் திட்டத்தை சொல்கிறீர்கள். நிலமற்ற கிராமப்புற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு. உங்கள் திட்டமா? ஆளுநர் உரையில் சொல்லி இருக்கிறீர்களே? உங்கள் பிள்ளையா? அடுத்த வீட்டு பிள்ளையை என் பிள்ளை என்று சொல்கிறீகளே இது மத்திய அரசாங்கத்தின் திட்டம்.

அடுத்து இன்னொன்று சொல்கிறீர்கள். தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம். முழுக்க முழுக்க உங்கள் திட்டமா மத்திய சர்க்கார் உதவியுடன் நடக்கக் கூடிய திட்டம்? நீங்கள் பாதி, அவர்கள் பாதி; ஒரு கூட்டுக் கம்பெனி: ஆகவே உங்களுடைய திட்டமாக நீங்கள் உரிமை கொள்வது சரியாக இருக்காது. கடந்த 5 வருஷ காலமாக திருத்தணி சர்க்கரை ஆலை பற்றி சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். பழைய படியும் கவர்னர் உரையிலே சொல்கிறீர்கள், திருத்தணி சர்க்கரை ஆலை முடிவடைந்துவிடும் என்று. அதற்கு ஒரு பாராகிராப்பா? அடுத்து சொல்லியிருக்கிறீர்கள். பாம்பன் பாலம் வேலை மீண்டும் ஆரம்பிக்கும். சினிமாவிலே இடைவேளைவிட்டு மீண்டும் படம் ஆரம்பிப்பதைப்போல பாம்பன் பாலம் திட்டம் இருக்கிறது. இப்போது புதிதாக கொண்டுவரப்படுகிற திட்டமா இது? இடையிலே நிறுத்தப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப் போகிறோம் என்று இதற்கு ஒரு அறிவிப்பு. பல்வேறு திட்டங் கள் அறிவித்து இருக்கிறீர்கள் குடும்பத்திலே ஒருவருக்கு வேலை வாய்ப்பு; இப்போதுதான் புதிதாக சொல்கிறீர்களா? எல்லா கூட்டத்திலும் முதலமைச்சர் பேசுவார். என்ன போகிறார் என்று பார்த்தால் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர் களுடைய பட்டியலை இப்போது தயார் செய்துகொண்டிருக் கிறோம். தயார் செய்துகொண்டே இருங்கள், என்றைக்கு முடியப்போகிறதோ தெரியவில்லை,





நம்முடைய மரியாதைக்குரிய அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் இங்கே உறுதியாக சொன்னார்கள். பஞ்சாயத்து தேர்தல் விரைவிலே வருகிறது. யூனியனுக்கு தேர்தல் வருகிறது என்று சொன்னார்கள். பூங்காவனம் அவர்கள் கூட அப்போது கேட்டார்கள். வருமா, வருமா என்று அவர்கள் கேட்டு மூன்று தடவைகள் வரும், வரும் என்று இவர்கள் சொல்லி அற்புதமான ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அது வந்ததா என்றால் இல்லை. இப்போது அமைச்சர் என்ன சொல்கிறார் என்று கேட்டால் வெள்ளம் வந்து விட்டது; ஆகவே வரவில்லை என்று காரணம். இது வரைக்கும் காரணம் சொல்லாமலா இருந்தார்கள்? தொடர்ந்து காரணம். இப்போது ஒரு காரணம். சொல்லுங்கள். ஆனால் என்ன சொலலி இருக்கிறார்கள்? தேதி குறிப்பிட்டுவிட்டோம் என்று சொல்கிறார்கள். நான் இதிலே சொல்ல விரும்புவது இதற்கு முதலில் பிப்ரவரி மாதம் நடக்கும் என்று சொல்லி ஏமாற்றினார்கள். இப்போது தேதி சொல்லி ஏமாற்றப் போகிறார்கள். அடுத்த கூட்டத் தொடர் நடக்குமே யானால் டைம் சொல்லி ஏமாற்றப் போகிறார்கள். இந்த நேரத்திலே தேர்தல் நடக்கப் போகிறது என்று சொல்லி ஏமாற்றப் போகிறார்கள். மேற்கு வங்கத்திலே ஜோதிபாசு அவர்கள் தேர்தலை நடத்தி இருக்கிறார்கள். கர்நாடகத்திலே ஹெக்டே அவர்கள் நடத்தி இருக்கிறார்கள். உங்களுக்கு மட்டும் இதில் என்ன சிக்கல் என்று தயவுசெய்து சொல்லுங்கள். ஆகவே காரணம் சொல்லிக்கொண்டு இருப்பது ஜனநாயகத்தை படுகொலை செய்கிற காரியமாகும்.

(முற்பகல் 11–50)

சென்னை நகராட்சி இன்றைக்குச் சிங்காரச் சென்னையாக இல்லை. மந்திரிகள் மாடி வீடுகளில் வசதியாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் எல்லாம் எவ்வளவோ சிரமப்பட்டுக்கொண்டு இருக்கிறோம். கொசுத் தொல்லை பொறுக்க முடியவில்லை. சாக்கடை நாற்றம் சகிக்க முடியவில்லை. ஏன் இன்னும் சென்னை மாநகராட்சித் தேர்தல் நடத்த நீங்கள் முன்வரவில்லை? அதிலே என்னசட்டச் சிக்கல் இருக்கிறது. சபையில் சொல்லுங்கள் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இவைகளில் எல்லாம் மக்கள் பிரதிநிதிகள் அமர்ந்து மக்களுக்கு நன்மை செய்யவேண்டிய நிலைமைகளை ஏற்படுத்துவதற்கு பதிலாக, இன்றைக்கு இந்த ஜனநாயக அமைப்புகளை முடமாக்கியிருக்கிறீர்கள். இன்றைக்கு சென்னை மாநகராட்சி ** ** தனி அதிகாரிகளின் ஆட்சியில் பெரிய மாறியிருக்கிறது. ஊழல்கள் நடந்து கொண்டு இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாங்கள் இங்கே பல்வேறு கால கட்டங்களில் எடுத்துச்சொல்லி யிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: சென்னை மாநகராட்சி ** ** மாறியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஏதாவது குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால், அதை ஆதாரத்தோடு

*மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பற்றது.

சொல்லவேண்டும். பொதுப்படையாக இப்படிச் சொல்வது சரியல்ல. ஆகவே, அந்த வார்த்தைகளை அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு வே. இரா. ஜெயராமன்); அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடு கிறேன்.

திரு.ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மந்திரிகள் மாடி வீடுகளில் இருப்பதாகச் சொன்னார் கள். மாண்புமிகு உறுப்பினர் எத்தகைய வீட்டில் இருக்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: நாங்கள் எல்லாம் ஓட்டு வீடுகளில் தான் இருக்கிறோம்.

இன்றைக்குத் தொழிலாளர்கள் பிரச்னை மிகவும் முக்கிய மான பிரச்சனையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சகோதரி யசோதா அவர்கள் கூட இங்கே எடுத்துச் சொன்னார் கள். அந்தப் பிரச்னையைப் பொறுத்து நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, ஏறத்தாழ 50,000 (குறுக்கீடு) ஒரு லட்சம் தொழிலாளர்கள் என்று சொல்கிறார்கள்–தொழி லாளர்கள், நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளில் பணிபுரி கின்றவர்கள், இன்றைக்கு நடுத்தெருவில் நிற்கிறார்கள். நூற்றுக்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் இன்றைக்கு வேலை நிறுத்தம் அல்லது லாக் அவுட் போன்ற காரணங்களால் மூடப்பட்டுக் கிடப்பதால் அங்கே பணிபுரியும் தொழிலாளர்கள் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். சென்னையைச் சுற்றியுள்ள 40 சதவிகிதம் தொழிற்சாலைகள் குறிப்பாக சிம்சன் பி.அன்ட் சி மில்ஸ், என்.எஸ்.கே பாடி ஓர்க்ஸ், எஸ்.எச். பவுன்டரீஸ், ஸ்டான்டர்ட் தொழிற்சாலை ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் ஆட்குறைப்பின் காரணமாக வெளியே அனுப்பப்பட்ட தொழிலாளர்கள் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ்' கந்தசாமி மில்ஸ், ஈரோடு, ஜனார்தனா மில்ஸ், மேட்டூர் மில்ஸ், ரப்பர் பிளான்டேஷன், கன்னியாகுமரி என்று இப்படி பல்வேறு தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு நடுத்தெருவில் நின்று தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர் களைப்பற்றி இந்த ஆளுநர் உரையில் ஒரு வரி உண்டா? ஒரு வார்த்தை உண்டா?

இன்றைக்கு சிம்சன் தொழிலாளர்கள் ஏறத்தாழ 15,000 பேர், 82 நாட்களாக போராட்டம் நடத்திக்கொண்டு வருகிறார் கள். நிர்வாகத்தில் இருக்கும் தொழிலாளர்கள் 15 பேரை நிர்வாகம் டிஸ்மிஸ் செய்து இருக்கிறது. அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் சம்பள உயர்வு வேண்டும்





பயிற்சியாளர்கள், தினக்கூலி வாங்குபவர் ஆகியோரை நிரந்தரமாக்கவேண்டும் என்று இன்றைக்குப் போராடி வருகிறார் கள். நிர்வாகம் இதை ஒப்புக்கொள்கிறதா இல்லை. இந்தத் தொழிற்சாலையில் நிர்வாகத்திற்கு என்ன இலாபம் தெரியுமா? 25 கோடி ரூபாய். தொழிலாளர்களின் உழைப்பாலே நிர்வா கத்திற்கு லாபம் வருகிறது. ஆனால் அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற நிர்வாகம் தயாராக இல்லை. அதை ஏற்றுக்கொள்ள வில்லை. எனவே அவர்கள் போராடுகிறார்கள். 82 நாட்களாகப் போராடுகிறார்கள். இங்கே செயல்படுகிற அரசு தொழிலாளர் நல அரசாக இருந்தால் இந்த நிலைமை நீடிக்குமா? ஆகவேதான் சொல்கிறோம். இது தொழிலாளர் நல அரசு அல்ல. தொழிலாளர் களின் வயிற்றில் அடிக்கும் முதலமைச்சர்தான் இங்கே இருக்கிறார். நான் கேட்கிறேன், அவர்களைக் கூப்பிட்டுப் பேசி, இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நீங்கள் முன்வரவில்லை அவர்கள் மனு கொடுக்கவந்தால் இங்கே கோட்டையில் ஒரு மந்திரிகூட இல்லை, பிப்ரவரி 6 ஆம் தேதி நாங்கள் வருவோம் என்று அவர்கள் தகவல் தெரிவித்து இருக்கிறார்கள் ஆனால் இங்கே கோட்டையில் அந்த மனுவை வாங்க பெரிய மந்திரியும் இல்லை. சின்ன மந்திரியும் இல்லை. நான் கேட்கிறேன். அவர்கள் கொடுக்கின்ற மனுவை வாங்குவதில் உங்களுக்கு என்ன சிரமம் இருக்கிறது. உங்களுக்குப் பல வேலைகள் இருக்கலாம். நடிகையின் திருமணத்திற்குப் போகவேண்டி யிருக்கலாம். நடிகரின் திருமணத்திற்குப் போகவேண்டியிருக் யிருக்கலாம். போங்கள், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்தத் திருமணக் காரியங்களோடு, இந்தத் தொழிலாளர் பிரச்னையையும் கவனியுங்கள், அவர்கள் மனு கொடுக்க வந்தால் நீங்கள் வாங்கவில்லையென்றால், அதற்கு இங்கே மந்திரிகள் இல்லையென்றால், அதைக்காட்டிலும் முக்கியமான வேலை என்ன? ஆகவேதான் கேட்கிறோம், இது தொழிலாளர் நல சர்க்கார்தானா?

நான் இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியின்போது இப்படி ஒரு பிரச்னை வந்தது. காட்டூர் கோபால் அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அவரை ராஜினாமா செய்யச் செய்து அமைதி ஏற்படுத்தினார்கள். அதைப் போன்று 400 தொழிலாளர்கள் சிம்சன் தொழிற்சாலையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டு. அவர்கள் தெருவிலே நின்றார்கள். அப்போது கலைஞர் அவர்கள் அந்த நிர்வாகத்தினரை அழைத்துப்பேசி அந்த 400 தொழிலாளர்களையும் வேலையில் சேர்த்துக்கொள்ளச் செய்து, பிரச்சனையைத் தீர்த்துவைத்தார் கள். ஆனால் இன்றைக்கு என்ன சொல்கிறார்கள் ட்ரிபியூன லுக்கு விடுங்கள் என்று சொல்கிறார்கள் அமைச்சர்கள். ட்ரிபி யுனலுக்குவிடுவதாக இருந்தால் அமைச்சர் இராகவானந்தத்திற்கு என்ன வேலை? இந்த சர்க்காருக்கு என்ன வேலை? டிரிபியூனலுக்கு விடுவதுதான் தொழிலாளர் நலன் பாதுகாப்பா? இதை எல்லாம் எடுத்துச் சொன்னால் கோபப்படுகிறீர்கள்.

[திரு. அ. ரகுமான்கான்] [1984 பிப்ரவரி 15

மைச்சர்கள் எல்லாம் பொங்கல் விழா கொண்டாடுகிறார்
கள். வசதி இருக்கிறது, பணம் இருக்கிறது, பால் பொங்குகிறது,
பொங்கட்டும். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை.
ஆனால் தொழிலாளர்கள் வீட்டில் பால் பொங்குமா? எண்ணிப்
பார்க்க வேண்டும். இன்றைக்குப் பி அன்ட் சி தொழிற்சாலை
யில் 8,000 தொழிலாளர்கள் போனஸ் கேட்டு போராடுகிறார்
கள். தொழிலாளர் நலனில் அக்கறை கொண்ட அரசாங்கம்
அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டாமா?
அந்தப் பிரச்சனை தீர்க்கப்படாமல் நீட்டித்துக்கொண்டிருக்
கிறது.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.
அது ஒரு முக்கியமான பிரச்சனை. இங்கே வெள்ள நிவாரணம்
பற்றிச் சொன்னார்கள். நாங்கள் சொன்னால் வேண்டுமென்றே
சொல்கிறார்கள், குற்றச் சாட்டு என்று சொல்வார்கள்; ஆதாரம்
இருக்கிறதா என்று கேட்பார்கள். மாற்றுத் தலைவர் அவர்களே
உங்கள் அனுமதியோடு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில்
வந்த செய்தியைச் சொல்கிறேன்;

"It is said that the local AIADMK leaders go to flood victims and offer them full compensation for their partially damaged houses and take a commission ranging from Rs.25 to Rs 50."

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்முடைய வரிப்
பணத்திலிருந்து நிவாரணம் அளிக்கப்படுகிறது. அது ஒரு
கட்சியின் வரிப்பணம் அல்ல. இந்த நாட்டு மக்கள் செலுத்து
கின்ற வரிப்பணம். 250 ரூபாய் உதவித் தொகையாகக் கொடுக்க
50 ரூபாய் கமிஷன் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.
இதைச் சொல்வது தி.மு.க. அல்ல. நடுநிலையாக ஆராய்ந்து
பார்த்து செய்திகளை வெளியிடுகின்ற இந்தியன் எக்ஸ்பிரஸ்
பத்திரிகையில் அவர்களுடைய நிருபரை அனுப்பி விசாரித்து,
போட்டிருக்கிறார்கள். அமைச்சர் இதை மறுக்கலாம். இதைப்
போன்று பல பிரச்சனைகளை நானும் வைத்திருக்கிறேன்.

அடுத்து, ஒரு பிரச்சனை, பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமை
யாக நிவாரணத் தொகை போய்ச் சேர்ந்ததா என்றால் இல்லை.
ஆனால், பாதிக்கப்படாதவர்களுக்கு தொகை போய் சேர்ந்திருக்
கிறது. ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு பாதிக்கப்பட்ட
வர்கள் என்று சொல்லி, 1,500 ரூபாய் மன்னார்குடிக்குப்
பக்கத்தில் ஒரு கிராமத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி
பல தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. நீங்கள் நிவாரணப்
பணிகளுக்கு என்று ஆயிரக்கணக்கில், கோடிக்கணக்கில்.
தொகையை ஒதுக்கி வெள்ள நிவாரணத்திற்காக சர்க்கார்
இப்படி செலவிடுகிறது என்று படம் போட்டு கூட காட்டுகிறீர்கள்.
ஆனால் அவை எல்லாம் கொள்ளையடிக்கப்படுகின்றன.

வேட்டி, சேலை கொடுக்கப்பட்டது. மக்களுடைய வரிப்
பணத்திலிருந்துதான் அவை கொடுக்கப்படுகின்றன. நாங்கள்
எல்லாம் மக்கள் பிரதிநிதிகள் தான். வேட்டி, சேலை கொடுக்கும்



1984 பிப்ரவரி 15] [திரு. அ. ரகுமான்கான்]

போது நாங்கள் அங்கே இருக்க வேண்டாமா? அமைப்பாளர்
களை நம்பி கொடுக்கிறார்கள். அரசாங்கத்தின் பணத்தை
வேட்டி, சேலை என்ற கணக்கில் அமைப்பாளர்களிடம்
கொடுப்பது என்ன நியாயம்?

இன்னும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய
தொகுதியான சேப்பாக்கம் தொகுதியில் இருந்து ஆயிரக்கணக்
கான மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை எல்லாம்
கலெக்டர் அலுவலகத்தில் இருக்கின்றன, வீடு இழந்தவர்கள்க்
கூரை இழந்தவர்கள் மனுக்கள் இன்னும் டிஸ்போஸ் ஆகவில்லை.
தொகுதி முழுவதும் சுற்றிப் பார்த்து. யார் யார் பாதிக்கப்
பட்டிருக்கிறார்கள் என்று பார்த்து யார்யாருக்கு கொடுக்க
வேண்டும், யார் யாருக்கு கொடுக்கப்படவில்லை என்ற
புள்ளிவிவரங்களை நான் தயாரித்து வைத்திருக்கிறேன்.
கேட்டால் சபையில் கொடுக்கவும் தயாராக இருக்கிறேன்.

அடுத்து, சத்துணவு, அமைச்சர் நாவலர் அவர்கள் இருக்
கிறார்கள்......

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; மாற்றுத் தலைவரவர்
களே, பேப்பரிலே வந்த செய்தியை அவர்கள் சொன்னார்கள்.
பேப்பரில் வந்த செய்திகள் எல்லாம் உண்மையானவை என்றோ
எல்லாம் பொய் என்றோ நான் சொல்வதற்கு தயாராக இல்லை.
வெள்ள நிவாரணம் பற்றியோ வறட்சி நிவாரணம் பற்றியோ
நான் உங்களிடம் சொல்லும்போது—வறட்சி நிவாரணம் பற்றிச்
சொல்லும்போது என்று கருதுகிறேன்—பல குறைபாடுகளைச்
சொன்னார்கள். நான் பதில் சொல்கிறபோது இந்த அரசாங்
கத்தைப் பொறுத்தவரையில் தவறு நடக்கக்கூடாது என்பது
இந்த அரசின் முழுமையான நோக்கம் என்று சொல்லி
யிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த
வரையில் கண்டிப்பாக அப்படி இருக்க வேண்டுமென்றுதான்
அவர்களும் விரும்புகிறார்கள்.

(நண்பகல் 12—00)

நானும் தெளிவாகச் சொல்கிறேன். இங்கே இருக்கின்ற 234
சட்டமன்ற உறுப்பினர்களில் ஊழலே நடக்கக் கூடாது என்று
எவ்வளவு பேர்கள் எண்ணுகிறார்களோ அதை விட ஒரு எள்
அளவு கூட என் எண்ணத்திலே குறை இல்லை என்று உங்களிடத்
திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப் பொறுத்த
வரைக்கும் சரி, இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் சரி, எந்த
விதமான தவறும் நடக்கக் கூடாது என்பது தான். மூன்று
காரணங்களுக்காக நீங்கள் குறை சொல்லவேண்டும். குறை
சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்வது ஒன்று. நடைபெற்ற
குறைகளை நீக்கவேண்டுமென்பது ஒன்று. நீக்கப்பட்டதிலே
மீண்டும் குறைகள் வராமல் இருப்பதற்காக, சொல்லப்பட்ட
குறைகள் நீக்கப்படவேண்டும். நீக்கிவிட்டால் அம்மாதிரியான
குறைகள் மீண்டும் வராது. ஆகையினால் குறைகள் எதுவாக

இருந்தாலும் அவைகளை நீக்குவதற்காக இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெள்ள நிவாரணத்தைப் பற்றிச் சொன்னார்கள். இப்பொழுதாவது ஊருக்குச் சென்று விசாரித்து எங்கே குறை இருக்கிறது என்று புள்ளிவிவரமாகச் சொல்லுங்கள். அதை நீக்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த சட்டமன்ற உறுப்பினரும் வெள்ள நிவாரணத்தில் ஏற்பட்ட குறையை எழுத்து மூலமாகத் தெரிவிக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் மட்டுமல்ல, இங்கே சொல்கின்ற எந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சரி, வெள்ள நிவாரணத்தில் குறைகளே நடக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. குறையிருந்தால் அதை நீக்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. எந்த இடத்தில் குறை நடந்திருந்தாலும் குறை செய்வதற்குக் காரணமாக இருந்த எந்த அதிகாரியாக இருந்தாலும் சரி நடவடிக்கை எடுப்பதற்கு தயாரா இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் குறைகள் இல்லாமல் செய்ய வேண்டும் என்பதிலே கண்டிப்பாக இருக்கிறது. குறைகளை எழுத்து மூலமாக, ஆதாரமாக கொடுத்தால், அரசுக்கும், பொது மக்களுக்கும் நன்மை செய்வதாக இருக்கும்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் இதற்காக சிரமப்பட வேண்டாம். நன்னிலம் வட்டாரத்திலே நோட்டீஸ் போடப்பட்டிருக்கிறது. அமைச்சர் கோவேந்தன் அவர்கள் பேசியதாக பத்திரிக்கையிலே வந்திருக்கிறது. நானும் தெரிவிக்கிறேன். நாவலர் அவர்களுடைய விளக்கம் பெற விரும்புகிறேன். சத்துணவுத் திட்டத்தைப் பற்றி ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். சத்துணவுத் திட்டத்திற்காக எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறீர்கள். பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்டது எவ்வளவு என்பதை இந்தச் சட்டசபையிலே கராராகச் சொல்ல வேண்டும். நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். முதலமைச்சர் நிவாரண நிதி என்று வசூலிக்கப்படுகிறது. கலெக்டர் ஆபீசிலும், தாசில்தார் ஆபீசிலும், கம்யூனிட்டி சர்டிபிகேட் கேட்டால்கூட, பணம் கேட்கிறார்கள். சத்துணவுத் திட்டத்திற்கென்று, சாராயக் கடைகளில் கேட்கிறார்கள். அவர்களும் கொடுக்கிறார்கள். நான் கேட்கிறேன், அப்படிப்பட்ட தொகை கொடுக்கப்படுகிறதே எதற்காக என்றால், சத்துணவு திட்டத்திற்கு என்று சொல்கிறார்கள். பட்ஜெட்டிலே இவ்வளவு தொகை என்று ஒதுக்கியதற்குப் பிறகு, தமிழகம் முழுவதும் சத்துணவு திட்டத்திற்கென்று வசூலிக்கப்படுகிறதே அது எவ்வளவு? அதிலே ஊழல் நடந்திருக்கிறதா? இல்லையா என்ற கணக்கை எல்லாம் சட்டசபையிலே சொல்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தைப் பற்றி சென்ற ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில், சத்துணவுத்





திட்டத்தை 1983–84 ஆம் ஆண்டு நிறைவேற்றுவதற்கென்று பட்ஜெட்டிலே 134 கோடி ஒதுக்கியிருக்கிறோம். அதைத் தவிர, உணவு என்ற வகையிலே கொடுக்கவேண்டும் என்ற அந்த வகையிலே, ரூ. 20 கோடிக்கு நாம் குறைந்த விலையிலே அரிசி கொடுப்பதன் மூலமாக ஒதுக்கியிருக்கிறோம். இதற்காக ரூ.134 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது, பட்ஜெட்டிலே.

அடுத்து, சத்துணவுத் திட்டத்தில் உதவி செய்கின்ற வகையில் ஆங்காங்கே நன்கொடைகள் வழங்கலாம் என்ற வகையிலே சத்துணவுத் திட்டத்திற்காக நன்கொடை தந்திருக்கிறார்கள் சிலபேர்கள். பயனுள்ள வகையில் மாதந்தோறும் தொகை அனுப்பியிருக்கிறார்கள் சிலபேர்கள், சில பேர்கள் மொத்தமாக அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். வரவு-செலவு கணக்கு பொது விவாதம் வரும்பொழுது விவரங்கள் தரப்படும். இப்பொழுது தரப்படுவது முதலமைச்சருடைய நிவாரண நிதிக்காக என்று திரட்டப்படுகிறது. நிவாரண நிதிக்கு என்று திரட்டப்பட்ட தொகை மாண்புமிகு முதல் அமைச்சருடைய நிவாரண நிதிக்குச் செல்லும். அதற்கான கணக்கும் இருக்கிறது. அதை அக்கவுண்ட்டென்ட்–ஜெனரல் மற்றவர்கள் எல்லாம் பார்த்து சரி பாாக்கிற கணக்குதான். தனித்தனியான கணக்குகள் இருக்கின்றன. அதனுடைய முழு விபரங்களையும், வரவு செலவு திட்டம் விவாதத்திற்கு வருகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படும்.

**திரு. துரைமுருகன்;** மாற்றுத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து சத்துணவிற்காக பணம் எடுக்கப்படுகிறதா? அப்படி எடுக்கப்பட்டு இருந்தால் எவ்வளவு? அப்படி எடுக்கப்பட்ட அந்தத் தொகை, இந்த சத்துணவிற்காக செலவு செய்யப்படுகிற அந்தத் தொகையில் சேர்ந்து கணக்கு காட்டப்படுமா? ஆகையினாலே, முதல் அமைச்சர் நிவாரண நிதிக்கு எவ்வளவு வந்தது, எவ்வளவு எடுத்தது என்ற விவரத்தை அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களுக்கு ஏற்படுகின்ற ஐய வினா, அறியும் வினா, அறியா வினா, ஆகிய வினாக்களுக்கு விடை அளிக்கின்ற வகையில் வரவு–செலவு திட்டத்தில் விவரங்கள் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாற்றுத் தலைவர் அவர்களே, முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து சத்துணவிற்காக தொகை போகிறது. அதுமட்டும் அல்ல. இங்கே மலிவு விலையில் உணவுப் பொருட்கள் கொடுக்கிறோம் என்ற காரணத்தைச் சொல்லுகிறார்கள். என்னுடைய இடத்திலே ஒரு குறிப்பு இருக்கிறது. காட்டுகிறேன். நண்பர் பாலசுப்பிரமணியன் கூட கேட்டார்கள். விலைவாசி உயர்ந்து விட்டதா என்று.

மாநில அரசுவிற்கும் அரிசியின் விலை ஒரு கிலோவிற்கு 20 பைசா உயர்த்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசுவிற்கும் சர்க்கரையின் விலையும் ஒரு கிலோவிற்கு 25 பைசா உயர்த்தப்பட்டிருக்கிறது. பிப்ரவரி 1-ம் தேதி முதல் இது அமுலுக்கு வரும். அரிசியைப் பொறுத்தவரையில் சாதா ரகம், சன்ன ரகம், மிகச் சிறந்த ரகம், ஆக எல்லா ரகங்களுக்கும் 1 கிலோவிற்கு 20 பைசா உயர்த்தப்பட்டு இருக்கிறது ஆகவே, ரேஷன் கடைகளில் கொடுக்கப்படுகிற சர்க்கரையின் விலையும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அரிசியின் விலையும் உயர்த்தப்பட்டிருக்கிறது. வெளி மார்க்கெட்டிலே இன்றைக்கு எல்லா உணவுப் பண்டங்களின் விலையும் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆக, விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற காரியத்தை நீங்கள் செய்யவில்லை. சத்துணவு என்பதன் பெயராலே, முதல் அமைச்சருடைய நிவாரண நிதி என்ற பெயராலே, இன்றைக்கு கெடுபிடி வசூல் நடைபெறுகிறது. திருச்செந்தூரில் கந்தசாமி நடார் என்பவர் இடத்திலே 3 அதிகாரிகள் போய் 3 ரசீது கொடுத்து பணம் வாங்கிக் கொண்டு போய் இருக்கிறாாகள். கொடுக்காவிட்டால் என்ன ஆகும், சிக்கலாகும். ஆகவே இன்றைக்கு இதுப் போன்ற காரியங்கள் நடந்து கொண்டிக்கின்றன.

இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். போடுகின்ற இந்தசத்துணவை பொறுத்தமட்டிலே இன்றைக்கு மக்களிடத்திலே சத்துணவு என்று காட்டிவிட்டு இன்னொரு புறத்திலே பலவிதமான ஒழுங்கீனங்களுக்கு இடம் கொடுப்பது, மக்களுக்குத் தேவையான காரியமல்ல. சத்துணவுத் திட்டம் போட்டதற்காக நம்முடைய முதல் அமைச்சருக்கு டாக்டர் பட்டம் கொடுத்ததாக பல்கலைக் கழகத்திலே சொல்கிறார்கள். காமராஜருக்கு கூட அந்தக் காரணம் என்றால் கொடுத்திருக்கலாம். அதுவேறு, இது வேறு என்று சொல்கிறார்கள். இந்தப் பிரச்னைக்குள் எல்லாம் நான் போகவில்லை. ஆனால் இங்கே ஒரு சவால் விட்டு கேட்கிறேன். சத்துணவு சாப்பிட்டால் இளம்பிள்ளை வாதம் நீங்குகிறது; நொண்டிகள் நடக்கிறார்கள்; ஊமைகள் பேசுகிறார்கள். குருடர்கள் பார்க்கிறார்கள், இன்னும் என்னென்னவோ தெரியவில்லை. இவ்வளவு அதிசயங்கள் நடைபெற்றதாக முதல் அமைச்சரை வைத்துக் கொண்டு சொல்லப்பட்டிருக்கிறதே. இது ஒரு உண்மைதானா அப்படியென்றால், ஆஸ்பத்திரி எதற்கு டாக்டர்கள் எதற்கு சத்துணவை எல்லோருக்கும் கொடுக்கலாமே. ஊமைகள் நன்றாகப் பேசுகிறார்கள் என்கிறபோது. ஊறுகிறவர்கள் சில பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கொடுக்கலாமே. ஆகவே நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே இன்றைக்கு இது போன்ற பிரச்னைகளுக்குக் கூட பிரசாரங்கள் மூலம், சினிமாப்படங்களின் மூலம் கூட காட்டப்படுகிறது. இதை வைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு போடுங்கள். நிரூபிக்கலாம். குறை சொல்வது நோக்கம் அல்ல. 44 பைசாவிலே கொடுக்கப்படுகிற சத்துணவு சத்துணவாக இல்லை. இதை அமைச்சர் சௌந்திரராசன் அவர்கள்கூட





ஒழுங்கீனங்கள் எவ்வளவு இருக்கின்றன என்பதைக் கண்டு பிடித்து வருகிறார்கள். பாராட்டுகிறேன். வந்தவுடன் யா வைப் பிடித்தார்கள், ஒழுங்கீனம் செய்ததற்காக. அதற்குப்பிறகு 32 பேர்களை சஸ்பென்ஷன் செய்தார்கள். கோயம்புத்தூரிலே என்ன காரணம்? ஊழல் நடக்கிறது என்பதற்காக ஆகவே ஒரு மையத்திலே இவ்வளவு என்று சொன்னால், அமைச்சர் சௌந்திரராசன் அவர்கள் எல்லா மையத்திற்கும் போகவேண்டும் என்று சொன்னால் நிறைய பேர்களைக் கண்டுபிடிக்கலாம். இப்போதுதான் ஆரம்பித்து இருக்கிறார்கள். ஆகவே தான் சொல்கிறேன். சத்துணவுத் திட்டம் என்று காட்டிவிட்டு, அதனுடைய பலன், அதனுடைய பயன், மக்களுக்குப் போகாமல் செய்துவிடக் கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமான கருத்து. இந்த அரசை தயவு செய்து நான் கேட்டுக் கொள்கிறேன். மக்கள் பிரச்சினை விலைவாசி குறையுங்கள். 5 ரூபாய்க்கு இருந்த தேங்காய் இன்றைக்கு 34 ரூபாய்க்கு விற்கிறது. இன்னும் எண்ணெய் போனால், தேங்காய் எண்ணெய் கூட தலைக்குப் சொல்லப் போட்டு சீவ முடியவில்லை. விலை எல்லாம் ஏறியிருக்கிறது. தேங்காய் எண்ணையைக் குறைவாக ஆகையினாலே உபயோகியுங்கள் என்று சொல்லுகிறார்கள். நம்முடைய தினமணி பத்திரிக்கையிலே சிவராம ஐயர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். திராவிட முன்னேற்ற கழக பாணியிலே அண்ணா திராவிட முன்னேற்ற கழக பாணியிலே, திராவிட இயக்க பாணியிலே பேசுகிறார்கள். தேங்காய் எண்ணெய் விலை தென்னை மரம் அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்று பேசுகின்ற அளவிற்கு விலை வாசி உயர்ந்திருக்கிறது.

(பிற்பகல் 12-10)

நம்முடைய முதலமைச்சர் சொல்கிறார்கள். நானா மேடையில் விலைவாசியை உயர்த்தினேன் என்று. வளர்கின்ற சமுதாயத்திலே விலை உயர்வு சகஜம் தான். சமுதாயம் வளர்கிற போது, விலை வாசியும் உயரத்தான் செய்யும். ஜனத்தொகை பெருக்கம் இருக்கிறபோது விலைவாசியும் உயரத்தான் செய்யும் என்று முதலாளித்துவச் சமுதாயத்தின் மிச்ச சொச்சமான பிரதிநிதியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திரும்ப திரும்பச் சொல்லிவருகிறார்.

சரி, நீங்கள் பொறுப்பு இல்லை மத்திய சர்க்கார்தான் பொறுப்பு என்று சொல்கிறீர்கள். உண்மைதான். மத்திய சர்க்காருக்கு முழு பொறுப்பு இருக்கிறது. மத்திய சர்க்காருக்கு பொறுப்பு இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் மாநில சர்க்காருக்கும் பொறுப்பு இருக்கிறது. இல்லை என்றால், எங்களை எதிர்த்து தாங்களே தங்களுடைய துணைவியாரை உட்கார வைத்து விலைவாசி ஏற்றத்தை குறையுங்கள் என் ஏன் அப்போது போராட வேண்டும்?

[திரு. அ. ரகுமான்கான்] [1984 பிப்ரவரி 15

கருணாநிதி அண்ணாச்சி கருப்பட்டி விலை என்னாச்சு என்று கேட்கவில்லையா? அன்பழகன் அண்ணாச்சி அரிசி விலை என்னாச்சு என்று கேட்கவில்லையா? ஏன் பேரறிஞர் அண்ணா அவர்களே விலைவாசி எதிர்ப்பு மறியல் போராட்டம் நடத்தவில்லையா? வேலூர் கலெக்டர் ஆபீசில் மறியல் நடத்தினார். நாவலர் மெட்ராஸிலே மறியல் செய்தார். அன்றைக்கு, நமது இப்போதைய முதலமைச்சர் கலந்து கொண்டாரா இல்லையா என்ற தகவல்கள் எனக்கு இல்லை. ஆகவே அதற்குள் நான் போக விரும்பவில்லை.

ஆனால் இப்போது நாவலர் சட்டம் பேசுகிறார். நானே மறியல் நடைபெறும் இடத்திற்கு வந்து அதை தடுப்பேன் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார். இதெல்லாம் ஜனநாயகத்திலே மக்கள் பிரச்னைகளை அம்பலத்திலே கொண்டு வந்து தீர்வு காணுவதற்காக கையாளப் படுகிற ஒரு வழிமுறைகள். நாளைக்கு நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்தால் கூட அப்படிதான் செய்வீர்கள். இவையெல்லாம் ஜனநாயகத்திலே இருக்கக்கூடிய அமைப்பு முறைகள். ஆகவே விலைவாசி உயர்வை தயவுசெய்து குறையச் செய்யுங்கள் என்று மக்கள் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன். இதில் மாநில சர்க்காருக்கும் பங்கு இருக்கிறது. மத்திய சர்க்காருக்கும் பங்கிருக்கிறது.

விலை வாசி உயர்ந்திருக்கிறது. கேட்டால் இந்தியா முழுவதும் விலைவாசி உயர்வு இருக்கிறது என்று கூறுகிறார்கள். விபச்சாரத்தை தடுக்கவேண்டும் என்று சொன்னால், நாடு முழுவதும் விபசாரம் இருக்கிறதே என்றா கேட்பது? விலைவாசி எல்லா மாநிலங்களிலேயும் குறைக்கப்பட வேண்டும் என்பது தான் கோரிக்கை. மத்திய சர்க்கார்தான் முழுபொறுப்பு. காரணம் அதிகமான பணப்புழக்கம் இருக்கிறது. தவறான ஏற்றுமதி இறக்குமதி கொள்கைகள் என்றெல்லாம் பொருளாதாரம் படித்தவர்களுக்கு தெரியாமல் இல்லை. ஆனால் மாநில சர்க்காருக்கும் கடமை இருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்ட வல்லுநர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மிகவும் ஆர்வத்தோடும், அக்கறையோடும் அவர்களுக்கே உரித்தான பாணியிலும், அவர்களுக்கே தகுந்த பாணியிலும், தகுதியான நிலையிலும் மேற்கோள்களைக் காட்டி நன்றாகப் பேசினார்கள். இங்கே டாக்டர் நாவலர், நிதியமைச்சர் என்ற முறையில் கணக்குகள் இங்கே வைக்கப்படும் என்று சொன்ன பிறகும், அதைப்பற்றியே மேலும் சில விவரங்களை சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். பதில் சொல்ல வேண்டிய நிதியமைச்சர் சொல்லிவிட்டார். இனியும் பேசினால் பேசட்டுமே என்று அவர் உட்கார்ந்து விட்டார் அது அவருடைய பண்பு. பதில் கிடைத்த பிறகும் அதைப் பற்றியே பேசுவது சரிதானா என்பது எனக்கு தெரியாது. அவர்களுடைய திறமைக்கு ஏற்றபடி பேசலாம்.



1984 பிப்ரவரி 15] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

சத்துணவு திட்டத்தால் இளம் பிள்ளை வாதம் தீர்ந்து விட்டது என்று எனக்கு முன்பாக எந்த மேடையிலும் பேசவில்லை. நடக்க முடியாது. பலவீனமாக இருந்த ஒரு குழந்தையை அங்கே கொண்டு வந்து மேடையிலே காண்பித்து, பல லட்சக்கணக்கான மக்களுக்கு முன்னால், இதே சென்னை மாநகரத்திலே, நேரு அவர்களின் பெயரால் இருக்கின்ற திடலில், அந்தக் குழந்தையை கொண்டு வந்து காண்பித்து, நடக்க முடியாது இருந்தது, உடம்பில் சத்தே இல்லை, இப்பொழுது சுமாராக நடக்க முடிகிறது என்று அங்கே வந்த அந்த அம்மையாரே மேடையிலே பேசினார்கள். அதற்குப் பிறகு தான் எனக்கே தெரியும்.

ஏன் சொல்கிறேன் என்றால், ஐயப்பன் கோவிலுக்கு போனால் போதும் என்ற நாடகம் நடத்தி, நோய்களை அல்லது தீராத வியாதிகளை அங்கே போய் விபூதி பூசினால் தீரும் என்று சொன்னபோது, அதைப்பற்றி எந்த வார்த்தைகளைச் சொல்லி நாமெல்லாம், ஒரே கட்சியில் இருந்தபோது பேசினோமோ, அதே கேள்வியை எங்களிடம் கேட்கிறீர்களே என்று நினைக்கும் போது சிரிக்கிறதா? ரசிக்கிறதா அல்லது ஏமாற்றத்தைக் காண்பிக்கிறார்கள் என்று எண்ணுவதா என்று எனக்குத் தெரியவில்லை. ஏதோ விலைவாசிப் போராட்டம் நடத்தினார்கள், அதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன செய்தார் என்று தெரியாது என்றார்கள். அவருக்கு தெரிய வந்திருக்காது. சிறு வயதாக இருந்திருக்கும். பள்ளிக்கூடத்திலே இருந்திருப்பார் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) கல்லூரியா, சரி சற்று உயர்ந்திருக்கிறது.

ஆனால், எஸ். எஸ். இராஜேந்திரன் அவர்கள் அந்தப் போராட்டத்திலே கலந்துக் கொண்டு சிறைக்குச் சென்றபோது, அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வழக்கு மன்றத்திற்கு வந்து கலைஞர்களை நாங்கள் இந்தப் போரட்டத்திலே கலந்து கொள்ளச் சொல்லவில்லை. ஆகவே, எஸ். எஸ். இராஜேந்திரன் அவர்கள் அந்தப் போராட்டத்திலே கலந்து கொள்வதற்காக அந்த இடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னதை தயவுசெய்து இங்கே நினைவுப் படுத்திக் கொண்டு, எம். ஜி. இராமச்சந்திரன் எங்கே இருந்தார் என்று தேடாதீர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதையும் பத்திரிக்கையிலும் தேடுங்கள், ஏடுகளிலும் தேடுங்கள் வழக்கு மன்றத்தில் என்ன சாட்சி சொன்னார்கள் என்பதையும் தேடுங்கள் என்பதை மாத்திரம் சொல்கிறேன். நாம் எல்லாம் சில சமயங்களில் இங்கே என்ன செய்கிறோம் என்றால் எதையும் பேசி அதை குறிப்பேட்டில் ஏற்றி அது பத்திரிகையில் வரவேண்டும் என்ற ஆசை இல்லாமல் உண்மையிலே தெரியாமல் அதை செய்து விட்டோம் அல்லது நாம் செய்கிற காரியம் சரியாக இல்லை தவறுகள் இருக்கிறது என்றால் நாட்டின் நன்மைக்காக எல்லோரும் ஏற்றுக் கொள்ளுகின்ற வகையில் அதை எடுத்து புள்ளிவிவரத்தோடு சொல்ல வேண்டும் என்ற

எண்ணத்தைச் சொல்லி நான் சொன்னால் மாற்றிக் கொள்ளப் போவது இல்லை ஏற்கனவே திட்டம் போட்டுக் கொண்டு வந்து இருப்பார் இன்று பேசியே தீருவது யார் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் முத்தாய்ப்பு வைத்து கடைசியில் ரகுமான்கான அவர்களுடைய பேச்சாக இருக்க வேண்டும் என்று—சில நாடக நடிகர்கள் விரும்புவது போல் அது அவருடைய பாணியாக இருக்கலாம் நம்பிக்கையாக இருக்கலாம், ஆசையாக இருக்கலாம் அதற்கு நான் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் பத்திரிக்கையில் செய்தி வரும் போது உங்களைப் பற்றியும் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அண்ணா அவர்கள் சாட்சி சொன்னார்களா அதையும் அவர்கள் தெரிந்து இருக்கிறார்கள் என்பதையும் அந்த தகுதி உள்ளவர்கள் உங்கள் கட்சியிலும் இருப்பார்கள். வெளியில் பொது மக்களும் இருக்கிறார்கள். ஆக இது தெரியாமல் திரு. ரகுமான்கான் பேசி விட்டாரே என்று உங்களை `தப்பாக நினைக்கக் கூடாது என்பதற்காக நான் உங்களை பணிவன்போடு வேண்டுகிறேன். நீங்களும் தி. மு, க. வில் இருக்கிறீர்கள் நானும் இருந்தவன் அதை மறந்து விடாதீர்கள் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிரச்சினையின் மையம் அண்ணாவால் அனுமதிக்க பட்டது மறியல் போராட்டம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளாததற்கான காரணம் சொன்னார். அவ்வளவு தான். ஏற்றுக் கொள்கிறேன். நான் சொல்வது என்ன என்றால் அந்த விலைவாசி பிரச்சினையில் அக்கறை செலுத்த வேண்டும். இன்னும் ஒன்று பத்திரிக்கையில் வந்து இருக்கிறது. நம்முடைய சினிமா நட்சத்திரங்கள் டைரக்டர்களோடு பேசி முதலமைச்சர் பதில் சொல்லுகின்ற இடத்திலே இளம் பிள்ளை வாதம் தீர்ந்து போகிறது என்ற தகவல்கள் வந்து இருக்கின்றன. அப்படி சொல்லப் பட்ட தகவல்கள் தப்பு. இளம் பிள்ளை வாதம் அதனாற் தீர்ந்து விடுகிறது. அப்படி சொன்ன தகவல் தவறானது என்று முதலமைச்சர் அவர்கள் ரெக்காடு பண்ணினார். அது தான் என்னுடைய வேலை.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இளம் பிள்ள வாதம் தீரும் என்று நான் எப்போதும் சொல்ல தயாராக இல்லை. சத்துணவு திட்டம், சத்துணவு என்பது பலவீனமாக இருக்கின்ற குழந்தைகள், வாழ்வில் வளம் பெற முடியாது. தகுதி பெற முடியாது உணர்வு இழந்தவர்கள் அவர்களுக்கு தேவையான ஊட்ட சத்து இல்லாத குழந்தைகள் அந்த பெறுகிறார்கள், வளம் பெறுகிறார்கள், உயர்ந்த நிலைமை இல்லாவிட்டாலும் உயரம் அதிகமாகிறார்கள். அவர்களுடைய எடை கூடுகிறது என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். இப்போதும் சொல்கிறார்கள். அது பற்றி தான் அந்த ஆளுநர் உரையிலும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அவினாசி லிங்கம் செட்டியார் கல்லூரி பெண்களே



அங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே தயவு செய்து என்னை தேடாமல் நியாயத்தை தேடி, உண்மையை தேடி கொஞ்சம் நேரத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு தகவலை இங்கே தெரிவிக்க விரும்பு கிறேன். குறிப்பாக இன்றைக்கு இருக்கக் கூடிய சூழ்நிலையில் சட்ட ஒழுங்கு பிரச்சினை ஒரு சிக்கலான பிரச்சினையாக இருக்கிறது. என்னிடத்தில் கூட ஒரு தகவல் கிடைத்து இருக்கிறது. அதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். சென்னை பல்லாவரம் வன்னியர் தெருவைச் சார்ந்த ஒரு 70 வயது கிழவியை 20 வயது பையன் கற்பழிக்க முயற்சித்து அது தடுக்கப்பட்டது. (குறுக்கீடு) 70 வயது கிழவி, 20 வயது தம்பி ராஜேந்திரன் கற்பழித்தான் கேஸ் பைல் ஆகியிருக்கிறது. கற்பழிக்க முயற்சி செய்து, போலீஸ் கைது செய்து, சைதாப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனில் எப். ஐ, ஆர். போட்டு கோர்ட்டுக்கு கொண்டு போகப் பட்டு கோர்ட்டில் 15 நாள் ரிமாண்டு, கேஸ். பெண்டிங். இது நமக்கு கிடைத்த தகவல். இப்படி நாட்டில் எப்படி இருக்கிறது என்று கேட்டால்—எனக்கு ஒரு சந்தேகம்—கிழவி களுக்கே இங்கே பாதுகாப்பு இல்லையோ என்ற ஒரு அச்சம் ஏற்படுகிறது. அந்த அளவுக்கு சட்டம் ஒழுங்கு இன்றைக்கு தமிழகத்தில் கெட்டு போயிருக்கிறது.

திருவான்மியூரில் முகமூடி கொள்ளை. மீண்டும் தங்கள் கைவரிசையை ஆரம்பித்து இருக்கிறார்கள். பஸ்ஸில் கொள்ளை, கொலை நடக்கிறது. கொலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

அடுத்து இன்னும் ஒரு முக்கியமான பிரச்சினை. ஸ்ரீவில்லி புத்தூரில் எங்கள் கட்சியைச் சார்ந்த சகோதரர் வெற்றி செல்வன் அநியாயமாக குத்தி கொலை செய்யப்பட்டு விட்டான். அண்ணா சிலைக்கு அலங்காரம் செய்யும் போது, அவன் ஒரு மரண வாக்கு மூலம் கொடுத்து, போலீஸ் நடவடிக்கை எடுத்து இருக்கிறதா? நான் கேட்க விரும்புகிறேன். எங்கள் மீது யாராவது மரண வாக்குமூலம் கொடுத்து இருந்தால் போலீஸ் எங்களை விடுவார்களா? ஆலந்தூரில் இருக்கக் கூடிய இளைஞர்கள் அன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வருகின்ற வழியில் லாரியில் போய் கொண்டு இருந்தவர்கள் அன்றைக்கு கலைஞர் வாழ்க என்று கோஷம் போட்டுக் கொண்டு செல்லும் போது நம்முடைய முதலமைச்சருக்கு எதிராக கோஷம் போட்டதாக சொல்லி அன்றைக்கு பெரிய ரகளை நடைபெற்றது. அவர்கள் மீது கொலை வழக்குப் போட்டார்கள். ஜாமீன் கிடையாது. ஹைகோர்ட்டுக்குப் போய் தான் அவர்களை நாங்கள் வெளியே கொண்டு வந்தோம். நான் கேட்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட

நிலைமை ஒரு இடிஅமீன் ஆட்சியில் இருக்கலாம், சர்வாதிகார ஆட்சியில் இருக்கலாம், யாரையும் கொலை செய்யலாம், குத்தலாம், யாரையும் கற்பழிக்கலாம், போலீஸ் ஒன்று தான் பாதுகாப்பு என்ற நிலைமை இருக்குமானல் இது சரிதானா என்பதை மட்டும் இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20).

மதுரை மருத்துவக் கல்லூரி மாணவர்களை அங்கு இருக்கக் கூடிய போலீஸ் அடித்து இருக்கிறது. சாதாரண அடியா அது? அதுமட்டும் அல்ல, மருத்துவக் கல்லூரி மாணவர்களை லாரியில் ஏற்றிக்கொண்டு போய் ரேஸ் கோர்ஸ் மைதானத்திற்கு கொண்டு போய் ஜாலியன் வாலா பாக் சம்பவத்தை போன்று போலீஸ் சுற்றி வளைத்துக் கொண்டு நன்றாக அடித்து இருக்கிறார்கள். அதற்கு நாம் விசாரணை வேண்டு என்று கேட்டால் ஆர்.டி.ஓ. விசாரணை போட்டு இருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அப்சல்கான் இறந்து போனால்அது பற்றி விசாரிக்க திரவியம் கமிஷன் போட்டார்கள். அவர் இறந்து போனார். அந்த கமிஷன் ரிப்போர்ட் என்ன ஆனது? நடவடிக்கை எடுத்தீர்களா? பால் கமிஷன் ரிப்போர்ட் மீது நடவடிக்கை எடுத்தீர்களா? பால் கமிஷன் ரிப்போர்டில் தெளிவாக சொல்லப்பட்டு இருக்கிறது கொலை தான் என்று. நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்களா? ஆர். டி. ஓ. கலெக்டருக்கு கட்டுப் பட்டவர் தானே? உங்களுக்கு கட்டுப்பட்டவர் தானே? எப்படி உண்மை வெளிவரும். நீங்கள் எப்படி டைரக்ட் செய்கிறீர்களா அப்படிதான் தீர்ப்பு வரும். ஆகவே தான் இன்டிபெண்டண்டு என்கோயரி வேண்டும் என்று கேட்டோம். ஆகவே இதை சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

அதே போல் உடன்குடியில் ஒரு மர்டர். ஸ்கூல் வாட்ச் மேனை கொன்று விட்டார்கள். அங்கு இருக்கக் கூடிய எல்லா கட்கிக்காரர்களும் அன்றைக்கு குற்றவாளியை பிடிக்க வேண்டும் என்று சொன்னார்கள். போலீஸ் மாட்டேன் என்று சொல்லி முக்கியமானவர்கள் தலையீடு என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் ளே. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் எனது தொகுதியில் உள்ள உடன்குடியில் நடந்த இரவு காவலர் கொலை பற்றி சொன்னார்கள். காவல் துறையினர் துரிதமான நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இதை அரசியலாக சொல்ல வேண்டாம் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கும தெரியாத விவரங்களை உடன்குடி சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதற்- நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கொலைக்காரர்களை கண்டுபிடிப்பதில் காலதாமதம் ஏற்படத்தான் செய்யும் இது உறுப்பினருக்கு தெரிந்து இருக்கும். அவர் அவசரத்தில் நிரபராதி யாரையாவது பிடிக்கச் சொல்கிறார்களா என்பதை நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : அதைப் போலவே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் கோவில் வெங்கடாசலம் சாவு ஒரு சந்தேகத்திற்குரியது என்று பேசப் படுகிறது. பெற்றோர்கள் புகார் கொடுத்து இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் சந்தேகிப்பதற்கு பல விஷயங்கள் இருக்கின்றன. அந்த சாவு குறித்து அரசு மௌனம் சாதிக்கிறது. அறநிலையத் துறை அங்கு கோவிலில் இருக்கக் கூடிய நகைகளை திருடுகின்ற காயங்களில் கண்டுபிடிக்கச் சொன்ன காரணத்தாலே இந்த மாதிரி காரியம் நடந்து விட்டது கொலை செய்து விட்டார்கள் என்று சொன்னால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறநிலையத் துறை மிரட்டு கின்ற காரியத்தில் ஈடுபட்டிருக்கிறது. நான் பகிரங்கமாக இந்த சபையில் சொல்கிறேன் விசாரணை கமிஷன் போடுவதற்கு தயாராக இருக்கிறீர்களா. சம்பந்தப்பட்ட கோவில் அமைச்சரை கேட்கிறேன் விசாரணை கமிஷன் வைத்தால் என்ன தீர்ப்பு கொடுக்கப் போகிறார்கள் என்பது வேறு விவகாரம். உண்மையாவது வெளிச்சத்திற்கு வரட்டும். விசாரணை கமிஷனுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

இன்னும் ஒன்றைத்தெளிவாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். சிவகங் க மாவட்டத்திற்கு ஐயா பசும்பொன் தேவர் பெயரை நீங்கள் வைக்க இருப்பதாக சொல்கிறபோது மகிழ்ச்சி. ஆனால் அந்த பசும் பொன் தேவர் சமுதாயத்தில் பிறந்தவர் பரமகுரு ஐ. பி. எஸ். இன்றைக்கு டி. ஜி. பி.யாக இருக்க வேண்டியவர். கேரளாவைச் சேர்ந்த அப்துல்லா டி. ஜி. பி யாக இருந்தார்கள். அவர்கள் போனதற்கு பின்னால் பரமகுரு வரவேண்டும். டி. ஜி. பி. போஸ்ட்டுக்கு. அவரை எங்கே கொண்டு போய் போட்டு இருக்கிறீர்கள். அவர் பிற்பட்ட வகுப்பை சேர்ந்தவர் என்பதற்காக பிற்பட்ட வகுப்பை சார்ந்த கமிஷனுக்கு சேர்மேனாக இருங்கள் என்று போட்டு இருக்கிறீர்கள். பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் என்பதற்காக பிற்பட்ட வகுப்பு கமிஷனுக்கு சேர்மேனாக போடுவதா? ரவிந்திரன் ஐ. பி. எஸ். எங்கே போட்டு இருக்கிறீர்கள் பல்லவன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனுக்கு மேனேஜிங் டைரக்டராக போட்டு இருக்கிறீர்கள். ஆனால் நம்முடைய மதிப்பிற்குரிய மோகன் தாஸ் அவர்கள் எம். ஜி. ஆர். உடைய நம்பிக்கைக்கு உரியவர். எம். ஜி. ஆருக்கு டெலிகேட்டான காரியங்களைச் செய்யக் கூடியவர் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை எழுதுகிறது. நான் சொல்ல வில்லை. அப்படிப்பட்ட மரியாதைக்குரிய மோகன்தாஸ்

அவர்கள், டி. ஐ. ஜி., அதற்குப் பிறகு ஐ. ஜி., அதற்குப் பிறகு உள்ள டி. ஜி. பி. யாகப் புரமோஷன் ஆகியிருக்கிறார். இதை நானா சொல்கிறேன். பத்திரிக்கைகள் எழுதுகின்றன.

பெல்லியப்பா என்ற ஐ. ஏ. எஸ். அதிகாரியை வெளியேற்றினீர்கள். அதற்கு என்ன காரணம் சொல்லப் பட்டது. அடுத்தவன் பெண்டாட்டியை மயக்கிக் கொண்டு வந்து விட்டார் என்று சொல்லப்பட்டது. அது ஹைகோர்ட்டிலே டிஸ்மிஸ் ஆகிறது. அதன் பின்னரும் அப்பீலுக்குப் போகிறீர்கள் அடுத்தவன் பெண்டாட்டியைக் கொண்டு போனதை எப்படி நிரூபிக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இப்படி ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியின் மீது அபாண்டமான குற்றச்சாட்டைச் சொல்வது நியாயமாகுமா? அவர்கள் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டு நியாயமானதாக இருக்க வேண்டாமா? இவ்வாறு செய்வது சரியான காரணம்தானா என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரிக்கைச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அது சம்பந்தமாக ஏதோ ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து. இந்த சபையிலே கொண்டு வந்து அதை வாபஸ் வாங்கப் போகிறோம் என்று சொன்னீர்கள். பீகாரிலே வாபஸ் வாங்கி விட்டார்கள். நாட்டில் வேறு எந்த மாநிலத்திலேயும் இப்படிப் பட்ட சட்டம் கிடையாது. நான், நாவலர் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். நீங்கள் சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டாமா? அவ்வாறுகாப்பாற்றாவிட்டால்நமக்கே மரியாதை இல்லையே, நாம் வெளியே போய் விடுவோம், நமக்கு அமைச்சர் பதவி என்ன பெரிய பதவிவெளியே போய் விடலாம் என்று வந்து விட வேண்டியது தானே. மரியாதையில்லாமல் நமக்கென்ன அமைச்சர் பதவி என்று வந்துவிட வேண்டியது தானே. நீங்கள் பார்க்காத பதவியா? ''தம்பி வா, தலைமை ஏற்க வா'' என்று அண்ணா அவர்களே உங்களை அழைக்க வில்லையா! நீங்கள் எங்கே இருந்தாலும் நாவலர் நாவலர் தான். ஆகவே நான் கேட்க விரும்புகிறேன். பத்திரிக்கைச் சட்டத்தை ரத்து செய்வதற்காக சட்டத்தைக் கொண்டு வரக் கூடாதா! அதற்கான மசோதவை கொண்டு வர அதை இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவர கூடாதா? அல்லது பழையபடி மீண்டும் சொல்லுங்கள்வரும் வரும் என்று கட்டியமடிவது கூறுங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, என்னுடைய மரியாதைக்கு எந்தயிடத்திலும் எப்பொழுதும், எங்கும், எந்தக் குறையும், எந்த குற்றமு ஏற்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தச் சட்டம் அமலுக்கு வராது, நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது என்று சொன்னேன். அதற்கென்று சட்டம் கொண்டு வந்து அதை நீக்கலாம் என்று சொன்னேன். சட்டத் துறை அது பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அது பற்றிச் சட்டம் கொண்டு வந்து நீக்கப்படும் என்று சொன்ன வார்த்தை சொன்ன வார்த்தைதான். எப்பொழுது வரும் என்பதற்கு, விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்





திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். டி. எஸ். அவர்கள் மது விலக்கு ரத்து செய்யப்படும் என்று தெரிவித்தார்கள். அது உண்மையானால் இதில் ஏன் அறிவிக்கவில்லை. ஹோல்சேல், ஆகியவற்றைச் சர்க்கார் எடுத்திருப்பது குறித்து சந்தோஷம் பாட்டிலிங், பிளென்டிங் என்பது கோடிக்கணக்கான ரூபாய்களைத் தருகின்ற தங்கச் சுரங்கம். அதை ஏன் எடுக்க வில்லை? அதை எடுத்தால் இலாபம் வருவதைப் போல் இதை எடுத்தாலும் இலாபம் வரும் என்ற நிலையில் இதை மட்டும் ஏன் எடுக்காமல் இருக்கிறீர்கள்?

பஸ்களைத் தேசிய மயமாக்குவோம் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். நீங்கள் இப்பொழுது அவசரச் சட்டம் எதற்காகக் கொண்டு வருகிறீர்கள்? பஸ்களை எடுத்துக் கொள்ளும் அதிகாரம் வேண்டும் என்று சொல்கிறீர்கள்; அதிகாரம் இருக்கிறது என்று தான் சுப்ரீம் கோர்ட் சொல்லி விட்டதே. ஆகவே எந்தத் தேதியில் எடுக்கப் போகிறோம் என்று சொல்லுங்கள். தேதியைச் சொல்ல வேண்டியது தானே. கல்யாணம் செய்து கொள்ள வேண்டு மென்ற எண்ணம் எப்பொழுது வருகிறதோ பிறகு ஏன் கல்யாணத்தைத் தள்ளிப் போட வேண்டும்?தேதியை அறிவிக்க வேண்டியது தானே. ஐந்து பஸ்களை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்வதிலேதான் சிக்கலே இருக்கிறது. ஐந்து பஸ்களை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லும்போது அங்கே தான் விஷயமே அடங்கியிருக்கிறது. அங்கே தான் பட்டுத் திரை இருக்கிறது. அண்ணா நாமம் வாழ்க என்றுசொல்கிறீர்கள். ஆனால் அண்ணாவுக்கு அண்ணா நாமம் போடுவது சரியல்ல. அண்ணாவின் தேசிய மயக் கொள்கையைப் பின்பற்றியதுதான் கலைஞர் செய்த காரியம். சுப்ரீம் கோர்ட்டிலே வெற்றி பெற்றிருக்கிறது. அந்தக் காரியத்தை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில், சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த அதிகார பூர்வமாக 1 கோடி என்று சொல்கிறார்கள். கும்ப கோணத்திலே அந்த அதிகாரி பெயர் ராஜகோபாலன்—பங்களா கட்டியிருக்கிறார்; பஸ் விட்டிருக்கிறார். அவர் சாதாரண ஒரு கேஷியர். ஆனால் இவ்வளவு காரியங்கள் நடந்திருக்கின்றன இப்படிப் பல போக்குவரத்துக் கழகங்களிலேயும் எவ்வளவு கோடிக் கணக்கான ரூபாய் இப்படி அடிப்பட்டிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும்.

ஆம்னி பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அது பற்றிச் சொன்னீர்களே. ஆனால் இன்னும் அவை ஓடிக் கொண்டிருக் கின்றனவே, அதையும் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்து
விடுங்கள், நேரம் அதிகமாகி விட்டது.

(பிற்பகல் 12-30)

திரு. அ. ரகுமான்கான்: இதோ முடித்து விடுகிறேன். இங்கே
மாண்புமிகு அரங்கநாயகம் அவர்கள் இருக்கிறார்கள்.
ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். நான்
இந்தியாவிலே எல்லா பல்கலைக் கழகங்களும் அன்றைக்கு
டிப்பாசிட் போட்டு வட்டி வாங்கிக் ஃபிக்ஸட்
ஆனால் நம்முடைய யுனிவர்சிட்டியிலே 4 கொண்டிருக்கிறார்கள்.
மாதாமாதம் இண்ட்ரஸ்ட் கொடுத்துக் இலட்சம் ரூபாய்
4 கோடி ரூபாய் ஓவர் ட்ராஃப்ட் கொண்டிருக்கிறோம்.
பல்கலைக் கழகம் அரசாங்கத்தின் வாங்கி இருக்கிறோம்.
இல்லை. இருப்பினும் உங்களுடைய நேரடிப் பொறுப்பிலே
வரவேண்டும் என்பதற்காகச் கவனத்திற்குக் கொண்டு
காரியங்கள் நடக்கின்றன. சொல்கிறேன். இப்படிப்பட்ட

தொழில் கல்வி பற்றி நம்முடைய
அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். முதலமைச்சர்
சரியாக இருக்கலாம். கொள்கை அளவில் அது
நேரம் படிப்பு, 2 மணி நேரம் அதாவது மாணவர்களுக்கு 2 மணி
என்பதெல்லாம் கொள்கை வேலை, 2 மணி நேரம் ஓய்வு
ஆனால் அதற்கான என்ன அளவிலே சரியாக இருக்கலாம்
தயவு செய்து அந்த எக்விப்மெண்ட்ஸ் வைத்திருக்கிறீர்கள்?
விவரத்தைச் சொல்ல வேண்டும்.

அடுத்து பல்கலைக் கழகத்திலே போய் உங்களுடைய
கொள்கை பரப்புச் செயலாளரை தாட்சரோடு ஒப்பிடு
கேள்வி கேட்டார்கள். ஆனால் என்று
அரங்கநாயகம் அவர்கள் சொல்கிறார், அமைச்சர் திரு
பற்றிக் கேட்டால் என்ன தப்பு கூட்டம் வருவதைப்
சன்டே-யைப் பாருங்கள் அதிலே ஒரு என்கிறார். இந்த வார
சொல்லி, முதலமைச்சர் எம். ஜி. ஆர். நடிகையைப் பற்றிச்
படியாக எனக்குத்தான் கூட்டம் அவர்களுக்கு அடுத்த
எனக்கு ரசிகர் மன்றம் இருக்கின்றது வருகிறது என்றும், துபாயிலே
வந்திருக்கின்றது.......... என்றும் குறிப்பிட்டதாக

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே,
எங்களுடைய கொள்கை பரப்புச் செயலாளர் செல்வி
ஜெயலலிதா அவர்களைப் பற்றிய ஒரு கேள்வி
பல்கலைக் கழக வினாத்தாளிலே இடம் பாரதிதாசன்
அந்த ப்ரஃபசரே எனக்குக் கடிதம் பெற்றிருந்தது.
பத்திரிகைகளுக்கும் கடிதம் எழுதி எழுதியிருந்தார்.
இந்த காலத்திய வரலாறு பற்றியது. இருந்தார். அந்தக் கேள்வி
திரு. எம். ஜி. ஆர். அவர்களைப் அதிலே புரட்சித் தலைவர்
அவர்களைப் பற்றியும் கேள்வி பற்றியும், திரு. கருணாநிதி
அப்படிப்பட்ட பகுதியிலே கேட்கக் கூடிய பகுதியாகும்.
கொள்கை பரப்புச் செயலாளரைப் ஆளும் கட்சியினைச் சேர்ந்த
தவறில்லை நான் இப்போதும் பற்றிக் கேள்வி கேட்டது
சொல்கிறேன். அது தவறல்



எங்களுடைய முதலமைச்சர் அவர்களைப் பற்றி அவர்
முதலமைச்சராக ஆனதற்குப் பிறகு இந்தியாவிலே,
தமிழகத்திலே இப்படி ஒரு சக்தி இருக்கின்றது என்று தெரிந்து
கொள்வது சரியல்ல, அதற்கு முன்னாலேயே இங்கே இருக்கின்ற
அரசியல் படிக்கின்ற மாணவர்களும், அரசியலைச் சொல்லித்
தருகின்ற பேராசிரியர்களும் தமிழ்நாட்டிலே புரட்சித் தலைவர்
எம். ஜி. ஆர். என்ற சக்தி தோன்றி வளர்ந்து வருகின்றது
என்பதைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். இவ்வாறு அவர்கள்
முன்னாலேயே சொல்லி இருக்க வேண்டும். அப்போது தான்
அவர்கள் அறிவைப் பரப்புகின்றவர்களாக, அறிவைச் சொல்லித்
தருகின்றவர்களாக, அந்தத் துறையில் வல்லுநர்களாகக் கருதப்
படுவார்களே தவிர, அவர்களுக்குத் தெரியாமலேயே ஒரு கட்சி
ஒரு நாட்டில் வளர்ந்திருக்கின்றது. இப்படி ஒரு கட்சி
இருக்கின்றது என்று சொல்வது சாதாரணக் குடியானவனுக்குச்
சமமாக ஒரு பேராசிரியர் சொல்வது போல் தான் இருக்கும்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, பரீட்சை
எழுதுகின்ற மாணவர்களுக்கு இது போன்ற குறிப்புகளை
எழுதுவதற்குச் சிரமமாக இருக்கின்றது. ஆகவே பாடப்
புத்தகத்திலேயே இதை ஒரு பிரிவாக ஆக்கிட நம்முடைய
அமைச்சர் அவர்கள் சொன்னால் சௌகரியமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவர் அவர்களே,
பிரச்னைகளை எடுத்துக் கொண்டு பேசுகின்ற போது
அதற்கான கருத்தோடு பேச வேண்டுமே தவிர கிண்டலாகப்
பேசக் கூடாது. அப்படிப் பேசுவது என்றால் வேறு விதமாக
எங்களுக்கும் பேசத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்து
விடுங்கள். நேரம் ஆகிறது. மற்றவர்கள் பேச வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: யாரையும் கிண்டல் செய்ய
வேண்டும் என்பதற்காக நான் பேசவில்லை......(குறுக்கீடு)
......அடுத்து ஒரே ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி
முடித்து விடுகிறேன். கரூர், திண்டுக்கல், தூத்துக்குடி இரயில்
பாதைத் திட்டம் மிக முக்கியமான திட்டம் இதனை மத்திய
அரசு கிடப்பிலே போட்டிருக்கின்றது. அதைப் பற்றி நாம்
குறிப்பிட வேண்டும். அதற்காக நாம் போராட வேண்டும்.
அடுத்து தமிழகத்திற்கு போதுமான அளவு அரிசியினை மத்திய
அரசு கொடுக்கவில்லை என்பதற்காகவும் மத்திய
அரசினை எதிர்த்து நாம் போராட வேண்டும்.
மின்சாரக் கட்டணத்தை ஏற்று என்று அவர்கள் சொல்
கிறார்கள். ஆனால் இங்கே இருக்கக்கூடிய இந்திரா காங்கிரஸார்
பிள்ளையையும் கிள்ளி விட்டு, தொட்டிலையும் ஆட்டி விடுவது
போல் செய்கிறார்கள் என்ற அளவிற்கு முதலமைச்சர் அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி இங்கே சொல்லாவிட்டால்

(திரு. அ. ரகுமான்கான்) [1984 பிப்ரவரி 15

கூட மத்திய சர்க்காரின் அணுகு முறை பற்றிச் சொல்லி இருக்க வேண்டும். சேலம் இரும்பாலைப் பற்றிச் சொல்லி இருக்க வேண்டும். அது உருட்டாலையாகி இருக்கின்றது. அதே போன்று நெய்வேலி மூன்றாவது நிலக்கரி சுரங்கத்தைப் பற்றிச் சொல்லி இருக்க வேண்டும். அடுத்து காவிரி நதி நீர்ப் பிரச்சினையைப் பற்றிச் சொல்லி இருக்கவேண்டும். இப்படி ........(மணியடிக்கப்பட்டது.)

*டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் நாள் மேதகு ஆளுநர் அவர்கள் சட்டமன்றத்தின் கூட்டுக் கூட்டத்திலே நிகழ்த்திய உரைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் நன்றி தெரிவித்து முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து ஆட்சிக் கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே அரசு அலுவலர்களின் குறை, அரசியல் வாதிகளின் உணர்வு, தொழிலாளர்களின் நிலை, விவசாயிகளின் இன்றைய நிலைமை' மக்களின் வளர்ச்சிப் பணித் திட்டங்கள், தேர்தல், மாவட்ட நிர்வாகம், இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் இப்படி என்னென்ன மிக அவசியத் திட்டங்கள். நிலைமை உணர்வுகள் என்று சொல்கிறோமோ அதை எல்லாம் உள்ளடக்கிய மிகப்பெரிய ஒரு அரிய பெட்டகமாக, பொக்கிஷமாக நல்லதொரு கருத்தை ஆளுநர் உரையிலே நாம் காண்கிறோம். ஆனால், இங்கே பேசிய எதிர்க்கட்சிக்காரர்கள் ஏதோ உபதேசம் செய்வதைப் போலவும், எச்சரிக்கை செய்வதைப் போலவும், அதிலே ஒன்றும் இல்லை என்பதைப் போலவும், அதிலே இருக்கக் கூடிய ஒன்றைக்கூட தொடாமல் வேறு ஏதோ சொந்தப் பிரச்னைகளையும், அவர்களுடைய நிலைமைகளையுமே சொல்லிக் கொண்டிருந்தார்களே தவிர, ஆளுநர் உரையிலே இருக்கிற கருத்துக்களுக்கு விளக்கம் தரவில்லை என்பது என்னுடைய துணிவான கருத்தாகும். இதனை எண்ணிப் பார்க்கின்றபொழுது எனக்குத் தெரிவதெல்லாம் அவர்களுடைய நிலைமை கற்பூர பாத்தி சட்டி. அத்தர் புனுகு ஜவ்வாது உரமிட்டு, பன்னீரைத் தண்ணிராகப் பாய்ச்சினாலும் வெங்காயம் வெங்காய வாடையே வீசும் என்று சொல்வார்கள் அதைப் போல எவ்வளவுதான் அரசு திட்டங்களை ஆளுநர் உரையிலே எடுத்துச் சொன்னாலுங் கூட அதைவிட்டு இந்த நாட்டிலே அவர்களுடைய நிலைமையும் பேச்சும் விளக்கமும் எவ்வாறு இருக்கிறது என்பதை எண்ணுகிற பொழுது நான் ஏமாற்றம் அடையவில்லை. வெங்காயம் வெங்காய வாடைதான் வீசும். கற்பூர பாத்தி சட்டியும், அத்தர் புனுகு ஜவ்வாது உரமிட்டும் பன்னீரும் தண்ணிராகப் பாய்ச்சினாலும் அவர்கள் நிலைமை அவ்வளவுதான் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்றை இங்கே சொன்னார்கள். இரட்டை ஆட்சி முறைதான் நாட்டிலே இருக்கிறது. இந்திய தேசிய ஒருமைப் பாட்டை ஏற்றுக்கொண்டுதான் மத்திய மாநில அரசு அமைப்பு



1984 பிப்ரவரி 15] (டாக்டர் கே. சமரசம்)

முறைகளே உருவாக்கிக்கொண்டுதான் நாம் சட்டமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக ஒரு அரசு அமைக்கக்கூடிய வழிவகைகளைப் பெற்றிருக்கிறோம். இந்த நிலைமையில் மாநில அரசு மத்திய அரசிலேயிருந்து உதவி பெறுவது சாதாரண விஷயம் இல்லை. அங்கே அதனைப் பெற்று, திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்பது ஒரு உரிமை கோட்கை, தேவை. அந்த அடிப்படையிலேதான் தமிழகம், தமிழ் மக்கள், தமிழர் பணம், தமிழர்களுடைய திட்டம் என்று திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து உதவி பெற்று பல்வேறு திட்டங்களை நிறை வேற்றுகிறோம் பொதுவாகவே. ஆனாலும்கூட அப்படிப்பட்ட திட்டத்தை fifty fifty என்று இரண்டும் இரண்டறக் கலந்து விட்டவர்கள், one not nine-one not nine என்று தங்களுக்கு வழி வகுத்து, யாரோ பெற்றுக் கொடுத்த பிள்ளைக்கு முத்தம் கொடுத்து சொந்தம் கொண்டாடும் முறையில் தமிழகம் இல்லை என்பதை அந்தச் சுயமரியாதைச் சுடரை அணைத்தவர்களுக்கு சூசகமாக எடுத்துச் சொல்ல வேண்டியது எனது கடமையாகும்.

அதுமட்டுமல்ல, சென்னை மாநகராட்சி ஒரு காலத்திலே திருடர் குகையாக இருந்திருக்கலாம். அப்படிப்பட்ட மஸ்டர் ரோல் மைனர்களிடம் மதிப்பை இந்த அரசு எதிர்பார்க்கவில்லை என்பதையும் நான் இந்தநேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே வறட்சியைப் பற்றிக் குறிப்பிட்டிருக் கிறார்கள் ஆளுநர் உரையிலே. அரிசி வேண்டுமென்று சொல்கிற பொழுது ஒரு பருவக் காற்று தவறிய உடனே, அமைச்சரிடத்திலே சென்று, அரிசி இல்லையே என்ன செய்வது என்று கேட்டபொழுது எலிக்கறி சாப்பிடுங்கள் என்று சொன்னார். இன்னொரு அமைச்சர், அரிசி இல்லையே என்ன செய்வது என்று கேட்ட பொழுது, பருத்திக்கொட்டை சாப்பிடுங்கள் என்று சொன்னார் இன்னொரு அமைச்சர், ஒரு வேளை சாப்பிடாதீர்கள். தப்பித் தவறி வாரத்தில் குறிப்பிட்ட ஒரு நாள் இரவு கடையைத் திறந்து வியாபாரம் நடத்தினால். உங்களுடைய கடை லைசன்சே ரத்து செய்யப்படும் என்றுசொன்ன அமைச்சர்கள்கூட இருந்தனர் ஒரு ஆட்சிக் காலத்திலே. அப்படிப்பட்ட நிலை மட்டுமல்லாமல், அதற்குப்பிறகுவந்தவர்கள்ஆட்சிக்குவந்தபொழுதுஉணவு உற்பத்தி 35 இலட்சம்என்றுசொன்னால். அதை 65இலட்சம்டன் அளவுக்கு உணவு உற்பத்தியை உயர்த்துகின்ற அளவுக்கு மழை தண்ணீரும் காவிரித்தண்ணீரும்ஏராளமாகதஞ்சையிலே நஞ்சைக்குப் பாய்ந்து கொழித்திருந்த அந்தநேரத்திலே,அவர்களுக்கு நிர்வாகத் திறமை யில்லா காரணத்தால், ரூ. 2/-க்கு விற்க வேண்டிய அரிசி ரூ. 9, ரூ. 10க்கு விற்றநிலைமையிருந்தது. அப்படிப்பட்ட நிலைமையில் புரட்சித் தலைவர் ஆட்சி இங்கே வந்த பிறகு மிகக் கடுமையாக, 3 ஆண்டுக்காலம் பருவ மழைகள் தவறிய பிறகு, காவிரியிலிருந்து தண்ணீர் வரவில்லை, மேட்டூர் டாம் நிரம்பவில்லை, தண்ணீர் தஞ்சைக்குச் சென்று நஞ்சைக்கெல்லாம் பாயவில்லை. தஞ்சை பஞ்சை பூமியானது என்கின்ற சூழ்நிலை ஏற்பட்டும்கூட, ஆந்திராவிற்கு, மகாராஷ்டிராவிற்குச் சென்று அரிசி எல்லாம் வாங்கி ரூ. 4/-க்கு வாங்கக் கூடிய அரிசியை ரூ. 2 க்கு18,000க்கு மேற்பட்ட நியாயவிலைக் கடைகள் மூலமாக

பட்டித் தொட்டிகளிலே எல்லாம் அரிசி கொடுத்து, அரிசி
இல்லை என்று சொல்லும் நிலை தமிழகத்தில் இல்லை என்ற
வரலாற்றை உருப்படியாக செய்து காட்டிய பெருமை புரட்சித்
தலைவர் அரசுக்கு உண்டு.

அதுமட்டுமல்ல, சேற்றிலே கை வைக்கத் தவறினால்
சோற்றிலே கை வைக்க முடியாது என்று சொன்னவர்களுடைய
கருத்துக்கள் எல்லாம் இப்பொழுது செல்லாக் காசாக ஆகிவிட்டது
புரட்சித் தலைவர் திட்டத்தால்.

அதுமட்டுமல்ல, இங்கே மின் திட்டம் விஸ்தரிப்பு செய்யப்
பட்டது. மேட்டூர் மின் திட்ட விஸ்தரிப்புகள் மிகமிகப்
பாராட்டுதலைத் தரக்கூடியது. சமயநல்லூர் அனல் மின்
திட்டத்தை ஏலம்விட்டு ஏப்பம் விட்டவர்களிடம் மேட்டூர் மின்
திட்ட விஸ்தரிப்புக்காக நான் நன்மதிப்பைப் பெற விரும்ப
வில்லை.

அதுமட்டுமல்ல, இங்கே பேசுகின்றபொழுது சத்துணவுத்
திட்டத்தைப்பற்றிச்சொன்னார்கள். சத்துணவுத் திட்டம் என்பது
குழந்தைகள் காப்பக வளர்ச்சித் திட்டம். அந்தத் திட்டம்
மாமியார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மருமகள் இருந்தாலும்
இல்லாவிட்டாலும், அக்காள், ஆயா ஓரகத்தி, சக்களத்தி வேலைக்
காரி என்று அந்த வீட்டிலே இருக்கக்கூடியவர்கள் இல்லாவிட்
டாலும் பாதுகாப்பாளர்கள் இல்லாவிட்டாலும், பெற்ற சின்ன
குழந்தைகளைக் கொண்டு போய் பாதுகாப்புப் பெட்டகத்திலே
விட்டுவிட்டு வேலைக்குப் போய் திரும்புபவர்களுக்கு, அந்தக்
குழந்தை 4 எழுத்துக்களைக் கற்று, ஒழுக்கத்தைக்
கற்று பண்பாட்டைக் கற்று, அங்கே இருக்கக்கூடியவர்களோடு,
ஒன்றிப் பிணைந்து வளர்ந்துவருகின்ற குழந்தைகளை வேலைக்குச்
சென்று திரும்பும்போது கையோடு இணைத்து வருகின்ற புனிதத்
திட்டமாக இது இருந்து வருகிறது.

(பிற்பகல் 12–40)

ஆனால் அந்தத் திட்டத்தைப் பார்த்து குறை சொல்வது
அவர்களுடைய மதியீன நிலையே. அது மக்களுடைய கருத்தல்ல
என்பதை துணிந்து சொல்வேன். அதுமட்டுமல்ல, இந்தத்
திட்டத்தால் பலவீனர்கள் பலமுள்ளவர்கள் ஆனார்களா?
குருடர்கள் பார்த்தார்களா என்று எல்லாம் சொன்னார்கள்.
நான் ஒன்று சொல்வேன். 10 ஆண்டுகளுக்குப் பிறகு புரட்சித்
தலைவர் சத்துணவுத் திட்டத்தால் அடுத்து வருகிற அரசிற்கு,
மருத்துவம், சமூக நலம், சட்ட ஒழுங்கு ஆகியவற்றிற்கு பட்
ஜெட்டிலே பணம் குறையும் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.
அந்த அளவிற்கு தேவையான அறிவு இன்ஜெக்ஷனை அடிமட்டத்
திலே போடக்கூடிய திட்டமாக புரட்சித் தலைவர் அவர்கள்
இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.



அடுத்து இந்த நாட்டிலே கொண்டு வந்திருக்கிற தன்னிறைவுத்
திட்டம். மன்னனின் மைந்தர்கள் செய்யத் தவறிய திட்டத்தை
மக்களின் மைந்தர்கள் செய்யக் கூடிய ஒரு மகோதன திட்டமாக
இங்கே கொண்டு வந்தார்கள். கிழியாத துணி, வயிறார சோறு
ஒழுகாத வீடு இவற்றிற்கு உத்தரவாதம் அளிக்கக் கூடிய திட்ட
மாக புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்தது இந்த
கிராமிய வளர்ச்சித் திட்டங்கள். ஏழைகளின் சிரிப்பிலே
இறைவனைக் காண்போம் என்று சொன்னார்கள். இந்தியாவின்
ஜீவநாடி கிராமத்திலே இருக்கிறது என்று சொன்னார்கள்.
ஆனால் கிராமத்திலே இருப்பவர்கள் ''பல்ஸ்'' பலம் பெறக்
கூடிய வகையிலே உருவாக்கப்பட்ட திட்டம்தான் இந்த
தன்னிறைவுத் திட்டங்கள்.

கல்வித் துறையை எடுத்துப் பார்த்தால் 1977 வரையில்
கல்லாக் குருடர்கள் ஏராளமாக இருந்த இந்த நாட்டிலே மிக
அருமையான திட்டம் போட்டு அறிவுக் கண்ணைத் திறந்தவர்
புரட்சித் தலைவர் அவர்கள். பிளஸ்–2 என்கிற கிராம கல்லூரி
இன்றைய தினம் நாட்டிலே நடமாடுகின்றது. அதுமட்டுமல்லாமல்
120 ஆண்டுகள் தமிழ் நாட்டில் நான்கு பல்கலைக் கழகங்கள்
தான் இருந்தன, ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்
மட்டும் நான்கு பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
1977 வரையில் இந்த நாட்டில் இருந்த தொழில் கல்லூரிகள்
37; ஆனால் அதற்கு பிறகு புரட்சித் தலைவர் அவர்கள்
ஆட்சியிலே 38; இன்றைக்கு 78 தொழில் கல்லூரிகள் இருப்பதை
நாம் மறந்து விட முடியாது. அதுமட்டுமல்லாது ஒழுகாத வீடு
என்று எல்லோரும் சொன்னார்கள். ஏட்டிலேதான் இருந்தது.
ஆனால் நாட்டிலே நடைமுறைப்படுத்தப்படவில்லை. கிராமிய
வீடு கட்டும் திட்டம் புரட்சித் தலைவர் அவர்களுடைய
ஆட்சியிலே புது பயணம் செய்கிறது. 40 ஆயிரம் வீடுகள்
கட்ட சென்ற ஆண்டிலே திட்டம் இடப்பட்டது. 40 ஆயிரத்து
92 வீடுகள் கட்டி முடித்தார்கள். அடுத்து அக்டோபருக்குள் 1
ஆயிரத்திற்கு மேற்பட்ட அரிசன வீடுகளை கட்ட திட்டமிடப்
பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல இந்த திட்டத்தை உலக வங்கி
பாராட்டி இருக்கிறது. இந்தத் திட்டத்தை அகில இந்தியா
விலே தமிழ்நாடுதான் சிறப்பான கிராம வீட்டு வசதி திட்டத்தை
செய்து வருகிறது என்று மத்திய அரசு நிபுணர்கள் வந்து
பாராட்டி இருக்கிறார்கள். நாடோடி மன்னனின் சமுதாயநலத்
திட்டங்கள் இன்றையதினம் நமது நாடு பெற்றிருக்கிறது என்று
சொன்னால் அது மிகையாகாது.

இங்கே இன்னொரு திட்டத்தைப் பற்றி சொன்னார்கள்.
வீராணம் திட்டம் விரியன் பாம்பு திட்டமாகி கடித்து விட்டது.
அந்த நிலையில் கிருஷ்ணா நதித் திட்டத்தை புரட்சித் தலைவர்
அவர்கள் கொண்டு வந்தார்கள். இந்த கிருஷ்ணா நதித் திட்டம்
மாநில பரிவர்த்தனைக்கும், திராவிட தனித் தன்மைக்கும்,
தேசிய ஒருமைப்பாட்டிற்கும் ஒரு முன் உதாரணமாகும். இப்போது
போடப்பட்ட இந்தத் திட்டம் 20 ஆயிரம் ஆண்டுகளுக்குப்

பிறகு கூட, ஏன் உலகம் உள்ளவரைக்கும் குடி தண்ணீர்
பிரச்சனை சென்னைக்கு வராத வகையில் புரட்சித் தலைவர்
அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற அருமையான திட்ட
மாகும். இந்தத் திட்டத்தைப் பற்றி அண்ணா அவர்கள் பேசி
யிருக்கிறார்கள். வீராணம் திட்டத்தை தொடக்கி வைத்து
பேசுகிறபோது வீராணம் திட்டம் என்பது ஒரு தற்காலிக
திட்டமாக கொண்டு வருகிறேன். இதற்கு பிறகு சென்னை
நகர மக்கள் தண்ணீர் பிரச்னையை முழுமையாகத் தீர்க்க
வேண்டுமென்றால் கிருஷ்ணா நதித் திட்டத்தை நாட வேண்டி
யிருக்கும் என்று அண்ணா அவர்கள் அன்றே சொன்னார்கள்.
அதற்கு பிறகு வந்த அண்ணா பெயரைச் சொன்ன மற்றவர்கள்
செய்யவில்லை. உண்மையான அண்ணாயிசத்தை அவனியில்
பரப்பி வரும் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்கள்தான் அந்தத் திட்டத்தை நிறைவேற்றி உலக அரங்கிலே
இந்தியத் துணைக் கண்டத்தில் ஒருமைப்பாட்டின் பாலமாக
விளங்குகிறார்கள் என்பதை சொன்னால் அது மிகையாகாது.
இந்தநாட்டில்கிராம பொருளாதாரம்வளரவில்லையென்றால்நாடு
வளராது. கிராமப்பொருளாதாரம்உயரவில்லை என்றால் இந்தியா
வின் நிலைமை சுபிட்சம் அடையாது. அந்த அடிப்படையில்தான்
கிராமவேலைவாய்ப்பு திட்டம் ஏராளமாக உருவாக்கப்பட்டுள்ளது.
டிகிரி வாங்காமல், டிப்ளமோ இல்லாமல், பட்டம் பெறாமல்,
எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் தேடாமல், சீனியாரிட்டி
பெறாமல், பட்டிதொட்டி எங்கும் பரவிக் கிடக்கும் பதிவில்லா
தொழில்களில் உள்ள தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்து,
டர்னர், பிட்டர், பிளம்பர், வல்கனைசர் என்றெல்லாம்
உருவாக்கி சான்றிதழ் கொடுத்து வங்கிகள் மூலமாக அவர்
களுக்கு பண உதவி செய்து அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு
உத்தரவாதம் கொடுத்தது தமிழ்நாடு அரசாங்கம்தான். மாண்பு
மிகு புரட்சித் தலைவர் தலைமையில் உள்ள அரசாங்கம்தான்.
அதுமட்டுமல்ல, எங்கெங்கே இதுபோன்ற பதவிகள் தேவைப்
படுகிறதோ அந்தக் கம்பெனிகளுக்கு எல்லாம் அனுப்பி வைத்து
வேண்டிய வசதிகளைக் கொடுத்து, வாய்ப்புகளைக் கொடுத்து,
ஒரு விவசாயத் தொழிலாளியின் ஜீவனாம்சத் திட்டமாக இந்தக்
கிராமப் பொருளாதார திட்டம் வளர்ந்து இருக்கிறது என்பதை
நான் இங்கே எடுத்துச் சொல்வேன்.

அதுமட்டுமல்ல, விவசாயத் தொழிலாளர்கள் பெற்ற
கடனைத் தள்ளுபடி செய்ததன் காரணமாக விவசாயிகள்
இன்றைக்கு நல்ல முறையில் வளர்ந்து இருக்கிறார்கள் என்பதை
யும் நான் இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

இலங்கைத் தமிழர்கள் பிரச்னை பற்றி இங்கே பேசப்
பட்டது. இலங்கைத் தமிழர்கள் பிரச்னை பற்றி ஆளுநர் உரை
யிலும் சொல்லப்பட்டு இருக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்னை
பற்றி ஏற்கனவே வந்தபோது ஆண்டவர்கள் அது உள்நாட்டுப்
பிரச்னை என்று சொன்னவர்கள் உண்டு. அங்கே இருந்து
இங்கே வந்தவர்களைக் கண்காணிகளாக காட்டிக்கொடுத்தவர்
களும் உண்டு. ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலையில் புரட்சித்
தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இலங்கையிலிருந்துவந்த தமிழர்





களுக்குப் பாதுகாப்பு கொடுத்ததோடு மட்டுமல்ல, அவர்களுடைய
உரிமை அங்கே பாதுகாக்கப்படுவதற்கு, அவர்களுடைய உரிமைக்
குரலை உலக மன்றத்தில் எடுத்துச் சொல்வதற்கு இந்தியப்
பிரதமரின் அனுமதியோடு, இந்தியத் துணைக் கண்டத்திலேயே
ஒரு எதிர்க்கட்சி அமைச்சர், அவருடை கட்சியில் இல்லாத ஒரு
அமைச்சர், அதுவும் ஒரு மாநில அமைச்சர் அவர்களை அங்கே
அனுப்பி, உலக மன்றத்திலே இலங்கைத் தமிழர் குரலை
எதிரொலிக்க வைத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்ற
காரணத்தால், சுத்தத் தமிழர் எம்.ஜி.ஆர்.; மற்றவர்கள்
எல்லாம் சுமாரான தமிழர் என்பதை நிலைநாட்டிக் காட்டி
யிருக்கிறார் என்பதை மறந்துவிட முடியாது. அதனால்
இன்றைய தினம் அகில உலகம் முழுவதிலும் புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். எப்படிப்பட்டவர் எப்படிப்பட்ட சுத்தத் தமிழன்
என்பதற்கு இலங்கைத் தமிழர் பிரச்னையை அவர் கையாண்ட
நிகழ்ச்சி எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில்
நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே கல்வித் துறையிலே சில கேள்விகள் கேட்கப்பட்டது
பற்றி எதிர்க்கட்சியிலே உள்ள சில உறுப்பினர்கள் அங்கலாய்த்துக்
கொண்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்
வேன். புரட்சித் தலைவர் தன்னுடைய அறையிலிருந்து அமுக்கிய
பொத்தானால் புறப்பட்ட ஏவுகணைகளுக்கு பயந்து, நடுங்கி,
சப்தநாடியும் ஒடுங்கி, மூலையிலேயே முக்காடு இட்டு, எதிர்க்
கட்சிகள் உதிரிக்கட்சிகளாக உருமாறி, சரணாலயங்களைத்தேடி
அலையக் கூடிய நிலைமைக்கு அவருடைய அரசியல் ராஜதந்திரம்
இருந்த காரணத்தால்தான் இன்றையதினம் இந்த நிலைமை உரு
வாகியிருக்கிறது. ஆட்சியையும், கட்சியையும் இரு கண்களாக
பாவித்து அகில இந்தியாவிலேயே, ஏன் அகில உலகத்திலேயே
தனக்கென தனித்தன்மையை அமைத்துக்கொண்டவர் இந்த
நாட்டின் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்பதை
இந்த நேரத்தில் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இங்கே இன்னொன்றையும் கொண்டுவந்து இருக்கிறார்கள்.
வரி கட்டுப்பாடு அற்ற வணிக மண்டலம். சென்னை-தாம்பரம்
பகுதியில் 150 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களைக் கையகப்படுத்தி
அங்கே ஒரு வரிகட்டுப்பாடு அற்ற வணிக மண்டலம் ஒன்றை
உருவாக்கி இருக்கிறார்கள். இதன் மூலம் வெளிநாட்டினர்
வருகை கூடுதலாகும். இங்கேயிருந்து சிங்கப்பூர், ஹாங்காங்,
பினாங் என்று வெளிநாடுகளுக்குச் சென்று பொருள் வாங்கி
வரவேண்டும் என்று செல்பவர்கள் எண்ணிக்கை குறையும்.
எங்கெங்கோ சென்றுவரும்போது அங்கு உற்பத்தியாகும்
பொருள்களையெல்லாம் இங்கே விமானம் மூலமாகவோ, அல்லது
கப்பல் மூலமாகவோ அந்தப் பொருள்களைக் கொண்டு வந்தால்
100%, 150%, 300%, 350% என்று டியூடி கட்ட வேண்டும்
என்ற நிலைமைக்கு ஆட்படாமல், வாங்கிய பொருள்களுக்கு
எப்படிக் கணக்குக் காட்டுவது என்று திண்டாடாமல், இருக்கின்ற
வகையில், அந்தப் பொருள்களையெல்லாம் இங்கேயுள்ள மக்கள்,
நடுத்தர மக்கள் கூட வாங்கிக்கொள்ள வழிவகை செய்யும்

முறையில் அது ஒரு மிகச்சிறந்த உலகச்சந்தையாக உருவாக இருக்கிறது. இதனால் நமக்கு அந்நிய செலாவணி கிடைப்பது அதிகரிக்கும். அத்தகைய ஒரு திட்டத்தை ஆளுநர் உரையில் சொல்லியிருப்பது உண்மையிலேயே பாராட்ட வேண்டியதொன்றாகும். ஆகவே, அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, வேறுபல அறிவிப்புகளையும் இங்கே செய்து இருக்கிறார்கள். இங்கே ஊராட்சித் தேர்தல்கள் விரைவில் வரும் என்று தெரிவித்த நேரத்தில் எல்லாம் இங்கே இருக்கக் கூடியவர்கள் தேர்தல் வருமா, தேர்தல் வருமா என்றே வினாவை எழுப்பி, அது வராது, வராது என்று சொல்லிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆளுநர் உரையிலேயே அதற்கான தேதிகளை அறிவித்து இருப்பது உள்ளபடியே பாராட்டவேண்டியதொன்றாகும். இதற்கு முன்னாலே எந்த அரசும் இப்படி ஆளுநர் உரையில் அறிவிப்புகளைச் செய்தது இல்லை. ஆனால் புரட்சித் தலைவர்தான் இந்தத் தேர்தல் தேதியை நிர்ணயம் செய்து, ஆளுநர் உரையிலே அறிவித்து இருக்கிறார்கள்.

அதைப்போலவே, அரசாங்க ஊழியர்களுக்கு கொடுக்கக் கூடிய உதவித் தொகை, சலுகைகள், போனஸ் போன்ற எந்தத் திட்டமும் இதுவரையில் ஆளுநர் உரையில் கொண்டு வந்தது கிடையாது. ஏதோ 5ரூ. 10 ரூ. கொடுத்தால் அது வேண்டுமானால் வந்து இருக்கும். ஆனால் இதுபோன்ற 10,000ரூ. ரொக்கத் தொகை கொடுக்கும் திட்டம் அறிவித்ததே கிடையாது. ஆனால் நீண்ட நாட்களாக அரசு ஊழியர்கள் எதிர்பார்த்து இருந்த இந்தத் திட்டத்தை ஆளுநர் உரையிலே கொண்டு வந்து இருக்கும் அரசாங்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கமாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(பிற்பகல் 12-50.)

அது மட்டுமல்ல. புதிய மாவட்டங்கள் உருவாக்குவதில் விருப்பு வெறுப்பின்றி செயல்படுகிற ஒரு அரசாங்கம் இது. ஏற்றத்தாழ்வின்றி செயல்படுகின்ற ஒரு அரசாங்கம் இது. அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நாட்டுக்காக பாடுபட்டவர்கள், தியாகிகள் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்களை எல்லாம் நினைவுக்கூறத்தக்க வகையில், அமைந்துள்ள முறையிலே, எள்ளுக்கும் கொல்லுக்கும் நெல்லுக்கும் தன்னுடைய குடும்பத்தினர் பெயர்களைச் சூட்டியவர்களுக்கு முன்பாக, பெரிய மாவட்டங்களாக இருந்தவைகளை எல்லாம் பிரித்து, இந்த நாட்டுக்காக உழைத்த நல்ல அறிஞர்கள் பெயரை அவைகளுக்குச் சூட்டியிருப்பது எப்படிப்பட்ட அரசாங்கம் இந்த அரசாங்கம் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.



அந்த அடிப்படையிலே ஏற்கெனவே பெரியார் மாவட்டம், இப்போது அண்ணா, சிதம்பரனார், தேவர், வள்ளுவர், வள்ளலார், சாம்புவராயர், காமராஜர், வள்ளியம்மை—இப்படி பல்வேறு மாவட்டங்களை உருவாக்குகின்ற முயற்சியிலே இந்த 1984 ஆம் ஆண்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இப்படி ஒருமுகமாக முடிவெடுத்து அறிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு முயற்சியில் இதுவரையில் வேறு யாரும் ஈடுபடவில்லை. இதனால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பல்வேறு முனைப்பான நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

இன்னும் 10 ஆண்டுகளில் தொழில் வளம் இல்லாத மாவட்டம் இல்லை என்ற நிலை வரும். இங்கே விவசாயத்தை நம்பிக்கொண்டிருக்கிற மாவட்டம் எது, வியாபாரம் பெருகி வருகின்ற மாவட்டம் எது, தொழில் வளம் இல்லாத மாவட்டம் எது, வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிற மாவட்டம் எது என்று தனித்தனியாகப் பிரித்துப் பார்த்து, அந்தந்த மாவட்ட மக்களின் உணர்வுகளுக்கு ஏற்ப, அவர்களுடைய தேவை என்ன என்பதை அறிந்து, அதற்கு உத்தரவாதம் அளித்து, மத்திய அரசிடமிருந்து தேவையான உரிமையைப் பெறுவதற்கு இந்த மாவட்டப் பிரிவினை மிகச் சிறப்பாக அமையும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என்ன தேவை என்று மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்வதற்குக்கூட இது அடிப்படையாக இருக்கும். விஷயம் தெரிந்தவர்களுக்கு இது தெரியும்; தெரியாதவர்கள் விசித்திரமாக எதையாவது சொல்லிக்கொண்டிருப்பார்கள். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஆக, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் எதைப் பேசினாலும், அவர்களுக்கே உரிய பாணியில் பேசுகின்றபோது பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். அந்தக் கருத்து எப்படி இருக்கிறது என்று சொன்னால், ''ஏம்மா விபச்சாரம் செய்கிறாய் என்று ஒருவன் போய் கேட்டான். அந்த அம்மா சொன்னாள், 'கண்ணகிக்கு கோயில் கட்ட, கல்யாண மண்டபம் கட்ட கட்டிட நிதிதிரட்ட விபச்சாரம் செய்கிறேன்' என்றாளாம். அதைப்போன்று எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுடைய பேச்சும் கருத்தும் இருக்கிறது என்பதை எடுத்துச்சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவரின் புனிதத் திட்டங்களினால், போர்க்கால நடவடிக்கைகளால், எதிர்க்கட்சிகள் உதிரிக்கட்சிகளாக மாறி உருத்தெரியாமல் சரணாலயங்களில் சரணமடைந்துள்ளன. தமிழ்நாட்டில் ஆட்சிக் கட்சியின் வளர்ச்சி அரசின் நடவடிக்கை அகில இந்தியாவில், ஏன், அகில உலகில் அபாரத்தன்மையாக வளர்ந்துள்ளது; அசாதாரணமாக அபயமளிப்பதாக உள்ளது, அமோகமாகப் பாராட்டப்படுகிறது, மதிக்கப்படுகிறது என்று

புரட்சித் தலைவர் அரசின் திட்டங்கள் ஆளுநர் உரையில் மிக அருமையாக விளக்கப்பட்டிருக்கின்றன. இதை இந்த உலகம் என்றும் நன்றி உணர்வோடு போற்றி, பாராட்டி, வரவேற்கும் என்று கூறி வழிமொழிந்து அமர்கிறேன். வணக்கம்.

***திரு. மு. ஜான் வின்சென்ட் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைமீது சில கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் செய்துள்ள சாதனைகளையும் இன்னும் செய்ய இருக்கிற ஒவ்வொரு திட்டப் பணிகளையும் குறித்து தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வறட்சிப் பணிகளுக்காக மாநில அரசு......

**திரு. ரா. உமாநாத்:** துணைச் சபாநாயகர் அவர்களே இப்போது எங்கள் கட்சி உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசவேண்டிய நேரம். ஆனால் நீங்கள் வேறு ஒருவரை அழைத்திருக்கிறீர்கள். இது சரியல்ல. (குறுக்கீடு) இப்போது ஒரு மணி ஆகிறது. அவர் பேசி முடித்தப் பின்னால் ரமணி எப்படி பேசி முடிக்க முடியும்? இன்றைக்கு ரமணி பேசவில்லை என்றால் அது எங்களுக்கு ஒரு இழப்பு.

We will lose a speaker also to day. This is an irregular proce dure.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பேசுவதற்கு அழைக்கிறோம். முதலில் திரு. ஜான் வின்சென்ட் பெயர்தான் இருந்தது. திரு. ரகுமான்கான் பேசவேண்டியிருந்ததால் அவரை முதலில் அழைத்துவிட்டு, பின்னால் திரு. ஜான் வின்சென்டை அழைத்தேன். திரு. ரமணி அவர்கள் நாளை தொடர்ந்து பேசலாம்.

**திரு. ரா. உமாநாத் :** ப்ரொசீஜர் படி அழைக்கப்பட வேண்டும். ஆளும் கட்சிக்கு மெஜாரிட்டி இருப்பதால், இந்த விஷயத்தில் ஏதாவது சலுகை காட்ட வேண்டுமென்றால் எதிர்க்கட்சிகள் பக்கம்தான் காட்ட வேண்டும். ஆனால் நீங்கள் இருக்கிற சலுகையை கூட எடுக்கிறீர்கள். இது ரொம்ப வேதனைப்படக் கூடிய விஷயம் It is not correct. Towards the end, if a Speakcr was asked to speak, the press coverage will be aff cted.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதில் வேதனைப் பட ஒன்றும் இல்லை. இன்று முடியாவிட்டால், நாளை தொடர்ந்து பேசலாம்.

***திரு. மு. ஜான் வின்சென்ட் :** வறட்சி நிவாரணத்திற்காக தமிழக அரசு ரூ. 114.28 கோடி செலவழித்துள்ளது. அதே நேரத்தில் மத்திய அரசு ரூ. 68.36 கோடிதான் அனுமதித்தது.



தமிழகத்திலே வறட்சியைப் போக்கிய அளவிலே ரூ. 46 கோடி செலவில், 21,700 துளைக் கிணறுகளை அமைத்திருக்கிறது இந்த மாநிலம் என்றால், இங்கே எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தூற்றுகிறார்கள். தமிழகத்திலே வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தமிழக அரசையும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டுகிறார்கள். குடிநீருக்காக மிகவும் கஷ்டப்படுகின்ற நேரத்தில், தமிழகத்திலே கிராமம் கிராமமாகச் சென்று ஒவ்வொரு இடத்திலும் அரசு அதிகாரிகள் சீரிய முயற்சிகள் செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அனைவரும் ஒட்டுமொத்தமாக, சிறப்பான நடவடிக்கை எடுத்த காரணத்தால், இன்று தமிழகத்தில் வறட்சி மாற்றி அமைக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னர் இங்கே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் மாண்புமிகு இதய தெய்வம் நேரடியாகச் சென்று பார்வையிட்டு, கிட்டதட்ட 7,10,000 குடிசைகளும், 3,183 பாசன கால்வாய்களும் 4,211 சாலைகளும் பாதிக்கப்பட்டிருந்ததை கவனித்து, அங்கு கிட்டதட்ட 10 இலட்சம் மக்களுக்கு உணவு அளிக்கக் கூடிய நிலையில் நிவாரண முகாம்களை அமைத்து நிவாரணப் பணிகளை மேற் கொண்டதற்காக, மக்கள் இந்த அரசை மனப்பூர்வமாக பாராட்டுகிறார்கள்.

இலங்கையில் நடந்த சம்பவத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர், சீரும் சிறப்புமாக நடவடிக்கை எடுத்தது மட்டுமல்ல, அங்கே பாதிக்கப்பட்ட விடுதலை வீரர்களாக மரணம் அடைந்த குட்டிமணி, தங்கதுரை குடும்பத்தினர்க்கு வீட்டுவசதியும், மாதம் ஆயிரம் ரூபாய் ஒதுக்கியமை மக்கள் பாராட்டுகிறார்கள். எதிர்க் கட்சிகளில் சிலர் பிரச்சினைகளைச் சொல்லிய சந்தர்ப்பத்திலும்சரி, விவசாயிகளுக்கு, தென்மேற்கு பருவ மழை 3 ஆண்டுகளாக காலம் தாழ்த்தி வந்தும், ரூ. 464 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 5,000 வடிமுனைக் குழாய் கிணறுகள் வெட்டுவதற்காக ரூ. 7.50 கோடி ஒதுக்கியுள்ளது. ஆக விவசாயிகளும், இங்கே இருக்கின்ற பாமர மக்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இதயத் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும் இதயப் பூர்வமாகப் பாராட்டுகிறார்கள்.

குறிப்பாக தமிழக விவசாயிகளுக்காக 6-வது சிறிய மற்றும் பெரிய பாசனத் திட்டத்தின் கீழ் வெள்ளக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு ரூ. 80.73 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ. 55.14 கோடியும், அடுத்த ஆண்டில் ரூ. 60 62 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. நான் இதயப் பூர்வமாகப் இந்த அரசையும், புரட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 78,000 ஹெக்டேர் நிலத்திற்கு பாசன வசதிக்கு குறியீட்டு, முதல் மூன்று ஆண்டுகளில் 36,556 ஹெக்டேர் நிலத்திற்கு பாசன வசதி செய்து கொடுக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1984 பிப்ரவரி 15

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1973–75-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அன்றைய முதலமைச்சர் பச்சையாறுத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். அங்கே இன்வெஸ்டிகேஷன் இல்லாத நிலையிலும், எஸ்டிமேட் போடப்படாத நிலையிலும், நெல்லை மாவட்டத்தில் அடிக்கல் நாட்டப்படுகின்றது. 1973-ல் நெல்லை மாவட்டத்தில் நாங்குனேரி தொகுதியில் கொடுமுடியாறுத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. இன்வெஸ்டிகேஷன் இல்லை. எஸ்டிமேட் போடப் படவில்லை. ஆக திட்டம் போடப்பட்டு, எதுவும் செய்யாத நிலையில்திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவந்த திட்டத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் புறக்கணித்தது என்று குற்றஞ்சாட்டினார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பாராளுமன்றத்தில் கேட்கக்கூடியவர்கள் அங்கு கேட்பதில்லை. டி.டி.சி. யில் கேட்கிறார்கள். மத்திய திட்டக் கமிஷன் 1980-லே சென்னைக்கு வந்து பார்வையிட்டு ஒரு கருத்தைச் சொன்னார்கள், சிங்கவால் குரங்குகளைப் பாதுகாக்கவேண்டும் என்று. எனவே பச்சையாறு திட்டத்தை கேட்பதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னார்கள்.

பச்சையாறு திட்டத்தை மத்திய திட்டக் கமிஷன் கைவிடுவதாகக் கூறுகின்ற நேரத்தில் அதை மக்கள் மத்தியில், கருத்தை மாற்றுகின்ற விதத்தில், பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அதை தெளிவாக எடுத்துக் கூறாத நிலையில் திசை திருப்பிப் பேசினார்கள்.

(பிற்பகல் 1-00)

ஆகையினாலே, மத்திய திட்டக் கமிஷன் சிங்கவால் குரங்குகள் இருக்கிறது என்று சொல்லி, அந்த திட்டத்தைச் செய்யக் கூடாது என்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது என்ற காரணத்தால், நமது மாநில அரசு, புரட்சித் தலைவர் அரசு கிட்டத்தட்ட 170 குளங்கள், 10 லட்சம் மக்கள் பலன் அடையக் கூடிய இந்த திட்டத்தை, பச்சையாறு—கொடுமுடியாறு திட்டத்தை வலியுறுத்தி அதை விரைவிலே செய்து கொடுக்கவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அடுத்து ஒரு கருத்தை இங்கே ஆளுநர் உரையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 30 ஆயிரம் மானாவாரி ஏரிகளை நவீனப்படுத்துகின்ற திட்டம். இன்று சிறப்பாக மழை பெய்து மேற்கு தொடர்ச்சி மலையில் குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் பயிர்கள் அழிந்துவிடுமோ என்ற நிலையிருக்கிறது. இன்று நெல்லை மாவட்டத்தில் சிறப்பாக பெய்த மழையின் காரணத்தால், பச்சையாறு அணை இல்லாத காரணத்தால், அங்கே உள்ள தண்ணீர் அத்தனையும் கடலிலே வீணாகச் சென்று விடுகிறது. இதுகுறித்து நான் பலமுறை கேட்ட நேரத்தில் பொறியாளர்கள் ஆய்வு செய்கிறார்கள் என்ற பதிலைத்தான் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர்



1984 பிப்ரவரி 15]

[திரு.மு. ஜான் வின்சென்ட்]

அவர்கள் கொடுத்தார்கள். ஆகவே இன்று பச்சையாறிலே உற்பத்தியாகின்ற தண்ணீர் கடலிலே வீணாகச் சென்று சேர்கின்ற நேரத்தில் நான் ஒரு கருத்தை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்குனேரி ஒன்றியப் பகுதியில் பணக்காரர்கள் கையிலே பட்டாதார் குள இருக்கிறது. இந்த இலங்குளம், நெடுங்குளம் அதற்கு கீழே உள்ள மக்கள் மிகவும் கஷ்டப்பட்ட விவசாயிகள், அரிசன விவசாயிகள், சடையநேரி, சவளைக்கால் குளம் ஆகிய பகுதியில் உள்ளவர்கள், மேலே உள்ள தண்ணீரைக் கொண்டு போவதற்கு தடையாக அங்கே கருங்கு இல்லை. என்று சொல்லுகிறார்கள். அந்தப் பண முதலாளிகள், அங்கே இருக்கின்ற ஏழை அரிசன விவசாயிகளுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்றால் நிர்ப்பந்தமான முறையிலே அவர்களிடத்திலே இருந்து பணத்தை வசூல் செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். அப்படி அவர்கள் கேட்கிற நேரத்தில் கிட்டத்தட்ட 126 ஏக்கர் நிலங்கள் சாவியாகப் போகக்கூடிய நிலையும் பட்டினி கிடக்கும் நிலையும் உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த ஆண்டு 1984 ஜனவரி மாதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அதற்கான சிறப்பான திட்டத்தை வலியுறுத்தி கண்டிப்பாக அங்கே தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று சொல்லி 2 கிராம விவசாயிகளைக் காப்பாற்றியிருக்கிறார்கள். ஆகவே நடப்பாண்டில் அங்கே சிறு விவசாயிகளுக்கு, சிறு பாசனத்திற்காக மானாவாரி குளங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையை அரசு இப்படிப்பட்ட குளங்களிலே உள்ள விவசாயிகளைக் காப்பாற்ற கூடிய வகையில் அங்கே அவர்களுக்கு தண்ணீர் போவதற்குரிய நிலையில் அவர்களுக்கு மறுகால் கட்டிக் கொடுப்பதற்கு தகுந்த ஏற்பாடுகளை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே படித்த மாணவர்களுக்கு வேலை இல்லை ஆகவே வீட்டுக்கு ஒரு ருக்கு வேலை என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்தை, அவர்கள் வலியுறுத்திய கருத்தை இங்கே செய்து காட்டியிருக்கிறார்கள். இன்று கிராமத்திலே உள்ள மக்கள் நகரத்திற்குச் செல்ல விரும்பவில்லை. ஆனால் நகரத்திலே இருக்கிற மக்கள் கிராமத்திற்கு வருவதற்கு ஆசைப்படக்கூடிய அளவில் கிராமத்திலே உள்ள மக்களுக்கு, மாணவர்களுக்கு சுயவேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் நல்ல ஒரு திட்டத்தை அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு, செய்து கொடுத்திருக்கிறார்கள் என்றால், இந்த தமிழக மக்கள் இதய பூர்வமாக வாழ்த்து கிறார்கள்.

அதைப்போலவே போக்குவரத்துக் கழகத்தை எடுத்துக் கொண்டால் பாரத துணைக் கண்டத்திலே தமிழகத்தைப் போல் சிறப்பான பேருந்துகள் இல்லை. சிறப்பான முறையில் நிர்வாகம் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட நல்ல பல திட்டங்களை செய்து கொடுக்கும் இந்த அரசை மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பாராட்டவில்லை. பாராட்ட

[1984 பிப்ரவரி 15

[திரு. மு. ஜான் வின்செண்ட்]

விட்டாலும் பரவாயில்லை, தூற்றவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட நல்ல திட்டங்களைச் செய்து கொண்டு வருகின்ற இடத்திலே, எத்தனை கிராமங்கள் விடப்பட்டது என்ற நிலையில், அரசு சீரும் சிறப்புமாக போக்குவரத்து வசதிகளைச் செய்து கொண்டிருக்கிறது. ஆனாலும் கூட, சில குக்கிர மங்களுக்கு, பெரிய ரோடுகள் போட முடியாத இடங்கள் பெரிய பஸ்கள் போவதற்கு வாய்ப்பு இல்லாத இடங்களுக்கு நாங்குநேரி தொகுதியில் மினி பஸ்களை விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இன்றைக்கு மாவட்டங்களை பிரிக்கின்ற நிலையில் அருமையாக நமது மாநிலத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பிரித்து கொடுத்து இருக்கிறார்கள். பிரித்தது மட்டுமல்ல, பிரிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நல்லமுறையில் பெயரும் சூட்டப்பட்டு உள்ளதை மக்கள் பாராட்டுகிறார்கள். பல ஆண்டுக்காலமாக அரசுப் பணியிலே பணி புரிந்தவர்கள் 10 ஆயிரம் கேட்டார்கள் எந்த அரசும் செய்யாத, எந்த அரசும் செய்ய முடியாத, இதுகுறித்து கேட்காத நிலையிலே, 1984-ம் ஆண்டு ஆளுநர் உரையிலே சேர்க்கப்பட்ட பெருமை மரியாதைக்குரிய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைச் சாரும் என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். வாக்குறுதி கொடுத்து மறுத்தவர்கள் உண்டு இந்த நாட்டிலே. ஆனால் வாக்குறுதி கொடுக்காத நிலையில் 10 ஆயிரம் கொடுப்பதாக சொல்லாத நிலையில் கூட, வாக்குறுதி கொடுக்காத நிலையிலும் கூட, 5 ஆயிரத்தை அரசு கொடுப்பது என்றும், அரசு ஊழியர்களாக பணிபுரிபவர்கள் இடத்திலிருந்து மாதம் 20 ரூபாய் பிடித்தம் செய்து 5 ஆயிரமாக ஆக்கி, மொத்தமாக ஒய்வு பெறுகிற நேரத்தில் 10 ஆயிரம் ரூபாயை கொடுக்கிற வகையில் இந்த அரசு தீட்டியுள்ள திட்டத்தை நாம் மட்டும் அல்ல, தமிழக மக்கள் மட்டும் அல்ல, பிற மாநில மக்களும் பாராட்டுகிறார்கள்.

அது மட்டும் அல்ல, தமிழகத்தில் கட்டிடக் கலையிலே ஈடுபட்டிருக்கும் கலைஞர்களுக்கு, நிபுணர்களுக்கு, கட்டிட கலையிலே ஈடுபட்டிருக்கும் தொழிலாளர் வர்க்கத்தினருக்கு, அவர்கள் தங்கள் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற நேரத்தில் அகால மரணம் அடைந்தால், இதுவரையில் அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. ஆனால், அப்படி மரணம் அடைந்தவர் களுக்கு இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பத்தாயிரம் ரூபாயைக் கொடுக்க முன் வந்திருக்கிறது என்றால், அதை யாராலும் பாராட்டாமல் இருக்க முடியாது. இதற்கு முன்னாலே இந்த அரசு கடலிலே மீன் பிடிக்கும் தொழிலாளர் களுக்கும், பனை மரம் ஏறுகின்ற தொழிலாளர்களுக்கும் மரணமடைந்தவர்களுக்கு இவ்வாறு கொடுத்து உதவி செய்து வந்தது, அதைப்போலவே கட்டிடக் கலை நிபுணர் களுக்கு, அவர்கள் தொழில் செய்யும் போது மரணம் அடைய நேரிட்டால் உதவி செய்ய முன்வந்திருக்கிறது.



1984 பிப்ரவரி 15]

[திரு. மு. ஜான் வின்செண்ட்]

அடுத்து இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். தேர்தல் வருமா வராதா என்று கேட்டார்கள், இங்கே ஆளுநர் உரையிலே சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே வருகிற ஏப்ரல் மாதத்திலே 19, 23 தேதிகளில் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் கூட தேர்தல் நிச்சயமாக வரும் என்று எதிர்பார்த்த நேரத்தில், கோர்ட்டிலே கொண்டு போய் ரிட் போட்டு விட்டார்கள். ஆனால், இப்போது இது நிச்சயமாக நடைபெறும் என்ற வகையில் அதிகார பூர்வமாக ஆளுநர் உரையிலேயே தெள்ளத் தெளிவாக விளக்கம் கொடுத்திருக்கிற காரணத்தால், தேர்தல் நிச்சயமாக வந்து விடும். தேர்தல் நடக்க வேண்டும் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எண்ணிக் கொண்டிருக்கிற நேரத்தில், அதை நடத்திக் காட்டவேண்டும் என்று எண்ணுகிற நேரத்தில், மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் வராது வராது என்று சொல்வதைப் பார்க்கும்போது, அவர்களுக்கே தேர்தல் வருவது விருப்பம் இல்லையோ என்று மக்கள் எண்ணுகிறார்கள்.

இந்த ஆண்டில் 1984-ல் அருமையாக சிறப்பான முறையில் மழை பெய்து வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுகிற நேரத்தில், குறிப்பாக ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நெல்லை மாவட்டத்திலே பெரிய குளங்களாக 4 குளங்கள் இருக்கின்றன. வள்ளியூர் குளம், மாதனூர் குளம், வடக்கு விஜயநாராயண குளம், நாங்குநேரி குளம், ஏறாந்தை, தெற்கு ஏறாந்தை என்று அதற்கு கீழே குளங்கள் உள்ளே இருக்கின்றன. இந்தக் குளங்கள் நிரம்பினால் ஏராளமான இடங்களில் பயிர் செய்ய முடியும் என்பதோடு கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான கிராமங்கள் குடிதண்ணீருக்கு பயனடையும். 5 ஆண்டுகளாக குடிதண்ணீருக்கு இந்தக் கிராமங்கள் சிரமப்படுகின்றன. ஆகவே மணிமுத்தாறு பச்சையாறு கால்வாய் மூலமாக வரும் தண்ணீர் நெல்லை மாவட்டத்திலுள்ள பெரிய ஏரியான விஜயநாராயணம் குளம் நிறைந்து வரும்போது, அதற்குக் கீழ் திசையன்விளை வரையுள்ள எண்ணற்ற பாசன நிலங்கள் பாசன வசதி பெற உடனடியாக நடவடிக்கை எடுத்து தண்ணீர் விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது தெற்கு ஏறாந்தை வடக்கு ஏறாந்தை குளங்களில் தண்ணீரே இல்லை. இதனை கருத்தில் கொண்டு விஜயநாராயண குளத்திற்கு கீழ் உள்ள அனைத்து குளங்களுக்கும் தண்ணீர் விட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிச் செய்வதன் மூலம் கிட்டத்தட்ட 25 கிராமங்களுக்கு பாசனத்திற்கு பயன்படுத்துவதோடு, குடிதண்ணீருக்கும் உதவும். ஆகவே இந்த தண்ணீரை அப்படி எல்லா குளங்களுக்கும் கொண்டு செல்வதற்கு அரசு உத்தரவிட வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம் அதிகாரிகள் அப்படி கொண்டு செல்வதற்கு அனுமதிப்பது இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசு உத்தரவாக இது இடப்படுமானால், தண்ணீரை எல்லாக்

[1984 பிப்ரவரி 15

[திரு. மு. ஜான் வின்சென்ட்]

குளங்களுக்கும் கொண்டு சென்று அந்த 25 கிராமங்களுக்கும் குடிதண்ணீருக்காக மட்டும் இன்றி, விவசாயத்திற்கும் பயன்படுத்த நல்லதொரு வாய்ப்பாக அமையும் என்று சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

கடந்த 1981, 82, 83 ஆம் ஆண்டுகளில் கிராமங்களுக்கு குடிதண்ணீர் திட்டத்தின் அடிப்படையில், எத்தனையோ கிராமங்களுக்கு குடிதண்ணீர் வடிகால் வாரியத்தின் மூலமாக திட்டத்தை செயல்படுத்தி ஏராளமான போர்வெல்கள் போட்டார்கள். அப்படி ஏற்பாடு செய்ததற்காக எங்களுடைய இதய தெய்வம் ஒப்பற்ற தலைவர் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். என் தொகுதி மக்கள் இதய பூர்வமாக பாராட்டினார்கள். ஆனால் அப்படிப் போடப்பட்ட போர்வெல்கள் 3 மாதத்திற்கு பின்னாலே உப்பு நீராக மாறிவிட்டன. அப்படி மாறிவிட்ட சில கிராமங்களின் பெயரைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். நாங்குநேரி, ஒன்றியம் பனையன் குளம், பாப்பான்குளம், மன்னார்புரம், பண்டாரபுரம், வடக்கு ஏறாந்தை, தெற்கு ஏறாந்தை, கண்மணியின் குடியிருப்பு, மூலக்கரைப்பட்டி ஆகியவற்றில் கிட்டத்தட்ட 50,000 மக்கள் வசிக்கிறார்கள். அப்படிப்பட்ட பகுதிகளுக்கு பெரிய அளவில் திட்டத்தைத் தீட்டி மூலைக்கரைப் பட்டிக்கு கருங்குளம் ஆற்று தண்ணீரை 1 கோடி 10 லட்சம் எஸ்டிமேட்டின்படி கொண்டு வருவதற்கு விரைவிலேயே அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு மக்கள் பால் அன்பு கொண்டு ஏராளமாக குழாய் கிணறுகளை போட்டிருக்கிறது. ஆனாலும் 3 மாதத்திற்குள் அவை உப்பு நீராக மாற்றப்படுவதால், அவற்றை பெரிய திட்டங்களாக மாற்றி, குடிநீர் வடிகால் வாரியத் திட்டத்திலே சேர்த்து, செய்து கொடுக்க ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-10.)

நான் கூறிய பல கிராமங்கள், பல பிரச்சினைகள் இருக்கிற நேரத்திலே மக்கள் மத்தியில் அதிகாரிகள் குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்து வைத்த நிலைமையை அவர்கள் பாராட்டினார்கள். ஆனால் ஆசையோடு எதிர்பார்த்த திட்டம் அதிகாரிகள் சிரும் சிறப்புமாக செய்துகொடுத்த திட்டம் மக்கள் பால் அன்பு கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் செய்து கொடுத்த திட்டம், அந்தத் தண்ணீர் நிரந்தரமாக சுத்தமாக, ருசியாக இருக்குமானால் பிரச்சினையில்லை. ஆனால் அப்படியில்லாத போது அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் மீண்டும் ஆராய்ந்து குடிநீர்வடிகால் வாரியத்தின் மூலமாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே செய்யாததை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே செய்யாததை அண்ணா தி.மு.க. ஆட்சி செய்தது என்றால் அதை பாராட்டக் கடமை





984 பிப்ரவரி 15]

[திரு. மு. ஜான் வின்சென்ட்]

பட்டிருக்கிறார்கள். நாங்குநேரி பகுதியில் சிமின்ட் லைனிங் கேட்டோம். அதே நேரத்திலே நம்பியாற்றிலே சிமின்ட் லைனிங் போடப்பட்டது. ஆனால் மணிமுத்தாறு பாசனத்தில் 480 கன அடி தண்ணீரை எடுத்தும்கூட அற்றம்வரை டெயில் எண்ட் வரை செல்லும் தண்ணீர் 400 கன அடிக்கும் குறைவாக இருக்கிற காரணத்தினால் மணிமுத்தாறு அணையிலிருந்து கீழே 1, 2, 3, 4, ரீச்கள் வரை சிமின்ட் லைனிங் போட்டு தனிக்கால் வெட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனிக்கால் வெட்டாத காரணத்தினால் விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது. அங்கே சிமின்ட் லைனிங் போட்டு ஒவ்வொரு குளத்திற்கும் தனிக்கால் போட்டுக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இன்றைய தினம் அரசு சிறு நீர்ப்பாசனத்திற்காக கணிசமான தொகை ஒதுக்கியிருக்கிற காரணத்தால் இதைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இங்கே நல்ல திட்டத்தை அறிமுகப்படுத்திக் கொடுத்த இதயதெய்வம் புரட்சித் தலைவருக்கு இதயப் பூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. நல்லிலம் அ. கலையரசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய தீர்மானத்தில் வழிமொழிவதற்கான வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தின் முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆளுநர் உரை மூலமாக மிகப் பெரிய மாவட்டமாக இருக்கக்கூடிய தஞ்சை மாவட்டத்தை கீழ்த்தஞ்சை என்று அழைக்கப்பட கூடிய அந்தப் பகுதியை அதிலே இருக்கிற திருவாரூரை தலைநகராகக் கொண்ட தில்லையாடி வள்ளியம்மை பெயரிலே தனியொரு மாவட்டத்தை அமைத்ததற்காக கீழ்தஞ்சை மாவட்ட மக்கள் அனைவரின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கீழ்த்தஞ்சை மாவட்டம் விவசாயத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கக்கூடிய மாவட்டம். விவசாயத் தொழிலாளர்கள் என்றால் ஏழை ஆதிதிராவிடர்கள் வாழக்கூடிய மாவட்டமாகும். பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் 1967 ஆம் ஆண்டில் ஆட்சி பீடத்தை ஏற்றுக் கொண்டது. அந்த நேரத்திலே தாளமுத்து நடராசன் திராவிட இயக்கத்திற்காக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அரும்பணியாற்றி அந்த இயக்கம் அரியணையேறுவதற்குத் துணையாக இருந்தார். அதை மறக்காமல் புரட்சித் தலைவர் அவர்கள் தில்லையாடி வள்ளியம்மை பெயரிலே இன்றைக்கு தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த அந்த அம்மையாரின் பெயரிலே, அண்ணல் காந்தியாருக்கு தென் ஆப்பிரிக்காவிலே நிறவெறியை எதிர்த்துப் பாடுபட்ட போது துணையாக இருந்தவரை நினைவில் வைத்து பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். அந்த தன்மையைப் பார்த்து என்னுடைய உரையை துவங்குவதற்கு முன்னால் நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[1983 பிப்ரவரி 15

திரு. நன்னிலம் அ. கலையரசன்]

ஆளுநர் உரையிலே வெள்ள நிவாரணத்திற்காகவும் வறட்சி நிவாரணத்திற்காகவும் புரட்சித் தலைவர் ஆட்சி எந்த அளவுக்கு செயல்பட்டு இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே ஏற்பட்ட வறட்சிக்காக ஏறத்தாழ லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து வறட்சியைப் போக்கியிருக்கிறார்கள். வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட மாவட்டத்திலே நெல் உற்பத்தியானது நிறுத்தப்படாமல் இருப்பதற்காக 5 ஆயிரம் வடிமுனை குழாய் கிணறுகள் ஏற்படுத்த திட்டம் தீட்டப்பட்டது. அதற்கு ஏழு கோடி ரூபாய் செலவு செய்ய வழிவகுக்கப்பட்டது. ஒரு கிணறு தோண்ட 10 ஆயிரம் ரூபாய் கடனாகக் கொடுக்கிறார்கள். அப்படி பார்க்கிற போது 2,521 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டது.

இந்தக் குழாய்க் கிணறுகள் அத்தனையும் ஒரே ஆண்டிலேயே அமைக்கப்பட்டதாகும். இதை அமைக்க வேண்டும் என்று சொன்னால் வருவாய்த்துறை முக்கியமாக இருந்து செயல்பட வேண்டும். எந்த எந்த இடத்தில் நல்ல தண்ணீர் வருகிறது என்பதை பார்த்து ஆராய்ந்து திட்டமிட்டு அந்தப் பணியை செய்து முடிக்க வேண்டும். அதற்குப் பிறகு அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு அந்த நிலத்தைப் பதிவு செய்வதற்கு ரிஜிஸ்டர் ஆபீஸ் உதவியாக இருக்கவேண்டும். அதற்கு பிறகு அமைக்கப்பட்ட குழாய் கிணறுகளுக்கு மின்சார வாரியம் துணையாக இருக்கவேண்டும். அதற்கு பிறகு அந்த குழாய்கள் போடுவதற்கு வேளாண்மைத்துறை அதில் பங்கெடுத்தாக வேண்டும் இத்தனைக்கும் மேலாக இந்த காரியங்கள் அத்தனையையும் நிலவள வங்கி முக்கியமாக இருந்து செய்தாக வேண்டும். இப்படி பல பிரிவுகள் அடங்கிய பல துறைகளை ஒன்றாக இணைத்து ஒரே ஆண்டிலேயே ஏறத்தாழ 2521 வடிமுனை குழாய் கிணறுகள் இன்றைக்கு அமைக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு மூல காரணமே இந்த நடப்பு ஆண்டில் சம்பா பயிருக்கு பாதுகாப்பு தரப்படவேண்டும் என்பதுதான். சம்பா பயிர் மூலம் கிடைக்க வேண்டிய நல்லை கொள்முதல் செய்யவேண்டும், உற்பத்தியை பெருக்கவேண்டும் என்பதற்குத் தான் இப்படிப்பட்ட உயரிய திட்டத்தை வருவாய்த்துறை நேரடியாக கண்காணித்தது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டு ஆகவேண்டும்.

அதோடு மட்டும் அல்ல, கொள்முதல் விலையை மத்திய அரசு நிர்ணயித்த போதிலும் ஏறத்தாழ 35 ரூபாய் அதிகமாக இன்றைக்கு கொடுத்து இருக்கிறது. சென்ற ஆண்டு 1983ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் தேதியிலிருந்து இந்த ஆண்டு 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29 ஆம் தேதி வரை 35 ரூபாய் அதிகப்படுத்தி இந்த அரசு கொடுத்திருக்கிறது. அந்த அளவில் பார்க்கிறபோது இன்றைக்கு சம்பா சாகுபடி செய்வதற்கு மட்டும் தமிழகத்தில் வேளாண்மைத்துறை சம்பாவுக்கு தேவையான விதையை வாங்குவதற்கும், உரம் வாங்குவதற்கும் பூச்சிக்கொல்லி மருந்து வாங்குவதற்கும் ஏறத்தாழ 465 லட்சம் ரூபாய் வேளாண்மைத்துறை மூலமாக செலவு செய்து இருக்கி



1984 பிப்ரவரி 15],

[திரு. நன்னிலம் அ. கலையரசன்]

றார்கள். இந்த அளவுக்கு ஒருபக்கத்தில் வருவாய்த்துறை மூலமாக வடிமுனை குழாய்க் கிணறுகள் இறக்கியும், ஒரு பக்கத்தில் வேளாண்மைத்துறை மூலமாக 465 லட்சம் செலவுசெய்து பயிர் செய்யப்பட்டது. இன்றைக்கு அந்த பயிர்கள் அத்தனையும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. வெள்ளம் என்று சொன்னால் நாம் எல்லாம் கேள்விபட்டு இருக்கிறோம். மேட்டூரில் தண்ணீர் நிரம்பினால் காவேரி ஆற்றில் வெண்ணாற்றுப் பகுதியில் தண்ணீர் அதிகரிக்கும் என்று சொல்வார்கள். அது போலத்தான் இன்றைக்கு டிசம்பர் மாதம் 23 ஆம் தேதி அந்த நிலை ஏற்பட்டது. ஒருபக்கத்தில் வெட்டாறு வெண்ணாற்று பகுதியில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அதே நேரத்தில் மழை நீர் பூராவும் சூழ்ந்துகொண்டு குடிசைகளை காலிசெய்யக்கூடிய அளவுக்குப், ஓட்டு வீடுகளில் இருக்கக்கூடியவர்கள் கோயில்களை தேடி, பள்ளிக்கூடங்களைத் தேடி, பெரிய வீடுகளைத் தேடி போகக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இதையெல்லாம் பார்க்கிற போது ஒரு சம்பவத்தை குறிப்பிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த குடவாசல் தாலுக்காவில் எண்கண் என்ற முருகனுடைய பிரசித்திப்பெற்ற கோவில் இருக்கிறது. பக்கத்திலே பூங்காவூர் என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரை கோலவாய்க்கால் என்ற பெரிய வாய்க்கால் அழித்துவிட்டது. தலைக்குமேல் தண்ணீர் போகக்கூடிய நிலையில் அந்த ஊரில் உள்ள மக்கள் பக்கத்தில் இருக்கின்ற எண்கண் கிராமத்திற்கு வந்தார்கள். அங்கே 2 முகாம்கள் அமைத்து இருந்தார்கள். அங்கு இருக்கக்கூடிய கல்யாண மண்டபத்தில் ஒரு முகாம், பள்ளிகூடத்தில் ஒரு முகாம் இருந்தது. நான் டிசம்பர் மாதம் 23 ஆம் தேதி போய் பார்த்தேன். அங்கே இருந்த தாசில்தார் வருவாய்த்துறையைச் சேர்ந்தவர்கள் அந்த மக்களுக்கு உணவு அளித்துக்கொண்டு இருந்தார்கள். 27, 28 ஆம் தேதியில் எண்கண் என்ற ஊரில் உடைப்பு ஏற்பட்டு வெள்ளாறு அந்த பகுதியில் திரும்பி அந்த ஊரை நாசப்படுத்திய நேரத்தில் அங்கு இருந்த மக்கள் உள்ளூர்க்காரர்கள் நீங்கள் எல்லாம் வெளியில் இருந்து வந்தவர்கள் தங்கியிருக்கிறீர்கள். எங்களுக்கு தங்க இடம் வேண்டும் இந்த ஊரில் நீங்கள் இருக்கக் கூடாது என்று அந்த மக்களை காலி செய்து அடுத்த ஊருக்கு அனுப்பி விட்டார்கள். இப்படிப்பட்ட வெள்ளத்தினுடைய கொடுமை. சாதாரணமாக காவேரியிலே வெண்ணாற்றிலே வந்த வெள்ளம் என்று கருத முடியாது. மழை பொழிந்ததால் ஏற்பட்ட வெள்ளம் இந்த வெள்ளம் எங்கே இருந்து வருகிறதென்று காண முடியாமல் போய்விட்டது. இன்னும் சொல்லப்போனால் திருச்சி மாவட்டத்தில் பொழிந்த அந்த மழை தஞ்சை மாவட்டத்தை தாக்கிய போது கல்லணைக்குப் பின்னாலே தஞ்சைக்கு அருகிலே வெள்ளாற்றிலே நிரம்பிய காரணத்தால்தான் இந்த வெள்ளத்தை கொள்ளிடத்தின் மூலமாகவோ, காவேரி மூலமாகவோ திருப்பி விடமுடியாமல் போய் விட்டது. இந்த நேரத்தில் பரிதவித்த மக்கள் எங்கே போய் தங்குவோம். யார் நமக்கு ஆதரவாக இருப்பார்கள் நம்முடைய சொத்துகள் எல்லாம் போய் விட்டது. ஆடுகள், மாடுகள், கோழிகள், அடைகாக்கப்பட்ட கோழிகளை கூடையிலே தாங்கிக்கொண்டு விவசாய பெருங்குடி

மக்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி நாகப்பட்டினத்திற்கு வந்து இறங்கினார்கள். ஹெலிகாப்டரிலே வந்து இறங்கினார்கள். மரியாதைக்குரிய உறுப்பினர் திரு உமாநாத் அவர்களும், மரியாதைக்குரிய திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் அருமை நண்பர் அவர்களும், புரட்சித் தலைவர் வந்தவுடனே அங்கே இருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நாகப்பட்டினத்திலே சொன்னார்கள், நான் திட்டமிட்டபடி. புறப்படவில்லை, எந்தெந்தப் பகுதிகளிலே பாதிப்பு அதிகமாக இருக்கின்றனவோ அந்தப் பகுதிகளை நேரடியாகப் பார்க்க இருக்கிறேன், உறுப்பினர்கள் அதைப் பற்றித் தெரியப்படுத்தினால் நேரில் சென்று பார்ப்பேன் என்று சொன்னார்கள். அதைப்போல, திருவாரூர் நகரத்திற்கு வந்து பார்த்தார்கள், பிறகு கொரடாச்சேரி, நீடாமங்கலம் ஆகிய இடங்களைப் பார்த்தார்கள். வெட்டாற்றில் உடைப்பு ஏற்பட்டு கங்கை கரையைப்போல இருந்த காட்சியைப் பார்த்தார்கள். அப்படிப் பார்த்ததற்குப் பிறகு தஞ்சைக்குச் சென்று உத்தரவு போட்டார்கள். எவ்வளவு கோடி ரூபாய் செலவானாலும் பரவாயில்லை, மக்களின் உயிர் போகக் கூடாது, உயிர் போகாத அளவிற்குக் காப்பாற்ற வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அதற்குப் பிறகுதான் இராணுவத்தின் மூலம் பெய்லி பாலத்தைக் கட்டியதைப் பார்க்கிறோம். ஆயிரக் கணக்கான ரூபாய்களை அந்தப் பாலத்திற்காக தமிழக அரசு செலவு செய்திருக்கிறது.

(பிற்பகல் 1-2 )

1658 முகாம்களில் பத்து லட்சம் பேர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. 7,10,000 குடிசைகள் பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டன. பாதிப்புக்கு ஆளான ஒவ்வொரு குடிசைக்கும் 210 ரூபாய் முழு நிவாரணம் என்ற முறையில், அரை நிவாரணம் என்ற முறையில் 60 ரூபாய் என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நான் இந்த நேரத்தில் எதிர்கட்சிகளைக் கேட்கிறேன், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பத்து லட்சம் பேர்களுக்குச் சோறு போட்டாரே ஊழல் என்று சொல்கிறீர்களே, கர்ஜனை செய்கிறீர்களே உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். இந்த பத்து லட்சம் பேர்களும் நிவாரணம் பெற தகுதியற்றவர்களா? 7,10,000 குடிசைகளுக்குப் பணம் வழங்கியிருக்கிறாரே அவர்கள் அத்தனை பேர்களும் நிவாரணம் பெற தகுதியற்றவர்களா என்பதை இந்த மன்றத்திற்கு சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 7,10,000 குடிசைகள் பாதிப்புக்கு ஆளாகியது 1658 முகாம்களில் இருந்த பத்து லட்சம் பேர்களும் அவர்கள் அத்தனை பேர்களும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்தவர்கள் அல்ல. ஏழை எளிய, விவசாயத் தொழிலாளர்கள்.

இன்னும் சொல்லப் போனால், புரட்சித் தலைவர்கள் சத்துணவுத் திட்டத்தின் மூலம் சமத்துவம் கண்டார்கள்; ஆனால் வெள்ளம் ஏற்பட்டபோது உயர்ந்த சாதி, கீழ்சாதி தாழ்த்தப்





பட்டவர் உயர்த்தப்பட்டவர் என்ற பாகுபாடே கிடையாது. சென்ற ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட அந்த விவசாயி தன் நெல்லை கொடுத்து விதை வாங்கி, வீட்டிலே உள்ள பண்டபாத்திரங்களை விற்று விவசாயம் செய்து இந்து ஆண்டு ஏதாவது கைக்கு வருமா என்று பாடுபட்டு வந்தான். ஆனால் தமிழகம் முழுக்க வெள்ளம் அடித்துக்கொண்டு போன பிறகு அத்தனைபேர்களும் ஊருக்குள்ளே வந்து அந்த வெள்ள நிவாரண முகாம்களில் வந்து தங்கி எல்லோருக்கும் சோறு தாருங்கள் என்று கேட்ட நேரத்தில் அதிகாரிகள், முகாம்களிலே யார் யார் இருக்கின்றார்களோ—நாங்கள் பார்க்கிற பொழுது இருக்கின்ற எண்ணிக்கையை வைத்துத்தான் தருவோம் என்று சொல்லி விட்டார்கள். அந்த நேரத்தில் அத்தனை பேர்களும் ஜாதி பாகுபாடு இல்லாமல், சமத்துவமாக இருந்து, புரட்சித் தலைவரவர்களின் அரசு கொடுத்த அந்தச் சாப்பாட்டை சாப்பிட்டார்கள்.

எனக்கு முன்னால் பேசிய ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். நோட்டீஸ் போட்டிருப்பதாக, நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1977–ஆம் ஆண்டிலே புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பொழுது தஞ்சை மாவட்டத்திலே வெற்றி பெற்றவர்கள் மூன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ-க்கள்தான். பிறகு மீண்டும் பொறுப்பேற்றிருக்கின்ற இந்த ஆட்சியிலே பத்து பேர்களாக நாங்கள் இருந்துகொண்டிருக்கிறோம். நான் உள்ளபடியே சொல்வேன், 1977–ஆம் ஆண்டிலே, முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, புயலால் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றிய பிறகு, நாடாளுமன்ற இடைத் தேர்தலை நாகையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சந்தித்தது. அந்த நேரத்திலே, கம்யூனிஸ்ட் கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டணி அமைத்திருந்தது. இந்திரா காங்கிரசும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்றாகப் போட்டியிட்டநேரத்தில், எங்களை எதிர்த்து நின்ற கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பத்தாயிரம் ஓட்டு வித்தியாசத்தில் வர முடிந்தது. ஆனால் இன்றைக்குச் சொல்கிறேன், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, நன்னிலம், திருவாரூர் நாகை போன்ற பகுதிகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் கோட்டை வெள்ள நிவாரணத்திற்குப் பிறகு தகர்த்தெறியப் பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கிறது. நோட்டீஸ் அடித்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், துண்டுப் பிரசுரம் வெளியிட்டவர்கள், எதிர்க்கட்சி வரிசையிலே இருப்பவர்கள், அவர்கள் சொல்கிறார்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சர்க்கார் ஊழல் புரிந்தது என்று. எந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னாள் பெருந்தலைவர்களும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களும், உள்ளூர் பிரமுகர்களும் முகாமிற்குச் சென்று அரசாங்க அதிகாரியைப் பார்த்து இந்த காரியத்தைச் செய் என்று சொன்னதாக சொல்ல

முடியாது. அதற்கு மாறாக இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் மக்களுக்கு ஏற்படுகின்ற துயரம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்பட்ட துயரமாகவும் மக்களுக்கு ஏற்பட்ட ஆபத்து இந்தச் சர்க்காருக்கு ஏற்பட்ட ஆபத்தாகக் கருதப்படுகின்றது. எனவே பாதிப்புக்கு ஆளான மக்களுக்குத் தேவையான அனைத்துக் காரியங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நல்ல காரியங்களைக் கண்ட மக்கள் எல்லாம் இன்றைக்கு மனமாற்றம் அடைந்திருக்கிறார்கள். எனவே அந்த நிலைமையினை உணராதவர்கள் உண்மைக்கு மாறான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வெள்ள நிவாரணமாக இந்த சர்க்கார் ஏறத்தாழ 37 கோடி ரூபாயை வாரிக் கொடுத்திருக்கின்றது. அப்படிக் கொடுக்கப்பட்ட போது தார் ரோடு ஓரங்களிலும், உயரமான வரப்புகளிலும் குடியிருக்கின்ற மக்களுக்கு அவர்களுடைய அண்ணன், தம்பிகள் கொடுத்த பொங்கல் சீர்வரிசையாக அந்த உதவியினை ஏற்று மகிழ்ந்தார்கள். அதாவது பொங்கல் வந்துவிட்டது, அந்த பொங்கலுக்கு அவர்களுடைய அண்ணன், தம்பிகள் கொடுத்த சீர்வரிசையாக புரட்சித் தலைவர் கொடுத்த வெள்ள நிவாரண உதவியை ஏற்று மகிழ்ந்திருக்கிறார்கள். அந்த வகையிலே அந்த மக்கள் எல்லாம் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

நான் இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை மாவட்டம் இன்றைக்கு சேரும் சகதியுமாக காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. வெள்ளம் போனதற்குப் பிறகும் அங்கே அப்படிப்பட்ட நிலைமை தான் இருக்கின்றது. நேற்றைக்கு முன்தினம் வரை அதாவது நான்கு நாட்களாகப் பெய்த பெருமழையினால் 80 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் பயிர் எல்லாம் மூழ்கி இருக்கின்றன.

அந்த வயலிலே இருக்கக்கூடிய நெல் மணிகளை எல்லாம் மீன்கள் கொத்திக்கொண்டு போய்க்கொண்டிருக்கின்றன. இப்போது பெய்த மழை முன்பு டிசம்பர் மாதத்திலே பெய்த மழையினை விட மிக அதிகமாகப் பெய்திருக்கின்ற காரணத்தால் பயிர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதாரங்களை வைத்திருப்பதாக அதாவது இன்டியன் எக்ஸ்பிரஸ் என்ற பத்திரிகையினைக் காட்டி பேசுகின்றார்கள். அப்படியானால் திரு. ரகுமான்கான் போன்றவர்கள் அந்தப் பத்திரிகையிலே வருகின்ற செய்திகள் அத்தனையையும் ஒத்துக்கொள்வதுபோல் சொல்கிறாரா என்பது தெரியவில்லை. பாதிக்கப்பட்ட எந்த மக்களும் யாரிடத்திலும் போய் நான் பசியாக இருந்தேன்,



பட்டினியாகக்கிடந்தேன் என்று சொல்லவில்லை. எல்லோருக்கும் 210 ரூபாய் கொடுத்தார்கள். நாகப்பட்டினம் ஆர்.டி.ஓ. மூலம் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆகிய ஊர்களுக்கு மட்டுமே ஏறத்தாழ 3 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். எனவே மொத்த கொடுக்கப்பட்ட பணத்தில் இப்பகுதியில் அதிகம் கொடுக்கப்பட்டது—நான்கிலேஒருபாகம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே மக்களுக்கு உதவிகளைச் செய்கின்ற போது அது கம்யூனிஸ்ட் கட்சித் தொகுதி அல்லது வேறு எதிர்க் கட்சித் தொகுதி என்றெல்லாம் பார்க்காமல் உதவிகளைச் செய்திருக்கிறார்கள். அந்த அளவிற்குப் பணிகளைச் செய்கின்ற புரட்சித் தலைவர் அவர்களின் அரசினிடத்திலே நான் பரிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம் என்னுடைய தொகுதியிலே பூங்காஊரிலே கோணவாய்க்கால் விழும்இடத்தைஎண்கண் சட்டர்ஸ்சுக்கு அப்பால் விழவைக்கின்ற பணியைச் செய்யவேண்டி இருக்கின்றது அதைச் செய்து தரவேண்டும்.

அடுத்து நெடுஞ்சாலைத் துறையிலே கூட மார்ச் 31 ஆம் தேதிக்குள் சாலைகள் செப்பனிடவேண்டி இருக்கிறது. அதற்காக டெண்டர் அனுப்பி இருக்கிறார்கள். அவ்வாறு டெண்டர் வைத்து 25 சதவீதம் 30 சதவீதம் தள்ளிப்போட்டு எடுத்திருக்கிறார்கள். ஆனால் 31 ஆம் தேதிக்குள்ளாக அந்த வேலையினை யாரும் முடித்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஆனால் நாமினேஷன் கொடுத்தால் ஆளும் தரப்பிலே உள்ளவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள் என்ற கெட்டபெயர், குற்றச்சாட்டு வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் ஒருவேளை இவ்வாறு டெண்டர் வைத்தார்கள் போலும் என்று நான் கருதுகிறேன். ஆனால் இன்றைக்கு அங்கே இருக்கக்கூடிய நிலைமை என்ன வென்றால் பஸ், ப்ளஷர் எதுவுமே போகமுடியாத நிலைமைதான் இருக்கின்றது. சைக்கிள், வண்டி கூட போக முடியவில்லை. அவ்வளவு நொடி உள்ள இடமாக அது இருக்கின்றது. என்னைக் கூட நன்னிலம் ஒன்றியம் மேலாதன்குடிப் பகுதியிலே வண்டியிலே ஏற்றி உட்கார வைத்துக்கொண்டு போனார்கள். மிக அதிகமாக நொடி உள்ள இடமாக அது இருக்கின்றது. இதை எல்லாம் சீர் செய்ய வேண்டும். நான் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். அங்கே சாலை வேலைகள் எல்லாம் மார்ச் 31 ஆம் தேதிக்குள்ளாக முடிக்கவேண்டும். 31 ஆம் தேதிக்குள்ளாக, கொடுக்கப்பட்ட பணம் செலவு செய்யப்படவேண்டும் என்பதை நெடுஞ்சாலைத் துறை தன்னுடைய கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் சொல்ல விரும்புகிறேன்.

கொறடாச்சேரி ஒன்றியத்திலே நீலக்குடியிலே 14 ஆயிரம் ரூபாய் செலவில் வெட்டாற்றில் கட்டப்பட்ட பாலம் துண்டித்து விழுந்துவிட்டது. அது ஒரு சாதாரண மரப்பாலம். தற்போது துண்டித்து விழுந்துவிட்டதன் காரணத்தால் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போக முடியாமல் அவதிப்படுகிறார்கள். எனவே அங்கே என்.ஆர்.ஈ.பி. மூலமாக நிரந்தரப் பாலத்தை

[திரு. நன்னிலம் அ. கலையரசன்] [1984 பிப்ரவரி 15

கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கொறடாச்சேரி ஒன்றியத்திலே பாக்கம் என்ற ஊரில் வெள்ளம் புகுந்து ஆள் உயரத்திற்கு மேல் தண்ணீர் போய்க்கொண்டிருக்கின்றது. அங்கே நல்ல தடுப்புச் சுவர் கட்டவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன. மேலும் நாகப்பட்டினத்திலே எப்படி புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டிக்கொடுக்கிறோமோ அதுபோல் தஞ்சை மாவட்டத்திலே வெள்ளம் வரக்கூடிய இடங்களிலே நிரந்தரமாக வெள்ளப் பாதுகாப்பு இல்லங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும். அடுத்து திருமலைராஜன் ஆற்றை அகலப்படுத்த வேண்டும். நண்டலாறு வலது கரையில் தமிழ்நாடு எல்லை வரை ஜீப் போக ஏற்பாடு செய்ய வேண்டும். குடவாசல் தாலுகா எண்கண் கீழ் ஆதிதிராவிட தெருவையும்—நன்னிலம் தாலுகா வாலாமங்கலத்தையும் மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையில் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 16-2-84 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

(69) மதுரை மாவட்டம், நத்தம் வட்டத்தை சேர்ந்த பரலி கிராமத்தினை தானமாக கொடுக்கப்பட்ட கிராமமாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 6-6-1981 ஆம் நாளிட்ட 1065 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 15/1958) 28(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(70) (தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 26-10-1983 ஆம் நாளிட்ட 2258 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் IV/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(71) கரம்பக்குடி பஞ்சாயத்து யூனியனுக்கு சொந்தமான சில வண்டிகளுக்கு 1-4-1974 முதல் 30-6-1975 வரைக்கான காலத்திற்கு செலுத்தக் கூடிய ரூ. 1250 அபராதத் தொகை குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 9.11.1983 ஆம் நாளிட்ட 2346—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் 25(2) பிரிவின் (தமிழ்நாடு சட்டம் எண் 13/1974) கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].



1984 பிப்ரவரி 15]

(72) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்திற்கு சொந்தமான MSL 5005 உள்ள பணியாளர் வாகனத்திற்கு 17-3-1979 முதல் 30-6-1980 வரைக்கான காலத்திற்கு செலுத்தக்கூடிய அபராதத் தொகை ரூ. 534/— செலுத்தக் கூடியது தள்ளுபடி செய்வது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 9-11-1983 ஆம் நாளிட்ட 2348 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் 25(2) பிரிவின் (தமிழ்நாடு சட்டம் எண் 13/1974) கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(73) கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான சில வாகனங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 14-11-1983 ஆம் நாளிட்ட 2391 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் 25(2) பிரிவின் (தமிழ்நாடு சட்டம் எண் 13/1974) கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(74) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிதி நிலை அறிகையும், 1982—83 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை துணை அறிக்கையும் [1948 ஆம் ஆண்டு மின் சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(1) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(75) 1980—81 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75(1) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

(76) 1982—83 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிடங்குகள் கழகத்தின் இருபத்தைந்தாம் ஆண்டு அறிக்கை (கழகத்தின் தணிக்கை அறிக்கையுடன் கூடியது) (ஆங்கிலம்) [1962 ஆம் ஆண்டு கிடங்குகள் கழகச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

(77) தமிழ்நாடு தேயிலைத் தோட்ட நிறுவனத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான ஆறாம் ஆண்டு அறிக்கையும் கணக்குகளும் (தமிழ்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

(12) 1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரையாற்றும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை.

(13) 1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் தேதி யன்று சட்டமன்றத்தில் ஆளுநர் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

[1984 பிப்ரவரி 15

(14) 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் மற்றும் தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 16/1983) அதிகார முறையில் வெளியிடுவதை அவசியமாக்குகிற சூழ்நிலையை விளக்கி தமிழ்நாடு சட்டப்பேரவை விதிகளைச் சேர்ந்த 182 ஆம் விதியின் கீழ் அளிக்கப்படும் விவர அறிக்கை].

## இணைப்பு I

(..43—ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 24-க்கான விடையைக் காண்க)

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ):—1931 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் தமிழ்நாடு அரசால் தஞ்சாவூரில் தொடங்கப்பட்டுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம் பல்கலைக் கழக மான்யக் குழு மற்றும் மைய அரசின், பல்கலைக் கழக மான்யக் குழுச் சட்டம் பிரிவு 12 (ஏ)-ன் கீழ் நிதி உதவி பெற, தகுதி உள்ளது தானா என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க, கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவினை, பல்கலைக் கழக மான்யக் குழு நியமித்துள்ளது.

1. பேராசிரியர் எம். வி. மாத்தூர்,
எமிரிடிஸ் பேராசிரியர்,
தேசியக் கல்வி திட்டம் மற்றும் நிர்வாக நிலையம்,
புதுடில்லி.

2. பேராசிரியர் ஜி. ராம்ரெட்டி,
துணைவேந்தர்,
ஓஸ்மேனியா பல்கலைக் கழகம்,
ஹைதராபாத்.

3. பேராசிரியர் ராம் ஜோஷி,
துணைவேந்தர்,
பம்பாய் பல்கலைக் கழகம்,
பம்பாய்.

4. டாக்டர் ஏ. கே. தான்,
துணைவேந்தர்,
ராஞ்சிப் பல்கலைக் கழகம்,
ராஞ்சி.

5. டாக்டர் டி. பி. பட்நாயக்,
இயக்குநர்,
இந்திய மொழிகள் மத்திய நிலையம்,
மைசூர்.

6. திரு. எம். ஆர். கொல்ஹாட்கர், இ.ஆ.ப.,
இணைச் செயலாளர்,
கல்வி மற்றும் பண்பாட்டு அமைச்சகம்,
புதுடில்லி.



1984 பிப்ரவரி 15]

7. ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர்,
கல்வி, அறிவியல், தொழில்நுட்பவியல் துறை
(மாநில அரசு பிரதிநிதி).

இக்குழு உறுப்பினர்களில், பேராசிரியர் ஜி. ராம்ரெட்டி, டாக்டர் டி. பி. பட்நாயக் மற்றும் கல்விச் செயலாளர் ஆகியோர் மட்டும் 1983 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5 மற்றும் 6 ஆகிய இரு தினங்களிலும் தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தினைப் பார்வையிட்டனர். இக்குழுவின் உறுப்பினரான திரு. கொல்ஹாட்கர், மைய அரசு கல்வித் துறை இணைச் செயலாளர் 30-5-83, 31-5-83 தேதிகளில் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு வருகை தந்து தன்னுடைய பரிந்துரைகளையும் பல்கலைக் கழக மான்யக் குழுவுக்கு தந்தார்.

(ஈ) இக்குழுவின் அறிக்கையைப் பரிசீலித்த பல்கலைக் கழக மான்யக் குழு, தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்தல் வேண்டுமென அரசுக்குத் தெரிவித்தது. இது குறித்துக் கல்வி அமைச்சர், மையக்கல்வி அமைச்சர் பல்கலைக்கழக மான்யக் குழுத் தலைவர் மற்றும் மைய அரசு அலுவலர்களுடன் நேரில் கலந்துரையாடிய பின்னர், பல்கலைக் கழக மான்யக் குழு பொதுவான நிலைய மேம்பாட்டுத் திட்டங்களைத் (Institutional Development Grants) தவிர இதர திட்டங்களுக்கு நிதி உதவி பெற, தமிழ்ப் பல்கலைக் கழகம், பல்கலைக் கழக மான்யக் குழுச் சட்டப் பிரிவு 12 (ஏ)-ன் கீழ் தகுதியானது என அறிவித்து, தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டத்தில் திருத்தங்கள் செய்த பின்னரே, பொதுவான நிலைய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி உதவி கிடைக்குமெனவும், தெரிவித்துள்ளது.

## இணைப்பு II

(..55—ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 32-க்கான விடையைக் காண்க.)

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஏலகிரிமலை ஜவ்வாது மலைப்பகுதிகளில் ரூ. 124.658 லட்சம் செலவில் பல்வேறு திட்டங்களை நடப்பு நிதியாண்டில் நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுடன் கீழ்க்கண்ட புதிய திட்டங்களையும் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| விவசாயம். | செலவு (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 3 விவசாயக் கிடங்குகள் அமைத்தல் | 0.75 |
| தகரக்குப்பத்தில் மாபெரும் பழப்பண்ணை அமைத்தல் | 6.82 |
| ஏலகிரி மலையில்மங்கலத்தில் அலங்கார பூங்காவும் பழத்தோட்டமும் அமைத்தல் | 1.00 |
| மண்வளப் பாதுகாப்பு | 4.00 |

[1984 பிப்ரவரி 15

| | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| **கால்நடை பராமரிப்பு:** | |
| புதூர் நாட்டில் கால்நடை மருந்தகம் அமைத்தல் | 4.56 |
| ஏலகிரி மலையில் கால்நடை துணை நிலையம் அமைத்தல் | 2.01 |
| பால் குளிர்சாதனப் பெட்டி மற்றும் உபகரணங்களும் | 1.23 |
| **கிராமக் கைத்தொழில்:** | |
| புளி பதப்படுத்தும் நிலையம் அமைத்தல் | 1.25 |
| 2 பட்டுப்புழு வளர்ப்பு நிலையம் அமைத்தல் | 3.36 |
| **சிறுபாசனத் திட்டம்:** | |
| புங்கனூரில் ஏரி அமைத்தல், மேட்டுகளியூரில் சிறு அணைக்கட்டுதல், நிலவூர் ஏரியைப் பழுது பார்த்தல் | 4.07 |
| **வனப்பாதுகாப்பு:** | |
| கிணறு தோண்டுதல் | 2.00 |
| பள்ளி விடுதி அமைத்தல் | 1.29 |
| சாலை அமைத்தல் | 1.62 |
| வன வளர்ப்பு | 1.00 |
| **கூட்டுறவு:** | |
| நம்மியமப்பட்டில் லேம்ப் சொசைட்டி நிறுவுதல் | 5:50 |
| **சாலைகள்:** | |
| அமிர்தி முதல் ஜம்னா மருதூர் வரை சாலை அமைத்தல் | 6.00 |
| **குடிநீர் வசதி:** | |
| 9 கிராமங்களுக்கு குடிநீர் வசதியளித்தல் | 9.00 |
| **சமுதாய வளர்ச்சி:** | |
| 10 கிராமங்களுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்குதல் | 0.10 |
| **சுற்றுலா:** | |
| ஏலகிரியிலுள்ள புளிச்சுக்குட்டையில் மான் பூங்காவும் குளமும் அமைத்தல் | 1.80 |
| **கல்வி:** | |
| 25 முதியோர் பள்ளிகளும், 2 உறைவிடப் பள்ளிகளும் நிறுவுதல் | 2·27 |
| **சுகாதாரம்:** | |
| ஜவ்வாது மலையில் தொங்குமலை என்னுமிடத்தில் மருந்தகம் அமைத்தல் | 3.95 |
| ஜம்னாமருதூரில் நடமாடும் மருந்தகம் அமைத்தல் | 2.30 |
| **சமூக நலம்:** | |
| நம்மியப்பட்டில் தையல் பயிற்சி நிலையம் அமைத்தல் | 0.40 |



1984 பிப்ரவரி 15]

## இணைப்பு III

### Address by Thiru Sundar Lal Khurana, *Governor of Tamil Nadu*.

***Honourable Members of the Legislature,***

At the outset, may I take this opportunity of wishing you a prosperous and happy New Year. I hope the year ahead of us, will prove to be one of allround economic development for the State.

2. While I did make a passing reference, in my address to you last year, to the drought conditions prevailing in the State and the various steps taken by the Government in alleviating the sufferings of the people, the full impact of the misery and suffering caused by the consecutive failure of the monsoon became evident only later in the year. The State is only now getting out of what has been one of the most severe droughts to have gripped the State.

3. Against the Rs. 68.36 crores cleared by Government of India for drought relief works, the State has spent a sum of Rs. 1,14.28 crores. Apart from the items of expenditure approved by the Central Government, the State has had to take up several relief works on its own to meet the situation. These include mainly the sanction of loans towards sinking of 5,000 filter point tube wells in Thanjavur district amounting to Rs. 7.5 crores the sanction of Rs. 5 crores towards loans for the deepening of private irrigation wells and the scheme for free distribution of janata sarees and dhoties to landless agricultural labourers in rural and municipal areas, costing over Rs. 10 crores.

4. The severe drought created a veritable water famine and the Government launched massive relief operations for the sinking of borewells practically throughout the State. Twentyone thousand and seven hundred borewells were sunk at a cost of about Rs. 46 Crores. The water scarcity was particularly acute in he city of Madras. Although piped water could be supplied only on alternate days for few months, optimum level of sdpply was maintained by the installation of water tanks and daily supplies through lorries. In addition, 11 951 tube well pumps and 1,204 India Mark II pumps were installed in Madras City at a cost of Rs. 2.52.28 lakhs.

5. The drought had a widespread impact on various sectors of the economy. In addition to large scale relief operations, the Government had to take other measures to compensate for the drag imposed by drought on these sectors. The food sector was one of

these where heavy State help was needed. In spite of monopoly procurement operations and the offer of Rs. 15 per quintal over and above the levy price, as drought allowance, the Civil Supplies Corporation could procure only two lakhs and twenty thousand tonnes of rice during the 1983 Samba season. Though the State received 15,000 tonnes of rice in April 1983 from Government of India which has been gradually raised to the present level of 55,000 tonnes per month, the commitment on account of the public distribution system could be discharged in full only by buying rice from markets outside the State at high prices. An average supply of 75,000 to 80,000 tonnes per month was maintained at the subsidised issue price which has been retained unaltered for the last few years. During the 1983 Kuruvai season it has been possible to procure a lakh and ten thousand tonnes of rice and it is expected that the procurement during 1984 Samba season will be higher. Government has announced a drought, irrigation and risk allowance of Rs. 35 per quintal over and above the procurement price fixed by Government of India from 8th September 1983 to 29th February 1984 for the rice purchased by the Civil Supplies Corporation in the monopoly procurement areas. Thus, the cost borne by the Government, in the current year, to maintain this essential service of supply of rice to the poorer sections of the people through fair price shops in the State has been enoromous. Recently, Government of India have further increased the issue price of rice to the Civil Supplies Corporation and consequently, subsidies involved in rice supply through the public distribution system have gone up further.

6. Although the State Government spared no effort to alleviate the sufferings of the people hit by drought conditions, the limited resources at the command of the State made it necessary for us to present a supplementary memorandum to the Government of India for further assistance towards drought relief works. This memorandum is primarily intended to seek reimbursement of expenditure already incurred by the State Government rather than for new relief works. In response to the memorandum, the members of a central team visited certain districts of the State and although the outcome of the team's visit is not yet known the State Government is hopeful of a substantial financial assistance from Government of India.

7. As the Honourable Members are aware, even as the State was recovering from the drought and the economy was being restored to normalcy the districts of Thanjavur, Tiruchirappalli, South Arcot, Pudukkottai and Ramanathapuram were hit by torrential rains, causing large scale damage to property and loss of life. The Chief Minister undertook an aerial survey of the flood



affected areas immediately after the disaster and personally supervised the relief operations in Thanjavur, Tiruchirappalli and Ramanathapuram districts. The Army authorities responded promptly by despatching their men who brought and erected three bailey bridges in record time which served to reopen communications with marooned villages. Helicopters lent by the Navy and Air Force and inflatable boats lent by the Navy rendered valuable assistance through the air dropping of food packets to the marooned villagers and by rescuing them. The State Government takes this opportunity to place on record its appreciation for this timely service rendered by the Defence forces. Medical and health teams with adequate supply of medicines were rushed to the affected areas to take up preventive measures against the outbreak of epidemics. The police force rose to the occasion and rendered the necessary assistance for speeding up rescue and relief operations.

The State Government would like to thank the Indian Red Cross Society, the Tamilar Peravai, Bombay, the Ramakrishna Mutt, the N.S.S. and N.C.C. units who extended all possible assistance in expediting flood relief operations. The floods have caused extensive damage to 7,10,000 huts, 3,183 irrigation sources and 4,211 roads belonging to Panchayat Unions and Panchāyats. One thousand six hundred and fifty eight relief camps were organised to feed 10 lakh persons affected by the floods.

8. The State Government has already sanctioned Rs. 37.54 crores towards restoration and repairs to roads, irrigation works and providing gratuitous relief. A memorandum seeking assistance of Rs. 128 crores has been presented to the Government of India. The Central Team has also visited the affected districts and the State is hopeful of a substantial assistance from Government of India.

9. The barbarous acts of violence let loose on the Indian nationals and in particular on the Tamil population of Sri Lanka and the heartless massacre of Tamil speaking people which that country witnessed caused reverberating waves of indignation and anguish in Tamil Nadu. The Chief Minister convened an All Party Leaders' Conference first on 28th July 1983, followed by two more meetings in August, to express the solidarity of the people of Tamil Nadu with the Tamils of Sri Lanka. A general stoppage of work was sponsored by the Government on 2nd August 1983 in support of the cause of Tamils in Sri Lanka in which all political parties and departments of the Central Government participated. The Government of India also suspended air and train services in support of this general stoppage of work. This is the first time, in the history

of the country, that air services have been suspended. We are greatful to the Prime Minister for the prompt and effective steps she has initiated to find a lasting solution to this problem.

There has been a massive influx of refugees from Sri Lanka to Tamil Nadu and apart from the people of Indian origin coming under the Indo-Ceylon Agreement of 1964, Tamils affected by the riots in Sri Lanka started streaming in from July 1983. Of the 35,394 persons who came to Tamil Nadu both by ship and air till January 1984 only 14,334 have returned to Sri Lanka. Transit refugee camps were opened to give immediate succour and relief to the helpless refugees. Government of Tamil Nadu has constituted a State Level Committee consisting of Members of the Legislature and important political party leaders, to receive and channelise the funds collected for Sri Lanka Tamils. An Advisory Committee of eminent industrialists has also been set up in addition to the district level committees in all districts. The Government has allotted flats to Thirumathi Kuttimani and Thirumathi Thangadurai, wives of two Tamil Patriots who were killed in the riots and to Thiru Kuttimani's sister. Thirumathi Kuttimani has also been sanctioned financial assistance of Rs. 1,000 per month for a year or till her family returns to Sri Lanka.

10. The late advent of the south-west monsoon last year and the resultant adverse seasonal conditions affected the timely planting of the Samba crop. The Government distributed seeds, fertiliser and pesticides to the tune of Rs. 464 lakhs, at subsidised prices, to the farmers hit by the drought conditions. In order to augment irrigation facilities, Government took up a massive scheme of sinking 5,000 filter point tube wells in Thanjavur district at a cost of Rs. 7.50 crores. Under the scheme, a maximum assistance of Rs. 15,000 is being given as loan to the farmer to enable him to sink a tube well and so far, loans for the sinking of 2,521 filter point tube wells have been given. Although the State was facing a severe power shortage, power for the agricultural pumpsets was made available for twelve hours a day. In order to encourage farmers in the Cauvery Delta to go in for Samba cultivation, Government announced a procurement price of Rs. 171 per quintal this year, i.e., Rs. 35 more than the price announced by the Government of India.

Although it was expected that the various steps taken by the Government would result in a good Samba harvest, the torrential rains in the last week of December 1983 unfortunately caused heavy damage to the standing crops in the Cauvery Delta area. The State Government immediately arranged for the distribution of 500 metric tonnes of pulse seed, at subsidised prices.





While the rain fall resulted in heavy damage to standing Samba crops in the Cauvery Delta area it helped to fill up various ponds and lakes in the northern districts of the State. The Government has taken advantage of this and launched a massive programme to bring under cultivation ten lakh acres under pulses, 7 lakh acres under Navarai paddy and 8 lakh acres under groundnut. It is hoped that this would to some extent compensate for the damage and loss in Cauvery Delta area.

Although the State's agro-economy suffered a serious setback due to successive natural calamities the various steps taken by the Government are expected to result in satisfactory food production. Despite a heavy overdue position the Agricultural Service Co-operative Societies have advanced crop loans to the extent of Rs. 58.04 crores upto December 1983.

During the year 1984-85, 9 lakh M.T. of food grain is targeted for production. The State Government has taken up various schemes to ensure the achievement of this target. Seed production and distribution systems will be strengthened so that large quantity of good quality seeds are made available to the farmers. Various schemes to maximise efficiency in water management in Cauvery, Vaigai, Sathanur and Parambikulam area river basins will be taken up. "5 Metric Tons of paddy per hectare" has been set up as the goal which the State Government will endeavour to accomplish in the year 1984-85.

11. The crop insurance scheme, now in operation is confined to paddy. The maximum amount that can be insured by a farmer, under the scheme, is Rs. 10,000 or 150 per cent of the crop loan whichever is less in respect of irrigated crops and Rs. 5,000 or 150 per cent of the crop loan whichever is less in respect of unirrigated crops. As the present scheme covers only paddy, the Government is considering making it a more comprehensive one to cover various types of loss of life and property.

12. The Operation Flood II programme is now being implemented in nine districts of the State. In view of the encouraging results obtained under this programme, the Government has approached the Indian Dairy Corporation to bring in three more districts under the programme. A frozen semen bank and a network of 400 sub-centres with frozen semen is being established for the upgradation of the cattle and raising milk production.

13. A major policy of the Government has been to bring new areas under irrigation as also to stabilise the existing irrigation facilities. As against a sum of Rs. 189.79 crores set apart for major and minor irrigation and flood control schemes in Sixth Five-Year Plan a sum of Rs. 80.73 crores have been spent in the first three years of the plan period. A sum of Rs. 55.14 crores has been provided for these schemes in the current year and Rs. 60.62 crores next year.

Irrigation potential for an area of 78,000 hectares was to be created in the Sixth Plan period. In the first three years of the Plan, the State has created irrigation potential for an area of 36,656 hectares and it is proposed to bring a further area of 16,880 hectares under irrigation in the current year.

14. A lasting solution to the long standing problem of providing adequate drinking water-supply to the City of Madras was found through the agreement entered into between the Government of Tamil Nadu and the Government of Andhra Pradesh on 18th April 1983 for drawal of 15 tmc. of water from the river Krishna, a standing monument to inter-State co-operation. This project would harness the waters of Krishna river for irrigation in Andhra Pradesh and for augmenting drinking water-supply to Madras City. Out of the estimated project cost of Rs. 760 crores, Tamil Nadu's share would be Rs. 200 crores. The Government has also accorded administrative sanction for an expenditure of Rs. 30.15 crores towards the first stage of the project. The excavation of the canal from the border of the State to the Poondi Reservoir is under execution by us while the rest of the work is being undertaken by the Government of Andhra Pradesh. With the completion of the Krishna River Water Supply Scheme, the per capita daily availability of water in Madras will go up from the present 65 litres at the peak supply period to 127 litres.

15. Tamil Nadu has very little potential left for exploiting surface water resources for cultivation. Ground water exploitation has also reached its full potential in some areas and with about 50 per cent of the cultivable areas in the State still to be irrigated, the need to resort to more prudent and scientific water management has become inescapable. The Government of Tamil Nadu has taken several steps like creation of new percolation ponds, modernisation of the transmission systems of major and medium irrigation projects towards development of better water management practices. More than 39,000 rain-fed tanks are the sources of irrigation to 9 lakhs hectares and this sector would bear the next highest priority for



modernisation and water management. The Government has succeeded in getting a grant of Rs. 25 crores from the European Economic Community through the Government of India for modernisation, of the minor irrigation system in the State. From its commencement, the scheme will take in all five years. The tanks in five districts of Tamil Nadu, viz., Chengalpattu, North Arcot, South Arcot, Pudukkottai and Ramanathapuram will be taken up for modernisation, effecting a saving of around 20 per cent of the water now used resulting in both stabilisation of the existing ayacuts and their extension.

16. In order to study the measures and monitor their implementation for improving the efficiency in usage of water and enhancing the productivity of land, the State Government has decided to set up an Irrigation Management and Training Institute. This Rs. 10 crore project, to be implemented with the assistance of the United States Agency for International Development (USAID), would commence shortly and will be spread over 7 years. The share of the Tamil Nadu Government in the project cost will be Rs. 4.4 crores and rest would be advanced by USAID, Rs. 1.4 crores as loan and the balance amount of Rs. 4.2 crores as grant.

17. Another sector which periodically faces the full impact of the adverse seasonal conditions is Power. Tamil Nadu is in the unenviable position of having a greater mix of high-cost thermal power in its total generation system. An immediate result of consecutive failure of monsoons is the dwindling of hydel generation adding to the loss of the Electricity Board which, in turn, places a heavy strain on the financial resources of the State. It was only on account of judicious operation and management of the hydel stations and the efficient handling of other generating stations that the State could relax the power-cut on H.T. industries, which the members may recall, had to be 100 per cent for a short period last year. The power-cut has now been brought down from 75 per cent on demand and 60 per cent on energy to 30 per cent for power-intensive H.T. industries and 15 per cent for other H.T. industries on both demand and energy. H.T. industries started after 1st October 1981 have been completely exempted from power-cut till 30th June 1984. The ban on industries from availing electric power during peak hours has been lifted. The power-cut on all L.T. services was lifted from 11th July 1983.

18. Any permanent solution to the power shortage in the State will be only through substantial increases in thermal capacity. Government of India has since cleared the Mettur Thermal Extension Project of two units of 210 MW each. A project report for the

establishment of five thermal units of 210 MW each at Neyveli utilising the lignite has been formulated and forwarded to the Government of India in June 1983. Our Government has also requested the Government of India to open a third mine cut at Neyveli and earmark the entire lignite for this project. The State Government has also been urging the Government of India to start another Atomic Power Project in the State, which would help relieve the chronic power shortage faced by the State, at least to some extent.

19. In spite of the revision of tariff in May 1983, the electricity charges collected from the consumers do not meet even the cost of production, let alone achieve a 3 per cent return on investment as urged by the Union Planning Commission. This position has been further aggravated by the recent 25 per cent increase in the price of coal. The Electricity Board has to depend heavily on the State not only for its capital projects but also to cover its operational deficits.

20. Provision of protected drinking-water to the rural population has been given high priority by the Government. According to the survey conducted in 1976-77 out of 47,273 habitations in the State, 18,167 were categorised as problem habitations. Due to adverse seasonal conditions in the recent past, there have been further additions to this number. These habitations are expected to be covered by the end of March 1985.

21. It has been proposed to undertake a water-supply and low-cost sanitation project with the assistance of the World Bank. Under this project, water-supply schemes will be taken up in the 3 major towns of Coimbatore, Salem and Madurai, 75 other towns and 740 rural habitations, in addition to low-cost sanitation for 14 municipalities. The total estimated cost of the project, spread over four years and six months is Rs. 149.42 crores.

22. The EEC has agreed to finance a project covering 726 habitations in Periyar and Coimbatore districts, where the water has a high fluoride content. The project, at an estimated cost of Rs. 15.20 crores, is expected to be completed in a period of 30 months.

23. As the Honourable Members are aware, the major thrust in the activities of the Government has been towards the removal of poverty. It is not possible to achieve this avowed objective without overall economic development and the creation of more job opportunities. It was with this end in view that the Government launched a scheme of providing one job for each family. The State Government has recently laid down that preference in employment in



Government Departments and the Public undertakings will be given to those candidates who come from families below the poverty line where no other member is employed. Up to-date statistics has also been collected regarding the number of families beneath the poverty line in rural areas and the details of members in such families, willing and qualified to take up self-employment activities.

It is also well known that appropriate skills are not available in the rural areas. Any self-employment programme, therefore, will have to focus on skill development. Training programmes under various projects will have to be dovetailed and schemes already under implementation for tapping institutional finance in setting up self-employment schemes have to be co-ordinated. The Prime Minister's scheme for providing employment opportunities to the educated unemployed and the Integrated Rural Development Programme, financed both by the State and the Centre have been taken advantage of, and suitable institutional agencies set up in order to divert the benefits of these programmes to those below the poverty line.

The Government has created a separate Department of Institutional Finance from 15th July 1983 to serve as a catalyst for the flow of credit to the weaker sections of society. It is noteworthy that during the first few months after it was set up, loans to the tune of Rs. 30.16 crores were distributed to 1,70,564 persons in the State including 56,966 Adi Dravidars. The newly constituted department of Employment Services has organised a drive to obtain bank credit for 10,000 ITI-trained unemployed persnos, by providing seed capital assistance.

24. The Government of India have allocated a sum of Rs. 8.90 crores in the current year and Rs. 44.50 crores in the next year for the programme of providing employment to the rural landless labour. The State Government has already obtained Government of India's approval for projects costing Rs. 44 crores.

25. Under the on-going National Rural Employment Programme funded equally by the State and the Centre, it has been proposed to spend Rs. 36 crores in the current year. 1,64,867 works have been completed under this programme from 1979-80 upto the end of November 1983. It is proposed to set apart Rs. 40 crores for this programme, in the plan for 1984-85, 50 per cent of which would be financed by the Government of India.

26. The problem that confronts our society today is one of ensuring job opportunities to the increasing numbers of students who will be thrown up by the prevailing educational system. Non-specific and generalised educational system at all levels creates an unabsorbable labour force whose growing sense of discontent and frustration adds to the social unrest and tension. Government is keen on re-orienting the educational system, in such a way, that relevant and location-specific job training is provided at all levels of education, so that young boys and girls are equipped with the appropriate skills which can either enable them to obtain jobs in industries or final self-employment. Such to multi-dimensional programme would necessarily exceed the limited financial resources of the State. The State Government had therefore sought the assistance from the Central Government, through the Eighth Finance Commission award, for implementing this massive programme througout the State. Though the interim report of the Commission has not covered this point a detailed blue-print is being prepared to seek Government of India's assistance for this proposal.

27. Apart from the various concessions and incentives offered by the State Government to facilitate the growth of industries, steps have also been taken to set up public sector units involving huge financial commitments. The Tiruttani Co-operative Sugar Mills being set up in Tiruvalangadu in Chengalpattu district at a cost of about Rs. 10 crores is expected to commence its crushing operations in the middle of April this year. In order to ensure smooth running and to avoid large scale retrenchment of labour, the State Government has taken over the administration of Madura Sugars Limited in Madurai district.

28. As the Honourable Members are aware, the Tamil Nadu Newsprint and Papers Limited, promoted by the State Government is setting up a newsprint-*cum*-paper project in a backward area at Pugalur in Tiruchirappalli district. This Rs. 195 crores project, funded by the World Bank to the extent of 50 per cent of the project cost, has been planned to produce 50,000 tonnes of newsprint and 40,000 tonnes of paper annually. The project when commissioned would save foreign exchange to the tune of Rs. 40 crores annually. Construction works for the project are under progress and the project is likely to be completed by September-October this year as originally scheduled.

29. Government of India has recently cleared the proposal for establishing a free trade zone in Madras and a stretch of about 150 acres of Government land has already been identified for its location. The work on the development of the area has been entrusted to SIPCOT.





30. The work on the Pamban Bridge, which after completion will provide an uninterrupted road transport facility up to Dhanushkodi, the tip of Rameswaram Island, would be re-started soon. It is expected to cost Rs. 16.65 crores now.

31. The performance of the State Transport Corporation continues to be highly satisfactory and the Union Planning Commission has ranked the Tamil Nadu Corporations amongst the best in the Country. The three new transport corporations, viz., Jeeva Transport Corporation at Erode, Nesamony Transport Corporation at Nagercoil, and Marudhu Pandiyar Transport Corporation at Karaikudi have started functioning independently from 1st April 1983. Although during the last financial year, the operations of all corporations excepting three, resulted in profits, it is difficult to maintain this financial performance in view of the periodical increases in the administered price of diesel. Between 1980 and now, the price of diesel oil has gone up by more than 100 per cent and these increases have resulted in an additional expenditure of Rs 115 crores for the State transport undertakings in the last three and half years.

32. Provision of health care in rural areas has been one of the major policies of the State Government. In pursuance thereof, a health sub-centre is being established for every 5,000 population. In the current year, it is proposed to establish 712 additional sub-centres. This would be an addition to the 4.586 sub-centres existing in the State.

33. The DANIDA assisted health care and family welfare project, being implemented in South Arcot district and Salem district has entered its third year. Under this Project, so far 449 health sub-centres have been established and works are in progress on 313 sub-centre buildings.

34. It is gratifying to note that the special attention to the Family Welfare Programme has paid rich dividends and the State stands first in the country in having done 3,77,827 sterilisations by the end of January 1984 as against the annual target of 3.99 lakhs which is expected to be exceeded substantially by the end of this year. Government has sanctioned the purchase of 26 laparoscope at an estimated cost of Rs. 7.8 lakhs for distribution to taluk hospitals.

35. A separate department for Environment Control was created from 15th July 1983 in order to implement effectively the various laws governing environmental pollution. The entire State has been notified. "Air Pollution Control Area" with effect from 1st October

1983 and with the notification of the Tamil Nadu Water (Prevention
and Control of Pollution) Rules, 1983 and the Tamil Nadu Air
(Prevention and Control of Pollution) Rules, 1983 on 30th
September 1983, the State is qualified for uninterrupted Central
Government sanction for setting up of new industries in the State.

36. The Honourable members are aware that the State Govern-
ment has taken up a scheme for the construction of 2 lakh houses
under the Rural Housing Scheme in the Sixth Plan period. As
against the target of 40,000 houses, 40,092 houses were constructed
during 1982-83 and in the current year upto the end of October
17.894 houses have been constructed out of which 15,058 houses
have been constructed for Adi Dravidars. 20.759 houses are under
various stages of construction. The estimated cost of a house has
been increased to Rs. 6,000 from the existing Rs. 4000 from the
beginning of this financial year.

37. A noteworthy result of the Chief Minister's Noon Meal Pro-
gramme is a marked increase in the enrolment of students in the
schools. It has also proved to be a fruitful investment in human
capital. A sample survey conducted by Sri Avinashilingam Home
Science College for Women, Coimbatore has shown that over a period
of four months all the children covered by the survey showed a
general improvement in health and an increase in their mean height
and weight. A detailed scheme for providing health cover for the
pre-school children covered by the scheme has also been drawn up.

38. The Members may recall that Tamil Nadu was adjudged best
in terms of performance under the Twenty-Point Programme in 1982-
83 by the Union Planning Commission. This tempo has been main-
tained in the current year also, with the State having already achieved
more than 70 per cent of the target set in respect of production of
oil seeds, creation of mandays under National Rural Employment
Programme, surplus land resumed for allotment, Scheduled Tribe
families assisted to cross the poverty line, villages provided with
drinking water-supply, allotment of house-sites, tree plantation,
setting up of bio-gas plants, number of sterilisations done, esta-
blishment of Public Health Centres, coverage under Integrated
Child Development Services; enrolment in the age-group 6—14 and
coverage under adult literacy.

39. In the light of the experience gained from the year 1981-82
on the working of the Tamil Nadu Prohibition Act, the State Govern-
ment decided that in public interest the wholesale trade in arrack
and Indian-Made Foreign Spirits throughout the State should be



taken over, managed and regulated by a fully-owned Government
undertaking. The Tamil Nadu State Marketing Corporation
Limited was set up and the wholesale supply of arrack and Indian-
Made Foreign Spirits was taken over by the Government and
entrusted to this Corporation from 1st June 1983.

40. In order to make district administration more effective, the
Government has decided to divide some of the larger districts of the
State, in stages. Accordingly, Ramanathapuram district would be
divided into Ramanathapuram district with headquarters at Rama-
nathapuram, Pasumpon Muthuramalingar district with headquarters
at Sivagangai and Kamarajar district with headquarters at Virudhu-
nagar. Tirunelveli district would be bifurcated into Tirunelveli dis-
trict with headquarters at Tirunelveli and Chidambaranar district
with headquarters at Tuticorin. North Arcot district would be divided
into North Arcot district with headquarters at Vellore and Sambuva-
rayar district with headquarters at Thiruvannamalai. Madurai
district would be bifurcated into Madurai district with headquarters
at Madurai and Anna district with headquarters at Dindigul.
Thanjavur district would be divided into Thanjavur district
with headquarters at Thanjavur and Valliammai district with head
quarters at Tiruvarur. South Arcot district would be bifurcated into
South Arcot district with headquarters at Cuddalore and Vallalar
district with headquarters at Villupuram. Tiruchirappalli district
would be divided into Tiruvalluvar district with headquarters at
Perambalur and Tiruchirappalli district with headquarters at
Tiruchirappalli.

An expert committee will be set up to make recommendations
to Government on the area covered by the new district, the taluks
to be included in them, the various infrastructural facilities that have
to be created, etc. The Government will consider the recommenda-
tions of the Committee and take necessary action to implement, in
stages, the decisions taken on the report of the Committee.

41. The Government has been viewing with utmost concern the
various demands from the employees. There has been a long standing
request for enhancing the retirement benefits to the Government
servants by paying a lumpsum of Rs. 10,000 in addition to the
normal gratuity. The Government has decided to implement the
scheme by enrolling the employees on the basis of a contribution of
Rs. 20 per month till it adds upto Rs. 5,000 with interest. The
Government would contribute Rs. 5,000 from their own funds in
order to enable the employees to receive Rs. 10,000 at the time of
retirement. However, those who retire earlier will also be paid Rs.

5,000 by the Government in addition to their own contribution with interest. This scheme, drawn up in consultation with the representatives of employees, would come into operation from 1st April 1984.

42. Recently the Government has extended the benefit of the Liberalised Pension Rules to all those Government servants who retired prior to October 1979.

43. The Government is also aware that all the Government servants have been anxiously looking forward to the constitution of the Fourth Pay Commission. I am happy to inform the Hon'ble Members that a decision on this will be announced this year itself.

44. The Government is aware of the hardships caused to the families of the building construction workers who happen to lose their lives while engaged in building construction activities. The Workmen's Compensation Act of 1923 has been made applicable to such workers by incorporating a suitable provision in the Tamil Nadu Building and Construction Workers (Conditions of Employment and Miscellaneous Provision) Bill, 1983. This will reduce to some extent the hardships caused to the families of building construction workers who die while engaged in building construction activities. The Government also proposes to bring an official amendment to the provisions of the Tamil Nadu Building and Construction Workers (Conditions of Employment and Miscellaneous Provision) Bill, 1983. As per this amendment, the employers of these building construction workers are required to take up adequate insurance to cover loss of life or limb to the workers during employment. For those who are not benefited by the above provision, the Government has decided to provide for a payment of Rs. 10,000 as compensation from the Chief Minister's Relief Fund to the bereaved family. The building construction workers will have to register themselves with the Labour Department on a payment of Rs. 5 to get the benefit of this scheme.

45. The Government had earlier decided to conduct the panchayat and municipal elections during February 1984. All the preliminary arrangements were also made accordingly. However, due to the recent heavy floods in certain parts of the State viz. Thanjavur, Pudukkottai, Tiruchirappalli and South Arcot districts, heavy damage was caused to properties leading to disturption to communication facilities in these areas. The entire Government machinery in these districts was fully engaged in relief works on a war footing. Restoration works are still in progress Several persons



have been displaced from their houses in districts like Thanjavur. Only after they either return to their houses or settle down in newly constructed houses, will they be able to enrol themselves as voters and exercise their franchise in this election. It has therefore become necessary to postpone the panchayat and municipal elections. The Government has proposed to conduct the Panchayat and Panchayat Union Elections on 19th April 1984 and 23rd April 1984 in two batches and the Municipal Elections on 28th April 1984, after the Budget Session of the Legislature is over. I am sure the Honourable Members would welcome this news.

The Government has decided to upgrade the Tiruchirppaalli, Salem and Tirunelveli municipalities into municipal corporations. The Government has also proposed to frame a common Act for all the municipal corporations in this State.

46. I have briefly touched upon the steady progress made by the State in various prominent areas of the economic and social scene despite the successive natural calamities we had to face. I have also attempted an overview of the future plan of action for removal of poverty and creation of employment opportunities in the State. May I seek the co-operation of the House in this stupendous endeavour in which the Government is engaged.

*Vanakkam.*

1984 பிப்ரவரி 15]

**தமிழ்நாட்டு ஆளுநர் திரு. சுந்தர் லால் குரானா அவர்களது உரையின் தமிழாக்கம்.**

18-2-1984.

மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே,

உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை முதற்கண் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்புத்தாண்டில் நம் மாநிலத்தின் பொருளாதாரம் எல்லா வகையிலும் மேலும் வளம் பெறும் என்று உளமார நம்புகிறேன்.

2. சென்றமுறை உங்கள் முன் உரையாற்றியபோது இம் மாநிலத்தில் நிலவிய வறட்சி நிலைமைபற்றியும், மக்கள் துயர் துடைக்க அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகள் பற்றியும் நான் உங்களுக்கு கோடிட்டுக் காட்டியிருந்தேன். அடுத்தடுத்து இரண்டாண்டுகள் மழை பொய்த்ததன் விளைவாக மக்கள் அடைந்த சொல்லொணாத் துயரமும், தொல்லையும் ஆண்டு முடிவில்தான் முழுமையாகத் தெரிந்தது. என்றுமே கண்டிராத கடுமையான வறட்சியின் பிடியிலிருந்து மாநிலம் இப்பொழுதுதான் விடுபட்டு வருகிறது.

3. வறட்சித் துயர்த் தணிப்புப் பணிகளுக்காக இந்திய அரசு ரூ. 16.56 கோடி செலவினத்தை அனுமதித்திருக்க, மாநிலம் ரூ. 114.28 கோடி செலவிட்டுள்ளது. இந்திய அரசு ஒப்புதல் அளித்த செலவினங்களைத் தவிர, மாநில அரசு தானாகவே, மக்களின் துயர் களைய வேறு பல பணிகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. தஞ்சை மாவட்டத்தில் 5,000 வடிமுனைக் குழாய் கிணறுகள் அமைக்க கடன்கள் அளிக்க அனுமதி வழங்கிய ரூ. 7.50 கோடி செலவும், தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக கடன்கள் அளிக்க அனுமதி வழங்கிய ரூ. 5.00 கோடி செலவும், மேலும், ரூ. 10.00 கோடிக்கு மேல் செலவாகும், கிராமங்களிலும், நகராட்சிப் பகுதிகளிலும் உள்ள நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு ஜனதா சேலை, வேட்டிகளை இலவசமாக வழங்குதல் ஆகிய முக்கிய திட்டங்கள் இதில் அடங்கும்.

4. கொடும் வறட்சிக் காரணமாக ஏற்பட்ட கடும் குடிநீர் பஞ்சத்தைச் சமாளிக்க மாநிலம் முழுவதிலும் துளைக் கிணறுகளை அமைப்பதற்காக அரசு பெரிய அளவில் நடவடிக்கை எடுத்தது. ரூ. 46 கோடி செலவில் 21,000 துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன. குடிநீர் பிரச்சினை, குறிப்பாக சென்னை மாநகரில் மிகவும் கடுமையாக இருந்தது. ஒரு சில மாதங்களுக்கு சென்னை மாநகர மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் மட்டுமே குடிநீர் வழங்கப்பட்ட போதிலும், போதிய அளவு குடிநீர் வழங்க மாநகரின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்ட நீர்த் தொட்டிகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் அனுப்பப்பட்டது. மேலும், ரூ. 252.28 இலட்சம் செலவில் சென்னை மாநகரில் 11,951 குழாய் கிணறு பம்புகளும், 1,204 இந்தியா மார்க் II பம்புகளும் அமைக்கப்பட்டன.



5. வறட்சியினால் எல்லாத் துறைகளிலும் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. பெருமளவு துயர்த் தணிப்புப் பணிகளைத் தவிர பல்வேறு துறைகளில் ஏற்பட்ட பாதிப்புகளை ஈடுசெய்ய, அரசு மேலும் பல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வகையில் உணவுப் பொருள் வழங்கும் பணிக்கு மாநில அரசின் நிதியுதவி அதிக அளவில் தேவைப்பட்டது. கொள்முதல் செய்வதில் அரசுக்கு ஏகபோக உரிமை இருந்தும், லெவி விலைக்கு மேல் வறட்சி ஈட்டுத் தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15 அதிகமாக கொடுத்தபோதிலும், நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 1983 சம்பா பருவத்தில் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் டன் அரிசி மட்டுமே கொள்முதல் செய்ய முடிந்தது. மத்திய அரசிடமிருந்து 1983 ஏப்ரலில் மாநில அரசு பெற்ற 15,000 டன் படிப்படியாக உயர்ந்து தற்போது 35,000 டன் அரிசி பெறுகின்ற போதிலும், வெளி அங்காடியிலிருந்து அதிகமான விலையில் அரிசி வழங்குவதன் மூலமே, பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டின்கீழ், பொதுமக்களுக்கு முழு அளவில் உணவுப்பொருள்களை வழங்க முடிந்தது. சென்ற சில ஆண்டுகளாகத் தொடர்ந்து அதே அளவில் இருந்துவரும் விற்பனை விலையிலேயே மாதம் ஒன்றுக்கு சுமார் 75,000 முதல் 80,000 டன் அரிசி வழங்கப்பட்டது. 1983 குறுவை பருவத்தில் ஒரு இலட்சத்து பத்தாயிரம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டது. 1984 சம்பா பருவத்தில் கொள்முதல் இன்னும் அதிகமான அளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8 ஆம் நாளிலிருந்து 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 29 ஆம் நாள் வரையிலான கால அளவில், நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏகபோகக் கொள்முதல் செய்யும் இடங்களில் மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட, குவின்டால் ஒன்றுக்கு, வறட்சி, பாசன ஈட்டுத் தொகையாக ரூ. 35 அளித்து வருகிறது. நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கப்படும் அரிசியின் விலையினை மத்திய அரசு அண்மையில் மேலும் உயர்த்தியுள்ளதன் காரணமாக, பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டின் மூலம் வழங்கப்படும் அரிசியின் விலைக்கு ஈடாகக் கொடுக்கப்படும் மானியத்தின் அளவும் உயர்ந்துள்ளது.

6. வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க, மாநில அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்ட போதிலும், மாநில அரசின் நிதி ஆதாரங்கள் போதுமான அளவு இல்லாததால், வறட்சித் துயர்த் தணிப்புப் பணிகளுக்காக மேற்கொண்டும் உதவி கேட்டு மத்திய அரசுக்கு மற்றுமோர்

வேண்டுகோள் விடுக்கும்படியான அவசியம் நமக்கேற்பட்டது. இப்போது வைத்திருக்கும் வேண்டுகோள், அரசு ஏற்கெனவே துயர்த்தனிப்புப் பணிகளுக்காக செலவிட்ட தொகையை ஈடு செய்யத்தானே தவிர, புதிய பணிகளுக்காக அல்ல. இந்த வேண்டுகோளுக்கிணங்க, மத்திய அரசின் குழு இம் மாநிலத்தில் பாதிக்கப்பட்ட சில மாவட்டங்களைப் பார்வையிட்டது. இக்குழுவின் பரிந்துரைகள் இன்னும் நமக்கு தெரியவில்லை என்றாலும் இந்திய அரசு கணிசமான அளவிற்கு நிதியுதவி அளிக்குமென மாநில அரசு நம்புகிறது.

7. வறட்சிக் கொடுமையிலிருந்து விடுபட்டு மாநிலத்தின் பொருளாதாரம் இயல்பான நிலைக்குத் திரும்பும் நிலையில், தஞ்சை, திருச்சி, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களை கடும் மழை தாக்கியதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இம்மழையின் காரணமாக பெருமளவில் சொத்துக்களுக்கு சேதமும் உயிரிழப்பும் ஏற்பட்டன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக விமானம் மூலம் பார்வையிட்டு தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நிவாரண நடவடிக்கைகளை நேரடியாக மேற்பார்வையிட்டார். இராணுவ அதிகாரிகள் நமது வேண்டுகோளுக்கு இணங்க உடனடியாக தங்கள் ஆட்களை அனுப்பினர். வெள்ளத்தினால் சூழப்பட்ட கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தும் வகையில், மிக குறுகிய கால அளவில் மூன்று பெய்லி பாலங்களை இராணுவத்தினர் அமைத்துக் கொடுத்தனர். கடற்படை, விமானப்படையினர் அளித்த ஹெலிகாப்டர்கள் மூலமும், கடற்படையினர் அளித்த காற்றினால் பெரிதாகக்கூடிய சிறிய படகுகள் மூலமும் வெள்ளத்தினால் சூழப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் அளிப்பதற்கும் அவர்களை மீட்பதற்கும் நடவடிக்கை எடுக்க முடிந்தது. உரிய தருணத்தில் அளித்த சேவைக்காகவும், உதவிக்காகவும், முப்படைகளுக்கும் இச்சந்தர்ப்பத்தில் அரசு தனது பாராட்டுதலைத் தெரிவித்து கொள்கிறது. இப்பகுதிகளில் தொற்று நோய்கள் தலைத்தூக்காவண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப் போதுமான அளவு மருந்துகளுடன், மருத்துவர்களும், சுகாதாரத்துறை அதிகாரிகளும் அந்தந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். வெள்ள நிவாரண பணிகளைத் துரிதப்படுத்த காவல் துறையினர் தகுந்த உதவிகளைச் செய்தனர்.

வெள்ள நிவாரணப் பணிகளை உடனடியாகச் செய்து முடிக்க உதவிய, இந்திய செஞ்சிலுவைச் சங்கம், பம்பாய் தமிழர் பேரவை, இராமகிருஷ்ணா மடம், தேசிய சமூக சேவை மற்றும், தேசிய மாணவர் படை உறுப்பினர்களுக்கும் அரசு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. வெள்ளத்தினால் 7,10,000



குடிசைகளும், 3,183 பாசன வாயில்களும், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், ஆகியவற்றைச் சேர்ந்த 4,211 சாலைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 10 இலட்சம் மக்களுக்கு உணவு அளிக்க 1,658 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டன.

8. சாலைகள், பாசன வாயில்கள் ஆகியவற்றைப் பழுது பார்த்து அவற்றை முந்தைய நிலைக்குக் கொண்டுவரவும் நிவாரண தொகை அளிக்கவும், மாநில அரசு ஏற்கனவே ரூ. 37.54 கோடி வழங்கியுள்ளது. வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ. 128 கோடி உதவி கேட்டு மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மத்திய குழுவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைப் பார்வையிட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து கணிசமான அளவிற்கு உதவி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

9. ஸ்ரீலங்காவில் உள்ள இந்திய வம்சாவழியினர் மீது குறிப்பாக தமிழர்கள் மீது வலிந்துவிடப்பட்ட அரக்கத்தனமான வன்முறை நடவடிக்கைகளினால் தமிழர்கள் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டது தமிழ்நாட்டு மக்களிடையே கொதிப்பையும் தாங்கொணாத் துயரையும் ஏற்படுத்தியது. தமிழக மக்கள் ஸ்ரீலங்கா தமிழர்களுடன் ஒன்றுபட்டு நிற்பதை எடுத்துரைக்க தமிழக முதல்வர் 1983 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 28 ஆம் நாள் அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் மாநாட்டைக் கூட்டினார். ஆகஸ்டு மாதத்தில் இத்தகைய கூட்டங்கள் இரண்டை மீண்டும் கூட்டினார். ஸ்ரீலங்கா தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மாநில அரசு 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2 ஆம் நாளன்று பொது வேலை நிறுத்தம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தது. இதில் எல்லா அரசியல் கட்சிகளும் மைய அரசின் துறைகளும் கலந்து கொண்டன. இந்தப் பொது வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக இந்திய அரசு, விமானப் பணிகளையும் ரயில் போக்குவரத்தையும் நிறுத்தி வைத்தது. இந்திய வரலாற்றிலேயே, விமானப் பணிகளை நிறுத்தி வைத்தது இதுவே முதல் முறையாகும். இப்பிரச்சினைக்கு நிலையான தீர்வுகாண உடனடியாகவும் செவ்வையான முறையிலும் நடவடிக்கை எடுத்ததற்காக நாம் இந்தியப் பிரதமருக்குக் கடமைப் பட்டுள்ளோம்.

1964 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்கு திரும்பிவரும் இந்திய வம்சாவழியினரைத் தவிர, ஸ்ரீலங்காவில் நடந்த கலவரங்களினால் பாதிக்கப்பட்ட அகதிகள் 1983 ஜூலை முதற்கொண்டு ஸ்ரீலங்காவிலிருந்து தமிழ்நாட்டிற்கு பெருமளவில் வரத்தொடங்கினர். 1984 ஜனவரி வரையில் கப்பல் மூலமாகவும் விமானம் மூலமாகவும் 35,394 பேர் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். இவர்களில் 14,334 பேர்தான் ஸ்ரீலங்காவிற்குத் திரும்பிச் சென்றுள்ளனர். நாதியற்ற அகதிகளுக்கு உடனடி உதவியாக

நிவாரணமும் அளிக்க இடைத்தங்கள் முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன ஸ்ரீலங்கா தமிழர்களின் இடருதவிக்காக வசூலிக்கப்படும் நிதியைப் பெறவும் அவற்றைச் செவ்வையான முறையில் வழிப்படுத்தவும் சட்டமன்ற உறுப்பினர்கள், முக்கியமான அரசியல் கட்சித் தலைவர்கள் அடங்கிய மாநில அளவிலான குழு ஒன்றைத் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. மாவட்ட நிலையில் எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்பட்ட குழுக்களைத் தவிர பெருந்தொழிலதிபர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்காவில் நடந்த கலவரங்களில் கொல்லப்பட்ட விடுதலை வீரர்களான குட்டிமணி, தங்கதுரை ஆகிய இருவரின் துணைவியருக்கும் திரு. குட்டிமணியின் சகோதரிக்கும் அரசு வீடுகள் கொடுத்துள்ளது. திருமதி குட்டிமணியின் குடும்பத்திற்கு ஓராண்டு வரையில் அல்லது அவர் குடும்பம் ஸ்ரீலங்காவிற்குத் திரும்பும் வரையில் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000 நிதி உதவியும் அளிக்கப்பட்டுள்ளது.

10. கடந்த ஆண்டில் தென்மேற்கு பருவமழை காலம் தாழ்த்தி வந்ததால் ஏற்பட்ட இடர்பாடு காரணமாக விவசாயிகளால் சம்பா சாகுபடியை உரிய காலத்தில் துவங்க முடியவில்லை. இந்த நிலைமையை சமாளிக்க, விவசாயிகளுக்கு ரூ. 464 இலட்சம் செலவில் விதைகள், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் அரசால் கொடுக்கப்பட்டன. பாசன வசதிகளை மேம்படுத்த தஞ்சாவூர் மாவட்டத்தில், ரூ. 7.50 கோடி செலவில் 5,000 வடிமுனைக் குழாய் கிணறுகளை வெட்டும் ஒரு பெரும் திட்டத்தை அரசு மேற்கொண்டது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு கிணறுவெட்ட ரூ. 15,000 வரை கடனாக அளிக்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 2,521 வடிமுனைக் குழாய் கிணறுகள் ஏற்படுத்த கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலம் கடுமையான மின் பற்றாக்குறையை எதிர்நோக்கியிருந்த போதிலும் நாளொன்றுக்கு 12 மணி நேரம் அளவிற்கு விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் அளிக்கப்பட்டது. காவிரி பாசனப் பகுதியில் விவசாயிகளை சம்பா பயிரிட ஊக்குவிக்கும் வகையில் அரசு கொள்முதல் விலையை இவ்வருடம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 171 என அறிவித்துள்ளது. அதாவது மத்திய அரசு அறிவித்துள்ள விலையை விட ரூ. 35 அதிகம்.

அரசு சரியான நேரத்தில் எடுத்த இந்த அனைத்து நடவடிக்கைகளாலும் சம்பா பயிர் விளைச்சல் உற்சாகம் தருவதாக இருக்குமென எதிர்பார்த்திருந்த போதிலும் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் பெய்த கடும் மழையின் காரணமாக துரதிர்ஷ்டவசமாக காவிரி பாசன பகுதியில் சம்பா பயிருக்கு பெருத்த சேதம் ஏற்பட்டது. இக் கடும் மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு உடனடியாக குறைந்த விலையில் 500 மெட்ரிக் டன் அளவிற்கு பருப்பு விதைகளை விநியோகிக்க ஏற்பாடு செய்தது.



கடும் மழைக் காரணமாக காவிரி பாசனப் பகுதியில் சம்பாப் பயிருக்கு பெருத்த சேதம் ஏற்பட்டாலும் இம் மழையினால் மாநிலத்தில் வட மாவட்டங்களில் உள்ள ஏரிகளும், குளங்களும் நிரம்பின. இப் பாசன வசதியைப் பயன்படுத்தி அரசு 10 இலட்சம் ஏக்கரில் பருப்பு விதைகளையும், 7 இலட்சம் ஏக்கரில் நவரை நெல் வகைகளையும், 8 இலட்சம் ஏக்கரில் நிலக்கடலையையும் சாகுபடி செய்ய பெரும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. இந்த விளைச்சலால் காவிரி பாசனப் பகுதியில் ஏற்பட்ட சேதத்தை ஓரளவிற்கு ஈடுகட்ட முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலே கூறியபடி இயற்கைச் சீற்றங்கள் காரணமாக மாநிலத்தின் விவசாயப் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தபோதிலும் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்ததால் உணவு உற்பத்தியின் அளவு திருப்திகரமாகவே இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மிக அதிகமான நிலுவை இருந்தும், விவசாயப் பணிக் கூட்டுறவு சங்கங்கள் 1983-ம் ஆண்டு டிசம்பர் வரை ரூ. 58.04 கோடியளவிற்குப் பயிர் கடன்கள் வழங்கியுள்ளன.

1984-85 ஆம் ஆண்டில் 95 இலட்சம் மெட்ரிக் டன் அளவு உணவு தானியங்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உயர்ந்த இலக்கினை நாம் அடைய அரசு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளது. நல்ல தரமான விதை உற்பத்தியும் அதன் விநியோக முறையும் வலுப்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு இவை பெருமளவில் கிட்ட வழிவகைகள் செய்யப்படும். விவசாயத்திற்கான தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்த காவிரி, வைகை, சாத்தனூர் மற்றும் பாம்பிக்குளம்-ஆளியாறு ஆகிய பாசனப் பகுதிகளில் விசேஷமான கவனம் செலுத்தி பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. "ஹெக்டேர் ஒன்றுக்கு 5 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி" என்ற இலக்கினை 1984-85-ல் அடைய முயற்சிகள் எடுக்கப்படும்.

11. தற்போதுள்ள பயிர்க் காப்புறுதி திட்டம் நெல் பயிருக்கு மட்டும் உள்ளது. இதன் கீழ் ஒவ்வொரு விவசாயியும், பாசனப் பயிருக்கு ரூ. 10,000 அல்லது தான் பெற்றுள்ள பயிர் கடனில் 150 சதவீதம், இவற்றில் எது குறைவோ, மேலும் மானாவாரி பயிருக்கு ரூ. 5,000 அல்லது தான் பெற்றுள்ள பயிர்கடனில் 150 சதவீதம் இவற்றில் எது குறைவோ அந்த அளவிற்கு பயிர் காப்பு பெறலாம். தற்போதுள்ள திட்டம் நெல் பயிருக்கு மட்டும் இருப்பதால், பல்வேறு பொருள் மற்றும் உயிர் சேதத்தையும் ஈடுகட்டும் வகையில், அரசு இத்திட்டத்தினை விரிவாக்கத் திட்டமிட்டுள்ளது.

12. பால்வளத் திட்டம் II தற்போது மாநிலத்தின் ஒன்பது மாவட்டங்களில் நடைமுறையில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் உற்சாக மூட்டும் பயன்கள் கிட்டியிருப்பதால் அரசு, மேலும் மூன்று மாவட்டங்களில்

இத்திட்டத்தினை செயலாக்க இந்திய பால்வள நிறுவனத்தை கேட்டுக்கொண்டுள்ளது. மாடுகளின் தரத்தை மேம்படுத்திப் பால் உற்பத்தியை பெருக்க, உறை விந்துக்கான ஒரு வங்கியைத் தொடங்கி 400 துணை மையங்களில் இவ்வசதி கிடைக்குமாறு வகை செய்ய திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன.

13. இதுவரை பாசன வசதி பெறாத நிலங்களுக்கு பாசன வசதி ஏற்படுத்திக் கொடுப்பதும், ஏற்கெனவே பாசனம் பெற்று வரும் நிலங்களுக்கு, அவ்வசதியை நிலையாக்குவதும் அரசின் முக்கிய கொள்கையாகும். ஆறாவது திட்டக் காலத்தில் சிறிய மற்றும் பெரிய பாசனத் திட்டங்கள் மற்றும் வெள்ள் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கு ரூ. 189.79 கோடி அனுமதிக்கப்பட்டிருக்க, திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் ரூ. 80.73 கோடி செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இத் திட்டங்களுக்கு என ரூ. 55.14 கோடியும், அடுத்த ஆண்டில் ரூ. 60.62 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 78,000 எக்டேர் நிலத்திற்கு பாசன வசதி ஏற்படுத்தவேண்டுமென இலக்கிட்டிருக்க, முதல் மூன்று ஆண்டுகளில் 36,656 எக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் 16,880 எக்டேர் நிலப்பரப்பு பாசன வசதிபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

14. கிருஷ்ணா நதியிலிருந்து 15 ஆயிரம் மில்லியன் கனஅடி நீரைப் பெறுவதற்காக, தமிழ்நாடு அரசும், ஆந்திரப் பிரதேச அரசும் 18—4—1983 அன்று ஒப்பந்தம் செய்துகொண்டதன் வாயிலாக. சென்னை மாநகரில் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுகாண வகைச் செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் மாநிலங்களுக்கிடையேயான ஒத்துழைப்பிற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். ஆந்திரப் பிரதேசத்தில் பாசனத்திற்கும் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதைப் பெருக்குவதற்கும் கிருஷ்ணா நதி நீர் திட்டம் வகைசெய்யும். இதற்காக மதிப்பிடப்பட்ட மொத்தத் திட்டச் செலவான ரூ. 760 கோடியில், தமிழ் நாட்டின் பங்கு ரூ. 200 கோடியாக இருக்கும். திட்டத்தின் முதற்கட்டப் பணிக்காக ரூ. 30.15 கோடி செலவிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நம் மாநில எல்லைப் பகுதியிலிருந்து பூண்டி நீர்த்தேக்கத்திற்குக் கால்வாய் வெட்டும் பணியை நாம் மேற்கொண்டுள்ளோம் எஞ்சிய பணியை ஆந்திரப்பிரதேச அரசு நிறைவேற்றி வருகிறது. இந்த கிருஷ்ணா நதி நீர் திட்டம் நிறைவேறியபின் சென்னை மாநகரில் தற்போதுள்ள உயரளவாக, நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு கிடைக்கும் 65 லிட்டர் நீர் 127 லிட்டராக உயரும்.

15. தமிழ் நாட்டில் பயிரிடத்தக்க நிலத்தில் 50 சத வீத நிலப்பரப்புக்கு இன்னும் பாசனம் அளிக்க வேண்டியுள்ள நிலையில், மேல்பரப்பு நீர் முற்றிலும் பயன்படுத்தப்பட்டுவிட்டது. சில பகுதிகளில் நிலத்தடி நீரும் பயன்



படுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, அறிவார்ந்த முறையிலும், அறிவியல் அடிப்படையிலும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாததாகும். பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு நீர் வழங்கும் ஏற்பாடுகளை நவீனப்படுத்துவதினாலும், புதிய கசிவு நீர் குட்டைகள் ஏற்படுத்துவதினாலும் நீரைச்சிக்கனமாகப் பயன்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 9 இலட்சம் எக்டேர் பரப்புக்குப் பாசனம் அளிக்க 39,000-க்கும் மேற்பட்ட மானவாரி ஏரிகள் உள்ளன. இவற்றை நவீனப்படுத்தி, இந்நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்த பணிகளுக்கு அடுத்தபடியாக அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். இம் மாநிலத்திலுள்ள சிறுபாசன ஏற்பாடுகளை நவீனப்படுத்துவதற்கு மத்திய அரசின் மூலம் ஐரோப்பிய பொருளாதாரக் குழுவிடமிருந்து ரூ. 25 கோடி மானியம் பெறுவதில் இவ்வரசு வெற்றிகண்டுள்ளது. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து ஐந்தாண்டுகளில் முடிவடையும். தமிழ்நாட்டிலுள்ள ஐந்து மாவட்டங்களில் அதாவது, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை. இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏரிகளை நவீனப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும். இதன்மூலம் தற்போது பயன்படுத்தப்படும் நீரில் 20 சதவீதத்தை மிச்சப்படுத்த முடியும். இதனால் தற்போதுள்ள ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு இடையறாத பாசன வசதி அளிக்கவும், அவற்றின் சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும் முடியும்.

16. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை மேம்படுத்துவதற்கும், நிலத்தின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குமான வழிமுறைகளை ஆய்வு செய்து, கண்காணிக்க பாசன நிருவாக-பயிற்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த மாநில அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம், அனைத்து நாட்டு வளர்ச்சி குறித்த அமெரிக்க நிறுவன உதவியுடன் செயல்படுத்தப்படும். இத்திட்டம், சுமார் ரூ. 10 கோடி மொத்தச் செலவில் விரைவில் துவங்கி 7 ஆண்டு காலத்தில் செயல்படுத்தப்படும். இதில். தமிழ்நாடு அரசின் பங்கு ரூ. 4.4 கோடியாகும். மீதமுள்ள தொகை, அமெரிக்க நாட்டு நிறுவனத்திடமிருந்து ரூ. 1.4 கோடி கடனாகவும், மீதமுள்ள ரூ. 4.2 கோடி மானியமாகவும் பெறப்படும்.

17. பருவமழை பொய்த்துவிடுவதனால் அவ்வப்போது பாதிக்கப்படும் மற்றொரு துறை மின்சக்தித்துறையாகும். தமிழ்நாட்டில் மொத்த மின் உற்பத்தியில், அதிக செலவில் உற்பத்தியாகும் அனல் மின்சக்தி பெருமளவு இடம் வகிப்பது தவிர்க்கமுடியாததாகும், அடுத்தடுத்து பருவமழை பொய்த்ததன் காரணமாக, புனல் மின் உற்பத்தி குறைந்து மின் வாரியத்தின் இழப்பு அதிகமாகிறது. இதன் விளைவாக மாநிலத்தின் நிதி நிலையிலும் பெருஞ்சுமை ஏற்படுகிறது. புனல் மின் உற்பத்தி நிலையங்களையும், எனைய மின்

உற்பத்தி நிலையங்களையும் கவனமாகவும், திறம்படவும் நிருவகித்ததன் மூலமே, சென்ற ஆண்டு ஒரு சிறிது காலம் இருந்த 100 சதவீத மின்வெட்டினை உயரழுத்த மின்சக்தியைப் பிரதானமாகப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்குத் தளர்த்த முடிந்துள்ளது. உயரழுத்த் மின் சக்தியைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு தேவையில் 75 சதவீதமாகவும், மின் அழுத்தத்தில் 60 சதவீதமாகவும் இருந்த மின்வெட்டு தேவையிலும் மின் அழுத்தத்திலும் 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. உயரழுத்த மின் சக்தியைப் பயன்படுத்தும் ஏனைய தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டுத் தேவையிலும், மின் அழுத்தத்திலும் 15 சத வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1—10—1981-க்குப் பிறகு தொடங்கப்பட்ட உயரழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு 30—6—1984 வரை மின்வெட்டிலிருந்து முழு விலக்களிக்கப்பட்டுள்ளது. உயர் உபயோக நேரத்தில் Peak hour தொழிற்சாலைகளுக்கு மின் சக்தியைப் பயன்படுத்த விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. குறைவழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் அனைத்துப் பணிகளுக்கும் 11—7—1983-லிருந்து மின்வெட்டு நீக்கப்பட்டது.

18. அனல் மின்சக்தி உற்பத்தியைக் கணிசமான அளவுக்குப் பெருக்குவதன் மூலம் மட்டுமே இம்மாநிலத்தில் உள்ள மின் பற்றாக்குறைப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணமுடியும். 210 மெகாவாட் உற்பத்தித் திறன்கொண்ட இரண்டு யூனிட்டுகள் அமைக்கும் மேட்டூர் அனல் மின் உற்பத்தி நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கு தற்போது மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. பழுப்பு நிலக்கரியைப்பயன்படுத்தி நெய்வேலியில் 210 மெகாவாட் உற்பத்தித் திறன்கொண்ட ஐந்து அனல் மின் யூனிட்டுகள் ஏற்படுத்துவதற்கான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, 1983 ஜூனில் மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நெய்வேலியில் மூன்றாவது சுரங்கத்தை வெட்டும் பணியைத் தொடங்குவதற்கும், மேற்குறிப்பிட்ட அனல் மின் உற்பத்தித் திட்டத்திற்கு முழு அளவில் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்குமாறு நமது அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. இம் மாநிலத்தில் மற்றுமொரு அணு மின்சக்தித் திட்டத்தைத் தொடங்குமாறு இந்த அரசு, மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. இம் மாநிலத்தில் நீண்ட காலமாக நிலவி வரும் மின்சக்திப் பற்றாக்குறையை ஓரளவிற்காவது தீர்க்க இத்திட்டம் உதவும்.

19. 1983 ஆம் ஆண்டு மே திங்களில் மின் கட்டணம் திருத்தியமைக்கப்பட்டபோதிலும், மின் பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் மின் கட்டணங்கள். மின் உற்பத்திச் செலவைக் கூட ஈடுசெய்யப் போதுமானதாக

நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பு அளிக்க வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள, ஒருவருமே வேலை வாய்ப்புப் பெறாத, குடும்பத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று மாநில அரசு அண்மையில் அறிவித்துள்ளது. மேலும், கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்கள் பற்றியும், அக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் சுய வேலை வாய்ப்பில் ஈடுபடத் தகுதியும், ஆர்வமும் உள்ளவர்கள் பற்றியும் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

தேவையான தகுதி வாய்ந்த கைவினைஞர்கள் கிராமப்பகுதிகளில் இல்லை என்பதனால் எந்த ஒரு சுய வேலைவாய்ப்புத் திட்டமும் திறமையை வளர்ப்பதை நோககமாகக கொண்டிருக்க வேண்டும். ஏற்கெனவே நிறுவன நிதியின் உதவியுடன் செயலாக்கப்படும், சுயவேலைவாய்ப்பு அளிக்கும் திட்டங்களுடன் பல்வேறு திட்டங்களின்கீழான பயிற்சித் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்த வேண்டியுள்ளது. பிரதமரின், படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டம், மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து செயல்படுத்தும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் பலன், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில் தகுந்த நிறுவன அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் கடன் உதவி கிடைக்கச் செய்வதை முறைப்படுத்தும் ஓர் அமைப்பாகப் பணியாற்ற 15—7—1983 முதல் நிறுவன நிதித் துறை என்ற ஒரு துறையை அரசு ஏற்படுத்தியுள்ளது. இது, ஏற்படுத்தப்பட்ட சில மாதங்களில் ரூ. 30.16 கோடி அளவிற்குக் கடன்களை இம் மாநிலத்திலுள்ள 1,70,564 பேருக்கு வழங்கியுள்ளது. இதில் 56,966 பேர் ஆதி திராவிடர்கள் ஆவர். தொழிற் பயிற்சி நிலையத்தின் பயிற்சி பெற்ற வேலை இல்லாமல் இருக்கும் 10,000 பேர்களுக்கு தொடக்க மூலதன உதவி அளித்து, அதன் மூலம் வங்கிக் கடனைப் பெறச் செய்யும் பணியைப் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள வேலைவாய்ப்புப் பணிகள் துறை மேற்கொண்டுள்ளது.

24. நிலமற்ற கிராமப்புறத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ. 8.90 கோடியையும் அடுத்த ஆண்டிற்கு ரூ. 44.50 கோடியையும் மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. ரூ. 44 கோடி மதிப்பீட்டுச் செலவிலான திட்டங்களுக்கு, மாநில அரசு, மத்திய அரசின் ஒப்புதலை ஏற்கெனவே பெற்றுள்ளது.

25. மாநில அரசும் மத்திய அரசும் சம அளவில் நிதியுதவி அளித்து செயற்படுத்தி வரும் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் ரூ. 36 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1979—80

இல்லை. அப்படியிருக்க. மத்திய திட்டக் குழு வலியுறுத்தும் முதலீட்டில் 3 சதவீத ஆதாயம் கிட்ட வாய்ப்பில்லை என்பதைச் சொல்லத் தேவையில்லை. அண்மையில் நிலக்கரி விலை 25 சதவீதம் உயர்ந்துள்ளதால் இந்நிலை மேலும் மோசமாகியுள்ளது. தனது மூலதனத் திட்டங்களுக்கு மட்டுமின்றி, மின் உற்பத்தித் திட்டங்களுக்கான செலவில் ஏற்படும் பற்றாக்குறையை ஈடு செய்யவும், மாநில அரசின் நிதியுதவியை மின்வாரியம் பெருமளவில் நாட வேண்டியுள்ளது.

20. கிராமப்புற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அரசு முன்னுரிமை அளித்து வந்துள்ளது. 1976—77 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட புள்ளிவிவரக் கணக்குப்படி இம் மாநிலத்தில் உள்ள 47,273 குடியிருப்புப் பகுதிகளில் 18,167 குடியிருப்புகள் பகுதிகள் குடிநீர் பிரச்சினையுள்ள குடியிருப்புப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுகளில் பருவமழை பொய்த்ததன் காரணமாக குடிநீர் பிரச்சினையுள்ள கிராமங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. 1985 மார்ச் இறுதிக்குள், இந்த குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கப்படுமென்று நம்பப்படுகிறது.

21. உலக வங்கியின் நிதியுதவியுடன் குடிநீர் வழங்குதல் மற்றும் குறைந்த செலவிலான துப்புரவுப் பணித் திட்டத்தை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய மூனறு பெரு நகரங்களுக்கும், ஏனைய 75 நகரங்களுக்கும், 740 கிராமக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டங்களும் 14 நகராட்சிகளுக்குக் குறைந்த செலவில் துப்புரவு வசதி அளிக்கும் திட்டமும் மேற்கொள்ளப்படும். ரூ. 149.42 கோடி செலவில் செயலாக்கப்படவிருக்கும் இத் திட்டம் நாலரை ஆண்டுகளில் முடிவடையும்.

22. பெரியார், கோயம்புத்தூர் மாவட்டங்களில் தண்ணீரில் அதிக ஃப்ளுரைட் உள்ள 726 குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் ஒரு திட்டத்திற்கு நிதியுதவி அளிக்க ஐரோப்பிய பொருளாதாரக் குழு ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டம், ரூ. 15.20 கோடி மதிப்பீட்டுச் செலவில் 30 மாதங்களில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

23. வறுமையை ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்டு இந்த அரசு முனைப்பாகச் செயல்பட்டு வருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். ஒட்டுமொத்தமான பொருளாதார வளர்ச்சி இன்றியும், மேலும் வேலைவாய்ப்புகளை உருவாக்காமலும் இந்த உயரிய நோக்கத்தை எய்த இயலாது. இதனைக் கருத்தில் கொண்டுதான், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு வேலை அளிக்கும் திட்டத்தை அரசு தொடங்கியது. அரசுத் துறைகளிலும், அரசு

முதல் 1983 நவம்பர் இறுதி வரை, இத்திட்டத்தின்கீழ் 164,867 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்கு 1984-85 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 40 கோடி ஒதுக்கப்படும். இதில் 50 சதவீதத் தொகையை மத்திய அரசு அளிக்கும்.

26. நம்முடைய சமுதாயத்தை இன்று எதிர்நோக்கியுள்ள மிக முக்கியப் பிரச்சினை, தற்போதைய கல்வி முறையில் படித்து விட்டு வரும் எண்ணற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுதான். அனைத்து நிலைகளிலும் உள்ள பொதுவான கல்விமுறை, வேலை வாய்ப்பை அளிக்க முடியாத அளவிற்கு மனித ஆற்றலை உருவாக்கித் தந்துள்ளது. இவர்களிடையே வளர்ந்து வரும், அதிருப்தி, சமுதாயத்தில் அமைதியின்மையையும் பதட்ட நிலையையும் அதிகமாக்குகின்றன. கல்வியின் அனைத்து நிலைகளிலும் அந்தந்த இடத்திற்கேற்றாற்போல் குறிப்பிட்ட பணிப் பயிற்சி அளிக்கக்கூடிய வகையில், தற்போதைய கல்வி முறையை மாற்றியமைப்பதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. அப்பொழுதுதான், இளைஞர்கள் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு பெறுவதற்கோ அல்லது சுய வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்வதற்கோ திறனைப் பெற்றிருப்பர். இந்த பல்திறப்பட்ட திட்டத்தைச் செயலாற்றுவது மாநிலத்தின் நிதி ஆதாரங்களுக்கு அப்பாற்பட்டு இருக்குமாதலால், மாநில அரசு, எட்டாவது நிதிக் குழுவின் மூலம் மைய அரசிடம் நிதியுதவியைக் கோரியுள்ளது. இக்குழுவின் இடைக்கால அறிக்கையில் இதுபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை எனினும், இச்செயற்குறிப்பிற்கு மைய அரசின் நிதியுதவி பெறவிரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

27. தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் இம் மாநில அரசு அளித்துள்ள பல்வேறு சலுகைகள், வசதிகளைத் தவிர பெரும் செலவில் பொதுத் துறைத் தொழில்களை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செங்கற்பட்டு மாவட்டம், திருவாலங்காட்டில் சுமார் ரூ. 10 கோடி செலவில் அமைக்கப்பட்டுவரும் திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, இவ்வாண்டு ஏப்ரல் மத்தியில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெருமளவில் ஆட்குறைப்புச் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் பணி செம்மையாக நடைபெறுவதை உறுதி செய்வதற்காகவும் மதுரை மாவட்டத்தில் உள்ள மதுரா சுகர்ஸ் நிறுவனத்தின் நிர்வாகத்தை மாநில அரசு தன்பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ளது.

28. மாநில அரசால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு பத்திரிகைக் காகிதம்—பிற காகித ஆலை நிறுவனம், திருச்சி மாவட்டத்தின் பின்தங்கிய பகுதியான புகளூரில் பத்திரிகைக் காகிதம்-பிற காகித ஆலை ஒன்றை அமைத்து வருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். ரூ. 195 கோடி செலவிலான

இத்திட்டத்திற்கு, உலக வங்கி, திட்டச் செலவில் 50 சதவீதத்தை ஏற்கிறது. ஆண்டு ஒன்றிற்கு 50,000 டன் பத்திரிகைக் காகிதத்தையும், 40,000 டன் பிற காகிதத்தையும் உற்பத்தி செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இத்திட்டம் செயல்படத் தொடங்கியவுடன் ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடி அளவிற்கு அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தும். இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் நடந்தேறி வருகின்றன. திட்டமிட்டுள்ளவாறு, நடப்பு ஆண்டின் செப்டம்பர்-அக்டோபருக்குள் இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

29. சென்னையில் வரிக் கட்டுப்பாடற்ற வணிக மண்டலம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பிற்கு மத்திய அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. அரசுக்குச் சொந்தமான 150 ஏக்கர் நிலம் இம் மண்டலத்தை அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப் பகுதியின் மேம்பாட்டுப் பணி, மாநில தொழில் மேம்பாட்டு நிறுவனத்திடம் (சிப்காட்) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

30. பாம்பன் பாலப்பணி விரைவில் மறுபடி ஆரம்பிக்கப்படும். இராமேஸ்வரம் தீவின் முனையில் இருக்கும் தனுஷ்கோடி வரை தடங்கலற்ற சாலைப் போக்குவரத்து வசதியை இப்பாலம் ஏற்படுத்தும். இப்பணிக்கு இப்போது ரூ. 16.65 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

31. அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் பணி தொடர்ந்து மிகவும் திருப்தி தரும்வகையில் நடைபெற்று வருகிறது. நாட்டிலேயே தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் தலை சிறந்தவைகளில் ஒன்றாக விளங்குகின்றன என்று மத்தியத் திட்டக் குழு கருத்துத் தெரிவித்துள்ளது. ஈரோட்டில் ஜீவா போக்குவரத்து நிறுவனம், நாகர்கோவிலில் நேசமணி போக்குவரத்து நிறுவனம், காரைக்குடியில் மருதுபாண்டியர் போக்குவரத்து நிறுவனம் ஆகிய புதிய மூன்று போக்குவரத்து நிறுவனங்கள் 1—4—1983 முதல் தனித்துச் செயல்படத் தொடங்கியுள்ளன. கடந்த நிதியாண்டில், மூன்று நிறுவனங்கள் தவிர, பிற நிறுவனங்கள் அனைத்தும் ஆதாயம் ஈட்டியுள்ள போதிலும், டீசல் வழங்கல் விலை அவ்வப்போது உயர்ந்து வருவதால், இந்த ஆதாயநிலை தொடர்ந்து இருப்பது கடினமாகும். 1980 முதல் இப்பொழுதுவரையிலான கால அளவில், டீசலின் விலை 100 சதவீதத்திற்கும் மேல் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக, கடந்த மூன்றரை ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு ரூ. 115 கோடி அளவிற்குக் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.





32. கிராமப்புறப் பகுதிகளுக்குச் சுகாதார வசதி அளிப்பது, மாநில அரசின் கொள்கைகளில் முக்கியமான ஒன்றாகும். இந்தக் கொள்கையின் அடிப்படையில், 5,000 மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு பகுதியிலும், சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 712 துணை நிலையங்களைக் கூடுதலாக ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இன்னும் மாநிலத்தில் தற்போது உள்ள 4,586 துணை நிலையங்களுக்குக் கூடுதலாக அமையும்.

33. தென் ஆர்க்காடு மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் டேனிடா (DANIDA) நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் குடும்ப நலத் திட்டம் மூன்றாம் ஆண்டை எட்டியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 449 சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 313 துணை நிலையங்களில் கட்டிடம் கட்டும் பணி நடந்து வருகிறது.

34. குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் சிறப்பான நாட்டம் செலுத்தப்பட்டு வருவதால், நல்ல பயன் கிட்டியுள்ளது. இந்த ஆண்டில் 3.99 இலட்சம் கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட வேண்டுமென இலக்கு நிச்சயக்கப்பட்டிருக்க, 1984 சனவரி இறுதிவரை 3,77,827 கருத்தடை அறுவை சிகிச்சைகளைச் செய்து, இம் மாநில அரசு, நாட்டிலேயே முதன்மையாகத் திகழ்கிறது. இவ்வாண்டின் முடிவிற்குள், இது தொடர்பான பணி இலக்கை கணிசமான அளவுக்கு விஞ்சக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வட்டார மருத்துவமனைகளுக்கு அளிக்க ரூ. 7.?? இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 26 லேப்ரோஸ்கோப் கருவிகளை வாங்க இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

35. சுற்றுப்புறச் சூழல் சுகாதாரத்தைப் பற்றிய சட்டங்களைச் செவ்வனே செயல்படுத்த 1983 ஜூலை மாதம் 15 ஆம் தேதியிலிருந்து அரசு, இதற்கான ஒரு தனித் துறையை உருவாக்கியது. மாநிலம் முழுவதும் 1983 அக்டோபர் முதல் தேதியிலிருந்து "காற்று தூய்மைக்கேடு கட்டுப்பாடு இடமாக" அறிவிக்கப்பட்டுள்ளது. 1983 செப்டம்பர் 30-ம் தேதியிலிருந்து அமுலுக்கு வந்த தமிழ்நாடு நீர் தூய்மைக்கேடு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு விதிகள், 1983, மற்றும் தமிழ்நாடு காற்று (தூய்மைக்கேடு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள் 1983, ஆகியவையினால் மாநிலத்தில் புதிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கான நிரந்தரத் தகுதியை மாநிலம் பெற்றுள்ளது.

36. ஆறாவது திட்டக் காலத்தில், கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் இரண்டு இலட்சம் வீடுகளைக் கட்டுவதற்குரிய திட்டம் ஒன்றை மாநில அரசு மேற்கொண்டுள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். 1982-83 ஆம் ஆண்டில் 40,000 வீடுகள் கட்டவேண்டுமெனத் திட்டமிட்டிருக்க,

40,092 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில், அக்டோபர் இறுதி வரையில் 17,894 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் ஆதி திராவிடர் களுக்காக 15,058 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 20,759 வீடுகளைக் கட்டும் பணி வெவ்வேறு நிலைகளில் உள்ளது. ஒரு வீட்டின் கட்டுமான மதிப் பீட்டுச் செலவு நடப்பு நிதி ஆண்டுத் தொடக்கத்திலிருந்து ரூ. 4,000-லிருந்து ரூ. 6,000 ஆக உயர்ந்துள்ளது.

37. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் ஒரு முக்கிய பலன் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்ததாகும். இத் திட்டம், மனிதவளத்தில் செய்யப்பட்டுள்ள முதலீடு என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். கோயம்புத்தூர், அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் கல்லூரி இது தொடர்பாக மாதிரி ஆய்வு ஒன்றை நடத்தியது. ஆய்வு செய்யப்பட்ட பகுதியில் உள்ள அனைத்துக் குழந்தைகளின் உடல் நலத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு சராசரி உயரம், எடை ஆகியவையும் நான்கு மாத கால அளவில் அதிகரித்துள்ளன என்பது இந்த ஆய்விலிருந்து தெரிய வரு கிறது. இத்திட்டத்தின்கீழ் வரும் பாலர்களுக்கு மருத்துவப் பரிசோதனை யும் சிகிச்சையும் அளிப்பதற்கான விரிவான திட்டம் ஒன்றும் வகுக்கப்பட் டுள்ளது.

38. 1982-83 ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில். தமிழக அரசு தலைசிறந்து விளங்கியது என்று மத்தியத் திட்டக்குழு பாராட்டியுள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இதே முறையில் நடப்பாண்டிலும் இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதின் பயனாக, எண் ணெய் வித்துக்கள் உற்பத்தி, கிராம வேலைவாய்ப்புத் தேசியத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வேலை நாட்கள், நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்கு வதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட உபரி நிலம். வறுமைக் கோட்டினைத் தாண்ட பழங்குடியினருக்கு உதவியளித்தல், கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குதல், ஏழைகளுக்கு வீட்டுமனைகள் வழங்குதல், மரங்கள் நடுதல், கரிம எரிவாயு தயாரிப்புச் சாதனங்கள் அமைத்தல், செய்யப்பட்ட கருத் தடை அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை, தொடக்கச் சுகாதார நிலையங் கள் அமைத்தல், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்பாடு, 6—14 வயதுத் தொகுதியிலுள்ள சிறார்களைப் பள்ளியில் சேர்த்தல், முதியோர் கல்வித் திட்டத்தின்கீழ் பயனடைந்தவர்கள் ஆகிய அம்சங்களில், நடப்பாண்டிற்கான இலக்கில் 70 சதவீதத்தை ஏற்கெனவே அடைந்துவிட்டது.

39. தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் 1981-82 முதல் நாம் பெற்ற அனுபவத்தைக் கருத்தில் கொண்டு மாநிலம் முழுவதிலும், சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின்



மொத்த விற்பனையை, பொது நலன் கருதி அரசு தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டு அரசுக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்று இதனை நிருவகிக்கவும், முறைப்படுத்தவும் வேண்டும் என்று மாநில அரசு முடிவு செய்தது. இந்த நோக்கத்துடன் தமிழ்நாடு மாநில விற்பனை நிறுவனம் அமைக்கப்பட்டது; சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனையை அரசு தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டு, 1—6—1983 முதல் இந்த நிறுவனத்திடம் அந்த உரிமையை ஒப்படைத்தது.

40. மாவட்ட நிர்வாகத்தை மேலும் பயனுள்ளதாக்குவதற்கென மாநிலத்தில் உள்ள சில பெரிய மாவட்டங்களை படிப்படியே பிரிக்கும் முடிவை அரசு எடுத்துள்ளது. இதன்படி இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரத் தைத் தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம் என்றும், சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்ட பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டம் என்றும். விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராஜர் மாவட்டம் என்றும் பிரிக்கப்படும். திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி யைத் தலைமையிடமாகக் கொண்ட திருநெல்வேலி மாவட்டம் என்றும், தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்ட சிதம்பரனார் மாவட்டம் என்றும் பிரிக்கப்படும். வட ஆர்க்காடு மாவட்டம், வேலூரைத் தலைமையிட மாகக் கொண்ட வட ஆர்க்காடு மாவட்டம் என்றும், திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்ட சம்புவராயர் மாவட்டம் என்றும் பிரிக்கப்படும். மதுரை மாவட்டம், மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட மதுரை மாவட்டம் என்றும், திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்ட அண்ணா மாவட்டமாகவும் பிரிக்கப்படும். தஞ்சை மாவட்டத்தை தஞ்சாவூரை தலைமையிடமாகக் கொண்ட தஞ்சை மாவட்டம் என்றும், திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்ட வள்ளியம்மை மாவட்டம் என்றும் பிரிக்கப்படும். தென் ஆர்க்காடு மாவட்டம் கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட தென் ஆர்க்காடு மாவட்டமாகவும், விழுப்புரத்தை தலைமையிடமாகக் கொண்ட வள்ளலார் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்படும். திருச்சி மாவட்டம் பெரம்பலூரை தலைமையிடமாகக் கொண்ட திருவள்ளுவர் மாவட்டம் எனவும், திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்ட திருச்சிராப்பள்ளி மாவட்டம் எனவும் பிரிக்கப்படும்.

புதியனவாக அமைக்கப்படும் மாவட்டங்களின் பரப்பளவு, அவை உள்ள டக்கும் வட்டங்கள், அவைகளில் ஏற்படுத்த வேண்டிய வசதிகள் போன்ற வற்றை இதற்கென அமைக்கப்படும் வல்லுநர் குழு ஆராய்ந்து அறிந்து அரசிற்கு பரிந்துரைகள் செய்யும். பரிந்துரை செய்யப்பட்ட குறிப்புரை அரசு தக்கப்படி ஆராய்ந்து ஏற்ற வகையில் முடிவெடுத்து, அந்த முடிவுகளை படிப்படியாக நிறைவேற்றும்.

41. அரசுப் பணியாளர்களின் பல்வேறு கோரிக்கைகளை அரசு அக்கறையுடன் கவனித்து வருகிறது. வழக்கமாகக் கொடுக்கப்படும் பணிக்கொடையைத் தவிர, ரூ. 10,000-மும் வழங்குவதன் மூலம் அரசுப் பணியாளர்களின் ஓய்வு ஊதிய சலுகைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது அரசுப் பணியாளர்களின் நீண்டகால கோரிக்கையாகும். அரசு பணியாளர் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு ரூ. 20-ஐ அத்தொகை வட்டியுடன் ரூ. 5,000 ஆக சேர்கிற வரையில் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில், பணியாளர்களை இத்திட்டத்தில் சேர்த்துக் கொண்டு செயல்படுத்த அரசு இப்பொழுது முடிவு செய்துள்ளது. அரசுப் பணியாளர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது ரூ. 10,000 பெற இயலும் வகையில், அரசு, தனது நிதியிலிருந்து ரூ. 5000 சேர்த்துக் கொடுக்கும். எனினும், முன்னதாகப் பணியிலிருந்து ஓய்வு பெறுவோருக்கு அவர்கள் செலுத்தும் தொகை வட்டியுடன் கொடுக்கப்படுவதோடு அரசிடமிருந்து ரூ. 5,000-யும் பெறுவர். அரசு பணியாளர்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து வரையறுக்கப்பட்ட இத்திட்டம் 1—4—1984 முதல் செயலுக்கு வரும்.

42. தாராள ஓய்வூதிய விதிகளை 1979 அக்டோபர் மாதத்திற்கு முன்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும் பொருந்துகிற வகையில் அரசு நீட்டித்துள்ளது.

43. நான்காவது ஊதிய ஆணைக்குழு (சம்பளக் கமிஷன்) அமைக்கப்படுவதை அரசுப் பணியாளர் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர் என்பதையும் இவ்வரசு அறியும். இது குறித்த முடிவு இவ்வருடமே அறிவிக்கப்படும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

44. கட்டிடப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் கட்டிடப் பணி நடந்து வருகையில் விபத்தில் இறக்க நேரிடும்போது அவர்களுடைய குடும்பங்களுக்கு ஏற்படும் துன்பத்தை அரசு அறியும். 1923 ஆம் ஆண்டு வேலையாள் இழப்பீட்டு சட்டம், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடக் கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்-பல்வகை விதிகள்) சட்ட முன்வடிவிற்கு பொருந்தும் வகையில் அரசு திருத்தம் கொண்டு வந்துள்ளது. இதனால், கட்டிடப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு ஏற்படும் துன்பம் ஓரளவுக்கு நீக்கப்படும். 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடக் கட்டுமானப் பணியாளர்கள் (பணிநிலைமைகள்-பல்வகை விதிகள்) சட்ட முன்வடிவிற்கு அதிகாரபூர்வமான திருத்தம் ஒன்றை அரசு கொண்டுவர இருக்கிறது. இதன்படி, இப்பணியாட்களை வேலையில் வைத்திருப்பவர்கள், வேலையின்போது இவர்களின் ஆயுளுக்கும் மற்றும் அங்க இழப்புகளுக்கும் போதுமான காப்புறுதி வசதி ஏற்படுத்த வேண்டும் என்பது



கட்டாயமாக்கப்படும். இத்திருத்தத்தினால் பயன் பெறாதவர்களுக்கு அரசு, முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ. 10,000 அளிக்க முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன் பெற கட்டிடப் பணியாளர்கள் ரூ. 5 கொடுத்து தங்களை தொழிலாளர் நலத் துறையில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

45. ஊராட்சி-நகராட்சித் தேர்தல்களை 1984 பிப்ரவரியில் நடத்த அரசு முன்னர் முடிவு செய்திருந்தது. அவ்வண்ணமே அதற்கான தொடக்க ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டன. எனினும், மாநிலத்தின் சில பகுதிகள், அதாவது, தஞ்சாவூர், புதுக்கோட்டை திருச்சிராப்பள்ளி தென் ஆற்காடு மாவட்டங்கள் அண்மையில் கடுமையான வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இப்பகுதிகளில் சொத்துக்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டதுடன் போக்குவரத்து வசதிகளும் மிகவும் பாதிக்கப்பட்டன. இப்பகுதிகளில், அரசு நிர்வாகம், போர்க்கால அடிப்படையில் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியிருந்தது. நிவாரணப் பணிகள் தற்போது நடந்துகொண்டிருக்கின்றன. மிகப் பெரும்பாலோர் தஞ்சை போன்ற மாவட்டங்களில் வீடிழந்து குடிபெயர்ந்துள்ளனர். அவர்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்பிய பிறகு அல்லது புதிதாக கட்டப்பட்ட குடியிருப்புகளில் குடியேறிய பிறகே தங்களை வாக்காளர்களாக பதிவு செய்து கொண்டு இத்தேர்தலில் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த இயலும். எனவே, ஊராட்சி நகராட்சித் தேர்தல்களைத் தள்ளிப் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சட்டமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்தபின் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தேர்தல்களை இரண்டு கட்டமாக 19—4—1984 அன்றும், 23—4—1984 அன்றும் நடத்தவும் நகராட்சித் தேர்தல்களை 28—4—1984 அன்று நடத்தவும் அரசு முடிவு செய்துள்ளது. இது மன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் என நம்புகிறேன்.

திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி நகராட்சிகளின் நிலையை மாநகராட்சிகளாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இம்மாநிலத்தில் உள்ள மாநகராட்சிகள் அனைத்திற்கும் பொதுவான சட்டம் ஒன்றை இயற்றவும் அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது.

46. அடுத்தடுத்து இயற்கை இடர்ப்பாடுகள் வந்த போதிலும், மாநிலம் பொருளாதாரம் மற்றும் பிற துறைகளில் அடைந்த நிலையான முன்னேற்றத்தைக் கோடிட்டுக் காட்டியுள்ளேன். வறுமையை ஒழிக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், வருங்காலத்தில் அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறியுள்ளேன். மாநிலம் ஏற்றிருக்கும் இந்த மிகப் பெரிய பொறுப்பை நிறைவேற்ற உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984, பிப்ரவரி 16, வியாழக்கிழமை

மாசி 4, ருத்ரோத்காரி – திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்''.

நன்கு ஆராய்ந்து 'தகுதி உடையவன்' எனத் தெளியப்படாதவனிடம் நம்பிக்கை வைப்பதும், ஆராய்ந்து 'நம்பத் தகுதி உடையவன்' எனத் தெளிந்த ஒருவனிடம் சந்தேகம் கொள்வதும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தமிழ்நாட்டில் விநியோகிப்பதற்காகத் தேவைப்படும் ஒரு மாதத்திற்கான மண்ணெண்ணெயின் அளவு

41—(* வினா எண் 13969) திரு.கு. ரமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஒரு மாதத்திற்கு எவ்வளவு மண்ணெண்ணெய் தற்போதுள்ள திட்டப்படி விநியோகிக்கத் தேவைப்படுகிறது?

(ஆ) எவ்வளவு மண்ணெண்ணெய் மத்திய அரசு தருகிறது?

(இ) மண்ணெண்ணெய் கட்டுப்பாட்டை நீக்க அரசு தீர்மானித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) சுமார் 69,000 கிலோ லிட்டர்.

(ஆ) இப்போது கிடைக்கும் அளவு 49,987 கிலோ லிட்டர்.

(இ) இல்லை.

திரு.கு. ரமணி: தலைவர் அவர்களே, 69,000 கிலோ லிட்டர் நமக்குக் கிடைக்க வேண்டியிருந்தும் சுமார் 49,000 கிலோ லிட்டர்தான் கிடைக்கிறது என்றால் அதற்கு என்ன காரணம்? மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட வரையில்

## உள்ளடக்கம்

**16–2–1984.**


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்–விடைகள்: | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள். | 191—222 |
| 2, | ஒழுங்குப் பிரச்சினை: | |
| | அமைச்சர்களின் இலாக்கா மாற்றம்–அவைக்கு அறிவித்தல் | 222—224 |
| 3. | தகவல் கோரல்: | |
| | எதிர்க்கட்சியினர் கைது செய்யப்பெற்றது. | 224 |
| 4. | ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்–விவாதம் (தொடர்ச்சி) | 245—250 |
| | திரு. கு. ரமணி | 225—230, 238—242 |
| | மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் | 230—237, 243—245 |
| | திரு. மு. அப்பாதுரை | 250—258 |
| | திரு. வே. இரா. ஜெயராமன் | 258—262 |
| | திரு. உ. சுப்பிரமணியன் | 262—268 |
| | திரு. இரெ. இராசமாணிக்கம் | 268—276 |
| | திரு. தி. அன்பழகன் | 276—281 |
| | திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் | 281—285 |
| | திரு. ஜே.ஹேமச்சந்திரன் | 285—28 |
| | திரு. க. இரா. சின்னராசு | 289—29 |
| | திரு. என். ஏ. பூங்காவனம் | 293—29 |
| 5. | அறிவிப்பு; | |
| | பேரவை அலுவல் | 29 |
| 6. | பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்: | 29 |

(திரு. கு. ரமணி) [1984 பிப்ரவரி 16

மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு இல்லை. அவர்களுக்குத் தேவையான மண்ணெண்ணெய் சோவியத் யூனியன் உட்பட சகல நாடுகளிடமிருந்தும் கிடைக்கிறது. நாட்டிலே மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு இல்லையென்று சொல்கிறார்கள். ஏன் நமக்கு 20,000 கிலோ லிட்டர் குறைத்துக் கொடுக்கிறார்கள்? அதனால் ஜனங்களுக்குக் குறைத்து சப்ளை செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறதல்லவா? இக்குறையைப் போக்க அரசு என்ன செய்ய இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் 69,000 கிலோ லிட்டர் சாதாரணமாக நமக்குத் தேவைப்படுகிறது என்று அடிக்கடி மத்திய அரசுக்கு வற்புறுத்தி வருகிறோம். கிடைக்கின்ற அளவை வைத்து உள் நாட்டு அளவு, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுவது ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, அவரவர்களுடைய தேவையையும் கணக்கிட்டு, எல்லா மாநிலங்களுக்கும் மத்திய அரசு சரி சமமாக ஒதுக்கீடு செய்து வருகிறது என்று சொல்கிறார்கள். நமக்குப் போதவில்லையென்று சொல்லும்போது, மத்திய அரசு சொல்கிற காரணம், அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்த இறக்குமதியைக் குறைக்க வேண்டியிருக்கிறது, ஆகவே தற்போது மண்ணெண்ணெய் கிடைக்கும் அளவைப் பொறுத்தே மாநிலங்களுக்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்து கொடுத்து வருகிறோம் என்று சொல்கிறார்கள். என்றாலும் மக்களுடைய தேவையை உத்தேசித்து இந்த 69,000 கிலோ லிட்டர் தர வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இப்படி கிடைக்கிற மண்ணெண்ணெய் கூட சரியான முறையிலே விநியோகம் செய்யப்படாமல் அதிலே ஊழல்கள் நடந்துக்கொண்டிருக்கின்றன. மண்ணெண்ணெய் தட்டுப்பாடு என்றால் எண்ணெயே இருக்கக்கூடாது. ஆகவே, எண்ணெய் இருக்கும் போது விநியோகிப்பதில் மக்களுக்குத் தேவையான அளவு ஜாஸ்தியாக மண்ணெண்ணெய் கொடுப்பதற்குப் பதிலாக குறைவாகக் கொடுக்கப்படுகிறது. வெளியே எண்ணெய் வாங்க முடிகிறது. அப்படியானால் மண்ணெண்ணெய் இருக்கிறது பதுக்கப்படுகிறது என்று அர்த்தம். ஆகவே அதைத் தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்க அரசு என்ன ஏற்பாடு செய்து வருகிறது? நியாய விலைக் கடைகளில் மாத இறுதியில் 2 நாளைக்கு முன்னாலே, மண்ணெண்ணெய் கொடுக்க ஆரம்பிக்கிறார்கள். அதனாலே பல கார்டுஹோல்டர்ஸ் வாங்க முடியாமல் அவையும் கள்ள மார்க்கெட்டுக்குப் போகின்றன. இதைத் தடுக்க என்ன எபெக்டிவ் ஸ்டெப்ஸ் கவர்ன்மென்ட் எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.



1984 பிப்ரவரி 16]

மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசு அந்தந்த மாதத்திற்கு எப்பொழுது ஒதுக்கீடு செய்கிறதோ, அப்பொழுதுதான் நாம் எடுத்து விநியோகிக்க வேண்டிய கட்டத்திற்கு வருகிறோம். 1ஆம் தேதி அவர்கள் ஒதுக்கீடு செய்தால் 2ஆம் தேதி, 3ஆம் தேதி விநியோகத்தை ஆரம்பிக்க முடியும். ஆனால், அப்படி இல்லை. ஆகவே எப்பொழுது வந்து சேருகிறதோ அதை ஒட்டி நாம் தர வேண்டிய நிலைமை ஏற்படுவதன் காரணமாக அங்கங்கு வருகின்ற பொழுது அந்தந்தக் கார்டுகளுக்கு வழங்கப்படுகின்ற முறைகள் இருந்துகொண்டு வருகின்றன.

நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையிலும் கார்டுகளுக்கு எவ்வளவு தர வேண்டுமென்று கணக்குகள், புள்ளி விவரங்கள் எல்லாம் வைக்கப்படுகின்றன. அதிலே ஏதாவது ஊழலோ, மற்றவையோ நடைபெறுமானால், அது பற்றிய அறிவிப்பு பேரிலே தக்க நடவடிக்கை எடுக்க நாம் வழிவகை செய்து வைத்திருக்கிறோம்.

கை வண்டிக்காரர்கள் பிழைப்பதற்காக அவர்களுக்கும் நாம் வழங்குகிறோம். சென்னையைப் பொறுத்தவரையில் 964 கை வண்டிக்காரர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் 100 லிட்டர் மண்ணெண்ணெய் என்ற அளவுக்கு வழங்கி, அவர்கள் மூலமாகவும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதைத் தவிர பிற இடங்களில் 1,812 கைவண்டிக்காரர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் மூலமாக நாள் ஒன்றுக்கு 50 லிட்டர் மண்ணெண்ணெய் தரப்பட்டு வருகிறது. இதைத் தவிர சில்லறை வியாபாரிகள் 2,451 பேர்கள் இருந்து வருகிறார்கள். அவர்களும் இந்த மண்ணெண்ணெய் வியாபாரத்தை நம்பியே வாழ்கிறவர்கள். மண்ணெண்ணெய் வியாபாரத்தை மட்டும் செய்கிறவர்கள் என்ற காரணத்தாலே அவர்களுக்கும் 500-க்கும் மேற்படாத குடும்ப அட்டைகள் ஒதுக்கப்பட்டு அந்த அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதைத் தவிர பிற வியாபாரிகளும் கூட உச்ச நீதிமன்றத்திலே வழக்குகள் தொடுத்து, தங்களுக்குத் தர வேண்டுமென்று ஆறாயிரத்து சில்லறை வியாபாரிகள் 300 வழக்குகளைத் தொடுத்தார்கள். அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. இவ்வளவு சங்கடங்களில் கிடைக்கிற மண்ணெண்ணெயை எப்படி அவர்களுக்கு எல்லாம் தருவது என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டு, இதிலே மேல்முறையீடு வரும்போது அவற்றை களைவதற்கான முயற்சியிலும், அதற்கான முறைகளை வகுப்பதிலேயும் அரசு இப்போது ஈடுபட்டிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் இன்று மண்ணெண்ணெய் சரியாகக் கிடைக்கவில்லை. நம் அரசாங்கம் மூலம் மண்ணெண்ணெய் விநியோகம் செய்கிற "அமுதம்" கடைகள் இருக்கின்றன. அங்கே கூட மண்ணெண்ணெய் கிடைப்பதில்லை. பொதுவாக கிராமங்களில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு இருக்கிறது. ஆகவே அமுதம் கடைகள்

(திரு. சி. சிவப்பிரகாசம்) [1984 பிப்ரவரி 16

(ஆ) தற்போது இதைப் பயன்படுத்தி வெளி மாவட்டங் களுக்கு நெல் எடுத்துச் செல்ல உயர்நீதி மன்றத்தை அணுகாத விவசாயிகளுக்கு பர்மிட் தராமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) உயர்நீதி மன்றத்தில் ஒரு நீதிபதி வெளியிட்ட தீர்ப்பை எதிர்த்து அரசு மேல் முறையீடு செய்தது. மேல்முறையீட்டின் மீது உயர்நீதி மன்றம் தீர்ப்பளிக்கையில் ஏகபோக கொள்முதல் அமுலிலுள்ள இடங்களிலேயிருந்து வெளியே நெல் எடுத்துச் செல்ல அரசு விதித்துள்ள தடை செல்லுபடியாகும் என்று தீர்ப்பு கூறியுள்ளது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை:

## 1983-ஆம் ஆண்டில் ஒரு குவிண்டால் நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலை

43 – (* வினா எண். 20913) திரு. என்.வரதராஜன்: மாண்பு மிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 1983—ஆம் ஆண்டிற்கு ஒரு குவிண்டால் சாதா நெல்லுக்கு ரூ.132/- என நிர்ணயித்தது குறைவானது என்று மாநில அரசு, மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளதா?

(ஆ) ஆமெனில், விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். மத்திய அரசு 1983-84 ஆம் ஆண்டிற்கான கொள்முதல் விலைகளை நிர்ணயித்து அறிவிப்பதற்கு முன்பாக கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.150 என்று நிர்ணயிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மத்தியஉணவு அமைச்சருக்கு கடிதம் எழுதினார். ஆனால் மத்திய அரசு இக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் ஒரு முறை நிர்ணத்த விலையை அடுத்த பயிராண்டு வரை மாற்றுவதில்லை என் பதால் கடிதம் ஏதும் எழுதவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே கடந்த ஆண்டு வறட்சி இருந்தது. இந்த ஆண்டும் கடுமையான புயல், வெள்ளதால் விவசாயிகள் பாதிக் கப்பட்டு இருக்கிறார்கள். மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைக்குக் கூடுதலாகவே உற்பத்தி செலவு ஆகிக்கொண்டு இருக் கிறது. ஆகவே அதைக் கருத்தில் கொண்டு கூடுதலாகக் கொடுக்கும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளதா? ஏற்கனவே நாம் அறிவித்து இருக்கும் உதவித் தொகையான ரூ.35 டிசம்பர் அல்லது ஜனவரி இறுதிக்குள் நிறுத்தி வைக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே. அதை நீட்டிக்க அரசு முன் வருமா? தமிழ் நாட்டில் இருக்கும் விவசாயிகளின் உற்பத்திச் செலவிற்கேற்ப அந்த விலையை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?



1984 பிப்ரவரி 16]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விலை நிர்ணயம் செய் வது என்பதை ஆண்டுக்காண்டு இருக்கும் விலைவாசி நிலைமை களை அனுசரித்து அக்ரிகல்சுரல் பிரைசஸ் கமிஷன் நிர்ணயிக் கிறது. அடுத்த பயிராண்டு வருவதற்கு முன்னால் அனைத்து மாநில அரசிடத்திலும் என்ன விலை நிர்ணயம் செய்யலாம் என்று அவர்கள் கேட்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ரூ.150 குறைந்தபட்சம் நிர்ணயிக்க வேண்டும் என்று சொன்னோம். ஆனால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. சாதாரண ரகத்திற்கு ரூ.132 என்றும், சன்ன ரகத்திற்கு ரூ. 136 என்றும், மிகச் சன்ன ரகத்திற்கு ரூ,140 என்றும் நிர்ணயித்து இருக்கிறார்கள்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டின் நிலைமை களை ஆராய்ந்து, வறட்சி மற்றும் பல நிலைமைகளை மாண்பு மிகு உறுப்பினர் சுட்டியதைப் போல் அதைக் கருத்தில் கொண்டு ஏகபோக கொள்முதல் செய்யும் இடங்களில் வறட்சியில் பயிர் செய்தார்கள் என்ற அடிப்படையிலும் பாசன வசதிகளை எதிர்பார்க்காமல் பயிர் செய்தார்கள் என்ற முறையிலும் அதற்கு என்று தனியாக நாம் ரூ. 35 வழங்கி வருகிறோம். முதலில் இதை டிசம்பர் 31 வரை அளிப்பது என்று முடிவு செய்தோம். பின்னர் ஜனவரி 31 வரையில் அளிப்பது என்று அறிவித்தோம். இப் போது அறுவடை பின்தங்கிவிட்டது என்று அறிவித்திருப்பதால், பிப்ரவரி வரையில் போகக்கூடும் என்று பலரும் எடுத்துத் தெரி வித்ததற்கு இணங்க மத்திய அரசின் அனுமதி பெற்று பிப்ரவரி 15 வரையில் கொடுத்தோம். இப்போது பிப்ரவரி 29 வரையில் மத்திய அரசின் அனுமதி பெற்று கொடுக்கிறோம். அதற்கு மேலும் மார்ச்சிலும் அறுவடையாகும் என்ற நிலைமையிருக்கு மானால் அப்போது கொள்முதல் செய்யவேண்டிய அவசியம் ஏற்படுமானால். மத்திய அரசுக்கு எழுதி, அதை நீட்டிக்க அவசியம் நடவடிக்கை எடுக்கப்படும். அரசு இதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, நான் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். நேற்றைய தினம்கூட செய்தி வந்திருக்கிறது.1லட்சம் ஹெக்டேர் நிலம் அறுவடைக்கு லாயக்கானவை தண்ணீரில் நிற்கிறது என்று சொல்லப்படுகிறது. தொடர்ந்து அங்கே இன்னும் மழை பெய்து கொண்டிருக்கிறது. இதனால் பலஇடங்களில் சேதம் ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் பெரும்பாலோர் பாதிக்கப் பட்டு இருக்கிறார்கள். ஆகவே, தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் இந்த அதிகத் தொகையான ரூ. 32யைக் கொடுக்கின்ற நிலைமையை அரசு கொண்டுவருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்த ரூ. 35 கொடுப்பதைக் கூட மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் நிர்ணயித்துள்ள விலைக்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும்—போனஸ் என்ற

(திரு. எல். இளையபெருமாள்) 

மூலம் விற்கிறவர்களையோ அல்லது சிறு வியாபாரிகளையோ ஐந்து கிராமங்களுக்கு 10 கிராமங்களுக்கு ஒருவராக நியமித்து கிராமப்புற மக்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்க வழிவகை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்ன மாதிரி கூட்டுறவு அங்காடிகள் மூலமாகவும் நுகர்வோர் கழகத்தின் நியாயவிலைக் கடைகள் மூலமாகவும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதைத் தவிர நான் முதலில் சொன்ன மாதிரி இரண்டாயிரத்து சில்லறை வியாபாரிகள் மூலமாக 500—க்கு மேற்படாத கார்டு களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கார்டுதாரர் களுக்கு வழங்கவேண்டுமென்று இதைச் செய்திருக்கிறோம். எங்கேயாவது குறைபாடுகள் இருந்து கிடைக்காமல் இருக்கும் நிலைமை ஏற்படுமானால் அதைத் தனிக் கவனத்திற்கு கொண்டு வந்தால் அந்தக் குறைகளை நிவர்த்திப்பதற்கான முயற்சிகளை நாம் எடுக்கலாம்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நம்முடைய தேவைக்குக் குறைவாக மண்ணெண் ணையை கொடுத்து வருவதால் அந்தக் குறையை ஈடு செய்ய மாற்று எரிபொருள் அதாவது சமையல் வாயு போன்ற வற்றை கூடுதலாக கொடுத்து உதவுகிறதா? இல்லையென்றால் அதைக் கூடுதலாகப் பெற மத்திய அரசை நமது அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமையல் வாயு என்பது மாற்று ஏற்பாடு ஆகாது. அதன் உபயோகமும், மண்ணெண்ணெய் உபயோகமும் தனித்தனியாக வருகிறது. சமையல் வாயுவை விநியோகம் செய்வதற்கு தனி ஏற்பாடு வைத்து, அதனை வழங்கு வதற்காக சில சட்டத்திட்டங்களை வைத்துத் தனியாக வழங்கி வருகிறார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தலைவரவர்களே, சென்னை போன்ற நகரங்களில் குறிப்பிட்ட ஒரு தினத்தன்று தான் கார்டுதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுமென்று சொல்கிறார்கள். அந்த நாள் தவறிவிட்டால், மறுநாள் சென் றாலும் கூட அவர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைப்பதில்லை. அப்படியில்லாமல் எந்த நாளில் சென்றாலும் அந்த கோட்டா அவர்களுக்கு கிடைப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா?





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை மாநகரம், மற்றும் மாவட்ட தலைமையில் உள்ள நகரங்கள் அனைத்திலும் ஒரு குடும்ப கார்டுக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெயும் மற்ற நகராட்சிகளில் இருப்பவர்களுக்கு 6 லிட்டரும், நகர பஞ்சாயத்துக்களில் இருப்பவர்களுக்கு 5 லிட்டரும், கிராமப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு 3 லிட்டரும் வழங்க வேண்டுமென்ற ஏற்பாட்டினுடைய அடிப்படையிலேதான் வழங்கப்பட்டு வருகிறது. இதிலே ஏதாவது தனிப்பட்ட குறை பாடுகள் எங்கேயாவது இருக்குமானால் அதனை நீக்குவதற்கு அரசு முயலும்.

(முற்பகல் 9—10)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரிய கிராமப்புற இடங்களிலும், தாலுக்கா பஞ்சாயத்து யூனியன் போன்ற இடங்களிலும், ஓரளவிற்கு மண் ணெண்ணெய் கொடுக்கப்படுகிறது. ஆனால் அது போதவில்லை ஆகவே ஊனமுற்றவர்கள், விதவைகள் போன்றவர்களுக்கு புதிதாக லைசென்சு கொடுத்து, அவர்களுக்கு 500 கார்டு என்று ஒதுக்கி, அந்தக் கார்டுதாரர்களுக்கு அவர்கள் மூலம் விநியோகம் செய்ய அரசு முன்வருமா? இத்தகையவர்களுக்கு வேறு வகையில் உதவிகள் செய்ய அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசிடம் இல்லை. ஊனமுற்ற வர்களுக்கு லைசென்சு வழங்கினால், அவர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று சரியான முறையில் விநியோகிக்க முடி யுமா என்பது ஐயப்பாட்டிற்குரிய ஒன்றாகும். விதவைகள் போன்றவர்களுக்கு தர வேண்டும் என்று சொன்னார்கள். அவர்களுக்குப் பல்வேறு வகைகளில் சலுகைகள் தற்போது அளிக்கப்பட்டு வருகின்றன. இதிலே சலுகை அளிக்க இயலுமா, அதற்கு வழி இருக்கிறதா என்பது ஆராயப்படவேண்டியதொன் றாகும். அதற்கு இடம் இருக்குமானால் அதைப் பற்றி யோசிக்கலாம்.

## தஞ்சை மாவட்டத்தில் விளையும் நெல்லை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதி.

42 — (*வினா எண் 19849) திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்பு மிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகள் தங்கள் நிலத்தில் விளைந்த நெல்லை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் சென்று விற்க உயர்நீதிமன்றத்தில் தஞ்சாவூர் நில உரிமையாளர் களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்துள்ளது பற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

முறையில்கூட அதிக விலை தரக்கூடாது என்று சொல்கிறார்கள். அப்படிக் கொடுத்தால் ரிசர்வ் வங்கியின் கடன் உதவி இருக்காது என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த அரசு நம்முடைய மாநிலத்தின் நெருக்கடி நிலைமை, மற்ற தன்மைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இங்கே கையிருப்பு இருக்கவேண்டிய அவசியத்தை எடுத்துச்சொல்லி, 18,009 நியாயவிலைக் கடைகள் மூலம் 1 கோடியே 18 லட்சம் கார்டுகளுக்கு நாம் விநியோகிக்கவேண்டியிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, இவற்றிற்குப் போதுமான கையிருப்பு நாம் வைத்துக் கொள்ள முடியாவிட்டால், மத்திய அரசு உதவி தரவேண்டும் என்கிற காரணத்தையும் காட்டி, இந்த 35 ரூபாய் கூடுதல் விலை கொடுக்கும் அளவிற்கு இருக்கிறோம்.

மாநிலம் முழுவதும் நாம் கொடுப்பதற்கு இல்லை. அதற்கு மத்திய அரசு இசைவுதர முன்வருவது இல்லை. மற்ற பகுதிகளில் 50 சதவீதம் லெவி என்று வைத்திருப்பதால் இப்போது மத்திய அரசு நிர்ணயித்து இருக்கும் விலையில்தான் நாம் வாங்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று நிலைமைகள் இருக்குமானால், அதற்கு வெள்ள நிவாரணப் பணிகள் மற்ற தன்மைகள் அடிப்படையில் உதவிகள் செய்யப்படும். வெள்ளச் சேதம் குறித்து மத்திய அரசு ஆய்வுக்குழு இங்கே வந்து பார்வையிட்டு சென்று இருக்கிறது. அவர்களுக்கு இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மத்திய அரசின் உதவி கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். எந்த அளவிற்குக் கிடைக்கும் என்பது தெரியவில்லை. அது வந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு ஏ. எம். சேதுராமன்: தலைவரவர்களே, சென்ற ஆண்டு மத்திய அரசுக்கு நம்முடைய மாநில அரசு எழுதி, குவிண்டால் ஒன்றுக்கு 132 ரூபாய் நிர்ணயம் செய்ததைப் போன்று மறுபடியும் எழுதி ஒரு குவிண்டால் நெல்லுக்கு 150 ரூபாய் என்ற அளவில் 1984-85 ஆம் ஆண்டிலிருந்தாவது கிடைக்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா? அதோடு லெவி அதிகமாக இருப்பதால் நெல் விலை விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகவில்லை; அதில் ஏதாவது மாற்றங்கள் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மறுபடியும் பயிர் ஆண்டு தொடங்குவதற்கு முன்னால் மத்திய அரசை மாநில அரசு கேட்கும். அப்போது இருக்கிற சூழ்நிலைகளை வைத்து, 150 ரூபாய் கொடுக்க வேண்டுமா அல்லது அதை விட கூடுதல் கொடுக்க வேண்டுமா என்பதை ஆராய்ந்து அதற்கேற்ப மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவிக்கும். மற்றபடி லெவி கொள்முதல், ஏகபோக கொள்முதல் போன்றவைகளில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.



திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே. மத்திய அரசு விவசாயிகள் உற்பத்திச் செய்யும் நெல்லுக்கு உரிய விலை நிர்ணயம் செய்ய மறுக்கிறது. ஆகவே, மாநிலத்தில் விவசாயிகள் உற்பத்திச் செலவை கருத்திற் கொண்டு, அதற்கு கட்டுப்படியாகக்கூடிய விலையை நிர்ணயிப்பதற்கு ஒரு குழுவை அமைத்து விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாநில அரசைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கின்ற தன்மைகள், விவசாயிகளுக்கு இருக்கிற சங்கடங்கள், இதரத் தன்மைகள், வருகின்ற வருவாய் ஆகியவற்றை எல்லாம் கணக்கிட்டுப்பார்த்து, அந்த அடிப்படையில் நாம் மத்திய அரசுக்கு சிபாரிசு செய்கிறோம். நம்முடைய சிபாரிசின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்வது மத்திய அரசுதான். சென்ற ஆண்டு 150 ரூபாய்க்கு சிபாரிசு செய்தோம்; அவர்கள் 132 ரூபாய் என்று நிர்ணயம் செய்தார்கள். இங்கே இருக்கிற சூழ்நிலைகள் விலைவாசிகள், இடுபொருள் போன்றவற்றின் விலைகள் முதலியவற்றை கணக்கிட்டு, ஆங்காங்கே இருக்கிற அதிகாரிகளையும் கலந்தாலோசித்து இருக்கின்ற தன்மைகளை எடுத்துச் சொல்லி எந்த அளவுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று நாம் சிபாரிசு செய்கிறோம். ஆனால் மத்திய அரசு அதை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. இருக்கின்ற பிரச்சனைகளைக் கருதிப்பார்த்து நாமே விலை நிர்ணயம் செய்ய முடியாது; மத்திய அரசுக்கு சிபாரிசுதான் செய்யமுடியும்.

## தாம்பரம் நகராட்சியின் வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கை

44—(* வினா எண் 18328) திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாம்பரம் நகராட்சியின் வருவாயை அதிகரிப்பதற்காகத் தனியார் அதிகார பூர்வமற்ற முறையில் ஆட்டுச்சந்தை நடத்தி வரும் அரசுக்குச் சொந்தமான இடத்தைத் தாம்பரம் நகராட்சிக்குத் தரும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஆம்.

## 1983 ஆம் ஆண்டு செலுத்த வேண்டிய தவணைத் தொகை மற்றும் வட்டி தள்ளுபடி குறித்து விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட முறையீடுகள்

45—(* வினா எண் 18938) திரு. சோ. அழகர்சாமி; திரு. இரா கருப்பையா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் நிலம் பெற்ற விவசாயிகளிடமிருந்து 1983-ஆம் ஆண்டு செலுத்த வேண்டிய தவணைத் தொகையைச் செலுத்த இயலவில்லை என்று கூறி, தவணை நீட்டிப்பும் வட்டித் தள்ளுபடியும் கோரி அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

(ஆ) இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்.

(ஆ) அம்மனுக்கள் நிலச் சீர்த்திருத்த இயக்குநரால் சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அதிகாரி அவர்களுக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, சென்ற ஆண்டு வறட்சியினால் பாதிக்கப்பட்டு, அதன் காரணமாக அரசு குத்தகைத் தவணை செலுத்துவது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து குத்தகைத் தவணைகளை ஒத்திவைக்க ஒரு சட்டத்தையே அமைச்சரவர்கள் கொண்டு வந்து, அதை இந்த மன்றத்தில் நிறைவேற்றினோம். அதே நேரத்தில் உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் நிலம் பெற்றிருக்கக்கூடிய விவசாயிகள் தாங்கள் செலுத்த வேண்டிய தொகையை செலுத்த முடியவில்லை என்று சொல்லி, அவர்களிடமிருந்து முறையீடு வந்திருக்கிறது. ஆகவே பொதுவாக ஒவ்வொருவரும் தனித் தனியாக மனுக்களைக் கொடுத்து பரிசீலனை செய்வது என்று இல்லாமல் அரசு பொதுவாக ஒரு உத்தரவைப் போட்டு தவணை நீட்டிப்புச் செய்யக் கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? அது மட்டுமல்லாமல், இப்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு இரண்டாவது கேள்வி கேட்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே ஒரே நேரத்தில் பல கேள்விகளைக் கேட்காமல், முதல் கேள்விக்குப் பதில் பெற்ற பின்னால் அடுத்த கேள்வியைக் கேளுங்கள்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு.எஸ்.டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, குத்தகை பாக்கி தரவேண்டாம் என்ற சட்டத்தை நிறைவேற்றினால் கூட அந்தக் குத்தகைதாரர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தால், அந்த பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மட்டும்தான் செல்லும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். அதேபோல் நில உச்சவரம்பு சட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டபோதும், தவணைகளில் கட்டும்போது, அந்த நிலத்தை உடமையாகப் பெற்றவர்களுக்கு, தண்ணீர்த் தீர்வை, வாய்தா, ஆகியவைகள் வெள்ளம், புயல், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களின் போது ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இம்மாதிரி பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓராண்டு வரி வாய்தா தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. தவணைகள் நீடிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் குத்தகையை ஒத்திவைப்பதற்கும், தள்ளுபடி செய்வதற்கும் மற்றும் தவணைகளை நீட்டிப்பதற்கும், சட்டத்தைக் கொண்டு வருவார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, குத்தகை தள்ளுபடி செய்வதைப் பற்றி இந்த அவையின் முன்னாலே விரைவிலே சட்டமுன் வடிவு வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வெள்ளம் புயல், வறட்சி போன்ற இயற்கை இடர்ப்பாடு எதுவாக இருந்தாலும் சரி, ஓராண்டு காலம் தள்ளுபடி எல்லோருக்கும் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்த நில உச்ச வரம்பு தள்ளுபடி நிலைமைகளைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். சில மாவட்டங்கள், குறிப்பாக தஞ்சாவூர், தென் ஆர்க்காடு ஆகிய இடங்களில் நில உச்ச வரம்பு அதிகாரிகள், அரசாங்கத்தின் சட்டப்படி நிலம் கொடுக்கப்பட்டிருந்தும், இரண்டு தடவைகள் அவர்கள் பணம் கொடுத்தாலும், அந்த ஏழை விவசாயிகளிடமிருந்து பணம் வாங்குவதை மறுத்துவிட்டு, அவைகளை எல்லாம் வேறு பலருக்குக் கொடுத்து இருக்கிறார்கள். இதைப் பற்றி அமைச்சரவர்களுக்கு தகவல் வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அவர்களிடமிருந்து நிலத்தை அகற்றி, உரியவர்களுக்கு ஒப்படை செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே நில உச்ச வரம்புச் சட்டத்தினால் எடுக்கப்படுகின்ற நிலம் ஒன்றுக்கு தவணைகள் எந்தெந்த தேதிகளில் கொடுக்கவேண்டும் என்று சட்டத்திலே விதிமுறைகள் போடப்பட்டிருக்கிறது. கொடுக்காவிட்டாலும் ,ஒரு மாதம் கழித்துக் கொடுத்தாலும், அதை வட்டியுடன்வாங்க வேண்டுமென்று சட்டத்திலே இருக்கிறது. ஏதாவது தவறு நடந்தால், குறிப்பிட்டுச் சொன்னால் அதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, நில உச்ச வரம்பு நிலங்கள் மொத்தம் எவ்வளவு? நீதிமன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்ட நிலம் எவ்வளவு? இதில் ஆதிதிராவிடர்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்ட நிலம் எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

[1984 பிப்ரவரி 16

மாண்புமிகு திரு.எஸ் டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே 30-9-1983 வரையில் உபரியாக எடுக்கப்பட்ட நிலங்கள் 1,54,589 ஏக்கர் ஆகும். நீதிமன்றத்தில் தடையில் உள்ள நிலங்கள் 24,280 ஏக்கர் ஆகும். விநியோகம் செய்யப்பட்டது 1,20,944 ஏக்கர் ஆகும். மொத்தமாக இவைகளில் பயன் அடைந்தவர்கள் 83,537. இதிலே ஆதிதிராவிடர்கள் 35,971 பேர்என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உச்சவரம்புச் திட்டத்தின் கீழ் எடுத்து விநியோகிக்கப்பட்ட நிலங்களின் விவரங்களை எல்லாம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்ளது எல்லாம் இந்த நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலமாக மிச்ச நிலத்தைப் பெற்றவர்கள் விவசாயத் தொழிலாளர்கள் தான். தற்போது தொடர்ந்து 3 ஆண்டு காலமாக வறட்சி வந்ததினால், உச்ச வரம்பு அதிகாரிகள் உடனே நோட்டீஸ் விட்டு வேறு ஒருவருக்கு மாற்றக் கூடிய நிலைமையிருக்கிறது. அதனால் இந்த சாதாரண விவசாயிகள் சென்னைக்கு வந்து ஸ்டே வாங்கக் கூடிய நிலைமையிருக்கிறது. அப்படிப்பட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படுமா? அதே நேரத்தில் இந்த ஒரு ஆண்டு தவணை என்பதை 3 ஆண்டு தவணை என்று நீட்டித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? இந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையாக தள்ளுபடி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ்.டி .சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தவணைத் தொகையை தள்ளுபடி செய்வது இயலாத காரியம். நிலம் யாரிடமிருந்து வாங்கினோமோ அவர்களிடம் அந்தத் தவணையைக் கொடுக்க வேண்டும். தவணையை தள்ளிப் போடுவதைப் பற்றி வேண்டும் என்றால் அரசு பரிசிலிக்கும்.

திரு ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலமாக நிலம் ஒதுக்கப்பட்ட விவசாயிகள் சில தவணைகள் செலுத்தி இருக்கிறார்கள். ஆனால் நிலச்சுவான்தார்களின் செல்வாக்கால், அந்த நிலங்கள் ஒதுக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒப்படைக்கப்படாமல் இருந்து கொண்டு இருக்கிறது. உதாரணமாக, சிவகெங்கை, புளியங்குடி ஆகிய கிராமங்களில் இப்படிப்பட்ட நிலமைகள் இருக்கின்றன. எனவே இப்படி பணம் கட்டியும் நிலம் ஒப்படைக்கப்படாமல் இருப்பதை தடுத்து நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ்.டி சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நிலஉச்ச வரம்புச் சட்டத்தில் முதல் தவணை செலுத்திய உடனே நிலத்தை அவர்களுக்கு ஒப்படைக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. அப்படி முதல் தவணை செலுத்தி, யாருக்காவது நிலம் ஒப்படைக்கவில்லை என்றால் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசு, உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.



1984 பிப்ரவரி 16]

## தமிழ்நாட்டில் வறட்சி நிவாரணத்திற்கென செலவிடப்பட்டுள்ள தொகை

46 *வினா எண். 21382 திரு. இரா. தாமரைக்கனி: திரு எம்.எஸ் மாணிக்கம், திரு.தி.கா.நல்லப்பன், திரு.என். வரதராஜன் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வறட்சி நிவாரணத்திற்கென இதுவரை எவ்வளவு செலவிடப்பட்டுள்ளது?

(ஆ) இதில் மத்திய அரசு எவ்வளவு உதவியுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு வறட்சிக்காக மாநில அரசால் 217.73 கோடி ரூபாய் மத்திய அரசினிடத்திலே கேட்கப்பட்டது. அவர்கள் அனுமதித்தது 68.36 கோடியாகும். மாநில அரசு செலவு செய்தது 1148 கோடியாகும். இவைகளிலே மத்திய அரசு கடனாகக் கொடுத்தது 31.3 கோடியாகும். மானியமாகக் கொடுத்தது 13.7 கோடியாகும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணத்திற்காக என்று அரசு எடுத்த மொத்தப் பணிகள் எவ்வளவு? இதில் பொதுச் சுகாதாரம், மனிதர்கள், கால்நடைகள் விவசாயப் பாசனக் கிணறுகள், ஆகிய இவைகளுக்காக அரசு எடுத்த நடவடிக்கைகள் யாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, முடிக்கப்பட்ட வேலைகள் 82,459. இவைகளிலே பொதுச் சுகாதாரத்தில் 6,42,866 பேர்களுக்கு டைபாய்டு தடுப்பு ஊசி போடப்பட்டிருக்கிறது. காலரா தடுப்பு ஊசிகள் 29,77,417 பேர்களுக்குப் போடப்பட்டிருக்கிறது. கால்நடைகளுக்கு 4,12,554 தடுப்பு ஊசிகள் போடப்பட்டிருக்கின்றன பாசனக் கிணறுகளுக்காக ஏறத்தாழ 5 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே. வறட்சி நிவாரணத்திற்காக ஒதுக்கப்பட்ட மாவட்ட வாரியாக தொகை யாது? அதுமட்டுமல்ல, விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவசமாக எவ்வளவு வேஷ்டி, சேலைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி காரணமாக, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு மட்டுமே வேஷ்டி சேலைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதிலே வேஷ்டி வழங்கப்பட்டது மாநிலம் பூராவும் 20,81,836 பேர்களுக்கு, சேலை வழங்கப்பட்டது மாநிலம் பூராவும் 24,19,940 பேர்களுக்கு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1984 பிப்ரவரி 16

திரு. தி.கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சியில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகவும், பொதுப்பணித்துறை மூலமாகவும், குளம் குட்டைகள் மராமத்து செய்வதற்காக ஒதுக்கப்பட்ட வேலைகள் எவ்வளவு? அதில் செய்து முடிக்கப்பட்ட வேலைகள் எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

(முற்பகல் 9.30)

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வாரியத்தின் மூலமாக கொடுக்கப்பட்ட தொகை ரூ. 4,539 லட்சம். 21,769 குழாய் கிணறுகள் போடப்பட்டிருக்கின்றன. அதே போல பல்வேறு துறைகளிலும், 50 ஏக்கருக்கு அதிகமாக ஆயக்கட்டுள்ள பாசன ஏரிகளுக்கு செய்யப்பட்ட வேலைகள் 14,887. அதேபோல வறட்சியின் மூலமாக செய்யப்பட்டவேலைகள் 769.

திரு. தி.கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகவும் பொதுப்பணித் துறை மூலமாகவும் செலவு செய்யப்பட்ட தொகையைக் கேட்டேன். அதற்கு முறையான பதில் இல்லை. இருப்பினும் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களிலும் சரி, நகராட்சிகளிலும் சரி, குடிதண்ணீர் இல்லை என்று இந்த வறட்சி நிவாரணப் பணிகளின் மூலமாக நிலபோர் (போர்வெல்) போடுகிறபோது, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் ஒரு முறையான ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால், பல்வேறு இடங்களில் குடிநீர் பிரச்னையைப் போக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்த நிலையைப் பரிசீலனை செய்து, குடி நீர் இல்லாத இடங்களுக்குக் குடிநீர் கிடைக்க நில போர் (போர்வெல் போட்டு நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா) என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைக்குத் துறை ஒற்றுமை இல்லாததால் எங்கேயும் வேலை பாதிக்கப்படவில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே நான் சொல்கிறபோது 50 ஏக்கருக்கு பாசனத்திற்குக் குறைவாக உள்ள ஏரிகளை, குளங்களை எடுத்து ஊராட்சிகள் தான் பணி செய்தன. அதை நான் முன்பு பதில் சொல்லும் போதே குறிப்பிட்டேன். 50 ஏக்கருக்குக் குறைவாக உள்ள ஆய்க்கட்டுள்ள ஏரிகளை ஊராட்சிகள்தான் செய்தது என்று இப்போதும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு வறட்சியின் போது சுமார் ஆயிரம் கோடி ரூபாயைத் தமிழகத்தில் உள்ள விவசாயிகள் இழந்துள்ளார்கள். இந்த ஆண்டிலும் இதுவரை ஏற்பட்டிருக்கக் கூடிய மழை வெள்ளத்தின் காரணமாக மிகப் பெரிய சேதம் ஏற்படும் என்று தெரிய வருகிறது. ஆகவே, இப்போது கொடுத்திருக்கக் கூடிய நிவாரணத் தொகை எவ்வளவு



1984 பிப்ரவரி 16]

குறைந்தது என்று அமைச்சருடைய அறிவிப்பிலிருந்தே அறிய
முடிகிறது. ஏற்கனவே அறிவித்ததைப்போல, அல்லது நம்
முடைய முதலமைச்சர் பெங்களூர் முதலமைச்சர்கள் மாநாட்டிலே
கலந்து கொண்டு, எதிர்பாராது இப்படிப்பட்ட வெள்ளம்
புயல் போன்ற இயற்கை சேதம் ஏற்படுகிற போது முழுத்
தொகையையும் மத்திய அரசு தான் கொடுத்து உதவவேண்டும்
என்ற கொள்கைக்குக் கையெழுத்திட்டத்தைப் போல, அதை
வற்புறுத்த அரசு முயலுமா இல்லாவிட்டால் ஏற்கெனவே
பாதிக்கப்பட்டுள்ள தமிழக மக்கள் மேலும் பாதிக்கப்படுகின்ற
நிலைதான் எற்படும். இதில் அரசின் அபிப்பிராயம் என்ன
என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத்
தலைவர் அவர்களே, அரசினுடைய அபிப்பிராயத்தை கொள்கை
ரீதியாகக் கேட்டிருக்கிறீர்கள். கேள்வி நேரத்தில் இதை எல்லாம்
அனுமதிக்கலாமா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை
பதில் சொல்லக் கூடாது என்று தான் நினைக்கிறேன்
இருந்தாலும் (சிரிப்பு), இயற்கை இடர்ப்பாடுகள்
வருகிற போது சில இடங்களில் வரியை வாங்கி
அரசாங்கத்தை நடைமுறைப்படுத்துகிற எந்த மாநில அரசும்
இப்படிப்பட்ட இயற்கை இடர்பாடுகளை தனியாக சமாளிக்க
முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, இப்படிப்
பட்ட இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படுகிறபோது, மத்திய அரசே
முழுத் தொகையையோ அல்லது முக்கால் தொகையையோ
செலவாவதிலே கொடுத்தால் நல்லது என்று தான் இந்த அரசும்
நினைக்கிறது. அதை வற்புறுத்த இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு என். எஸ், வி. சித்தன்: தலைவர் அவர்களே, தமிழ்
நாட்டிலே வறட்சிப் பணிகளுக்காக கடந்த ஆண்டு எந்த
மாவட்டத்திற்கு மிக அதிகமான தொகை கொடுக்கப்பட்டது
இந்த ஆண்டு கூட இன்னும் சில இடங்களில் வறட்சி நிலவு
வதால் இந்த ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகள் தொடங்கி
யாகி விட்டனவா தொடங்கவில்லை என்றால் எப்போது
தொடங்குவதற்கு உத்தேசம்.

மாண்புமிகு திரு. எஸ். டி, சோமசுந்தரம் : தலைவர்
அவர்களே, இந்த ஆண்டும் எங்கேயாவது வறட்சி இருந்தால்
அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் அறிக்கை
கேட்கப்பட்டிருக்கிறது. அவைகளை இந்த அரசு கவனிக்கும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டு
அதிகமாகக் கொடுக்கப்பட்ட தொகை வட ஆற்காடு மாவட்டத்
திற்குத்தான். ரூ. 583 இலட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே
போல் குடிநீருக்காக அங்கே தான் அதிகமாகக் கொடுக்கப்
பட்டிருக்கிறது. ரூ. 423 இலட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, இந்த வெள்ள நிவாரணப் பணிக்காக தமிழக அரசு மத்திய அரசிடமிருந்து மீண்டும் எவ்வளவு கோடி ரூபாய் எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறது. அது கிடைக்கும் என்ற நம்பிக்கை தமிழக அரசுக்கு இருக்கிறதா மத்திய அரசிடமிருந்து வறட்சிப் பணிக்காக கடன் வாங்கியதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கடனுக்கு வட்டி உண்டா வட்டி உண்டு என்றால் எவ்வளவு விழுக்காடு மேலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம், சொற் பொழிவாற்றுகிற நேரமல்ல. பதில் இருந்தால் அமைச்சர் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, மத்திய அரசு ரூ. 31.30 கோடி கடன் கொடுத்திருக்கிறது. அது வட்டி இல்லாக் கடன். வறட்சிபற்றி கேட்கப்பட்டிருக்கிற கேள்வி இது. வெள்ள நிவாரணத்திற்கு மத்திய அரசிடம் ரூ. 120 கோடி எதிர்பார்க்கிறோம். அவர்கள் எவ்வளவு கொடுப்பார்கள் என்று தெரியாது. அதிகமாகக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

திரு. வே. இராஜசேகரன்: தலைவர் அவர்களே, சென்னை நகரம் வெள்ளத்தாலும் வறட்சியாலும் பாதிக்கப்படுவதுடன் அரசாங்க நிவாரணப் பணிகளாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது வறட்சிப் பணிகளுக்காக சென்னை நகரில் என்னென்ன பணிகளுக் காக எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இராதர கிருஷ்ணன் நகர் தொகுதியில் முறையாக நிவாரணப் பணிகள் நடைபெறும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்குக் குடிநீருக்காக சென்ற ஆண்டு ரூ. 1,036 இலட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் 6,500 வடி முனைக் குழாய்க் கிணறுகளும், 2,880 தண்ணீர் தொட்டிகளும் வைக்கப்பட்டன. அதுமட்டுமல்ல. 250 லாரிகள் மூலம் வீடு களுக்குத் தண்ணீர் வழங்கப்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு என். பழனிவேல். தலைவர் அவர்களே. சென்ற ஆண்டு வறட்சி நிவாரண நிதிக்காக தமிழக அரசு ரூ. 217 கோடி கேட்டு மத்திய அரசு கொடுத்தது ரூ. 68 கோடி என்றும் தமிழக அரசு செலவு செய்ததையும் சேர்த்து ரூ. 114 கோடி என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்றால் ஏற்கனவே வறட்சி நிவாரணத்திற்காக எடுக்கப்பட்ட வேலைகள் எவ்வளவு அவை பூராவும் முடிக்கப்பட்டு விட்டனவா அப்படி முடிக்கப்படாமல் பாதியில் நின்றால் அவற்றை முடிப்பதற்கு அரசு தொடர்ந்து முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, மத்திய அரசிடம் கேட்கப்பட்ட தொகை சரியானதுதான். ரூ. 45 கோடி அவர்கள் கொடுத்தார்கள். ரூ. 45 கோடி தரப் பட்டத்தில் மானியமாகக் கொடுக்கப்பட்டது ரூ. 13.7 கோடி. மத்திய அரசு கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நான் முதலில் தெரிவித்தபடி இன்று ரூ. 114.8 கோடி செலவு செய்திருக்கிறோம். எடுக்கப்பட்ட வேலைகள் பூர்த்தியாகியுள்ளன. மொத்தம் எடுக்கப்பட்ட வேலைகள் 82,459. அவை பூர்த்தியாகி யிருக்கின்றன. எங்கேயாவது வேலைகள் எடுக்கப்பட்டு முடி வடையவில்லையென்றால், அதை என் கவனத்திற்குக் கொண்டு வந்தால் முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பேன்.

**தமிழ்நாட்டில் முந்திரி விளைச்சலின் அபிவிருத்திக்கான அரசின் திட்டம்.**

47 (*வினா எண் 18035) திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் முந்திரி பயிரிடுவதற்கு உலக வங்கி கடன் வழங்கியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இல்லை. உலக வங்கியின் உதவியுடன் சுமார் ரூ. 3950.46 இலட்சம் மதிப்பீட்டில் முந்திரி அபிவிருத்திக்கான திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வினாவிற்கும் பதிலளித்து விடுங்கள்.

48 (*வினா எண் 20533) திரு. செ. செம்மலை: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் முந்திரி விளைச்சலின் அபிவிருத்திக்கு ஏதேனும் புதிய திட்டத்தை அரசு மேற்கொள்ள உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இந்தக் கேள்விக்கும் அதே பதில்தான்.

(முற்பகல் 9-40)

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் முந்திரி பயிரிடுவதற்காக உலக வங்கியின் மூலம் பெறப்பட்ட கடன், எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு தொகை மாவட்ட வாரியாக செலவழிக்கப்பட் டுள்ளது என்பதையும், எந்த அளவிற்கு மாவட்டங்களில் முந்திரி பயிரிடப்பட்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பணம் இன்னும் வந்து சேரவில்லை. அது மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. விரிவான திட்ட மதிப்பீட்டை அனுப்பியிருக்கிறோம். பொதுவாக எல்லா மாவட்டங்களுக்கும் முந்திரி சாகுபடி செய்வது என்ற வகையில் இந்தப் பணம் செலவழிக்கப்படும்.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டங்களுக்கும் அந்தப் பணம் செலவழிக்கப்படும் என்று அறிவித்தார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் தமிழக சர்க்கார் மூலமாக இதற்கு முன்பு முந்திரி பயிரிடுவதற்கு ஏதாவது செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து. தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 360 ஹெக்டேர் நிலத்தில் முந்திரி பயிரிடப்பட்டிருக்கிறது. தோட்டக்கலைத் துறை மூலமாக இதற்குரிய உதவிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன். பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு உருவாக்கியிருக்கிற முந்திரி அபிவிருத்தி ஸ்கீமில், தமிழக அரசுக்கு முந்திரி பயிர் போடுவதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது? எத்தனை கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது? எந்தெந்த மாவட்டங்களில், எத்தனை ஏக்கர் நிலங்களில் பயிரிடுவது என்று அரசு திட்டம் உருவாக்கி உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாபுண்மிகு டாக்டர் கா. காளிமுத்து. தலைவர் அவர்களே, நான் முதலிலேயே ரூ. 3950 46 இலட்சம் என்று சொன்னேன். இதிலே மைய அரசின் உதவியும் அடங்கும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, முந்திரி விளைச்சலை அதிகப்படுத்துவதற்காக ஒரு அபிவிருத்தித் திட்டத்தை வகுத்து, அதற்காக உலக வங்கியின் கடன் கேட்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த அபிவிருத்தித் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு என்பதையும், அதிலே நம் அரசின் பங்கு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமான தொகையைத்தான் நான் குறிப்பிட்டேன். இதைத் தோட்டக் கலைத் துறையின் மூலமாகவும், வனத் துறையின் மூலமாகவும் பயன்படுத்த இருக்கிறோம். இதிலே மைய அரசின் ஒரு பகுதியும், மாநில அரசின் ஒரு பகுதியுமாக நாம் பயன்படுத்த இருக்கிறோம்.



## பேரம்பாக்கம் கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் துவங்கும் திட்டம்

49 (*வினா எண் 18532) திரு. இரா. சண்முகம்; மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பேரம்பாக்கம் கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:(அ)மற்றும் (ஆ) பேரம்பாக்கம் கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் 6.8.1983-ல் துவங்கப்பட்டு இயங்கி வருகிறது. நெல், நிலக்கடலை, ராகி, கரும்பு, சர்க்கரை, மிளகாய் வத்தல், புளி, பருத்தி மற்றும் முந்திரி ஆகியவைகள் இவ்விற்பனைக்கூடத்தில் விற்கவும், வாங்கவும் வசதி செய்யப்பட்டுள்ளன.

திரு. இரா. சண்முகம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், துவங்கப்பட்டு வியாபாரம் நடந்து வருவதாகச் சொன்னார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்னால் இந்தக் கேள்வி அவையிலே அனுமதிக்கப்பட்டிருப்பதை அறிந்து, ஒரு பெயர்ப் பலகையை அங்கே மாட்டியிருக்கிறார்கள். ஆக, அங்கே இப்படிப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, வெகு சீக்கிரத்தில் அதற்கு வேண்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்து, உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து. தலைவர் அவர்களே, எல்லா ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கும் கட்டிடங்கள் இல்லை. பல்வேறு விற்பனைக்கூடங்கள் வாடகைக் கட்டிடங்களில் இயங்க வேண்டியிருக்கின்றன. இப்போது அங்கே தொடங்கப்பட்டிருக்கலாம். விரைவில் அதற்குரிய நிலத்தை ஆர்ஜிதம் செய்து, முறையாகக் கட்டிடம் கட்டி, அதிலே ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தை அமைக்க அரசு ஆவன செய்யும்.

திரு. இரா. சண்முகம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரம்பாக்கம் என் சொந்த கிராமம். அங்கே 10 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அந்தப் புறம்போக்கு நிலத்தை எடுக்காமல், கோவிலுக்குச் சொந்தமான வேறு நிலத்தை எடுத்து, அதற்கென்று ஒரு தனியான தோப்பைத் தயார் செய்து, அது தேக்க நிலையில் இருக்கிறது. ஆகவே, சீக்கிரத்தில் நமக்குச் சொந்தமான அந்தப் புறம்போக்கு நிலத்தை

எடுத்து, வெகுசீக்கிரத்தில் கட்டிடத்தைக் கட்டி, அங்கே ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை நடத்த அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து. தலைவர் அவர்களே, எந்த நிலம் என்பது வருவாய்த் துறையைக் கலந்தாலோசித்து தான் செய்யப்படும்.

திண்டிவனம் தொகுதியில் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் திட்டம்

50 (*வினா எண் 18817) திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதியில் மண்வளப் பாதுகாப்புத் துறையினால் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் பணி 1983-84ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து. திண்டிவனம் தொகுதியில் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் பணி 1983-84 நிதி ஆண்டில் அடசல், வடபூண்டி, ஆண்டபட்டு, மூலச்சூர் மற்றும் பழமுக்கல் ஆகிய ஐந்து இடங்களில் மேற்கொள்ளப்பட்டன.

வேலை நேரத்தில் விபத்துக்குள்ளாகி இறக்கும் கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு உதவிப்பணம் வழங்கும் திட்டம்.

51(*வினா எண் 14447) திரு எம். சின்னசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல் உடைக்கும் தொழிலாளர்கள் வேலை நேரத்தில் விபத்துக்குள்ளாகி இறந்தால் உதவிப்பணம் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். இதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன். பேரவைத் தலைவர் அவர்களே, கல் உடைக்கும் தொழிலாளர்களைப் போலவே கிணறுகள் தோண்டுகிற பணியிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களின் பணி மிகக் கடுமையாக இருக்கிற காரணத்தினால் அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறவர்கள் இறந்து போனால் அவர்களுக்கு உதவி செய்யும் திட்டம் ஏதாவது பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். தலைவர் அவர்களே, கேள்வி கல் உடைக்கும் தொழிலாளர்களைப் பற்றியது, தனிக் கேள்வி போடுங்கள். அதற்குச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அந்தச் சட்டத்தில் இதற்கும் வகை இருக்கிறதா என்று பார்க்கச் சொல்கிறேன்.





திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, கல் உடைக்கும் தொழிலாளர்கள் விபத்துக்குள்ளாகி இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு உதவிசெய்ய வகை செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்ன மாதிரியான வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன். கல் உடைக்கும் தொழிலாளர்களும் விவசாயத் தொழிலாளர்கள் மாதிரி எந்தவிதமான வசதியும் இல்லாமல்—அவர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பங்கள்—நடுத் தெருவிலே நிற்கவேண்டிய நிலைமைதான் இருக்கிறது. கான்ட்ராக்ட் வேலைகளிலே வேலை செய்கிறவர்களைத் தவிர சாதாரணமாக ரோடுகளிலே வேலை செய்யக்கூடியவர்களுக்கும் அந்த உதவி கிடைக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, 1923 ஆம் ஆண்டு வேலையாள் இழப்பீடு சட்டத்தின் கீழ் கல் உடைக்கும் தொழிலாளர்கள் விபத்துக்குட்பட்டால் நிவாரணம் பெற வழியில்லை as the Law stands, ஆயினும் தமிழ்நாடு அரசு 1982 ஆம் ஆண்டு The Tamil Nadu Manual Workers Regulation of Employment and Conditions of Work Act, 1982 தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் வேலை மற்றும் பணிநிலைமைகள் முறைப்படுத்துதல் சட்டம் என்ற சட்டத்தை இயற்றியுள்ளது. அந்தச் சட்டத்தின் அனுபந்தத்தின் கீழ் எண் 11 இல் கல் உடைக்கும் தொழிலாளர்கள் மற்றும் கல் தூளாக்கும் பணி Employment in stone cracking and stone crushing சேர்க்கப் பட்டுள்ளது. எனவே அவர்கள் வேலைசெய்யும்போது மரணம் அடைந்தால் Workmen's Compensation Act அப்ளை ஆகிற காரணத்தால் அவர்களுக்கு நட்ட ஈடு கிடைக்கும். (குறுக்கீடு) The employer should pay. Who else will pay?

திரு. எம். அண்ணாதாசன்: தலைவர் அவர்களே, கல் உடைக்கும் தொழிலாளர்கள் விபத்துக்குள்ளானால் அவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும் என்று உத்திரவு ஏற்கெனவே போடப் பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருச்சி மாவட்டத்தில் திருவரும்பூர் தொகுதியிலே ஏராளமான தொழிலாளர்கள் கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அண்ணா பாறை உடைப்போர் கூட்டுறவு சங்கம், காமராஜர் கல் உடைக்கும் சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்திலே இருக்கின்றவர்கள் 2, 3 மாதங்களுக்கு முன்னாலே கல் உடைக்கும் தொழிலாளர்கள், கணவன் மனைவி இருவரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், கணவனுக்குக் கையும் மனைவிக்கு ஒரு கண்ணும் இழக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு அதுபற்றி அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளது. அதன்பேரில் அந்தக் கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு நிதி உதவி இதுவரையிலும் அளிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; இப்போது சட்டம் இல்லை என்றுதான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல சட்டம் இருக்கிறது என்று நான் சொல்ல வில்லை. 1982 ஆம் ஆண்டு இந்த அரசு ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அது அமலுக்கு வந்தவுடன் அவர்கள் பலன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்றபோது ஓர்க்மென் காம்பன்சேஷன் ஆக்ட்டில் வரக்கூடிய திருத்தம் வரும்போது பயன்பெறுவார்கள் என்று சொன்னார்கள். பல்வேறு இடங்களிலே கல் உடைக்கும் தொழிலாளர்கள் விபத்துக்குள் ளானபோது தொழில் தகராறு சட்டத்தின்கீழ் கிளப்பியும் உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன. அது மட்டுமல்லா மல், கிணறு தோண்டுகிற போதும் கல்உடைக்கும் தொழிலாளர் கள் ஆபத்தான பணியில் ஈடுபடுகிறார்கள். ஆகவே அவர் களுக்கும் இந்தச் சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, முன்பே சொன்னேன். துரதிருஷ்டவசமாக இத்தனையாண்டுக் காலமாக எந்த அரசும் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வில்லை. புரட்சித் தலைவர் ஆட்சியிலே தான் 1982 ஆம் ஆண்டு கொண்டுவந்த சட்டத்திலே அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது. அது அமல்படுத்தப்படும்போது அவர்கள் அந்த லாபத்தை அடைவார்கள். கிணறு தோண்டும் தொழிலாளர்கள் பற்றி தனிக் கேள்விபோட்டால் தனியாகப் பதில் தருகிறேன்

(முற்பகல் 9—50)

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அக்ரிகல்சுரல் ஓர்க்கர்ஸ் உள்ளிட்ட எல்லா தொழிலாளர் களையும் நாங்கள் சங்கத்தில் ஆர்கனைஸ் செய்கிறோம். அதை மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அது தங்களுக்குத் தெரியாதது அல்ல. பலரும் கேள்விகளைக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நானும் கேட்கிறேன். நமது அமைச்சர் அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பதிலைக் கொடுக்கிறார்கள். இதற்கு வகை செய்யப் பட்டு இருக்கிறது என்று சொன்னதற்குப் பின்னால் இப்போது அமலில் இல்லை என்று சொல்கிறார். ஆக அந்த பதில் சரி யில்லை. இது அவைத் தலைவர் அவர்கள் கவனிக்கவேண்டிய விஷயம். இன்றைக்கு அப்படிப்பட்ட ஒரு சட்டம் நடைமுறைக்கு வரவில்லை. இந்தத் தொழிலாளர்கள் அனேகமாக பரவலாக அன்-ஆர்கனைஸ்டு ஓர்க்கர்ஸ் ஆக இருக்கிறார்கள். நீங்கள் எப்படி அமலுக்கு கொண்டுவரப்போகிறீர்கள். பேக்டரி இன்ஸ்பெக்டர்களை அல்லது மைன்ஸ் இன்ஸ்பெக்டர்களை எங்கே அனுப்புவீர்கள். யார் போய் செய்வார்கள். செய்வ



தற்கு ஆள் இல்லை. அதற்கு வகை செய்யப்பட்டு இருக்கிறதா? எப்படி செய்யப்பட்டு இருக்கிறது? இந்தத் தொழிலாளர்கள் எந்த எந்த இடங்களில் குவாரிகளில், கல் உடைக்கும் இடங்களில் இருக்கிறார்களோ அங்கே போய் நிலைமையை ரிப்போர்ட் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? இந்த 2 வருடங்களில் எத்தனை கேஸ்களுக்கு பணம் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த தமிழில் சொன்னேன். வகை செய்யப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன என்று பொருள். இதில் புரவைடு செய்யப்பட்டிருக்கிறது. 1982 ஆம் ஆண்டு கொண்டு வந்து இருக்கிற சட்டத்தில் அதற்கு வகை செய்யப்பட்டு இருக்கிறது. அந்தச் சட்டம் இன்னும் அமலுக்குக் கொண்டுவரப்படவில்லை. அதற்கான ஸ்கீம்கள் தயார் செய்துகொண்டு இருக்கிறோம். அந்தச் சட்டம் அமலுக்கு வந்தபிறகு இந்தச் சலுகைகளை அந்தத் தொழிலாளர்கள் அடைவார்கள்.

பூவந்த கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

52 (*வினா எண் 17871) திரு. க. பாரமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம்—திருப்புவனம் ஒன்றியம், பூவந்த கிராமத்திற்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குழாய் மூலம் தண்ணீர் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரி சீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்பொழுது செயற் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு.எஸ்.இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ)இல்லை. ஆயினும், இரண்டு ஆழ்த்துளைக்கிணறுகள் நடப்பு ஆண்டு வறட்சி நிவாரணப்பணித்திட்டத்தின் கீழ் இக்கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அமைச்சர் அவர்கள் முதலில் சொன்ன பதில் சரியாக தெரியவில்லை. ஏற்கனவே 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அந்தக் கிராமத்திற்கு வடது பக்கத்தில் இருக்கிற ஊரணிக்கு அடுத்து நல்ல தண்ணீர் இருக்கிறது என்று கண்டு அறியப்பட்டு அதில் ஒரு ஆழ் துளை கிணறு தோண்டி குழாய் மூலம் தண்ணீர் எடுக்கும் முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் அதை நடைமுறைப்படுத்தவில்லை. அதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த கிராமம் 6—வது வகையில் இருக்கிறது. 6—வது வகை என்றால் போதுமான அளவுக்கு எப்போதும் குடிநீர்கிடைக்கிறது என்று பொருள். ஆனால் அதை 3—வது வகைக்கு மாற்றியமைக்கவேண்டும் என்ற கோரிக்கையின்மீது இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அந்த பரிசிலனை முடிந்த பிறகு அதை 3—வது வகைக்கு மாற்றியமைக்கப்பட உள்ளது. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து குடிநீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வகைப்படுத்துவதைப் பற்றி ஏற்கனவே அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கு நாங்கள் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்து இருக்கிறோம். என்னைப் பொறுத்த வரையில் நேர்த்தியாறு என்ற கிராமத்தை 6-வது வகை என்று சொன்னார்கள். அதே கிராமத்திற்கு நானேபோய் இருந்தேன். அந்த கிராமத்தில் குடிக்க தண்ணீர் இல்லை. பூவந்த கிராமத்தில் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் மக்கள் 3 மைல் தூரம் சென்று தண்ணீர் எடுக்கிறார்கள். அந்தக் கிராமத்தை எப்படி 6—வது வகைக்குக் கொண்டுவந்தார்கள் என்று புரியவில்லை. ஆகவே வகைப்படுத்துவதில் ஏதோ முறைகேடுகள், தவறுகள் இருக்கின்றன. அதை ஒட்டு மொத்தமாக மாற்றியமைக்க புதிய சர்வே எடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் இந்த வகைப்படுத்துவது 1976 ஆம் ஆண்டு செய்தார்கள். அதற்கு பின்னால் அவ்வப்போது வருகிற வேண்டுகோளை இந்த அரசு பரிசீலித்து மாற்றம் செய்கிறது. இந்த சிற்றூரைப் பார்த்து 6-வது வகையிலிருந்து மாற்றம் செய்வதற்கு செயற்குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதை அவர் பார்த்து 3-வது வகை என்று சொல்லிவிட்டால் உங்களுக்கு லக்கிதான், உங்களுக்கு தண்ணீர் உடனடியாக கிராமப் புற குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் குடிநீர் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

**பேரணையிலிருந்து திண்டுக்கல் நகரத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.**

53 (*வினா எண் 19451) திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள் மற்றும் திரு. என்.பழனிவேல்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டை பேரணையிலிருந்து திண்டுக்கல் நகரத்திற்குக் குடிதண்ணீர் கொண்டு போகும் திட்டம் ஆய்வில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) திண்டுக்கல் நகரத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வு முடிந்து ஆயுள் காப்பீட்டு கழகத்தின் நிதி உதவி பெறுவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆயுள் காப்பீட்டு கழக நிதி உதவி பெற்று திட்டம் செயல்படுத்தப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அப்படி இந்தத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு முடிந்த பிறகு நிலக்கோட்டை பேரணையிலிருந்து திண்டுக்கல் நகரத்திற்குத் தண்ணீர் போகப் போகிறது; அதை வேண்டாமென்று சொல்லவில்லை; எடுத்துக்கொண்டு போகட்டும். ஆனால் அப்படி எடுத்துக்கொண்டு செல்லுகின்றபொழுது பக்கத்தில் உள்ள தண்ணீர் இல்லாத கிராமங்களுக்கும் குடி தண்ணீரைக் கொடுத்துவிட்டுக் கொண்டு செல்லுகின்ற சூழ்நிலையை அமைச்சரவர்கள் உருவாக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வைகை நதியில் பேரணைக்கு மேலே சித்தர்கால் நத்தம் அருகில் நீர் தாங்கிய மணல்திட்டுக்கள் போதுமான ஆழத்திற்கு உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே, இதனை மூலாதாரமாகக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வைகை நதியிலிருந்து கிணறுகள் மூலம் நகரின் தேவைக்கு 1.5 மில்லியன் காலன் குடிநீர் கூடுதலாக விநியோகிக்க குடிநீர் வடிகால் வாரியம் திட்ட அறிக்கை தயாரித்துள்ளது. இத்திட்டத் தலைமைப் பணியிடமான சித்தர்கால்-நத்தத்திலிருந்து (குறுக்கீடு) சித்தர்கல் நத்தம் என்றால் அப்படியே ஏற்றுக்கொள்கிறேன்—சித்தர்கல் நத்தத்திலிருந்து சுமார் 40 கிலோ மீட்டர் நீளத்திற்குக் குழாய் பதித்து திண்டுக்கல் நகரத்திற்கும் நீரேற்று மூலக்குழாயிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வழியோரக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கப்படும். எனவே, இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வழியோரக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கப்படும். இதற்கான செயற்குறிப்பை குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்து ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சித்தர்கல் நத்தம் என்ற அந்த ஊர் சித்தர்கள் வாழ்ந்த ஊர். திண்டுக்கல் நகரத்திற்குக் குடிதண்ணீர் கொண்டு செல்லும்பொழுது 11 ஊர்களுக்கு மட்டும் கிடைக்கும் என்று தெரிகிறது. கிட்டத்தட்ட 51 ஊர்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று நான் குறித்துக் கொடுத்திருக்கிறேன். அந்த எல்லா ஊர்களிலும் தண்ணீர் இல்லாமலும், அப்படியே தண்ணீர் இருந்தாலும், உப்புத் தண்ணீராகவும் இருக்கிறது. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** தனியாரால் நடத்தப் படும் நர்சரிப் பள்ளிகளை அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் தமிழகத்தில் உள்ள கிராமப்புறங்களில் நர்சரி பள்ளிகளை அரசு ஆரம்பிக்கலாம் என்பதனை கொள்கை அளவில் ஏற்று முதற்கட்டமாக 1982–83ல் 4,343 பழைய குழந்தைகள் நல மையங்களில் நர்சரி பள்ளிகள் திறக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் 4,140 மைய அமைப்பாளர்களுக்கு நர்சரி வகுப்பு நடத்துவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு மேற்படி மையங்களில் நர்சரி வகுப்புகள் நடத்தப் பட்டு வருகின்றன.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்ற போது 4000-க்கு மேற்பட்ட குழந்தைகள் நல மையங்கள் நர்சரி பள்ளிகளாக மாற்றப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். சமீப காலத்திலே இன்னும் கூடுதலாக அவ்வாறு நர்சரி பள்ளிகள் அமைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** தலைவர் அவர்களே, இன்னும் கூடுதலாக 5,000 நர்சரி பள்ளிகளைக் கிராமப் புறங் களில் ஆரம்பிக்கலாம் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கின்றது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தனியாரால் நடத்தப்படும் நர்சரிப் பள்ளிகளை அரசே ஏற்று நடத்தும் திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் தனியார் நடத்துகின்ற பள்ளி களிலே அநியாயமான முறையிலே கட்டணம் வசூலிக்கப்படு கின்றது. ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி அடிக்கடி பணம் வசூலிக்கின்ற கொடுமைகள் எல்லாம் நடக்கின்றன. ........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை எல்லாம் கல்வி அமைச் சரிடம் கேட்டால்தான் பதில் கிடைக்கும். இப்போது அரசு நர்சரி பள்ளிகள் ஆரம்பிக்கின்றதா, இல்லையா என்பதை மட்டும் தான் கேட்கவேண்டும்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** எனவே நர்சரிப் பள்ளிகள் அனைத்தையும் அரசே எடுத்துக்கொள்கின்ற வகையில் மீண்டும் அதுகுறித்து பரிசீலிக்கப்படுமா!

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** தலைவர் அவர்களே, நான் பதில் கூறுகின்றபோதே சொல்லி இருக்கிறேன், தமிழ கத்தில் உள்ள கிராமப் புறங்களில் நர்சரி பள்ளிகளை ஆரம்பிக் கலாம் என்பதனை கொள்கை அளவில் ஏற்று அதன்படி கிராமப் புறங்களில் குழந்தைகளுக்கு நர்சரி பள்ளிகளை ஆரம்பித்து அங்கே தமிழ் மொழியும், ஆங்கில மொழியும் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று அரசு முன்வந்திருக்கின்றது. அந்த அளவில் இன்றைக்குச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தனியார் கட்டணம் வசூலிப்பதைப்பற்றி அரசுக்கு ஒன்றும் தெரியாது.



**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, இந்த நர்சரி பள்ளிகளில் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பொதுமக்களின் குழந்தைகள் படிக்கமுடியவில்லை, மேலும் நர்சரி பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகள் தமிழிலும் சொல்லாமல் ஆங்கிலத்திலும் சொல்லாமல் அதாவது அப்பா, ஃபாதர் என்று சொல்லாமல், புதுமாதிரியாக ஏதோ பாடி என்று சொல்கின்றன. வேறு ஏதோ பேசுவதுபோல் தெரிகின்றது. எனவே அந்தக் குழந்தை களுக்கு முறையாக தமிழும், ஆங்கிலமும் கற்றுக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா? (சிரிப்பு)

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நர்சரி பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கிலம் மற்றும் எண் கணிதம், சுகாதாரப் பழக்கங்கள் ஆகியவைக் கற்றுத் தரப்படுகின்றன. தமிழ் போதனா மொழி யாகவும், ஆங்கிலம் பேசும் மொழியாகவும் கிராமப்புறக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. பெற்றோர் கள் குழந்தைகளை இம்மையங்களுக்கு அனுப்பி முறையாக கல்வி கற்கின்ற ஏற்பாடுகளைச் செய்கின்ற வகையில் பெற்றோர்களும் இந்த நர்சரி பள்ளிகளுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும்.

**திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த நர்சரி பள்ளிகளை அரசு சார்பில் நடத்த இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்திற்குள் இந்த நர்சரி பள்ளிகளை ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** அதைப் பற்றிதான் நான் முன்பே சொல்லியிருக்கிறேன், 5,000 நர்சரி பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக் கிறது என்று.

**திரு. எஸ். டி. உகம்சந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்தில் தமிழகத்தில் உள்ள தனியார் நர்சரி பள்ளிகளை அரசுடைமையாக்கும் கொள்கை இல்லை என்று சொன்னார்கள். ஆனால், அவற்றில் நடைபெறுகின்ற தவறுகளைக் களை வதற்காக அரசின் கட்டுப்பாட்டில் முறைப்படுத்தும் குறிப்பு ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசாங்கத்தின் மூலமாக மானியம் ஏதாவது பெற்று, தனியார்கள் அந்தப் பள்ளிகளை நடத்தினால், அவற்றில் தவறுகளைக் களைவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்ய இயலும். மானியம் எதுவும் பெறாமல் அவர்களே நடத்தினால், அரசு அதற்குப் பொறுப்பு ஏற்காது.

கொள்கிறேன். ஏனென்றால் இந்தத் திட்டம் வீணாகப் போய் விடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அந்தத் தண்ணீர் போகின்ற வழியில் இருக்கின்ற கிராமத்து மக்கள் அந்தக் குழாய்களை உடைத்து விடக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது. அந்தச் சூழ்நிலை வராமல் தடுக்க, எல்லா ஊர்களுக்கும் தண்ணீர் கொடுத்துவிட்ட பிறகு திண்டுக்கல் நகரத்திற்குக் கொண்டுபோகின்ற முறையில் மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூலக் குழாயிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவிலுள்ள வழியோரக் கிராமங்களுக்குக் கொண்டு போக முடியுமே தவிர எட்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பாலுள்ள கிராமங்களுக்குக் கொண்டு போக முடியாது. அதற்கு வேண்டுமென்றால் தனி ஸ்கீம்தான் போட்டாக வேண்டும். வழியோரக் கிராமங்களுக்குக் கொடுப்பது பற்றி வகை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டத்தையெல்லாம் நிறைவேற்றியதற்குப் பின்னால் ஏதாவது தங்கு தடங்கல் இருந்து அது சம்பந்தமாகப் புதுக் கோரிக்கைகள் எழுமேயானால் அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்தால் அதையும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரணையிலிருந்து திண்டுக்கல் நகரத்திற்குக் குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் பற்றிய ஆய்வு முடிந்து விட்டதாக அமைச்சரவர்கள் இங்கே சொன்னார்கள். அப்படியானால், அந்தத் திட்டத்தினுடைய மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? எப்பொழுது ஆய்வு முடிந்தது? இந்தத் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு 1983-84 ஆம் ஆண்டு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிதி உதவி பெறுவதற்கு ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை 13-12-1983 ஆம் நாளிட்ட அரசாணை எண் 1850 இல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீடு ரூபாய் 529 இலட்சம். ஆகவே, ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிதி உதவி பெற்று திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திண்டுக்கல் நகரம் தொடர்ந்து கடுமையான குடிதண்ணீர் நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. ஆகவே, இதைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்தத் திட்டத்தின் ஆய்வு முடிந்திருக்கிறது. நான் கேட்க விரும்புவதெல்லாம், ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிதி உதவி கிடைப்பதற்குமுன் அரசே முன் பணம் செலவழித்து இந்த வேலைகளை ஆரம்பித்து, பிறகு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடுவது சாத்தியமில்லை.

தமிழ்நாட்டில் வசிக்கும் அனைத்துப் பழங்குடியினருக்கும் குடிநீர் வழங்கும் திட்டம்.

54—* வினா எண். 19850 திரு சி. சிவப்பிரகாசம்:—மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வசிக்கும் அனைத்துப் பழங்குடியினருக்கும் இரண்டாண்டு காலத்திற்குள் குடிநீர் வழங்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் ஆய்வினை மேற்கொண்டுள்ளதா?

(ஆ) தற்போதுஎந்த எந்த பகுதிகளில் ஆய்வு முடிக்கப்பட்டு பணி தொடங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) ஆய்வு முடிக்கப்பட்டுவிட்டது. பெருந்திட்டம் (மாஸ்டர் திட்டம்) தயாரிக்கப்பட்ட பின்னர் எல்லாப் பகுதிகளிலும் பணிகள் தொடங்கப்படும்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

சட்டத்துறை அமைச்சர் மற்றும் தொழில் துறை அமைச்சர் ஆகியோரின் இலாக்காக்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் விடையளிக்க வேண்டிய வினாக்கள் 55,56,57, ஆகியவை தள்ளிவைக்கப் பெறுகின்றன.

நர்சரி பள்ளிகளை அரசே ஏற்று நடத்தும் திட்டம்.

58—*வினா எண் 10996 திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்,

திரு. து. புருஷோத்தமன்,

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்,

திரு. இரா. தாமரைக்கனி,

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்,

திரு. எஸ். டி. உகம்சந்த்,

திரு. எம். சின்னசாமி,

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்குக்கு விடையளிப்பாரா:—

தமிழகத்தில் உள்ள நர்சரி பள்ளிகளை அரசே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நர்சரி பள்ளிகளை இப்பொழுது மிகவும் நெருக்கடி யான இடத்தில், அதிகமாகப் பிள்ளைகளை வைத்து, ஆரோக் கியமில்லாத நிலையில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவற்றை ஆரோக்கியமான இடத்தில், வசதியாக நடத்த, அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடங்களில் அந்த நிலைமை நிலவுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பாரானால் அந்த—உணர்வை அரசு பரிசீலனை செய்யும்.

59 —(*வினா எண் 16208) திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு சமூ நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச சத்துணவு பெறும் 2½ வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்காக நர்சரி பள்ளி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா!

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மற்றும் (ஆ), அரசே கிராமப்புறங்களில் நர்சரி பள்ளிகளை ஆரம்பிக்கலாம் என்பதனை கொள்கையளவில் ஏற்று 1982-83ம் ஆண்டில் ஏற் கனவே சமூக நலத்துறையினரால் பராமரிக்கப்பட்டுவரும் 4,343 குழந்தைகள் காப்பகங்களில் நர்சரி பள்ளிகள் திறக்க ஆணை வெளியிட்டுள்ளது. இதில் 4,140 அமைப்பாளர்களுக்கு நர்சரி வகுப்பு நடத்துவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு மேற்படி மையங் களில் நர்சரி வகுப்புகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிக்கான பாடத்திட்டத்தின்படி இங்கு தமிழ், ஆங்கிலம், எண் கணிதம் (Arithamatic) மற்றும் சுகாதாரப் பழக்கங்கள் கற்றுத் தரப்படுகின்றன. பள்ளிகளுக்கான கையேடு மற்றும் பாடத் திட்டம் அச்சிடவும் விளையாட்டுப் பொருட்கள் புத்தகங்கள் மரச்சாமான்கள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அடுத்த ஆண்டும் தொடர்ந்து நடத்தக்கூடிய வகையில் அரசாங்கத்திடம் திட்டம் இருக் கின்றதா? ஒவ்வொரு ஆண்டும் எத்தனை பள்ளிகளை ஆரம்பிக்க இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு என்பதைப் பற்றி என்னிடம் தற்போது விவரம் இல்லை. இன்னும் 5,000 நர்சரி பள்ளிகளை ஆரம்பிப்பது பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டு வருகிறது.



திரு. இல. பலராமன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த சமூக நலத் துறையினால் நடத்தப்படும் இது போன்ற நர்சரி பள்ளிகளை கல்வித் துறையுடன் இணைப்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? அதற்கான சிலபஸ் ஏதாகிலும் வகுத்திருக்கிறதா? எதிர்காலத்தில் குழந்தைகள் நன்றாகப் படிக்கவேண்டும், வளர வேண்டுமென்பதற்காக அனாதைக் குழந்தைகள் மட்டும் என்று இல்லாமல், மேலும் அதிகமான குழந்தைகளைச் சேர்க்க அரசு ஏதாவது திட்டம் வகுத்திருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மையங்கள் சமூகநலத் துறையின்கீழ் இயங்கி வருகின்றன. பாடத் திட்டங்கள் சம்பந்த மாக மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதல் போன்றவை பள்ளிக் கல்வித்துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*தென்னாற்காடு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சுகாதாரப் பயிற்சி நிலையங்கள்*

60—(*வினா எண் 18876) திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உலக வங்கி உதவி யுடன் அமைத்த சுகாதாரப் பயிற்சி நிலையங்கள் (1981-82, 1982-83 ஆகிய ஆண்டுகளில்) எத்தனை?

(ஆ) அதற்காக எவ்வளவு தொகை செலவிடப்பட்டது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) 1981-82, 1982-83ம் ஆண்டுகளில் தென்னாற்காடு மாவட்டத்தில் உலக வங்கி உதவி யுடன் புதுச்சத்திரம், வடலூர், மங்களம்பேட்டை ஆகிய மூன்று ஊர்களில் கிராமப்புற சுகாதார பயிற்சி நிலையங்களும், கடலூர் அரசு மாவட்ட மருத்துவ மனையில் ஒரு சுகாதாரப் பணியாளர் (பெண்) பயிற்சிப் பள்ளியும் ஆக நான்கு நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

(ஆ) அவற்றிற்கு ரூ 20.93 லட்சம் செலவிடப்பட்டது.

(முற்பகல் 10-10)

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுச்சத்திரம், மங்களம்பேட்டை போன்ற இடங்களில அந்த சுகாதார பயிற்சி நிலையங்களில் போதுமான பணியாளர்கள் இல்லை என்பது உண்மைதானா? மேலும் அங்கே இருப்பவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படாத நிலைமை இருப்பது உண்மைதானா என்பதையும் இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்சினை
### அமைச்சர்களின் இலாக்கா மாற்றம்—அவைக்கு அறிவித்தல்.

திரு. என். எஸ். வி. சித்தன்: சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். நேற்று மாலை வானொலியிலும், இன்றைக்கு காலை செய்தித் தாள் மூலமும் தொழில் இலாக்காவும் அதேபோல கூட்டுறவு இலாக்காவும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமிருந்து மாற்றப் பட்டுள்ளதாக அறிந்தோம். இலாக்காக்கள் மாற்றப்படுவது முதல் அமைச்சர் அவர்களின் ப்ரோராகேட்டிவ் ரைட். அதை நாங்கள் நன்றாக அறிவோம். ஆனால் பட்ஜெட் தொடர் ஆரம்பித்திருக்கிற இந்த நேரத்தில் இப்படி நேர்ந்திருப்பதைப் போல ஒரு நிகழ்ச்சி இதுவரையில் தமிழக வரலாற்றிலே நடந்தது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கொள்கை சம்பந்தப் பட்ட விஷயம் அல்ல; இலாக்கா மாற்றங்கள் என்பது சர்வ சாதாரணமாக நடக்கக்கூடியதுதான்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அதையும் சபைக்கு அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபைக்கு அறிவிப்பது இல்லை. பார்லிமெண்டில் அப்படி நடப்பதில்லை.

திரு. ரா. உமாநாத்: அவை சம்பந்தப்பட்டது என்பதால்தான் நாங்கள் ரெய்ஸ் பண்ணுகிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இங்கே இருப்பதால் இதுபோன்று ஒரு முக்கியமான இலாக்கா மாறுதல் செய்ததற்கு என்ன காரணம் என்பதை அவர்கள் மூலமாகவோ அல்லது அவை முன்னவர் அவர்கள் மூலமாகவோ அறிய விரும்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருந்தால் அவைக்கு அறிவிக்கலாம், அல்லது அமைச்சர்கள் இராஜினாமா செய்தால் இராஜினாமா செய்கிற அமைச்சர் அவர்கள் விருப்பப்பட்டால் ஒரு அறிக்கை வைக்கலாம். இலாக்கா மாற்றம் என்கிறபோது அவைக்கு அறிவிக்க வேண்டுமென்கிற அவசியம் இல்லை.



திரு. என். எஸ். வி. சித்தன்: அமைச்சர் அவர்கள் இங்கு இருப்பதாலே பதில் சொல்ல வேண்டுமென்று கேட்கிறோம். காலையிலேயே அவர் பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் இந்த மாறுதலைப் பற்றி சொன்னேன், நீங்கள் அப்போது வருவாய்த் துறை அமைச்சரோடு பேசிக்கொண்டிருந்தீர்கள். வினாக்கள் எண் 55,56,57—ஐ எடுத்துக் கொள்ளும் பொழுது மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தொழில்துறை அமைச்சராக இலாக்கா மாற்றப்பட்டிருக்கிறார். ஆகவே தொழில் துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட வினாக்கள் இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்பட வில்லை என்று சொன்னேன்.

திரு. ரா. உமாநாத்: நான் இந்த இலாக்கா மாறுதலுக்கான காரணத்தைக் கேட்கவில்லை. ஏனென்றால் அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ப்ரோராகேட்டிவ் ரைட். (Prorogative Right) அதிலே நான் போகவில்லை. சபை நடந்துக் கொண்டிருக் கிற பொழுது, அந்த நடவடிக்கை சபையின் நடவடிக்கையிலே சம்பந்தப்பட்ட ஒரு நடவடிக்கையாக இருப்பதால் இது நமக்குத் தேவையாக இருக்கிறது. அந்த இலாக்கா யாருக்கு என்று தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது, அந்த முடிவை எடுக்கிற போது நேரடியாக இங்கே சொல்லி இருக்கலாம். விதிகளில் என்ன இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. சபை இல்லா விட்டால் நீங்கள் சொன்னமாதிரி அது ரொட்டீன் விஷயம்தான். ஆகவே சபை நடக்கிறபோது மாறுதலை இங்கே நேரடியாக தெரிவித்திருக்கவேண்டும் என்பது ஒன்று; இரண்டாவதாக இன்றைக்கு எடுக்கப்படவிருந்த கேள்விகள் எடுக்கமுடியாமல் இலாக்கா மாற்றப்பட்டிருக்கிறது என்று சொல்ல வேண்டி யிருந்தது. நான் மெரிட்ஸ்குள்ளே போகவில்லை. எந்த மாறு தலாக இருந்தாலும் சபையினுடைய நடவடிக்கையைப் பாதிக் காமல் செய்யலாம். அப்படி செய்திருந்தால் அந்த கேள்விகளும் இன்றைக்கு வந்திருக்கும். அவையின் நடவடிக்கைகளைப் பாதிக்கக்கூடிய முறையில் அந்த நடவடிக்கை இருந்திருக்கக் கூடாது. தீஸ் ஆர் தி டூ பாயிண்ட்ஸ்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அமைச்சர்களை நியமிப்பதும், யாரிடத்திலே எந்தப் பொறுப்பைத் தருவது என்பதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தது ஆகும். அவர்கள் பரிந்துரையை ஏற்று மேதகு ஆளுநர் அவர்கள் ஆணையிட்ட பிறகு, "பை ஆர்டர் ஆப் தி கவர்னர்" என்று ஆணை பிறப்பிக்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் சொல்லியமாதிரி ஆளுநர் அவர்கள் ஆணை வெளிவருகிறபோதே அது அறிவிப்பாக வெளி வந்து விடுகிறது. அதை சபைக்கு அறிவித்து விட்டுத்தான் வெளியே அறிவிக்க வேண்டுமென்ற நிலைமை இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஆளுநர் அவர்களிடமிருந்து நோட்டிபிகேஸன் வந்துள்ளது. கேள்வி நேரம் முடிந்த பிறகு அதைப்பற்றி அவர்கள் அறிவிக்க இருந்தார்கள்.

THIRU R. UMANATH: Mr. Speaker Sir, the Hon. Chief Minister could have advised the Governor. The Governor acts only on the advice of the Hon. Chief Minister. ஆகவே, அந்த இலாகா மாற்றம் குறித்த ஸ்டேட்மெண்ட்டை அவை தற்போது நடப்பதாலே, அவைக்கு முதலில் அறிவிப்பு செய்துவிட்டு, பின்னர் வெளியே அறிக்கை விடலாம் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் கவர்னருக்கு அட்வைஸ் கொடுத்து இருக்கலாமே?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த அறிவிப்பைக் கொடுக்க முதல் வாய்ப்பு பேரவைத் தலைவருக்கு எப்போது ஏற்படுகிறதோ அப்போது அதை அவைக்கு அறிவிக்கிறார். அவை நடந்து கொண்டு இருப்பதால், அவைக்கு அறிவித்து விட்டுதான் வெளியே அறிவிக்கவேண்டும் என்ற நிலைமை கவர்னருக்கு இல்லை. வெளியிடப்படுகிற ஆணைகள்-பை ஆர்டர் ஆப் கவர்னர்-என்றுதான் வருகிறது. ஆகவே நேற்றைக்கே செய்திகள் வெளியே வந்து விட்டது, முதல் வாய்ப்பு தற்போதுதான் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு கிடைத்து இருப்பதால், கேள்வி நேரம் முடிந்த பின் அறிவிப்பதாக இருந்தார்கள், அப்படி அறிவிக்கும் முன்பே அந்தப் பிரச்னையை மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிவிட்டீர்கள். ஆகவே, இதிலே ஒன்றும் பிரச்னையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகளை ஒத்திவைக்கின்ற நேரத்திலேயே மாண்புமிகு அமைச்சர்களின் இலாகா மாற்றப்பட்டு இருப்பதால் அது பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்து இருக்கிறேன். மேலும் இது கொள்கைப் பிரச்சினை அல்ல. மாண்புமிகு முன்னவர் அவர்கள் தெரிவித்ததைப்போல கவர்னர் ஆணைபிறப்பித்தவுடனே அது அறிவிப்பாக வெளிவந்து விடுகிறது. இந்த அவையில் அறிவிப்பு செய்யவேண்டும் என்கிற நிலைமைகள் வரவில்லை.

### 3. தகவல் கோரல்.

எதிர்க்கட்சியினர் கைது செய்யப்பெற்றது:

திரு. பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, கடந்த 13 ஆம் தேதி அகில இந்திய அளவில் கோரிக்கை தினம் அனுஷ்டிக்க வேண்டும் என்ற முறையில் எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்த நேரத்தில், செங்கற்பட்டு மாவட்டம் புழல் ஒன்றியம், சோழவரம் ஒன்றியம், மாதவரம் ஒன்றியம் ஆகிய இடங்களில் அந்தக் கோரிக்கை தினத்திற்காக தங்களைத் தயார்ப்படுத்திக்கொண்டு இருந்த நேரத்தில், எதிர்க்கட்சிகளில் குறிப்பாக எங்களுடைய ஜனதா கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் திரு. கதிர்வேலு உட்பட, திராவிட முன்னேற்றக்கழகம், சி.பி.ஐ. போன்ற கட்சிகளின் தோழர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்னைகளை எல்லாம் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் குறிப்பிடலாம். ஆளுநர் உரை மீதான விவாதம் முடிந்த பிறகு ஒத்திவைப்புத் தீர்மானம் அல்லது வேறு வகையிலும் கொண்டு வரலாம்.





*திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மேதகு கவர்னர் அவர்கள் உரை மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். 13-2-1984 ஆம் தேதி மேதகு ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தக்கூடிய நேரத்தில் சட்டமன்றத்தில் இருந்த மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி இந்த அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையைக் கண்டித்து வெளிநடப்பு செய்ததைத் தாங்கள் அறிவீர்கள்.

இந்த அரசின் மக்கள் உரிமையைப் பறிக்கும் போலீஸ் கொள்கை, மதுரையில் மாணவர்களை பயங்கரமாகத் தாக்கி, கடுமையாகத் சித்திரவதை செய்து, பலர் காயத்தோடு ஆஸ்பிடலில் இருக்கும்படியான நிலைமை; அடக்கு முறைச் சட்டங்கள் ஒன்றன்பின்ஒன்றாய் பிறப்பித்துக்கொண்டு இருக்கும் படியான நிலைமை; அரசியல் கட்சிகள் தொண்டர்களைத் திரட்டுவதற்குத் தடை, அரசியல் கட்சிகள் பிரச்சார விளம்பரத்தை தடுக்கக்கூடிய முறையிலே சட்டம் போட்டு தடை செய்வது, சுவர்களில் ரோடுகளிலே எழுதுவதை தடை செய்தல், விளம்பர போர்டுகளுக்குத் தடை, பேச்சுக்களை டேப் செய்து போட இப்படி இவைகளுக்கு எல்லாம் தடை உத்தரவும் அவசரச் சட்டங்களும் பிறப்பிப்பது சர்வசாதாரணமாகிவிட்டது. மக்களுடைய ஜனநாயக உரிமைகளுக்கு ஒரு துளி கூட மதிப்புக் கொடுக்காமல் தடுப்பு நடவடிக்கைகள் இப்படித் தொடருகின்றன; இன்னும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன.

(முற்பகல் 10–20)

தொழிலாளர் போராட்டங்களை உடைப்பதற்காக திட்ட மிட்டே போலீசை பயன்படுத்துகின்ற முறை நடந்துகொண்டி ருக்கிறது. ஆளும் கட்சித் தொண்டர்கள் என்ற பெயரால் அடியாட்களைக் கொண்டுபோட்டு எதிர்க்கட்சியைத் தாக்கும் நடவடிக்கை நடந்துகொண்டிருக்கிறது.

மக்கள் நடத்தும் போராட்டங்களை கேலி செய்வது, போட்டி போராட்டங்களை நடத்துவது, இப்படிப்பட்ட நடவடிக்கை நடந்துகொண்டிருக்கிறது. அரசு நிர்வாகத்தின் சகல பிரிவுகளிலும் லஞ்ச ஊழல் இன்றைக்கு உச்சக்கட்டத்திற்கு போய்க்கொண்டிருக்கிறது. அது தீராத வியாதியாகிக் கொண்டி ருக்கிறது. அடிமட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம் என்பது இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் ஒரு பெரும் பேச்சாக வளர்ந்துகொண்டிருக் கிறது. இப்படிப்பட்டக் கொள்கைகளை எதிர்த்து, கண்டித்து தான் அன்றைக்கு நாங்கள் வெளிநடப்புச் செய்தோம்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அந்த வார்த்தை அவரை வேதனைப்படுத்துகிறது என்று சொன்னால் அதைச் சொல்ல விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ** ** என்பதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு திரு. ரமணி சொல்லிய அந்த ஒரு வார்த்தையை எடுத்துவிட்டு மற்றவைகளைத் தொடர்ந்து பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த வார்த்தையை எடுக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. கு. ரமணி: நான் சொல்லிய விளக்கத்தை தப்பாக புரிந்து கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் எல்லோரும் தாங்களாகவே யுகித்துப் பேசுகிறார்கள். யாரும் சொல்லிக் கொடுத்து பேசுவது கிடையாது. பேசுவதில் ஜூனியர் சீனியர் என்று கிடையாது.

திரு. என். சங்கரய்யா: ஆளும் கட்சித் தரப்பிலிருந்து அந்தமாதிரி பேசும்போது ** ** என்று இருக்கிறது.

(முற்பகல் 10–30)

திரு. கு. ரமணி: நேற்றையதினம் அப்படிப்பேசும்போது இரட்டை வேடம் என்று சொன்னார்கள். நாங்கள் எப்போதும் வேடம் போட்டு நடிப்பவர்கள் அல்ல. வேடம் போடுவதும், நடிப்பதும் எங்கேயிருக்கிறது என்று அவர்கள் தேடிப் பார்த்து பதில் சொன்னால் நல்லது. எங்களைப் பற்றிச் சொல்வதில் பிரயோஜனம் இல்லை. அப்படிப்பட்ட காரியத்தை நாங்கள் சொல்வதில்லை. அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். உள்ளதை நாங்கள் பகிரங்கமாகச் சொல்கிறோம். நேற்று அவர்கள் பத்திரிகைகள் பலவற்றிலிருந்து பூராவும் படித்தார்கள். அதிலே இருக்கக்கூடிய விஷயம் பூராவும் அவருடைய சொந்த விஷயமா? அப்படியானால் என்ன அர்த்தம்? அது வேறு ஒருவர்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கொடுத்த விஷயம்தானே. அதுதான் பிரச்சினையே தவிர நான் எந்த ஒரு உறுப்பினரையும் புண்படுத்துவதற்காகப் பேசவில்லை. ஒரு கொள்கை சம்பந்தமான விவாதம் இது. ஆகவே ஒரு சரியான நிலைக்கு நீங்கள் தயவுசெய்து வரவேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு உறுப்பினர் பேசும்போது மற்ற உறுப்பினர்கள் அடிக்கடி குறுக்கிட வேண்டாம். அவர் பேசி முடித்த பிறகு, ஏதாவது பிரச்சினை இருந்தால், நீங்கள் சொல்லலாம். ஒவ்வொரு தடவையும் குறுக்கிட்டுக் கொண்டிருந்தால் நல்லதல்ல. (குறுக்கீடு).

திரு. கு. ரமணி: ஆகவே, துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்ன அத்தனை விஷயங்களைப் பற்றி மறுபடியும் பேச விரும்பவில்லை. அதைப் பற்றி எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசும்போது சொல்வார்கள். நான் சொல்ல வருகின்ற முக்கியமான விஷயம், தொழிலாளர் விஷயம், தொழிலாளர் விரோதப் போக்கை, கையாள்வதில் இந்த அரசு உச்ச கட்டத்திற்கு கொண்டு வந்துள்ளது. இந்த விஷயத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இவர்கள் 1980–ம் வருஷம் மே மாதம் 10 ஆம் தேதி தேர்தலுக்காக மக்களைச் சந்திக்கிற காலத்தில், அவர்கள் வெளியிட்ட அறிக்கையை அவர்கள் திரும்ப படித்துப்பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு, எந்த அரசியல் கட்சியைச் சார்ந்த தொழிலாளர் இயக்கமானாலும் தொழிலாளர் நிலையைக் குறித்த, நலனைக் குறிக்கோள்களாகக் கொண்டு. அவைகளை ஆரோக்கியமாக இயங்க நல்ல சூழ்நிலைகளை உருவாக்கியது. இது அண்ணா பத்திரிகையில் வெளிவந்துள்ளது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இரும்புக் கரம் கொண்டு நசுக்கப்பட்டது. தலைவர்கள், குசேலர், வி. பி. சிந்தன், சீனுவாசன் ஆகியவர்களை கொலை செய்யும் முயற்சிக்குச் சென்றார்கள் என்று உங்களுடைய பத்திரிகையிலே நீங்களே வெளியிட்டு, அதற்கு மக்களிடத்திலே தொழிலாளர் வர்க்கத்திற்கு ஏற்பட்டுள்ள, திராவிட முன்னேற்ற கழக சர்க்காரால் ஏற்பட்டுள்ள, கஷ்டங்களைப் பற்றி எல்லாம் சொல்லி, நீங்கள் ஓட்டு கேட்டீர்கள். நல்லது. ஆனால் இன்றைக்கு நிலை என்ன? இப்போது தமிழ்நாடு முழுவதும் நடக்கிற நிலைமையை நீங்கள் பார்க்கவேண்டும். சிம்சன் தொழிலாளர்கள் போராட்டம் 25-11-83 முதல் 15-2-84 வரைக்கும், அதாவது நேற்று வரைக்கும், 82 நாட்கள் அந்த போராட்டம் நடக்கிறது. கோட்டைக்கு ஊர்வலம் போய் மகஜர் கொடுக்கப்போனால் அந்த மகஜரைப் பெற்றுக் கொள்ளக்கூட அங்கே அமைச்சர்கள் இல்லை. முதலாளிகள் பிடிவாதம் அதிகரித்து இருக்கிறது. ஏன் என்றால் சர்க்காருடைய ஆதரவு அவர்களுக்கு என்றென்றும் இருக்கிறது என்ற தைரியம். லேபர் கமிஷனர் சம்பளம் அதிகம் கிடைக்கிறது இந்தத் தொழிற்சாலையிலே என்று, மற்றத் தொழிற்சாலைகளை கம்பேர் பண்ணி, குறிப்பு தயார் பண்ணிக் கொடுத்து, அதை நம்முடைய

[திரு. கு. ரமணி] [1984 பிப்ரவரி 16

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையின் காரணமாக, அவர்களுடைய தவறான சமுதாயக் கொள்கையின் காரணமாக விலையேற்றம் வருகிறது; வேலையில்லாத் திண்டாட்டம் வருகிறது. வறுமையும் பட்டினியும் இந்த நாட்டை வாட்டி வதைக்கிறது. நாட்டில் இப்படிப்பட்ட மோசமான நிலைமை வளர்ந்து வருவதற்கு மத்திய அரசின் கொள்கைதான் காரணம் என்று சொல்லி, அதைக் கண்டித்து அனைத்து எதிர்க்கட்சிகளும் இந்த நாட்டில் நடத்திக்கொண்டிருக்கிற பிரம்மாண்டமான இயக்கத்திலிருந்து இன்றைக்கு இந்த அரசாங்கம் வெளியேறி, அவைகளைக் கண்டிக்கக்கூட திராணியற்ற நிலையில் இருக்கிறது. இருந்தாலும் இந்தியாவில் சகல மாநில அரசாங்கங்களையும் விட நாங்கள்தான் அதிகப்படியாக சாதனைகளைச் செய்துவிட்டோம் என்று தொடர்ந்து துணிந்து கூறிவருகிறார்கள். தங்களுக்கு சரிநிகர் சமானம் யாரும் இல்லை என்று கொக்கரிக்கின்ற முறையில் மக்களிடம் சொல்லி வருகிறார்கள். எதிர்க்கட்சிகள் பற்றிச் சொல்லும்போதும் இப்படியேச் சொல்லிவருகிறார்கள். அதன் பிரதிபலிப்பாகத் தான் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை இந்த அவையிலே முன்மொழிந்த மாண்புமிகு பாலசுப்பிரமணியம் அவர்களுடைய பேச்சு இருந்தது. அவருடைய பேச்சிலே அவர் குறிப்பிட்டதெல்லாம் ** ** என்பது புரியவில்லை. அவர் என்ன சொல்கிறார்? அதிகார வர்க்கத்தை எதிர்த்து நின்று போராடுகிற அனைத்துக் கட்சிகளும் நாடு தழுவிய ஒரு பிரம்மாண்டமான இயக்கமாக இயங்கி, இந்திய அரசினுடைய கொள்கைகளை எதிர்த்துப் போராடுகின்ற முறையில் மாநிலத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு பிரதான இடதுசாரி அரசாக செயல்பட்டுக்கொண்டிருக்கும் மேற்கு வங்க அரசை தன்னுடைய முதல் எதிரியாகக் கொண்டு தாக்கியிருக்கிறார்கள். பத்திரிகையிலே வந்த செய்திகளை எடுத்துக்காட்டி, அநேக விஷயங்களைக் குறிப்பிட்டு தன்னுடைய கருத்தை நிலைநாட்டப் பார்க்கிறார். பத்திரிகையில் வந்த செய்திகளை எல்லாம் அவர் நம்புகிறாரா? அப்படி நம்புவதாக இருந்தால் அது அவருக்குத்தான் பெரும் அபாயமாக இருக்கும் என்பதை அவர் புரிந்து கொள்ளவேண்டும். (குறுக்கீடு) அவர் பேசும்போது நாங்கள் யாரும் குறுக்கிடவில்லை; அமைதியாக இருந்தோம். நான் இப்போது அனுமதிக்கவில்லை. நான் முடித்த பின்னால் கேட்டால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: நேற்றையதினம் அவர் மேற்கு வங்க அரசை மிகக் கடுமையாகக் குற்றஞ்சாட்டிப் பேசினார், நாங்கள் கேட்டுக் கொண்டிருந்தோம். மேற்கு வங்க அரசு என்றால்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1984 பிப்ரவரி 16]

அவருக்கு சிம்ம சொப்பனமாக இருக்கிறது. இன்றைக்கு திரு. ரமணி பேச ஆரம்பித்தவுடனேயே அவர் குறுக்கிடுகிறார் என்றால் அதனுடைய அர்த்தம் என்ன? அவர் ஒரு மணி நேரம் பேசினார், நாங்கள் யாரும் குறுக்கிடவில்லை. அதைப்போன்று அவரும் குறுக்கிடாமல் இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது குறுக்கிட வேண்டாம். அடுத்த, உறுப்பினர் பேச ஆரம்பிக்கும்முன் வேண்டுமானால் விளக்கம் சொல்லலாம்.

திரு. கு. ரமணி : நான் பேசி முடிந்த பின்னால் கேட்டால் நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். நேற்று அவருடைய பேச்சை பொறுமையோடு நாங்கள் கேட்டுக் கொண்டிருந்தோம். நான் பேசும்போதும் இடையிலே குறுக்கிட வேண்டாம். இந்த நிலைமையில் அவர்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்தையும், கம்யூனிஸ்டு கட்சியையும் தாக்குவது என்று இருக்கிறார்கள். உலகத்திலேயே கம்யூனிஸ்டு கட்சி என்ன செய்யும்? கம்யூனிஸ்டு கட்சிகளை தாக்குவது என்பதை யார் செய்திருக்கிறார்கள் என்பது திரு. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பதில் சுலபமாகக் கிடைக்கும். அவருக்கு இதுபோன்ற கருத்துக்கள் எப்படி கிடைத்தது என்பது தெரியவில்லை.

(குறுக்கீடுகள்)

** ** **

திரு. என். சங்கரய்யா : அவருக்கு மேற்கு வங்க சர்க்கார் என்றால் சிம்ம சொப்பனமாக இருக்கிறது. (குறுக்கீடுகள்)

திரு. கு. ரமணி : நான் சொல்வதைக் கேட்பதற்கே அவருக்குப் பொறுமை இல்லையென்றால் என்ன செய்வது? (குறுக்கீடுகள்)

திரு. என். சங்கரய்யா : நேற்று இரட்டை வேடம் போட்டோம் என்று கூடச் சொன்னார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியன் கூறிய கருத்தை எதிர்க்கவோ அல்லது குறை கூறவோ, அல்லது அதனைக் கண்டிக்கவோ முழு உரிமை படைத்தவர். அவர் விமர்சனம் செய்வதில் தவறு எதுவும் இல்லை. ஆனால் ** ** ** என்று வரவேண்டாம். அது தவறு.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முதலமைச்சர் அவர்கள் கடிதமாக சங்கங்களுக்கு அனுப்புகிறார்.
இதைப் பார்க்கிறபோது முதலாளிகள் என்ன நினைப்பார்கள்.
இந்தச் சர்க்கார் பரிபூரணமாக நமக்கு பக்க பலமாக இருக்கிறது.
இதனால் அவர்களுடைய பிடிவாதம் மேலும் ஏறுகிறது.
போராட்டத்திற்கு ஆதரவு அளித்து உதவி செய்யக்கூடிய இது
நிலையா? அதற்கு மாறாக அதிக சம்பளம் இந்தத் தொழி
லாளர்கள் வாங்கிக்கொண்டு அடாவடித்தனமாக காரியங்களைச்
செய்கிறார்கள் என்ற நிலையை உருவாக்கினால், இது தொழிற்
சங்கப் போராட்டத்தை பலவீனப்படுத்தி, உடைக்கக்கூடிய
ஏற்பாடு அல்லவா? என்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன்.
அப்படிப்பட்ட நடவடிக்கைதான் இது. அதேநேரத்தில் தொழி
லாளர் ஒற்றுமை. (குறுக்கீடு),

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று, ஒரு அன்டர்
ஸ்டேன்டிங், ரமணி அவர்களுக்கும் உங்களுக்கும் எனக்கும்
ஏற்பட்டிருக்கிறது.

**Mr. DEPUTY SPEAKER:** There cannot be any private under standing here.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதால், அந்த நேரம்
குறையாமல் அவருக்குக் கொடுக்கப்படும் என்று நீங்கள் ஒத்துக்
கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் சிம்சன் பிரச்சினை
பற்றிச் சொன்னார்கள். சிம்சன் பிரச்சினை பற்றி இரு
சாராருக்கும் பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சு வார்த்தை
நடந்த பின்னால், தொழிலாளர் நல இலாக்கா 4, 5 தடவைகள்
பேச்சு வார்த்தை நடத்தியது. அதற்குப் பின்னால் தொழிலாளர்
களுடைய பிரதிநிதி திரு. குசேலருக்கும், முதலாளிகள் பிரதி
நிதிகளுக்கும் சோழா ஓட்டலிலே, தாஜ் ஓட்டலிலே தனியாக,
முதலாளிகள் பிரதிநிதிகள், குசேலர் மட்டும், அந்தத் தலைவர்கள்
மட்டும் 22, 23, 24, 25 ஆகிய தினங்களில் பேச்சு வார்த்தை
நடத்தினார்கள். அந்தப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர்,
அடுத்து நாங்கள் பொதுக் குழுவைக் கூட்டிப் பேசும்போது,
இரண்டு இடத்தில் பேசிய திரு. குசேலர் அவர்கள் ஒரு ஒப்பந்தம்
வந்து விட்டது இன்னும் சில பிரச்னைகள் இருக்கின்றன என்று
அங்கே சொல்லிவிட்டு வந்து விட்டு, அடுத்து 15 பேர்களை
வேலைக்கு எடுக்காத காரணத்தால் வேலை நிறுத்தத்தை நாங்கள்
தொடர்ந்து நடத்துவோம் என்று அவர்கள் வேலை நிறுத்தத்தில்
ஈடுபட்டு விட்டார்கள்.

அதற்குப் பின்னர் ஜாயின்ட் கமிஷனராக இருந்த ராஜசுப்பிர
மணியம்—இப்போது கமிஷனராக இருக்கிறார்கள்—டிசம்பர் மாதம்
31 ஆம் தேதி வரையில் 14 முறைகள் பேச்சு வார்த்தையை
நடத்தினார்கள், Tripartite Negotiations என்று சொல்லப்படுகிற
முத்தரப்பு பேச்சு வார்த்தைகளை 14 முறைகள் நடத்தினார்கள்.



நடத்திய பிறகு அதில் சில ஆலோசனைகளை சொன்னார்கள்.
உங்களுக்கெல்லாம் அந்த ஆலோசனைகள் தெரியும். அந்த
ஆலோசனைகள் பிரகாரம் நீங்கள் நேரிடையாகப் பேசுங்கள்
என்று சொன்னார்கள். ஆனால் முதலாளிகளின் சார்பாக
என்னிடத்தில் ஏற்கெனவே ஒரு ஒப்பந்தம் வந்திருக்கிறது. அந்த
ஒப்பந்தத்தின் பிரகாரம் உற்பத்தி திறனோடு இணைந்து மற்ற
இடங்களில் பேசுவதாக இருந்தால், நாங்கள் 85லிருந்து 100
ரூபாய் வரையில் கொடுப்பதாக அவர்கள் சொன்னார்கள்.

ஆனால், ஒரு ஒப்பந்தமும் வராத காரணத்தாலோ, ஜாயின்ட்
கமிஷனருடைய பேச்சு வார்த்தையை ஏற்றுக் கொள்ளாத
காரணத்தாலோ, வேறு சிலர் தலையிட்டதன் காரணத்தாலோ,
நானே 12 ஆம் தேதி அழைத்துப் பேசினேன். தொழிலாளர்களின்
பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசினேன். முதலாளிகளின்
பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசினேன். அப்போது முதலாளி
களின் பிரதிநிதிகள் சொன்னதை சிலர் ஏற்றுக் கொள்ளவில்லை.
அப்போது நான் ஒரு ஒப்பந்தம் வந்துவிட்டது என்று சொல்ல
வில்லை. ஒப்பந்தம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றுதான்
சொன்னேனே தவிர, ஒப்பந்தம் வந்துவிட்டது என்று சொல்ல
வில்லை என திரு. குசேலர் கூறினார்.

தனியாகக் கண்டு பேசியதெல்லாம் உண்மைதான் என்று
ஒத்துக் கொண்டு, கடைசியாகக் கேட்டேன் இந்த வேலை
நிறுத்தத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு, — ஏனென்றால்
இதுவரையில் தொழிலாளர்கள் 5 ஆயிரம், 6 ஆயிரம் ரூபாய்
வரையில் இழந்திருக்கிறார்கள்— அவர்கள் வேலைக்கு செல்
வதற்கு ஒரு ஆலோசனையைச் சொல்லுங்கள் என்று சொன்னேன்.
15 பேர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். புள்ளிக்கு
ஏற்ப பஞ்சப்படியை உயர்த்தித் தர வேண்டும். 25 ரூ.
எஜுகேஷன் அலவன்ஸ் தரவேண்டும்; 25 ரூ. கன்வேயன்ஸ்
அலவன்ஸ் தரவேண்டும் என்று சொன்னார்கள். அதை
முதலாளிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் சொன்ன
யோசனைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, அவர்கள்
சொன்ன யோசனைகளை இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இறுதியாக அரசின் சார்பாக ஒரு ஆலோசனை சொல்லப்
பட்டது. அந்த யோசனை, உடன் வேலை நிறுத்தத்தை
பின்வாங்கிக் கொள்ளுங்கள் உடனடியாக நாளையோ அல்லது
நாளை மறுதினமோ இந்தப் பிரச்னையை ஸ்பெஷல் இன்டஸ்ட்
டிரியல் டிரிபியூனலுக்கு அனுப்புகிறோம். 6 மாதத்தில் இதில்
தீர்ப்புக் கொடுக்கக்கூடிய அதிகாரத்தை அந்த டிரிபியூனலுக்கு
வழங்குகிறோம். ஆனால் 6 மாதத்திற்கு மேல் போகக்கூடாது.
இதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னேன்.
அப்போது திரு. குசேலர் சொன்னார், 115 ரூபாய் இடைக்கால
நிவாரணமாக கொடுத்தால் ஏற்றுக் கொள்ள பரிசீலனை
செய்கிறோம் என்று சொன்னார்.

]திரு. எஸ். இராகவானந்தம்] [1984 பிப்ரவரி 16

இதை ஒரு பிரைமரி இஷ்யூவாக ரெய்ஸ் பண்ணிக்கொண்டு, கன்வின்ஸ் பண்ணலாம் என்று சொன்னபிறகு, நான் 3 தினத்தில் பதில் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்று, நேற்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஸ்பெஷல் இன்டஸ்டிரியல் டிரிபியூனலுக்கு அனுப்புவதை ஏற்றுக் கொள்ள முடியாது. முத்தரப்பு பேச்சு வார்த்தையைத்தான் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி சொல்லியிருக்கிறார்கள். முத்தரப்பு பேச்சு வார்த்தைதான் 14 பிளஸ் 4 என்று 18 முறைகள் நடைபெற்று தோல்வி அடைந்து விட்ட காரணத்தால் இந்த அரசைப் பொறுத்த வரையில், அரசினுடைய கருத்தை இன்றைய தினம் திரு. குசேலர் அவர்களுக்கு கடிதமாக எழுதுவதாக இருக் கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இப்படி பல விவரங்களை நான் சொல்ல இருப்பதால், ஒவ்வொன்றிற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்டநேரம் எடுத்துக் கொண்டு விளக்கம் அளித்தால், இந்த விவாதம் எங்கள் இரண்டு பேருக்கும் இடையே பலமணி நேரம்நடக்கும். அவர்கள் முழு விவரங்களையும் சொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள். நான் அதற்குள் போகவே இல்லை. அரசினுடைய அணுகுமுறையில் இருக்கும்படியான சில நிலைமைகளைத் தான்நான்சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீங்கள் தலைவர்களுடன் எவ்வளவு பேசினாலும் யூனியனுடைய, சங்கத்தினுடைய ஜெனரல் பாடி கூட்டம் தான் இறுதி முடிவு எடுக்க வேண்டும். அப்படி இறுதி முடிவை அந்தச் சங்கம் எடுக்கிறபோது....

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், சிம்சன் சம்பந்தமாக சொல்கிறபோது: அமைச்சர் கொடுத்த தகவல்களில் சில தவறான தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

Misleading the House என்ற வகையில் அதை ஒழுங்குப் பிரச்னையாக எழுப்ப விரும்புகிறேன். அதற்கு அனுமதி அளிக்குமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். திரு. குசேலர் அவர்கள் எந்த ஒப்பந்தமும் போடவில்லை. டிரிபியூனலுக்கு இந்தப் பிரச்னையை அனுப்ப வேண்டும் என்று சொன்னதைத் தவிர, எந்தக் கருத்தையும் அரசு சொல்லவில்லை. இடைக்கால நிவாரணம் என்று சொல்வது அது நூறோ, நூற்றுப் பதினைந்தோ, அல்லது தொண்ணூறோ, எவ்வளவு வேண்டு மானாலும் இருக்கலாம். அது மாதா மாதம் கொடுப்பதாகி விடாது, ஒரு லம்ப் சம் அமௌண்ட் அது. இதிலே அவர்கள் கோருவது (1) 15 பேர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும், (2) டிரிபியூனலுக்கு அனுப்பக்கூடாது, (3) இடைக்கால நிவாரணம் என்று சொல்லக்கூடிய லம்ப் சம் அமௌண்டை அவர்கள் ஏற்றுக் கொள்வதாக இல்லை. ஆகவே நீங்கள் தவறான தகவல்களைச் சொல்கிறீர்கள்.



1984 பிப்ரவரி 16]

(முற்பகல் 10–40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் சொல்வதில் எந்தத் தவறு இருந்தாலும் அது தவறு இல்லை. அது சரியான தகவல் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் என்னிடம் கேட்டது 115 ரூபாய் இடைக்கால நிவாரணம் ஒவ்வொரு மாதமும் தரவேண்டுமென்றும் அப்படி இருந்தால் ஆலோசிக்கிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். இது 12 ஆம் தேதி. இன்றைக்கு வந்து இருக்கிற கடிதத்தின் பிரகாரம் ஸ்பெஷல் இண்டஸ்ட்ரியல் டிரிபியூனல் ஏற்றுக்கொள்ள முடியாது, முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்று எழுதி இருக்கிறார்கள். அதற்கு பதில் நாங்கள் எழுதிக் கொண்டிருக்கிறோம். இன்றைய தினம் அவர்களுக்கு சங்கத்திற்கு அது போய்ச் சேரும்.

திரு. கு. ரமணி : நான் சொல்வதெல்லாம் இந்தமாதிரி கோரிக்கைகள் முழுவதையும் நாம் இங்கேயே விவாதித்து முடிவு எடுப்பது நோக்கம்அல்ல. இந்த அரசினுடைய அணுகுமுறையைப் பற்றிச் சொல்கிறேன். அங்கே இருக்கிற 'சங்கஜெனரல்பாடி' அந்த யூனியன்களுடைய அதிகாரத்தைக் கொண்டு எடுக்கப்படுகிற முடிவுதான் முடிவாக இருக்குமே தவிர டிரிபியூனலுக்கு விட வேண்டும் என்று சொல்வது அரசாங்கத்திற்கு தோன்றுகிற யோசனைமட்டுமே. அவர்களதை ஏற்றுக்கொள்ளவில்லை. இடைக் கால நிவாரணம் வேண்டுமென்று கேட்டார்கள், ஜெனரல் பாடி அதை ஏற்றுக்கொள்ளவில்லை, நீங்கள் சொல்கிற ஸ்டேட்மெண்ட் இது. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று அவர்களைக் கேட்டால்தான்தெரியும். இந்தநிலையில்தொழிலாளர்களின் ஒன்று பட்டசக்தியைத்திரட்டுவதைத் தவிரவேறுவழியே அவர்களுக்குக் கிடையாது. இந்த நிலையில்அரசுஎப்படியாவதுபேசிமுடிவுக்குவர முயற்சித்தால்தான் அவர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். கோர்ட்டிற்குப் போனால் அதனுடைய விளைவு என்ன என்பதை நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம், 1 வருடம், 2 வருடம் அல்ல, பல ஆண்டுகள் இழுத்துக்கொண்டு போகும். அதைச் செய்யக்கூடிய சக்தி இந்த அரசுக்கு இல்லையா? உண்டு.

ஆனால் அதற்குப் பதிலாக முதலமைச்சர் அவர்கள் பகிரங்கமாக அறிக்கைவிட்டு நீங்கள் எல்லாம் வேலைக்குப் போங்கள் என்று சொல்கிறார்கள். இந்தமாதிரி காரியங்களைச் செய்யாமல் இருந்தால் போதும். அவர்களையெல்லாம் கூப்பிட்டு பேசி — 15 பேர்களை விக்டிமைஸ் பண்ணி, வேலை வைத்துப் நீக்கியிருக்கிறவர்களை—அவர்களையெல்லாம் திருப்பி யிலிருந்து எடுத்துக் கொள்ள ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அது உங்களால் முடியும். அதைச் செய்யுங்கள். எத்தனை தரம் வேண்டு மானாலும் பேசித்தான் ஆகவேண்டும், 16 முறைகள் என்று கணக்குச் சொல்வதிலே பிரயோசனம் இல்லை. இந்த பிரச்சி னையை பேசி முடிக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 15 பேர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்ட பிரச்சினை ஏற்கெனவே நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டு விட்டது. ஜாயின்ட் கமிஷனர் ராஜசுப்பிரமணியம் அவர்கள் சொன்ன ஆலோசனையில் தொழில் நீதிமன்றத்திற்கு அது அனுப்பப்பட்டு இருந்தாலும் அங்கேயும் வாதாடலாம், முதலாளியோடு நீங்கள் சுமுகமான ஏற்பாட்டைச் செய்யக்கூடிய முயற்சியிலேயும் ஈடுபடலாம் என்ற ஆலோ சனையை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கு 14 ஆம் தேதி வேலை நிறுத்தம் நடந்தபோது அரசு அந்தப்பிரச்சினையிலே தங்களுக்கு அக்கறை இருப்பதற்காக வந்து இந்த நடவடிக்கை எடுத்ததாகச் சொன் னார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக்கேட்கிறேன். தாங்களுக்கு தொழிலாளர்கள் மீது உண்மையிலேயே அக்கறை இருக்குமானால்—15 பேர் மீது டெக்னிக்கல் ஆக தொழில் கோர்ட்டுக்கு போனது அவர்கள் மீது உண்மையிலேயே அக்கறை இருக்குமானால்—அந்த 15 பேரையும் திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்வதற்கான தைரியம் உங்களுக்கு உண்டா?

மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 15 பேர் பிரச்சினை என்ன என்றால், 15 பேரும் குற்றம் செய்தார்கள் என்று முதலாளியே சார்ஜ் சீட் போட்டு டிஸ்மிஸ் செய்யப்பட்ட வழக்கு அல்ல. 15 பேரில் 3 பேரைத்தவிர 12 பேர் சக தொழிலாளர்களை பேக்டரிக்குள் அடித்து அதற்காக சார்ஜ் சீட் போடப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு முடிக்கப் பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டது. சென்ற வருடம் மார்ச் ஏப்ரல் மாதத்தில் இது செய்யப்பட்டது. அவர்கள் வேறு குற்றம் செய்தார்கள் என்பது அல்ல. முதலாளியே சார்ஜ சீட் போட்டு டிஸ்மிஸ் செய்யப்பட்டது அல்ல. தொழிலாளர்களை அடித்தார்கள் என்பதற்காக விசாரணை நடத்தப்பட்டு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சக தொழிலாளர்கள் அடிவாங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சென்ற வருடம் மார்ச்,ஏப்ரல் மாதத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். தனியாக நடந்த இதை பின்னால் இத்தோடு இணைக்கப்பட்டது. கன்சிலியேஷன் பேய்லூர் ரிப்போர்ட் வந்த பிறகு உடனடியாக ஒரு தீர்வு காண வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இந்த அரசு வழக்கு மன்றத்திற்கு அதை அனுப்பியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற் சங்கத்தில் நீண்டகாலம் அனுபவம் கொண்டவர்கள். முன்பு சேசாயி பேப்பர் நிறுவனத்தில் எப்படி எல்லாம் நடந்தது, என்பதைப் பற்றிய அனுபவம் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகம் கொண்டவர்கள். அவருக்கு தெரியாதா,



முதலாளிகள் தொழிலாளர்களை நீக்கவேண்டும் என்றால் என்ன காரணம் சொல்லி நீக்குவார்கள் என்று. அந்த முதலாளி சொல்லக்கூடிய அந்த சால்ஜாப்பு எல்லாம் உண்மை என்று அவர் ஏற்றுக்கொள்ளுகிறாரா என்றுநான் கேட்கிறேன். முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதும் சரி மற்ற அரசுகள் இருந்தபோதும் சரி இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டபோது சூழ்நிலை எதுவாக இருந்தாலும் தொழிலாளர்களை பழி வாங்கக்கூடாது என்று சொல்லி அந்த மாதிரியான உத்தரவுகளை எல்லாம் ரத்துசெய்து இருக்கிறார்கள். 4½ கோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு அந்த முதலாளிக்கு சொல்வதற்கு உங்களுக்கு தைரியம் உண்டா? (கைதட்டல்.)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தைரியம் என்பது, நானும் ஸ்ட்ராங்காக இருக்கிறேன், சீப் மினிஸ்டரும் ஸ்ட்ராங்காக இருக்கிறார். இந்தப்பிரச்சினையில் முதலாளி ஒரு சார்ஜ் சீட் கொடுத்து அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட வழக்கு அல்ல. சார்ஜ் சீட் எப்படி வருகிறது என்றால், வேலை நடந்துகொண்டி ருக்கும் போது சக தொழிலாளர்கள் அடிக்கப்பட்டு இருக்கி றார்கள். தொழிலாளர்களுக்குள் அடித்துக்கொள்ளுகிறார்கள். போலீஸ் வருகிறது. அமைதியை ஏற்படுத்துகிறது. அடிவாங்கிய தொழிலாளர்கள் கம்பிளைண்டு கொடுக்கிறார்கள். அந்த கம்பிளைண்டு மீது விசாரணை நடந்து குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டு போன வருடம் மார்ச்—ஏப்ரல் மாதத்தில் டிஸ்மிஸ் செய்யப்பட்டு இருக்கிறார்கள். இருந்தாலும் There is no case for reference என்று இந்த அரசு முடிவு எடுத்து வேலை செய்து இருக்க முடியும். Adjudication declined செய்து இருக்க முடியும். ஆனாலும் முதலாளியின் தீர்ப்பை இறுதியான தீர்ப்பாக இருக்கக்கூடாது என்று ஜுடிஷியல் தீர்ப்புதான் நல்ல தீர்ப்பு என்று இந்த அரசு கருதி ஜுடிஷியல்டேசிசனுக்கு அனுப்பியிருக் கிறோம். அப்படி அனுப்பியது பாராட்டக்கூடிய ஒன்றே தவிர கண்டிக்கக்கூடிய ஒன்று அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். (கை தட்டல்.)

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். முதலாளிகள் தொழிற்சங்க தொழி லாளர்களை—கருங்காலிகளை வைத்துக்கொண்டு தாக்குவார்கள். இப்படிப்பழிபோட்டு தொழிலாளர்களைப்பழி வாங்குவது என்பது இந்த 45 வருட அனுபவம். இன்றைக்கு நான் கேட்பது எல்லாம் சிம்சன் முதலாளியிடம், தமிழ்நாடு அரசு, நிலைமைகள் எதுவாக இருந்தாலும் இதை நீண்ட காலத்திற்குக் கொண்டு போகாமல் ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிற வகையில் அதை ரத்து செய்யுங்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த முதலாளியிடம் சொன்னால் அவர் நிச்சயமாக மறுக்கமுடியாது. நீங்கள் அதைச்செய்ய மறுக்கிறீர்கள். அதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு.

[1984 பிப்ரவரி 16

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 2 வகையான தொழிலாளர்கள்
அடிபட்டு இருக்கிறார்கள். அடி வாங்கியவர்கள் கருங்காலிகள்
என்று மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் சொல்வதற்கு நான்
என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாக்
கட்சிக்காரர்களும் அடி வாங்கியிருக்கிறார்கள். அ.இ.அ.தி.மு.க.
வைச் சார்ந்த தொழிலாளர்களும் அடி வாங்கியிருக்கிறார்கள்.
ஒரு வகைத் தொழிலாளர்கள் அடி வாங்கியிருக்கிறார்கள்.
இன்னொரு வகைத்தொழிலாளர்கள் அடித்து இருக்கிறார்கள்.
இது இந்த குற்றச்சாட்டு. இந்த குற்றச்சாட்டை விசாரித்து
டிஸ்மிஸ் செய்து இருக்கிறார்கள். முதலாளி செய்தது சரி என்று
நாங்கள் அப்படியே விட்டுவிடவில்லை That is a salient feature இது
இப்படி இருந்தாலும், நீதிமன்றத்திற்கு போய் உண்மையாக
அடிபட்டு இருக்கிறார்களா என்பதை நிருபிக்கவேண்டும்,
குற்றம் செய்து இருக்கிறார்களா இதை எல்லாம் பார்க்க வேண்டும்
என்பதற்காக அவசரம் அவசரமாக அதைக்கோர்ட்டுக்கு அனுப்பி
யிருக்கிறோம். அது பாராட்டும் செயல் என்று இந்த அரசு
கருதுகிறது. நாடும் கருதும். நானும் நம்புகிறேன்.

(முற்பகல் 10–50)

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு
பாயிண்டுக்கும் இப்படிப் பதில் சொல்ல ஆரம்பித்தால் நாங்கள்
தயார்—இந்த சபையின் நேரம் முழுவதும் இதற்கு ஒதுக்கவேண்டி
யிருக்கும். அது வேண்டாம் என்று கூறிக்கொள்கிறேன். இந்த
கேஸில் கோர்ட்டுக்கு அனுப்பியது மிகப்பெரிய ஜனநாயக தன்மை
என்று நீங்கள் கூறுகிறீர்கள். அதைவிட உயர்ந்த ஜனநாயக முறை
உள்ளது. கோர்ட்டில்இருக்கிற கேஸ்களை நேரில் பேசி முடித்து
வாபஸ் வாங்க முடியும். 2பேரும் சேர்ந்து அதை செய்து இருக்
கலாம். முதலாளிக்குமுன்வைத்து இருக்கக்கூடிய கோரிக்கையில்
இந்த தொழிலாளர்களை திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ள
வேண்டும்என்றகோரிக்கையும்அதில்இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு
நீங்கள் உங்களுடைய அரசாங்கத்தின் செல்வாக்கைத் தொழிலா
ளர்களின்பக்கமிருந்துபயன்படுத்தி, முதலாளிகளிடம்சொல்லி, பேச்சு
வார்த்தை நடத்தித்தீர்க்கவேண்டும். 15பேர்களைஎடுப்பதுபெரிய
காரியமல்ல, 15,000பேர்வேலைபார்க்கும்கம்பெனிஅது. எனவே, இது
முடியாதகாரியமல்ல. ஆகவேதான் சொல்கிறோம். அவர்களுடைய
பிரம்மாண்டமான ஒரு நாள் பொதுவேலை நிறுத்தம் வெற்றியை
நோக்கி வருகிறது என்று தெரிவித்து அதற்கு அனுதாபம் தெரிவித்
தீர்கள். அப்படி அனுதாபம் தெரிவித்ததைத் தப்பு என்று நாங்கள்
சொல்லவில்லை. ஆனால் உண்மையாகவே, அந்தத் தொழிலாளர்
களின் பக்கம் உங்களுக்கு அனுதாபம் இருந்தால், இன்றைக்கே
அந்தத் தலைவர்களை அழைத்துக் கூட்டம் கூட்டி, இந்த 15
பேர்களை எடுக்கும்படியாக நீங்கள் அந்த முதலாளிக்கு
வற்புறுத்திச் சொல்வதற்கு உங்களுடைய செல்வாக்கைப் பயன்
படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்தி ஒப்பந்தத்திற்குக்
கொண்டுவரும் வகையில் நீங்கள் பேச்சு வார்த்தைகளை நடத்த



1984 பிப்ரவரி 16] [திரு. கு. ரமணி]

வேண்டும். ஆனால் நீங்கள் அதைச் செய்யவில்லை என்றால்
நீங்கள் காட்டுகின்ற அனுதாபத்திற்கே அர்த்தமில்லை என்றுதான்
சொல்லவேண்டியிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, எட்டாயிரம் பேர் வேலையிலுள்ள பி அண்ட் சி
கம்பெனி திவாலான விஷயம் உங்களுக்குத் தெரியும். மத்திய
அரசாங்கம் தலையிட்ட காரணத்தால் மறுபடியும் அந்த மில் ஓட
ஆரம்பித்தது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஸ்டாஃபும்,
தொழிலாளர்களும் வெளியேற்றப்பட்டு இன்றைக்கு 8,000 பேர்
கள்தான் அந்தக் கம்பெனியிலே இருக்கிறார்கள். இன்றைக்கு
அந்தக் கம்பெனிகொடுக்கவேண்டியதீபாவளி போனஸ்பணத்தைக்
கொடுக்கவில்லை, தீபாவளிக்கு 50 ரூபாய் கொடுத்திருக்
கிறோம், நீங்கள் கொண்டாடுங்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள்.
அது எப்படி நடக்கும்? ஒரு நாளைக்கு இவ்வளவு உற்பத்தி
செய்ய வேண்டுமென்று இலக்கை நிர்ணயித்து அவர்கள் தலைமேல்
வேலைப் பளுவைத் திணித்திருக்கிறார்கள். இதனால் பல தொழி
லாளர்கள் வேலையை விட்டே ஓடவேண்டிய நெருக்கடியான
நிலைமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள். அந்தத் தொழிலாளர்கள்
தங்களுக்குத் தீபாவளி போனஸ் கொடுக்காததை முன் வைத்துப்
போராடுகிறார்கள். இந்த விஷயத்தில் நீங்கள் தலையிட்டு
அனுதாபத்தோடு உங்கள் செல்வாக்கைச் செலுத்தாமல் இருக்
கிறீர்கள். ஏன் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறீர்கள்? அவர்
களுக்கு அந்தக் காரியத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்.
நீங்கள் சொல்வதை ஏற்காமல் அந்த நிர்வாகம் பிடிவாதம்
காட்டினால், உங்களுடைய நடவடிக்கையினால் பலன் இல்லை
யென்றால், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்போம் என்று
சொல்லுகின்ற நீங்கள் எட்டாயிரம் பேர்கள் வேலை செய்கின்ற
அந்த நிர்வாகத்தை அரசே எடுத்துக் கொண்டால்தான் அது சரி
யான அனுதாபமாகஇருக்கும்

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, இது சம்பந்தமாக அதன் தலைவர்
ஒரு மனுவை முதலமைச்சரிடம் கொண்டு வந்து கொடுத்திருக்
கிறார். ஏற்கனவே மத்திய அரசாங்கம் தலையிட்டுத்தான் ஒரு
நடுவரை நியமித்து, அவர் கொடுத்த தீர்ப்பை மத்திய அரசாங்கம்
பரிசீலனை செய்த பிறகுதான் 12 (3)செட்டில்மென்ட் கையெழுத்
திடப்பட்டது. ஆனால் திரு. அந்தோணி பிள்ளை அதை ரத்து
செய்துவிட்டு சில புதிய யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள்.
அதை வைத்து மத்திய அரசாங்கத்திற்குமாநில அரசாங்கம் கடிதம்
எழுதியிருக்கிறது. அதை அந்தோணி பிள்ளை ஏற்றிருக்கிறார்கள்.
அவரே, டெல்லிக்குச் சென்று அந்தக் கடிதத்தின் மீது நடவடிக்கை
எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாநில அரசின் சார்பில்
முதலமைச்சரவர்களும் மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி
இருக்கிறார்கள். திரு. அந்தோணி பிள்ளை அவர்களின் கோரிக்
கைகளை வைத்து அனுப்பப்பட்டிருக்கிறது.

[1984 பிப்ரவரி 16

திரு. கு. ரமணி: என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் அரசு துரிதமாக ஈடுபட்டால் அந்தத் தொழிலாளர்களுக்குப் பாது காப்பு கிடைக்கும். அதைச் செய்வதற்கு நீங்கள் தயங்குகிறீர்கள். வாயளவில் மட்டுமே அனுதாபம் சொல்லப்படுகிறது என்பதுதான் எங்களுடைய விமர்சனமாகும். நீங்களும் இதுபற்றி விமர்சனம் செய்வதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபணையில்லை.

அம்பத்தூர் வட்டாரம் தொழில்கள் நிறைந்த கேந்திரம் தமிழ் நாட்டில் மிகப் பெரிய நகரமாகிய சென்னையில் அம்பத்தூர் தொழில்கள் நிறைந்த வட்டாரம். கிருஷ்ணாராவ் பாடி ஒர்க்ஸில் 600 தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்தியா போர்ஜ்—இல் 700 தொழிலாளர்களும், எல். போர்ஜ், குரோம்பேட்டையில் 200 தொழிலாளர்களும், கார்த்திக் காட்டன் வார்னிஷ் கம்பெனியில் பல தொழிலாளர்களும், சதர்ன் அலாய்ஸ் பவுண்டரி மாதவரத்தில் 250 தொழிலாளர்களும், ரானே மோட்டார்ஸ் கம்பெனியில் 1000 தொழிலாளர்களும் வேலை யில்லாமல் இருக்கிறார்கள். ஸ்டாண்டர்டு பேட்டரி கம்பெனியில் 240 பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்தியா ஏயர் அண்ட் ஆட்டோ கம்பெனி மூடப்பட்டிருக்கிறது. ஆம் கெஸ்டோ கம்பெனி மூடப்பட்டிருக்கிறது. இந்தியா புராசஸ் கம்பெனி மூடப்பட்டிருக்கிறது. குவாலிட்டி என்ஜினியரிங் கம்பெனி மூடப் பட்டிருப்பதால் 200 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கி றார்கள். இப்படிப்பட்ட முறையில் அந்த வட்டாரம் முழுவதையும் எடுத்துக் கொண்டால் சென்னை நகரத்திலும், சுற்று வட்டாரத் திலும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை யின்றி தெருவில் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இதுபோன்று மாநிலம் முழுவதும் எடுத்துக் கொண்டால் பெயர்களைச் சொல்ல நேரமில்லை. ஆனாலும் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இராணிப்பேட்டையில் சிப்காட்டில், அப்பர் இந்தியா பால்பேரிங், மற்றும் புஷ் கம்பெனி போன்ற கம்பெனியில் வேலை செய்கிற 154பேர்களில்73பேர் ஆட்குறைப்பு செய்யப்பட்டு ஒன்பது மாதங்களாக வேலையில்லாமல் இருக் கிறார்கள்.

அடுத்து தர்மபுரியிலே லாஸ்கோ ஸ்டீல் கம்பெனியிலே கதவடைப்பு நடந்திருக்கின்றது. திருவாரூர் தவிட்டு எண்ணெய்க் கம்பெனி, கோவை ஜனார்த்தனா மில், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், பத்மா மில், பல மாதங்களாகமூடப்பட்டும், ஸ்ரீ ஹரி மில், வசந்தா மில் ஆகியவற்றைப் பொறுத்தவரையில்பாதியும்மூடியாகி விட்டது. இனிமேல் பூராவையும் மூடப்போகின்ற நிலைமை இருக்கின்றது.

அடுத்து ஈரோடு கந்தசாமி மில்லிலே 400 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இன்று அவதிப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



1984 பிப்ரவரி 16] (திரு. கு. ரமணி)

சேலம், சுந்தரம் மில்லிலே பணியாற்றிய 800 பேர் வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பகுதியினர் பெண்கள். அடுத்து மேட்டூர் பியர்ட்ஸ் மில்லிலே பணியாற்றிய 700 பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இம்மாதிரி தமிழகம் முழுவதும் பார்த்தால் பல்லாயிரக்கணக்கான, இட்சக் கணக்கான தொழிலாளர்கள் தெருவிலே நிற்கிறார்கள் வேலை யில்லாமல். நான் இப்போது கொடுத்தது ஒரு சிறு பட்டியல் தான். தமிழகம் முழுவதும் கணக்கெடுத்துப் பார்த்தால் பல்லாயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நகர்ப் புறங்களில் உள்ள நிலைமையோ இப்படி இருக் கின்றது. கிராமப் புறங்களில் உள்ள நிலைமை என்ன, அங்கே என்ன நடக்கின்றது என்பதைப் பற்றியும் பட்டியல் போட்டால் உள்ள நிலைமைகள் பயங்கரமாகத் தெரியும். ஆனால் அந்தப் பட்டியலை இப்போது நான் வைக்கவில்லை.

அடுத்து இந்த அரசாங்கத்தின் கொள்கை எப்படி இருக் கின்றது என்பதைப் புரிந்துகொள்கின்ற வகையில் இன்னும் சில முக்கியமான நடவடிக்கைகள் பற்றி எல்லாம் கூறவே இருக்கின்றன. ஆனால் விவரம் இல்லாமல் உங்கள் மீது குற்றச்சாட்டு கூறினால் அது சரி யாக இருக்காது. கரூர் மில்லிலே போராட்டம் நடக்கின்றது. ஜெயவிலாஸ் மோட்டார் முதலாளி கோர்ட் அவார்டை அமலாக் காமல் இருப்பதன் காரணத்தால் 600 பேர் போராடிக்கொண்டிருக் கிறார்கள். இப்பிரச்சினை ஆரம்பித்து சுமார் ஒன்றரை மாதங்கள் ஆகின்றன. அங்கே முதலாளிகளின் சார்பாக ரவுடீசம் நடக் கின்றது. ரவுடிகளுக்காக உள்ளேயே சாராயத்தை வாங்கிக் கொண்டு போய் கொடுத்து, அந்த ரவுடிகளைக் கூட்டிக்கொண்டு உள்ளே போய் தொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்தவர்களை அடித்து நொறுக்குகின்ற நிலைமை இருக்கின்றது. முதலாளி அருப்புக்கோட்டையிலிருந்து ரவுடிகளை ஆயுதங்களுடன் கொண்டு வந்து தாக்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். அவ்வாறு ரவுடிகளைக் கொண்டுவந்து தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களை அடித்து நொறுக்கி, மிரட்டி 18(1)-ன்கீழ் ஒப்பந்தம் எழுதி முதலாளி அதிலே கையெழுத்து வாங்குகிறார்கள். எனவே தொழில் தகராறு சட்டத்திற்கு எந்தவிதமான மரியாதையும், மதிப்பும் முதலாளி களால் கொடுக்கப்படாத நிலைமைதான் இருக்கிறது. ஆகவே இப்படிச் சட்டங்களை மீறுகின்ற முதலாளிகளை ஏன் கைது செய்து நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அருப்புக்கோட்டை இராமலிங்கா மில்லிலே இருந்து 15 பேர் கோவை சி.ஐ.டி.யு. மாநாட்டிற்கு டாக்டர் லீவு போட்டு வந்தார்கள். அவர்கள் திரும்பி வேலைக்குப் போன உடனே அவர் களுக்கு லீவு கொடுத்த டாக்டரின் மருந்தகத்தை ரவுடிகளை விட்டு அடித்து நொறுக்கி இருக்கிறார் முதலாளி. அந்த டாக்டருக்குப் பாதுகாப்பு இல்லை. தொழிலாளர்களுக்கும் பாது

காப்பு இல்லை. இப்படிப்பட்ட நிலைமையில் நடந்து கொள்கின்ற முதலாளிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசுக்கு சக்தி இல்லை என்றால் அதை நம்ப முடியாது. உங்களுக்கும், அந்த முதலாளிகளுக்கும் இடையிலே உள்ள அதிகப்படியான நெருக்க உறவுதான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கான காரணமாகும். அதனால்தான் இப்போது நிலைமை உச்ச கட்டத்திற்குப் போய் இருக்கின்றது.

அடுத்து சி.ஐ.டி.யு. சங்கச் செயலாளர், தோழர் முத்தப்பனை படுகொலை செய்வதற்காக ரூபாய் 10,000 கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 2000 அட்வான்ஸ் ஆகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சங்கத்தில் உள்ள தொழிலாளர் குடும்பத் தாய்மார்கள் எல்லாம் பயந்து எங்களிடம் வந்து எப்படியாவது படுகொலை நடக்காமல் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னதன் காரணத்தால் நாங்கள் அந்தத் தோழரைப் பாதுகாத்து வைத்திருக்கிறோம். எனவே இப்படிப்பட்ட அந்த முதலாளிகளின் மீது நடவடிக்கை எடுப்பதில் ஏன் தயங்கவேண்டும். கொலைசெய்தால் 302 செக்ஷன்படி நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் கொலை செய்வதற்காக சதி செய்தார்கள் என்ற சட்டப்பிரிவின்படி வழக்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கலாம் அல்லவா? ஏன் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை. இப்படிப்பட்ட கொலைபாதகச் செயல்களுக்காக முதலாளிகள் பணத்தைத் தண்ணீர் போன்று செலவழிக்கிறார்கள். எனவே நீங்கள் தொழிலாளர்களுக்காகக் காட்டக்கூடிய அனுதாபம் எந்த அளவிற்குஉண்மையாக இருக்கின்றது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும்.

எங்கே பார்த்தாலும் போலீஸ் துறையினர் தொழிலாளர்களுக்கு விரோதமாகத்தான் நடவடிக்கைகளை எடுக்கிறார்களே தவிர, முதலாளிகள் மீது நடவடிக்கை எடுப்பதில்லை. அப்படிப்பட்டநிலைமைகள் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே நடக்கின்றது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் அருணாசலம் செட்டியார் என்பவரின் புதிய நிர்வாகம் ஏற்பட்டிருக்கின்றது. நூறு வருடங்களுக்கு மேலாக இருந்து வருகின்றது அந்த ஃபேக்டரி. அங்கே இப்போது பெரும்பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. இவர் அம்பத்தூர் சைக்கிள் ஃபேக்டரியிலே எப்படி நடந்து கொண்டார் என்பது தெரியும், அங்கே இருக்கின்ற தொழிற்சங்கத் தலைவர்களை எல்லாம் உதைத்து நொறுக்க ஏற்பாடு செய்தவர் தான் இவர். இங்கே நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையினைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இருந்த ஒப்பந்தம் காலாவதியான நிலைமையிலே தொழிலாளர்கள் புதிய ஒப்பந்தம் கேட்டபோது முதலாளியே ஒரு ஆள்குறைப்புகோரிக்கையை முன் வைத்து அதன் கீழ் ஒப்பந்தம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்கின்ற உலகத்திலேயே இல்லாத ஒரு அற்புதமான நிலைமை இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த நிலைமையிலே சுப்ரீம் கோர்ட்டிலே போய் கேஸ்போட வேண்டிய நிலைமையைப் பார்க்கிறோம்.



(முற்பகல் 11-00)

நேற்றைக்கு திரு. பாலசுப்பிரமணியம் பேசும்போது, 10 (பி) சட்டம் பற்றிச் சொன்னார். அந்த 10 (பி) சட்டத்தை மார்க்சிஸ்டுகள் எதிர்த்தோம் என்று சொன்னார். ஆமாம், இன்றைக்கும் எதிர்க்கிறோம். அன்று அமைச்சர் சொன்னார், தொழிலாளர்களைக் காப்பதற்காக இந்தச் சட்டம் என்று. நாங்கள் சொன்னோம், தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தைத் தடை செய்கிற சட்டம் என்று. அதுதான் இப்பொழுது சரித்திரத்திலே நடந்து கொண்டிருக்கிறது. கோவை தொழிலாளர்களுடைய 1981 ஆம் வருடத்திய, போனசை 1982 ஆம் ஆண்டு கொடுக்கவில்லையென்று நவம்பர் 11 ஆம் தேதி வேலை நிறுத்தம் செய்வது என்று சகல பேச்சு வார்த்தைகளும் தோல்வி அடைந்த பிறகு, அனைத்துச் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் முடிவெடுத்தார்கள். அவர்கள் ஸ்டிரைக்கே செய்யவில்லை, ஆனால் 9ஆம் தேதியே ஸ்டிரைக் தடை அமுலுக்கு சட்டம் வருகிறது. இன்றைக்கு உங்களை நான் சவால்விட்டு கேட்கிறேன். உங்களுடைய சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தம் இருக்கிறதா என்றுதான் கேட்கிறேன். தொழிலாளர்கள் மீது பாய்ந்தது சட்டம். ஆனால் முதலாளிகள் என்ன செய்கிறார்கள்? தென்னிந்திய மில் முதலாளிகள் சங்கத்தின் நிர்வாகிகள் சொன்னார்களாம், அவர்கள் கோர்ட்டுக்குப் போகட்டும், கோர்ட்டு எங்களுக்கும் ஒரு தீர்ப்பு கொடுக்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் தொழிலாளிக்கு அதிக போனஸ் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை நிறுத்தப்பட வேண்டும். அதற்குத்தான் இந்த ஏற்பாடு, என்று. அந்த முதலாளிகளைக் கூப்பிட்டுப் பேசினீர்கள். தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தத்தைத் தடை செய்தீர்கள்; 10 (பி) சட்டம் அதற்குத்தான் பயன்பட்டிருக்கிறது. அதனுடைய முதல் பலி பஞ்சாலைத் தொழிலாளி என்பதைநீங்கள் மறந்து விடவேண்டாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதே 10 (பி) சட்டத்தை நெல்லிக்குப்பத்தில் உபயோகப்படுத்தி, ஆலை மூடாமல் இருப்பதற்கு உத்தரவிட வேண்டுமென்று சி.ஐ.டி.யு. சங்கம் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றது. ஆனால் சுப்ரீம் கோர்ட்டில் அவர்கள் தீர்ப்பு வாங்குவதற்கு முன்னதாகவே, தமிழக அரசு 10 (பி) சட்டத்தை இன்வோக் பண்ணி, ஆலையை மூடாமல் இருக்க உத்தரவிட்டது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி: நீங்கள் உத்தரவு போடவில்லையென்று நான் சொல்லவில்லை. நாங்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போன பிறகு, நீங்கள் வேறு வழியில்லாமல் உத்தரவு போட்டீர்கள். ஆகவே, சுப்ரீம் கோர்ட்டுக்குப் போன பிறகுநீங்கள்உத்தரவு போட்டீர்கள். ஆனால், இன்றைக்கு நிலைமை அதுவல்ல. நான் நமது தொழிலாளர் நல அமைச்சரைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன், உங்களுக்கு (an iota of sympathy) தொழிலாளர்கள் மீது இருக்குமானால், உங்களுடைய அனுதாபத்தை அந்தத் தொழிலாளர்கள் மீது செலுத்துங்கள். இன்றைக்கு 2,000 தொழிலாளர்களிலே, 1166 பேர்களை வெளியிலே

கரும்பு பிழிகிற வேலையைச் செய்ய வைக்கவும், அங்கே இருக்கிற முதலாளிகள் தொழிற்சங்கத்தை உடைத்து, தொழிற்சங்கத்தை ரௌடித்தனமாகக் கைப்பற்ற, சி.ஐ.டி.யு. சங்கத்தை விக்டிமைஸ் பண்ண நடக்கக்கூடிய போராட்டத்தை நீங்கள் எப்படி ஆதரிக்க முடியும்? ஆனால் ஆதரித்தீர்கள்? அந்த இடம் போலீஸ்காம்ப்பாக மாறிவிட்டது. இந்த நிலை மாற வேண்டும். அவர்களின் கையாட்கள் நாங்கள் முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆரிடம் பேசுவோம். நிறுத்தப்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு எடுக்க ஏற்பாடு செய்கிறோம் என்று பிரச்சாரமும் பண்ணுகிறார்கள். இந்த நிலை எப்படி சரியாகும் என்று நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, அவர்களை அழைத்து வைத்துப் பேசுங்கள்; தொழிலாளர் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசுங்கள். இன்றைக்கும் அதைத்தான் சொல்கிறேன். கருத்து வேற்றுமை இருக்கலாம். தொழிற்சங்கத்தை முடமாக்காதீர்கள். ஆனால் அந்த வேலையைதான் நீங்கள் கையாள்கிறீர்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். பேசி முடிவு காண வேண்டும். ஒரு தொழிலாளி கூட வெளியிலே போகக்கூடாது. ஏற்கனவே முதலாளி ஒப்புக் கொண்டு செய்த ஒப்பந்தத்தில் இருக்கிற ஸ்டிரெந்த்தை வைத்து வேலை நடக்கட்டும். அதை நீங்கள் செய்யவில்லையென்றால் உங்களுடைய அனுதாபம் It is only a lip sympathy என்றுதான் நான் சொல்வேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மதுரை சுகர்ஸ் கம்பெனியை அரசு எடுத்துக் கொண்டது. அதிலே வேலை செய்யக்கூடிய 300 பேர்களுக்கு உங்களுடைய நல்ல அனுதாபம் கிடைத்திருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். நெல்லிக்குப்பத்திலே 2,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 1,166 பேர்கள் வெளியிலே போவதைத் தடுக்க, மதுரை மில்லை எப்படி எடுத்தீர்களோ, அதே மாதிரி, இந்த அருணாசலம் செட்டியாரிடமிருந்து நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை நிர்வாகத்தைச் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும். அதை யாரும் தப்பு என்று சொல்ல மாட்டார்கள். அப்படிச் செய்யாவிட்டால் அதன் அர்த்தம் என்ன தெரியுமா? அங்கே உள்ள சி.ஐ.டி.யு. சங்கத்தையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியையும் ஒழித்துக் கட்டுவது என்ற நிலைமை உள்ளது என்றுதான் வரும். (குறுக்கீடு). சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிற கேஸை எந்த நேரத்திலும் வாபஸ் வாங்கலாம். தொழில் தகராறு சட்டத்தைப் பற்றி அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். முதலாளி, அரசு, தொழிலாளி ஒத்துக் கொண்டால்—ஏன் முதலாளி, தொழிலாளி ஒத்துக்கொண்டாலே, சுப்ரீம் கோர்ட்டிலிருக்கிற கேஸை வாபஸ்வாங்க முடியும். அப்படிப்பட்ட நிலையில்தான் தொழில் தகராறு சட்டத்தின் ஷரத்துக்கள் இருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.

திரு. என். சங்கரய்யா: தற்காலிகத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கேட்கிறார் என்னவென்று; அதற்காகச் சொல்கிறேன். பாண்டிய ராஜபுரம் ஷுகர்ஸ் குறித்து உங்களுடைய கவர்னர் அறிக்கையிலே என்ன சொல்லி இருக்கிறீர்கள் என்றால், மிகுந்த வேதனையைக் கருதி அதிலிருந்த தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக அந்த மில்லை



அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் என்று சொல்லி இருக்கிறீர்கள். ஆயிரம் தொழிலாளர்களின் குடும்பங்கள் பாதிக்கக்கூடிய நெல்லிக்குப்பம் ஆலையில் தொழிலாளர்கள் வேலை இழப்பு ஏற்படும் என்று இருக்கும்போது அந்த ஆலையை ஏன் எடுக்க மறுக்கிறீர்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வழக்கை முதலில் வழக்கு மன்றத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கோரிக்கை வைத்தது சங்கம்தான், நாங்கள் அனுப்பினோம். பிறகு சுப்ரீம் கோர்ட்டிற்கு சங்கம் சென்றது. சுப்ரீம் கோர்ட் கொடுத்த தீர்ப்பு ஸ்பெஷல் இண்டஸ்ட்ரியல் ட்ரிபியூனல் வைத்து நடத்த வேண்டும்; 952 தொழிலாளர்களை வைத்து நடத்த வேண்டும்; ஸ்பெஷல் இண்டஸ்ட்ரியல் ட்ரிபியூனலில் எந்தவகையிலும் தீர்ப்பு கொடுக்கலாம். இது இண்ட்டரீம் ஆர்டர். ஸ்பெஷல் ட்ரிபியூனலை வைத்து மூன்று மாதத்திலே தீர்ப்பு கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை ஏற்று சொன்னது. இண்டஸ்ட்ரியல் ட்ரிபியூனல் 925 தொழிலாளர்கள் இருந்தால் போதும் என்ற தீர்ப்பு கொடுத்திருக்கிறது. இதை எதிர்த்து சி.ஐ.டி.யூ. சங்கம் சுப்ரீம் கோர்ட்டிற்கு சென்று இருக்கிறது. முதலாளிகள் அவர்களும் வாதாடசென்றிருக்கிறார்கள். இந்த நேரத்திலே நாம் அதுபற்றி பேசாமல் இருப்பது தான் நல்லது. ஏனென்றால் சங்கமும் சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய்திருக்கிறதால் இந்தப் பிரச்னையிலே ஒரு முடிவு வந்தபிறகு நிதானமாக பேசலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) இண்டஸ்ட்ரியல் ட்ரிபியூனல் தீர்ப்பு சரியல்ல; 925 பேரை வைத்து நடத்த முடியாது என்று சங்கம் சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய்திருக்கிறது. அது வழக்குமன்றத்திலே இப்போது இருக்கிறது. அதைத் தான் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: அமைச்சர் அவர்கள் சொன்னதில் ஒரு சின்ன கரெக்ஷன். யூனியன் சுப்ரீம் கோர்ட்டிற்கு போனதை குறித்து இண்ட்டரீம் ஆர்டர் அல்ல—அவர்கள் குறிப்பிட்டது. யூனியன் 10 (பி) யூஸ் பண்ணவில்லை என்று சொன்னதற்கு பிறகு 10(பி) போட்டார்கள். 10 (பி) கவர்ன்மெண்ட் போட்ட பிறகு முதலாளிகள் தான் 10(பி)—ஐ எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டிற்கு போய் அந்த டைரக்ஷன் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதிலே ஒரு சின்ன திருத்தம். யூனியன் 10(பி) வேண்டுமென்று போகும்போது மேனேஜ்மெண்ட் தங்களை இம்ப்ளீட் செய்யச் சொன்னார்கள். அந்த இம்ப்ளீட் செய்த பிறகு நடந்த பேச்சுவார்த்தையில் ஒரு சமரசமான முறையிலே சுப்ரீம் கோர்ட் கொடுத்த இடைக்காலம். (குறுக்கீடு). எனக்கு கிடைத்த தகவல் அது. இடைக்கால உத்தரவு 952 தொழிலாளர்களை வைத்து நடத்துங்கள்; ஸ்பெஷல் இண்டஸ்ட்ரியல் ட்ரிபியூனல் நடத்துங்கள்; எப்படி இருந்தாலும் ஸ்பெஷல் இண்டஸ்ட்ரியல் ட்ரிபியூனல் நடத்து

அனுப்பிவிட்டு, பாக்கியிருப்பவர்களை வைத்து, 4,000] டன் வதற்கும், 952 பேரை வைத்து நடத்துவதற்கு கொடுத்த தீர்ப்பு சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு. 925 பேர்களை வைத்துக் கொள்ள வேண்டும் என்பது ஸ்பெஷல் இண்டஸ்ட்ரியல் ட்ரிபியூனல் கொடுத்த தீர்ப்பு. அதை எதிர்த்து சி.ஐ.டி.யூ. இப்போது சுப்ரீம் கோர்ட்டிலே வாதாடிக் கொண்டிருப்பதால், அந்த வழக்குகள் எல்லாம் முடிந்த பிறகு விவாதிக்கலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. உமாநாத்: ஒரு கரெக்‌ஷனிற்காகச் சொல்கிறேன். பிகாஸ் இட் வில் கோ டு பிரஸ்; 10 (பி) நாங்கள் கேட்டுத் தான் சுப்ரீம் கோர்ட்டிற்கு யூனியன் போனது; அதிலே மானேஜ் மென்ட் இம்ப்ளீட் பண்ணினார்கள். அதற்கு ஒரு 10(பி) கவர்ன்மென்ட் ரெஃப்பர் பண்ணி ஆகிவிட்டது. ஆகவே அந்த பெட்டிஷன் மேனேஜ்மென்ட் இம்ப்ளீட் பண்ணியது உள்பட குளோஸ்; ஏனென்றால் நாம் கேட்டது கிடைத்தாகி விட்டது. பிறகு 10(பி)-ஐ எதிர்த்து, கவர்ன்மென்ட் ஆர்டரை எதிர்த்து முதலாளிகள் தனியாக சுப்ரீம் கோர்ட்டிற்குப் போனார்கள். அப்போது நான் முதலாளிகள் போட்ட பெட்டிஷன் பெயரில் தான், பாதி பேரை ரெட்ரன்ஞ் பண்ணியது என்று வந்த தீர்ப்பு எல்லாம். ஆகவே அது எம்ப்ளாயர்ஸ் பெட்டிஷன், எங்களுடைய பெட்டிஷன் அல்ல.

திரு. என். சங்கரய்யா: அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும் இந்தத் தகவல் தெரிவிக்கப்படும். ஆகவே ஏதோ பிரச்னை முடியட்டும் என்பதற்காகச் சொல் கிறேன். நான் அமைச்சரைக் கேட்க விரும்புவது ஆயிரம் தொழிலாளர்கள் நெல்லிக்குப்பம் போன்ற சிறிய இடத்தில் வேலை இழப்பார்கள் என்றால் தென்னாற்காடு மாவட்டத்தின் பொருளாதாரம் மிகவும் பயங்கரமாக பாதிக்கப்படும். அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு, பாண்டியராஜபுரம் ஸுகர்சை அரசாங்கம் எடுத்துக் கொண்டதைப் போல; இங்கே ஒரு தொழில் அமைதியைப் பாது காக்க நீங்கள் முடிவு எடுப்பதில் யார் குறுக்கிடுகிறார்கள்?

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாற்றுத் தலைவர் அவர்களே, முதலிலே எத்தனை தொழிலாளர்கள் அங்கே இருக்கவேண்டும் என்பதை நிர்ணயிக்க வழக்கை நீதி மன்றத்திற்கு அனுப்பவேண்டும் என்று கேட்டது சங்கம். அதை இப்போது அரசாங்கம் அனுப்பியிருக்கிறது. தாமதத் திற்குக்கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கண்டித்து அறிக்கை விட்டு இருக்கிறார்கள். அதை நாம் இப்போது அனுப்பியிருக்கிறோம். அவர்கள் சொன்னதுபோல் உச்சநீதி மன்றம் ஸ்பெஷல் இன்டஸ்டிட்ரியல் டிரிபியூனல் அமைக்கவேண்டும் என்று சொன்னது. அதையும் அரசாங்கம்



செய்தது. அவர்கள் ஒரு தீர்ப்பைக்கொடுத்து இருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட் சென்று இருக் கிறார்கள். அந்த வழக்கு முடியட்டும் என்று தான் சொல் கிறார்கள். 925 தொழிலாளர்களை வைத்துக்கொண்டு தொழிற் சாலையை நடத்த முடியாது என்பது அந்தச் சங்கத்தின் வாதம். 1,902 பேர் இருந்தோம். 925 பேரை வைத்து நடத்த முடியாது என்று வழக்கு மன்றத்தில், சுப்ரீம் கோர்ட்டில் கேஸ் நடக்கிறது. 10ஆம் தேதி கேஸ் நடந்து இருக்க வேண்டும். என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. சுப்ரீம் கோர்ட்டில் கேஸ் இருக்கிறபோது அதைப் பற்றி இங்கே விவாதிக்க வேண்டாம் என்று தான் சொல்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லவில்லை. இந்த நேரத் திலும் அந்தத் தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்துவதை யார் தடுக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அந்தத் தொழிற் சாலையை 925 பேர்களை வைத்துக்கொண்டு நடத்த முடியாது என்று சொல்லி, டிரிபியூனல் கொடுத்த தீர்ப்பை எதிர்த்து சங்கமே வழக்குத் தொடுத்து இருக்கிறது. சங்கம் வழக்குத் தொடுத்து இருப்பதன் மூலம் சுப்ரீம் கோர்ட்டில் பிரச்சினையை தீர்த்துக்கொள்ளலாம் என்பது பொருள். எனவே அந்த முயற்சி முடியட்டும். பிறகு பார்த்துக் கொள்ள லாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு வே. இரா. ஜெயராமன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ரமணி அவர்கள் விரைவில் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும். ஏற்கனவே முக்கால் மணி நேரம் பேசிவிட்டதால், சீக்கிரம் முடிக்கவேண்டும்.

திரு. கு. ரமணி: நான் நேற்றே முக்கால் மணி நேரம் பேசுவதற்கு நேரம் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருந்தேன். குறுக்கீடுகள் இருந்ததால் முடிக்க முடியவில்லை.

தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் சுப்ரீம் கோர்ட்டிற்கு சங்கம் போன தற்குக் காரணம் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்ற காரணத்தால்தான். அரசாங்கம் அந்த மில்லை எடுத்துக் கொள்வதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. எந்த நிமிடமும் எடுத்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட ஒரு முடிவிற்கு அரசு வந்தால், சுப்ரீம் கோர்ட்டில் உள்ள அந்த வழக்கை வாபஸ் பெற வழியிருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். வழக்கு முடியட்டும் என்று சொன்னால் அதற்கு என்ன அர்த்தம்? அதற்கு ஒரே ஒரு அர்த்தம் தான் உண்டு. 2,000 பேரை வைத்து அந்தத் தொழிற்சாலையை நடத்திய முதலாளி 925 பேரை வைத்து வேலை வாங்கட்டும் என்று அந்த முதலாளிக்கு உரிமை கொடுப்பதற்கு ஒப்பாகும்.

இந்த நிலைமை நீடித்தால் தமிழ் நாட்டில் உள்ள பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களை ஒவ்வொரு முதலாளியும் வெளியே தள்ளி தெருவில் நிற்கவைக்கும் நிலைமையேற்படும் என்பதை இந்த அரசாங்கத்திற்கு நான் எச்சரிக்க விரும்புகிறேன். எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை எதிர்த்துப் போராடுவோம்.

அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புகிற விஷயம், குமரி மாவட்ட ரப்பர் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றியதாகும். அவர்களுடைய போராட்டம் வேறு எந்தக் காரணத்திற்காகவும் அல்ல. கொடுத்த டிபார்னஸ் அலவன்ஸை வாபஸ் வாங்கியதை எதிர்த்துத்தான் போராட்டம். அது ஏற்கனவே முதலாளிகள் ஒப்புக்கொண்ட அக்ரிமென்டை மீறியதால் ஏற்பட்டதாகும். முன்பு நாகர்கோவில் விலைவாசி புள்ளியை வைத்து டி.ஏ. கொடுத்தார்கள். தற்போது மெட்ராஸ் புள்ளியை வைத்துத் தான் டி.ஏ. தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதனால் அங்கே போராட்டம் நான்கு மாதகாலமாக நடைபெறுகிறது. அரசு இதிலே என்ன நடவடிக்கை எடுத்தது தெரியுமா? முதலாளிகளுக்கு ஆதரவாக நடவடிக்கை எடுத்து இருக்கிறது. அதனால் முதலாளிகள் தைரியம் அடைந்து இருக்கிறார்கள். ஆகவேதான், ஜாயின்ட் லேபர் கமிஷனர் முதலாளிகள் செய்தது தவறு என்று சொல்லியிருந்தும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். வெறும் அனுதாபம் தொழிலாளர்கள் மீது அரசுக்கு உள்ளது என்று சொன்னால் மட்டும் போதாது, அது காரியாம்சமாக வரவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல் சேலத்தில் இருக்கும் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தை அரசு இன்றைக்கு நடத்திக்கொண்டு இருக்கிறது. அங்கே கல் தயாரிக்கும் வேலை நடக்கிறது. அந்தத் தொழிற் சாலையில் 500 பேரை ஆட்குறைப்பு செய்யவேண்டும் என்று நோக்கம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு யோசனை அரசு மட்டத்தில்கொண்டு வரலாமா? வருவது கூடாது. இருப்பினும் அரசாங்கம் நோட்டீஸ் கொடுத்தார்கள் தொழிலாளர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, வாரத்தில் ஒரு நாளைக்கு வேலை இல்லை. அரசு கம்பெனியில் இப்படிப்பட்ட காரியம் நடைபெறலாமா? இப்படித் தொழிலாளர்களைப் பட்டினி போட்டால் நிலைமை என்ன ஆகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் மாதவரம் பால் பண்ணையில் 1,500 பேர் நீண்ட காலமாக எந்த வேலையும் இல்லாமல் தெருவில் நிற்கிறார்கள். அவர்கள் கேஸை எந்த ஒரு கோர்ட்டுக்கும் அனுப்ப நீங்கள் முயற்சிக்கவில்லை. அதற்குப் பதிலாக இன்றைக்கு அவர்கள் தெருவிலே தள்ளப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் உங்களுடைய ஆளும்கட்சியைச் சேர்ந்த அல்லது உங்கள் ஆதரவு பெற்றவர்களை வேலைக்கு வைத்திருக்கிறீர்கள். அந்த பால் சொசைட்டி





செயல்படுகிற இடங்களில் அடிப்படைச் சம்பளம் 20 ரூபாய் என்று கொடுத்து வேலை செய்கிறார்கள். மற்றவை எல்லாம் அலவன்ஸ் என்ற முறையில் கொடுக்கப்படுகிறது. இது நியாயம்தானா?

இன்றைக்குப் பாதிக்கப்பட்டவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள் உங்கள் நடவடிக்கை தப்பு என்று கோர்ட்டில் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். வழக்கை விசாரித்து, அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பை நீங்கள் மதிப்பீர்களா? அதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா? அந்தத் தீர்ப்பின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் அவர்களை தெருவிலே நிறுத்துவது சரியல்ல. அவர்களைக் கூப்பிட்டுப் பேசுங்கள்; அவர்களைக் கூப்பிட்டு வேலை கொடுங்கள் என்றுதான் நாங்கள் கேட்கிறோம். (மணியடிக்கப் பெற்றது.)

இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நிலைமைகளை புரிந்துகொள்ள வேண்டும். நான் ஒருசில நிலைமைகளைத் தான் முன்வைத்திருக்கிறேன். 1982-ல் நடந்த ஸ்டிரைக், கதவடைப்பு 157. ஆனால் 1983-ல் அது 300 ஆக உயர்ந்தது. 1982-ல் மனித நாள் இழப்பு 18 இலட்சம் 1983-ல் அது 30 இலட்சமாக உயர்ந்தது. வேலையற்று தெருவிலே தள்ளப்பட்டவர்கள் 80,000 பேர்கள். இது இந்துப் பத்திரிகையில் தமிழ் நாட்டிலிருக்கிற தொழில் மற்றும் தொழிலாளர் உறவு என்பதுபற்றி வெளியிடப்பட்ட செய்தி. அவர்கள் அதிலே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள், உற்பத்தி நஷ்டம் 200-லிருந்து 250 கோடியாக உயர்ந்துவிட்டது. சர்க்கார் வரி நஷ்டம் 35 கோடி; தொழிலாளர்களுக்கு சம்பள இழப்பு 3 கோடி. இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருப்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வளவையும் செய்துவிட்டு இன்றைக்கு என்ன பேசுகிறார்கள்? நாங்கள்தான் அற்புதமான தொழிலாளர் நன்மைக்கான காரியங்களைச் செய்துவிட்டோம் என்று பேசுகிறார்கள். இது எப்படி சரியாகும் என்பதை நீங்கள்தான் எண்ணிப்பார்க்க வேண்டும். இதற்கெல்லாம் காரணம் இந்த அரசாங்கத்தின் கொள்கையில் இருக்கும் தவறுதான்.

மேலும் இந்தியா ஒரு நாடு, இந்திய அரசாங்கத்தினுடைய தவறான பொருளாதார, சமூகக் கொள்கையில் இருக்கும் ஆழமான நெருக்கடிதான் உங்களையும் நெருக்கடியில் இழுத்துச் செல்கிறது. அதிலிருந்து நீங்கள் எப்படித் தப்பிக்க முடியும்? அதை எதிர்த்துபோராடாமல் நீங்கள் தப்பிக்க முடியாது. அந்தமாதிரி நிலைமை இருக்கும்போது நீங்கள் எல்லாவற்றையும் செய்துவிட்டோம் என்று மார்தட்டிக்கொள்வது சரியல்ல.

இந்திய நாடு முழுவதும் இருக்கும் மக்கள் தங்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்கள் உட்பட அனைத்து மாநிலங்களிலுள்ள மக்கள், மத்திய அரசின் இந்தத் தவறான கொள்கையை எதிர்த்து வாழவேண்டுமென்று போராடுகின்றார்கள். அந்த இயக்கத்திலே நீங்கள் இணைந்திருந்தீர்கள், ஆனால் இப்போது அதிலிருந்து நீங்கள் விலகி வருகிறீர்கள்: விலகக் கூடாது நீங்களும் சேர்ந்து போராட வேண்டும். அன்றைக்குத்தான் நீங்கள் நெருக்கடியிலிருந்து தப்பிக்க முடியும்.

கைத்தறி நெசவாளர்கள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தீர்கள். ஆனால் அதை அமுல்நடத்த முடியவில்லை. ஒரே சட்டத்தை இரண்டுவிதமாக அமுலாக்கியதால் அதற்கு தடை போடப்பட்டது; இதற்கு யார் பொறுப்பு? இப்போது அந்தச் சட்டத்தின்மீது ஹைகோர்ட்டில் தடை இருக்கிறது. கோர்ட்டுக்குப் போவதற்கு யார் காரணம்? அரசாங்கம் தான் அதற்குக் காரணம்.

கை நெசவாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) ஆனால் அந்தச் சட்டமும் சரியாக அமுல்படுத்தப்படவில்லை. தொழிலாளர்கள் போராடுகிறார்கள் அதை உடனடியாக அமுலாக்க வேண்டும்.

பீடித் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்காவிடில் தினமும் 500 பீடிக்கான கூலி கொடுக்க பாதுகாப்புச் சட்டம் போட்டார்கள். பின்னால் நிலைமை என்ன? திருத்தம் என்ற முறையிலே சில நிபந்தனைகளைப் போட்டார்கள். பீடித் தொழிலாளர்களுக்கு மழை வந்தால் இச்சட்டப்படி ஊதியம கொடுக்க வேண்டியதில்லை ஊரில் கலகம் வந்தால் கொடுக்க வேண்டியதில்லை; உங்களுடைய சட்டம் திருத்தத்தினால் வந்த விளைவு இவை. இவை சரியானஅணுமுறைஅல்ல. தடையின்றி அவர்களுக்கு அந்த பால்பேக் சம்பளம் கொடுக்கப்பட சட்டத்தில் வழி செய்யவும்.

தொழிலாளர்கள் 450 நாட்கள் சர்வீசில் இருந்தால் அவர்களை நிரந்தரமாக்கவேண்டும். ஆனால் முதலாளிகள் அதை இன்னும் அமுல்படுத்தவில்லை. தொழிலாளர்களுக்காக எக்கச்சக்கமான சட்டங்களைப் போட்டுவிட்டோம் என்று திரு. பாலசுப்பிரமணியம் சொன்னார். ஆனால் அந்தச் சட்டங்களின் விளைவு என்ன என்பதை அவர் எண்ணிப்பார்க்கவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் கோர்ட்டுக்குப் போகலாம், டிஸ்மிஸ் ஆனவர்கள் கோர்ட்டுக்குப் போய் கேஸ் போடலாம் என்று இருந்தாலும் இன்றைக்கு அது சாத்தியமாக இல்லை. கோர்ட்டுக்கு வரவிட்டால்தானே அவர் வர முடியும். அதனால் தான் சொல்கிறோம்.



(முற்பகல் 11-20)

உங்களுடைய அரசுக்கும் மேற்கு வங்க அரசுக்கும் அதிக வித்தியாசம்—மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்—2½ இலட்சம் சணல் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்கிறார்கள். அந்த வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்துங்கள் என்று முதன்மந்திரி ஜோதிபாசு உட்பட அவர்கள் கூட்டத்திலேயே பேசி பலப்படுத்துகிறார்கள். இங்கே சிம்சன் போராட்டம் ஒற்றுமைப் போராட்டம்-ஒன்றாகச் சேர்ந்து பொது வேலைநிறுத்தம்—நமது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அந்தக் கூட்டத்திற்குச் சென்று பேசி வேலைநிறுத்தத்தை உறுதியாக நடத்துங்கள்—முதலாளியைப் பணியவையுங்கள் என்று சொல்வதா—பணியவைக்குமாறு நீங்கள் செய்யுங்கள் என்று எங்களிடம் சொல்கிறார். அதை நீங்கள் செய்யுங்கள். நாங்கள் தப்பு சொல்லவில்லை. என்று ஆகவே வெஸ்ட் பெங்கால் நேர்மையான முறையில் சணல் தொழிலை தேசியமயமாக்கவேண்டுமென்று சட்ட மன்றத்திலே ஒரு தீர்மானமாக நிறைவேற்றி மத்திய சர்க்காருக்கு தூது அனுப்பி தேசியமயமாக்கும்படி வற்புறுத்துகிறார்கள். இதுதான் அதனுடைய நடவடிக்கை. அதே மாதிரி 'எஸ்மா, (E.S.M.A.) என்.எஸ்.ஏ. (N.S A.) சட்டங்கள். பற்றியும் அந்தச் சட்டங்களையும் மேற்கு வங்காள அரசு ஏற்றுக் கொள்ளவில்லை அந்தச் சட்டம் வந்த உடனேயே உங்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று நீங்கள் வரவேற்கிறீர்கள். வேலைநிறுத்தத்தில் போலீஸ் தலையீடு அங்கு இல்லை. இருக்குமென்றுநீங்கள் நேற்று ஏதோ பீடி இலையை கப்பலில் ஏற்றும் இடத்தில் கூலி இல்லாமல் தொழிலாளர் வேலை செய்தால்தான், என்று சொன்னீர்கள். கூலி இல்லாமல்வேலை வாங்குகிற இடம் ஒரு நகரத்திற்குள்ளோ அல்லது ஒரு நாட்டிலோநடக்குமா? அதனால் தான் அப்படிப் பட்ட பத்திரிகைச் செய்தியை ஏன் அவர்கள் நம்புகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

1982 ஜனவரி 19-ல் இந்திய நாடு முழுவதும், இந்திய சரித்திரத்திலே, முதலாவதாக தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் தலையீடுஎன்ற ஒரு பிரதான நடவடிக்கை—அகில இந்திய 'ஜெனரல் ஸ்ட்ரைக்' நடைபெற்றது—125 இலட்சம் தொழிலாளர்கள் பங்கெடுத்த அந்த ஜெனரல் ஸ்ட்ரைக்—அந்த ஸ்ட்ரைக்கை நீங்கள் எதிர்த்தீர்கள் அன்றைக்கு தஞ்சையிலே துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி—அதில் 3பேர்கள் உயிரிழந்தார்கள். நான் கேட்கிறேன் தொழிலாளர்கள் மீது—உங்களுக்கு அனுதாபம் உண்டா? சிம்சன் கம்பெனித் தொழிலாளர்களுக்காக 2–4–84 ல் நடந்த பொது வேலை நிறுத்தத்துக்கு நீங்கள் அனுதாபம் தெரிவித்தது நல்லது. அவர்கள் பிரச்சினையைத் தீருங்கள். அதற்கு முன்பு நீங்கள் எதிர்த்தீர்கள் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். ஆகவே உங்களுடைய அந்தக் கண்ணோட்டத்திற்கும் உண்மையிலேயே தொழிலாளர் வர்க்கத்தினுடைய நிலைமைக்கும் சம்பந்தம் இல்லாமல் இன்றைக்கு இருந்து வருகிறது. அப்படிப்பட்ட ஒருபோக்கைத்தான் இந்த அரசு கையாளுகிறது. அதனால் தான் உங்களுடைய நிலை

இங்கே இப்படி வந்தது. மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி இந்திய கம்யூனிஸ்டு கட்சிகளைத் தாக்கும் நோக்கம் உங்களுடைய பிரதான நோக்கமாக உள்ளது காங்கிரஸ் அல்லாத இடதுசாரி அரசாங்கம் மேற்கு வங்காள அரசாங்கத்தைப் பிரதான இலக்கை வைத்து நீங்கள் தாக்குகிறீர்கள். இந்தப் பாதை உங்களுக்கு நிச்சயமாக உபயோகப்படபோவது இல்லை, நீங்கள் பார்லிமெண்டை ஏன் கலைக்கவில்லை என்று கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அவர்கள் எப்படி கலைப்பார்கள். எலெக்ஷன்கூட நடத்துவார்களா என்ற பிரச்சினை இருக்கிறது. பார்லிமெண்டை கலைக்கவேண்டும். நீங்களும் சட்டசபையை கலைக்கவேண்டும். காங்கிரசோடு சேரவேண்டும், மறுபடியும் அதிகாரத்திற்கு வரவேண்டும் என்று சொல்லி அதற்கு வழி பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். காங்கிரசை ஒற்றுமையாக எதிர்த்து நிற்கக் கூடிய அனைத்துக் கட்சிகளும் கை கோர்த்துப் போகிறபோது நீங்களும் கை கோர்த்து வந்தவர்கள். இன்று அதை உதறிவிட்டு, காங்கிரசோடு கை சேர்த்து, பாராளு மன்றத்தைக் கலைத்து. இங்கேயும் கலைத்து, 'இம்மெச்சூர் டிசல்யூஷனுக்கும் தேர்தலுக்கும் நீங்கள் இருக்கிறீர்கள். 5 வருஷம் அதிகாரத்தில் இருக்கப் போகிற நீங்கள் அதையும் விரும்பவில்லை. சமுதாய மாற்றம், மக்களுடைய நன்மை இதை அடிப்படையாகக்கொண்ட கொள்கை உங்களுக்கு இல்லாத நிலைமையில் நீங்கள் காங்கிரஸ் கட்சியோடு, கொள்கையோடு சேர்ந்த உங்களுடைய போக்குதான் உங்களுக்கு ஆபத்தை உண்டாக்கியது. இதை நீங்கள் கைவிட்டு விடுங்கள் கைவிட்டு விடுங்கள் என்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. மு. அப்பாதுரை; மாற்றுத்தலைவர் அவர்களே. மாண்புமிகு கவர்னர் நிகழ்த்திய உரையின் மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு ஆளுநர் உரையில் 'அடுத்தடுத்து இயற்கை இடர் பாடுகள் வந்த போதிலும், மாநிலம் பொருளாதாரம் மற்றும் பிற துறைகளில் அடைந்த நிலையான முன்னேற்றதைக் கோடிட்டுக் காட்டியுள்ளேன். வறுமையை ஒழிக்கவும். வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும், வருங்காலத்தில் அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறியுள்ளேன் என்று முத்தாய் பொறித்திருக்கிறார்கள். இங்கே ஆளுநர் உரையில் நீங்கள் சொல்லியிருக்கிற வறுமையை ஒழிப்பதற்கும், வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் எப்படிப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறியிருக்கிறீர்கள் என்பதை எண்ணிப்பார்க்கிற போது தேர்தல் காலங்களில் நீங்கள் கொடுக்கின்ற அறிவிப்புகளைப் போல, தேர்தலுக்காக உருவாக்கப்பட்ட அறிக்கையோ என்ற சந்தேகம் எனக்கு எழுகின்றது. அப்படிக் கோடிட்டுக் காட்டி இருக்கக் கூடிய வறுமையை ஒழிக்கக்கூடிய, வேலை வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய தமிழகத்தின் மின் துறையாக இருந்தாலும், இன்ன பிற துறைகளாக இருந்தாலும் அவர்களுக்காக நீங்கள் சொல்லியிருக்கின்ற திட்டங்களை நீங்கள் முழுமைகச் செயல்படுத்தியிருக்கிறீர்களா என்று கேட்கிறபோது



அவைகளுக்கெல்லாம் நீங்கள் சொல்கின்ற விடை—நாங்கள் மத்திய அரசாங்கத்தை எதிர்நோக்கியுள்ளோம். ஆகவே மத்திய அரசாங்கம் எங்களுக்கு நிதியாதாரங்களைக் கொடுத்தால் இதையெல்லாம் செயல்படுத்த முடியும் என்று சொல்லியிருக் கிறீர்கள். ஆக நீங்கள் இத்தகைய திட்டங்களை நிறை வேற்றுவதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய தயவையும், தாட்சண்யத்தையும் எதிர்பார்த்து இருக்கிறீர்களேயொழிய, உங்களுடைய சொந்தக் காலால் திட்டங்களை நிறைவேற்று வதற்கு எந்த விதமான ஆக்கபூர்வமான யோசனைகளும் அரசாங்கத்தின் தரப்பில் எடுத்துக் கொள்ளவில்லை என்பதைத் தான் நான் சுட்டிக்காட்டவிரும்புகிறேன். வறுமையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த அரசு முனைப்பாக செயல்பட்டுவருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். வறுமையை ஒழிப்பதற்காக நாங்கள் முனைப்பாக செயல்படுகிறோம் என்று சொல்லிவிட்டு, இன்றைக்கு வறுமையை வளர்க்கக்கூடிய நிலையில் எப்படிப் பட்ட திட்டங்களை நீங்கள் இங்கே தீட்டியிருக்கிறீர்கள் என்பதைத்தான் நான் மெத்த வருத்தத்தோடு இந்த சபைக்கு எடுத்து சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து நம்முடைய தமிழகத்தினுடைய மிகச் சிறப்பான திட்டமாக உங்களுடைய சத்துணவு திட்டத்தைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட திட்டம் தமிழகத்தின் வறுமையை ஒழிக்குமா? இல்லை தமிழகத்தின் வருங் காலத்தை வளப்படுத்துமா என்பதைக் கேட்டால், இல்லை என்பதுதான் என்னுடைய பதில். நாங்கள் சத்துணவுத் திட்டம் வேண்டாம் என்று சொல்லவில்லை. நீங்கள் தர்மங்களைச் செய் யுங்கள். இந்த நாட்டிலே எத்தனையோ மன்னர்கள் தர்ம காரியங் களைச் செய்திருக்கிறார்கள். தர்மகாரியங்கள் எல்லாம் நாட்டில் மனித குலத்தை வாழ வைப்பதாக இல்லை. அப்படிப்பட்ட திட்டத்திற்கு 200 கோடி ரூபாயை நீங்கள் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதேநேரத்தில் இன்றைக்கு நம்முடைய மின் துறையைப் பொறுத்தமட்டில் திட்டக் கமிஷன் 3 சதவீதம் ஆதாயம் கொடுக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறது. ஆனால் நம்முடைய தமிழகத்தினுடைய மின் துறையைப் பொறுத்த மட்டில் உற்பத்தி செலவுக்கே, உற்பத்தி, விநியோகம் போன்ற அடிப்படையான நிர்வாகச் செலவுக்கே போதவில்லை என்பது மட்டுமல்லாமல், அப்படிப்பட்ட காரியத்தைச் செய்வதற்கு நாங்கள் கடன் வாங்கவேண்டியிருக்கிறது என்று அவல நிலைமையை நம்முடைய மின் வாரியம் இங்கே அறிவித்துக் கொண்டிருக்கிறது ஆகவே தமிழகத்தினுடைய தொழில் துறை முன்னேற வேண்டும் என்றால் அதற்கு அடிப்படையாக இருக்கவேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே மின் உற்பத்தியைப் பெருக்க உங்களுடைய ஆட்சிக்கு ஒரு நிலை யான கொள்கை இல்லை என்பதை நான் மெத்த வருத்தத் தோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், ''நம்முடைய ஆளுநர் உரையில் ஒரு முத்தாய்ப்பு வைத்திருக்கிறீர்கள். நம்முடைய சமுதாயத்தை இன்று எதிர்நோக்கியுள்ள மிக முக்கிய பிரச்சினை. தற்போதைய கல்வி முறையில் படித்துவிட்டு வரும் எண்ணற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுதான், அனைத்து நிலைகளிலும் உள்ள பொதுவான கல்விமுறை, வேலை வாய்ப்பு அளிக்க முடியாத அளவிற்கு மனித ஆற்றலை உருவாக்கித் தந்துள்ளது. இவர்களிடையே வளர்ந்து வரும் அதிருப்தி, சமுதாயத்தில் அமைதியின்மையையும், பதட்ட நிலையையும் அதிகமாக்குகின்றன. கல்வியின் அனைத்து நிலைகளிலும் அந்தந்த இடத்திற்கேற்றாற்போல் குறிப்பிட்ட பணிப் பயிற்சி அளிக்கக்கூடிய வகையில், தற்போதைய கல்வி முறையை மாற்றி அமைப்பதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது'' என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இத்தனை ஆண்டுக் காலத்திற்குப் பிறகாவது இந்த அரசு நம்முடைய கல்வி முறை மூலமாக வேலையில்லாத் திண்டாட்டம் வளர்க்கப்பட்டிருக்கிறது, அதன் மூலம் சமுதாயத்திற்கு மிகப் பெரிய சீர்கேடுகள் கொந்தளிப்புகள் வந்திருக்கின்றன என்ற உண்மையை ஒத்துக் கொண்டதற்காக நான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே இன்றைய கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டும் என்று நீங்கள் சொல்கிறபோது, எப்படிப்பட்ட கல்வி முறை கொடுக்க வேண்டும் என்று சொல்கிறபோது தொழில் கல்வி என்று சொல்லியிருக்கிறீர்கள். தொழில் கல்வியின் அடிப்படையில் இன்றைக்கு தமிழகத்தில் அதிகமான பாலிடெக்னிக்குகள், மாவட்டந்தோறும் அதிகமான பாலிடெனிக்குகள் கொடுத்திருக்கிறீர்கள் என்ற வதத்தை நீங்கள் சொல்லலாம். இவைகள் எல்லாம் இன்றைக்கு தனியார்களுக்கு நம்முடைய கிராமங்களில் ஏலம் போடுவது போன்று, நீங்கள் தனியார்களுக்கு இந்த பாலிடெக்னிக்குகளை வழங்கியிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட தனியார் துறை நிறுவனங்களில் கல்வி நிறுவனங்களில், எப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன, முறைகேடுகள் நடைபெறுகின்றன என்பதையெல்லாம் இந்த மன்றத்திலே வாதித்துக்கொண்டுதான் வருகின்றோம். அது மட்டுமல்ல, 'அந்தந்த இடத்திற்கேற்றாற்போல், குறிப்பிட்ட பணிப் பயிற்சி' என்று சொல்லுகிறார்கள். குறிப்பாக நம்முடைய சென்னையைப் பொறுத்தமட்டில் இங்கே அதிகமாக மோட்டார் வாகனங்களுக்காக உற்பத்தி செய்யக்கூடிய ஆலைகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே இந்த நகரத்தில் அதுபோன்ற தொழில் கல்வியைக் கொடுக்கப் போகிறீர்களா? இல்லை, கோவை போன்ற மாநகரங்களில் அங்கே பஞ்சாலைகள் அதிகமாக இருக்கின்றன, அப்படிப்பட்ட தொழில்கல்வி கொடுக்கப் போகிறீர்களா என்று தெளிவான வரைமுறையான அறிவிப்புகள் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே நாம் காணமுடியவில்லை. ஆகவேதான் நாங்கள் சொல்லுகிறோம், இன்றைக்கு இருக்கக்கூடிய கல்விமுறையிலே மாற்றம் வேண்டும் என்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அப்படிப்பட்ட



மாற்றம் தொழிற்கல்வியாக இருக்க வேண்டும் என்று நாங்கள் சொல்லுகின்ற அதேநேரத்தில், இன்றைக்கு நம்முடைய தொழிற்கல்வியைப் பொறுத்தமட்டில் புதிய துறைகளுக்சாக மோட்டார் போன்ற வாகனங்களுக்கான கல்வியாகவும், மற்ற பல தொழில்கல்வியாகவும் இல்லாமல், நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய அடிப்படைத் தொழில்களை, உருவாக்கக்கூடிய கல்வியாக நாம் உருவாக்கவேண்டும். புதிய துறைகளை, குறிப்பாக, ஜியாலஜிகல் டிப்பார்ட்மெண்ட், அப்படிப்பட்ட நில கனிம வளங்களைப் ஆராய்ச்சி செய்யக்கூடிய துறைகளை வளப்படுத்தி, இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய கனிம வளங்களை பயன்படுத்தி, புதிய தொழில்களை உருவாக்கக்கூடிய திட்டகளைக் கொண்டு, கல்வி முறையை உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மதுரை மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம் என்று சொல்லக்கூடிய பகுதியில் இன்றைக்கு மாணிக்கக்கற்கள் கிடைத்துக்கொண்டிருப்பதாக அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. அதன்மூலமாக அப்படிப்பட்ட கனிமங்கள் மூலமாக தமிழகத்தில் புதிய தொழில்களை உருவாக்கக்கூடிய, புதிய தொழிற்சாலைகளை உருவாக்கக்கூடிய அமைப்புகளைக் கொண்டு தொழில் கல்விமுறையை உருவாக்கக் வேண்டும்.

அதேபோல் நம்முடைய தமிழகத்தில் அதிகமாக பனைப் பொருட்கள் கிடைக்கின்றன. அவைகளின் மூலமாக ஃபைபர் உற்பத்தி மூலமாக, இன்றைக்கு பழைய பனை ஆராய்ச்சியின் மூலமாக புதிய தொழில்களைத் தொடங்கக்கூடிய கல்வியைக் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட தொழில் கல்வியை கொடுப்பதன் மூலம்தான் நம்முடைய நாட்டில் சிறிய தொழில்கள் துவங்குவதற்கும், வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்குமான வாய்ப்புகள் ஏற்படும். அப்படிப்பட்ட நிலையை தொழில் கல்வியில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் நம்முடைய அரசாங்கம் எப்படி செயல்படுகிறது என்று சொன்னால், நம்முடைய தமிழகத்தின் முதல்வர் அவர்கள் சொன்னாரே 'தனி உடைமைக் கொடுமைகள் தீர தொண்டு செய்யடா' என்று, அதற்கு மாறாகத்தான் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, தொழில் பயிற்சி நிலையங்களை, தொழில் நிலயங்களை கிராமங்களிலே ஏடுபடுத்தி, அங்கே இருக்கக்கூடிய கிராமத்தார்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளும்படி செய்யவேண்டும். அந்த நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11 30)

இன்றைக்கு தமிழக அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், மாணவர்களுக்கு விரோதமாக, மாணவர்கள் சமுதாயத்திற்கு விரோதமாக எப்படி நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்று பார்த்தால், அதற்கு, சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற மிகக் கொடுமையான, காட்டு மிராண்டித்தனமான, மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத்தான் உதாரணமாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. மு. அப்பாதுரை] 1984 பிப்ரவரி 16

நடராஜன் என்கிற அதில் சம்பந்தப்பட்டிருக்கிற மாணவனைப் பொறுத்த மட்டில், அவர் மருத்துவக் கல்லூரியில் 4 ஆம் ஆண்டு படித்துக் கொண்டு வருகிறார். அந்த மாணவன் தனக்கு ஏற்பட்ட நோய்க்காக சிகிச்சைக்கு மருத்துவ மனைக்கு வருகிறபோது, அங்கே ஏற்பட்ட ஒரு சச்சரவு காரணமாக, ஒரு தகராறு காரணமாக ஒரு ரௌடி ஓடியிருக்கிறார். இந்த மாணவன் அதைப் பார்த்து விட்டு, பக்கத்தில் இருப்பவரிடம் யார் என்று தெரியாமலேயே, ஏன் இந்த ஆள் ஓடுகிறான் என்று கேட்டதற்கு அங்கேயிருந்த, காவல் துறை அதிகாரி, அந்த மாணவனை மிருகத்தனமாக அடித்திருக்கிறார்.

நான் ஒரு பொறுப்புள்ள மருத்துவக் கல்லூரி மாணவன் என்று சொல்லியும் கூட, அந்த மாணவனை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று காட்டு மிராண்டித்தனமாக சட்டையைக் கழற்றச் சொல்லி, பேண்டை கழற்றச் சொல்லி அடித்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் பார்த்த அந்த மருத்துவ மாணவ சமுதாயம் அங்கே இருக்கக்கூடிய தேவர் பெருமான் சிலைக்கு முன்னால் நின்று அமைதியான முறையில் காந்திய வழியில், அகிம்சை முறையில் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். 10 மணிக்கு ஆர். டி. ஓ. வந்து விசாரணை செய்கிறோம் என்று சொல்லிவிட்டு போனார்.

மறுதினம் காலையில், அவர்களுக்கு நீதி கிடைக்காத காரணத்தால், நியாயம் கிடைக்காத காரணத்தால், மருத்துவ மனை வந்து, நாங்கள் தாக்கப்பட்டிருக்கிறோம். வருங்கால மருத்துவர்களாகிய எங்களுக்கு ஆதரவு தாருங்கள் என்று சொல்லி, ராஜாஜி பொது மருத்துவ மனையில் இருக்கக்கூடிய மருத்துவர்களை கேட்டிருக்கிறார்கள். அப்போது ஒரு உயர்ந்த போலீஸ் அதிகாரி-டி. எஸ். பி.— சென்று உங்களையெல்லாம் நாங்கள் கைது செய்திருக்கிறோம் வாருங்கள் என்று சொல்லி, அங்கேயிருந்த 400 மாணவர்களை கைது செய்து அங்கேயிருக்கக் கூடிய போலீஸ் பயிற்சி நிலையத்திற்கு, காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள் அங்கே போய் உங்கள் முகவரிகளைக் கொடுங்கள் என்று கேட்டதற்கு, நாங்கள் தற்போது அரசாங்கத்தினுடைய குழந்தைகளாகத்தான் இருக்கிறோம் ஆகவே மருத்துவ கல்லூரி விடுதி முகவரியைத்தான் கொடுக்க முடியும் என்று சொல்லிய போது, அது தேவையில்லை, உங்களுடைய சொந்த முகவரியைக் கொடுங்கள் என்று கேட்டு, தர மறுத்ததற்கு, ஏற்கெனவே போலீஸ் பாதுகாப்பில் இருந்த அந்த மாணவர்களை மிகக் காட்டு மிராண்டித்தனமாக, ஜாலியன் வாலாபாத் படுகொலை, போன்று, சேலம் சிறையிலே நடைபெற்ற சம்பவம் போன்று, காவல் நிலையத்திலே, கைது செய்யப்பட்டிருந்த மாணவர்களை அடித்திருக்கிறார்கள்....



1984 பிப்ரவரி 16]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக ஜூடிஷியல் என்குயரி போடப்பட்டு, இருக்கிறது. பேசுவது பற்றி ஆட்சேபணை இல்லை ஆனால், ஜூடிஷியல் என்குயரி போடப்பட்டிருப்பதால், அதற்கு பாதகம் இல்லாமல் பேசினால் எல்லோருக்கும் சௌகரியமாக இருக்கும் என்பது என் கருத்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரம் ஆகிவிட்டது சீக்கிரமாக முடித்து விடுங்கள்.

**திரு. மு. அப்பாதுரை:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு விசாரணைக் கமிஷன் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நான் அந்த விசாரணைக் கமிஷனுக்குள்ளே போகவில்லை. நான் இந்தச் சபையில் சொல்ல விரும்புவதெல்லாம், இப்படி கைது செய்யப்பட்டு, காவலிலே இருப்பவர்களை போலீஸ் தாக்குவது என்பது எந்த ஜனநாயக மரபுக்கு உட்பட்டது என்பதுதான் தெரியவில்லை. அதைத்தான் இந்த மன்றத்தின் மூலமாக மக்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

விசாரணைக் கமிஷன் என்று சொல்கிறபோது, எத்தனையோ விசாரணை கமிஷன்களைப் பார்த்திருக்கிறோம். எனக்கு பால் கமிஷன் ஞாபகத்திற்கு வருகிறது. அதைப்போன்ற பல கமிஷன்களின் ரிப்போர்ட்டுகளின் மீது இந்த அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும் ஆகவே, உண்மையான தகவல்களைக் கண்டறிந்து, இங்கே இருக்கக்கூடிய, சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் சென்று அதை விசாரித்து அரசாங்கத்திற்கு என்ன நடந்தது என்பதைத் தெரிவித்தால் வருங்காலத்திலாவது இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுவது தடுக்கப்படும் என்ற நல்ல எண்ணத்தோடு தான், அந்த அடிப்படையில்தான் இந்தத் தகவல்களை எடுத்துச் சொல்லி வந்தேன்.

அது மட்டும் அல்லாமல், நம்முடைய அரசாங்கம் 4வது சம்பள கமிஷன் நியமிப்பது குறித்து அறிவிப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். 3வது சம்பள கமிஷனில் கொடுக்கப் பட்ட சிபாரிசுகளிலேயே பல முரண்பாடுகள் இருக்கின்றன. உதாரணமாக 4 ஆம் தர ஊழியர்கள் என்று சொல்லப்படுகிற இனத்தில் நகர சுத்தி தொழிலாளர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அரசு 4 ஆம் தர ஊழியர்களுக்கு 250 ரூபாய் சம்பளம் என்று அறிவித்து விட்டு, அதே இனத்தைச் சேர்ந்த நகர சுத்தி தொழிலாளர்களுக்கு 200 ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. இத்தகைய சீர்கேடுகளைப் போக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல், 4வது சம்பள கமிஷனில் அரசு ஊழியர்களுடைய சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

அடுத்தப்படியாக நம்முடைய கவர்னர் உரையில் நீங்கள் எடுத்துச் சொல்லியிருப்பது நாங்கள் வறுமையை ஒழிப்போம். வறுமையை ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்டு இந்த அரசு முனைப்பாக செயல்படுகிறது என்று சொல்லியிருக்கிறீர்கள், வறுமையை ஒழிப்பதற்காக வீட்டுக்கு ஒருவருக்கு வேலை திட்டம் என்ற திட்டத்தை கடந்த காலத்திலே அறிவித்தீர்கள். அந்த அறிவிப்பின் அடிப்படையில் எத்தனை பேர்களுக்கு வேலை கொடுத்தீர்கள் என்ற புள்ளி விவரங்களைக் கொடுத்து இருக்கிறீர்கள். அந்த புள்ளி விவரங்களைப் பொறுத்தவரையில் ஊராட்சி ஒன்றியங்களிலே, கிராமப்புறங்களிலே தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக வைரிங் பண்ணும் வேலையைச் செய்வதற்கு, எலக்ட்ரிக்கல் வேலை செய்வதற்கு, ரீவைண்டிங் வேலை செய்வதற்கு, தாய்மார்களைப் பொறுத்தவரையில் தட்டெழுத்துப் பயிற்சி, தையல் பயிற்சி பெறுவதற்கு என்று இப்படிப்பட்ட வேலைகளுக்கு 6 மாத காலம் 200 ரூபாய் உதவித் தொகை கொடுத்து பயிற்சி அளித்துவிட்டு அவர்களையெல்லாம் வீட்டுக்கு அனுப்பிவிட்டு இருக்கிறீர்கள். அந்த புள்ளி விவரத்தைத்தான் இதிலே சொல்லியிருக்கிறீர்கள். வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டம் என்ற அடிப்படையில் நீண்ட புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் அந்த மாணவர்களுக்கு அந்த இளைஞர்களுக்கு எல்லாம் நிலையான வேலைவாய்ப்பைக் கொடுத்திருக்கிறீர்களா என்று கேட்டால் இல்லை, வறுமையை ஒழிப்பதற்காக வேலை வாய்ப்புக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிற நீங்கள் இந்த அரசாங்கம் தமிழகத்திலே உள்ள பல்வேறு தொழிற்சாலைகளிலே பணிபுரிகின்ற —அதாவது கம்பெனிச் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் தமிழகத்தில் 7 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அந்த 7 லட்சம் தொழிலாளர்களில்—தமிழக அரசாங்கத்தினுடைய தவறான தொழிலாளர் விரோதக் கொள்கையின் மூலம்—1 லட்சம் பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பெற்றிருக்கிறார்கள். சிம்சனிலே பணியாற்றுகிறவர்கள், இந்தியா போர்ஜ் போன்ற பல்வேறு தொழிற்சாலைகளிலே பணியாற்றுகின்றவர்கள் தமிழக அரசாங்கத்தினுடைய தவறான பொருளாதார கொள்கையால், தவறான தொழிலாளர் விரோதக் கொள்கையால் வேலையை இழந்திருக்கிறார்கள். இதுதான் உங்களுடைய வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின் நோக்கமா? அது மட்டுமல்ல, தமிழகத்திலே உள்ள தொழில் முதலாளிகள் இந்த அரசாங்கத்தினுடைய தவறான தொழிலாளர் விரோத கொள்கையை கையகப்படுத்தி இந்த நாட்டை எப்படியெல்லாம் ஏமாற்றுகிறார்கள் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு உதாரணத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

சிங்கர் டி. வி. எஸ். நிறுவனம் இருக்கிறது, அந்த நிறுவனம் சிங்கர் தையல் மெஷின்களை உற்பத்தி செய்வது. அங்கே பணியாற்றுகின்ற ஆயிரம் தொழிலாளர்களும் நிரந்தரமான தொழிலாளர்கள். அவர்கள் அங்கு 20 ஆண்டுக்காலமாக



பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். அந்த நிர்வாகம் அந்த தொழிற்சாலையை மூடிவிட்டு அரசாங்கத்திடமிருந்து மானியத்தைப் பெறுவதற்காக, அரசாங்கத்திடமிருந்து சலுகைகளைப் பெறுவதற்காக தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஹோசூர் என்ற ஊரில், தொழிலில் பின்தங்கிய அந்த இடத்தில் அதே இயந்திரங்களைக் கொண்டு அதே தொழிற்சாலையைத் துவங்கியிருக்கிறார்கள். ஆனால் அந்தத் தொழிற்சாலையிலே பணிபுரியக் கூடிய தொழிலாளர்களுக்கு 6 ரூபாய், 8 ரூபாய் என்று தினக்கூலி கொடுக்கப்படுகிறது. இந்த நிலையில் அந்த தொழிற்சாலையை அங்கே நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். நான் தொழிலாளர் நல அமைச்சரைக் கேட்க விரும்புகிறேன், 20 ஆண்டுக்காலமாக பணியிலிருந்த தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கிக் கொண்டு நிரந்தரமாகப் பணியாற்றிய தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு இப்போது தினக்கூலி 6 ரூபாய், 8 ரூபாய் என்று கொடுத்து அந்தத் தொழிற்சாலையை அங்கே நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்றால் இதுதான் வறுமையைப் போக்கக்கூடிய கைங்கரியமா?

(முற்பகல் 11–40)

அரசாங்கத்தினுடைய இந்த கொள்கை அறிவிப்பில் தமிழக அரசு பணியாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் தரப்படும் என்று சொல்லப்பட்டிருப்பதாக உங்களை ஆதரிக்கக் கூடிய பத்திரிக்கைகள் மிகப் பெரிய விளம்பரங்களைச் செய்கிறார்கள். இது எவ்வளவு பெரிய மோசடி. கொடுக்கக் கூடிய ரூபாய் 5 ஆயிரம் தான். இன்னும் 5 ஆயிரம் ரூபாயை அரசுப் பணியாளர்கள் ஒவ்வொருவரும் மாதம் 20 ரூபாய் வீதம் கொடுக்கிற முறையிலே அவர்களுடைய சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்றும் அதன்மூலமாக வட்டியும் முதலுமாக 5 ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்றும் சொல்லப்படுகிறது. அப்படி வட்டியும் முதலுமாக 5 ஆயிரம் ரூபாய் வரும்வரை பிடித்தம் செய்யப்படும் என்றும் ரிடையர் ஆகிறபோது அதோடு சேர்த்து 5 ஆயிரம் ரூபாய் கொடுப்போம் என்று சொல்கிறீர்கள். அரசாங்கம் என்ன வட்டிக்கடை நடத்துகிறதா? அரசுப் பணியாளர்கள் என்ன கோரிக்கை வைத்திருக்கிறார்கள்? அவர்கள் இறந்துவிட்டால் 10 ஆயிரம் கொடுக்கிறார்கள், அந்தத் தொகையை அவர்கள் பதவியிலிருந்து ஓய்வுபெறுகிறபோது கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் வட்டிக்கடை போன்று மாதம் 20 ரூபாய் சீட்டுப் பிடித்துக்கொண்டு 5 ஆயிரம் ரூபாய் வரை பிடித்தம் செய்து 5000 ரூபாய் அதோடு கொடுக்கிறோம் என்று நீங்கள் சொல்கிறீர்கள். உதாரணத்திற்கு நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு அரசுப் பணியாளர் 20வது வயதில் அரசுப் பணியில் அமர்த்தப்படுகிறார் என்றால் உங்களுடைய கணக்குப் பிரகாரம், 15 ஆண்டுக் காலத்திலே அவர் 5 ஆயிரம் செலுத்திவிடுகிறார். இன்னும் 15 ஆண்டுக்காலம்

அவர் வேலையில் இருப்பார். அந்த இன்னும் 15 ஆண்டுக் காலத்திலே 20 ரூபாய் வீதம் பிடிக்கப்படுமா? அல்லது ஏற்கனவே அவர் செலுத்தியதை திருப்பிக் கொடுத்துவிடுவீர்களா? அதே தொகையை அவர் கூட்டுறவு வங்கியிலே பிக்சட் டெபாசிட்டிலே போட்டு வைத்தால் அவருக்கு 30 ஆயிரம் ரூபாய் கிடைத்துவிடும். ஆகவே வட்டிக்கடை நடத்துவது போன்று அரசாங்கம் இருக்கக்கூடாது. அதைப்பற்றித் தெளிவாக இந்த உரையிலே சொல்லப்படவில்லை. அதைச் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இன்றைக்கு நம்முடைய தமிழகத்தினுடைய ...... (மணியடிக்கப் பெற்றது.)

திரு. வே. இரா. ஜெயராமன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். தமிழகத்தில் இயற்கைச் சீற்றத்தின் விளைவாக ஏற்பட்ட வறட்சியின்போது தமிழக அரசு சீரிய பணிகளைப் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றிக்கொண்டு வந்திருக்கிறது. அதற்கடுத்தப்படியாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போதும் வெள்ள சேதங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நேரடியாகச் சென்று பார்த்து, செய்யவேண்டிய நிவாரணப் பணிகளை செய்து கொடுத்தார்கள். இந்த நிவாரணப் பணிகளுக்காக 114·28 கோடி ரூபாய் செலவில் நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற தொழிலாளர்களுக்கு இலவசமாக சேலை. வேட்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகளை பார்வையிடச் சென்ற மைய்க் குழு அவைகளைப் பார்வையிட்ட நேரத்திலே அந்த நிதியை தமிழக அரசுக்கு ஒதுக்குவதின் மூலமாக ஏற்கெனவே செலவழித்ததை ஈடுகட்ட முடியும். அதன் மூலம் அதிகமான அளவுக்கு ரிசர்வ் வங்கியில் அதிக நிதிச் சுமையை ஏற்படுத்தாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் காலம் கடந்து வந்த பருவமழையின் காரணமாக ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய 464 லட்சம் வேளாண்மைத்துறை மூலமாக உரம், விதை, பூச்சி மருந்து இவைகள் கொடுக்கப்பட்டு இருக்கிறது. மின்சார பற்றாக்குறையை போக்கும் பொருட்டு நாள் ஒன்றுக்கு 12 மணி நேரம் தொடர்ந்து மின்சாரம், மின்சார பம்புசெட்டுக்களுக்கு கொடுக்கப்பட்டு இருப்பது மின்சார துறை வாயிலாக அங்கே நமக்கு நல்ல பல பயன் தரத்தக்க அளவுக்கு இந்த வறட்சியான நேரத்தில், மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்ற நேரத்தில், தொடர்ந்து மின்சாரம் அளிப்பது பாராட்டக்கூடிய ஒன்றாகும்.



(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

சத்துணவுத் திட்டத்தைப் பற்றி இங்கே நேற்றைய தினம் பேசும்போது அருமை சகோதரர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு குறை கூறினார்கள். அவர்களுக்கு நான் கூறிக்கொள்கிறேன் இந்த சத்துணவு திட்டத்தைப் பற்றி காந்தி கிராமத்தில் இருக்கின்ற கிராமிய பல்கலைக்கழகம் ஒரு ஆய்வு நடத்தி இருக்கிறது. அந்த ஆய்வில் இந்த சத்துணவு சாப்பிடுகின்ற குழந்தைகளுக்கு காச நோய் வருவது இல்லை என்று அவர்கள் கண்டு பிடித்து இருக்கிறார்கள்.

அதைப் போலவே, அவினாசியிலே உள்ள மனையியல் கல்லூரி நடத்திய ஒரு ஆய்வில் உடல் நலத்திலே முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவதாக அறிவித்திருக்கிறது நொண்டி நடக்கிறானா என்றுகேட்டவர்களுக்கு இதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். உடல்பலு இல்லாதவர்கள் உடல் பலு பெற்று அவர்கள் நடக்கின்ற அந்த நிலையை எய்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பி. நடராஜன் அவர்கள், 'Philosophy of Free Nutritious Scheme, என்கின்ற ஒரு கட்டுரையிலே சத்துணவு பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

........"all leading to a social restructuring of the society which really is the secret of lasting developments,

நீண்ட நெடும் நிரந்தர வளர்ச்சிக்கு இந்த அடிப்படைச் சமூக மாற்றத்திற்குக் காரணமாக இருக்கும் இந்தத் திட்டத்தை அவர்கள் பாராட்டியிருப்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

அடுத்து, மிக அதிகமான நிலுவை இருந்தும், விவசாயப் பணிக் கூட்டுறவு சங்கங்கள் 1983—ம் ஆண்டு டிசம்பர் வரை 58 கோடி ரூபாய் அளவிற்குப் பயிர் கடன்கள் வழங்கப்பட்டு இருப்பதை விவசாயிகள் வரவேற்கிறார்கள். 1984—85—ஆம் ஆண்டில் 95 லட்சம் மெட்ரிக் டன் அளவு உணவு தானியங்களை உற்பத்தி செய்ய இலக்கை நிர்ணயித்து இருக்கிறது. ஒரு ஹெக்டேருக்கு 5 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி என்ற முனைப்போடு செயல்படும் முயற்சி எடுக்கப்பட இருக்கிறது.

நெல்லுக்கு மட்டும் பயிர்ப் பாதுகாப்பு என்று இருந்த நிலைமையை மாற்றி அனைத்துப் பயிர்களுக்கும் அந்தப் பயிர்க் காப்புறுதித் திட்டத்தை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளது பாராட்டத் தக்கது.

பாசனத்தைப் பொறுத்தவரையில் 189 கோடி ரூபாய்க்கு அனுமதிக்கப்பட்டிருக்க, திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் 80 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் 55 கோடி ரூபாயும் அடுத்த ஆண்டில் 60 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளமைக்காக நான் தமிழக அரசைப் பாராட்டுகிறேன்.

நீர்ப்பாசன அமைப்புகளை நிரந்தரமாக ஏற்படுத்துகின்ற வகையிலே ஐரோப்பிய பொருளாதாரக் குழுவிடமிருந்து 25 கோடி ரூபாய் மானியம் பெறுவதில் வெற்றி கண்டிருக்கிறது. அதன் மூலம் ஏற்படுத்தப்படும் புதிய பாசனத் திட்டங்கள் புத்துயிர் பெறும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நல்ல காரியங்களிலே என்னுடைய தொகுதியில் இருக்கின்ற செண்பகா நதி திட்டத்தையும், வைகை அணையில் துப்புரவு அணை கட்டி, இடது புற கால்வாயை வெட்டுகின்ற பணியினையும், அரசின் ஆய்விலுள்ள பதினெட்டாம் கால்வாய்த் திட்டத்தினையும், அல்லி நகரம் கிராமத்திலுள்ள வீரப்பயனார் அணைத் திட்டத்தையும் உடனடியாக ஆய்வு செய்து நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீரைப் பொறுத்தவரையில், 1985 மார்ச் இறுதிக்குள் 18,167 குடியிருப்புப் பகுதிகளில் குடிநீர் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. உலக வங்கியின் நிதிவிதவியுடன் மூன்று பெருநகரங்களுக்கும், ஏனைய 75 நகரங்களுக்கும், 740 கிராமக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டங்களும், 14 நகராட்சிகளுக்குக் குறைந்த செலவில் துப்புரவு வசதி அளிக்கும் திட்டமும் மேற்கொள்ளப் பட இருக்கிறது. 149.42 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயலாக்கப்படவிருக்கிறது. இந்தத் திட்டங்களை உடனடியாகத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் குடிநீர்ப் பற்றாக் குறையால் பாதிக்கப்பட்டும் வறட்சியால் பாதிக்கப்பட்டும் உள்ள அந்தப் பகுதிகளிலே கூட்டுக் குடிநீர் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். என் பகுதியிலுள்ள சின்னவேலாபுரம், முத்துலாபுரம், வரிசப்ப நாயக்கனூர், கன்னி சேர்வைப்பட்டி, ஒடைப்பட்டி, வெள்ளையம்மாள்புரம் போன்ற ஊர்களை ஒருங்கிணைத்து அருகில் செல்லுகின்ற நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வருகின்ற முறையில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், நீண்ட நெடுங்காலமாக அரசியல் கட்சிகளாலும் மற்றும் பொது மக்களாலும் பேசப்பட்டு வந்த அந்த மாவட்ட நிர்வாகத்தை இன்றைய தினம் எட்டு மாவட்டங்களைப் பிரித்திருக்கின்ற செயல் பாராட்டத் தக்கது.



இந்த நல்ல நேரத்திலே, ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பதைப் போல, ஏட்டுப் படிப்பை விட்டு விட்டு, வேலைக்குச் செல்ல வைக்கின்ற முறையில் தொழிற் கல்வித் திட்டத்தைத் துவங்குகின்ற அந்தப் புதிய புரட்சிகரமான செயலைப் புரட்சித் தலைவர் அரசு செய்கிறது. இந்தியாவிலேயே முதன் முதலாகக் கல்வி முன்னேற்றத்தைச் செய்கின்ற புரட்சித் தலைவரவர்களின் திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

அடுத்து, தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் இங்கே துவக்கப்பட்ட காகிதத் தொழிற்சாலை, அமைக்கப்பட்டு வருகின்ற திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் வரிக் கட்டுப்பாடற்ற வணிக மண்டலம் ஏற்படுத்துதல் ஆகியவை தமிழக அரசினுடைய தொழில் முனைப்பிற்கு முக்கியமான எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

எங்கள் பகுதியில் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்ற மாவடி உச்சிக்காடு வனத்துறையைச் சார்ந்த பகுதியில் ஏழைகளுக்குப்பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சின்னவேலாபுரம் என்ற இடத்தில் மேய்ச்சல் தரையாக இருக்கின்ற பகுதியில் தொன்று தொட்டு இருந்து வருகின்ற விவசாயிகளுக்கு அவற்றைப் பட்டா போட்டு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் தொகையைப் பொறுத்தவரையில் குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டத்திலே இந்தியாவிலேயே தமிழகம் தலை சிறந்து விளங்குகின்ற நிலைமையை எட்டியிருக்கிறது. அதை ந பாராட்டுகிறேன்.

வீடுகள் கட்டுவதற்கு ஒவ்வொரு வீட்டுக்கும் 4000 ரூபாய் என்று இருந்ததை 6000 ரூபாய் என்று உயர்த்திருப்பதும் பாராட்டத் தகுந்தது.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் புதிய மாவட்டங்களை ஏற்படுத்தும் பாழுது, திண்டுக்கல் மாவட்டத்திற்கு அண்ணா மாவட்டம் என்று பெயரிட்டிருப்பது சாலப் பொருத்தமாகும்.

(முற்பகல் 11–50)

ஆனால் அவ்வாறு அண்ணா மாவட்டம் என்ற பெயரை செங்கற்பட்டு மாவட்டத்திற்கு மாற்ற வேண்டும் என்று கேட்கிறார்கள். அவ்வாறில்லாமல் திண்டுக்கல் மாவட்டமே அண்ணா மாவட்டமாக நின்று நிலை பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பெயரை வேறு எந்த மாவட்டத்திற்கும் மாற்றக் கூடாது என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதிகம் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். விவசாயிகள் மத்தியிலே ஏன் இரண்டு வகைப்பட்டவர்களை ஏற்படுத்துகிறீர்கள்? எந்த இடத்திலும் விவசாயிகளுக்குக் கஷ்டமான நிலைமை உண்டு. குறிப்பாக, எங்கள் மாவட்டம் முழுவதும் மழைத் தண்ணீரை நம்பி இருக்கிறது. உரிய காலத்தில் கரண்ட் கொடுக்கப்படுவதில்லை. கொடுக்கின்ற கரண்டும் இரவிலே கொடுக்கப்படுகிறது. பம்ப் போட்டால் கரண்ட் கிடைப்பதில்லை சரி என்று டீசலுக்கு மாற்றினால் டீசல் கிடைப்பதில்லை. டீசல் கிடைத்தால், விலை அதிகமாகிறது, இப்படிப் பார்த்தால், எப்படியாவது செலவு அதிகமாகிறது. வட ஆற்காடு போன்ற மாவட்டங்களிலும் அதே நிலைமை தான் இருக்கிறது. ஆகவே ஏகபோக கொள்முதல் இருக்கிற இடத்தில் மட்டும் அந்த விவசாயிகளுக்குச் சலுகை காண்பிப்பது சரியல்ல, பாரபட்சம் காட்டுவது சரியல்ல. எல்லா விவசாயிகளுக்கும் எங்கு கொள் முதல் செய்தாலும் அந்த விலை கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே தமிழ் நாட்டிலே உள்ள சட்டம் ஒழுங்கு பற்றி குறிப்பிடப்படவில்லை. ஆகவே, அதை நான் சொல்ல வேண்டிய நிர்பந்தம் இருக்கிறது. சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் முகமூடிக் கொள்ளையர்கள் கடந்த 15 நாட்களாக அதிக அளவு கொள்ளையடிக்க ஆரம்பித்துள்ளார்கள். என் தொகுதியிலே, எனது ஊரிலும் பக்கத்தில்இரண்டு ஊர்களிலும் கொள்ளைகள் நடந்திருக்கின்றன. அந்த அளவுக்கு அது பரவி வருகின்றது. ஆகவே இப்போக்கை தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்க வேண்டும் பாகனேரி என்ற ஊரில் 70 கிலோ எடையுள்ள பிள்ளையாரைத் தூக்கிக் கொண்டு போயிருக்கிறார்கள். என் ஊரிலே இருந்து 4—வது மைலிலே காளையார் மங்கலத்தில் பல சிலைகள் திருடப்பட்டிருக்கின்றன. அதற்கடுத்து, 3, 4 தினங்களுக்கு முன்னால், ஒரு செட்டியார் வீட்டிலே—செட்டியார் என்றால் அவர் பணக்காரர் கூட அல்ல—அத்தனை கதவுகளையும் உடைத்து, அந்த வீட்டிலிருந்து குழந்தைகள் பெரியவர்கள் அனைவரையும் காயப்படுத்தி, அந்த வீட்டையே, சூறையாடியிருக்கிறார்கள். இது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. அரசாங்கம் இதைக்கவனித்து சென்னையில் மட்டும் கொள்ளை நடக்கிறது என்றில்லாமல், எல்லா இடங்களிலும் இருக்கிறது என்று பார்த்து அதைத் தடுத்து நிறுத்துவதற்கு தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு ஆர்கனைஸ்ட் குரூப்பே செயல்படுகிறமாதிரி தெரிகிற காரணத்தால், அதனைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

2,170 துளைக் கிணறுகள் போடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது, மகிழ்ச்சி. ஆனால், இன்னும் பல ஊர்களில் குடிநீர் கஷ்டம் இருப்பதை நன்கு பார்க்க முடியும். குறிப்பாக, அரசாங்க இலாக்காக்களிலே—அவர்கள் ஸ்தாபனங்களிலே ட்வாட்தான் இந்த வேலையைச் செய்வதாக நினை



கிறோம். அவர்களுக்கும் ஏனைய இலாகா அதிகாரிகளுக்கும் இணைந்த கூட்டுறவு மனப்பான்மை செயல் திறமை இருப்பதாகத் தெரியவில்லை. தேவையில்லாத இடங்களுக்கு அனுப்பச் சொல்கிறார்கள், போடுகிறார்கள். ஆனால் எங்கு உண்மையாகத் தேவையோ, அங்கே போடுவதில்லை. உதாரணமாக, அதப்படக்கி பஞ்சாயத்திலே பல பெரிய கிராமங்களியிருக்கின்றன. ஒரே ஊரிலே தான் அடிபம்பு போடப்பட்டிருக்கிறது. இத்தனை வறட்சி நிவாரணப் பணிகள், இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட வறட்சிக்காக நிறைவேற்றப்பட்டும், தொடர்ந்து பல ஆண்டுகள் எங்களுக்குப் பல இடங்களில் நிறைவேற்றப்படவில்லை. அதனால், பல ஊர்களில் பல மைல்கள் தூரம் சென்று கூட தண்ணீர் எடுக்கக் கூடிய அவல நிலையிருக்கிறது. தேவை உள்ள இடத்திற்குப் பம்ப் போடவில்லை. தேவை இல்லாத இடத்தில் போடப்பட்டிருக்கிறது. சிலந்தகுடி என்ற இடத்தில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு பம்புகள் போடப்பட்டிருக்கிறது. 30 அடித் தூரத்திற்குள்ளேயே இரண்டு பம்புகள் தேவையில்லாமல் போட்டிருக்கிறார்கள். ஏன் இதைச் சொல்கிறேன். என்றால், எந்தவிதமான இணைந்த செயல் திட்டமும் இல்லை என்று குறிப்பிடுவதற்காகத் தான் இதைச் சொல்கிறேன். ஆகவே, குடிநீர் வாரியத்தை ஒழுங்குப்படுத்த வேண்டியது மிகமிக அவசியம்.

இன்னொன்று சிவகங்கைக்கு, பக்கத்திலே கிராபைட் என்ற மூலப்பொருள் உண்டு. சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே அதற்குப் போதிய அளவு தொகை ஒதுக்கப்பட்டு, இன்று வரை அந்த வேலை துவக்கப்படாமல் இருக்கிறது. அந்த மூலப்பொருளினுடைய முக்கியத்துவம், அதை உணர்ந்தவர்களுக்குத்தான் தெரியும். உலக்கத்திலேயே கிராபைட் கிடைக்கக் கூடிய இடங்கள் மூன்று தான். மடகாஸ்கர், ஸ்ரீலங்கா, இந்தியா, மூன்று இடங்களில் தான் கிடைக்கிறது· இந்தியாவில், என்னுடைய தொகுதிக்கு அருகில் உள்ள சிவகங்கையில் தான் 3 மைல் தூரத்திற்கு மேலாக அது கிடைக்கிறது. நல்ல தரமாகவும் இருக்கிறது.

(நண்பகல் 12-00)

அதை வெட்டியெடுத்து உடனடியாக அதற்கான வேலைகளைச் செய்தால் அரசிற்கு பல கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய தொழில், அதற்காக சுமார் 700 ஏக்கர் நிலத்தை நாங்கள் பொது மக்களிடமிருந்து வாங்கிக் கொடுத்திருக்கிறோம். இருந்தாலும் அதற்கான கட்டடங்கள் கட்டப்படவில்லை; இயந்திரங்கள் வாங்கப்படவில்லை. இன்னும் எந்த வேலையும் துவங்கவில்லை. ஆகவே இதற்கான பணிகள் உடனடியாக துவங்கப்பட வேண்டும். அது அரசிற்கு லாபம் தரக்கூடிய மிகப் பெரிய தொழில் என்பதைச் சொல்லிச் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் போது 10,000 ரூபாய் பெறுகின்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. மேலும் ஓய்வூதியத்திலே உள்ள அந்த கஷ்டங்களையும், குறைகளையும் போக்கி மிக எளிதாகப் பெறுகின்ற வகையில் முறைபடுத்தி இருப்பது பாராட்டத் தக்கது.

அடுத்து தோழர் திரு. ரமணி அவர்கள் பேசும் போது கம்யூனிஸ்ட் கட்சி இரட்டை வேடம் போடுவதாக திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் கூறியதாகச் சொன்னார்கள், ஆனால் நான் சொல்கிறேன் அவ்வாறு திரு. வி. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் மட்டும் சொல்லவில்லை.

'C, P. I. M. adopting double standards' என்று மேற்கு வங்காளத்திலே உள்ள அவர்களுடைய கூட்டணி கட்சிகளே கூறுகின்ற நிலைமை இருக்கின்றது. அது மட்டுமல்ல இங்கே தொழிலாளர் பிரச்சினைகளிலே இரண்டு கம்யூனிஸ்ட்டுகளும் இரட்டை வேடம் போடுகிறார்கள் என்று தி. மு. க. மற்றும் அனைத்து தொழிற் சங்கங்களும் அறிக்கை விட்டார்கள். ஆகவே உங்களுடைய கூட்டணி கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகமே சொல்லி இருக்கின்ற போது, திரு. வி. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னவுடன் மாத்திரம் கோபம் வருவதேன்? எனவே அவர்கள் இரட்டைவேடம் போடுவதாக நான் கூறவில்லை, யார் கூறினார்கள் என்பதற்கான ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றது. தி. மு. க. மற்றும் அனைத்து தொழில் சங்கங்களுமே அறிக்கை விட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி அத்துடன் எனது கருத்துக்களைக் கூறி, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

*திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் சில வார்த்தைகளை இங்கு கூற ஆசைப்படுகிறேன். நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த மாவட்டங்களின் பிரிவினைகளைப் பற்றி இந்த ஆளுநர் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டதற்காக நான் பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரித்து அதிலே ஒரு பகுதியினை சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்டு அமைப்பதற்கு முடிவு எடுத்து அறிவிப்பு செய்ததற்காக சிவகங்கை தொகுதி மக்களின் சார்பாக நான் இந்த அரசுக்கும் முதலமைச்சருக்கும், குறிப்பாக ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் அந்த மாவட்டத்திலே உள்ளடங்கிய பகுதிகள், வட்டங்கள் ஆகியவற்றை நிர்ணயிப்பது குறித்து ஆய்ந்து பரிந்துரை செய்வதற்காக வல்லுநர் குழு ஏற்படுத்தப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது படிப்படியாக நிறைவேறும் என்ற நிலைமையினை மாற்றி அது எப்போது நிறைவேறும்.





என்பதைச் சொல்கின்ற வகையில் ஒரு குறிப்பிட்ட கால வரையறையை நிர்ணயித்து அதற்குள்ளாக அதனை நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் நீண்ட காலமாகக் கேட்டு எதிர்பார்த்த ஒன்று வந்து, இதன் காரணமாக தாமதமாகி விடக்கூடாது என்பது தான் என்னுடைய வேண்டுகோளாகும்.

பொதுவாக இந்த ஆண்டு தமிழ்நாட்டில் நல்ல மழை பெய்திருப்பதாகவும் அதனால் நல்ல விளைச்சல் ஏற்பட்டிருக்கின்றது. என்றும் சொல்லப்படுகின்றது. ஆனால் எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக சிவகங்கை திருப்பத்தூர், இளையான்குடி போன்ற தாலூக்காக்களில் விவசாயிகளின் நிலைமை பரிதாபகரமாகத்தான் இருக்கின்றது. அங்கே உரிய காலத்தில் மழை பெய்யாத காரணத்தால் விவசாய வேலைகள் ஆரம்பிக்கவில்லை. ஏற்கனவே வைக்கப்பட்ட பயிர்களும் மழை இல்லாத நிலைமை ஏற்பட்டதன் காரணத்தால் சாவியாக போய்விட்ட நிலைமையையும் பார்க்க முடிகின்றது. திருப்பத்தூர் மற்றும் திருப்பத்தூரைச் சேர்ந்த பல பகுதிகளிலும், சிவகங்கைப் பகுதிகளிலும் இன்னும் விவசாயிகள் உழாமலேயே நஞ்சை நிலங்களை விட்டு வைத்திருப்பதன் காரணத்தால் அந்த நிலங்களில் வேலிக் கருவை மண்டிக் கிடப்பதைப் பார்க்கலாம். இப்படிப்பட்ட உண்மையான நிலவரத்தைப் புரிந்து கொண்டு அப்பகுதி மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும். அங்கே சிறிது விளைந்த பகுதிகளிலே கூட பூச்சி நோய்ப் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இப்படி பல வகைகளில் பெருத்த பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. எனவே அந்தப் பகுதி மக்களுக்கு வரி வஜா செய்வதோடு கூட்டுறவுக் கடன், மற்றும் அரசாங்கக் கடன் ஆகியவற்றை வசூலிப்பதைத் தள்ளி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படி ஆண்டுதோறும் அப்பகுதியிலே இந் நிலைமை ஏற்படுகின்ற காரணத்தால் அங்கே ரெவின்யூ அதிகாரிகளை அனுப்பி, அல்லது மாண்புமிகு அமைச்சர் அவர்களே வந்து பார்த்து, உண்மை நிலைமையைக் கண்டறிந்து நிவாரணம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றுகேட்டுக் கொள்கிறேன். அங்கே இப்போது நெல் கொள்முதல் செய்யப் படுகின்றது. அங்கே இருக்கிற நிலவரம் என்ன என்பதைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். ரூ. 132 விலை நிர்ணயம் செய்தாலும், அங்கே அவர்கள் வாங்குகின்ற நெல்லுக்கு ரூ.118 தான் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். அதுவும் விவசாயிகளுக்கு உரிய காலத்திலே பணம் கொடுப்பதில்லை. இப்பொழுது நான் அந்த நெல்லைக் கொண்டு வந்திருக்கிறேன். அதைப் பின்னால் தருகிறேன். அந்த நெல் பழுதடைந்திருந்தால், அந்த மக்களுக்கு ஏதாவது நிவாரணம் செய்ய வேண்டும். இல்லை, சரியாக இருக்கிறது என்றால், உரிய விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கோள்கிறேன். ரூ.35 அதிகமாகக் கொடுப்பது கூட ஒரு சில மாவட்டங்களுக்கு மட்டுமே சலுகை கொடுக்கப் பட்டிருக்கிறது என்று அறிகிறோம். அமைச்சர் அவர்கள் ஏக போக கொள்முதல் நடைபெறும் இடங்களில் ரூ. 35

அடுத்த சாலைகள் பராமரிப்பு பற்றி சொல்லும் போது 37 கோடியே 54 லட்சம் வழங்கியுள்ளதாக கூறியுள்ளார்கள். இந்த பணம் எல்லாம் எங்கே போகிறது என்றே தெரியவில்லை. சாலைகளின் நிலைமையைப் பார்க்கிறபோது உண்மையிலேயே வருந்தாமல் இருக்க முடியாது. எங்களுடைய மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதி என்பதால் ஒவ்வொரு முறையும் நிவாரணத் திட்டத்திலே வேலைகள் எடுத்து போடப் படுகிற அந்தச் சாலைகள் சரியாகப் போடப்படுவதில்லை. என்னுடைய தொகுதியில் இளையான்குடி—பரவமங்கலம்—காளையார்கோவில்—கல்லல்—சாலை இருக்கிறது. திருவள்ளுவர் பஸ் கூட அந்த சாலையில் போகிறது. போக்குவரத்து நெரிசலான அந்த சாலையின் இன்றைய நிலவரத்தைப் பார்த்தால் நிறைமாத கர்ப்பிணி காரில் அந்தச் சாலையில் சென்றால் பிரசவம் ஆகக் கூடிய நிலைமை இருக்கிறது. எத்தனையோ முறை என்ஜினியர்களிடமும், டி. டி. சி. மீட்டிங்கிலும் எடுத்துச் சொல்லியும் ஏனோ அந்தச் சாலை புறக்கணிக்கப்படுகிறது; இதில் சம்பந்தமில்லாத எங்களை குறிப்பிட்டு இளையான்குடி எம். எல். ஏ. காரைக்குடி எம். எல். ஏ., சிவகெங்கை எம் எல். ஏ., இவர்களுக்கு ஏன் ஓட்டு போட வேண்டுமென்று அந்த பஸ்ஸிலே பிரயாணம் செய்கிறவர்கள் சொல்கிறார்கள். ஆகவே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட இந்தச் சாலைகளை சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்தியாவில், நமது மாநிலத்தில் ஒரு குறிப்பான இடம் இராமேஸ்வரம், அந்தத் தீவை இணைக்கக் கூடிய பாம்பன் பாலவேலை பல ஆண்டுகளாக தாமதப்பட்டிருக்கிறது. அதற்கு காரணங்கள் எவ்வளவு சொல்லியிருந்தாலும் அதன் காரணமாக பொது மக்களுக்கு கிடைக்கக்கூடிய வசதி தாமதப் படுகிறது. அரசாங்கத்திற்குவரக்கூடிய பல கோடி ரூபாய். நஷ்டம் ஏற்படுகிறது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். ஏனென்றால் எஸ்கலேஷன் ஆசப் பிரைசஸ், எஸ்கலேன்ஷன் ஆப் வேஜஸ் என்று சொல்லக் கூடிய விலைவாசி உயர்வு, கூலி உயர்வு போன்றவற்றின் காரணமாக திட்ட மதிப்பீடுகள் பல மடங்கு அதிகமாகி, பல கோடி ரூபாய் அளவில் செலவு இதற்காக செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அறிக்கையில் உடனடியாக இந்த வேலை துவங்கப்படும் என்று சொல்லப்படுகிறது. எப்போது துவங்கப்படும் என்பது தெரியவில்லை. அந்தத் திட்டத்தில் இப்போது கட்டப்பட்டுள்ள தூண்கள் எல்லாம் வெறும் காட்சிப் பொருள்களாக இருக்கின்றன. அவைகள் பயன்ளிக்கக் கூடிய வகையிலே இந்தத் திட்டத்தை செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து சிவகெங்கை பக்கத்திலே சாத்தரசன் கோட்டை ஏரிவயல் ரோடு பதினேழு கிலோ மீட்டர் அரசாங்கத்திலே போடப்பட்டு, எந்தக் கணக்கிலே போடப்பட்டது. என்று சொல்லப்பட்டது. இடையில் பல வேலைகள் எல்லாம் செய்யப்பட்டும்கூட ஜீப்பே செல்ல முடியவில்லை. அந்தப் பகுதி மக்களுக்குஎந்த சாலை வசதியும் கிடையாது. ஆகவே அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அந்தச் சாலையை செப்பனிடுவதற்கு அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் [டாக்டர் கே. சமரசம்] : சீக்கிரம் முடித்து விடுங்கள்

திரு. உ. சுப்பிமணியன்: தலைவர் அவர்களே, எங்களைப் போன்று குறுக்கீடு இல்லாமல் பேசுகிறவர்களுக்கு போனஸ் டைம் கொடுக்க வேண்டும். ஏனென்றால் நாங்கள் சபையின் நேரத்தை வீணாக்குவதில்லை.

அடுத்து பல திட்டங்களுக்கு கட்டடங்கள் கட்டப்படுகிறது. இப்போது லட்ச ரூபாய் செலவில் ஒவ்வொரு கிராமத்திலும் நல்ல பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பொது மக்களின் வசதிக்காக லட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ள அந்த கட்டடங்களின் உள்ளே தண்ணீர் இருந்தால் நடவு செய்யலாம்: அந்த அளவிற்குப் புழுதி படர்ந்து இருக்கிறது. தளம் போடுவதற்கு டெக்னிக்கலாக ஏதோ பெயர் சொல்வார்கள், மறந்து விட்டேன். இவ்வாறு குறையுடன் புழுதி படர்கிற அளவில் அந்தக் கட்டங்களை கட்டிய என்ஜினியர்கள், ஒப்பந்தக்காரர்கள், பி. டி. ஓ.—க்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தினால் தான் நல்லதாக இருக்கும்.

நல்ல நோக்கத்தோடு அரசாங்கம் செலவு செய்யும் பணம் மக்களுக்கு பயன்படாமல் என்னவோ ஏதோ என்று செய்து கொண்டுவருவது சரியல்ல.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் பல இடங்களில் தட்டுப்பாடு இருக்கலாம். ஆனால் கிணறுகள் வெட்டி பல ஆண்டுகள் ஆகிற மக்களுக்கு, மின் துறை அதிகாரிகள் பம்ப் செட்டு வாங்கி வையுங்கள், இன்வாய்ஸ் காட்டுங்கள் மின் இணைப்புத் தருகிறோம் என்று சொல்லி இரண்டு ஆண்டுகள் ஆகியும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, ஏற்கனவே நீங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். மின்சாரப் பம்ப் வாங்கி வைத்து இருப்பவர்களுக்கு மின்சாரம் கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. பல்வேறு இடங்களில் அது சரியான முறையில் நடைபெறுவதாகத் தெரியவில்லை. அதிலே பல்வேறு குறைபாடுகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். தற்போது 3 செண்ட் நிலம் தான் அவர்களுக்கு

வீடு கட்டி கொடுக்க கொடுக்கப்படுகிறது. அந்த மக்கள் மாடுகள் ஆடுகள் கட்டுவதற்கு இடம் தேவை என்று சொல்கிறார்கள். ஆகவே, குறைந்தபட்சம் ஒரு 5 செண்ட் நிலமாவது கொடுக்க வேண்டும், என்று சொல்லி வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, 13–ஆம் தேதி அன்றைய தினம் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது சில கருத்துக்களை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆளுநர் அவர்கள் இந்த அவையில் உரையாற்றிய அன்றைய தினம் தமிழகம் முழுவதும் ஏழைகள் விவசாயிகள் தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்ட கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து வழி நடைப் பயணம் மேற்கொண்டது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும் விஷம்போல் ஏறியிருக்கும் விலைவாசியைக் கட்டுப் படுத்தவும், வேலையில்லாத திண்டாட்டத்தைப் போக்கவும், தொழிலாளர் விரோத நடவடிக்கைகளையும், பழி வாங்கும் போக்கையும் கண்டிக்கவும், வெள்ள நிவாரணம் வழங்குவதில் ஏற்பட்டுள்ள ஊழல் மற்றும் ஏராளமான பொது மக்கள் பிரச்சினையை முன் வைத்து மிகவும் அமைதியாக தமிழகம் முழுவதும் வழிநடைப் பயணம் மேற்கொண்டோம். ஆனால் அமைதியாக நடைபெற்ற வழி நடைப் பயணத்தின் முதல் நாள் இரவு 12 மணி அளவில் புழல் ஒன்றியத்திலும் சோழவரம் ஒன்றியத்திலும் உள்ள ஏராளமான அனைத்துக் கட்சித் தோழர்களைக் கைது செய்து 7 (1) (ஏ),151, 158 பிரிவுகளின் கீழ் பொய் வழக்கைப் பதிவு செய்து, சிறையில் அடைத்துள்ளார்கள்.

காலையில் சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜயராகவன் அவர்கள் இதைப் பற்றி கேட்ட போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆளுநர் உரை மீதான விவாதம் முடிந்தபின் இதைப் பற்றிப் பேசலாம் என்று கூறிவிட்டார்கள். ஆளுநர் உரை மீதான விவாதம் முடிகின்ற வரையில் அவர்கள் சிறையில் இருக்க வேண்டியது தேவைதானா. அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், ஆளுநர் உரை மீதான விவாதம் முடிந்த பிறகு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டு வரவேண்டும் என்பது தேவையில்லாத ஒன்று என்று நான் கருதுகிறேன்.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. எம். ஜி. ஆர். அரசு மக்களுக்கு நன்மை செய்யாது என்று கூறி நான் சிலகருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். மேதகு ஆளுநர் உரையின் மீது பேசுவதை விட 1977-ஆம் ஆண்டு முதல் பாதிக்கப்பட்டு வரும் விவசாயப் பெருங்குடி மக்களின் நிலை குறித்துப் பேசுவது நலமாக இருக்கும் என்று நான் கருகிறேன்.



விலைவாசி உயர்வு ஏழைகள் வாங்க முடியாத அளவிற்கு உயர்ந்து விட்டது. அதைக் கட்டுப் படுத்த முடியாத அரசு தேவைதானா? நாட்டு மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் உள்ள 2,172 வருவாய் கிராமங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் எல்லாக் கிராமங்களும் முழுவதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. 100-க்கு மேற்பட்ட பேர் இறந்து இருக்கிறார்கள். 12000–க்கு மேற்பட்ட கால் நடைகள் இறந்து இருக்கின்றன, சுமார் 5 லட்சம் குடிசைகள் இடிந்து அழிந்து இருக்கின்றன. மாவட்டத்தில் உள்ள 13 லட்சம் ஏக்கர் நிலங்களில் உள்ள சம்பா தாளடி பயிர்கள் அழிந்து பாழாகி விட்டது. சமீபத்தில் பெய்த பெரு மழையால் இறந்தவர் களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு நேரில் சென்று ஆறுதல் கூற முடியாத நிலையில் இருந்தேன். காரணம் எனக்குக் கடுமையான மார் நோய் ஏற்பட்டு சென்னை மத்திய மருத்துவ மனையில் 1½ மாதம் சிகிச்சை பெற்று இருந்த காரணத்தால், இறந்தவர்களின் குடும்பங்களுக்குச் சென்று ஆறுதல் தெரிவிக்கவோ, இரங்கள் தெரிவிக்கவோ முடியாமல் இருந்ததால், நான் இன்று இந்த சபையின் மூலம் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் பாதிக்கப் பட்டக் குடும்பங்களுக்கு, தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12—10)

தமிழ்நாட்டிலே இன்றைக்கு நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இறந்திருக்கிறார்கள், இறந்து போனவர்கள் குடும்பங்களுக்கு முறையான நிவாரணம் வழங்கப்படவில்லை. சில இடங்களில் ஆயிரம் ரூபாய் மட்டும் வழங்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். இறந்துபோன ஒவ்வொருவர் குடும்பத்திற்கும் 10,000 ரூபாய் உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12,000-க்கு மேற்பட்ட கால்நடைகளை இழந்தவர்களுக்கு இதுவரை முறையாக நிவாரணம் வழங்கப்படவில்லை. அவர் களுக்கும் அரசின் சார்பிலே அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு குடிசைகளை இழந்தவர்களுக்கு என்னுடைய தொகுதியாக இருந்தாலும் அல்லது பாதிக்கப் பட்ட எந்தப் பகுதியாக இருந்தாலும் முறையாக நிவாரணம் வழங்கப்படவில்லை. நிவாரண உதவி வழங்குவதில் ஏராளமான முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்று தினமணி பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதை நான் தலைவரின் அனுமதியோடு இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நிவாரணத் தொகை வழங்குவதிலும், புடவைகள், வேட்டிகள் விநியோகத்திலும் ஆளும்கட்சியின் செல்வாக்கு காணப்படுகிறது. உண்மையிலேயே வீடுகளை இழந்து தவிக்கும் விவசாயிகளுக்கு முழு ஈட்டுத்தொகை மறுக்கப்படுகிறது. உள்ளூர் ஆளும் கட்சி யினர் இதில் பராபட்சமாக நடந்திருக்கிறார்கள். ஓரளவுக்கு

பாதிக்கப்பட்டவர்களுக்கு பொங்கல் சன்மானம் 10 ரூபாயும் உதவித்தொகை 200 ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் முழுமையாக சேதம் அடைந்தவர்களுக்கு பொங்கல் சன்மானம் 10 ரூபாயும் நஷ்ட ஈட்டுத் தொகை 50 ரூபாயும் கொடுக்கப் பட்டிருக்கிறது. பல இடங்களில் விசாரித்து, இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். பல கிராமங்களில் சேதம் அடைந்தவர்களுக்கு உரிய ஈட்டுந் தொகை வழங்கப்படவில்லை. ஆனால் சில இடங்களில் நல்ல வீடுகளுக்குக்கூட நிவாரண உதவித்தொகை அளிக்கப்பட்டிருக்கிறது. மன்னார்குடி தாலுகாவில் கண்டமங்கலம் கிராமத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து நபர்களுக்கு தலா 210 ரூபாய் வீதம் 1,050 ரூபாய் உதவித்தொகையாக வழங்கப் பட்டிருக்கிறது. இப்படி ஏராளமான முறைகேடுகள் நிவாரணப் பணி நடைபெறுவதிலே நடைபெற்றிருக்கின்றன என்பத நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்கள் நிவாரண உதவி கிடைக்காமல் தவிக்கிறார்கள். ஆயிரக்கணக்கான மனுக்கள் தாசில்தார் அலுவலகங்களிலேயும் கோட்டாட்சித் தலைவர் அலுவலகளிலேயும் தேங்கிக் கிடக்கின்றன. அவை அனைத்தும் உரிய முறையிலே பரிசீலனை செய்யப்படவில்லை. அதிகாரிகளைக் கேட்டால் வழங்கப்பட்ட பணம் அனைத்தும் தீர்ந்து விட்டது; இனிமேல் நிவாரணம் வழங்க முடியாது என்று சொல்கிறார்கள், இது சரியல்ல. தொடர்ந்து இன்று வரையில மழை பெய்து வருவது மறுக்கமுடியாத உண்மை. எனவே பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரண உதவிகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உதவித் தொகைகளை வழங்கியபோது பாதிக்கப்படாத வீட்டுக்கு 50 ரூபாய் லஞ்சம் பெற்றுக்கொண்டு வழங்கியிருக்கிறார்கள்; பாதிக்கப்பட்ட வீட்டுக்கு 25 ரூபாய் பெற்றுக் கொண்டும் வழங்கியிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக தினமணி பத்திரிகையில் வந்த செய்தி மட்டுமல்ல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நானே ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அதிகாரிகளும் ஆளும் கட்சியினரும் சேர்ந்து பணம் வசூல் செய்திருக்கிறார்கள் என்று எழுத்து மூலம் தெரிவித்திருக்கிறேன். 22-1-1984 அன்று ஒரு அறிக்கையாகவே முதலமைச் ருக்கு அனுப்பி வைத்திருக்கிறேன். ஆனால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று இதுவரையில் எனக்குத் தெரிவிக்கவில்லை.

காவல் துறையைச் சேர்ந்த இரகசிய பிரிவு மூலமாக விசாரித்து, தவறு செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சருக்கு எழுதி இருக்கிறேன். காவல் துறை இரகசிய பிரிவு மூலம் விசாரணை செய்து கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் இனிமேல் இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் கட்டுப்படுத்த முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





அது மட்டுமல்ல, இன்றைக்கு ஏழை எளிய மக்கள் சிறு ஓட்டு வீடுகளில் வசிக்கிறார்கள். அவர்களுடைய தகப்பனார், பாட்டனார் காலத்தில் கட்டிவைத்த அந்த சிறு ஓட்டு வீடு, அந்த வீடுகளில் தங்கியிருக்கிறவர்களுக்கு, அந்த வீடுகள் இடிந்து விழுந்து விட்டால் உதவித் தொகை வழங்கப்படவில்லை. அவர்களுக்கும வழங்கப்பட வேண்டும்.

கிராமிய வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் மூலம் கடன் பெற்று வீடு கட்டியிருக்கிற ஏழை எளிய மக்கள் அல்லது அரசின் மூலம் இனாமாக வீடு கட்டிக்கொடுக்கப்பட்டு, அதிலே குடியிருக்கிற ஏழை எளிய மக்கள் பாதிக்கப்பட்டால், அவர்கள் குடியிருக்கிற வீடு இடிந்து விடுகிறபோது அவர்களுக்கு எல்லாம் நிவாரண உதவி வழங்கப்படுவதில்லை. அவர்களுக்கும் நிவாரண உதவி வழங்கிட கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் கிளியனூரிலும் திருநாள் கொண்டச் சேரியிலும் அரசு இனாமாகக் கொடுக்கப்பட்ட வீடுகளில் சமீபத்தில் பெய்த பெரு மழையால் தண்ணீர்புகுந்து சுவர்கள் இடிந்து விட்டன. அவர்களால் வீடுகளை பழுது பார்த்து திரும்பவும் கட்டமுடியாது எந்த நேரத்திலேயும் தரையிலே விழக் கூடிய அபாயகரமான சூழ்நிலையிலும் வீடுகள் இருக்கின்றன. ஆகவே அதைப் பரிசீலனை செய்து அந்த வீடுகளைப் புதுப்பித்து கொடுக்க வேண்டும். அல்லது அதற்கான நிவாரணத் தொகையை கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன் சேத்தூர், எல்லையில் நாண்டனாற்றில் மூன்றுஇடங்களில் உடைப்புகள் ஏற்பட்டுள்ளன. சேத்தூர் கிராமம் முழுவதும் அழிந்துவிடும் நிலையில் இருக்கிறது. அந்தக் கிராமத்திற்குக் கூட முழுமையாக நிவாரண உதவிகள் வழங்கப்படவில்லை. அங்கே வீடுகளில் தண்ணீர் புகுந்து கொண்ட காரணத்தினால், வீட்டிலே குடியிருக்கக் கூடிய மக்கள் பள்ளிக்கூடங்களிலும், வசதி படைத்தவர்கள் இல்லங்களிலேயும் தங்கியிருக்கக் கூடிய நிலையைக் கண்டேன். முழு கிராமம் பாதிக்கப்பட்டும் நிவாரணம் வழங்கப் படவில்லை. இப்படிப்பட்ட வீடுகளுக்கு உடனடியாக நிவாரணத் தொகை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சேத்தூருக்கு நான் செல்லும்போது வழியில் ஒரு சத்துணவுக் கூடம்—முதலமைச்சர் சத்துணவுக் கூடம் இருக்கிறது. நீங்கள் பெருமையாகப் பேசுகிறீர்கள். அந்த சத்துணவு சமைக்கக்கூடிய இடத்திற்குப் பக்கத்திலே தவளைகள் பாம்புகள் ஓடுகின்றன. மேலும் எருக்குழி, சாணக்குழிகள் பக்கத்திலே இருக்கின்றது. கீற்று இல்லாமல் தடுப்பு இல்லாமல், 10 மரங்களை மேலே கொண்ட அந்தச் சத்துணவுக் கூடத்தில் சத்துணவு சமைக்கப் படுவதை என்னால் காண முடிந்தது. பெற்றோர்கள், இவ்வாறு பாம்பு தவளைகள் ஓடுகின்ற இடத்தில், எருக்குழிகள், சாணக் குழிகள் மத்தியில் சமைக்கக்கூடியவற்றை எங்கள் பிள்ளைகள் சாப்பிட்டால் ஆபத்து ஏற்படாதா? இதை அரசின் கவனத்திற்கு கொண்டு வாருங்கள் என்று பொது மக்கள் என்னிடம் சொன்

னார்கள். அப்படிப்பட்ட இடங்களில் உடனடியாக சுகாதாரமான சத்துணவுக் கூடங்களை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிளியனூரிலே இருக்கின்ற ஆரம்பப் பள்ளியிலே கிட்டத்தட்ட 600 பிள்ளைகள் படிக்கக் கூடிய அந்த பள்ளியின் கூரையில் கீற்றே கிடையாது. மரங்கள் மட்டுமே இருக்கின்றன. தேரெழுந்தூரிலே உயர்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. கம்பன் பிறந்த ஊர். கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட ஊரை சீர்காழி சட்டமன்ற உறுப்பினரும் மற்றும் அதிகாரிகள் எல்லாம் பார்வையிட்டார்கள். அந்த ஊரில் உள்ள உயர்நிலைப்பள்ளியின் கூரை கீற்று இல்லாமல் ஒழுகிக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. ஆக உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும் ஆரம்பப் பள்ளியாக இருந்தாலும், உடனடியாக சீர் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தண்ணிறைவுத் திட்டத்தின் மூலம் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டும், சாலைகளில் நடந்து செல்ல முடியாமலும், குடிக்க தண்ணீர் கிடைக்காமலும், தெருக்களிலே விளக்குகள் இல்லாமலும் கிராமங்கள் இருக்கின்றன. இதற்கு என்ன காரணம் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். கிராமங்களுக்கு செலவு செய்யக் கூடிய பணம் அனைத்தும் முறையாக செலவு செய்யப்பட்டதா அல்லது ஆளுங் கட்சிக்காரர்கள் பங்கீடு அதிகமாக இருக்கிறதா என்பதை கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தை 1966-67ல் மாண்புமிகு பக்தவத்சலம் ஆட்சி செய்தார்கள். அன்றையதினம் பட்ஜெட் ரூ.188 கோடிக்கு இந்த மாமன்றத்திலே தாக்கல் செய்தார்கள். அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக வந்தபோது ரூ.248 கோடிக்கு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தார்கள். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்தபோது ரூ.501 கோடிக்கு நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்தார்கள். இந்த ஆட்சி வந்தபிறகு ஏராளமாக வரிப்போட்டு, மக்களிடம் . வரிப்பணத்தை வசூல் செய்து, ரூ.1774 கோடிக்கு சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அது மட்டுமல்ல. அதிக பற்றாக 'ஓவர் டிராப்ட்' மூலமாக நம்முடைய அரசு வாங்கி இருப்பது ரூ.113 கோடி.

(பிற்பகல் 12-20)

இவ்வளவு செலவு செய்யப்பட்ட பிறகும் இன்னும் குடிக்கத் தண்ணீர் இல்லாத நிலைமை, சாலைகளில் நடக்க முடியாத நிலைமை, தெரு விளக்குகள் இல்லாத நிலைமை அப்படியிருந்தாலும் அவைகள் எரியாத நிலை, அப்படிப்பட்ட நிலைமையால் தான் இன்றைக்கு ஏழ்மைநிலையிலேயே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிறது என்று சொன்னால், அதற்கு என்ன காரணம்? ஒரு திறமை இல்லாத ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பது தான் எங்களுடைய கணக்கு.



தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டுக்குக் கீழே சுமார் 3 கோடி மக்கள் 52 சதவீதம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று தமிழகத்தின் புள்ளி விவரங்கள் சொல்லுகின்றன. அதோடு மட்டுமல்ல நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை மாவட்டம், சோழ நாடு சோறுடைத்து என்று புகழ் பாடப்பெற்ற தஞ்சை மாவட்டம், தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று போற்றிப் புகழ் பாடக்கூடிய அந்த தஞ்சை மாவட்டத்தின் இன்றைய நிலை என்ன? தொடர்ந்து 2 மாத காலமாக மழை பெய்து கொண்டிருக்கிறது. இதனால் அங்கே இருக்கிற மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எல்லாப் பயிர்களும் அழிந்து விடக்கூடிய அளவிற்கு இன்று வரையில் மழை பெய்து கொண்டிருக்கிறது. அந்த விவசாயிகளுக்கு அரசின் சார்பிலே இதுவரை உதவி வழங்கப்பட்டு இருக்கிறதா? என்று சொன்னால் இதுவரையில் வழங்கப்படவில்லை. ஏதோ 500 டன் சிறு தானியங்கள் வழங்கப்பட்டதாக ஆளுநர் உரையிலே சொல்லப் பட்டிருக்கிறது. எங்கே வழங்கினார்கள்? யாருக்கு வழங்கினார் கள்? அவர்களால் சொல்ல முடியுமா? எந்த இடத்திலே வழங்கி னார்கள்? எங்களுடைய பகுதியிலே எங்கேயும் வழங்கப்பட வில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசின் சார்பிலே உடனடியாக நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், பயிர்கள் முழுவதும் இழந்த விவ சாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 2500 ரூபாய் நஷ்ட ஈடாக வழங்க வேண்டும்.

நிலவரி, கூட்டுறவுக் கடன் அனைத்தும் தள்ளுபடி செய்யப் பட வேண்டும். முழுவதும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 2500 ரூபாயும், ஓரளவு பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசினுடைய சார்பாக நிவாரண உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். கூலி வேலை செய்யும் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு, இன்று பட்டினியாகக் கிடக்கிறார்கள். அவர் களுக்கு உடனடியாக உதவித் தொகை வழங்கவேண்டும். வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு குவின்டாலுக்கு வறட்சி நிதியாக 35 ரூபாய் கொடுப்பது என்பது போதுமானதாக இல்லை. அதை குறைந்த பட்சம் 50 ரூபாயாகவாவது உயர்த்தி அறுவடை முடிகிற வரை யில் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக தஞ்சை மாவட்டத்தை அறிவிக்க வேண்டும். அந்த மாவட்டத்திற்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்படவேண்டும் என்பது நீண்டகாலக் கோரிக்கை. வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இந்த திட்டம் உடனடியாகக் கொண்டுவரப்படும் என்று இங்கே பேசினார்கள். ஆனால் இது வரையில் வரவில்லை. ஆனால் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் இதற்கு மாறாக கோயில் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். இது சம்பந்தமாக நான் ஒரு புள்ளிவிவரத்தை சொல்ல விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் திருவாவடுதுறை ஆதினத்திற்கு 26,731 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கிறது. திருப்பனந்தாள் மடத்திற்கு 1,059 ஏக்கர் நிலம் இருக்கிறது. தனியாருக்கு மட்டும் 15 ஏக்கருக்கு மேல் வைத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லுகிற இந்த நேரத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அதுவும் 4, 5 பேர்கள் சுகபோகமாக வைத்துக் கொண்டு அனுபவித்து வருவது தேவைதானா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். மடத்திற்கும் கோயில்களுக்கும் விதிவிலக்கு கொடுக்கக்கூடாது என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். இது ரொம்பவும் முக்கியமான பிரச்சினை.

அடுத்து தஞ்சை மாவட்டம் கடும் மழை பெய்கின்ற போதெல்லாம் பாதிக்கப்படுகிற மாவட்டம். 1977-லே தொடர்ந்து 2 மாதங்கள் மழை பெய்த காரணத்தால் மிகவும் பாதிக்கப் பட்டது. இப்போது டிசம்பர் மாதம் 5,6, நாட்கள் பெய்த கடும் மழையினால் தஞ்சை மாவட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படி கடுமையாக பாதிக்கப்படுவதற்கு என்ன காரணம் என்றால் பொதுப்பணித் துறை மூலமாக செலவழிக்கப்படுகிற பணம் முறையாக செலவழிக்கப்படவில்லை. ஆறுகளை அகலப் படுத்த, தேவையான ரிவெட்மென்ட் போடுவதற்கு பொதுப்பணி துறை பணத்தை செலவழிக்காத காரணத்தால் இப்படி, 5, 6 நாட்கள் பெய்த மழையால் மேட்டூரில் தண்ணீர் இல்லாத நேரத்தில் காவிரியில் தண்ணீர் இல்லாத நேரத்தில் கிட்டத் தட்ட 2 ஆயிரம் இடங்களில் உடைப்பு ஏற்பட்டு இருக்கிற சூழ்நிலைகள் ஏற்பட்டு இருக்கின்றது. பல ஆறுகளை இன்று தூர்த்து விட்டார்கள். பல பேர்கள் அவைகளை ஆக்கிரமித்து விட்டார்கள்.

ஐந்தாண்டுக்காலமாக அவைகளில் தூர் அகற்றப்படவில்லை. ஆறுகள் ஆழ வெட்டப்படவில்லை, அகலப்படுத்தப்படவில்லை, கரைகள் வலுப்படுத்தப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழகத்திலே உள்ள, அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே உள்ள எல்லா ஆறுகளும் வெட்டப்பட்டன. தஞ்சை மாவட்டத்திலேதான் சுமார் ஆயிரம் மைல் நீளமுள்ள 36 ஆறுகளும், 12,220 மைல் நீளம் உள்ள 29,953 வாய்க்கால்களும் உள்ளன. அவைகளின் மூலமாகத்தான் சுமார் 13 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. அந்த ஆறுகளும், வாய்க்கால்களும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் சீர் செய்யப்பட்டதே தவிர, அதற்குப் பிறகு, முறையாக இதுவரையில் பராமரிக்கப்பட வில்லை.



ஆறுகள் தூர்வாரப்பட்டிருக்குமேயானால் இன்றைக்கு இவ்வளவு பெரிய சேதம் தமிழகத்திலே ஏற்பட்டிருக்க முடியாது, குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே ஏற்பட்டிருக்காது. பொதுப் பணித் துறை மூலமாக அதனுடைய பராமரிப்பின் கீழ் 1,505 ஏ பிரிவு வாய்க்கால்கள் இருக்கின்றன. அதிலே 138 வாய்க்கால் கள் மட்டும் பொதுப்பணித்துறை மூலமாக 3 ஆண்டுகளுக்கொரு முறை பராமரிக்கப்படுகின்றன. இந்த 138 வாய்க்கால்கள் போக பாக்கியுள்ள வாய்க்கால்களை யார் பராமரிப்பது என்று தெரியாமல் தரிசாக தூர்ந்து போகிற நிலை தஞ்சை மாவட்டத் திலே ஏற்பட்டு வருகிறது. ஆகவே, மற்ற எல்லா வாய்க்கால் களையும் குடி மராமத்து மூலமாக அரசின் சார்பிலே அகலப் படுத்த, ஆழப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே பத்து கோடி ரூபாய்க்கு ஏழைகளுக்கு வேட்டி சேலைகள் வழங்கப்படும், புத்தாண்டு தினத்தில் வழங்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அறிவித்தபடி வேட்டி சேலைகள் இன்னும் பல இடங்களில் வழங்கப்படவில்லை. எந்தப் புத்தாண்டுக்கு வழங்கப்படும் என்று எங்களுக்குக் கூட தெரியவில்லை. அடுத்த புத்தாண்டா அல்லது அதற்கும் அடுத்த பத்தாண்டா என்று தெரியவில்லை. ஆனால் வேட்டி சேலைகள் வழங்கப்பட்ட ஒருசில இடங்களிலும், ஒரு வீட்டுக்கு அல்லது ஒரு வேட்டிக்கு 2 ரூபாய் என்று வைத்து வசூல் செய்துபிறகு தந்திருக்கிறார்கள். நான்மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையே பக்கத்திலே வைத்துக்கொண்டு என்னுடைய தொகுதியில் நடைபெற்ற ஒரு அரசு நிகழ்ச்சியில் ஒரு வேட்டிக்கு 2 ரூபாய் என்று வசூல் செய்கிறார்கள் என்று சொன்னேன். அதற்கு ஆதாரங்கள் என்னிடத்திலே இருக்கிறது. முதலமைச்சருக்கும் ஒரு கடிதம் எழுதி அதிலே கூட ஒரு வேட்டிக்கோ அல்லது சேலைக்கோ 2 ரூபாய் வீதம் வசூல் செய் கிறார்கள் என்று 10-10-83 அன்று முதலமைச்சருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன். இது வரையில் பதில் இல்லை.

அத்தோடு ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு 10,000 வழங்கப் போவதாக அறிவிப்பு ஒன்று ஆளுநர் உரையில் வந்திருக்கிறது. இதேபோன்ற ஒரு திட்டத்தை இந்த அரசு 1977லே ஆட்சிக்கு வந்தபோதும் அறிவித்தது இந்த அவையிலே. அரசு அலுவலர் களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு 15 ரூபாய் வீதம் பிடித்தம் செய்து 25 ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்கள் ஓய்வு பெறும்போது 10,000 வழங்கப்படும் என்று சொன்னார்கள். அதை இதே அவையிலே அறிவித்தபோது, இந்தியன் வங்கியைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத் திலே நீங்கள் மாதம் 15 ரூபாயை செலுத்த தேவையில்லை, எங்களிடத்திலே வைப்பு நிதியாக செலுத்துங்கள், நாங்கள் 25 வருடங்களுக்குப் பிறகு 16,639 ரூபாய் தருகிறோம் என்று சொன்னார்கள். அதையும் நாங்கள் இந்த அவையிலே விவாதத்தில் எடுத்து வைத்தோம். அதற்குப் பிறகு அந்தத் திட்டம் என்ன

வாயிற்று என்றே தெரியவில்லை. இப்போது நாங்கள் 5 ஆயிரம் கொடுக்கிறோம். நீங்கள் மாதம் 20 ரூபாய் வீதம் 5 ஆயிரம் கொடுங்கள். இரண்டையும் சேர்த்து நீங்கள் ஓய்வு பெறும் போது 10,000 ரூபாயை வழங்குகிறோம் என்று சொல்கிறீர்கள். இது அவ்வளவு நல்ல திட்டம் அல்ல. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில், கலைஞருடைய ஆட்சிக்காலத்தில், ஓய்வுபெறும் அரசு ஊழியர்களின் குடும்பத்திற்கு எந்தத் தொகையும் வசூல் செய்யாமல் 10,000 என்று அறிவித்ததைப் போல, அரசுப்பணி களிலே 25 ஆண்டுக்காலம் பணி புரிந்து ஓய்வு பெறுகிறவர்களுக்கு அவர்களுடைய குடும்பத்திற்கு, பிற்கால வாழ்க்கைக்கு உத்தரவாத மாக 10,000 ரூபாய் அளிக்கும் வகையில் திட்டம் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து காவிரி நீர் ஒப்பந்தத்தைப் பற்றி நம்முடைய ஆளுநர் உரையிலே எதுவுமே கூறப்படவில்லை. அது வருந்தத்தக்கதாகும். சென்ற ஆண்டு கூட ஆளுநர் உரையின் போது, காவிரி நீர் ஒப்பந்தம் சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடக்கிறது, அது சுமூக மாக முடிக்கப்படும் என்று சொன்னார்கள். இதுவரையில் முடிக்கப் படவில்லை. காவிரி நீர் ஒப்பந்தத்தை, விரைவாக, உடனடியாக, முறையாக நடத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன் நன்றி வணக்கம்.

திரு ஆர். தவசி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது விலைவாசி மிகவும் உயர்ந்திருக்கிறது என்று சொன்னார்கள். பின்னாலே நெல்லுக்கு அதிக விலை கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். எந்தப் பொருள், தமிழகத்திலே விலை உயர்ந்திருக்கிறது என்று அறியவிரும்புகிறேன், (சிரிப்பு)

(பிற்பகல் 12–30)

*திரு. தி. அன்பழகன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர் களே, மேதகு ஆளுநர் உரையின்மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் கொடுத்திருக்கிற நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஆளுநர் உரையிலே தமிழக அரசினுடைய சாதனைகள் வெளியிடப்பட்டதோடு மட்டுமல்லாமல் அரசினுடைய புதிய திட்டங்களும் அறிவிப்பு களும் புரட்சித் தலைவர் அரசின் சார்பில் எடுத்துரைக்கப்பட் டிருக்கின்றன. மக்களுடைய எண்ணங்களைப் புரிந்துகொண்டு மக்களுடைய விருப்பங்களை நிறைவேற்றுகின்ற புரட்சித் தலைவர் அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு செய்யவேண்டிய பணியை சிறப்பாக செய்துவருவதை இந்த நாட்டிலே உள்ள நல்லவர்கள் எல்லாம் போற்றி புகழ்கிறார்கள்.





ஏட்டுச் சுரைக்காயை உதாரணம் காட்டி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் பேசினார்கள். உங்களுடைய பேச்சு எதற்கும் உதவாது என்பது எங்களுக்கும் தெரியும். காரணம் மின்னல் கண்ணைப் பறித்திடும், இருளைப் போக்கிடாது. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் இருளைப் போக்கும் ஒளிவிளக்காக தமிழகத்திலே விளங்கிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை முதலிலே நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள் இந்த அரசைப்பற்றியும் ஆளுநர் உரையைப்பற்றியும் பல்வேறு விமர்சனங்களை செய்திருக்கிறார்கள். குறைகளை குற்றங்களாக உருவாக்குவதும் சிறியதை பெரியதாக உருவாக்குவதும் எப்படியும் இந்த அரசின்மீது மாசு ஏற்படுத்தவேண்டுமென்று மக்களுடைய மனதிலிருந்து பிரித்துவிட வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப் படையிலும் இங்கே அவர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த அரசின் மீது குறையைச் சொல்கிறபோது தொழிலாளர் பிரச்சினை, மின் பற்றாக்குறை பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை, மாணவர்கள் பிரச்சினை, விலைவாசிப்பிரச்சினை சட்டம் அமைதிப் பிரச்சினை போன்ற பிரச்சினைகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பேசுகின்ற வர்கள் யார் என்று பார்க்கிறபோது மிக நன்றாகத் தெரியும். மக்களின் கண்ணீரைத் தங்களுக்குப் பன்னீராக்கிக் கொண்ட வர்கள்தான் இன்றைக்கு இந்த அரசைப்பற்றிக் குறை சொல்கிறார்கள்.

விவசாயிகளுக்குப் புரட்சித் தலைவர் அரசு என்ன செய்ய வில்லை என்று குறை சொல்கிறார்கள் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. அன்றைய ஆட்சிப் பீடத்திலிருந்த முதல்வரை பணியவைப்பதற்கு விவசாயிகள் போராட்டத்தை நடத்தி 16 காசாக இருந்த மின்கட்டணத்தை 14 காசாக குறைக்க வேண்டுமென்று கேட்கிற நேரத்திலே விவசாயிகள் கொடுத்த விலை 18 பிணங்கள் ஆகும். அந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு திட்டமிட்டு தி. மு. க அரசு மீண்டும் மின் கட்டணத்தை 16 காசாக உயர்த்திக் காட்டியது. ஆனால் புரட்சித் தலைவர் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 16 காசாக இருந்த மின் கட்டணத்தை 12 காசாக குறைத்துக் தந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, 200 கோடி ரூபாய்க்கு மேலாக விவசாயக் கடன்களை ரத்து செய்து இருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளுடைய பிரச்சினையை எடுத்துச் சொல்கிற மாற்றுக் கட்சியினர் சற்று இதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தொழிலாளர் பிரச்சினையில் போராடும் தொழிலாளர் வர்க்கத்தை இரும்புக் கரம் கொண்டு அடக்குவேன் என்று சொன்னவர்கள் தான் அன்றைக்கு ஆலை அதிபர்களை கரும்புக்கரம் நீட்டி ஆதரித்த நிகழ்ச்சிகளை இன்றைக்கு

உழைக்கும் வர்க்கம் மறந்துவிடவில்லை. தமிழகத்திலே சில ஆலைகள் மூடப்பட்டதை கம்யூனிஸ்ட் கட்சியினர் சொல்கிற போது மேற்குவங்கத்திலே 48 சணல் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்ற நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். தொழிலாளர்களைப் பேணிக் காக்க இந்த அரசு கொண்டு வந்திருக்கின்ற சட்டங்கள் வேறு மாநிலங்கள் மட்டுமல்ல, கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்ற மாநிலங்கள்கூட கொண்டு வரவில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

மின் பற்றாக்குறைபற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள், 1977 ஆம் ஆண்டிற்குப் பிறகு முக்கியமான திட்டங்கள் தமிழகத்திலே துவங்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன மேட்டூர் அனல் மின் திட்டம், தூத்துக்குடி 3வது கட்ட வேலை, நெய்வேலி 3வது கட்டவேலை, பேசின்பிரிட்ஜ் போன்ற திட்டங்களை செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். தமிழகத்திலே 1951 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரையில் 26 ஆண்டுக்காலத்திலே மின்சார உற்பத்திக்காக செலவழிக்கப்பட்ட மொத்த தொகை 714 கோடி ரூபாய் ஆகும். ஆனால் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 1977–லிருந்து 1983 ஆம் ஆண்டு வரை 6 ஆண்டுக்காலத்திலே 900 கோடி ரூபாய் மின்துறை முன்னேற்றத்திற்கு இந்த அரசு செலவிட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன் 1970 ஆம் ஆண்டிற்குப் பிறகு புதிய மின் திட்டங்களை செயல்படுத்தாமல் புதிய திட்டங்களுக்கு அனுமதியைப் பெறாமல் மின் இணைப்பு தருவதிலே அக்கறை செலுத்திய அன்றைய அரசின் மாபெரும் குற்றத்தின் பின் விளைவுகளைத் தான் நாம் இன்றைக்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இந்த அரசின்மீது குறைகளைச் சொல்கிறவர்கள் சற்று இதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

வறட்சிப் பணியைப் பற்றியும், வெள்ள நிவாரணப் பணிகள் பற்றியும் இங்கே குறைகள் சொன்னார்கள். 1974–லே வறட்சி ஏற்பட்ட நேரத்திலே அன்றைக்கு வறட்சிப் பணிகளை செய்த நேரத்தில் மத்திய அரசின் நிதி மந்திரி அவர்கள் அன்றைக்கு ஒரு குற்றத்தைச் சொன்னார் என்பதற்காக மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெறமாட்டோம் என்று அன்றைக்கு சுயகௌரவம் பார்த்தவர்கள் இன்றைக்கு புரட்சித் தலைவர் அரசை குறை கூறுகிறார்கள். மக்களுடைய பாதுகாப்புக்காக மக்களுக்கு சேவை செய்வதற்காக அவர்களுடைய குறைகளை போக்குவதற்காக தொடர்ந்து பணிகள் செய்து கொண்டு இருக்கிற இந்த அரசைப் பார்த்து குறை சொல்லுவது விந்தையாக இருக்கிறது. தமிழகத்தில் இயற்கைச் சோதனைகள்



பலவடிவத்தில் வருகின்றன. வறட்சி மூலமாகவும், வெள்ளத்தின் மூலமாகவும் பல வடிவங்களில் வந்து கொண்டு இருக்கின்றன. இவைகளையெல்லாம் போக்கி மக்களை வாழ வைத்து காப்பது தங்களுடைய கடமை என்று புரட்சித் தலைவர் அவர்கள் அரசு போர்க்கால நடவடிக்கையாக இப்படிப்பட்ட காரியங்களை இன்றைக்கு செய்து வருகிறது. 2 ஆண்டுக் காலமாக மழை பொய்த்து தங்களுடைய வாழ்க்கையே பொய்த்து விடுமோ என்று ஏங்கிய மக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த சிறப்பான முறையில் வறட்சி நிவாரணப் பணிகளை செய்து, அதேநேரத்தில் வெள்ள நிவாரணப் பணியையும் இந்த அரசு சிறப்பாக செய்து முடித்தது. வறட்சி, துயர் தணிப்பு நிவாரண பணிக்கு ரூ. 114·28 கோடி செலவிட்டு இருக்கிறது. இதில் மத்திய அரசின் ஒதுக்கீடு ரூ. 68·36 கோடி தான். அரசு ஏற்கனவே துயர் தணிப்பு பணிக்கு செலவிட்ட தொகையை ஈடு செய்யும் அளவுக்கு மத்திய அரசு மீதித் தொகையை முழுமையாக தரவேண்டும் என்று இங்கே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் கடுமையான வறட்சி தமிழகத்தை பாதித்த நேரத்தில் குடிநீர்ப் பஞ்சத்தை போக்க முடியுமா என்று அனைவரும் தவித்த நேரத்தில் அந்த நிலைமையை மாற்றி தமிழகத்தில் குடிநீர்ப் பிரச்சினையை போக்கினார். அந்த குடிநீர் பிரச்சினைக்காக மட்டும் 46 கோடி ரூபாய் செலவு செய்து 21,700 துளைக் கிணறுகள் அமைத்து குடிநீர் பிரச்சினையை போக்கியது புரட்சித்தலைவர் அவர்கள் அரசு. சென்னை நகரம் என்றைக்கு காலி செய்யப்படுமோ என்று அனைவரும் பயந்து நின்ற வேளையில் துரிதமாக லாரிகள் மூலமாக குடிநீர் பிரச்சினை வராத அளவுக்கு மக்களுக்கு குடிநீர் வழங்கிய அதேநேரத்தில் 2,52·28 லட்சம் ரூபாய் செலவில் குழாய்கள் பம்புகளை அமைத்துத் தந்தது புரட்சித்தலைவர் அவர்கள் அரசு.

வறட்சிப் பிடியிலிருந்து விடுபட்ட பிறகு மீண்டும் தமிழகம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டது. அந்த அளவுக்கு இந்த அரசின் மூலம் நிவாரணப் பணிகளை செய்து இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பாரட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையில் இந்த அரசு 37·54 கோடி ரூபாய் செலவு செய்து வெள்ள நிவாரணப் பணியை சிறப்பாக செய்து இருக்கிறது. பாதிக்கப்பட்டு இருக்கிற வறட்சி, வெள்ள நிவாரணப் பணிகளை முழுமையாக செய்ய மாநில அரசு கேட்டு இருக்கிற ரூ. 128 கோடியை மத்திய அரசு முழுமையாகத்தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்

அதேநேரத்தில் பாசன வசதி பெறாத நிலங்களுக்கு பாசன வசதி ஏற்படுத்தவும், ஏற்கனவே பாசன வசதி பெறும் நிலங்களுக்கு அந்த வசதியை நிரந்தரமாக்குவதும் இந்த அரசினுடைய கொள்கையாக இருந்து வருகிறது. 6—வது திட்ட காலத்தில் மட்டும் சிறிய மற்றும் பெரிய பாசன திட்டங்

களுக்கு 189·79 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. நடப்பு ஆண்டில் 55·14 கோடியும் அடுத்த ஆண்டில் 60·62 கோடியும் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதைவரவேற்கின்ற அதேநேரத்தில் என்னுடைய தொகுதியில் பாலாற்றின் குறுக்கே புல்லூர் பகுதியில் சிறிய புதிய நீர்த் தேக்கம் அமைக்க வேண்டும் என்று பல ஆண்டுக் காலமாக அந்தப் பகுதி மக்கள் விரும்பி கோரிக்கை விடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதறகாக திட்டக் கமிஷன்கூட 18 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் இந்த நீர்த் தேக்கத்தினுடைய நீர்ப் பிடிப்பு ஆந்திர மாநிலப் பகுதியில் ஏறத்தாழ 150 ஏக்கருக்கு அதிகமாக இருக் கின்ற காரணத்தால் ஆந்திர அரசின் அனுமதி இன்றைக்கு எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டு அரசும் பேச்சு வார்த்தை இரண்டு கட்டங்களில் நடத்தி முடித்து இருப்பதாக சொல்லுகிறார்கள். ஆகவே இந்த திட்டத்தை விரைவாக முடித்து திட்ட மதிப்பீடு அதிகம் ஆகாத அளவுக்கு அந்தப் பகுதி மக்கள் பயன்பெறுகிற அளவுக்கு முடித்துத் தர வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசை கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12—40)

இந்த அரசைப் பொறுத்தவரையில் எப்படி இன்றைக்குச் சத்துணவுத் திட்டத்தையும், தன்னிறைவுத் திட்டத்தையும் தந்து புகழ் பெற்று வருகிறதோ அதைப்போல பல நல்ல காரியங்களை அறிவித்திருக்கிறது. ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் தருவது, நான்காவது சம்பளக் கமிஷன் அமைக்க இருப்பது, பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் இறக்க நேரிட்டால் அப்படிப்பட்ட கட்டிட தொழிலாளர்களின் குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் வாங்க இருப்பது, கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தைச் சிறப் பாக செயல்படுத்துவது, பயிர்க் கடன்கள் 1983-ம் ஆண்டு டிசம்பர் வரை ரூ. 58·04 கோடியளவிற்கு வழங்கியிருப்பது, கிராமப்புற மக்களுக்குச் சுகாதார வசதிகளை அதிகப்படுத்தும் அளவிற்குத் தமிழ்நாட்டிலே 712 துணை நிலையங்களைக் கூடுதலாக ஏற்படுத்தக் கருதியிருப்பது, தொழில் கல்விக் கூடங்கள் சிறப்பாக இருப்பது, நிர்வாக வசதி கருதி மாவட்டங்களைப் பிரித்துத் தமிழகத்தினுடைய வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்துவது, இலங்கைத் தமிழர் பிரச்னையில் எடுத்த முடிவுகள், ஊராட்சி, நகராட்சிகளுக்கான தேர்தல் தேதி அறிவிப்பு போன்ற முக்கியமான விஷயங்களை உள்ளடக்கியதாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் அரசுக்கு எதிர் வரிசையிலே இருப்பவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பது நிறை வொளி சிந்திடும் நிலவிற்கு திரையிட்டு விடுவதால்



நட்சத்திரங்கள் நிலவாக ஆகிவிடாது என்று சொல்லி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே. மேதகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது நான் சார்திருக்கின்ற காந்தி—காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஆளுநர் அவர்களின் உரையிலே ஏராள மான புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, ஆக்கபூர்வமான திட்டங்கள் எதுவும் அதில் காணப் படவில்லை.

வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக 114 கோடி ரூபாய் செலவிட்டுள்ளதாக ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள். ஆனால் வறட்சிப் பணிகளிலே தவறுகள் நடந் திருக்கின்றன என்பதை எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் சுட்டிக்காட்டினார்கள்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குக் கேள்வி நேரத்திலே கூட, நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் 48 லட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேட்டி, சேலை வழங்கியிருப்பதாகச் சொன்னார்கள். தமிழகத்தின் மொத்த ஜனத்தொகையே 475 இலட்சம் தான். 48 இலட்சம் பேர்களுக்கு வேட்டி. சேலை வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி யென்றால் தமிழகத்திலே உள்ள மொத்த ஜனத் தொகையிலே கணக்குப் பார்த்தால் பத்து பேர்களுக்கு ஒருவருக்கு வேட்டி யோ, சேலையோ கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதிலும் அரசு ஊழியர்களும், ஆலைத் தொழிலாளர்களும், வசதி படைத்தவர்களும், குழந்தைகளும் போன்ற இவர்களை யெல்லாம் நீக்கிவிட்டுப் பார்த்தால் மொத்த ஜனத்தொகையில் ஐந்து பேர்களுக்கு ஒருவருக்காவது வேட்டி அல்லது சேலை கொடுத்திருக்கவேண்டும். ஆனால் யாருக்காவது அப்படிக் கிடைத்ததா என்பதனைத் தயவுசெய்து ஆளும் பொறுப்பிலே இருப்பவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

துளைக் கிணறுகளைப் பொறுத்தவரையில் 46 கோடி ரூபாய் செலவில் 21,700 துளைக் கிணறுகள் அமைக்கப்பட்ட தாக ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி யென்றால் ஒரு துளைக் கிணறு தோண்டுவதற்கு கிட்டத்தட்ட 21,200 ரூபாய் ஆகிறது என்ற கணக்கு வருகிறது. எவ்வளவோ துளைக் கிணறுகள் போட்டாலும்கூட பத்தாயிரம் ரூபாய் அல்லது 12,000 ரூபாய்க்கு மேல் செலவாகாது. ஆனால் 21,200 ரூபாய் என்ற அளவிற்கு இந்தத் துளைக் கிணறுக்குச் செலவிடப்பட்டிருக்கிறது.

இன்னும் சொல்லப் போனால், குடிநீர் வடிகால் வாரியம். ஒரு ஊரிலே தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது, குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றால் உடனே அவர்கள் அங்கே துளைக் கிணறுகளைப் போடுவதிலேதான் ஆர்வமாக இருக்கிறார்களே தவிர. நிலையான அளவிற்கு இருக்கும் வகையில் மேல் நிலை நீர்த் தேக்கத்தொட்டி கட்டி வசதி செய்வதில்லை. ஒவ்வொரு கிராமத்திலேயும் நான்கைந்து துளைக் கிணறுகளைப் போடுகிறார்கள். அந்த நான்கைந்து துளைக் கிணறுகளுக்கு கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் செலவாகிறது. அப்படி ஒரு இலட்சம் ரூபாய் செலவுசெய்து போட்டாலும் இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவை சரியாக வேலை செய்வதில்லை. பிறகு கேட்பாரற்றுப் போய் விடுகிறது. இதை விடுத்து அந்த ஒரு இலட்சம் ரூபாய் செலவிலே, நிரந்தரமான முறையில் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டி அந்தக் கிராமங்களுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுத்தால் என்றென்றைக்கும் உங்கள் பெயரை அது நிலைநாட்டிக் கொண்டிருக்கும். ஆனால் குடிநீர் வடிகால் வாரியம் அதைச் செய்வதில்லை. அவர்களுடைய குறிக்கோளெல்லாம் துளைக் கிணறுகள் போட வேண்டுமென்பதுதான். அவ்வாறு துளைக்கிணறு போடுவதிலே மட்டும் ஏன் அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். அதிலே அவர்களுக்கு என்ன லாபம் என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

இப்போது வறட்சி முடிந்து வெள்ளச் சேதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. தஞ்சைத் தரணியிலே இன்றைக்குப் பயிர்கள் எல்லாம் மூழ்கிக் கிடக்கின்றது. நெல்லைப் பொறுத்தவரையில் அங்கே இப்போது அறுவடை செய்ய வேண்டிய நேரமாகும். அவ்வாறு அறுவடை ஆகவில்லை என்று நேற்று கூட எனக்குத் தகவல் வந்திருக்கின்றது, தொடர்ந்து மழையினால் பயிர்கள் எல்லாம் மூழ்கி இன்றைக்கு அறுவடை செய்ய முடியாத நிலைமை இருக்கின்றது. வைக்கோல்கள் எல்லாம் மாடுகளுக்கு தீவனமாகக் கிடைக்காமல் வெய்யில் இல்லாத காரணத்தால் அவை எல்லாம் உரங்களாக மாறிக்கொண்டிருக்கின்றன. எனவே மாட்டுத் தீவனத்திற்கு வழியில்லாத நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இன்றைக்கு கோவாப்பரேட்டில் சங்கங்களில் மற்றும் பல இடங்களிலிருந்து கடன் வாங்கிய விவசாயிகள் எப்படியாவது இந்த அறுவடையிலே நெல் வரும், அதை விற்றுக் கடனை அடைத்துவிடலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அது இயலாத நிலைமை இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது, வெள்ளதால் பயிர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நஷ்டம் அடைந்திருப்பதன் காரணத்தால் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கியிருந்த கடன்கள் முழுவதையும் ரத்து செய்ய வேண்டும்.



அடுத்து பாசன வசதிகளைப் பொறுத்தவரையில் புதுப்புது வாய்க்கால்கள் தோண்டுகின்றோம் என்று சொல்லுகின்ற நிலைமையை விடுத்து, ஏற்கெனவே உள்ள தூர்ந்துபோன வாய்க்கால்களைத் தோண்டவேண்டும். அப்படி பல வாய்க்கால்கள் தோண்டப்படாமல் இருக்கின்றன. என்னுடைய பகுதியினைப் பொறுத்தவரையில் மேற்குத் தொடர்ச்சி மலையிலே மழை பெய்தவுடன் கீழே வரிசையாக உள்ள 7.8 குளங்கள் பெருகிவிடுகின்ற நிலைமை இருந்தது. இப்போது அவற்றுக்குத் தண்ணீர் வருகின்ற வாய்க்கால்கள் எல்லாம் தூர்ந்து போன நிலைமையில் இருக்கின்றன. பக்கத்திலே கிணறுகளை வெட்டுகின்றபோது அவற்றிலே உள்ள சவறுகளை எல்லாம் வாய்க்காலிலே போடுவதன் காரணத்தால் வாய்க்கால்கள் எல்லாம் தூர்ந்துபோன நிலைமையில் இருக்கின்றன. இவ்வாறு வாய்க்கால்கள் எல்லாம் மேடாக இருக்கின்ற காரணத்தால் குளங்களுக்குத் தண்ணீர் வராத சூழ்நிலை இருக்கின்றது. எனவே தூர்ந்துபோன கால்வாயைத் திருத்த வேண்டிய பணியினை நாம் முதலிலே செய்தாகவேண்டும்.

அடுத்து வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்றது, சென்ற ஆண்டும் கூட அவ்வாறு சொல்லப்பட்டது. ஆனால் அவ்வாறு வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்பதற்குரிய திட்டங்கள் என்னென்ன என்று அதிலே குறிப்பிடப்படவில்லை. நம்முடைய நாட்டிலே எல்லா வகையான கனி வகைகளும் கிடைக்கின்றன. தமிழ்நாடு கனி வளம் பெருகிய ஒரு நாடு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட ஒரு படத்தில் என்ன ''வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்தவேண்டும் வெளிநாட்டில்'' என்று பாடினார்கள். எனவே நமது நாட்டிலே கிராமங்களிலே கனி வளங்கள் நிறைய இருக்கின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் உள்ள எந்தெந்த கிராமங்களில் என்னென்ன கனிவளங்கள் கிடைக்கின்றன என்பதை ஆராய்ந்து அந்தந்தப் பகுதிகளிலே கிடைக்கின்ற கனி வளங்களைப் பயன்படுத்தி அங்கெல்லாம் தொழிற்சாலைகளை அமைத்தால் நாட்டிலே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும்.

அடுத்து அரசு போக்குவரத்தினைப் பொறுத்தவரையில் 3 நிறுவனங்கள் தவிர மற்ற அனைத்து நிறுவனங்களும் இலாபம் அடைந்திருப்பதாக ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிடப் பட்டிருக்கின்றது. ஆனால் மூன்று நிறுவனங்கள் நஷ்டத்தில் ஓடுகின்றன என்று சொல்வது நம்மை நாமே ஏமாற்றுவதாகும். தனியார் பஸ் உரிமையாளர்களைப் பொறுத்தவரையில் ஒரு பஸ் வைத்திருக்கிறார்கள் என்றால் ஒரு வருடம் கழித்து இரண்டு பஸ், மூன்று பஸ் என்று அதிகரித்து விடுகிறார்கள். அந்த அளவுக்கு வருமானம் வருகின்ற போது அரசின் மூன்று போக்குவரத்து நிறுவனங்கள் நஷ்டத்தில் ஓடுகின்றன என்று சொல்வது ஏதோ ஊழல்கள் நடப்பதாகத்தான் அர்த்தம். எனவே அதை நன்கு கண்காணிக்க வேண்டும். கிராமப்

உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கோர்ட்டுகள் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருந்தால் தமிழக அரசு புறக்கணிக்கிறது என்பதும் தொழிலாளர்களுக்கு விரோதமாக இருந்தால் விரைவிலே அமுல் படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. குமரி மாவட்டத்திலே தோட்டத் தொழிலாளர்களுடைய போராட்டத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்னை இதுதான். 7-1-1984-ல் 3,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் பிரச்னைக்குத் தீர்வு காணவில்லை, 24-10-1979 அன்று செய்யப்பட்ட ஒப்பந்தம் 30-11-1981 அன்றே காலாவதியாகிவிட்டது. உடனே கோரிக்கை வைக்கப்பட்டது. புது ஒப்பந்தம் ஏற்படுத்தவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. ஆனால் லேபர் டிபார்ட்மென்ட் அதிலே பெரிய அளவிற்கு நடவடிக்கை எடுக்காமல் காலதாமதத்தை ஏற்படுத்திவிட்டதன் காரணமாக 1981 நவம்பரிலிருந்து 1983 அக்டோபர் மாதம் வரை பொறுத்திருந்ததற்கு பிறகு ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பில்லை, முதலாளிகள் அதற்கு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால் 17-10-1983-லேயிருந்து 142 தோட்டங்களில் வேலை செய்யும் 3,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்திலே ஈடுபட்டார்கள். அவர்களுடைய பிரச்சினை என்ன? 1977-லிருந்து அங்கே 81 கடைசி வரையில் ஐந்து வருட காலம் அமலில் இருந்த 2,3 ஒப்பந்தங்களிலே நாகர்கோவில் நகரினுடைய வாழ்க்கைப் புள்ளியின் அடிப்படையில் 5 புள்ளி உயர்வு ஏற்படக்கூடிய நிலையில் மூன்று காசு தொழிலாளர்களுக்கு கொடுக்க ஒப்பந்தம் போடப்பட்டிருந்தது, ஆனால் 30-11-1981-ல் அந்த ஒப்பந்தம் முடிவடைந்த பிறகு அந்த ஒப்பந்தத்தின்படி என்ன உயர்வு கொடுக்கப்பட வேண்டுமோ அதைக் கொடுப்பதற்கு தனியார் முதலாளிகள் மறுத்து விட்டார்கள். தனியார் முதலாளிகள் மறுத்து விட்டார்கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும், அங்கே என்ன நடந்தது என்றால் அவர்களுக்குச் சாதகமாக ஒரு நிலையை தமிழக அரசு எடுத்தது என்பது தான், துரதிருஷ்டவசமானது. ஏன் இதை வற்புறுத்த விரும்புகிறேன் என்றால் இன்றைக்கு 122 நாட்கள் வேலை நிறுத்தம் நடந்ததற்கு பிறகு தமிழக அரசின் தொழிலாளர் நல அமைச்சர் இந்தப் பிரச்னையில் நேரடியாக தலையிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தப் பிரச்னையில் தனியார் முதலாளிகளைக் கூப்பிட்டு நல்ல முறையில் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முயலவில்லை. தமிழக அரசிற்கு சொந்தமாக இருக்கக் கூடிய அரசு ரப்பர் தோட்டத்தில் தனியார் முதலாளிகள் 30-11-81-லிருந்து மறுத்த டி.ஏ. உயர்வு இங்கேயும் மறுக்கப்பட்டது. அதற்குப் பிறகு இந்தப் பிரச்னை தொழிலாளர் நலத் துறையினுடைய கவனத்திற்கு கொண்டு வந்த பிறகு அன்றைய தினம் ஜாயின்ட் கமிஷனராக இருந்த, இன்றைய கமிஷனர் திரு. இராஜா சுப்பிரமணியம் அவர்கள் 25-6-82 அன்று நிர்வாகத்திற்கு ஒரு அறிவுரை கொடுத்தார்கள். என்னவென்றால்





The managements are informed that till such time the existing settlement is replaced by a settlement or award the management is bound to grant all benefits that have been provided for in that settlement. இது இன்று தொழிலாள நலத்துறையின் உயர்ந்த பொறுப்பிலே இருக்கிறவரால் கொடுக்கப்பட்ட அட்வைஸ். அந்த அட்வைஸ் படி நடந்து கொள்வதற்கு முதலாளிகள் மறுத்து விட்டார்கள். அதே நேரத்தில் எட்டு மாத காலம் தொடர்ந்து அரசு ரப்பர் தோட்டத்தில் பஞ்சப்படி உயர்வு கொடுத்தார்கள். ஆனால், தனியார் முதலாளிகள் இந்தப் பஞ்சப்படி கொடுப்பதற்கு மறுத்ததிலிருந்து 17-10-1983-லிருந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து அரசு ரப்பர் தோட்டத்திலும் பஞ்சப்படி உயர்வு கொடுப்பதற்கு மறுத்து இருப்பதற்கான மர்மம் என்ன என்று புரிந்து கொள்ள முடியவில்லை. எங்கள் ஊரில் சொல்லிக்கொள்வது என்னவென்றால் இன்றைக்கு நெல்லிக்குப்பம் ஆலையின் முதலாளியாக இருக்கிற அருணாசலம் செட்டியார் இருக்கிறாரே சாட்சாத் அதே நபர் தான் இங்கே இருக்கிற தோட்டங்களில் மிகப் பெரிய தோட்டமான நீலாம்பாடி தோட்டத்தினுடைய முதலாளி. அவர் அரசினுடைய சில அமைச்சர்களை வேண்டிக் கொண்டதற்கிணங்க இன்று அரசு ரப்பர் தோட்டத்திலும் இந்தப் பஞ்சப்படி மறுக்கப்பட்டிருக்கிறது. நான் இதை எதற்காக சுட்டிக்காட்டுகிறேன் என்றால் இப்படி பஞ்சப்படியை மறுத்து விட்டதால் தான் இன்றைக்கு தனியார் முதலாளிகளுக்கு தமிழக அரசு ஆதரவான நிலை என்று எடுத்து உதவுகிறார்கள். அந்த வகையிலே முதலாளிகள் பிரச்சாரம் செய்கிறார்கள் தொழிலாளர் நலத் துறையின் உயர்ந்த அதிகாரியினுடைய அட்வைஸ் கூட இன்றைக்கு அமல்படுத்துவதற்கு மறுக்கப்பட்டு, முதலாளிகளுக்கு ஆதரவாக அரசு ரப்பர் தோட்டத்திலும் வழங்கப்பட்டிருந்த பஞ்சப்படி உயர்வு நிறுத்தப்பட்டிருக்கிறது. முதலாளிகளுக்கு ஆதரவு போகிறதல்லாமல் பின்னென்ன வன இலாக்கா அதிகாரிகளைக் கூட்டா என்ன சொல்கிறார்கள் என்றால் தனியார் துறையிலே என்ன முடிவு ஏற்படுகிறது என்பதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அங்கே முடிவு ஏற்பட்டதற்கு பிறகு தான் நாங்கள் இது சம்பந்தமாக ஒரு முடிவை எடுக்க முடியும் என்று சொல்கிறார்கள், அப்படியானால் இன்று தனியார் தோட்ட முதலாளிகளுக்கு ஒரு சாதகமான நிலையை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது என்று அந்த மாவட்ட மக்களும் தமிழக மக்களும் புரிந்து கொண்டால், அவர்கள் அப்படி ஒரு எண்ணத்தை எடுத்துக் கொண்டால் அது எப்படி தவறாக இருக்கமுடியும்?

(பிற்பகல் 1-00.)

இந்த நேரத்தில் நான் ஒன்றை மிகத் தெளிவாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். முதலாளிகள் என்ன சொல்கிறார்கள். நாகர்கோயில் வாழ்க்கைப் புள்ளி அடிப்படையில் பஞ்சப்படி வழங்க இயலாது. நாகர்கோயில் புள்ளி என்பது நாங்கள்

புறங்களில் கழிப்பிடங்கள் வேண்டும் என்பது ஏற்கெனவே கேட்டதுதான். இப்போது கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நன்றி. ஆனால் தண்ணீர் வசதி இல்லாமல் கழிப்பிடங்களைக் கட்டினால் அதனை உபயோகப்படுத்த முடியாத நிலைமை தான் ஏற்படும். எனவே மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டி அங்கே நிரந்தரமாக தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தால் தான் உதவியாக இருக்கும்.

அடுத்து பல மாவட்டங்களைப் பிரித்து பல்வேறு தலைவர்களின் பெயரிலே மாவட்டங்கள் அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கதாகும். ஆனால் அந்தக் காரியத்தைப் பொறுத்த வரையில் காலதாமதம் இல்லாமல் செய்தாக வேண்டும். பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், காமராஜர் ஆகியோர் பெயராலே எல்லாம் மாவட்டங்களை அமைத்திருக்கிறார்கள். அதே போன்று சுதந்திரப் போராட்டத்திலே தன்னைத்தானே சுட்டுக்கொண்ட தியாகி வாஞ்சிநாதன் பெயரினை மணியாச்சிக்குச் சூட்டி, வாஞ்சிநாதன் மணியாச்சி என்று அழைப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசுப் பணியாளர்களுக்கு சலுகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. கட்டிடப் பணியாளர்களுக்கும் அவர்கள் இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவித்திருப்பது பாராட்டுக்குரியதாகும். அவர்களுக்கும் நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற வகையில் அரசு செய்திருக்கின்ற முயற்சியினைப் பாராட்டுகிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

(பிற்பகல் 12—50)

அதே போன்று ஊராட்சித் தேர்தல்கள் ஏப்ரல் மாதம் நடைபெறும் என்று சொல்லப்படுகிறது. இந்தத்தடவையாவது அந்தத் தேர்தலை நிச்சயமாக நடத்த வேண்டும். ஏனென்றால், தேர்தல்கள் இல்லாத காரணத்தால் தனி அதிகாரிகள் பெயராலே பல்வேறு ஊழல்கள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, அந்தத் தேதிகளிலே கண்டிப்பாக நடத்த வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு வார்த்தையைச் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். எளியவர்களுக்குத் துணை போகின்ற நிலைமை மாறி, இன்றைக்கு வல்லான் வகுத்ததே வாக்கு என்ற நிலைமைக்கு போய்க் கொண்டிருக்கிறது. கடமையைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் உள்ளவர்கள் குறைந்து கொண்டிருக்கிறார்கள். மிகப் பெரிய திருடுகளைக் கூட கண்டுபிடிக்காத நிலைமை இருக்கிறது. எங்கள் ஊரிலே நடந்த சின்ன சம்பவந்தை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். ஈரோட்டிலே இருந்து எங்கள் ஊருக்கு ஒரு முதலாளி, ஒரு டிராக்டரை ஓட்டிக் கொண்டு வந்தார். இரவோடு இரவாக, அந்த டிராக்டரை நிறுத்தி வைத்த போது, இரண்டு பெரிய சக்கரங்களைக் கழற்றிக்



கொண்டு சென்று விட்டார்கள், டிராக்டர் சக்கரங்கள் சாதாரண பொருள் அல்ல. யானை மாதிரி உள்ள இரண்டு வீல்களைக் கழற்றிக் கொண்டு போய் விட்டார்கள். அதுபற்றி போலீசிலே புகார் செய்யப்பட்டது. இதுவரையில் அதுபற்றி கண்டு பிடிக்கப்படவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், கேசும் பதிவு செய்யப்படவில்லை. இத்தகைய மோசமான நிலைமைகள் எல்லாம் இன்றைக்கு காவல் துறையிலே இருக்கின்றன. அந்த முறைகளை எல்லாம் போக்க முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு ஆளுநர் உரைக்கு நன்றி கூறுகின்ற வாய்ப்பைத் தந்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே தொழிலாளர்களுடைய பிரச்னையைப் பொறுத்த வரையில் எந்த அளவுக்கு சொல்லப்படவேண்டுமோ அந்த அளவுக்குச் சொல்லப்படவில்லையென்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். 1982 ஆம் வருஷத்திலே நிதி அமைச்சரால் கொடுக்கப்பட்ட பட்ஜெட் உரையிலே, லேபர் சிச்சுவேஷன் பற்றி ஓரளவுக்குத் திருப்திகரமாக இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று நிலை என்னவென்றால், 1982 ஃடிரைக்ஸ் லாக்—அவுட்ஸ் 187 தான் இருந்தது என்றால், 1983-ல் அது 300 ஆக வளர்ந்திருக்கிறது. இதன் காரணமாக ஏற்பட்ட இழப்பு 200-லிருந்து 250 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஊதிய இழப்பு ரூ. 3 கோடி. இதனால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ. 35 கோடி இந்த அளவு ஏற்பட்டிருப்பதற்கு பிரதானமான காரணம் முதலாளிகள் இன்று ஏற்படுத்திக் கொண்டிருக்கும் வேஜ் கட், டி.ஏ. ஃப்ரீஸ் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அரசு அதற்கு ஆதரவு கொடுப்பதுமாகும். நெல்லிக்குப்பத்திலே ஆனாலும் சரி, சிம்சனிலே ஆனாலும் சரி, கன்னியாகுமரியானாலும் சரி, அங்கெல்லாம் ஏற்பட்டிருக்கக் கூடிய பிரதான பிரச்னையின் அம்சமே டி.ஏ. ஃப்ரீசும் வேஜ் கட்டும் தான். நெல்லிக்குப்பத்தைப் பொறுத்தவரையிலே, இங்கே மாண்புமிகு ரமணி அவர்கள் தெளிவாக ஒருசில பிரச்னைகளை எடுத்து வைத்தார்கள். ஆனால் நான் இன்று இந்த அவையிலே இது சம்பந்தமாக ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கே அதிகமாக தொழிலாளர்களை வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது என்றும் ஆள் குறைக்கக் கூடாது என்றும் தொழில் நீதிமன்றம் தீர்ப்பளித்து, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அதை அமுல் படுத்துவதற்குத் தமிழக அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதே நேரத்திலே 6 மாத காலம் எந்த விதத்திலும் அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுககாமல் இருந்ததற்குப் பிறகு முதலாளிகள் தங்களுக்குச் சாதகமான தீர்ப்பைக் கொண்டு வந்த நேரத்திலே அதை அமுல் படுத்துவதற்கு ஒரு ஸ்பெஷல் டிரிபியூனல் நீதிமன்றத்தை அமைக்க

தயாரிப்பது அல்ல. அரசு தயாரித்துத் தருவதுதான். ஆனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், சென்னை நகரப் புள்ளி அடிப்படையிலோ அல்லது கோயம்புத்தூர் நகரப் புள்ளி அடிப்படையிலோதான் பஞ்சப்படி தருவோம் என்று சொல்கிறார்கள். நாகர்கோயிலில் இருக்கும் புள்ளி அதிகம் என்பதற்காக அந்த ஏழைத் தொழிலாளிகள் பழி வாங்கப்படவேண்டுமா? இந்தப் பிரச்னைக்கு என்ன பரிகாரம்? இந்தப் பிரச்னையில் தமிழக அரசு தகுந்த நேரத்தில் தலையிடவில்லை. இது ஒரு முக்கியமான பிரச்னை என்று அவர்கள் பார்க்கவில்லை என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

இது ஒரு முக்கியமான பிரச்னை. அங்கேயுள்ள தொழிலாளர்கள் 125 நாட்களாக இந்த வேலை நிறுத்தப் போரட்டத்திலே ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இதற்கு ஒரு முடிவை ஏற்படுத்த அரசால் முடியவில்லை. இதற்கு என்ன பரிகாரம் என்றால் ஏற்கனவே சுப்ரீம் கோர்ட் எல்.ஐ.சி. கேசில் அறிவித்த தீர்ப்பு இருக்கிறது. அதாவது, ஒரு செட்டில்மென்ட் காலாவதியாகி இன்னொரு செட்டில்மென்ட் அறிவிப்பு வருகிற வரை ஏற்கனவே இருந்த செட்டில்மென்ட்படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஆனால் கன்னியாகுமரி மாவட்ட தோட்ட தொழிலாளர்கள் போராட்டத்தில் முதலாளிகளிடத்தில் இதை தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் எடுத்துத் தெரிவித்த போது, அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்கனவே செய்து கொண்ட செட்டில்மென்ட்படி அமல் படுத்தமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். இன்றைக்கு நிலைமை என்னவென்று சொன்னால் அங்கேயு ள அருணாசலம் செட்டியார் வெளியே இருந்து ஆட்களைக்கொண்டு வந்து அங்கே வேலைக்கு வைத்துக் கொண்டு இருக்கிறார். அதற்கு காவல் துறை பாதுகாப்புக் கொடுக்கிறது. அதை எதிர்த்ததன் காரணமாகத்தான் நான் உள்பட 20 தொழிலாளர்களை ங்கே காவல் துறை கைது செய்தார்கள். நான் இந்த நேரத்தில் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். இது சாதாரணப் பிரச்சினை அல்ல. இதனால் 15 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. இன்றைக்கு ரப்பர் என்பது ந்நிய செலாவணி ஈட்டித்தரும் ஒரு பொருளாகும். அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலைப் பிரச்னையிலே, ஏற்கனவே கொடுக்கப்பட்டு வந்த டி.ஏ. கொடுக்கப்பட வேண்டும் என்ற பிரச்சினையிலே அரசு உடனடியாகத் தலையிட்டு ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துவதற்குத் தயாராக இருக்கவில்லை என்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. அரசு ரப்பர் தோட்டத்தில் 135 நாட்களாக நடந்த வேலை நிறுத்தப் போராட்டத்திலும் இதுதான் நடந்தது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக சமரச பேச்சுவார்த்தை நடந்து இருக்கிறது. அந்த அறிக்கையை அரசு எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு மற்ற நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.





திரு. ஜே. ஹேமச்சந்திரன்: அந்தச் சமரச பேச்சு வார்த்தையின் போது கூட தொழிலாளர் நலத் துறையின் உயர் அதிகாரி திரு. ராஜாசுப்பிரமணியம் அவர்கள் முதலாளிகளிடத்தில் சொன்னார்கள். ஏற்கனவே இருக்கின்ற செட்டில்மென்ட்படி புதிய செட்டில்மென்ட் வரும் வரை, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதுதான் எங்களுடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கருத்து என்று கூட சொன்னார்கள். தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கருத்தை ஏற்றுக்கொண்டு அமல் நடத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அந்த முதலாளிகள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். (மணியடிக்கப்பெற்றது.)

*திரு. க. இரா. சின்னராசு: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 13–2–1984 ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவையில் ஆற்றிய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன் நாட்டிலுள்ள நிலைமைகளை யெல்லாம் இன்றைக்குச் சீர்தூக்கிப் பார்த்து நல்லதொரு திறமையான செயல்முறைக்கு ஆளுநர் உரையில் வழிவகைகளை எடுத்துக் கூறியிருப்பதற்காக உண்மையிலேயே நான் பாராட்டக் கடமைப் பட்டு இருக்கிறேன். சென்ற ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டும் நமது மாநிலத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய வறட்சியை நாம் பார்த்து இருக்கிறோம். அந்த வறட்சிப் பணி சிறப்பாக நடைபெற்றதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைமையில் அமைந்து இருக்கும் இந்த அரசை நாம் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

வறட்சி மிகப்பெரும் வறட்சியாக இருந்தாலும் இந்த நாட்டு மக்களுக்கு வறட்சி என்ற நிலைமை தெரியாமல் பல்வேறு சிறப்பான திட்டங்களை, பல்வேறு சிறப்பான பணிகளைச் செய்து முடித்த இந்த அரசை உண்மையிலேயே நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

அது மட்டுமல்ல. அந்த வறட்சி நேரத்தில் இந்த நாட்டு மக்களுக்கு குடிநீர் பிரச்சனை எந்த அளவுக்கு இருந்தது என்பதை மாண்புமிகு மன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலும் இந்த நாட்டு மக்களுக்கு குடிநீர் பிரச்சனை இருக்கிறதா என்றால் இல்லை என்று சொல்லுகின்ற வகையிலே சிறப்பான முறையில்–கிராமப் புறமானாலும் சரி, நகரப்புறமானாலும் சரி — இந்த நாட்டு மக்களுக்குத் தொண்டாற்றி, குடிநீர் தட்டுப்பாடின்றி வழங்கியதற்காக நாம் இந்த அமைச்சரவைக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே நமது அரசு சிறப்பாக செயல் பட்டிருக்கிறது என்பதை நாம் கண்டிப்பாகச் சொல்லியாக வேண்டும்.

அதே நேரத்தில், வறட்சிக் காலத்திலே பெரிய பெரிய சங்கடங்கள், சூழ்நிலைகள் எல்லாம் வந்தபோதும் அவற்றிலிருந்து விடுபட்டு, நல்ல நிலைக்கு திரும்பிக்கொண்டிருக்கும்போது, இன்றைக்கு பெருமழையின் காரணமாக இயற்கை நமக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தஞ்சை, திருச்சி, தென்னாற் காடு, புதுக்கோட்டை இராமநாதபுரம் மாவட்டங்களில் மிகப் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகளிலே பாதிக்கப் பட்ட மக்களுக்கு நம்முடைய அரசு வெள்ள நிவாரணப் பணிகளைச் சிறப்பாகச் செய்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக் கெல்லாம், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பகுதிகளை சேதம் ஏற்பட்டவுடனே நேரில் சென்று பார்த்து, நிவாரணப் பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். அதை நாம் கண்டிப்பாகப் பாராட்டியாக வேண்டும்.

அந்த பெருமழையால் ஏற்பட்ட சேதத்திற்கு நம்முடைய மாநில அரசு நிவாரணமாக 37.45 கோடி ரூபாய் வழங்கி யுள்ளது. அது மாத்திரம் போதாது என்று கருதி நமது அரசு மத்திய அரசிடம் 128 கோடி ரூபாய் அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறது என்பதை அறிந்து நாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசைப் பாராட்ட வேண்டும். நாடு இதுவரை கண்டறியாத அளவுக்கு பெரும் சேதம் ஏற்பட்ட போதிலும் நம்முடைய அரசு சிறப்பாகச் செயல்பட்டு சமாளித்திருக்கிறது என்பது நாடறிந்த உண்மை. அதை நாம் இங்கே சொல்லியாக வேண்டும்.

அது மட்டுமல்ல. இலங்கைத் தமிழர்கள் படுகொலைக்கு ஆளாக்கப்பட்டபோது தமிழக அரசும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் சிறப்பான முறையில் மத்திய அரசை அணுகி, அங்கே அழிந்து கொண்டிருக்கிற தமிழ் மக்களுக்கு நல்லதோர் தீர்வு காணவேண்டுமென்று முடிவு செய்தார்கள். ஆனால் எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் எல்லாம் இந்த புரட்சித் தலைவர் அரசு இலங்கைத் தமிழர்களுக்கு விரோதி போல் செயல்படுகிறது என்று சொன்னார்கள் இலங்கைத் தமிழர் பிரச்சனையிலே புரட்சித் தலைவர் அவர்கள் பாரதப் பிரதமரை அணுகி, நிலைமைகளை எடுத்துச் சொல்லியதன் காரணமாக ஐ.நா. சபைக்குச் செல்லுகின்ற குழுவிலே நம்முடைய மாநிலத்திலிருந்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இடம் பெற்றது மட்டுமல்ல, அந்தக் குழுவிற்குத் தலைமைத் தாங்கிச் சென்று, ஐ.நா. சபையில் இலங்கைத் தமிழர்கள் பிரச்சனையை நல்லமுறையில் எழுப்பி, அதன் காரணமாக இன்றைக்கு வட்டமேசை மாநாடு நடைபெற்று, அங்கே விவாதம் நடைபெறுகின்ற அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இலங்கையில் இருக்கும் தமிழ் மக்களுக்கு ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் எடுத்த நடவடிக்கையை ஐந்து கோடி தமிழ் மக்களால் பாராட்டாமல் இருக்க முடியாது; ஆகவே பாராட்டு கிறார்கள். அந்தவகையிலே நாமும் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டியாக வேண்டும்.





அடுத்தபடியாக, ஆளுநர் உரையில் நற்பயிருக்கு அறிவிக்கப்பட்டிருந்த பாதுகாப்புத் திட்டம் மற்ற மானாவாரி பயிர்களுக்கும் விரிவாக்கப்பட்டிருப்பதை அறிந்து விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் பாராட்டுகின்றார்கள்; வரவேற் கின்றார்கள்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு தமிழ்நாட்டிலே வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்று உருவாவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு திட்டமிட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை தர்மபுரி மாவட்டத் திலே அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் பிரச்சனை நூறு ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்து, முந்தைய ஆட்சிக்காலம் வரையில் தீர்க்கப்படாமல் இருந்தது. சென்னை மக்களின் குடிநீர் பிரச்சனையைத் தீர்த்து வைக்கின்ற முறையில் அவர்கள் செயல்படவில்லை. ஆனால் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக சென்னை மாநகருக்கு தண்ணீர் கொண்டுவந்து, நிரந்தரமாக இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆந்திர மாநில முதலமைச்சரோடு புரட்சித் தலைவர் அவர்கள் பேசி, விரைவான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். 760 கோடி ரூபாய் செலவு பிடிக்கக்கூடிய இந்தத் திட்டத்தில் நம்முடைய மாநிலத்தின் பங்கு 200 கோடி ரூபாய்தான். இந்தக் காரியத்தில் இந்த அளவுக்கு சிறப்பாகச் செயல்பட்டுவரும் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை இந்த மன்றத்தைச் சேர்ந்த அனைவரும் பாராட்ட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1–10.)

அதோடு, நமது மாநிலத்தில் நீர்த்தேக்கங்களிலும், ஏரிகளிலும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டுமென்ற ஒரு திட்டத்தை இந்த அரசு ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவிடம் பேசி ரூ. 2, கோடிக்கு மான்யமாக பெற்றுள்ளதை உண்மை யிலேயே நாம் பாராட்டவேண்டும். அந்த அடிப்படையிலே நீர்த் தேக்கங்களானாலும் சரி, சிறிய ஏரிகளானாலும் சரி ஏரிகளிலிருந்து தண்ணீரைக் கால்வாய் மூலமாகப் பயிருக்குப் பாய்ச்சு போது தண்ணீர் விரயமின்றி சிக்கனப்படுத்துகின்ற வகையில் இந்த அரசு கொண்டு வந்திருக்கிற திட்டத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே இது செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுர ஆகிய மாவட்டங்களில் செயல் படுவதாக குறிப்பிட்டிருப்பதை நான் மாண்புமிகு முதலமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த ஐந்து மாவட்டத் தோடு நிறுத்தி விடாமல் தர்மபுரி மாவட்டத்தையும் இணைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே படேதப்பு என்ற ஒரு ஏரி சுமார் 900 ஏக்கர்

பாசனம் கொடுக்கக்கூடியதாகவும், இருபோகம் சாகுபடி செய்யக்கூடியதுமாக இருக்கிறது. அந்த ஏரியை இந்தத் திட்டத்தின்கீழ் சேர்த்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு என்னுடைய தொகுதியில் சிறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சில திட்டங்களை அதிகாரிகள் மதிப்பீடு செய்து இங்கே தலைமைப் பொறியாளருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆலப்பட்டி, புதிய ஏரி, வெல்களஆள்ளி ஏரி, எட்டிகல் அரம் ஏரி, அலேகுந்தானி ஏரி, ஆவல்நத்தம் ஏரிகள் மதிப்பீடு செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்த 5 ஏரிகளையும், இந்த நிதிநிலை ஆண்டில் எடுத்து, அரசு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பெரிய நீர்ப்பாசனத் திட்டம் ஒன்று ஆய்விலே இருந்து 1978 ஆம் ஆண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு நாச்சிக்குப்பம், சிங்கரம்பள்ளி ஆற்றின் குறுக்கே அணைக் கட்டவேண்டிய திட்டம் அரசின் ஆய்வில் இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தையும் இந்த நிதியாண்டில் செயல்படுத்தவேண்டுமென, என்னுடைய தொகுதி வாக்காளர் பெருமக்களின் சார்பாக கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் கிராமப்புற மக்களுக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கவேண்டுமென்ற திட்டம் 1976–77 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டு, அதன்படி 1985 ஆம் ஆண்டு மார்ச் இறுதிக்குள்ளாக எல்லா கிராமங்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் தந்துவிடுவோம் என்று இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலே இன்றைக்கு வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு என்ற திட்டத்தை ஆரம்பித்து, கிராமப்புறமானாலும் சரி, நகர்ப்புறமானாலும் சரி, வேலை கொடுப்பதற்கு வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமென்ற திட்டத்தை கொடுத்திருப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்பொழுது மின்துறையிலே வீடுகளுக்கு மின் அமைப்பு செய்யும் பணியாளர்கள் 'B' உரிமம் இல்லாதவர்கள் இன்று (16–ந் தேதி) 2½ லட்சம் பேர்கள் ஊர்வலமாக வந்து அரசையும், அமைச்சர்களையும், சந்திக்க இருக்கிறார்கள். சுமார் 10, 20 ஆண்டு காலம் தனியார் இடத்தில் பயிற்சி பெற்றுள்ளார்கள். 'B' உரிமம் வைத்துள்ளவர்கள் வீட்டிலே இருந்துக் கொண்டு யாரோ செய்த மின் அமைப்பிற்கு ஒரு கணிசமான தொகையும் பெற்றுக்கொண்டு தான் செய்ததாக கையொப்பம் இடுகிறார்கள். எனவே உரிய பயிற்சியைப் பெற்று இருக்கிறவர்கள் 'B' உரிமம் பெறுவதற்கு அரசு ஒரு சிறப்புத் தேர்வை நடத்தி இந்த உழைக்கும் வர்க்கத்திற்கு உதவி புரிய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.



திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னருடைய உரையின் பேரில் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையில் எல்லா இடங்களிலும், பொதுவாக தமிழ்நாட்டின் தேவை அனைத்தும் முழுமையாக நிறைவேற்றுகிற நிலையில் வாக்குறுதிகளை ஏராளமாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக, குறிப்பாக புதிய மின்சார யூனிட்டுக்களை அமைக்கப்போகிறோம்' அவற்றுக்கு மத்திய அரசிடமிருந்து உதவி எதிர்பார்க்கிறோம், அவர்கள் கொடுத்தால் இங்கே உற்பத்தி உண்டாகும், உற்பத்தி கிடைக்கும், மின்சாரத் தேவை பூர்த்தி செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் கொடுக்கவில்லை என்ற நிலை வந்தால், மத்தியில் உள்ள அரசு தங்களுடைய தேச பாதுகாப்புக்காக வேண்டி, இன்றுள்ள சூழ்நிலையில் ஏராளமாக பணத்தை செலவழிக்க வேண்டிய ஒரு நேரத்தில் அங்கேயிருந்து நிதி அதிகமாக கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதும், கிடைக்கும் என்ற அடிப்படையில் திட்டங்களைத் தயாரிப்பதும், எந்த அளவிற்கு சாத்தியம் என்று அரசுதான் யோசிக்கவேண்டும். அப்படி பணம் வரவில்லை என்றால், மின்சாரத் திட்டம் நிறைவேறாது, இது ஒன்று. இரண்டாவது தொழிலாளர் நலம் சம்பந்தப்பட்ட விஷயங்களில், அல்லது சட்டங்களில், வேலை நிறுத்தங்களில் நம்முடைய அரசு, 1946 ஆம் ஆண்டுக்குப் பின், 1984 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், பல்வேறு முதல்வர்கள் வந்திருக்கிறார்கள். ஓ.பி. ராமசாமி ரெட்டியாரிலிருந்து, கடைசியாக வந்த எம்.ஜி.ஆர். வரையிலும், எந்தக் காலத்திலேயும் இல்லாத அளவிற்கு வேலை நிறுத்தங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எந்தக் காலத்திலும் நடைபெறாத அளவிற்கு, அடக்குமுறைகள் நடந்து கொண்டிருக்கிறது. எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு கதவடைப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன. எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு ஆள் குறைப்பு செய்யப்படுகிறது. ஆனால் அரசுத் தரப்பிலேயிருந்து வருகிற பதில் அதற்கு அனுசரணையாக, சாதகமாக, ஒத்துழைப்பதாக இருக்கிறதா என்பதை ஆளும் கட்சி வரிசையிலே உள்ள எனது அருமை சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது சிம்சன் சம்பந்தமாக, பழிவாங்கப்பட்ட தொழிலாளர்கள் 15 பேர்கள் விஷயமாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். டிரிபியூனலுக்கு அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஏன் விட்டீர்கள் என்ற வினா எழுகிறபோது, அழகாகச் சொன்னார்கள். அவர்கள் குற்றம் இழைத்தார்கள், பிற தொழிலாளர்களை அடித்தார்கள், அதனால்தான் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டு இருக்கிறார்கள், அதனால்தான் அவர்கள் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அமைச்சரே சட்டப்பேரவையில் உறுதியாகவும்

தெளிவாகவும் பச்சையாகவும் தொழிலாளர்கள் மேல் நேரடி யாக குற்றத்தைச் சுமத்துகிறபோது அந்த நீதிமன்றத்தின் முடிவு எப்படி இருக்கும் என்று நான் பணிவோடு கேட்க ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அப்படி குற்றம் சாட்டி, வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்படி குற்றம் சாட்டி வேலை நீக்கம் செய்யப்பட்டது சரியா? இல்லையா? என்று நீதிமன்றத்தின் தீர்ப்பு பெறுவதற்காகத்தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி இருக்கிறோம் என்று சொன்னேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் இப்போது சொன்னது உண்மை. முன்னால் நான் சொன்னதும், அவர்கள் சொன்னதும் உண்மை. ஆகவே ரமணி அவர்கள் பேசுகிறபோது இதை பின்னால் சொன்னார்கள். ஆனால் முன்னால் சொல்லும்போது இதைச் சொல்லவில்லை என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்து தமிழ்நாடு முழுவதும் உள்ள எல்லாத் தொழிலாளர் களுக்கும் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். கைநெசவுத் தொழிலாளர்களுக்கு சட்டம். நல்ல சட்டம், நான் வரவேற் கிறேன். பாராட்டுகிறேன். நன்றிகூட சொல்கிறேன், அரசுக்கு. குறிப்பாக தொழிலாளர் நலத்துறை அமைச்சருக்கு. இந்தச் சட்டம் வந்தவுடனே கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கினார் களே, அதை நீக்குவதற்கு, அதை தகர்த்து எரிவதற்கு, அந்தத் தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு என்ன நடவடிக் கையை அரசு எடுத்திருக்கிறது என்ற என்னுடைய வினாவிற்கு விளக்கம் அளிக்கவேண்டும்.

அதேபோல் கட்டிடத் தொழிலாளர்களுக்கு, வீட்டு வேலை செய்கிற மேஸ்திரிகளுக்கு, இவர்களுக்கு எல்லாம் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள்? இதிலே ஒரு அநியாயம் என்ன வென்றால் — அநியாயம் என்பதற்கு மன்னிக்கவேண்டும் — பச்சையாக எந்த மொழியிலே சொல்வது என்று தெரியவில்லை, தப்பு என்று சொல்லக் கூடாது, பொய் என்று சொல்லக்கூடாது, உண்மைக்கு மாறானது என்றுதான் சொல்லவேண்டும். அதன் பிரகாரம் உண்மைக்கு மாறான ஒரு கருத்து சொல்லப்பட்டிருக் கிறது. என்னவென்றால், அவர்கள் அடிபட்டு பாதிக்கப் பட்டால், அல்லது உயிரிழந்தால் 10 ஆயிரம் அவர்களுக்கு நிதி அளிக்கப்படும் என்று. எப்படி? முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து. முதலமைச்சருடைய நிவாரண நிதிக்கு நாடு முழுவதும் இருந்து வசூலிக்கப்படுகிறது. அதனுடைய நோக்கம் மாநிலத்தில் ஏற்படுகிற பாதிப்புகள், விபத்துக்கள், இயற்கைச் சீற்றங்கள் போன்றவைகள் ஏற்படும்போது பயன்படுத்துவதற் காகத்தான்.—மாநிலத்தில் உள்ள மக்களும், சில தொழிலதிபர் களும் பணம் கொடுக்கிறார்கள்.



(பிற்பகல் 1–20.)

ஒரு குறிப்பிட்ட தொழிலில் உள்ளவர்கள் பாதிக்கப்பட்டால் அதிலிருந்து கொடுக்க வேண்டும் என்பதற்காக அந்த நோக்கத் தோடு வசூலிக்கப்பட்ட பணம் அல்ல, முதலமைச்சர் நிவாரண நிதி என்பது. (குறுக்கீடு) அதிலிருந்தும் கொடுக்கலாம் என்று சொல்கிறீர்கள். முதலமைச்சர் நிதி என்பது எவ்வளவு இருக்கிறது. இதில் ஒட்டு மொத்தமாக 100-க்கு 5 பேர் கூட பதிவு செய்த தொழிலாளர்களாக, காண்டிராக்டர்களாக, இந்தத் தொழிலில் இருக்க மாட்டார்கள். 100-க்கு 95 பேர்கள் வெளியிலே பதிவு செய்யாமல் வேலை செய்பவர் களாகத்தான் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் பாதிக்கப் பட்டால் முதலில் முதலமைச்சர் நிதிக்கு மனு போட்டு, பிறகு முதலமைச்சர் அவர்கள் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து, அதற்கு பின்னால் கொடுக்கப்படும் என்று சொல்வதைக் காட்டிலும் நேரிடையாகவே. அரசே பொறுப்பை ஏற்றுக் கொண்டு, நாங்களே தருகிறோம் என்று சொல்லி, அதற்காக அந்தத் தொழிலாளர்களிடமிருந்து குறிப்பிட்ட அளவு பணம் செலுத்த வேண்டும் என்று சொல்லி, தருவதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால் மாறாக, உண்மைக்கு முரணான வகையில், சரியில்லாத முறையில் இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இது நடைமுறைக்கு வராது. (குறுக்கீடு.)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அரசு 10,000 ரூபாய் தரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் நிதியிலிருந்து தரப்படும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. எந்த நிதியிலிருந்து கொடுத்தால் என்ன? அரசு தருகிறது. இதுவரையில் நாடு சுதந்திரம் பெற்று எத்தனை ஆண்டுகள் ஆகின? கிட்டத்தட்ட 35, 36 ஆண்டுக்காலமாக இதைப்பற்றி யாராவது சிந்தித்திருப்பார்களா? எனவே, கட்டிடத் தொழிலாளர்களுக்கு வேலை செய்யும்போது பாதிப்பு ஏற்பட்டால் அரசு பத்தாயிரம் கொடுக்கும் என்று தெரிவித் திருப்பதை வரவேற்க வேண்டுமே தவிர.... நிதி எங்கேயிருந்து வந்தால் என்ன? கொடுப்பது அரசு. (குறுக்கீடு.)

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் நிதியிலிருந்து கொடுப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதியை, பாதிக்கக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு அவர்கள் சட்டப்படி பெறுவதற்காக, உரிமையோடு அந்த நிதியைக் கொடுக்க வேண்டும். அதற்கான ஏற்பாடு இருக்கிறதா என்பதுதான் கேள்வி?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

[1984 பிப்ரவரி 16

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்பாடுகள் செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, முதலமைச்சர் நிவாரண நிதி என்பது மாற்றப்பட்டு, அரசே நேரிடையாக பொறுப்பேற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சமுதாயத்திலே மிக ஏழ்மையான நிலையில் இருக்கும் மக்களாக, ஆனால் அதே நேரத்தில் சமுதாய நலனுக்கு தேவையான முறையில் பணியாற்றக் கூடிய சுகாதார ஊழியர்களுக்கு, அரசிலே பணியாற்றக் கூடிய இந்த ஊழியர் களுக்கு இந்த அரசு கொண்டு வந்திருக்கும்படியான சட்டங்கள் மூலமாக அவர்களுக்காக நிச்சயிக்கப்பட்டு. தீர்மானிக்கப்பட்டு சட்ட பூர்வமாக கொடுக்க வேண்டிய ஊதியங்களை, அந்த முறைகளில் எல்லாம் அவர்களுக்கு எவ்வளவு தூரம் அரசு நன்மையை செய்திருக்கிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஒத்துக் கொண்டதை, ஏற்றுக் கொண்டதை அமுலுக்கு கொண்டு வர மறுக்கிறார்களே, அதிலே மாற்றம் வேண்டும்.

அதேபோல, இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் பீடித் தொழிலாளர்கள் ஒரு 5 இலட்சம் பேர் இருக்கிறார்கள். (தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும்) இந்த மாநிலத்திலே உள்ள 5 இலட்சம் பீடித் தொழிலாளர்களுக்காக, நீண்ட நெடுங்காலமாக, வெள்ளைக் காரன் ஆட்சிக் காலத்திலேயிருந்து போராடிக் கொண்டு தான் வருகிறோம். (குறுக்கீடு) நீங்களும் நிறைய போராடியிருக் கிறீர்கள். ஆனால் இப்போது இருக்கும் இடம் தான் சரியில்லை. (சிரிப்பு.)

அவர்களுக்காக சில சட்டங்களைக் கொண்டு வந்தோம். ஆனால் அதை அமுல்படுத்துகிற விஷயத்தில், பீடி முதலாளிகள் உரிமையாளர்கள் ஒத்துழைக்க மறுக்கிறார்களே, அவர்கள் மீது என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறீர்கள்? ஏன் அந்தச் சட்டங்களை அமுலாக்கவில்லை. இன்னொன்றையும் கொண்டு வந்தீர்கள். வேலையில்லாதவர்களுக்கு நஷ்ட ஈடு என்று. சட்டப்படி அதிலே ஒன்றுமே இல்லை. அது உண்மை. ஏனென்றால், அதிலே போடப்பட்டிருக்கும் கண்டிஷன்கள் என்னென்ன? மூலப் பொருள் அதிகம் இருந்தால் நஷ்ட ஈடு கிடையாது. பருவநிலை சரியில்லை என்றால் நஷ்ட ஈடு கிடையாது. இயற்கை கோளாறு இருக்குமானால் கிடையாது என்று சொன்னால், அப்புறம் அதிலே எங்கே யாருக்குத்தான் நஷ்ட ஈடு கிடைக்கும்?....(குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Fall Back என்கிற திட்டத்தைப் பற்றி குறிப்பிடு கிறார்கள் என்று நினைக்கிறேன். அது சரியாகச் செயல்பட வில்லை என்பதை அரசு உணர்ந்து, அதற்கு வேண்டிய திருத்தங் களைச் செய்து கொண்டு இருக்கிறது,



1984 பிப்ரவரி 16]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. என். ஏ. பூங்காவனம்: அடுத்தபடியாக, இன்னொரு முக்கியமான விஷயம். நம்முடைய அரசாங்கம் மூன்று முறை வாக்கு கொடுத்தார்கள், நகராட்சி ஊராட்சி தேர்தல்கள் பற்றி. (குறுக்கீடு). நான் மறுபடியும் கேட்கிறேன், கொஞ்சம் பொறுமை யாக இருந்து கேளுங்களேன். அப்போது நான் இந்த அவையில் பேசுகிறபோது தேர்தல் வருமா என்கிற ஒரு கருத்தை அவரிடம் உறுதியாகக் கேட்டேன், அழுத்தமாகக் கேட்டேன். அமைச்சரும் தலையை அசைத்தார்கள். நான் போனமுறை கேட்டேன். தேர்தல் நடக்கும் என்று நீங்கள் சொன்னபோது தேர்தல் நடக்குமா என்று கேட்டேன், அப்போது ஆம் என்று தலை யாட்டினீர்கள், நம்பலாமா என்று கேட்டேன், அதற்கும் ஆம் என்று சொன்னீர்கள். ஊரில் சொல்லலாமா என்று கேட்டேன், அப்போது தேதி வரவில்லை, இப்போது இந்த தேதியில் நடக்கு மென்று தேதி சொல்லியிருக்கிறீர்கள். 19, 23, 28, என்று தேதி குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த உரையில் உள்ள உங்கள் அறிவிப்புப்படி 19 ஆம் தேதியோ, 23 ஆம் தேதியோ 28 ஆம் தேதியோ தேர்தல் நடக்காது. நம்பக்கூடாது. வெளியே எப்படி யாவது சொல்லவேண்டும், என்று சொல்லியிருக்கிறீர்கள். நடை முறைக்கு அது வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன ஆருடமா? உங்கள் நம்பிக்கையைச் சொல்லிவிட்டுப் போங்கள்.

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டபடி நடக்காது. இப்போதும் சொல்கிறேன், சட்டமன்றம் இருந்தால் பின்னாலேயும் சொல்கிறேன், ஏற்கெனவே அவையில் சொல்லியது நடக்கவில்லை, இப்போது கவர்னர் சொல்லியிருக்கிறார், நடந்தால்தானே? ஏற்கெனவே சொன்னதே நடக்கவில்லையே.

கடைசியாக ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிட்டு முடித்துக் கொள்கிறேன். இயற்கை இடர்ப்பாடுகள் வந்தபோதிலும் மாநிலம் பொருளாதாரம் மற்றும் பிற துறைகளில் அடைந்த நிலையான முன்னேற்றத்தைக் கோடிட்டுக் காட்டியுள்ளதாக இதன் கடைசிப் பக்கத்தில் சொல்லியிருக்கிறீர்கள். நிலையான என்பது நிலையாக மின்சாரம் கொடுத்தீர்களா? நிலையாக என்பது எந்தச் சட்டத்தையாவது நிலையாக அமலாக்கினீர்களா? நிலையாக என்பது எந்தத் தொழிலாளர்கள் போராட்டமும் நடப்பதற்கு முன்பே நியாயம் வழங்கினீர்களா? நிலையான என்பது நிலையான பாதுகாப்பு மக்களுக்கு கேட்பதற்கு முன்பே கொடுத்தீர்களா? என்று நான் கேட்க விரும்புகிறேன். நிலையான என்பதால் நேர்மாறான எதிர்மறையான நிலையை எடுத்துவிட்டு நிலையான ஒரு நிலையை ஏற்படுத்தி இருக்கிறோம், உண்டாக்கி யிருக்கிறோம் என்று சொல்வது நம்மை நாமே ஏமாற்றிக் கொள் வதற்கு ஒப்பாகும். இப்படிச் சொல்வதற்காக நான் வருந்து கிறேன். நேற்று இதே நேரத்திற்கு, 1–27 மணிக்கு இங்கே ஒரு இலாகாவிற்கு ஒருவர் அமைச்சராக இருந்தார். நேற்று

[திரு. என். ஏ. பூங்காவனம்] [1984 பிப்ரவரி 16

மாலையே ரேடியோவிலே அவருடைய நிலை மாற்றப்பட்டு விட்டது என்று செய்தி வருகிறது. இப்படி நாளுக்கு நாள், நிமிடத்திற்கு நிமிடம், நேரத்திற்கு நேரம் என்ன சொல்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள், என்ன நடக்கும் என்று தெளிவான விளக்கத்தை அரசு தரப்பிலே மக்களுக்கும் அவைக்கும் தரவேண்டும். அப்படித் தராவிட்டால் கூட்டம் நடத்துவதால் நாம் பங்கெடுத்துக்கொள்வதால், பலன் மக்களுக்குப் போய்ச் சேருமா என்றால் சேராது. இந்த உரையைப் பார்க்கிறபோது ஏதோ அடுத்து வருகிற தேர்தலுக்கு அள்ளித் தருகிற கோஷங்களைப்போல் தேர்தல் வாக்குறுதி களைப்போல் இருக்கிறது. தமிழகத்தில் 70 இலட்சம் குழந்தை களுக்கு உணவு கொடுக்கிறீர்கள். அந்தக் குழந்தைகளுக்கு எடை கூடுகிறது என்று சொல்கிறீர்கள். சரி, அவர்களை சாப்பிட கூப்பிடுவதற்கு முன்னாலே எந்த குழந்தையையாவது எடை போட்டீர்களா? எப்படி எடை கூடியது என்று சொல்கிறீர்கள்? சாப்பிட்டுவிட்டு ஆஸ்பத்திரிக்குப் போகிற வாந்தியெடுக்கிற குழந்தைகளைப்பற்றி ஏன் சொல்லவில்லை. ஆகவே அப்படிச் சொல்வது சரியல்ல, இந்த அறிக்கையிலே தொழில்கள் கிடையாது, வேலைக்கு உத்திரவாதம் கிடையாது, தமிழகம் நிலையான நிலையை நோக்கி முன்னேற அஸ்திவாரம் கிடையாது. அடிப்படையில்லாத ஒரு அறிக்கை என்று சொல்லி என் வார்த்தை களை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1—30.)

## 5. அறிவிப்பு

### பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

இன்று கூடிய அலுவல் ஆய்வு குழுவில் எடுக்கப்பட்ட முடிவு களுக்கு இணங்க பேரவையின் நடவடிக்கைகள் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 17-2-84 (வெள்ளிக்கிழமை)<br>18-2—1984 (சனிக்கிழமை) | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம். |
| 19-2-1984 (ஞாயிற்றுக் கிழமை) | விடுமுறை |
| 20-2-1984 (திங்கட்கிழமை) | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதமும் பதிலுரையும். |
| 21-2-1984 (செவ்வாய்க்கிழமை) | அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறை வேற்றுதலும். |



| | |
|---|---|
| 22-2-1984 காலை (புதன்கிழமை) | அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறை வேற்றுதலும். |
| பிற்பகல் 4-00 மணி | தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி மற்றும் வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் நிவாரணம் குறித்தும் பேரவை யின் முன் வெள்ளை அறிக்கை வைக்கப்படின் அதன் மீது விவாதம். (குறுக்கீடு) இது வரை வைக்கவில்லை, வைத்துவிடுவார்கள். |
| 23-2-1984 (வியாழக்கிழமை) | 1. அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய் தலும், நிறைவேற்று தலும்.<br>2. அரசினர் தனித் தீர்மானங்கள். |

தேவையிருப்பின் பேரவை 24-2-1984 (வெள்ளிக்கிழமை) கூடும். பேரவை மீண்டும் 3-3-1984 அன்று கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 17-2-1984 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

—எதுவுமில்லை—

136212